வ.கீரா

குமரி

தொண்ணூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பான தாய்வழிச் சமூகம்

குமரி

கொற்றவைக்குப் பின்
ஐம்பதினாயிரம் ஆண்டுகள்...
திருவள்ளுவருக்கு முன்
தொண்ணூறாயிரம் ஆண்டுகள்!

வ.கீரா

தோழமை அன்பில்...

தனலட்சுமி கீரா

கவிதா பன்னீர்செல்வம்

வைகறையாழன்

மதிவதனி

வடிவேல் சேகர மாறன்

என்னுரை

வரலாறு என்னும் பெருவெளி மீதான பிடிப்புத் தொடங்கியது பதிமூன்று வயதில். சாண்டில்யன் எழுதிய 'யவனராணி'யின் இரு பாகங்களும், நூலகங்களே இல்லாத - தினத்தந்தியும் முடிவெட்டுகிற கடைகளில் மட்டுமே படிக்கக் கிடைக்கிற - செட்டிக்குளம் என்னும் சிற்றூரில் பிறந்த எனக்கு, ஆயிரம் பக்கங்களுக்கான ஒரு நாவல் என்பது பெருந்தீனியாக எனக்குள் அடைகொண்டது. எனது அண்ணன் மணிமாறன் மூலம் அது எனக்குக் கிடைத்தது. எங்களது ஊருக்கு அருகில் தனி நபராக இலக்கியம் பேசியவர் அருணன்.அவரிடமிருந்து புதுமைப்பித்தனையும் வாசிக்க முடிந்தது.

எனது வீட்டில் அண்ணன்கள் அனைவருமே புத்தகங்கள் படிப்பவர்களாக இருந்தார்கள். பெரியண்ணன் சேகர், லாரி ஓட்டுனராக இருந்ததால் லாரி ஓட்டும் நேரம் தவிர மீதி நேரங்களில் புத்தகங்கள் படிப்பவராக இருந்தார். ஒவ்வொரு முறையும் அவர் வாங்கிவரும் நாவல்கள், எனக்குள் கதை உலகங்களை, புதிய மனிதர்களை, மக்களின் வாழ்வை எமக்குள் கடத்தும் கருவிகளாகச் செயல்பட்டன. அண்ணன் சங்கருக்கு பள்ளியில் சிறந்த மாணவருக்கான பரிசுப் புத்தகமாக மு.வரதராசனார் அவர்கள் எழுதிய 'பெற்றமனம்' கிடைத்தது. மனித மனங்களின் துயரம் நிரம்பிய அகப்பக்கங்களை, உறவுகளின் வலிமையை அந்த நாவல்தான் எனக்குள் விதைத்தது. பின்னர், 'கவிதா கண்ணாடிக்கடை' என்ற ஒரு சிறிய கடையில் மாத நாவல்கள் கிடைக்கும். அங்கும் வாடகைக்கு எடுத்துப் படிக்கத் தொடங்கினேன்.

எனது சிறுவயதிலேயே 'மாயவேட்டை மான்' என்கிற ஒரு கதையெழுதி 'ராணிமுத்து'க்கு அனுப்பிவிட்டுக் காத்திருந்த காலம் உண்டு. அப்பா கைப்பிடித்து அழைத்துப்போன திரைப்படங்களும், வாசித்தக் கதைகளும் எப்போதும் இடையிறாத கனவை உள்ளுக்குள்

கிளர்த்தியபடி இருந்தன. அண்ணன் முருகானந்தம் வழியே பாலகுமாரனும் மனதில் நிறையத் தொடங்கினார்.

பள்ளிப் படிப்போடு சென்னைக்கு வண்டியேறினேன். சினிமா என்கிற பெரும் போராட்ட வாழ்க்கைக்குத் தழைப்படுத்திக்கொள்ளத் தொடங்கிய அந்தக் காலங்களில் தீவிர இலக்கியத்தின் பக்கம் திருப்பியவர் அண்ணன் புகழ். நான் பார்த்த வாழ்க்கையை என் மொழியில் சொல்லும் அவரிலிருந்து கிளைக்கத் தொடங்கி, எழுதவும் ஆரம்பித்தேன். கல்கி, கணையாழி, இந்தியா டுடே, பன்முகம் போன்ற இதழ்களில் எனது சிறுகதைகள் வரத்தொடங்கி புதிய அத்தியாயத்தை எனக்குத் தந்தன. தீராத இந்த வாழ்வை எழுதித் தீர்க்க வேண்டும் என்கிற தாகம் கனன்றுகொண்டே இருக்கும். ஆனாலும், திரைப்பட உலகத்தின் வாழ்க்கையால் அவற்றை எழுதுவதை விட்டுவிட்டேன். அப்படியிருந்தும் 'மோகினி' என்கிற சிறுகதைத் தொகுப்பை ஜீவகரிகாலன் அவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டுவந்தார்.

திரை உலக பாவங்களை உணர்ந்துகொள்வதற்குள் காலம் ஓடிவிட்டது. அரசியல் முதிர்ச்சிகளையும் இந்தக் காலம் எனக்குக் கொடுத்தது. 2009க்குப் பிறகான தமிழ்தேசிய அரசியல் பார்வைகள் என்னை மாற்றின. பொதுமையோடு தமிழர் அரசியலை, தோழர் தமிழரசனைக் கற்றவர்களிடமிருந்து உள்வாங்கி ஓடினேன். இன்றும் அந்த நிலையில் இடைவிடாமல் நின்றுகொண்டிருப்பதால்தான் இந்த 'குமரி'யை என்னால் உருவாக்க முடிந்தது. எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கிய இந்த 'குமரி'யின் நோக்கம், அதன் வீச்சு எங்கும் குலையாமல், அதன் உருவம் சிதையாமல், சரியாக கூர்மையாக வந்திருக்கக் காரணம் எனது அரசியல் நிலைப்பாடும் சிதையாமல் இருப்பதுவே.

நாம் பார்க்கும் தமிழ்நிலத்தின் கள ஆய்வுகள், கல்வெட்டுக் குறிப்புகள் அனைத்தையும், நமது தொல்லியல் மாண்பைப் பேசும் அனைத்தையும் இந்த நிலத்தின் பிரதிகளாக இல்லாதவர்களின் பெயர்களில் மடைமாற்றும் முயல்வுகள் காலந்தோறும் நடைபெறுவதைக் காண்கிறோம்.

தமிழர்களுக்கென முன்னோர்கள் விட்டுச் சென்ற மெய்யியல் கோட்பாடுகள் தட்டையாகப் படிக்காமலே ஒதுக்கப்பட்டன. ஒரு கட்டத்தில் தமிழர்கள் எந்த அறிவும் இல்லாத காட்டுமிராண்டிகள் என்பது போன்றத் தோற்றத்தைக் கட்டமைத்தனர். நமது வரலாறுகள்

இருட்டடிப்புச் செய்யப்பட்டன. நமக்கான வரலாறுகளை நாமே மீள் உருவாக்கம் செய்யவேண்டியக் கட்டாயத்தை உணர்ந்ததன் விளைவாக இந்தப் புதினத்தை எழுதத் தொடங்கினேன். உலகெங்கும் இருக்கும் பொதுவரலாறுகளைக் கடந்த ஒன்றாக கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்குப் பின், முன் தோன்றிய ஒரு அறிவுக்குடி எப்படியெல்லாம் இருந்திருக்ககூடும் என்கிற எண்ணக் கிளத்தளில் இருவாஞ்சியும், ஆரல் நங்கையும், தென்னனும், செம்பனும் எனக்குள் வந்தார்கள். தாய்வழிக் குமுகத்தின் உச்சக் காலம் எப்படி இருந்திருக்கும் என எனக்குள் உருவாக்கத் தொடங்கினேன். தமிழர்களின் திரட்டுகளை முன்மாதிரியாகவும், உலக ஒழுங்குகளில் கிடைத்த அறிவுத் திரட்டுகளையும் இணைத்து முழுமையான விறுவிறுப்பான ஒரு புதினத்தை உருவாக்கியதில் எனது வாழ்நாள் இருப்பாக, தமிழர்களுக்கு எனது கொடையாக இது இருக்கிறது என்பதில் துளியும் தயக்கமில்லாமல் என்னால் சொல்ல முடியும்.

புனைவு வரலாற்றுத் தடத்தில் என்னை மனத்தால் செதுக்கிய அறிவாசான் தேவநேய பாவாணர் மற்றும் தமிழர் திறனை உலகுக்கு அளித்த தமிழ் கூறு நல்லுலகின் மெய்யியல் சிற்பிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகள். இதில் பயன்படுத்தப்பட்ட இருபத்தி நாலு எழுத்துகளில் தமிழை எழுத முடியும் என அடையாளம் காட்டிய மறைந்த அறிவர் மு.தனராசு அவர்களை நினைவில் கொள்கிறேன்.

இந்தப் புதினத்தைப் படித்துப் பிழைதிருத்தம் செய்த அய்யா முனைவர் தமிழ்பரிதி மாரி அவர்களுக்கும், முனைவர் தமிழ் மணவாளன் அவர்களுக்கும், கொடுத்ததுமே படித்துவிட்டு ‘உங்களின் ஆகச்சிறந்த ஒன்று’ என வாழ்த்திய எழுத்தாளர் கரன் கார்க்கி அவர்களுக்கும், ‘காலத்தைக் கடந்து நிற்கும்’ என வாழ்த்திய தோழர் கருப்பு அன்பரசன் அவர்களுக்கும், எனது எல்லா படைப்புகளைப் படித்து அதன் அழுத்தங்களை, ரசனைகளை, கோபத்தை அன்போடு பகிரும் கவிஞர் வேல்கண்ணன் அவர்களுக்கும், விஜய் மகேந்திரன் அவர்களுக்கும், பதிப்பாளர் சரவணன் தங்கப்பா அவர்களுக்கும், தோழர் உமர் கயான் அவர்களுக்கும், தோழர் தமிழ்வாணன் அவர்களுக்கும், தம்பி கார்த்திக் அய்யனார் அவர்களுக்கும், தம்பி தமிழ் சிலம்பரசன் அவர்களுக்கும் என்றென்றும் நன்றிகள்.

இந்தப் புதினம் செம்மையாக வெளிவர வேண்டும் என தொடர் கவனம் செலுத்திய நண்பர் மு.வேடியப்பன் அவர்களுக்கும் டிஸ்கவரி பதிப்பகத்தின் உறுப்பினர்களுக்கும் அன்பின் முத்தங்கள்.

-வ.கீரா

-7397363539

ஆதித் தமிழி - புனைவு

Contents

என்னுரை

பண்டைய வரலாற்றின் மீதான புனைவு

காலம் வென்ற தொன்மமும் சமகாலத்தின் கவனமும்!

1 துலைத் திங்கள் இருபத்து ஒன்பதாம் நாள்

2 துலைத் திங்கள்பதினைந்தாம் திகதி

3 துலைத் திங்கள்முப்பதாம் திகதி

4 துலைத் திங்கள் பதினைந்தாம் திகதி

5 துலைத் திங்கள் இருபத்து ஒன்பதாம் திகதி

6 துலைத் திங்கள் பத்தொன்பதாம் திகதி

7 துலைத் திங்கள் இருபத்து எட்டாம் திகதி

8 கன்னித் திங்கள் முப்பதாம் திகதி

9 துலைத் திங்கள் முப்பதாம் திகதி

10 துலைத் திங்கள் இருபதாம் திகதி

11 நளித் திங்கள் ஒன்றாம் திகதி

12 துலைத் திங்கள் முப்பதாம் திகதி

13 துலைத் திங்கள் இருபத்து எட்டாம் திகதி

14 நளித் திங்கள் ஒன்றாம் நாள்

15 நளித் திங்கள் இரண்டாம் திகதி

16 நளித் திங்கள் இரண்டாம் நாள்

17 துலைத் திங்கள்முப்பதாம் திகதி

18 நளித் திங்கள் மூன்றாம் திகதி

19 நளித் திங்கள் நான்காம் திகதி

20 நளித் திங்கள் ஆறாம் திகதி

21 நளித் திங்கள் நான்காம் திகதி

22 நளித் திங்கள் ஐந்தாம் திகதி

23 நளித் திங்கள் மூன்றாம் நாள்

24 நளித் திங்கள் ஐந்தாம் திகதி

25 நளித் திங்கள் ஆறாம் திகதி

26 நளித் திங்கள் ஏழாம் திகதி
27 நளித் திங்கள் ஏழாம் நாள்
28 நளித் திங்கள் ஒன்பதாம் நாள்
29 நளித் திங்கள் ஆறாம் திகதி
30 நளித் திங்கள் எட்டாம் திகதி
31 நளித் திங்கள் பதினைந்தாம் நாள்
32 நளித் திங்கள் எட்டாம் திகதி
32 நளித் திங்கள் ஒன்பதாம் நாள்
33 நளித் திங்கள் பதினைந்தாம் நாள்
34 சிலைத் திங்கள் பத்தாம் நாள்
35 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்
36 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்
37 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்

பண்டைய வரலாற்றின் மீதான புனைவு

சிந்து சமவெளி நாகரிகம் குறித்த காலகட்டத்து வாழ்வைப் பற்றியே படைப்புகள் வராத சூழலில், அதற்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலகட்டத்தைச் சார்ந்த கடலால் விழுங்கப்பட்ட நாகரிகமான குமரிக்கண்டத்து பண்டையத் தமிழர் வாழ்வியலை, தாய்வழிச் சமூக நெறிகள் மற்றும் தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றின் மீதான புனைவாக இந்த நாவல் வியப்பூட்டுகிறது.

என் அன்புக்குரிய தோழன் வ.கீரா இதுவரை எழுதிய சிறுகதைகள், குறு நாவல், இயக்கிய திரைப்படங்கள் எதனையும் விட ‘குமரி’ என்கிற ஒரு செப்பமான படைப்பைத் தந்திருக்கிறார் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். அவரிடம் மிக அருமையானதொரு மொழிநடை உண்டு. அது இந்த நாவலில் மிகச் சிறப்பாகக் கிளைத்திருக்கிறது.

நம்மிடம் இப்போது இல்லாதுபோன அலங்கு என்கிற நாய் இனம், பலவிதமான யாளிகளான மகர (ஆடு) யாளி, சிம்ம யாளி, யானை யாளி பற்றிய இந்த நாவலில் வரும் விவரணைகள், அழிந்துபோன டைனோசர்கள், சங்க இலக்கியத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடும் விலங்குகள், நற்றினையில் பேசப்பட்ட விலங்குகள், கிரேக்க புராணங்களில் வரும் பீனிக்ஸ் பறவை, சீன ஜப்பானியர்கள் உருவகப்படுத்துகிற டிராகன் ஆகியவைபோல, தமிழ் இலக்கியங்கள் பேசுகிற யாளிகள் கற்பனை மிருகமா? அல்லது அப்படி ஒரு விலங்கு வாழ்ந்து அழிந்துவிட்டதா?

மாமூத் என்கிற பிரமாண்ட கம்பளி யானைகள் 4.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தன, பலவிதமான டைனோசர்கள் வாழ்ந்தன என்பதன் உயிரியல் ஆதாரங்கள் இப்போது கிடைக்கின்றன. அதுபோல யாளிகளுக்கும் உயிரியல் ஆதாரங்கள் வருங்காலத்தில் கிடைக்கலாம். ஆனால், இருந்ததாக நம்பப்படுகிற ஒன்றை இலக்கியமாக்குவது மிக

அவசியமான ஒன்று. அதை கீரா அவர்கள் மிகச் சிறப்பாக இந்தப் புதினத்தில் இலக்கியமாக்கியுள்ளார்.

குமரிக்கண்டம் குறித்து நம்மிடம் இப்போது உள்ள அத்தனைக் குறியீடுகள், ஆவணங்கள், கதைகள் அத்தனையையும் அடிப்படையாகக் கொண்டு ஒரு பிரமாண்டமான புனைவை உருவாக்கியிருக்கிறார் என்பது என் கருத்து,

வரலாற்று இலக்கியமோ நிகழ்கால இலக்கியமோ வரலாற்றின் மீதான புனைவுகள் மிக அவசியமான ஒன்று. ராமாயணம், மகாபாரதம் மற்றும் சேர சோழ பாண்டியர்கள் மீதான புனைவுகளுக்கே பழக்கப்பட்ட நமக்கு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பான பழந்தமிழர்கள் வரலாற்றுக் குறிப்புகளின் மீதான புனைவு என்ற வகையில் 'குமரி' மிகவும் அவசியமான ஒன்று.

இருவாஞ்சி, -செம்பன், திருக்கையன், -ஆரல் நங்கை, கோகன்,- மலைச்சி, செங்கோடன் கதாபாத்திரங்கள் கல் கோடாரி, கல் ஈட்டி, கவண், வில், இரும்பு முதல் பயன்பாட்டுக்கு வந்த சூழலின் புனைவு அருமையான புனைவு (3500 ஆண்டுகளுக்கு முன் இரும்பு இந்தியாவின் பயன்பாட்டில் இல்லை). ஆதி தாய் கொற்றவை வெறியாட்டு விழா மற்றும் தமிழர்களின் வழிபாட்டு முறைமை, உருவன் என்கிற ஆமை, ஆரல் என்கிறவளை மரணத்தீவுக்கு அழைத்துச் செல்லும் கதைப்புகள் என புதினம் மிக வியப்பூட்டுகிறது.

பண்டையத் தமிழர் பற்றி சங்க இலக்கியங்கள் பேசுவதை, வாய்வழிச் செய்திகளை நம்மிடம் இருக்கும் குறிப்புகளை மரபான செய்திகளை வைத்து நவீன இலக்கியங்களை உருவாக்க வேண்டும். அது சார்பற்ற நிலையில் பொதுவான தமிழ்ச் சமூகத்தைப் பேச வேண்டும். அந்த வகையில் இயக்குனர் எழுத்தாளர் வ.கீராவின் இந்தப் படைப்பு தமிழில் மிக அவசியமான முக்கிய படைப்பாக இருக்கிறது. அவர் தொடர்ந்து எழுதவேண்டும் என்பது மிக மிக அவசியம். வரலாற்றுப் புதின வரிசையில் இது சிறப்பான முயற்சி; அவசியமான முயற்சி.

- கரன் கார்க்கி

சென்னை- -12.

காலம் வென்ற தொன்மமும் சமகாலத்தின் கவனமும்!

நெடிய வரலாறு கொண்ட ஓர் இனத்தின் தொன்மை சார் வாழ்வியலைப் பிரதானப்படுத்திப் படைப்பை உருவாக்குவது என்பது மிகவும் சவாலானது.

எந்தப் படைப்புக்கும் காலமும் களமுமே முதன்மையானது.அதிலும் வரலாற்றுப் பின்புலத்தில் எழுதப்படும் படைப்புக்கு அது மேலும் முக்கியமானதாக மாறுகிறது.

காலமும் களமும் ஒன்றுக்கொன்று இயைபு கொள்ள வேண்டிய இரட்டை மாடுகள். அவையே வாசகனைத் தன்வசம் ஈர்த்துக்கொள்ளும் சூட்சமம் மிக்கது.

எழுத்தாளர், இயக்குநர் கீரா அவர்களின், 'குமரி', நாவலை வாசிக்கிற வாய்ப்பின் நிறைவில் உருவாகும் உள்ளெழுச்சியுடன் இதனை எழுதுகிறேன்.

கொற்றவைக்குப் பின் ஐம்பதினாயிரம் ஆண்டுகள்...திருவள்ளுவருக்கு முன் தொண்ணூறாயிரம் ஆண்டுகள்!

முதல் அத்தியாயத்தில் அவர் காட்டும் காலம் இது.

கொற்றவை...

ஆதித் தமிழினத்தின் தாய்த்தெய்வப் படிமம்.

தொல்காப்பியர், நாநிலங்களைப் பகுத்து சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்று முதன்மைத் தெய்வங்களாக முன்வைக்கிறார்.

மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

-(தொல்.அகத்.நூ.5)

என்று வரையறுக்கிறார்.

ஆயினும், அவரே புறத்திணையில் ஒருதிணையாய் கொற்றவை நிலை குறித்து,

"*மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த*

கொற்றவையும் நிலையும்

அகத்திணைப்புறனே"

-(தொல்.புறத்.4)

-எனக் குறிப்பிடுகிறார்.

நம் தமிழ்ச் சமூகத்தின் தாய்த்தெய்வ முதன்மை வழிபாடு மாறி திணைகளுக்கு ஆண்தெய்வங்கள் முன் நிறுத்தப்பட்டபோதிலும் புறத்திணையில் கொற்றவையை தொல்காப்பியரே குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத்தது.

பின்னர்வரும் இலக்கண இலக்கியத் தொடர்ச்சியில், கொற்றவை', பாலை நிலத்தின் தெய்வமாக பரிணாமம் கொள்கிறாள்.

முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து

நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்து

பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"

-(சிலப்பதிகாரம்-.காடுகாண் 64-68)

-என்று சிலப்பதிகாரம் சொல்லும்.

பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நிலங்கள். குறிஞ்சிக்குக் கடவுள் முருகன் மட்டுமல்ல, கொற்றவையும் என்பார் நச்சினார்க்கினியர்.

எதற்கு இவற்றையெல்லாம் குறிப்பிட வேண்டுமெனில் நாவலாசிரியர் பேசும் காலம் கொற்றவை கோலோச்சிய காலம்.

தாய்வழிச் சமூகம் தளைத்தோங்கியச் சிறந்த காலம்.

வாழ்வின் முதன்மையாய் பெண்ணை வைத்திருந்த காலம்.

வரலாற்றுப் புதினம் என்பது கதை சொல்லுதல் அல்ல. வெறும் கதையைச் சொன்னால் கதை கேட்போர் கேட்டவுடன் கலைந்து செல்வர்; வாசித்தவுடன் வாசித்தோர் விலகிச் செல்வர்.

புதினமென்னும் பெரும் சமுத்திரத்தின் ஆழத்தில் மூழ்கி முத்தெடுக்கச் செய்ய வேண்டுமெனில் வாசகனை வசப்படுத்த வேண்டும்.

அது அத்துணை எளிதானதன்று. அரிய அத்தகையச் செயலை மிகவும் நேர்த்தியாக கீரா செய்திருக்கிறார்.

எப்படி?

காலமும் களமும் இணைந்தால்தான் அதற்கானத் திறப்புக் கிடைக்கும். வரலாற்றுப் புதினங்கள் எழுதும் வேளையில், ஏற்கெனவே நமக்குக் கிட்டியிருக்கும் வரலாற்று, இலக்கியச் செல்வங்களில் இருந்து எடுத்து எழுதுவது இயல்பு.

சங்க இலக்கியத்தில் கிட்டும் காட்சிகளை, செய்திகளை, உணர்வுகளைத் துணைக்கொண்டு பெரும்பரப்பில் விஸ்தாரமாய் எழுதிட முற்படலாம்.

அல்லது, பின்னர் உருவான காப்பியங்களை மீள் பார்வைக்கு உட்படுத்தி உடன்பட்டோ முரண்பட்டோ ஒரு புதினத்தை எழுத முனையலாம்.

எவ்விதமான, ஒரு சொல்லிலும் திறப்பு வாய்க்காதக் காலத்தை முன்வைத்து தொன்மத்தின் கைப்பற்றி எழுதுவது என்பது உள்ளத்தின் வேட்கையின் உச்சத்தால் மட்டுமே சாத்தியம்.

அந்தச் சாத்தியத்தை நிகழ்த்தியிருக்கிறார் கீரா.

இந்த நாவலின் கதையை இப்படிப் பகுத்துப் பார்ப்பது எளிதாக இருக்கும்.

1. கொற்றவை வழிபாடு

2. இனக்குழு மோதல்

3. இயற்கைப் பேரிடர்

கொற்றவை வழிபாடு என்பதை நிகழ்வுச் சித்திரமாக விவரித்து மாற்றாமல் கருத்துச் சித்திரமாக மாற்றியிருப்பதுதான் படைப்பின் வெற்றி. அதன் மைய இழை பேசுவது கொற்றவை வழிபாட்டை மட்டுல்ல, அதனினும் மேலதிகமாக கொற்றவையை வழிபடும் சமூகத்தில் பெண்கள் எத்தகைய பேராளுமைகளாக இருந்தார்கள் என்பதே.

சில காதல் சூழல் தவிர்த்து, பெண்களின் அழகு குறித்த சிலாகிப்பு எதுவும் அதிகமில்லை என்பது படைப்பாளனின் கருத்து மையம் சார்ந்த கவனத்தை நமக்கு உறுதிப்படுத்துகிறது.

ஒரு காலம் சார்ந்த படைப்பை உருவாக்கும்போது மொழி என்பது மிக மிக முக்கியமானது. ஏதோ படைப்பாளிக்கே கொற்றவை வெறியாட்ட நிகழ்வில் பங்கேற்ற மனஎழுச்சி மேலெழுந்ததாக உணரும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது.

வீரம் குறித்து, அதுவும் பெண்கள் வீரம் குறித்து எழுதும்போது இருக்கும் வேகம் காதல் குறித்து எழுதும்போது வெகுவாய் கட்டுப்பாடுடைய மொழிக்கு மாறிவிடுவது பெரிய லாகவம்.

சங்க இலக்கிய காலத்தில், மன்னர்கள், பகைமை, போர் எனவும் பல வாசிக்கிறோம். தமிழ்ச் சமூகம் ஒரு கட்டமைப்புக்கும் கலாசார முழுமைக்கும் தகவமைந்தது.

ஆனால், இந்தப் புதினம் நிகழும் காலம், மனிதர்கள் ஒன்றிணைந்து வாழத்தொடங்கிய காலம்.

மக்கள், குழுவாய் வாழத்தொடங்கியபோது, ஒரு கட்டமைப்பை உருவாக்கிய காலம். அப்படி உருவாகும்போது அல்லது உருவாக்கும் போது வாழுமிடத்துக்கு எத்தகைய அரண்களை உருவாக்குகிறார்கள் என்கிற விவரணைகள் மிகவும் நுட்பமானது.

எதிர் குழுக்கள் உருவாகும் சூழல், மூர்க்கர்கள் எப்படி உருவானார்கள் என்பதற்கான காரணம் உளவியல் சார்ந்த யதார்த்தம்.

அதனால் நிகழ்கிற போர், போர் யுத்திகள், போரில் பெண்கள் முன்னின்று தாய்மையச் சமூகத்தின் மேன்மையைப் பெரிதும் நெஞ்சில் நிறுத்துகிறக் காட்சிகள், செயல்படுவது, அவர்களுக்குத் துணையாக ஆண்கள் இறப்பது என கடல்கோள் கொண்டு குமரிக்கண்டம் பெரிதும் அழிவுற்ற தொன்மம் நாம் யாவாம் அறிந்த ஒன்றே. அதனைத்தான் நாவலில் மூன்றாம் சித்திரமாய் முன்வைக்கிறார்.

சரி.

ஒரு படைப்பாளி, எவ்விதமான இலக்கிய, சரித்திரச் சான்றுகள் இல்லாமல் எழுதிவிட முடியுமாவெனில்... சாத்தியமில்லை.

இவர் கட்டமைக்கும் காலத்தின் சான்றுகள் இல்லாமல் இருக்கலாம். சில அறிஞர்களின் ஆய்வுகள் துணை நின்றிருக்கலாம்.

அதனையும் கடந்து, நமது இலக்கியங்கள் தொடர்ச்சியாகப் பேசும் செய்திகளில் ஏறி ஒரு கால இயந்திரப் பயணத்தை நிகழ்த்தியிருக்கிறார். அதில் பல்லாயிரம் ஆண்டுகள் பயணித்திருக்கிறார்.

போர் குறித்துப் பேசும்போது,

"போர் என்று வரும் பொழுது அதற்குள் ஒரு அறம் நிலைத்து விடுகிறது'' என்று எழுதும் வரிகளில் அறமற்ற போரில் நேர்ந்த சம கால இழப்புகள் நினைவில் வந்து நம்மை ஒரு கணம் உறைய வைக்கிறது.

ஆணாதிக்கச் சமூகம் வல்லாதிக்கம் செய்யும் இன்றையச் சூழலில் தாய்வழிச் சமூகத்தின் உயர்வை, சிறப்பை, மேன்மையை, பெண்களின் பேரறிவை, பெரும் வீரத்தை, தலைமைப் பண்பை, கம்பீரத்தைப் பேசுகிறது, ‘குமரி’.

அஞ்சாவண்ணி, இளவாஞ்சி, ஆரல் போன்றவர்கள்தான் கொற்றவை.

வாழும் காலத்தில் நாம் புரிந்துகொள்ளத் தோன்றும்... ஆம், தோன்ற வேண்டும்...

உடனிருக்கும் கொற்றவையின் பெறாமதிப்பை.

அதுதான் இந்தப் படைப்பின் வெற்றியாக இருக்க முடியும்.

வாழ்த்துகள் கீரா.

எப்போதும் அன்புடன்

முனைவர் தமிழ்மணவாளன்

1 துலைத் திங்கள் இருபத்து ஒன்பதாம் நாள்

தன்னால் அது முடியுமா என யோசித்துப் பார்த்தாள் இருவாஞ்சி. மிகவும் கடினமான, செய்து முடிக்கவே முடியாத உச்சம் என்று உணர்ந்திருந்தாள். ஆனால், வேறு வழியே இல்லை. செம்பனின் ஒற்றைப் பார்வைக்கு முன் உயிர் துச்சமென முடிவெடுத்திருந்தாள்.

தகதகவென மிளிர்ந்து, கடுகளவில் திரண்டிருக்கும் ஒளிப் புள்ளியை ஆசன வாயின் மேல்புறத்தில் உணர்ந்து மனதை இறுக்கிப் பிணைந்தாள். மனமும் ஒளியும் ஒருசேர தண்டுவடத்தில் தீற்றல்களாக ஒளி குமிழ்ந்து உருண்டு மேல் நோக்கி நகர்ந்தது. பின்மண்டை வழியே படர்ந்து தழைத்து, குழவி முன் நெற்றிக்கமலத்தில் பொருத்தி ஒரு கணம் நிலைத்தாள். பின் தலையுச்சியை நோக்கி நகர்த்தினாள். அவளது தலையில் குவிந்து கூம்பாச்சியாக மேலெழுந்து நின்றது மயிர். அதனுள்ளே ஒளி வெள்ளம் மலர்ந்து கிடந்தது. முதுவெளித் தாய் கொற்றவையை முன்நிறுத்தி ‘வழி வேண்டும்’ என்று அவள் வேண்டி நின்றாள். கணநேரம் அகட்டி வைத்திருந்த கால்கள் விறைப்பாக நின்றன!

மனம் இருண்டிருந்தது. இருள் மேலும் கருமையாகி, கருவாகி சூன்யத்தின் அடர் கிளைகளைக் கடந்து சென்றது. ஆங்காங்கே முகங்கள் தெறித்து விழுந்து மறைந்துகொண்டிருந்தன. பல்லாயிர ஆண்டுகளின் தொடர் முகங்கள். ஒவ்வொரு முகத்திலும் கட்டுக்கடங்காத ரேகைகள் வேர்களைப்போலத் தடித்திருந்தன. வேர்களின் தோல்களைக் கடந்து நரம்புகளை ஊடுருவி, தசைகளைப் பெயர்த்து

அணுவொன்றாகி, அணுவும் பிளந்து பெரும் இருளொன்றிலிருந்து ஒளியாகி, மயிரே முகமாக அவள் நின்றாள்... கொற்றவை!

முகத்தில் துளியும் கோபமில்லை; ஆங்காரமில்லை; அயற்சியில்லை; அலுப்பில்லை; சிரிப்பில்லை. அனைத்தும் நிரம்பப் பெற்றவளாக அவளது ஆதித்தாய் இருந்தாள். அவளின் மேனியெதுவென ஊடுருவிப் பார்க்க முயன்றாள். கோடிக் கண்கள் விரிந்து அவளைக் குலைந்து பார்த்தன. புரிந்தது. மனம் ஊடுருவி உள்வாங்கியது. அவளுக்கு நம்பிக்கையளித்தது. தனக்குத் துணையாக முதுவச்சி நிற்பாள் என்று உறுதிப்பட நம்பினாள். மனதிலிருந்து தாயைக் கட்டிக்கொண்டாள். தாய் அவளின் தலை வருடினாள். இருவாஞ்சி பேரு வகையடைந்தாள்.

இருவாஞ்சியின் அருகே நின்றிருந்தது செவளை, நல்ல மோட்டுத் தாங்கான அலங்கு! நான்கு முழத்துக்குக் கொஞ்சம் குறைவு. இளங்குட்டி. உடல் முழுக்கப் போர்த்திய செவள் வண்ணம். அங்கங்கே வெண்மையும் கருமையுமாகக் குமிழ் போன்ற பொட்டுகள் அதன் உடலெங்கும் பரவிக் கிடந்தன. அதன் ஒரு அடி நீளமுள்ள காதுகள் விறைத்து நின்றிருந்தன. அரையடி நாக்கு நிலத்தைத் தொட்டுவிட முயன்றுகொண்டிருக்க, அலங்கின் கண்களில் குவிந்து கிடந்தது பச்சை.

எதிரே அடர் காடு. குமரிக்கோடு. மலையின் காலடியில் நின்றிருந்தார்கள் இருவாஞ்சியும் செவளையும். ‘மலையின் நுனியைத் தொட்டவர் பிறக்கவில்லை இன்னமும்’ என அறிந்திருந்தாள். எத்தனை கோடி ஆண்டுகளுக்கு முன்னால் உருவானதென்று யாராலும், அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை. குமரிக்கோட்டின் தலைப்பகுதி முழுக்க வெளிர் பனிக் கூட்டத்தால் ஆனதென்று அறிந்திருந்தாள்.

மாந்த, மிருகச் சுவடுகள் நெருங்க முடியாத பெரும் பனியும், காற்று வெளியற்ற பெரும் வெற்றிடமும் சூழ்ந்த இப்புவியின் மிக உயரமான தொன்மமது. மலையே ஒரு பெருஞ்சூரியளைப் போன்று தகிக்கும். வெண்பனிப் பாறைகள்

பிளவுபட்டு, உடைந்து, சிறுசிறு பாறைக்கட்டிகளாக மாறித் தெறித்தன! அவையே உருகி நீர்க்குழம்புகளாக எங்கே மாறியது, எங்கே பூத்திவலைகளாகப் பிரிகின்றன என்பது கதிரவளுக்கே வெளிச்சம். ஓராயிரம் பாகத் தொலைவுக்கு விசும்பிலிருந்து கொட்டும் பெரும் பனிநீரே குமரிக் கோட்டின் மாபெரும் அருவி. ஆழி பெருகி விசும்பிலிருந்து கீழே குதிக்கிறதோ என்று தோன்றுமளவு வெளேறெனக் கொட்டும் அருவியின் நடுவானத்தில்தான் கடம்பமும், வாகையும், கருங்காலியும், மா, செஞ்சந்தன மரங்களும் மிகுதியாக இருந்தன.

அங்கிருந்த ஒவ்வொரு மரமும் கிழட்டு ஆனையினுடல் போல விட்டத்தைக்கொண்டிருந்தன. அடித் தண்டும், இடைத் தண்டும் மட்டுமே மரங்களுக்கு இருப்பதுபோலத் தெரிந்தன. நடுமரத்துக்கு மேலிருந்த கிளைகளும் அதன் தழைகளும் மறைந்து கருவண்ணத் திட்டுகளாக மிதந்துகொண்டிருந்தது மேகம். அதை நீலப்போர்வையால் பிடிக்க முயன்றுகொண்டிருந்தது விசும்பு. குமரியிலிருந்து விழும் பெருந்தண்ணீர் பேராறாகக் கிளம்பி ஏழ் குறும்பனையை நடுவில் பிளந்ததுபோலப் பாய்ந்து, தெற்கே திசைமாறி ஏழ் குன்ற நாடுகளுக்கான திட்டமிடப்படாத எல்லைகளை வரையறுத்தபடி புரண்டு சென்று, கிழக்கே ஊடறுத்து, ஏழ் குணக்கரை நாடுகளுக்கு வடக்காகவும், ஏழ் குறும்பனை நாடுகளுக்குத் தெற்கெல்லையாகவும் பிரிந்து, கிழக்கு முகமாக ஆழியில் இணைக்கும்போது தோராயமாக இருநூற்று அறுபது காத தூரத்தை நிலத்தில் கலவி கொண்டது குமரியாறு!

குமரியின் பேரருவியான பாலருவி பெயர்த்து வரும் பெயர் பெறாத கொடிகள், சிறு மரங்கள் ஆங்காங்கே தங்கி புதிய வனங்களோடு பிணைந்து கிடந்தன. மரத்தின் எந்தக் கிளைகளிலிருந்து மழைநீராகக் கொட்டுகின்றன என்றறியா வண்ணம் வனம் முழுக்கவே தேன்கூடுகளிலிருந்து வழிந்த தேன் மழையாகப் பெய்துகொண்டிருந்தது. காலடித் தடமறியாப் பெருங் கோரைகள் வனம் முழுக்கப் போர்த்திக் கிடந்தன. அதன் மேல் தாமரை இலைகள் நீளவெட்டில் பூத்து நிற்பதுபோல இளம்

பச்சை நிற குமரிச் செடிகள் இதழ் விரிந்து, பக்கமுள் பரப்பிக் கிடந்தன.

இருவாஞ்சி கண் விழித்தாள். ஒன்பது முழ உயரத்தில் வைரம் பாய்ந்த உடல் அவளுடையது! தலையில் முடியை மடித்துப் பின்னி, இரு புறமும் மயிற்பீலியைக் கவட்டைக் கொண்டு பிணைத்திருந்தாள். மரங்கொத்தியின் கொண்டையாகத் தலைக்கு மேலிருந்தது அது. வேட்டை மகளாகத் தினவெடுத்துத் திரண்டிருந்தன தோள்கள். இடக்கையில் தோளிலிருந்து முட்டி வரைக்கும் கரும் பச்சையிலும், நீல வண்ணத்திலும் வில் அம்பைக் காலத்துக்கும் அழியாத வகையில் குத்தியிருந்தாள். வலது தோளில் இருபத்தியொரு நரம்புகள் கொண்ட சகோட யாழ் வரையப்பட்டிருந்தது. கொப்பரைகள் அடுக்கி வைக்கப்பட்டது போன்று இறுகிக் கெட்டித்த முலைகள் கூர்திருந்தன. அதன் மீது வெளிர் பச்சையில் கச்சை பின் கொசுவம் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. ஓரடி நகரும்போது அந்தக் கெட்டித்த முலைகள், கச்சையை மீறித் ததும்பி ஆடின. வயிறு உள்வாங்கிய பெரும் பாறையைப்போலக் கெட்டித்துக் கிடந்தது!

முகுகெலும்புக்கு வெளியே விரல் அளவு நீண்டிருந்த புட்டத்தில், அனலில் வாட்டி, மூலிகை நீரில் ஊற வைத்துக் காய வைக்கப்பட்டு, கரு நீலத்துக்கு மாறிய அரச இலைகள் வைத்துத் தைக்கப்பட்டிருந்த இடையாடையை அணிந்திருந்தாள். அதன் மேல் உடும்புத்தோலால் ஆன இடுப்புப் பட்டை. அதில் கல் குறுவாளொன்றும், பதப்படுத்தப்பட்ட மூங்கில் குழலும், கல் கோடாரியின் புடமொன்றும், சிறு கல்கத்திகள் இடையின் இடைவரை அளவில் குறைந்து குறைந்து எட்டுக் கத்திகள் இருந்தன. வலது பக்க இடுப்பில் ஒரு கூம்பு வடிவக் கலயம் மூடியிடப்பட்டுத் தொங்கியது. அதனருகே குமரிச் செடியை நைந்து செய்த மெல்லிய நார்க் கயிறு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. குமரிச் செடியைப் பட்டையுரித்து, அதன் உள்ளிருக்கும் நாரைத் தனியே பிரித்தெடுத்து ஆல்வேலெனப்

பதினேழு வகைப் பாலால் பதப்படுத்தப்பட்டு அதைப் பின்னிக் கயிறாக்கியிருந்தார்கள்!

தூரத்திலோடும் கொழுத்த பன்றியின் தலையில் வீசி இழுத்து, மரத்தில் கட்டினால், பன்றியால் மீறிப் போகமுடியாத உறுதி அந்த நார்க் கயிற்றில் உண்டு. முகத்தில் மாங்கொட்டைபோல உருண்டிருந்த வெள்ளைத்திரையை ஒட்டிய கருங்கோளத்தில் நரம்புகளால் சிவந்த கண்கள் புருவங்களுக்குக் கீழே வேராகப் பாவியிருந்தன. புருவ மயிர்கள், வளைந்த நாண்போல் ஒழுங்கில்லாமல் தடித்திருந்தன. நூற்றியெட்டு அருஞ் சாந்துகளைக் கொண்ட வண்ணப் பொட்டுகளை அலகு குத்தியிருந்தாள். புருவத்துக்கு வெளியே கோளத்தைப் பாதி நீட்டியபடியிருந்த கண்களால் தலை நிமிர்த்தித் தட்டையாக வெடித்துவிடுவதுபோல, காற்றின் நாற்றத்தை நுகர்ந்துகொண்டிருந்த மூக்கின் கூர்மையில் மேலே பார்த்தாள். மேலிருந்து சொட்டென விழுந்த துளி நாசியில் விழ, திருக்கைபோலிருந்த உதட்டைத் திறந்து, நாவினால் நாசியைச் சுழற்றி எடுத்தாள்.

புரிந்துவிட்டது...

விழுந்த துளி, தேன்மழையின் தனித் துளியல்ல. நீர்ப்பெரு மழைக்கான அறிகுறி. துலைத் திங்கள் முடிந்து நளித்திங்கள் துவங்க இன்னும் இரு திகதிகளே இருக்கின்றன. துலையின் இறங்கு பிறையிலேயே பெரும்பாலும் மழைக்கால அறிகுறிகள் தென்படும். அதிலும் பெருங்காட்டின் இடைப் பகுதியில் நிற்கிறோம் என்ற நினைப்பே இருவாஞ்சியைப் படபடப்பாக்கியது. துலையின் இறுதித் கிழமைகளில்தான் சிம்மயாளி, குமரிக்கோட்டின் மேல் எல்லையிலிருந்து பாதுகாப்பான நடுத் தாழ்வாரப் பகுதிக்கு வருமென்று அம்மா அஞ்சாவண்ணி சொல்லிக் கேட்டிருக்கிறாள். கிளம்பி வந்துவிட்டாள்!

தன்னைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கும் பெரும் கூட்டத்தை விட்டு செவளையோடு வந்துவிட்டாள்.

இருவாஞ்சிக்கு இது சவால் மட்டுமல்ல. ஏழ் குறும்பனையின் உறுதியான திடமுமிருந்தது. செம்பன் விளையாட்டாகக் கேட்ட ஒரு சொல். அவளை மரணத்தின் தோற்றுவாயில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. செம்பனின் சொல் என்பது அவளைப் பொறுத்தவரை காலத்தைத் திட்டமிட மட்டுமே பயன்பட்டது எனச் சொல்லலாம். அவளுக்குள்ளும் கிளர்ந்து பல காலமாக உருண்டதுதான் இன்று திரண்டு நிற்கிறது. இருவாஞ்சி வனங்கள் குறித்த ஆய்வும் அறிவும் நிரம்பப் பெற்றவள். இன்னும் சொல்ல வேண்டும் என்றால் 'வனத்தி' என்றே அவளது செம்பன் அடை மொழியிட்டு அழைப்பான்.

வனத்திற்குள் மலைப்பாம்பைப்போலப் பிணைந்து கிடப்பாள். தேன் உறைந்து, மா உறைந்து, காட்டெறும்புகள் உறைந்து பெருங்கிளிகளின் உதிர்ந்த தோகைகள் படர்ந்து மெத்தையைப்போலக் கிடந்த மண்பாறையில் கிடந்தாள். அவளின் கச்சையில்லாமல் கொஞ்சம் உள்வாங்கிக் கிடந்த முலையில் காம்பு விரைத்துக் கிடக்க, அந்த முலைகளில் தீட்டப்பட்டிருந்த பச்சைப் பொட்டுகளைத் தடவி, பெருவிரல் தடிமத்தில் குத்திட்டு நின்ற காம்பை நடு விரல்களின் அடைப்புக்குள் வைத்து நிமிண்டிவிட்டபடி கேட்டான் செம்பன்.

"இருவாஞ்சி..."

"ம்..."

"என் யாழிக்கு நரம்பு வேண்டும்."

காம்பின் வருடலில் உடல் மயிற்சில்லிட்டுக் கிறங்கிக் கிடந்தவளின் வலப்புற மார் மீது தலை வைத்திருந்த செம்பனின் முகம் பார்க்க, அவனுக்கு ஈடாகத் தன்னைப் பொருத்திக்கொள்ள ஒரே கணத்தில் உடலைக் கொஞ்சம் கீழே வழுக்கி முகமும் முகமும் மோதிக் கொள்ள, கண்ணோடு கண் பார்த்தாள்.

"யாழிக்கு... யா..ளி..யி..ன் நரம்பு வேண்டுமா..?"

"ம்."

"நீயே கொன்று வா..."

“நீ கொண்டு வா...”

“எது வேண்டும்..?”

“சிம்மம்”

“ம்...”

“ம் னா..?”

“ம்ம்ம்..”

“சிம்...மம் எங்கனவிலயும் வர்றா... ஆனால் நரம்பு..?”

“நீ ஏன் கவலைப்படுற வாஞ்சி..? சிம்மத்தைக் கொல்லக் காட்டில் அனைத்துரிமையும் உண்டு!”

“ஏய்... அது தெரியாதா..?”

“நரம்பக் கேட்கிறாயே!”

“உன் எண்ணத்தச் சொல்லு..?”

“என் செம்பனுக்காகவும்... என் காதலுக்காகவும்... என் கனவுக்காகவும் சிம்மத்தைத் தேடிப் போக இருக்கேன்!”

“அப்புறமென்ன..?”

“சிம்மம், உயிரோடு நம்மோடு இருக்க வேண்டும்.”

“பெருந்தாய் கொற்றவைகூட கொன்னதாகத்தான் வரலாறு சொல்லுது. நீ எப்படி?”

“அது என் கவலை... நான் பாத்துக்குறேன். உயிரோட வரணுமா... நரம்பு வேணுமா..?”

இதைச் சொல்லும்போது இருவாஞ்சியின் உடல் மென்மையிலிருந்து முறுக்கிய இரும்பாக உருண்டு திரண்டது. அவளைக் கண்ணுக்குள் ஆழமாகப் பார்த்தான் செம்பன். புடைத்து இமைக்கு வெளியே உருண்டு கிடந்த அந்தக் கண்களில் குளிர்வில்லை. செம்பனின் மனம் கொஞ்சம் அச்சப்பட்டது.

“வாஞ்சி... எனக்குப் புரிஞ்சி போச்சி. தயவுசெஞ்சி...”

“என் மேல நம்பிக்கையில்லையா செம்பா...”

“இருக்கு... ஆனா நானும் வரேன்...”

இருவாஞ்சியின் உடலில் மயிர் சிலிர்த்து, கத்தியின் சொனப்பாக உடலில் ஊடலிட்டது. பேசக் கூடாத நேரமது. பேச முடியாத காந்த ஈர்ப்பு அது. ஊடலுக்கு மனமும் உடலும் ஏங்கிக் குலைந்த தருணமிது. ஊன் முழுக்க வேட்கை கொதித்துக் கிடக்க, செம்பன் கருவிழியோடு கருவிழி மோதக் கேட்டான்.

“ஒத்துக்கோடி...”

“.....”

“வாஞ்சி...”

இருவாஞ்சி உறுதியாகவும் இறுதியாகவும் சொன்னாள்.

“செரி, ஆனா ஒன்னு... நான் திமிலைப் புடிக்குற வரைக்கும் நீ காத்திருக்கணும்டா...”

“நீ திமிலைப் புடிப்ப... கண்டிப்பா உன்னால முடியும். அதுக்கு முன்னாடி உன்னக் கொன்னுட்டாக்கூட திரும்பிப் பார்க்காம வந்திடுறேன் செரியா..?”

தன் மீது இத்தனை நம்பிக்கைகொண்ட அவனை நினைத்துப் பெருமிதமடைந்தாள். அவள் குழந்தையிலிருந்து சிம்மயாளியைப் பற்றிய கனவுகளோடே வளர்ந்தாள். முன்னோர்கள் கொன்ற சிம்மத்தின் எலும்புகள் பதப்படுத்தி வைத்திருந்த காட்சியகத்துக்கு அடிக்கடி செல்வாள். ஒவ்வொரு நாட்டிலும் அரிய பொருள்களை சேகரித்துப் பாதுகாக்கும் வழக்கமிருந்தது. அங்குக் காலங்காலமாகக் குவித்து வைக்கப்பட்ட பெயரற்ற பறவைகளின், விலங்குகளின் சிம்மத்தைவிட மிகப் பெரிதான, வானத்தைத் தொட்டுக் கொண்டிருக்கும் விலங்குக் கூட்டங்களின் எலும்புகள், அந்தந்த மிருகத்தின் வடிவத்துக்கு ஏற்றாற்போலக் கெட்டிப்படுத்தப்பட்டு, தோலில்லா உயிர்கள் நகராமல் நிற்பதுபோல, படுத்திருப்பது போல, நடப்பதுபோல, பறப்பதுபோல குகைகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

இப்படி வைத்திருப்பதற்கான காரணியமாக முன்னோர்கள் பல கதைகளைச் சொல்வார்கள். நம்மோடு வாழ்ந்தவர்கள்... நம்மோடு இறந்தவர்கள் அவர்கள். நாம் மாந்தர்களாயிருப்பதன் சாட்சியை நமது எதிர்காலக் குழந்தைகளுக்கு உணர்த்தவேண்டும். அதற்கான நமது பங்கீடே இது என வழி வழியாகச் சொல்லப்பட்டிருப்பதை அவளும் அறிவாள். அத்தகைய விலங்குகளில் பல்லாயிரத்துக்கு மேலானவை இப்போது இல்லை என்பதே அவளுக்கு ஆச்சர்யமான ஒன்றாக இருந்தது.

தாய் அஞ்சாவண்ணி கொன்ற சிம்மத்தின் கூட்டருகில் அடிக்கடி செல்வாள். ஒவ்வோர் எலும்பையும் தடவிப் பார்ப்பாள். எலும்புக் கூடுகளாகக் கிடத்தப்பட்டிருக்கும் ஆளிகளின் உருவமே திகிலூட்டும் விதமாக இருக்கும். மண்டையோடே ஒரு பெரும் பாறையைச் செதுக்கி வைத்திருப்பதுபோலிருக்கும். கண்ணிருக்கும் அந்த எலும்புக் குழி ஒவ்வொன்றிலும் மூன்று கிழமை வளர்ந்த பன்றியைப் பதுக்கி வைக்கலாம். அதன் கண்களை எலும்புக்கூட்டுக்குள் ஊடுருவிப் பார்த்தாள். அதன் கண்கள் ஒளிர்ந்து வெறுப்பேறியது.

ஏதோ அவளிடம் பேச முயன்றது. ஊடுருவிப் பார்த்தாள். முடிய வில்லை. கண்ணைப் பார்ப்பதைத் தவிர்த்தாள். கடைவாயிலிருந்து நீண்டு தந்தத்தைப்போலிருக்கும் பற்களின் கூர்மையைத் தடவியுணரும்போது ஒரு கிழட்டு ஆனையின் முரட்டுத் தோல்களைக் குத்திக் கிழித்து, குடலை இழுத்து வெளித் தள்ளும் வல்லமையுடைய பற்கள் என்பதைப் புரிந்துகொண்டிருந்தாள். மற்ற பற்களும், அவை கற்பனை தின்ற நினைவுகள். அவளின் மனத்தீ, அதைத் தீயில் வாட்டிவாட்டி உறுதியான திண்ணத்தை வளர்த்திருந்தது.

யாரிடமும் சொல்லாமல் அடைக்காத்து அதை ஒரு புதிய உலகைப்போல சிம்மத்தை அடக்கி அவளது நேச மிருகமாக, அவளுக்குக் கட்டுப்பட்டு அவளது வேட்டைக்கு உடன் வரும் அலங்கை ஒத்ததாகக் கற்பனையொன்றை அவளுக்குள் படைத்திருந்தாள். வீரம் கொப்பளிக்க காட்டின் வேட்டையில்

மிகச் சிறந்த யாரும்கூட செய்யத் துணியாத செயல் அது. ஆனால், தான் தொடங்கி வைக்க வேண்டும் என்றே அதைக் குறித்த அனைத்தையும் சேகரித்தாள்.

தனது ஆர்வம் குறித்துக் காட்டிக்கொள்ளாமல் அமைதியாகத் தனது முன்னோர்களிடம் கேட்டுக்கொண்டே இருந்தாள். மருத்துவர்களிடம் பேசினாள். தெய்வர்களின் குறிப்புகளில் இருந்து சிலதைக் கண்டடைந்தாள். ஒவ்வொரு மிருகத்தின் பாவனையை முன்னெப்போதும் இல்லாத அளவில் மிகக் கூர்மையாக நோக்கினாள்.

சிம்மத்தின் சாணியைத் தேடித்தேடி அவற்றின் உணவுகளை மனக் குறிப்பெடுத்தாள். வசப்படுத்தும் பச்சிலைச் சாறுகளைக் கொண்டு ஆனைகளிடம் கொடுத்துப் பரிசோதித்தாள். அவளது ஆய்வில் பச்சிலைச் சாறு குடித்த ஆனைகள் இரண்டாவது மிடற்றிலேயே வெட்டுப்பட்ட மரம் சடசடவென ஓலமெடுத்துச் சாய்வதைப்போலச் சாய்வதைக் கண்டாள்.

சிம்மத்தைக் கண்டவர்களைத் தேடித்தேடிப் பேசினாள். தாய் அஞ்சாவண்ணியிடம் அதன் மூர்க்கத்தைப் பல நாள்களாகப் பேசிக் கேட்டுத் தெரிந்துகொண்டாள். அறுபத்தியெட்டு நாடுகளிலும் தேடிக்கொண்டே இருந்தாள்.

ஈராண்டு கடினமான நிலையைக் கடைப்பிடித்தாள். செவ்வுடும்புகளை வேட்டையாடி அதன் கால்களைப் பொறித்துத் தின்று செரித்தாள். உடும்பின் தோலைக் கொண்டு கயிறு பிணைந்தாள். காடெங்கும் அலைந்து திரிந்து அவள் கொன்ற செவ்வுடும்புகளே இருநூற்றைத் தாண்டியது.

கூட்டத்திலிருந்து விலகி மூர்க்கமாக நடந்துகொண்ட ஒற்றை ஆனையைத் தேடிக் கண்டு அதனைச் சீண்டி, அதனோடு மல்லுக்கு நின்றாள். காடே அதிரும்படி பெருஞ்சண்டை புரிந்தாள். அதை வசப்படுத்தினாள். புலிக் கூட்டத்தில் ஒற்றையாளாக உள் புகுந்து வெளியே வந்தாள். இலெமுர்களிடமிருந்து தழையில் மறையும் நுணுக்கம் கற்றாள்.

தவப் பயிற்சியில் மனதையும் உடலையும் எடையற்றதாக்கும் முயற்சியைச் செய்தாள். காற்றில் உதிரும் இறகு போலவும் இலகுவாகிப் பறக்க முடிந்தது அவளால்.

பறத்தல் தந்த இன்பத்தை உள் வாங்கினாள். 'மாந்தருக்கு ஏன் இறகில்லை?' எனப் பலமுறை அவள் நினைத்ததுண்டு. மாந்தருக்குக் கிடைத்திருக்கும் அறிவைக்கொண்டே மாந்தரால் பறந்துவிட முடியும் என மூத்த அறிவர்கள் சொன்னதை ஆழ்ந்து சிந்தித்துப் புரிந்துகொண்டாள். மாந்தர்கள் அனைத்தையும் வளைக்கும் அறிவுத் தீரர்கள் என்பதை தவப் பயிற்சியில் மேலெழும்பக் கற்றுக் கொண்டதிலிருந்து திடப்படுத்தினாள்.

அந்தத் திடம்தான் சிம்மனைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என்கிற ஆழமான பார்வையை உண்டாக்கியது. அதுவே அவளை வெகுவாகக் கிளர்த்தியது. சில கணம் சிந்தித்துப் பார்ப்பாள். இவ்வளவு கடினமாக முயன்று காட்டில் இருக்கும் சிம்மனை ஏன் வசப்படுத்த வேண்டும்? எதற்கு இந்த ஆசை... இல்லை பேராசை? இது ஆசையும் இல்லை பேராசையும் இல்லை. எல்லாருக்கும் நிரூபிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. இது ஒரு மனவோட்டம். எண்ணக் கிளத்தலின் விளைவு.

மாந்தர்களின் சிந்தனை வளர்ச்சியின் குறியீடு. கனவுத் தேடுதலின் கருப் பகுதி இது. காட்டிலும் மேட்டிலும், நீரிலும் நிலத்திலும் மாந்தர்கள் இயற்கையோடு பொருத்தி வாழ முடிந்ததே இத்தகைய முயற்சிகளால்தான்.

கொடிய விலங்குகளைக் கொல்ல வேண்டும் அல்லது வெல்ல வேண்டும். இரண்டும் நடக்கவில்லையென்றால் மாந்தர் இனமே அழிந்துபோயிருக்கும். அதனால், இதுவும் இயற்கையின் நியதிதான் என்று கலங்கிய குட்டையைத் தெளிவடைய வைத்தாள்; உறுதியானாள்.

செம்பனைப் பார்க்காமல் நீண்ட நாள் தவிர்த்து வந்தாள். தனது உறுதிப்பாடுகளில் கவனம் செலுத்தி உரு திரண்ட நாளில் உள்ளுக்குள் அமிழ்ந்து கிடந்த பசலைநோய் தீர்க்க அவனைக் கண்டாள்.

அவளைக் கண்டதும் செம்பன் திகைத்தான். அவளது உடல் கெட்டித்து மெலிந்திருந்தது. ஆனால் முன்னைவிட மிக உறுதியாக இருந்ததைக் கண்டுகொண்டான்.

செம்பனாலும் காற்றில் பறக்க முடியும். ஒற்றை விரலால் அவளை எளிதாகத் தூக்கி வீசவும் முடியும். அதேநேரம், அவளை அவளின் விருப்பமின்றிப் பெயர்க்கவும் முடியாத அளவு வேராகவும் ஊன்றி நிற்கவும் இருவாஞ்சியால் முடியும் என்பதை அவளைப் பார்த்ததுமே புரிந்துகொண்டான்.

சிம்மயாளி, செம்பனின் மூளையையும் பல காலமாக அரித்துத் தின்ற கொடிய மிருகம்தான். இவ்வுலகின் பேரதிகாரம் கொண்ட யாளிக் கூட்டம் என்றால் சிம்மக் கூட்டம். யாராலும் எதனாலும் கட்டுப்படுத்த முடியாத மிருகக் கூட்டம் அது. ஆனால், தனது எல்லையைத் தாண்டி ஒருபோதும் வருவதில்லை. மாந்தர்களுகும் அதற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதை போல எல்லைத் தாண்டாமல் உறுதியாக இருந்தன. அப்பேர்ப்பட்ட சிம்மக் கூட்டத்துக்குள் புகுந்து ஒன்றைக் கவர்ந்து வரவேண்டும். செம்பனின் இலக்கும், சிம்மத்தை வென்று இவ்வுலகை வெல்ல வேண்டும் என்றே காலத்தை உரமாக்கி நகர்ந்துகொண்டிருந்தான். ஆனால், முதன் முதலாக இருவாஞ்சியைக் கண்டதிலிருந்து அவளது நினைவுகளிலும் தங்கியிருப்பது சிம்மம்தான் என்று தெரிந்ததும் அவளுக்காகத் தன் கனவை விட்டுக்கொடுத்தான். இல்லை வலுப்படுத்தினான். இருவாஞ்சியால் முடிந்தால் என்ன... செம்பனால் முடிந்தால் என்ன? ஈருடலில் ஓருயிரென இருக்கும்போது தன்னைவிட அதற்காகவே பல ஆண்டுகளாகத் தன்னைத் தயாரித்து வைத்திருக்கும் இருவாஞ்சிதான் இதில் சரியான தேர்வாக இருக்க முடியும் என்கிற முடிவுக்கும் வந்திருந்ததால் செம்பன் இருவாஞ்சியின் பின் துணையாக இருக்க முடிவு செய்தான்.

அவளின் கனவைத் தூண்டி அதை வெறியாக்கினான். ஆனால் சிறு கலக்கமும் அவனிடமிருந்தது. சிம்மனை வெல்லாவிடில் உயிரிழக்க நேரிடவும் கூடும். அவளது உயிர் போக

தானும் காரணியமாகப் போகிறோமோ என்றெல்லாம் சிலநேரம் மனதிற்குள் குமைந்திருக்கிறான். அவளை நீண்ட நாட்களுக்குப் பிறகு கண்டதும் அவளது கட்டுறுதி மேனியின் மீதிருந்த பொலிவும் அவனது மனத் துயரடக்க, அவனும் உறுதியானான். கிட்டத்தட்ட செம்பனும் அவளுக்கிணையாக சிம்மம் குறித்த அகழ்வை முடித்திருந்தான். அகம் திடப்பட்டிருந்தது.

“அப்படின்னா... யாழிக்கு நரம்பு வேண்டாமா?”

“உன்ன என் பார்வையால... உன் கருத்த உடம்புல என் நெனப்பைத் திரட்டினா... தானா வெளிய வரும். உன்னோட செவந்த நரம்புகள வில்லுக்குக் கிட்டவச்சி மனக்கண்ணால் நாண் ஏத்தி வேட்டையாடலாமுன்னு நினைக்கிறேன்!”

செம்பன் சொன்னதன் அர்த்தம் புரியத் துவங்கியதும் உடல் சிலிர்க்க, தன் குவிந்த மாரை அவனது வாயில் வைத்து அழுத்தினாள். செம்பன் வாயிற்குள் முழுமையாக வாங்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தான். முகத்தை மார்பழுத்த அதன் கிறக்கத்தில் கண்களை மேல் நோக்கி அவளைப் பார்த்தான். அவளும் கிட்டத் தட்ட மோகத்தின் உச்சத்தில் அவனைப் பார்த்தாள்.

செம்பன் அவளிடம் குடுவையை நீட்டினான். கண்களை உருட்டிக் கேள்வியாக்கினாள்...

“சிம்மத்துக்குப் புடிக்காத வாடை இது. காட்டு மிருகங்களே ஒதுங்கிப் போகிற வாடை இது. தெய்வர்களின் குறிப்பிலிருந்து கொஞ்சம் முயற்சி பண்ணீருக்கேன். சிம்மத்தை நெருங்கும்போது உன் மேல ஊத்திக்க வாஞ்சி... சிம்மத்துக்கு மூக்கு துடிக்கிற மாதிரி வெறி வரணும். அந்த வெறியில கண்ணு மண்ணு தெரியாத கோவம் பொத்துக்கிட்டு வரும். உன்னக் கோவமா தாக்கத் தொடங்கினாத்தான் அதோட கூரறிவு செதையும். புத்தியைச் செதறடிச்சுட்டா, அவன சின்னப்புள்ளக்கிட்ட விளையாடுற மாதிரி போக்குக் காட்டியே மடக்கலாம். உன்கிட்ட அது தோத்துட்டா தன் வாழ்நாள் முழுக்க உனக்குக் கட்டுப்பட்டுப் பணிவா இருக்கும். நம்ம காட்டுல

இருக்கிற பல மிருகங்கங்க அப்படித்தான். தோத்துட்டா கூடயே வாலாட்டிக் கிட்டு நமக்குத் துணையா நிக்கும்... இல்லன்னா...”

“இல்லன்னா..? கவலப்படாத செம்பா... உடனே அதைக் கொன்னுடு... சரி... கரும்போகச் சாறு எங்க கண்ட? அது எப்படி செஞ்ச? வேர் எங்க கிடைச்சது? அங்கிட்டுப் போகக் கூடாதே... எப்புடி..?”

“எனக்காக என் வாஞ்சி உசிர பணயம் வைக்கிறப்ப... நான் உனக்காகத் தென்பாலி காட்டுக்குப் போகக் கூடாதா என்ன?”

“அவங்க பொல்லாதவங்க!”

“உன்னவிடவா..?” என்று செம்பன் சிரித்துக்கொண்டே சொல்ல, சட்டென இருவாஞ்சியின் கண்களில் ஒரு துளி நெகிழ்ந்தது. சட்டென அவனை இறுக்கிக் கொண்டாள். அவளது மனம் தென்பாலியை நினைத்தாலே அரண்டது.

அறுபத்தியெட்டு நாடுகளைத் தாண்டி மாந்தர்கள் எங்கே இருக்கிறார்கள் என இதுவரை தெரியவில்லை. பாதி மாந்த வடிவிலிருக்கும் இலெமூர்கள்தான் குமரி நிலமெங்கும் பரவி இருக்கின்றன. இலெமூர்கள் மிக மென்மையானவை. இலெமூர்களின் வழித்தோன்றலாக மாந்தர்கள் இருந்தார்கள் என்று சொல்லி வைக்கப்பட்டதால் இலெமூர்களைக் கண்டதும் அன்பைத் தெரிவிப்பது வழக்கம். எஞ்சியது மந்திகள். அவையும் மாந்தர்களைப்போலவே தோற்றம் கொண்டவை. நில உடைப்பில் துண்டாடப்பட்டு தனித்தனியாக பிரிந்துபோன நிலங்களிலும் தனது முன்னோர்கள் இருக்கலாம் என வழிவழிக் கதைகள் மூலம் அவர்கள் நம்பினார்கள். அதைத் தாண்டித் தனிப் பிரிவாக வாழும் அரம்பர் கூட்டமும் தெற்கே உண்டு. அவர்கள் வாழுமிடம்தான் தென்பாலி.

சிம்மயாளி மிருகம். மோதி விடலாம். தென்பாலியில் இருப்பவர்களோ மாந்த வடிவிலிருக்கும் மூர்க்கர்கள். மிருகங்கள் தேவைக்கேற்ப வேட்டையாடும். பசிக்கேற்ப உடலாடும். ஆனால் மூர்க்கர்கள் காமத்தை தின்பவர்கள். வகை தொகையில்லாமல் மிருகங்களைப் பச்சையாகத் தின்பவர்கள். மாந்தர்களில்

வலிமையற்றவர்களைக் கொன்று அவர்களது முக ஓட்டை மாலையாகத் தரிப்பவர்கள். மிருகத்தின் குரூரத்தோடு மாந்த வடிவம் தரித்த மனவடிவமானவர்கள். மோதவே முடியாதவர்கள்!

செம்பன், அவளின் அணைப்பில் உடலெங்கும் வெப்பம் பரவ, காதல் ததும்ப கட்டியணைத்துக்கொண்டான். இதுபோன்ற விநாடிகளுக்காக ஆயிரம் முறை தென்பாலி காட்டில் நுழையலாம் என எண்ணினான் செம்பன். இருவாஞ்சியோ, செம்பனின் ஆசையை நிறைவேற்ற முடிவு செய்தாள். செம்பனுக்காகத் தன்னை, தன் உயிரை இழக்கத் தயாராக இருந்தாள். சிம்மயாளியை அடைந்து வரும் போராட்டத்தை மற்ற எல்லா காரணிகளையும் தாண்டி அவள் செம்பனுக்காகவே செய்கிறாள்.

அந்த நோக்கமே அவளைக் குமரிக்கோட்டின் இடைமலையில் நிறுத்தியிருந்தது. மழை ஒரு சிறந்த அறிகுறிதான். ஆனால் குமரிக் கோட்டில் விழும் மழை சிறந்தது அல்ல. சிறு மழை பல நூறு மரங்களை வேரோடு பிடிங்கிக்கொண்டு வருமளவு காட்டாற்றைக் கொண்டு வரும். பல நூறு மிருகங்களை உருட்டிப் பிறட்டியெடுத்துக் கொண்டு போய்க் குமரியாற்றில் மூழ்கடிக்கும் ஆற்றல் வாய்ந்தது. ஆனால் சிம்மம் கீழ் வரும் காலமும் இதுதான். சிம்மனை அசைத்துப் பார்க்கவும் தோதான காலமும் இதுதான். அதனால் கொற்றவை வெறியாட்டு ஏற்பாடுகளில் கலந்துகொள்ளாமல் இந்தக் காட்டில் நிற்கிறாள் இருவாஞ்சி. ஆனால், அவளுக்காக ஏழ் குறும்பனையில் வேறொன்று காத்திருந்தது.

2 துலைத் திங்கள்பதினைந்தாம் திகதி

வளிமண்டலம் கதிரவளின் வெப்பத்தைப் போக்கும்படி தென்றலாக அடித்தபடி மித வேகமாக நகர்ந்துகொண்டிருந்தது. சுற்றிலும் கரை தென்படாதபடிக்கு ஆழி கொதித்துக்கொண்டிருந்தது. வானை எட்டிப் பிடிக்க மீன்கள் எம்பித் தாவிக் குதித்தபடியிருந்தன. ஆழியின் மேற்பரப்பில் புரண்டாடும் நுரையில் செதில்களை நீவிவிட்டுக்கொண்டன, குழுவான் குஞ்சு மீன்கள். தொலைவில் சுறா ஒன்று நீரை உள்ளிழுத்துத் தனது செவிள்களைப் பிளந்து நீரை வானை நோக்கிப் பீய்ச்சி அடிக்க, குழாயிலிருந்து பீறிடும் நீரைப் போல அது மேல்நோக்கிச் சென்று மீண்டும் திவலைகளாகச் சுறா மீதே விழுந்தது. அதன் அருகே செல்லாமல் சற்றுத் தள்ளித் தனது ஈரடி முழக்கால்களால் நீரைத் தள்ளியபடி, தாவி மேலெழுந்து மேலெழுந்து ஓடும் அலைகளைக் கிழித்தபடி மிக வேகமாக பாய்ந்துகொண்டிருந்தான் உருவன்.

உருவனுக்குப் பெயர் வைத்தவள் ஆரல்நங்கை. உருவனின் முதுகில் பாதம் பதியும்படி ஏற்படுத்தப்பட்டிருந்த அச்சில் பாதத்தை ஊன்றி, நான்கு முழம் நீண்ட தனது கால்களைப் பரப்பி வாகாக நின்றிருந்தாள் ஆரல் நங்கை. அவளின் கால்கள் திண் திமிலை வளிக்கும் துடுப்புபோலத் திடமாக வளைந்து நின்றன. ஆழியின் நுரைகள், அவளது செம்பழுப்பு நிற இடுப்புக் கட்டியத்திலிருந்து வெயிலில் மின்னிய

உறுதியான கரு மஞ்சள் தொடைகளின் வழியே ஆழியின் கொதிக்கும் நீரில் வழிந்துகொண்டிருந்தன. அலைக்கு மேலும், அலைக்கு உள்ளும் இறங்கி இறங்கி ஏறும்போது புட்டம் பெருத்த அவளின் இடுப்பு இணங்கி மடித்துக் கொடுத்தது. இடுப்பிலிருந்து உடல் வளைந்த நாண்போலத் தோள்வரை திடமாக இருந்தது. நெஞ்சில் கட்டியிருந்த பச்சை நிறக் கச்சையைப் பிதுக்கியபடி முலைகள் ஆடியாடி ஆணலைகளைச் சிலிர்க்க வைத்துக்கொண்டிருந்தன. உருவனின் கழுத்தில் மாட்டியிருந்த கவணின் மறுமுனையில் கவட்டை போன்ற கிளையைக் கட்டி அதைப் பிடித்திருந்த அவளது உறுதியான கைகளில், வலதில் வலம்புரிச் சங்கும், இடது தோளில் இருந்து கீழாக மீன்கொத்தியும் பச்சிலையால் வரையப்பட்டிருந்தன. கொக்கைப்போல நீண்டிருந்த கழுத்தில் இரண்டு முத்துப் பரல்களைக் கோத்துக் கட்டியிருந்த கயிறு, உருவனின் தாவலுக்கேற்ப அங்கும் இங்கும் ஆடி, ‘தலையை விட்டு வெளியே தாவி விழுந்து விடுவோமோ’ என்கிற அய்யப் பாட்டுடனே கழுத்தில் உருண்டுகொண்டிருந்தது. வட்டமான, சதைப்பிடிப்பில்லாத கறுத்த முகத்தில் வேறு எந்த வண்ணங்களுமே இல்லை. வெளுத்த சங்கைப்போலக் கண்ணில் திரண்டிருந்த கோளம் முட்டிக்கொண்டு இருந்தது. அவளது கட்டப்படாத தலை மயிற் ஆழியின் காற்றில் பறந்துகொண்டிருந்தது. பேரெழிலின் அச்சாரமாக ஆரல் நங்கை பயணித்துக்கொண்டிருந்தாள்.

உருவனின் புடைத்த முதுகில் அவளின் பெரும் பாதம் பதியும்படி சீவிவிட்டிருந்தாள். உடைக்க முடியாத உருவனின் ஓட்டைப் பதம்பார்க்கவென ஆரலின் அண்ணன் திருக்கையன் நாடு கடந்து மலையேறி பச்சிலையைக் கொண்டு வந்தான். உருவன் உயரம் அரை படகுக்கு ஒப்பானது. உருவன் ஆழியில் நீந்தும்போது வத்தலைக் கவிழ்த்ததுபோல அவ்வப்போது நீரை மீறி வெளியே தெரிந்தது. உருவனைச் சிறு குட்டியாக இருந்துபோதே கருந் தீவிலிருந்து தூக்கி வந்திருந்தாள் ஆரல்

நங்கை. அது வந்தபோது ஒரு பிணம்போலவே கிடந்தது; எந்த அசைவுமில்லை!

கரையில் ஒதுங்கிய வெண் சிப்பிகளைப் பொறுக்கி, தனது வீட்டுவாசலிலும் சுவர்களிலும் ஒட்டி அழகு பார்ப்பது ஆரலின் வழக்கம். மாந்தர்களின் பல வசிப்பிடங்களிலும் கடலில் கிடைக்கும் பெயரற்ற பெட்டகங்களைப் புதைப்பதும் ஒட்டுவதும் ஒரு நீண்ட தொடக்கம். கடலில் கிடைக்கும் உயிருள்ள, உயிரற்ற உயிரிகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு உருவ மற்றும் செயல்பாடுகளைக் கொண்டு பெயர்களைச் சூட்டி, புதிய சொற்களை அரங்கில் கொட்டி மொழி பெயர்த்து வளம் சேர்ப்பது குடிலின் மரபு.

பல உயிரினங்கள் புதிய பெயர்கள் பெற்ற வரலாற்றின் தொடர்ச்சிக் காலம் அவை. உருவனைப் பொறுத்தவரை புதிய ஒன்றல்ல. உருவன் ஓர் ஆமை வகையினம். ஆமைகளில் சில நூறு வகைகள் இருக்கின்றன. ஆமைகள் வேகம் மிக்கவை. காத்திருப்பவை. உள் சுருங்கி வேட்டையாடுபவை. உருவன் சிறு குழந்தையாக வெண் முத்துகளிடையே கிடைத்தபோது தனது திமிலுக்குள் ‘சும்மா’ தூக்கிப் போட்டாள். அதற்கு உயிரேதுமில்லை என்கிற மன ஒப்புதலோடு ஏதோ காரணியமற்றுத் தூக்கிப் போட்டிருந்தாள். இன்று அது அவளை ஏற்றிக்கொண்டு தானே படகாக புதிய இடங்களைக் காட்டிக்கொடுக்க ஆழியில் பாய்ந்து கொண்டிருக்கிறது.

பலமுறை உருவனோடு கடலாடியிருக்கிறாள். இது அவனின் வழக்கமான பாய்ச்சலில்லை. நீரைக் குடைந்து தனது கால்களைப் பரப்பிக்கொண்டு எங்குதான் இழுத்துப் போகிறது எனத் தெரியவில்லை. கடலாடிப் பழகியவளுக்கே இந்தப் பாய்ச்சல் தாழவில்லை. ஆழியின் மேற்பரப்பைக் காண்பதில்கூட சிக்கலிருந்தது. அலைகள் மோதி, அவளைத் திணறடிக்கும் வேகத்தில் கிழித்துக்கொண்டு, உருவன் சென்ற பாதை பெரும் புதிராக இருந்தது. எவ்வளவு தூரப் பயணம் என்கிற அவளது பேரறிவைக் கொன்று போட்ட பயணம். ஆரல் இப்படியொரு

பயணத்தை எதிர்பார்க்கவே இல்லை. உருவன் மிகக் குரூரமாக நடந்துகொண்டது.அவனின் கழுத்திலிட்ட கவணைச் சொடுக்கி இழுத்துப் பார்த்தாள். உருவன் காத்திருந்து தன்னைக் கொல்ல முயல்கிறதோ, நம்பிக்கையூட்டித் துரோகம் செய்கிறதோ என்றெல்லாம் அவள் நினைக்கும் அளவுக்கு அவளை விரைவாக இழுத்துச் சென்றது. அவள் அறிந்தவரையில் உருவனுக்கு அவள்தான் உலகம்.

அண்ணன் திருக்கையனுக்குகூடப் போக்குக் காட்டும். பிடிவாதமாக அவனைப் புறக்கணிக்கும். அவன் தன் மீது ஏறிப் பயணப்பட அனுமதிக்காது. ஆரலின் கண் உருட்டலுக்காகக் கொஞ்சம் சுணக்கமாக அவனை அனுமதிக்கும். உருவனுக்கு ஆரல் தவிர ஏதுமில்லை. சிலநேரங்களில் அவள் வெளியூர் போகும்போது தன்னை வருத்திக்கொள்ளும். அப்படிப்பட்ட நேசம் கொண்ட உருவனா தன்னை இப்படி அலைக்கழிப்பது என மருங்கினாள்.

கடல் வழியே ஆமைகள்தான் புதிய உலகை காட்டிக் கொடுக்கின்றன என்பதை மூத்தோர்களிடமிருந்து அறிந்திருந்தாள். அதனால் அவன் போக்குக்கு விட்டு உருவன் உடலோடு தன்னை இறுக்கிக் கட்டிக்கொண்ட அந்தக் கணத்தில் மயங்கினாள். அதன் பிறகு நடந்தது எதுவும் அவளுக்கு நினைவில்லை.

உருவன் தன் உடலை அகட்டி, தனது பெரும் பாதங்களை அதன் நகம் கீறிவிடாமல் கவனமாக மணல்மீது கிடந்த ஆரலின் உடல் மீது படரவிட்டுப் பார்த்தது. தனது நாக்கை நீட்டி அவளது கறுத்த அகண்ட முகத்தில் தடவிக்கொடுத்தது. தூய நீரைத் தீவின் ஓரத் திட்டிலிருந்து உறிந்து வந்து துப்பியது. அப்போதுதான் கண் விழித்தாள் ஆரல். அவள் கண் எதிரே இருந்த உருவனைவிட அவனுக்குப் பின்னே பெரு மலையும், அதில் மலைபோலக் குவிந்திருந்த எலும்புப் பாறைகளும் அவளின் சோர்வைத் தொலைத்தன. பெரும் கனவெளியில் இருப்பதுபோல உணர்ந்தாள். நட்சத்திர மீன் தனது உடல் மூக்குகளை

நீட்டுவதுபோல அவளது கண்கள் அகண்டு விரிந்தன. கடலுக்குப் பின்புறத்தில் ஓர் உலகம் இருப்பதாகவும், நமது முன்னோர்களில் சிலர், நிலம் பிளந்தபோது பெரும் எண்ணிக்கையில் பிறிதொரு நிலத்தில் ஒதுங்கியிருக்கலாம் எனவும், முன்னோர்கள் சொல்லி வந்த கதைகளைக் கேட்டவள் அவள். 'அந்த உலகத்தைத் தேடிச் சென்ற பலர் இன்றுவரை திரும்பியதே இல்லை' என்னும் பழமைச் சொற்களை எப்போதோ கேட்டதை அந்தக் கணத்தில் உணர்ந்தாள் ஆரல்.

அந்த நிலம் குறித்த புதிர்கள் மட்டுமே நிரம்பியிருந்தன மாந்தர்களிடம். அந்த நிலத்தின் கொத்துக்கொத்தான எலும்பு மண்டலங்களில் சில சொந்த நிலத்தில் கிடைத்திருந்தாலும் மீன் பிடிக்க, அலையாட, விளையாடச் செல்லும் யாவருக்கும் சொல்லப்படும் ஒற்றைச் சொல் 'மரணத் தீவு'! அதைப் பற்றிப் பேசவும் வேண்டாம், தேடவும் வேண்டாம், அது பற்றிய பேச்சை எடுக்கவும் வேண்டாம் என்றே மூத்த கடலோடிகள் சொல்லியிருக்கிறார்கள்.

அவ்வளவு மாந்தர்களை இழந்திருக்கிறார்கள்!

இளையவர்களிடம் மரணத்தீவைப் பற்றிய பல்வேறு கதைகள் கிளைத்திருந்தன. அதைக் கொற்றவைக்கு ஒப்பாகவும் சிலர் பேசினர். ஆனால், அது எங்கே இருக்கிறது... அந்தத் தீவில் என்ன இருக்கிறது என அறிந்தவர் யாரும் இல்லை. கடலோடி, புதிய மீன்களுக்குப் பெயர் சூட்டும் மூத்த கிழவிகூட இதைப் பற்றிப் பெரிதாக மூச்சு விடவில்லை. கேட்டதும், சொல்லப்படும் பல்வேறு புனைவுகளிலிருந்து ஒருவாறாக ஆரலின் கண்கள் உணர்ந்துகொண்டன.

தனதூரின் மூத்தவளிலிருந்து கூட்டத் தலைவி வரை சொல்லக் கேட்டு அறிந்த கனவின் பெரும் பாதையை அவள் கண்டாள். அவர்களின் வார்த்தைகளைவிட தடித்திருந்தது ஆரல் கண்ட பேருலகம். அது ஒரு பெருந் தீவுக் கூட்டம். ஆழியிலிருந்து பார்த்தால் ஒரே மலைபோன்று தோற்றமளிக்கும் தீவு உள்ளுக்குள்

விரிந்திருக்கக்கூடும் என ஆரல் நம்பினாள். அத்தீவின் அதன் ஒரு நடுமுனைத் தோளிலிருந்தாள். தனது முன்னோர்கள் ஒருவேளை இங்கு எங்காவது இருக்கக் கூடுமோ என நினைத்தாள். வாய்ப்பில்லை. இதற்கு முன்பு இங்கு வந்த முன்னவர்கள் என்ன ஆனார்கள் என்பதே தெரியவில்லை என்றால், மாந்தர்கள் எப்படி வசிக்க முடியும்! ஒருவேளை இத்தீவுக் கூட்டத்தில் மாந்தர்கள் வசித்தாலும் அவர்கள் நரக்கறியை தின்பவர்களாக இருப்பார்களோ என்றெல்லாம் அவள் தனக்குள் நினைத்தாள். நினைக்கும்பொழுதே அவளது உடல் விறைப்பேறியது. சுற்றிலும் ஆயிரக்கணக்கான தீவுக் கூட்டங்களும், சில நூறு திட்டுகளும் சூழ்ந்திருந்தது தீவு. அவள் இதுவரை பல இடங்களுக்குப் போயிருக்கிறாள். அவள் இதுபோன்ற அற்புதத்தைக் கண்டதில்லை. கடலில் மிதக்கிற மலைகள் என எண்ணினாள்.

மெல்ல எழுந்தாள். உருவன் தான் சாதித்துவிட்டதைப்போலப் புளகாங்கிதமாக அவளுக்கு முன்னே குண்டியை ஆட்டி ஆட்டி நடக்க, அதை இரசித்தபடி பின்னே நடந்தாள். ஆளிகளைப் பற்றிய கதைகளை அவள் செவி வழியே கேட்டிருந்தாள். ஆளிக்கு ஒப்பான கடல் மீன்களைக் கண்டிருக்கிறாள். எவ்வளவு பெரும் விலங்கையும் கடலில் சிதைத்துவிடுவாள். ஆனால், அவற்றையெல்லாம் மிஞ்சும் வண்ணம் கண் முன்னே மலைபோலக் குவிந்துகிடக்கும் மிருக எலும்புக்கூடுகளைக் கண்டதும் பயமும் கிளர்ச்சியும் அடைந்தாள்!

கு மரிக்கோட்டின் காட்சியகங்களில் இதுபோன்ற எலும்புக் கூடுகள் ஒன்றிரண்டைப் பார்த்திருக்கிறாள். ஆனால், ஒரு தீவே எலும்புக்கூடுகளால் உருவாகி இருப்பதை அவளால் நம்ப முடியாமல் கடந்துகொண்டிருந்தாள். கடலில் கரை கண்டவள். கடலில் கண்டதைவிட பிரமாண்டமான உடல்களை இந்த எலும்புக்கூடுகள் தாங்கியிருக்க வேண்டும். பாதி மண்ணில் புதைந்து பாதி உடல் மேலே இருந்திருக்க வேண்டும். மொத்தமாக ஒரு பெரும்கூட்டம் மண்ணில்

புதைந்துபோயிருக்கலாம். தப்பியவை என ஏதுமில்லை. மண் கிடந்தால் வேர் படர்வதுபோல அந்த எலும்புக்கூடுகளே பெரு மரங்களாகவும் அதன் மீது படரப் பிறந்தவையாகவே கொடிமரங்கள் புத்துப் புத்தாகப் படர்ந்து எலும்புகளுக்குப் புதிய உருவங்களைக் கொடுத்திருந்தன.

தீவு அடர்ந்திருந்தது. மூத்தோடிகள் சொன்னது மிகச் சரிதான்.

இது மரணத்தீவுதான். மிருகங்களைக் காண முடியவில்லை என்றாலும் இந்தத் தீவு மிரட்டியது. பறவைகளின் பெருங் கூச்சலைத் தவிர வேறு உயிர்களை ஆரல் பார்க்கவில்லை. பறவையில் ஆள்தூக்கிக் கழுகுகளே கூட்டம் கூட்டமாக இருந்தன. ஒன்றாக மூன்று கழுகுகள் கூடினாலேபோதும். நிச்சயமாக உருவனும் தூக்கப்படுவான் தானும் தூக்கப்படுவோம் என அவள் உணர்ந்தபோது ஆள் தூக்கியொன்று மிக வேகமாகக் காற்றைக் கிழித்தபடி அவள் தலைக்கருகே வந்தது. கழுகின் கால்களில் நீண்டு கூர்ந்திருக்கும் விரல் நகங்கள் கிழித்தாலே தலை துண்டாகும் வாய்ப்பிருந்தது. ஆள் தூக்கி கழுகுகள் தனது கூரிய அலகால் குத்திக் கிழித்தால் உடலின் பாதி உறுப்புகளைக் குடைந்து வெளியே தள்ளும் என அறிந்திருந்தாள். அதோடு உடலில் இருந்து ஒரு முழம் நீண்ட கழுத்தில் தனியே உருளையைப் போன்று தலையில் இருக்கும் அதன் அலகுகள் மிகச் சாதாரணமாக ஒரு சிறு திமிங்கலத்தை கொத்திக் கொல்லும் கூரியவையாக இருந்தன. அதனால் சிக்காமல் தப்பிக்க வேண்டுமென தீர்மானமாக வனத்தின் மீது செங்குத்தாக ஓடினாள்.

மலை முழுக்க மரங்களும் கொடிகளும் நீர்த்தடங்களும் ஆதி விலங்குகளின் கூடுகளும்தான் நிறைந்திருந்தன.

சட்டென மிக வேகமாகச் செயல்பட்டாள். ஒரு பெரிய எலும்புக் கூட்டிலிருந்து தலை நீண்டு பற்களும் முக எலும்புகள் மட்டுமே எஞ்சியிருந்த ஒரு மிருகத்தின் பல்லை ஓடும் வேகத்தில்

இடது கையால் இழுத்து உடைத்தாள். பல ஆண்டுகளாக மண்ணில் சிதறி மழையிலும் வெயிலிலும் காய்ந்து கிடந்த அந்தப் பல் அவள் கையால் இழுத்ததும் தாடையிலிருந்து பெயர்த்துக்கொண்டு வந்தது. இரண்டு முழ நீளமுள்ள அந்தப் பல் மிகக் கூர்மையான ஒரு கருவி. வெறியோடு பறந்து வந்த கழுகு வேகமாக அவள் தலைக்கு இறங்கியது. தனது பெருத்த நகங்களால் தலையை அப்படியே நசுக்கிப் பிடித்து எடுத்துப்போகும் ஆவேசத்தில் நெருங்கியது. அதன் இறக்கைகள் மினுங்கித் திரியும் கதிரவளின் ஒளியை மறைத்தபடி அவள் தலைக்கு அருகே வரவும் சட்டெனக் குனிந்து பல்லைப் பிடுங்கிய வேகத்தில் அதன் கால்கள் தலையைக் குறி வைப்பது புரிந்து சட்டென தன் வேகத்தை நிறுத்தி ஓடிய வேகத்தைக் குறைத்து தலையைப் பின் புறமாக உள்ளிழுத்தபடி நின்றாள். ஒற்றைச் சொடக்கு நேரம்கூட இல்லை. தலையை நோக்கி வந்த கழுகின் கால்கள் வைத்திருந்த தலையின் குறியிலிருந்து தப்பித்தாள்.

அந்த வினாடியில் கழுகு குழம்பிப்போய் தன்னைச் சுதாரிக்கத் துவங்க, அதற்குள் உடைத்த பல் கருவியைக் கழுகின் கால்களுக்குப் பின்புறமுள்ள நடுவயிற்றின் சதைப்பகுதியின் அடிமடியில் வீரியமாகச் சொருகி இழுத்தாள். கழுகிலிருந்து குருதி அவள் தலையிலும் கொட்டியது.

‘க்குர்றா... க்குர்றா...’

காடதிரக் கழுகு அலறியது. கழுகதிரக் காடெங்கும் பெருங் குரல்கள் கழுகுகளின் கத்தலே காதைச் செவிடாக்கும் அளவிருந்தது. ஆரலுக்கு, தவறான ஒன்றைச் செய்துவிட்டோம், கழுகைத் தாக்காமல் தப்பித்திருக்க வேண்டும். இனி எல்லாக் கழுகுகளும் கூடி வரும். என்ன செய்வதெனக் குழம்பினாள். உருவன் திகைத்து நின்றது. தவறிழைத்துவிட்டதாக வருந்தி அவளைப் பார்க்க, அவளும் ‘‘வருந்தாதே... உன் தவறில்லை’’ என்பதுபோல அதைக் கனிவோடு பார்க்க, அவர்களுக்கு மேலே வானமெங்கும் கூட்டம் கூட்டமாக ஆள்தூக்கிக் கழுகுகள்!

அடி மடியில் பல் கூர்மையால் குத்து வாங்கிய கழுகின் பறக்கும் வேகம் மட்டுப்பட்டு எதிரே இருந்த மரத்தின் மீது பாய்ந்து, கிளையைப் பற்ற முயன்று, தடுமாறி, தோற்றுக் கீழே விழுந்தது. பறவை விழுந்ததில் நிலத்திலிருந்த எலும்புக் கூடொன்றில் அதன் இறக்கைகள் சிக்கியது. விழுந்த வேகத்தில் நிலமதிர்ந்து அடங்கியது. அவ்வளவுதான்!

உருவனும் அவளும் மிக வேகமாக ஓடினார்கள். பறவைப் பாய்ச்சலை அவர்கள் எதிர்கொண்டே ஆக வேண்டும். முதலில் ஆழியை நோக்கி ஓடலாம் என்றே நினைத்தாள். ஆழியை நெருங்குவதற்குள் தூக்கிச் செல்லும் வாய்ப்புகளதிகம். அதோடு கழுகுக் கூட்டத்தை வெட்ட வெளியில் சமாளிக்க முடியாது என்பதால் காட்டுக்குள் ஓடினாள். ஓடும்போது தலையும் வாலும் மண்ணில் புதைந்து வயிறு மட்டுமே தரைக்கு மேல் கிடந்து காய்ந்து வயிற்றின் எலும்புகள் மட்டுமே எஞ்சிப் பிளந்து கிடந்த ஒரு மிருகத்தின் உடலைக் கண்டாள்.

தாவியோடிக் கொண்டே மிருக எலும்பின் இரண்டு விலாக்களை மிக வேகமாக இரண்டு கைகளாலும் உடைத்தெடுத்தபடி ஓடினாள். தலைக்கு மேல் வரும் பருந்தின் அலகை ஒரு விலா எலும்பால் அடித்து உடைத்தபடி தாவிப் பறந்து ஓடினாள். கழுகுகள் மிகக் குரூரமாக வளையமிடத் தொடங்கின. எங்கும் ”க்குர்றா.. க்குர்றா” எனத் தீவெங்கும் கத்தல் உக்கிரமாகவிருந்தது.

மரணத்தீவிலிருந்து மீண்டவர்கள் யாருமில்லை என மூத்தவர்கள் சொன்னது நினைவுக்கு வந்தது. உருவனால் நிலத்தில், அதிலும் ஏற்றம் மிகுந்த மலைக்குள் வேகம் காட்ட முடியவில்லை. அவனது நாலுகால் பாய்ச்சல்போதுமானதில்லை. சிக்கி விடுவோம் என உள்மனம் சொல்லிக்கொண்டே இருந்தது. சட்டென உருவனைக் கடந்து வேகமாக ஓடினாள். ஓடிக்கொண்டே கண்களால் அலசினாள். கைகளில் இருந்த மிருக விலாவால் பருந்துகளை விளாசினாள்.

பல்லாயிரமாண்டு காலக் கிழட்டுப் புன்னை மரத்திலிருந்து கொட்டைகள் காய்ந்து வறண்டு குழைந்து எண்ணெய்யாக வழிந்தபடி இருப்பதைப் பார்த்தாள். தனது ஆட்காட்டி விரலையும் நடு விரலையும் புரட்டிக் காட்டி, கண்ணால் இடம் காட்டியபடியே உருவனுக்குக் கட்டளையிட்டாள்.

“ஒன் முதுக மட்டும் எண்ணெய்யில் நனைச்சிக்கிட்டே ஓடு உருவா!”

உருவனுக்குப் புரிந்தது. எம்பித் தாவித் தலைகீழாகத் தனது பாறை போன்ற ஓடு நனையும்படி புன்னைக் குழம்பில் விழுந்து எழ, பாய்ந்த வேகத்தில் ஆரல் இரண்டு வெங்குட்டுக் கல்லை எடுத்துச் சட்டென ஒன்றன் மீது ஒன்றாக ஓங்கியடித்தாள். தீப்பறந்தது. கழுகொன்று உருவனின் முதுகில் கால்களைப் பதித்துக் கடும் பிடியொன்றை நிறுவ முயன்றது.

உருவன் தீப்பறந்த திசைக்குச் செல்ல முடியாமல் தடுமாறியது. சட்டென ஆரல் கையிலிருந்த ஒற்றை விலாவை எண்ணெய்யில் தோய்க்க, தீப் பறந்து பற்றிய வேரில் காட்ட, விலாத் தீப்பிடிக்க, விலாவை உருவனின் முதுகில் வீச, உருவன் முதுகு தீயால் பற்றியெறிந்தது. வேகமாகப் பறந்து வந்த மற்றொரு கழுகு உருவனைக் கைப்பற்றத் தனது கால்களை உருவனின் ஓட்டில் பதிக்கவும், ஆரல் தீயை வீசவும் சரியாக இருந்தது. அமர்ந்த கழுகு தாவிப் பறப்பதற்குள் தீ அதன் மீது படர அலறித் துடித்து, பெருங் கூச்சல் போட்டு, உடல் தீயோடு பற்றி எரிந்தபடியே பறந்து புன்னை மரத்தில் மோதி விழுந்தது. புன்னை மரமும் பற்றிக்கொள்ள, சடசடவென ஒரு பெரும் தீ அங்கே மூண்டது. கழுகுக் கூட்டம் அந்த ஒற்றைக் கணத்தில் நிலைகுலைந்து பின் வாங்கியது. இதைத்தான் ஆரல் எதிர்பார்த்தாள். அறிவு மனமணலில் காட்டாறாக பாய்ந்தது. கணத்தில் எடுத்த கச்சிதமான முடிவு.

“உருவா... வேகமா போ! பக்கத்துல இருக்க குட்டையில் குதி!”

கண் எட்டும் தூரத்திலிருந்த சிறு குட்டைக்கு உருவன் தாவியது. உருவன் குதித்ததில் குட்டையின் இரு மடங்கு நீர் மேலெழுந்தது. நீருக்குள் வேகமாக முங்கியது. அதே வேகத்தில் ஓடி வந்த ஆரல் பறந்த படியே ஆமணக்குச் செடியொன்றின் இலையைக் காம்போடு உடைத்தபடி நீருக்குள் குதித்தாள்.

உருவனின் உடல் அருகே சென்றாள். உருவன் தீயின் வெம்மை தாங்காமல் உடலை நீருக்குள் முழு உடலையும் மேலே ஓடும் இருக்கும்படி முங்கி முங்கி எழுந்து ஆட்டிக்கொண்டிருந்தது. மேலே கழுகுகள் வன்மத்தோடு பெருங் கூட்டமாகப் பறந்தன. உருவன் ஓடு வெந்துகொண்டிருக்க நீரின் மேல் மிதந்தது. கழுகுகள் கொத்த வந்து வெந்து தீயாக இறகு துடிக்கப் பறக்க முடியாமல் தடுமாறின.

ஆரல் நீருக்குள் சென்றதும் சட்டென ஆமணக்கு இலையை தண்டோடு உடைத்து காம்பின் குழலை நீருக்கு மேலே நீட்டி வாய்க்குள் குழலை வைத்து மூச்சு வாங்கினாள். செங்குத்தாக மலைக்குள் ஓடி வந்ததில் அவளது மூச்சும் போதுமானதில்லை. அதோடு சிந்திக்க நேரமும் அதுதான். உள்ளுக்குள் உருவனின் கால்களைப் பிடிமானமாகக் கொண்டிருந்தாள். உருவனின் மேல்பகுதி வேக, அடிப்பகுதி தாயின் கருவறைபோல் தாங்கியது. உருவன் தன் உடம்பின் தீச்சூட்டைத் தாங்கித் தனது தோழிக்கு உதவினான்.

அவள் இயல்பாகக் கால் நாழிகை நீருக்குள் தாக்குப் பிடிப்பாள். கழுகுகளிடமிருந்து தப்பும் வேகத்தில் மொத்த மூச்சுத் திறனையும் பயன்படுத்தியிருந்தாள். கிட்டத்தட்ட மலையின் பாதியாவது மேல் நோக்கியே ஓடியிருந்தாள். மேலும் இருக்கும் சூழல் மிகக் கடுமையானது. ஆழியில்கூட அவளால் எதையும் எதிர்கொண்டுவிட முடியும். பழக்கப்படாத புதிய நிலம், அதன் தன்மையை உணரக் கூட நேரமில்லாமல் சிக்கிக்கொண்டதுதான் அவளுக்கு வியப்பாக இருந்தது. மூத்தோடிகள் இப்படித்தான் இந்த தீவில் மாட்டி மாண்டிருக்கவேண்டும். இனி இதைச் சிந்தித்துப் பயனில்லை என்கிற முடிவுக்கு வந்தாள். நீருக்குள்

கண்களை ஓட்டி அந்தக் குட்டையை அளந்தாள். குட்டையைச் சுற்றிலும் மரத்தின் வேர்கள் சிறு மரங்களைப்போல் நீருக்குள் நீண்டுகொண்டே போனது.

மரத்தின் வேர்கள், தொங்கும் மலைப்பாம்புகளைப்போல நீருக்குள் உள்ளே செல்வதைக் கொண்டு ஆழமான குட்டை என நினைத்தாள். ஆனால் வேர்களைப் பிடித்தபடி நீருக்குள் போகப் போக நீர் அவளை வேகமாக உள்ளிழுப்பதுபோலிருந்தது. ஒரு பாகத்துக்கு மேல் நீர் இழுவை உள்ளே வேகமாக இழுத்துச் செல்வதைத் திடமாக நம்பினாள். மேலே குட்டையைப் போலிருந்த நீர் கீழே உள்ளில் இழுப்பது எப்படி எனப் பிடிபடவில்லை!

குட்டைக்குள் பாயும் வேகத்தில் குட்டையின் பரிமாணத்தை அளவிட்ட கண்களின் வழியே மூளை சேமித்ததை மீட்டாள். அது குட்டையல்ல. குட்டையைப் போன்ற அமைப்பு. நீர் மிதப்பது போலிருந்தாலும் உள்ளே ஓடிக்கொண்டிருக்கிறது. பல்வேறு புறங்களில் இருந்து வழியும் பெரு நீர் இந்தத் தடாகத்தில் விழுகிறது. அவ்வளவு நீரும் தடாகம் வழிந்து வெளியேறாமல் தடாகத்துக்குள் புதைவது எப்படி? ஒரு வேளை கீழே ஏதேனும் குகை இருக்கலாம். அல்லது கீழே நீர் அருவியாகக் கொட்ட ஒரு வெளியிருக்கலாம். அப்படியிருந்தால் நீர் சட்டென இறங்காமல் தடாகம் போன்று ஒரு தேக்கத்தை வைத்திருப்பதேன்? பிடிபட்டு விட்டது!

நீர் இறங்கும் வெளி ஆழியை ஒட்டிப் பெரும் மதகுகள்போலப் பாறைகள் அடைந்து பாறைகளுக்கு இடையே வெளியிலிருந்து காற்றை உள்ளே உமிழ்கிறது. நீர் கீழே தடையின்றி இறங்கவும் வெளியில் இருந்து உள்ளே புகும் காற்று தடுப்பரண் அமைக்க முயல்வதும் அதனால் நீருக்கும் காற்றுக்கும் நிலவும் போட்டியால் காலம் தோறும் இயற்கையின் விதி இயங்குகிறது. புரிந்ததும் மகிழ்ந்தாள். சட்டென மேலே வந்தாள். தலையை நீட்டி நீருக்கு மேலே வானம் பார்த்தாள். மேகங்கள் இறகுகளால் மூடியிருந்தன. சில நூறு கழுகுகள் இலக்கை

வெறியோடு வட்டமிட்டன. தடாகமே மழைக்கு முன்பாக கருமேகத் திரட்டலில் இருள் கவ்வியது போவ இறகுகளாய் இருளைப் பூசியிருந்தது.அதில் ஏற்றிய தீப்பந்தம்போல உருவனின் முதுகுத்தீ எரிந்தது.

உருவன் வெந்த ஓட்டின் அனல் உடலைத் தொட்டதிலிருந்து அதிர்ந்துகொண்டிருந்தது. சட்டென அவனை உள்ளிழுத்தாள். உருவன் பெரும் வலியோடு தனது தாயைக் காப்பாற்ற முடியாத ஏக்கத்தில் அவளைப் பார்த்தது. நீருக்குள் இருவரும் முகம் பார்த்துக்கொண்டார்கள். ஆரல் கண்களால் அதன் கண்ணோக்கித் துயரைத் துடைத்தாள். கீழ் நோக்கிப் பாயும் நீரின் வழித்தடத்தைப் பார்த்து வரப் பணித்தாள். உருவன் மிகையுணர்ச்சியோடு தனது நன்றியை வெளிப்படுத்த கால்களை வளைத்து முகத்தை ஓட்டுக்கு வெளியே நீட்டி நீருக்குள் புகுந்தது. வெந்துகொண்டிருந்த ஓட்டின் தீ நீருக்குள் அமிழ்ந்ததும் நீர் புகையானது. புகை கரைந்து கொண்டிருக்க, புகையின் நடுவே ஆரல் நீருக்குள்ளிருந்து வானத்தை மறைக்கும் கழுகுக் கூட்டங்களைப் பார்த்தாள். கழுகுக் கூட்டங்கள் ஆங்காரத்தோடு பறந்து வந்து நீருக்குள் உழன்றபடி தலை நீட்டிப் பார்க்கும் ஆரலை நோக்கிப் பாய்ந்து வந்தன. தலையை அவள் உள்ளுக்குள் இழுக்க ஒரு கழுகு கூர்மையாகத் தன் அலகினால் நீருக்குள்ளும் நீட்டிக் கவ்வ முயன்றது. அலகுகள் படகின் துடுப்பு நீருக்குள் இறங்குவதுபோல இறங்கியது.

ஆரல் அதன் அலகைச் சட்டெனப் பிடித்துப் பார்த்தாள். அதன் அடர்த்தி திடமாக இருந்தது. நீருக்கு மேலே கழுகுகளின் கண்கள் வெறுப்போடு பார்த்தன. சட்டெனக் கழுகின் அலகை விட்டு அதன் குரூரக் கண்களுக்கு எதிரே மறைந்தாள். நீர் அமிழ்ந்து தாழ்ந்து ஏறிக் கொண்டிருந்தது.

உருவன் மிக வேகமாக நீருக்குள் சென்றது என்பதைவிட நீர் இழுத்துச் சென்றது என்பதே பொருத்தமானது. மேலே இருந்த நீர் இழுவை உள்ளே போகப்போக மிக வேகமாக இருந்தது.

திடீரென அதன் இழுவை நின்று மேல் நோக்கி நீர் புகுந்துகொண்டிருந்தது.

உருவன் குட்டையின் ஓர முனைகளில் மர வேர்களைப் பற்றியபடியே இந்தப் புரியாத நீர் சுழல் குறித்து ஆய்ந்தது. நீர் இழுக்க, நீர் மேல் தள்ள புரியாமல் குழம்பியது.

குட்டையின் வட்டத்தைச் சுற்றி வந்தது. ஒரு பக்கம் நீர் வேகமாகப் பாறைப் பொந்தொன்றில் நதிபோல ஓடியது. நதி முகத்தில் சிறிது தூரம் சென்ற உருவனுக்குப் புரிந்தது. இது இனி நதிதான் என.

உருவன் பரபரவென மேலே வந்து ஆரலைத் தேடியது. நீருக்கு அடியிலிருந்து பார்க்கும்போதே பறவையின் அகல விரிந்த இறக்கைகள் குடைபோலக் குட்டையை மூடியிருந்தன.

ஆரல் குட்டைக்குள் வேர்களுக்கு இடையே நீருக்குள் அமிழ்ந்து கிடந்தாள். அவளது வாயில் கொட்டைச் செடியின் தண்டு இருந்தது. அத்தண்டின் மேல்முனை நீருக்கு மேலே காற்றை ஆரல் இழுத்து விடும் மூச்சுக்காற்றை உமிழ்ந்துகொண்டிருந்தது. உருவன் தன் கண்களின் வழியே ஆரலுக்கு நம்பிக்கையைக் கொடுத்தான். ஏற்கெனவே மூழ்கியிருக்கிறோம். மேலே பறவைகள். மூச்சுக் கட்டம் இறுதியை எட்டியிருந்தது. வேறு வழியில்லை. உடனடியாக உருவன் செல்ல, வாயிலிருந்த தண்டைத் துப்பிவிட்டு உடன் முங்கிச் சென்றாள். தண்டு பொளக்கென மேலெழுந்து தடாகத்தில் மிதந்தது.

குட்டையின் ஓரங்களில் இருந்த மரவேர்களைப் பிடித்தபடி நீருக்குள் சென்றதால் அவளால் வேகமாகச் செல்ல முடிந்தது. நீரும் வேகமாக இழுத்துச் சென்றது. உருவன் நீரில் துடுப்பைப்போல வேகம் காட்டிச் சென்றான். இன்னும் குறைவாகக் கால் நாழிகை தாங்கலாம் அதற்கு மேல் அவ்வளவுதான் என நினைத்துக்கொண்டு வேகமாக அடியில்

சென்றாள். நீர் மட்டமாக இருந்த இடத்தை ஒரு வழியாக அடைந்துவிட்டாள். சிந்திப்பதற்குள் நதிக்குள் வந்து விட்டாள்.

கீழிருந்து குகையில் உமிழும் காற்று நீரைக் கீழே விடாமலும் மேல் நோக்கி அனுப்ப முடியாமலும் தடுமாறும் கணத்தில்தான் பாறையின் வழியே நீர் தனித் தடம் பார்த்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டாள். எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகக் காற்றும் நீரும் மோதிக்கொள்கின்றன என மனம் கணியமிட்டுக் குழம்பினாள். நதி பாறைகளின் வழியே மென்மையாக இழுத்துச் சென்றது. காற்று வாங்க முடிந்தது. இந்தப் பாறை இடுக்குகளில்கூட செடிகள் முளைத்துக் கிடந்தன. பாறை, உயிரினத் தடங்கள் ஏதுமினுறிப் பாசி பிடித்திருந்தது. பாறையில் வழுக்கிச் செல்வதுகூட ஆரலுக்கு உடல் சோர்வைப் போக்கியதாக நம்பினாள்.

நீர் மெல்ல வெளியே கொண்டுவந்த இடத்தில் உருவன் ஏற்கெனவே திட்டமாகப் பதுங்கி நின்றது. ஆரல் கொஞ்சம் கவனம் பிசகினாள். ஆரலை நீர் இழுத்துச் சென்ற வேகத்தில் அவள் விழுந்திருந்தால் தொள்ளாயிரம் அடிகளுக்கு மேலான இடத்திலிருந்து ஆழியில் விழுந்திருப்பாள். அல்லது பாறைகளில் விழுந்து மண்டை சிதறியிருப்பாள்.

நதி முன்னிலும் வேகமாகப் பாய்வதிலிருந்து பள்ளமான இடம் நோக்கி நீர் கொட்டப்போகிறது என அவள் புரிந்து சுதாரிக்கத் தொடங்குவதற்குள் நதி முகம் நெருங்கிவிட்டது. பாசியின் வழுக்கலில் அவளால் ஊன்றிப் பிடிக்க பிடிப்பேதுமில்லாமல் தடுமாறினாள். சட்டென இழுத்துச் சென்றவளை வாகாக நிலைகொண்டிருந்த உருவன் தன் கால் நீட்டிப் பற்றியது. உருவனைப் பற்றினாள். பிடிப்புக் கிடைத்ததும் பற்றிக் கொண்டாள்.

ஆரல் நின்றும் உருவன் நின்றும் பார்த்த இடம் தொள்ளாயிரம் அடிகளுக்கு மேலிருந்தது. மேலேயும் மலை. கீழேயும் மலை. நதி மலைக்கு நடுவில் பாறையின் கூம்பிலிருந்து

பீய்ச்சியடித்தது ஆழியில் நீரை. சுற்றிலும் மலை. நடுவில் தடாகம்போல ஆழி மிதந்துகொண்டிருந்தது. நதி பாய்ந்து முத்தமிட்டதில் தொள்ளாயிரம் அடிக்குக் கீழிருந்து வாங்கிய வேகத்தில் ஆழியின் முகம் சிதைந்தபடியே இருந்தது. நதியின் முத்தம். ஆழியின் பெருஞ் சிரிப்பு.

நடு மலையில் நின்றிருந்தார்கள். சுற்றிலும் கவனமாகப் பார்த்தாள் ஆரல். ஆழியைச் சுற்றிலும் பெரும்பெரும் மலைக் காடுகளில் பறவைகள் பறந்துகொண்டிருந்தன. மேகங்கள் மலைகளின் தலையை மறைத்துக்கொண்டு வேகமாகப் பறந்துகொண்டிருந்தன. ஒரு சிறிய வழித்தடத்தைச் சுற்றிலும் தீவுக் கூட்டங்கள். ஆழி ஒரு குட்டையைப்போல அமைதியாக ஊர்ந்துகொண்டிருந்தது. எல்லாப் பக்கமிருந்த தீவுக் கூட்டங்களில் இருந்தும் பல நூறு அருவிகள் மலைத்தாயின் எச்சிலாக ஆழியெங்கும் நீரை உமிழ்ந்துகொண்டிருந்தன. வானிலிருந்து மழை ஊற்றுவதைப்போலத் திசையெங்கும் அருவியாகப் பாய்ந்துகொண்டிருந்தன நதிகள். கீழே கிடந்த ஆழி நதி வீசிய நீரின் முத்தத்தில் தாவித்தாவி இறைச்சலிட்டுக்கொண்டிருந்தது. எல்லா முத்தங்களையும் வாங்கி வாங்கிப் பேரின்பத்தின் எல்லையில் பொங்கி வெடித்துப் பேரலையாக மீந்ததைக் கரையில் பாறைக்கு வீசி அடித்துக்கொண்டிருந்தது. அதுவும் கூட ஆர்ப்பாட்டமில்லாத மென்நடைத் தவளல்தான்.

உருவனும் ஆரலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். இருவரும் பாறையின் கூம்பிலிருந்து ஆழி நோக்கி ஒரே நேரத்தில் குதித்தார்கள். காற்று கிழிபட்டு செதில் செதிலாகச் சிதறிக் கொண்டிருக்க, ஆழியை நோக்கிக் குவிந்த உடலாகக் கூம்பாய்ச்சியாகப் பாய்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் காற்றைக் கிழித்து ‘விர்ரெனக்’ கீழே பாய்ந்துகொண்டிருந்தார்கள். இந்தப் புதிய பறவைகளைக் காற்று இசைவோடு தாழ அனுப்பியது, ஆழியை நோக்கி!

3 துலைத் திங்கள்முப்பதாம் திகதி

மேகத்தோடு கரைந்திருந்த குமரியின் வெண் பனி மலையிலிருந்து கட்டிகளாக உருண்டு வரும் குமரியாற்றில் தலை நீட்டிப் பார்க்கும் குளிர்த் தாவரமும் மகிழ்ந்த துலைத் திங்களின் இறுதித் திகதிகள் அவை. பாலையின் மணல் பெருக்கில் ஒளிந்து கிடந்த இரு முழ உயரப் பெருக்கானும் சிலிர்த்து மயிரைக் கூராக்கிக் கொண்ட நாள் அது. குமரியின் குளிரும் பாலையின் வெம்மையும், நெய்தலின் உவர்ப்பும்கூட இத்திங்கள் முடிய எதிர்பார்த்துக் காத்திருந்தன என்றுதான் சொல்ல வேண்டும். துலைத் திங்கள் முடிந்து நளி திங்களின் பதினாறாம் நாளில் எப்படியும் முந்நூறாயிரம் மாந்தர்களாவது கலந்துகொள்ளும் திருவிழா. நிலத்தின் ஆதி மூதி கொற்றவைக்கு வெறியாட்டு.

சுற்றிலும் இருக்கும் அறுபத்தியெட்டு நாடுகளின் நகரங்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் ஏழ் குறும்பனையின் தலைநகரம் பிரம்பூர் நோக்கி மாந்தர்கள் வந்துகொண்டிருந்தனர். ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தலைநகரம். அய்ந்திலிருந்து பத்து வரை துணைத் தலைநகரங்கள். ஒரு தலைநகரத்துக்கு ஆறு பேரூர்கள்.

ஒவ்வொரு பேரூருக்கும் பல கிராமங்கள். ஒவ்வொரு தலைநகரில் இருந்தும் துணைத் தலைநகரங்களில் இருந்தும் பேரூரிலிருந்தும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் அந்தக் கிராமத்தின் தாய்கள் ஆனையாளிகளின் மீதமர்ந்து வர, அவர்களுக்குப் பின்னால் அந்தந்த கிராமத்தை, பேரூரை, நகரத்தைச் சேர்ந்த மாந்தரிகளும், மாந்தன்களும் குழந்தைகளும் எருமைகள் மீதும், பெருயாளிகள் மீதும் அமர்ந்து வந்தனர். விரைவாக முன்னாலும் பின்னாலும் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டே நகரும் இளையோர்கள் மகரயாளிகளில் வலம் வந்தனர். தாய்களுக்கும் தாய்மாமன்களுக்கும் எப்படியாவது திருவிழாவின்

முதலாவது நாளில் நடக்கும் காப்புக்கட்டுத் திருவிழாவிலேயே கலந்துகொள்ள வேண்டும் என்று விரைந்துகொண்டிருந்தார்கள். இருநூறு வயதுக்கு மேலான பெரியவர்களை மாந்தர்கள் தூக்குப் பல்லக்கில் படுக்க வைத்துத் தூக்கி வர, முன்னே பாணர்கள், பாடினியர்கள், விறலியர்கள், பொருநர்கள் பாடியபடியும் ஆடியபடியும் பெருத்த கிளர்ச்சியோடு வந்தனர். அவர்களின் சலங்கை ஒலிக்கும், குரல் ஏற்றத்திற்கும். பறையடிக்கும் காடு அதிர்ந்தது. முரசடிக்கு மிருகங்கள் ஓடி ஒளிந்தன.

“ஆதி அந்தமும்
ஆனைத் தந்தமும்...
ஓய்யாலாலா... லா... ஓய்யலாலா... லா...
மண்ணத் தந்ததும்
மாரிப் பூந்ததும்...
ஓய்யாலாலா... லா... ஓய்யலாலா... லா...
எல்லாம் நிறைஞ்சி வழியுதே
ஏகாந்தம் வானம் கொழையுதே...
ஒய்யாலாலா... லா... ஒய்யாலாலா... லா...
காத்தா வருகுறோமே எம்... மக்கா...
காத்து வருகுறோமே எம்... மக்கா...
எல்லாம் சிறக்க எங்க தாயி
கொத்தவையும் துணையிருக்க...
ஒய்யாலாலா.. லா... ஒய்யாலாலா... லா...
ஆதி அந்தமுமே
ஆனைத் தந்தமுமே...
மண்ணத் தந்ததுமே
மாரிப் பூந்ததுமே...
ஓய்யாலாலா... ஓய்யாலாலா... லா
ஓய்யாலாலா... ஓய்யாலாலா... லா”

அவர்களின் பாடல்களில் தங்களது வாழ்க்கையும், ஆதித் தமிழின் மேன்மையும் காடுகளும் வனங்களும் நதிகளும், மழையும் வானமும் நிலமும் தங்களுக்கு அள்ளிக் கொடுத்த உணவுகளையும் அபரிமிதமான வாழ்க்கையையும் விளக்கிப் பாடினார்கள். தங்களது முன்னோர்கள் கொடுத்த அறிவையும், அதனால் ஒழுங்கமைக்கப் பட்ட நாகரிக வளத்துக்கும் நன்றி தெரிவித்துப் பாடியாடி நடந்தனர். தங்களுக்கு உணவுகளாகும் மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் நன்றி தெரிவித்தனர்.

தங்களது இணையைக் கண்டுகொண்ட மாந்தரிகள் குலவையிடும் மூச்சுக் காற்றில் காமம் வழிந்தோட பார்வை முத்தங்களை அள்ளித் தெளித்தபடி பாடிக்கொண்டே நடந்தனர். அவர்களுக்கு முன்பாக வழிநடத்தி பெண்கள் ஒழுங்கு படுத்தியபடி வர, அவர்களுக்கு முன்னால் அலங்குகள் குரைத்தபடி முன்னால் சென்றுகொண்டிருந்தன.

பயணத்தில் அலங்குகளுக்கும், பெருயாளிகளுக்கும்தான் முதன்மையான வேலை. அலங்குகளைக் கண்டால் வனச் சாலையின் இரு மருங்கிலும் பெருத்து நிற்கும் கோரைகளுக்குள் தென்படும் சிறு மிருகங்கள் பிடறி தெறிக்க ஓடிவிடும். அலங்குகளின் மோப்பத் திறன் ஒரு குரோசம் தொலைவு வரை நீளும். வழிப் பயணத்தில் தேவையான இறைச்சியை அலங்குகளே காட்டிக் கொடுக்கும், தேவையென்றால் கவ்வியும் வரும்.

ஆனையாளிகள் ஆனைகளைப்போலவே முகத்தோற்றம் கொண்டிருந்தாலும் அதன் பின் கால்கள் சிறியவையாகவும் பிராண்டிக் கிழிக்கும் வகையில் கூரிய நகங்களையும் உடையவை.மரக்கிளைகளையும் மூங்கிலையும் சுவைத்து உண்ணும். ஆனையாளிகளில் வயதான ஆளிகள் முப்பது முழம் அளவுக்கு வளரக் கூடியவை. ஆனையைவிட நீண்ட தந்தங்களும், அகண்ட காதுகளும் உடையவை. ஆனையாளிகளும் மகரயாளிகளும் சாதுவானவை. ஆனால் பலம் மிக்கவை. இலை தழைகளை உண்டு வாழ்பவை. ஞமலயாளிகள் அசைவ உண்ணிகள்.பெரும்பாலும் மாந்தக் கண்களுக்கு அகப்படாமல் காட்டில் கூட்டமாக வாழ்பவை. ஆனால் பெருயாளி அப்படியில்லை எல்லாவற்றையும் உண்ணும். மண்ணூளிகள். இறைச்சியை அவை உண்பதில்லை. ஆறு முழ உயரம் வரை முது பெருயாளிகள் வளரும். பெருயாளிகளை வாலோடு நீட்டிப் பார்த்தால் சுமார் பதினைந்து முழம் தொடும் நீளம் அதற்கு. கூம்பாக முதலைகளைப் போன்ற நீள் மூக்கில் வாய் பொதிந்தவை. தனது பற்களால் சிறு பாறைகளையே பெயர்த்து விடும். மாந்தருக்கு அவை நெருக்கமான விலங்கு. அஞ்சுகிற விலங்கு.

அன்பூட்டுகிற விலங்கு. மண்ணையும் தூர்ந்து செல்லும் அதன் கோரப் பற்களில் வனத்தின் பெருங் கிழங்குகளைத் தோண்டித் தருபவை.

பெருயாளிகள் பொதிகளைச் சுமந்து வர, எல்லாத் திசைகளிலிருந்தும் ஏழ்பனையை நோக்கி மக்கள் எருமைகளின் மீதும், எருது வண்டிகளிலும் கூட்டம் கூட்டமாக வந்தனர். கொற்றவைத் திருவிழாவுக்கு இன்னும் இரண்டு வாரங்கள் இருந்தாலும் நீண்ட தூரங்களில் இருந்து வரும் மாந்தர்கள் வந்து சேரவே அரைத் திங்களாகிவிடும். ஆண்டுத் திருவிழாவுக்கு மாந்தர்கள் கிளம்புவதிலிருந்து விழாவை முடித்துக் கிளம்பித் தமதூருக்குப் போய்ச் சேரும் வரைக்குமான காலம் ஒரு திங்களைக் கூட எடுத்துக்கொள்ளும்.

ஒவ்வொரு கடைக் கோடியிலிருந்தும் அவர்கள் வந்து சேர்வார்கள். நீண்ட தூரங்களில் இருந்து வரும் கூட்டம் பெரும்பாலும் முதியவர்களை அழைத்து வருவதில்லை. இளையோர் கூட்டம் வேகமாக வருவதற்கு மகரயாளிகளைப் பயன்படுத்தி வருவார்கள்.

மகரயாளிகள் பெரும் பாய்ச்சலில் வருபவை. ஒரு நாழிகையில் சாதாரணமாக இருபது காதத் தொலைவைத் தனது நீண்ட கால்களால் கடப்பவை. ஒவ்வொரு நகரங்களைக் கடந்து வரும்போதும் மக்களுக்கு அந்தந்தப் பகுதி மக்கள் குலவையிட்டு வரவேற்று, உபசரித்து, இளைப்பாற இடம் கொடுத்து, சுமந்து வரும் மிருகங்களுக்கு நீரும் உணவும் கொடுத்து அனுப்பி வைப்பர்.

ஏழ் குறும்பனையின் தலைநகரம் பிரம்பூர் விழித்துக் கிடந்தது. ஈராள் உயரச் சுடு மண்ணால் எழுப்பப்பட்ட தூண்களில் பகலில் மாந்தர்களும், இரவு முழுவதும் புங்கை எண்ணெய்யைத் தின்றபடி தீப்பந்தங்களும் தெருவில் தூங்காமல் விழித்துக் கிடந்தன. ஆங்காங்கே நகரமெங்கும் ஆடல் திடலில் இரவெங்கும் பூளாம் பூவும், ஆவாரம் பூவும், காந்தள் கொத்துகளும், உரித்த தேங்காய்களும், மாவிலைத் தோரணங்களும், பனைக்குலைக் கொத்துகளும் நகரமெங்கும் கட்டப்பட்டிருந்தன. செம்மான்களின் வறுத்த உடல் தெருவெங்கும் தொங்கவிடப்பட்டிருந்தது. எருமைகளின் தோலுறித்த உடல் தெரு முனைகளில் தொங்க விடப்பட்டு அடியில் செம்மரக் கட்டைகள் எரியூட்டப் பட்டிருந்தன. மிளாக்களும் ஈரடி முழ உயர முயல்களும் வேவிறைச்சியாகவும் சுட்டிறைச்சியாகவும் கொப்பரைகளில் நிறைந்து கிடந்தன. கொப்பரைகள் சுடுமண் அடுப்புகளில் வைக்கப்பட்டிருந்தன. அதில் மென் சூட்டைக் கிளர்த்தியபடி அருகம் மிளாறுகள் அனப்பூட்டின.

மரக் குருதில், பலாவும் வாழையும் மாங்கனிகளும் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. மக்களை வரவேற்று அவர்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொடுக்க ஆள்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

வருகிற மக்களின் களைப்பு நீங்க நீர் மோரும், தண்ணீரும், பெருங் கூட்டத்தால் நோய் பரவாமல் இருக்க, பானகமும் செம்மண் பூசப்பட்ட மண் கலயங்களில் வைக்கப்பட்டிருந்தன. வேலம் பட்டையுரித்து கடுக்காயையும் பனம் பழத்தையும் அதனோடு சேர்த்து ஊறல் போட்டுப் பதப்படுத்திய பானம் மண் கொப்பரைகளில் வழிந்துகொண்டிருந்தது. எந்நேரமும் வழிப் பயணத்தில் நோய் உண்டானவர்களுக்கு மருத்துவம் பார்க்க, வழியெங்கும் அறிவர்கள் காத்திருந்தார்கள்.

பெருங் கலயங்களில் தேன் தழும்பிக் கிடந்தது. அதனருகே நடை அசதி தீர முன்னோரின் குமரிச் சோறு முள்ளும் தோலுமின்றி கையகல அளவில் துண்டுகளாகச் செதுக்கிக் குண்டானில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. எல்லா கிராமங்களிலும் இதுதான் வரவேற்பு.

பிரம்பூருக்கு உள்ளே வர மூன்று நுழைவாயில்கள். முதல் நுழைவென்பது மூங்கில் குத்தீட்டிகளால் ஆனது. பல நூறாயிரம் குத்தீட்டிகள் ஓர் அரண்போல நகரைச் சுற்றிலும் நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்தது. அவை நகருக்குள் விலங்குகள் நுழைய முடியாதபடியாக அம்புப் படுக்கையை நிமிர்த்தி வைத்ததுபோல இருந்தது.

எப்போதுமே மாலை மயங்கியதும் அதன் கதவுகளைச் சாத்தி விடுவது வழக்கம். விழாக் காலம் தொடங்கிவிட்டபடியால் அது எல்லா நேரத்திலும் மக்கள் செல்வதற்காகத் திறந்திருந்தது. வெறியாட்டுக் காலத்தில் ஏழ் குறும்பனையின் கொண்டாட்டத்திற்கு வழி விட விலங்குகள்கூட ஒரு யோசனைத் தொலைவுக்கு வெளியே உலாவின.

மூங்கில் அரண்களுக்கு அடுத்து வளர்ப்பு விலங்குகளின் கொட்டடி. ஆனையாளிகளும், அலங்குகளும், மகரயாளிகளும், பெருயாளிகளும், எருமைகளும், ஆடுகளும் வசிக்குமிடமது.

அதனையடுத்து திட்டமிட்டு வளர்க்கப்பட்ட, பூச்சிகள் அண்டாமலிருக்க துளசி, கற்பூரவல்லி, செவ்வந்திச் செடிக் கூட்ட அரண்கள். அதனோடு புங்கையும் வேம்பும் ஊடுபாவியிருக்கும்.

அதற்கடுத்ததுதான் நகரச் சாலை. சுடு செம்மண்ணால் கெட்டிப் படுத்தப்பட்ட சாலை. மழை எப்போதும் ஒரு குழந்தையைப்போல

அழுதுகொண்டே இருக்கும் நிலமாதலால் சாலையின் இரு மருங்கிலும் சிறு ஓடைகள் கழிவு நீர்க் கால்வாயில் சென்று கலக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தன. சாலையின் உட்புறத்தில்தான் நகரத்தின் குடிகள் வாழும் குடில்கள். ஏழ்பனை நகரம் முக்கோண வடிவில் மலையில் சாய்ந்த வாக்கில் அமைந்திருந்தது.

ஒவ்வொரு நுழைவாயிலும் மண்ணைக் குழைத்து சதுரமாக வெட்டி அடுக்கி வைத்து எரியூட்டப்பட்டு உருவான மண் கற்களால் நாற்பது பாக உயரத்தில் செவ்வகம்போல நிமிர்ந்து நிற்கும். ஒவ்வொரு நுழைவாயிலின் மேல் நட்ட நடுவே ஒரு பனைமரம் கருங்கல்லால் செதுக்கப்பட்டு நிமிர்த்தி வைக்கப்பட்டிருந்தது.

நுழைவாயிலின் அரண்போல ஏற்றத்தாழ்வில்லாத ஒரே வடிவிலான குடில்கள் அமைக்கப்பட்டிருந்தன. குடில்கள் முழுமையும் அந்தரத்தில் அமைக்கப்பட்டிருந்தன.

முக்கோண அமைப்பில் ஒரு சுற்றுக்குத் தொள்ளாயிரம் வீடுகள். முக்கோணத்தின் ஒரு பக்கத் தோற்றம் நான்கு குரோசம் நீளத்தைக் கொண்டது.

எல்லாக் குடில்களும் ஒரே அமைப்பைக்கொண்டிருந்தன. வீடுகள் அந்தரத்தில் ஒரு தண்டம் அளவு சுடுமண் செங்கல்லாலும் அதன் மேல் மூன்று தண்டம் மூங்கில் பட்டியாகவும் அதன் மேல் கூரை மூங்கில் புடைப்பு, தேக்க இலைகள், நாணல் தட்டைகள், அதன் மீது எள் தோகையும், திணைத் தோகையும் பிணைந்து பிசிறேதுமின்றி ஒட்ட நறுக்கப்பட்டு இறுக்கிப் பாடம் போடப்பட்டிருந்தது. தரை மண் கெட்டியாக்கப்பட்டு காட்டெருமைச் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது.

ஒவ்வொரு வீடுகளுக்கு இடையேயும் மேல் வழிப் பாதைகளும் கீழிறங்கப் படிகளும் அமைக்கப்பட்டிருந்தன. அந்தரத்திலிருக்கும் வீடுகளுக்குக் கீழ்த் தரையிலிருந்து வட்ட மண்தாழிபோலிருக்கும் ஒரு பரப்பில் கீழே விறகெரித்தால் தாழியிலிருந்து மேலேறும் மண் குழாய் வழியே மேலே வீட்டுக்குள் மென் வெப்பம் பரவும் வகையில் அதன் அமைப்பும் உருவாக்கப்பட்டிருந்தது. அதீதக் குளிர் நாள்களில் அடியில் விறகு எறிய மேலே வெப்பம் காக்கும் அளவில் இருந்தது.

அதோடு கீழே இருபாக அளவில் இரு கால்வாய்கள் ஓடின. ஒரு கால்வாயில் மேலிருந்து மூங்கில் குழாய் வழியே கீழிறங்கும் கழிவு நீர் சென்றுகொண்டிருந்தது.

தூய நீர் மேல் ஆற்றிலிருந்து ஒரு தடையெடுத்து நீர் பிரித்து நகரத்துக்குள் நுழையும்படி செய்யப்பட்டிருந்தது. முதலில் நீர் ஆற்றிலிருந்து பிரிந்து ஒரு பெருங் குளத்தில் நிறையும். குளத்தின் நீர் குளத்தின் பெரு வாய்க்கால் ஒன்றில் பிதுங்கி வழிந்தோடும். வாய்க்காலின் தொடக்கப் பகுதியில் படல்களாக வேப்ப மரங்கள் படர்ந்திருக்கும். நீர் அதனைக் கடந்து வர, குமரி நார்ச் செடிகள் வழிமறிக்கும். அவற்றின் மடல்களைக் கடந்து வர, கருங்காலி மரத் தடுப்பரண்களில் கூழாங்கற்களும், வெங்கச்சம் கற்களும் மறிக்கும். அவற்றின் சந்துகளில் புகுந்து கசடற்றுத் தூய நீர் நகருக்குள் நுழையும் வண்ணம் திட்டமாக அமைக்கப்பட்டிருந்தது.

எல்லா வீடுகளும் நீரோடு இணைக்கப்பட்டிருக்கும். ஒரு கால்வாய் வழியே புகுந்து மற்றொரு கால்வாய் வழியே நகரின் அனைத்து வீடுகளின் வழியே சென்று மறு புறத்தில் பிரிந்து மீண்டும் கீழ் ஆற்றின் மறு முனையில் கலந்துகொள்ளும் வகையில் நீர் மேலாண்மை செய்யப்பட்டிருந்தது.

நீர்க் கழிவுகளும் அனைத்து வீடுகளையும் இணைத்துக் கால்வாயில் கலந்து ஆற்றின் மறு புறத்தின் அனைத்து மட்டத்திலும் ஓடி நகர் தாண்டித் தொலைவில் சரிந்துகிடக்கும் மலை மடிப்புகளில் படர்ந்து கிடக்கும் வனங்களில் பாயும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீடுகளுக்கும் தெருவுக்கும் இடையே முப்பது பாக இடைவெளி.

இதுபோல, நுழைவாயிலில் இருந்து களக்கோட்டைக்கு இடையே முன்னூறு தெருக்கள். நட்ட நடுவே களக்கோட்டை. களக் கோட்டையில் முக்கோணத்தில் ஏழு மாடிகளாகத் தரையிலிருந்து கற்களாலும் சுடு சுண்ணாம்பாலும் ஆல் முதல் வேழம் வரையான பதினாறு வகை மரஞ்செடிகளின் பாலையும் குழைத்துக் கட்டப்பட்டிருந்தது. அதன் மேல் கூரை ஒரு கூம்புபோல கூர்ந்து இடை வரும் மேகக் கூட்டங்களைக் கிழித்தபடி இருமாப்பாக அமைந்திருந்தது.

சூரியன் உள்ளிறங்க ஏதுவாக முக்கோண வடிவத்தில் வெளிச்சம் பாயும்படி மேற்கூரை இல்லாமலிருந்தது. ஏழு மாடிகளும் பல்வேறு அறிவரங்கங்களும் சில நூறு அறைகளும் கொண்டவையாக இருந்தன. களக்கோட்டையின் நடுவே வட்ட வடிவில் நகரின் மையமாக அம்பதினாயிரம் பார்வையாளர்கள் அமர்ந்திருக்ககூடிய அளவில் மர நாற்காலிகள் நல்ல இடைவெளியில் பல்வேறு அடுக்குகளாக அமைக்கப்பட்டிருந்தன. இங்குதான் எருது அணைத்தல் போட்டியும், பல்லியம் இசைப்பதும், பல்வேறு ஆடல் பாடலும் நிகழும்.

உச்சம் கொற்றவை வெறியாட்டு நிகழ்வுதான். நாற்காலிகளுக்கு நடுவே ஒரு பாடக நிலம் ஆற்று மணலால் நிரப்பப்பட்டிருந்தது. அதன் நடுவே ஒரு ஈராயிர ஆண்டு பெரு மரம் பாதியளவு புதைக்கப்பட்டு, அதன் நடுக் கட்டை வெட்டப்பட்டு மட்டம் செய்து பாடம் செய்யப்பட்ட அகல மரத்தரையின் மீது கொற்றவையின் உருவம் மரத்தால் செதுக்கப்பட்டு இருந்தது. ஒரே மாந்தரியின்வடிவம் போலிருந்தாலும் நுணுகிப் பார்க்கும்போது அந்த உடலில் பல மாந்தரிகளின் உடலும் ஊடுருவியிருந்தது. புடைத்து முட்டையைப் போலிருந்த தலையில் எதுவுமில்லை. ஆனால் தலைக்கு மேலேயும் தலையைச் சுற்றிலும் உடலின் இடமும் வலமும் ஏராளமான விரல்கள் இல்லா மொட்டைக் கைகள் நீண்டிருந்தன. கொற்றவை கம்பீரமாக பல்வேறு வண்ணக் கலவையால் தீர்க்கமான பேரொளி போல வீற்றிருந்தாள்.

அவள் முகம் என்பது காலத்தின் நீட்சி; ஒரு சொல்; ஒருவம்; ஒரு தலைவி; ஓர் அறிவு. இவையெதுவுமல்ல கொற்றவை. பல்லாயிரம் கோடிகளின் வாழ்வின் ஆதி நீட்சி அவள். காலம் தோறும் கதைகளின் தாய். ஓராயிரம் மிருகங்களைக் கொன்றவள். ஓராயிரம் மூப்பைச் செவிப்பறையில் கேட்டவள் என ஆயிரம் கதைகளுண்டு. தமிழர் பரம்பரைக்கான பறை பரணில் தொடங்கி, எள்ளுப் பெயர்த்திக்கான காலம் வரைக்குமான மிக எளியவள் அவள். அதுபோலப் பல்லாயிரம் பரம்பரையின் மூத்தவள். அவளுக்கான உருவம் என்பது இப்படித்தான். ஆகையால் கொற்றவையின் முகம், கண், காது, மூக்கு, மயிர் ஏதுமற்ற கருப்புத் தலையைக் கொண்டிருந்தது. கால்களிலோ கைகளிலோ விரல்கள் ஏதுமில்லை. நின்ற வாக்கில் உடைகளேதுமற்று நின்றிருந்தாள். உடல் முழுதும் நரம்புகள் புடைத்து நரம்புகளால் நெய்த உருவம் போலிருந்தாள். பல்லாயிரம் ஆண்டுகளின் தாய். கணக்கிட்டுச் சொல்ல முடியாத மாந்த குலத்தின் ஆதித் தாய். காலம் முழுவதும் தீட்டப்பட்ட புனைவுகளின் எரிகோளாக மிளிர்ந்தாள். மிளிர்கிறாள்.

ஒவ்வொரு நாட்டின் துணை நகரங்கள் துணை நாடுகளாகக் கொள்ளப்பட்டு மொத்தமாக அறுபத்தியெட்டு நாடுகளாகப் பரந்து விரிந்திருந்தது மாந்தக் கூட்டம்.

ஆதியில் வளர்ந்திருந்த முந்நூற்றுப் பதினேழு நாடுகளில் மிச்சமிருப்பவை இவை. மீதி என்ன ஆனதென யாருக்கும் தெரியவில்லை. சுற்றிலும் பெரும் ஆழி சூழ்ந்திருந்ததால் யாருக்கும் முன்னோர்கள் மாறி மாறிச் சொல்லி வந்த வாய்மொழிச் சொல்லாடலில்தான் நிலம் அகண்டு இரண்டாக, சில துண்டுகளாக உடைந்து, நிலம் ஓர் அழகான தட்டு இடம்

பெயர்வதைப்போல உடைந்து நகர்ந்துவிட்டதாகச் சொல்லுவர். அதன் உண்மையைத் தேடிக் காலம் தோறும் ஆழிக்கு அந்தப்புறத்தில், எரிமலைகளுக்கு அந்தப்புறத்தில், பனிப்பாறைகளுக்கு அந்தப்புறத்தில், குமரி அருவிக்கு அந்தப்புறத்தில், மேரு மலைகளுக்கு அந்தப்புறத்தில் செல்ல முயன்று பல்வேறு முயற்சிகள் நடந்த வண்ணமே இருந்து ஒரு கட்டத்தில் அதில் தோற்றும்விட்டார்கள். மூதாதையர்கள் நிலம் துண்டாக உடைந்ததில் பிரிந்த துண்டுகளில் இவர்களைப்போலவே அவர்களும் பாதுகாப்பாக இருந்திருக்கலாம். அல்லது ஆழியிலோ புதை மணலிலோ சிக்கியிருக்கலாம்.

முன்னூற்றுப் பதினேழில் மற்ற நாடுகள் பிளந்த பிறகும் உயிர்த்திருக்கலாம். அன்றிருந்த வானளவு மிருகங்களால் தின்னப் பட்டிருக்கலாம். இல்லையெனில் மிருகங்களும் தட்டுப் பெயர்ந்து உடைந்து பிரிந்ததில் மாண்டிருக்கலாம். மிச்ச சொச்சமுமிருக்கலாம். தனது ஆதி மூதாதையர்கள் அங்கும் இதுபோலச் செப்பனிட்ட அறிவைக்கொண்டு நம்மைத் தேடிக்கொண்டிருக்கலாம். அல்லது அறிவு உதிர்ந்து மீளொரு ஆதித் தொன்ம விலங்காக மடை மாறி இருக்கலாம். நம்மைவிட இன்னும் முன்னேறிப் புதிய நுணுக்கங்களைக் கண்டடைந்திருக்கலாம். அவர்களுக்கும் கொற்றவை தாயாக இருக்கலாம். அல்லது புதிய ஒன்றை அவர்களின் தொன்மக் கடவுளாக மாற்றியிருக்கலாம். ஆனால் காலம் தோறும் அந்த நினைவுகளைச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

இயற்கையின் நகர்வும் பிறப்பும் எவர் ஒருவரும் அறுதியிட்டுச் சொல்ல முடியாதென நம்பினர். ஒரே கூட்டம் ஒன்று பலவாகி முன்னூற்றைத் தாண்டி வளர்ந்தது எவ்வளவு உண்மையோ, வீழ்ந்ததும் உண்மை.

இப்போது இருப்பவை இவைதான். காத்துக்கொள்ள வேண்டும் என்கிற முனைப்பில்தான் விவாதங்களும் கூட்டங்களும். எவர் ஒருவரையும் தனியே விடாமல் ஒரே கூட்டமாக வகைமையை உருவாக்கித் திட்டமிட்டு வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு நாடுகளுக்கும் ஒவ்வொரு வகையான நில அமைப்புக்கேற்ற படி வீட்டின் அமைப்புகளும் மாறுபடும். அந்த வீடுகளின் அமைப்பைத் தீர்மானிக்க அறிவர்கள் கூட்டம் தொடர்ந்து சிந்தித்தபடியே இருக்கும்.

ஏழ் குறும்பனையின் எல்லா கிராம அமைப்புகளும் இப்படித்தான். அதன் மக்களுக்கேற்ப முக்கோணம் விரிவடையும். கொற்றவை

வெறியாட்டுக்கு நகரமே விழித்துக்கிடந்தது.

உழவுக் கொண்டாட்டமென்பது சில நூறு ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் சுறவத் திங்கள் முதல் நாளில் தொடங்கியது. வேட்டையோடு விதைத்து அறுவடை செய்யும் காலமும் வளர்ந்த பொழுதுகளில் உருவானது.

தன்னோடு உடனுழைக்கும் எருமைகளுக்கும் பெருயாளிகளுக்கும் எருதுகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக அவரவர் கிராமங்களிலும் நகரங்களிலும் பேரூர்களிலும் குடும்பத்துடன் கொண்டாடுவார்கள். ஆனால், வெறியாட்டுக்கு மட்டும் மொத்த நாடுகளும் ஒன்றாகக் கூடியாக வேண்டும். நளித் திங்கள் முழுக்க நடைபெறும் விழா இது. நளித் திங்களின் தொடக்கத்தில் ஆனையாளியை முன்னால் வைத்துக் காப்புக் கட்டி விழாவைத் தொடங்குவர். கொற்றவைக்குப் பூசை முடிந்து பல்லியம் இசைத்து முடிந்தவுடன் பாதியியிலேயே வெளியூர் மக்கள் வெளியேற, எல்லா நாடுகளின் முக்கிய ஆளுமைகள் சூழ்ந்திருக்க ஒவ்வொரு நாட்டின் சிக்கலும் பேசப்படும். குமரிக் கோட்டின் காலடியில் கிடந்த அனைத்து நாடுகளின் தாய்களும் அதில் கலந்துகொள்வார்கள். பார்வையாளர்களாக அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் அவர்களின் தமக்கன்களும் கலந்துகொள்வர். இந்த ஆண்டு ஏழ் குறும்பனைக்குச் சுற்று வாக்கில் கொற்றவை வெறியாட்டு விழா வந்தபடியால் இதை ஒருங்கிணைக்கும் இம்மாபெரும் வேலையை ஏழ் குறும்பனையின் தலைமைத் தாயான அஞ்சாவண்ணி, தனது தம்பி கடுமான் கிள்ளியிடம் ஒப்படைத்திருந்தாள்.

எல்லாருக்கும் தங்கத் தேவையான குடில்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் கடுமான் கிள்ளி. கிள்ளியோடு அவனது தமக்கைகளும் இணைந்து வேலைகளைப் பார்வையிட்டனர். சுறவத்தில் தொடங்கிய வேலை. கிட்டத்தட்ட வேலை முழுவதுமாக முடிந்துவிட்டது. பல்துறை வல்லுநர்களும் சென்ற ஆண்டு ஏழ் பின்பாலை நாட்டில் உருவாக்கியதை விடவும் சிறப்பாக வடிவமைத்திருக்கிறோம் என்று தங்களுக்குள்ளேயே பேசி நெகிழ்ந்துவிட்டார்கள்.

நாளை காப்புக்கட்டிற்குத் தேவையான அனைத்தையும் தயார் செய்துவிட்டார்கள். அருகன் காப்புக்கட்டிற்குத் தேவையான இசைக் கருவிகளையும் இசைப்போரையும் முன்பே அனுப்பிவிட்டிருந்தான். பத்து முரசுகளும் பறைகளும் கொம்பூகளும் காப்புக்கட்டும் இடத்தில் நிறுத்தி வைத்தாயிற்று. காப்புக்கான மரம் குமரிக்கோட்டின் விதிகளுக்கு மாறாக

உயிருடன் இருக்கும் பொழுதே வெட்டி எடுப்பார்கள். காப்பு மரம், சந்தன மரத்தினால் ஆனது. முப்பத்தியிரண்டு அடி உயரச் சந்தன மரத்தின் மேல் தோலை நீக்கிவிட்டு அது வலுவாக நிற்பதற்காகக் கீழே சதுர வடிவத்தில் ஆறடிக்குக் கல்லால் செதுக்கப்பட்ட பாறையின் நடுவில் துளையிட்டு மரத்தின் அடிப்பாகத்தை அந்தத் துளையில் நிறுத்தி வைப்பர். மரத்திற்கு மஞ்சள் காப்புக்கயிறு கட்டி வணங்குவதில்தான் கொற்றைவைக்கான முதல் நாள் தொடக்கம்.

நகருக்கு வெளியே அந்தரத்தில் ஒவ்வொரு நாற்பதடியில் ஒரு குடில். குடில்களில் பல்வேறு செடிகளை வதக்கிச் சாறு பிழிந்து உருவான வண்ண வண்ணக் கோலங்கள் தீட்டப்பட்டிருந்தன. தரையில் பசுஞ் சாணி மெழுகிப் பனையோலை வேயப்பட்ட குடில்கள். மூங்கில் பட்டைகளால் அடைக்கப்பட்ட சுற்றம். ஒரு குடிலுக்கும் மற்றக் குடிலுக்கும் செல்லும் இடை வழி. மேல் தளத்திலிருந்து இறங்க மர ஏணிகள். தண்ணீரும், வெண்ணீரும், இறைச்சியும் பழமும் கீழிருந்து மேலேறக் கயிறும் உருளைகளும். சிறப்பான ஏற்பாடென்ற முடிவுக்கு வந்தான் கடுமான் கிள்ளி. கருமையில் சிவந்தவன். ஏழு முழம் மூன்று விரல் உயரத்திற்குக் குறையாதவன். அஞ்சாவண்ணியின் தம்பி. இடுப்பில் கட்டிய வெண் தோலுடைபோலச் சிரித்தே காரியமாற்றுபவன். ஏழ்பனையும் அஞ்சாவண்ணிக்கு அடுத்து இவனுக்குக் கட்டுப்படும். கட்டுப்பாடு என்பது உளவியல். பேச்சுக்குச் செவி சாய்ப்பது என்பது அச்சத்தாலும், பயத்தாலும் அல்ல. அவர்கள் நிர்வாகத் திறமை கொண்டவர்கள். மக்களோடு மக்களாக இருப்பவர்கள். மக்களை நேசிப்பவர்கள் என்பதால், உயர்வு தாழ்வற்ற ஒரு சமச் சமூகமாக, நாகரிகச் சமூகத்தின் தோற்றுவாயாக இருப்பதால் மக்கள் கட்டுப்பட்டார்கள்.

ஏழ் குறும்பனையின் தாய் அஞ்சாவண்ணி. தாய்தான் காப்பவள். தாய்க்குத்தான் அதிகாரம். அதிகாரம் என்பது ஆளுமை. பூமியின் மைய அடுக்கின் வடக்கே பெரும் வளத்தோடு குறும்பனை நாட்டிற்கு ஏழு குறும் நாடுகள். ஒரு நாடு என்பது ஒரு சிறிய நகரமும் அதனை ஒட்டி மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்பப் பல ஊர்களும். ஒவ்வோர் ஊரும் மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப அவ்வப்போது உருவாகும்.

எல்லா ஊருக்கும் தாய் உண்டு. எல்லாப் பேரூருக்கும் தாய் உண்டு. எல்லா நகரத்திற்கும் தாய் உண்டு. அது ஒரு சங்கிலித் தொடர் போல. ஏழ் குறும்பனையைப் பொறுத்த மட்டில் எல்லாருக்கும் தாய் அஞ்சாவண்ணி. தந்தை என்கிற பிரிவிற்கு அதிகாரமில்லை. தந்தையின் அதிகாரம் அவனது தங்கையின் வீட்டிலும் அக்காவின் வீட்டிலும்

தாய்மாமனாக இருக்கும். தாய், தாய்மாமன் என்பதே அறுபத்தியெட்டு நாடுகளிலும்.

அஞ்சாவண்ணி பெயருக்கேற்றபடி கம்பீரமானவள். எட்டு முழம் நாலு விரல் அளவு நீண்டிருப்பாள். கருத்த அகல முகம். பெருங் கழுகின் கரும் பழுப்பு இறக்கைகள் அவளது கொண்டையை மூடியிருக்கும். தோல் உடைகளே அவளுக்குப் பிரியமானவை. அஞ்சாவண்ணியின் பார்வைக்குச் சகலமும் கட்டுப்படும். சிம்மயாளியின் வாலைப் பதப்படுத்தித் தனது பெரும் முலைகளுக்கு இடையே தொங்க விட்டிருப்பாள்.

ஆளிகளில் சிம்மம்தான் கொடூரமானவை. அடர் வனத்தில் ஒரு செங்காடுபோலப் படுத்திருப்பதை கழுகுப் பார்வையில் பார்த்தாலே நடுங்கும் மனம் நமக்கு. செம்மண் என்றால் சிம்மயாளிக்குக் கொள்ளை ஆனந்தம். செம்மண்ணில் கிளைத்திருக்கும் மரங்களின் வேர்களை முன் கால்களால் பறித்துக்கொண்டே தனது தும்பிக்கை போலிருக்கும் தனது சொறசொறத்த நாவால் மரத்தை வளைக்கும். தனது கடைவாய்ப் பற்களால் கிளையைப் பிடிக்கும். தனது முரட்டு வாலைக் கயிறாக்கி மரத்தைச் சுற்றிப் பிடித்திழுக்கும். வேர் பறிக்க, மரம் சாய என இரண்டும் ஒரே பொழுதில் நடக்கும். வேர் பிய்ந்து சாய்ந்து கிடக்கும் மரத்தை இழுத்துத் தூக்கியெறிந்துவிட்டு நிலத்திற்குள் புதைந்து கிடக்கும் வெதுவெதுப்பான செம்மண்ணைத் தனது நாக்கால் அள்ளிச் செதில் செதிலாகக் காண்டாமிருகத் தோலைப் போலக் கடினமாக, கெட்டியாகப் படர்ந்திருக்கும் தோலில் வீச, ஆளி தன் வாலால் உடலைத் தடவித் தன் கரு நிறத்தைச் செம்மையாக்கிக் கொள்வதே ஒரு பெரும் போர்தான்.

ஆளிகளுக்கு அத்தனை பிடிக்கும் செம்மண். எப்போதாவது வெக்கை தாளாமல் பஃறுளி ஆற்றின் தலை மடியில் மலைகளைப் பிளந்தபடி கொட்டும் அருவியின் ஒரு புறத்தில் மேல் மலையோரம் நின்றபடி உலகின் மடியிலிருந்து கொந்தளிக்கும் முதல் நீரை உறிஞ்சித் தன் உடலில் பீய்ச்சியடிக்கும் பொழுதே சிம்மயாளியின் நிறம் அடங்காக் கருப்பெனத் தெரியும். சிம்மயாளியைக் கண்டால் காட்டின் அனைத்து உயிர்களும் நடுநடுங்கும். சிம்மத்தைவிட உயரம் குறைவான ஆனையாளியும் மகரயாளியும்கூட சிம்மத்திடம் நெருங்குவதில்லை. சிம்மத்தின் உணவே பரம சாதுவான மகரயாளியும் ஆனையாளியும்தான். அப்படியான சிம்மத்தைக் கொன்றது குமரிக்கோட்டிலேயே கொற்றவைக்குப் பின் சில பேரில் அஞ்சாவண்ணியும் ஒருத்தி.

வேட்டை என்பது குமரிக்கோட்டின் குறியீடு. தாயாக இருந்தாலும், தாய்மாமனாக இருந்தாலும் மக்களில் ஒருவர்தான். உணவிற்காக வேட்டையாடும் மக்களின் படையில் தாய் முன்வரிசையில் நிற்க வேண்டும். மாந்த வாழ்வின் போராட்டமே உணவிற்காகத்தான். அதில் முதல் உணவு இறைச்சிதான். இது இவர்கள் தீர்மானித்தது அல்ல. முன்னோர்கள் தீர்மானித்தது. இன்று வளர்ந்து மிக உயரிய நாகரிகச் சமூகமாக மாறினாலும் திணையும் கானமும் வரகும் இருங்கும் சாமையும் விளைவித்து உண்ணும் நிலைக்கு வளர்ந்திருந்தாலும் தோல் உடைகளைத் தாண்டி ஆடைகளைத் தானே உருவாக்கிக்கொள்ளும் நிலைக்கு வளர்ந்த பின்பும்கூட தனது பழமையை விட்டுவிடத் தயாரில்லை.

வேட்டையில் குட்டிகளையோ, சினை விலங்கையோ, குட்டிகளை ஈன்ற தாய் விலங்குகளையோ கொல்வதில்லை என்பது எழுதப்படாத சட்டம். மீறினால் கடுமையான தண்டனைகளும் உண்டு. அதையும் மீறிக் கொன்றால் பெண்ணோ, ஆணோ தங்களது குடும்பத்திலிருந்து பிரிந்து ஆறு மாதம் காட்டிற்குள்ளேயே வாழ வேண்டும். வேட்டையின்போது பாதுகாப்பிற்காகவோ எதிர்பாராத விதமாகவோ நேரும் கொலைகள் கணக்கில் எடுக்கப்பட்டுப் தண்டனையிலிருந்து விலக்குப் பெறலாம். இப்படித் தண்டனைப் பெற்றவர்கள் அறுபத்தியெட்டு நாடுகளிலிருந்தும் கடத்தப்பட்டு கன்னியாற்றுக்குக் கிழக்கே வறண்ட பாலைப் பகுதிகளுக்கு அனுப்பப்படுவர். அப்படி அனுப்பட்டவர்களில் தண்டனை முடிந்து திரும்பாத மூர்க்கங் கொண்டவர்கள் ஒரு தனிப் பெருங் கூட்டமாகவே மாறிக் கன்னியாற்றின் கடை மடை தாண்டித் தென்பாலியில் வாழ்கின்றனர். அதுவே மூர்க்கன் குடியாக வளர்ந்து நிற்கிறது. எப்பொழுதும் மாறாத குணம் அவர்களுடையது. தண்டனைக் காலத்திலும் அடங்கா வெறியோடு வயிற்றுப் பையில் குட்டிகளைத் தாங்கி ஓடும். தாவியோடி மான்களையும் வேட்டையாடி மகிழ்வது அவர்களது இயல்பில் ஒன்றாகிப் போனது.

மாந்த நலத்திற்கான, மாந்த நாகரிகத்திற்கான மூர்க்கத்தை விட்டொழிக்க மனமில்லாமல் அந்தப் பாலையும் குளிரும் கொண்ட நிலத்தில் புதிய வாழ்க்கை வாழ்கிறார்கள். கண்டபடி கிளைத்து, விட்டேத்தியாக முளைத்து இடையறாமல் வளர்ந்து நிற்கும் ஒரு சமூக நீட்சியை உடைத்து அறிவற்ற விலங்கொன்றாக நீடிக்க முடிவெடுத்துப் பலர் தண்டனைக் காலத்திற்குப் பின்பும் சொந்தங்களைத் தேடி வருவதில்லை.

பல நூறு ஆண்டுகளில் அவர்களே தனித்த மாந்த இனமாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் உடல் நிறத்திலும்கூட மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. தூய கருமையிலிருந்து செங்கருமைக்கு மாறியிருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் அறுபத்தியெட்டு நாடுகளிலிருந்தும் தண்டனைக்காக அங்கே அனுப்புவதில்லை. சென்றவர்கள் மீள்வதில்லை. ஒருவேளை மீண்டுவந்தாலும்,பழைய நிலைக்கு திரும்புவதில்லை என்பதினால் அந்த முடிவு அல்லது கொல்லப்படுவார்கள். அதனால் தண்டனைக் காலத்தை ஒவ்வொரு நாட்டின் கடைக் கோடியிலும் குடிலமைத்து ஒழுங்குக்கு வரப் பணித்து அனுப்புகிறார்கள்.

அஞ்சாவண்ணி தன் தாய் செஞ்சேனையைப்போலவே பெருஞ்சூரி. வில்லெடுத்து வனத்தைப் பார்த்தாலே மிருகங்கள் குகைகளுக்குள்ளும், புதர்களுக்குள்ளும் ஓடி ஒளிந்துவிடும். அஞ்சாவண்ணி கிழக்கிலிருந்து மேற்கிற்கு ஒரு முறை கண்ணோட்டி விலங்கின் பதுக்கல் இடத்தையும் காற்றின் போக்கையும் அறிந்து மூவம்பை ஒரே வில்லில் வீசுவாள்.

வீர்வீரென உறுமியபடி உயிரடங்க எம்பிக் குதிக்கும் செம்மானின் உடலில் மூவம்பும் பின் கால் தொடையிலும், வயிற்றிலும், கழுத்திலும் பாய்ந்தது கண்டு உடன் வந்தவர்கள் எழுப்பும் குலவையில் காடதிரும். செம்மானிலிருந்து பொளிச்செனப் பீறியடிக்கும் குருதியையும் வைத்து எத்தனையாவது நாடியில் மானின் நாடியடங்கும் எனக் கணித்துச் சொல்வாள். அஞ்சாவண்ணியோடு வேட்டைக்குப் போவதே குடிகளுக்குக் கொண்டாட்டம்.

அஞ்சாவண்ணியின் இணையன் தென்னனும் சளைத்த வனில்லை. ஓடும் மிருகத்தைத் துரத்தியோடிக் கல் ஈட்டியால் கழுத்தை ஆழம் பார்ப்பான். அது தாவித் தன் கழுத்திலிருந்து ஈட்டியை விலக்குவதற்குள் கல்வாளால் தலையையும் உடலையும் வேறாக்குவான். துணிச்சலில் வேங்கைக்கு ஈடானவன். அஞ்சாவண்ணியைவிட அரை முழம் குறைவான உயரங்கொண்டவன். வாகானவன். ஏழ் பின்பாலை தேசத்தின் வண்குளம் பேரூரைச் சேர்ந்தவன். ஒற்றையாளாகக் குமரிக் கோட்டில் சுற்றிக்கொண்டிருந்தான்.

ஏழ் குறும்பனை நகரம் வீட்டிற்கொரு ஆளை அனுப்பியிருந்தது. வேட்டைக்கு வரதாவர்கள் குலவையிட்டு மக்களை அனுப்பி வைத்தார்கள். பறை முழங்க, குழல் ஊத, அலங்குகள் வழி நடத்த, எருதுகள் பூட்டிய

வண்டிகளிலும் கால்நடையாகவும், மகரயாளிகளிலும் பரிகளிலும் பெருங் கூட்டம் கிளம்பியது. காடே அதிர மக்கள் ‘‘ஓ..கா.. ஓ..கா...’ என்று ஓசை எழுப்பி நடந்தார்கள்.

கல் கோடாரி, கல் ஈட்டி, கவண், வில், கயிற்று வலையுடன் கூட்டம் கூட்டமாகப் பெரும் படையோடு முன்னால் சென்ற தாய் செஞ்சேனையின் குதிரையில் ஒண்டிக்கொண்டு வந்த அஞ்சாவண்ணி மலர்ந்த பருவத்தவள் அப்பொழுது. வேட்டைக்கான பழக்கங்களை ஏற்கெனவே ஓரளவு கற்றிருந்தாலும் அவளுக்கு இது நேரடியான முதல் வேட்டை. பருவம் எய்தி ஆறாவது திங்களுக்குப் பிறகு வேட்டைக்குப் பழக்குவது ஏழ் குறும்பனையின் மரபு. வனம் நெருங்கியதும் இசைப்பது நிறுத்தப்பட்டது.

செஞ்சேனை அனைவரையும் ஒரு முறை ஆழமாகப் பார்த்தாள். அவள் பார்வைபட்டவள் அடுத்த இலக்கில் இருப்பவளைப் பார்த்தாள். மூன்று பிரிவுகளாகப் பிரிந்தனர். ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மாந்தரி தலைமையேற்றாள். மூன்று பிரிவிலிருந்தும் ஒருத்தி சடசடவெனக் கடம்ப மரங்களில் ஏறினார்கள்.

அஞ்சாவண்ணி சிறு வயதிலிருந்தே வனப்பயிற்சி பெற்றவள். சுற்றியிருக்கும் அனைத்து நாடுகளும் காடுகளிலிருந்து முளைத்து மாந்தர்கள் ஆனவர்கள். ஆகையால் எல்லா மாந்தர்களுக்கும் காடு ஒரு வாழ்விடமாக, வாழ்க்கையாக, அதன் அனைத்திலுமாகப் பிணைந்து வாழ்ந்தவர்கள்தான்.

நிலத்தைச் சமப்படுத்திப் பயிர் செய்யும் வேளாண் குடியாகக் கடைசியான சில பரம்பரைகளாக வளர்ந்திருந்தாலும் காட்டை நேசிக்காத ஒரு மாந்தனும் அப்பொழுதில்லை. அஞ்சாவண்ணியும் காடோடிதான்.

தேனொழுகும் கடம்ப மர வலுக்களைப் பழகியிருந்த கால்களாக இருந்தாலும் கடம்ப மலர்கள் செஞ்சேறாகி நிலத்தை மூடியிருந்த புலம் உணராமல் கால் வைக்க வழுக்கி, மலர்ச் சேற்றில் உருண்டு கிளையையோ வேரையோ பற்ற முடியாமல் பெரும் பாறை வெடிப்பில் விழப்போக, எங்கிருந்தோ கிளைகளைக் கடந்தபடி பறந்து வந்தான் தென்னன்.

தென்னன் வேங்கை மரத்தின் கிளையில் திரிந்த வில்வக் கொடியைத் தாவிப் பிடித்து அஞ்சாவண்ணியைத் தொடர்ந்து வந்து அவளுக்கு முன்பாகக் கால் அகட்டித் தாவிக் குதித்து நின்றான். ஒரு

கையில் கொடியைப் பிடித்தபடி மறுகையில் அவளைத் தூக்கி நிறுத்தினான். கடம்ப மலர்களும் காந்தள் மலர்களும் அவளுடம்பில் சேறாய் வழிய, தென்னனை நிமிர்ந்து பார்த்தாள்.

கண் முன்னே குருதியைப்போலச் சொட்டுச் சொட்டாக மலர்க் கூழ் ஒழுக, மனம் ஒழுகி நின்றாள் அஞ்சாவண்ணி. தென்னனும் நோக்க அவளும் நோக்க பற்றியெரிந்தது பேரிருள். தென்னனச் சில நாடிப் பொழுதுகளிலேயே உள் கொணர்ந்தாள்.

“முதல் முதலாகப் பாக்குறேன்...”

“நான் அடங்காப் பசியோடு இருக்கேன்!”

சட்டென நிமிர்ந்து பார்த்த அஞ்சாவண்ணி அவன் பார்வைக்குள் அகமுண்டாள். உடல் தீப் பிடித்ததுபோலொரு குளிர்ச்சி. கட்டுப் படுத்திக்கொண்டு கேட்டாள்.

“நான் யாருன்னு தெரியுமா?”

“பொண்ணாகத்தான் தெரிகிறாய்!”

தென்னனின் இந்தப் பேச்சிற்கு அவள் முறையாகக் சினப்படத்தான் நினைத்தாள். மாறாக வெடித்துச் சிரித்தாள். அவர்கள் மிருகங்களானார்கள். கடித்துச் சிவந்தார்கள். சிவந்து மலர்ந்தார்கள். அவர்கள் புரண்ட நிலத்தில் ஓடிய தேனாற்றில் உடல் கழுவினார்கள்.

தேனீக் கூட்டங்கள் மலர்ந்த பூவென அஞ்சாவண்ணியை மொய்க்க, தென்னன் தன் உடல் உதறி உடலிலிருந்த கடம்ப இலைகளைப் பறக்கவிட்டான். தேனீக்கள் அதிர்ந்து பார்க்கும் தருணத்தில் அஞ்சாவண்ணியைச் சேர்த்தணைத்து கோவைக் கொடி பற்றி எம்பினான். பெருங்காட்டில் இருவரும் ஒற்றைப் பறவையானர்கள்.

அறுபத்தியெட்டு நாடுகளிலும் ஒரே விதமான இணைவுதான். யாரும் யாரிடமும் பழகலாம். இணைந்து வாழ்ந்து புரிதல் ஏற்பட்டு இணக்கம் தழைத்தால் கூடிக் களிக்கலாம். இன்னாருடன் வாழப் போகிறேன் என்கிற அறிவித்தல் மட்டுமே போதுமானது.

ஏழ் பின்பாலையின் வண்குலக் குடிமகன் தென்னனோடு அந்த நாடிப் பொழுதில் உண்டான பெரும் பசலை இன்று வரைக்கும் நீடிக்கிறது. இருவரும் சேர்ந்து காதலுற்றதும் அறிவிக்க ஆறு பருவமும் பழகியிருக்க வேண்டும் என்பதே விதி. ஆனால் தென்னனை அஞ்சாவண்ணியால் இனி ஒரு நாடியும் பிரிய முடியாதென்ற முடிவுக்கு வந்தாள் அஞ்சாவண்ணி.

வழிவழியாகச் சொல்லப்பட்டு வந்த முன்னோர்களின் கதையொன்றை நினைவுக்குக் கொண்டு வந்தாள். அது கதையல்ல. உண்மை. வரலாற்றின் விதிகளில் விலக்குகள்.

சேயோள் வனலி தனது காதலனுடன் சேர, யாரும் நெருங்காத சிம்மயாளியைக் கொன்று கொண்டுவந்து, தனது வாழ்க்கையின் அனைத்து நல்லது கெட்டதை அடக்கியாளும் ஞாலத் திறன் தனக்குண்டு என நிரூபித்துச் சேயோள் வனலி தனது சேயோன் வில்லானை மணம் முடித்ததாக அம்மா சொன்னதை நினைவுகூர்ந்தாள்.

தென்னனை ஒரு துளி நேரமும் பிரிய முடியாத அஞ்சாவண்ணி தானும் ஆளியைக் கொன்று வீர விவேகம் நிரம்பப் பெற்றவள் என நிரூபிக்கக் கங்கணம் கட்டினாள். காதலின் வலுவும் உண்மையும் அவளுக்குக் கொடுத்த திடத்தில் சிம்மயாளியைத் தென்னனோடு இணைந்து கொன்றாள்.

நாடே பார்க்க நான்கு ஆனையாளிகளும் இருபது பெருயாளிகளும் கட்டி, தொண்ணூறு தீரர்கள் துணையோடு இழுத்து வந்து நகரத்தின் வாயிலில் போட்டாள். நகரமே கூடி நிற்க தாய் செஞ்சேனை மகள் அஞ்சாவணியையும் மருமகன் தென்னனையும் உச்சி முகர்ந்து கட்டித் தழுவிக் கொற்றவை வெறியாட்டுத் திருவிழாப் போல மக்கள் கூடிக் குலவையொலி எழுப்ப அவ்வாண்டு முடிவு செய்திருந்த அனைத்து இணைகளுக்கும் சேர்த்து ஒரே நாளில் இணைவு விழா நடந்தது.

தென்னனும் அஞ்சாவண்ணியும் மக்களால் கொண்டாடப் பட்டுக் கூடிக் களித்தார்கள். அஞ்சாவண்ணி அப்படியான தனது அருங் காதலன் தென்னனை நினைத்துக்கொண்டிருந்தாள்.

“அஞ்சு... நமக்குப் பிரிதலும் நுழைதலும் மாறி மாறி வருவதில் தானே நாம் பிரியாமல் நிலைத்திருக்கிறோம்!”

“உண்மதான்... நாம் தள்ளியிருப்பதால்தான் பொங்கும் காதலைக் கிடைக்கும் நுனியில் ஆழ உள்ளிழுத்துக் கொள்கிறோம் தென்னா. இது ஒரு மயக்க உணர்வு!”

“மயக்கத்தில் மட்டும்தான் நம்ம காதல் நீடிக்கிறது என்கிறாயா?”

“போடா முண்டப் பயலே! உன் முண்டத்திலும் என் முண்டத்திலயுமா ஒட்டியிருக்குது நம்ம ஒறவு? நம்ம மக்களுக்காக... நீ ஒரு தெசை... நா ஒரு தெசை... நாம ஒரு தெசையாகும்போது அது ஓர்

தெசை. ஓர் எசை. நீ பக்கத்துல இருக்கும்போது செங்கோட யாழ மீட்டி உட்டப்புறம் அதோட ஒலி பெருகி ஓடும் காலம்போலதான் எனக்கிருக்கும். அதே பிரிஞ்சி கிடந்தா அந்த யாழோட இறுக்கம்போலதான் ஓடும் தெனம். நாம யாருக்காகப் பிரியுறோம்... மக்க நல்லதுக்காவ... நம்ம மக்க எல்லாரும் பிரிஞ்சி சேர்ந்துதான் வாழுறாவ!”

இறுக்கியெடுத்து அவளது உடலைத் தன்னோடு ஒன்றாக்கும்படி தனக்குள் பிழிந்துகொள்வான் தென்னன். மினுக்கும் அவனது நினைவுகளில் அவர்களது களிகளே அவை. கொற்றவை வெறியாட்டு விழாவிற்கு வருவதாகச் சொல்லிக் கிளம்பிப் போன தென்னன் இதுவரை வரவில்லை. இன்று மிக முக்கியமான நாள். கொற்றவை வெறியாட்டுத் திருவிழாவிற்குக் காப்புக்கட்டும் நாள். இன்றிலிருந்து பதினாறாவது நாளில் திருவிழா உச்சம் பெறும். கொற்றவைக்குப் பூசை செய்து முடித்தவுடன் அன்றே காப்பு இறக்குவார்கள். வெளியூர் மாந்தர்கள் வெளியூர் சென்று கிளம்ப மஞ்சள் நீராட்டு விழாவோடு திருவிழா நிறைவடையும்.

எப்பொழுதுமே அவன் இப்படித்தான். நேரத்திற்கு வருவதில்லை. இலெமூர்கள்போல மறைந்து மறைந்து திரிவான். திடீரெனத் தோன்றுவான். நமது நகரத்தில் அறுபத்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் விழா. அவள் பிறக்காதபோது நடந்த விழா. ஒவ்வோர ஆண்டும் ஒவ்வொரு நாட்டில் கொற்றவை வெறியாட்டு நடக்கும். இந்த ஆண்டு தனக்கு வாய்த்திருக்கும்போது பொறுப்பற்று இருக்கிறானே எனக் குமைந்தாள். தென்னன் எப்பொழுதும் இப்படியிருப்பவன் அல்லன். இது போன்ற தருணங்களில் தனது தருக்கங்களைத் தருவான். அவனது அனுபவமும் பயன்பட வேண்டும் என எவ்வளவோ சொல்லியும் தென்னன் வராதது அவளை வேதனைக்கு உள்ளாக்கியது. கடைக் குட்டி இருவாஞ்சியும் இந்த நேரத்தில் பக்கத்தில் இல்லாமல் போய்விட்டாள்.

அவளது திருமணத்தை எப்பொழுதோ செய்திருக்க வேண்டியது. செம்பனும் அவளும் எதையோ மனதுக்குள் வைத்துத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அவர்களாகச் சொல்லாத வரை நாம் எப்படி ஏற்பாட்டைச் செய்வது எனத் தயங்கினாள்.

திருவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தம்பி கடுமான் கிள்ளி முடித்துவிட்டான். ஒரு முறை ஏற்பாடுகள் நிறைவாக இருக்கிறதா எனப் பார்க்க கிள்ளி பலமுறை அழைத்தும் போகவில்லை. தென்னனையும் இருவாஞ்சியையும் நினைத்து மனம் அரிக்கத் தொடங்கியது. ஏதோ ஒன்று

அவளது மனக் கிடங்கில் கிடந்து உருட்டுவதை வதையோடு அனுபவித்துக்கொண்டிருந்தாள் அஞ்சாவண்ணி. அது தென்னனுக்குத் தெரிந்திருக்கக்கூடும் என நம்பினாள். கிள்ளியை அழைத்துத் தென்னனையும் இருவாஞ்சியையும் அழைத்து வர ஆளனுப்பியிருந்தாள். அவர்களிடமிருந்தும் எந்தத் தகவலும் வந்து சேரவில்லை.

நாளை காலையில் குமரிக்கோட்டின் தாய்களின் முன்பாகக் கொடிமரத்தில் காப்புக்கட்டும் நிகழ்விற்கான ஏற்பாடுகள் ஒரு புறம் நடந்துகொண்டிருந்தன. கிள்ளி அவற்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். ஓரிருவரைத் தவிர அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்களும், தாய்மாமன்களும் காப்பில் கலந்துகொள்ள வந்துவிட்டார்கள். அவர்களுக்கு இடம் அளித்துத் தங்க வைத்தாகி விட்டது. மாந்தக் கூட்டம் எதிர் பார்த்ததைவிடக் கூடுதலாக ஏறிக் கொண்டிருந்தது. திடீரெனப் பெரும் கூட்டமொன்று தங்குமிடம் கேட்டு நுழைவாயிலுக்கு வந்திருப்பதை முகிலன் வந்து சொன்னதும் கிள்ளி நுழைவாயிலுக்கு வேகமாக வந்தான். சாரை சாரையாக மாந்தர்கள் வரவர அவர்களுக்குத் தங்குமிடம் வழங்கும் குழுவினர் முறையாக வழங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் முகிலன் வந்து சொன்னதும் குழம்பிப் போனான், வேகமாக நுழைவாயிலை நோக்கி முகிலனோடு விரைந்தான். அங்கே நீண்ட பெரும் வரிசையில் ஒரு கூட்டம் மூட்டை முடிச்சுகளுடனும் பயண விலங்குகளுடனும் நின்றுகொண்டிருந்தது.

அந்தக் கூட்டத்திலிருந்த மூட்டைகளில் கல் வாள்களும், கல் கோடரிகளும், குத்திக் கிழிக்கும் கொம்புகளும் இருந்தன. அவர்கள் தங்களது தோளில் தொங்கவிட்டிருந்த மரக் குடுவைகளில் கொடிய நஞ்சுச் சாறுகள் அலம்பிக்கொண்டிருந்தன. அவர்கள் யாருடைய முகங்களிலும் அண்மை இல்லை. கிள்ளி தன்னைக் கூர்ந்து நோக்கும் மாந்தனைப் பற்றி அறியாமல் அவனுடன் வந்த கூட்டத்தின் எண்ணத்தை அறியாமல் அவர்களுக்கு வேண்டியதை நிறைவேற்றத் தனது மாந்தர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தான்.

அந்தக் கூட்டத்தில் தலைவனைப்போலிருந்தவன் கிள்ளியையே கவனித்துக் கொண்டிருந்தான். தனக்கு இணையாக உடன் நின்ற இருவரிடமும் கண்களால் கிள்ளியைக் காட்டிக் கேட்டான். அவர்கள் ஆமெனத் தலையசைத்தனர். அந்தத் தலைவன் பெருந்தேற்றனின் முகம் இறுகத் தொடங்கியது.

4 துலைத் திங்கள் பதினைந்தாம் திகதி

ஆரலுக்கு நடப்பதெல்லாம் கனவுபோலவே இருந்தது. ஆழிக்குட்டையில் குதித்துக் கரை தெரிந்த பக்கம் நீந்திக் கொண்டிருந்தார்கள். ஆழியின் நீரில் கதிரவள் ஊடுருவித் தனக்குக் கீழே ஓடிக்கொண்டிருக்கும் மீன்கள் மஞ்சள் நிறத்தில் தகதகவென மின்னின.

தன் வாழ்நாளில் இப்படியொரு நேர்ச்சி அமைந்ததே இல்லை. எல்லாம் இந்தக் குறும்பு பிடித்த உருவனால் வந்த வினை. அவனால் கூட வந்ததென்று சொல்ல முடியாது. தனது குறும்பை அவனுக்கும் கடத்தியதால் வந்த விளைவு என நினைத்துக்கொண்டாள் ஆரல். அவளே மீன்களோடு ஒரு மீனைப்போல உருமாறியதாக நினைத்துக்கொண்டாள். நீந்தியபடியே தலையை மேலே நீட்டி பார்த்தாள்.

கழுகுகள் ஏதும் பறக்கவில்லை. சுற்றிலும் கொட்டிக் கொண்டிருக்கும் அருவிகளில் தெறிக்கும் மீன்களைக் கவ்வியபடி நாரைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பறந்துகொண்டிருந்தன. ஒரு நீண்ட தக்கையின் மீது இரண்டு நாரைகள் அமர்ந்திருந்தன. அந்தத் தக்கை மிதந்தபடி நகர்ந்துகொண்டிருந்தது. தனக்கு முன்னால் நீந்திய உருவன் சட்டென நீந்துவதை நிறுத்தி அமைதியாக நிற்க, அப்பொழுதுதான் புரிந்துகொண்டாள். நாரைகள் நிற்பது முதலையின் முதுகில் என.

கரையில் முதலைகளை எதிர்கொள்வது எளிது. நீரில் முதலைகளை எதிர்கொள்வது கடினம் என்பதை அவளது அனுபவங்களே அவளுக்குச் சொல்லின. ஆரலைப்போல ஒரு மடங்கு பெரியதாக இருந்தது முதலை. முதலைகள் தனித்திருக்காது. குறைந்தது அது சிறு கூட்டமாக ஏழெட்டாவது ஒன்றாகத் திரியும்.

ஆரலின் மனம் இடைவிடாது சிந்தித்தது. முதலைகளைக் கடந்து எப்படிக் கரையை அடைவது. எருமைக் கொம்பில் பால் பீய்ச்சுவதற்கு ஒப்பானது. மரணத் தீவில் தொடங்கியப் போராட்டம் தன் சொந்தங்களை நோக்கித் திரும்புமா. தன்னைப்போல முன்னர் வந்த தனது மூத்தோர்கள் காணாமல்போன வரிசைக்கு நாம் திரும்பப் போகிறோமோ எனப் பலவாறாக மனம் குடைந்து கொண்டிருந்தது.

நீரின் அடித்தரைக்குப் பாய்ந்தாள். வெண் மணலால் ஆன தரை. தரை வரை கதிரவளின் ஒளிக் கீற்று மாயங்களைச் செய்து கொண்டிருந்தது. பவளப்பாறைகள் இடம் வலமாகக் கிழிந்து குச்சி குச்சிகளாகக் கிளைத்துப் பூத்துக்கிடந்தன. ஏராளமான பெயரற்ற வண்ண மீன்கள் கதிரினொளியில் மின்னி நெளிந்து கொண்டிருந்தன.

பாறையின் இடையே அரை மணலில் புதைந்து கிடந்த அந்தப் பொருளைப் பார்த்தாள். அவளால் நம்ப முடியவில்லை. மாந்த நடமாட்டமற்ற இந்தத் தீவுக் கூட்டத்தில் எப்படி கல் ஈட்டி..? அது கல் ஈட்டிதானா? அல்லது ஏதேனும் இறந்த உயிரின் எலும்புகளா? பிடித்து இழுத்தாள். மண்ணைக் கிளர்ந்து புகையை பரப்பியபடி அவளது கையோடு வந்த அது, கல் ஈட்டிதான்!

அவளது மனதில் புதிய உருவங்கள் முளைத்தன. அப்படியானால் நம்மைச் சுற்றி மாந்தர்களும் இருக்க வேண்டும். ஆதி காலம் தொட்டு இதுவரை நமது முன்னோர்கள் தீர்மானித்த ஆய்வுக் கூடங்களிலும் செய்திகளிலும் ஒரு பொழுதும் விலங்குகள் கருவிகளை உருவாக்கியதில்லை.

அவளது கண்கள் கல் ஈட்டியின் நீளத்தை அளந்தன. அரையாள் உயரமிருந்தது. கல் ஈட்டி நன்றாகச் செதுக்கப்பட்டு முனை அணுவின் துளியளவு கூர்மையாக்கப்பட்டிருந்தது.

ஆரல் உருவன் மூலமாகப் புதிய ஒன்றை அல்லது ஆதியிலிருந்த தொன்மையைக் காணப்போகும் ஆவலைப் பெருக்கினாள்.

முதலைக் கூட்டத்தை எதிர்கொள்ளும் மன வலிமையைப் பெற கல் ஈட்டியை நிலை நிறுத்தித் தன் கால்களை மண்ணிலிருந்து தூக்கி நீருக்குள் நின்று கொற்றவையைத் தேடினாள்.

கண் மூடிய அவளைச் சுற்றிப் பாதுகாப்பாக உருவன் சுழன்றது. அவள் மனத்தேயத்தின் கடைசி நுனி வரை ஊடுருவி உறுதிப் படுத்தினாள்.

“கொத்தவ, நீதான் எல்லாம். நீ எப்படியிருப்பன்னு யாரோட நினைவிலயும் இல்ல. ஆனா, ஒவ்வொருத்தருக்கும் அவங்க பாக்குற வடிவத்துல வந்து நிப்ப. நம்மோட முன்னோர்களப் பாக்கப்போறேன்னு மனசு சொல்லுது. நீ தொணையா இரு தாயே!”

அவளின் மூளை நரம்புகள் கிளர்வதை அவளால் உணர முடிந்தது. தன் கண்களுக்குள் அந்த உருவமற்ற பேருருவம் மெல்லியப் புன்னகையுடன் தன்னையே உறுத்துப் பார்ப்பதையும் அவளால் உணர

முடிந்தது. சட்டென உருவன் அவளைத் தனது தலையால் முட்டித் தள்ளினான்.

கண் முழித்த ஆரலுக்கு எதிரே நான்கடி தள்ளி இரண்டு முதலைகள் வந்துவிட்டிருந்தன. உருவன் வேகமாக ஒரு முதலையின் அருகில் போக, எல்லாம் கணநேரம்தான்.

மிக வேகமாகச் செயல்பட்டாள். கூரிய முட்களைப் போன்ற பாறையொன்றை வலது கையில் எடுத்தாள். இடது கையிலிருந்த கல் ஈட்டியை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, காலை மண்ணுக்குள் வைத்து உந்தி தண்ணீருக்குள் உள்ளிருந்து எம்பினாள். தண்ணீருக்கு மேல் எம்பினாள். எதிரிலிருந்த இரு முதலைகளையும் பார்த்தாள். நேரடியாக முகத்தின் அருகே ஒரு முதலை தனது கொட்டைக் கண்களால் உறுத்துப் பார்த்தது அவளை. அது முதலையே எதிர் பார்க்காத தருணம். சட்டென அதே வேகத்தில் நீருக்குள் முங்கினாள்.

உருவன் ஒரு முதலையை நெருங்கவும், ஒரு முதலையின் தலையை நோக்கி வேகமாகப் பாய்ந்து சட்டென தலைக்குக் கீழாகச் சுணங்கி வெள்ளேறென பாலம்போலக் கிடந்த முதலையின் தசையில் கல் ஈட்டியால் குத்தி விறுவிறுவென எட்டடி வரை கிழித்துக்கொண்டு பாய்ந்தாள். அடி சதை வெள்ளை வெளெறென மென்மையாக இருந்தது.

பொலபொலவென உடல் கிழிந்து உள்ளிருந்து இரத்தமும் சதையுமாக வெளிர் பச்சை நீரைச் சிவப்பாக்கியபடி முதலை துடித்துக்கொண்டு வாலை வேகமாகச் சுழற்றியபடி ஓடியது. அதனால் வலியைத் தாங்க முடியவில்லைபோலும். தண்ணீரே ஒரு ஆனை குதித்தால் மேலெலும்பும் அளவுக்குக் கொதித்துப் பொங்கும் தண்ணீரிலிருந்து தலையை வானை நோக்கி நீட்டிக் கதறியபடி தனது உடலைப் பிரட்டிப்பிரட்டிப் போட்டுக்கொண்டும் வாளால் நீரை அலசிக்கொண்டும் அலைந்தது. உடல் துவண்டு ஆழியில் தலைகீழாக மிதந்தது.

தண்ணீருக்குள் திடீரென ஏற்பட்ட குருதியால் உண்டான குழப்பத்தில் இரண்டாவது முதலை உருவன் பக்கமிருந்து தடுமாறி ஆரல் பக்கம் திரும்பியது. தனது இணையைக் கதறவிட்ட ஆரலை வன்மத்தோடு வேகமாக நெருங்கியது. அதன் கூரிய பற்களில் மாட்டினால் துண்டு எலும்புகள்கூட மிஞ்சப் போவதில்லை. உருவனைத் தாண்டி தனது வாலைச் சுழற்றி ஆரலின் உடலை இறுக்க முயன்றது. செதில் செதிலாக

முட்களைப் போலிருந்த அதன் வாலில் உடலின் சிறு தோல் மாட்டினால்கூட இரண்டாகக் கிழிந்துவிடும்.

தனது கையிலிருந்த பாறையால் சுழன்று வரும் வாலைத் தடுத்தாள். வாலில் முட்களைப் போன்ற பாறை கீறியதும் வாலை சரெக்கென இழுத்துக்கொண்டு தனது தலையை அவளை நோக்கித் திருப்பியது. முரப்பான தலையில் பற்கள் ஒவ்வொன்றும் கால் அடி நீளத்தில் உதட்டுத் தோலைப் பிதுக்கிக்கொண்டு வெளியே நீண்டிருந்தன.

வசமான மாட்டல். உருவன் தன் பக்கம் கவனத்தைத் திருப்ப எவ்வளவோ முயன்றது. ஆனால் எதுவும் பலிக்கவில்லை. உறுதியாகவும் வேகமாகவும் முன்னேறித் தலையை நோக்கி வந்தது. ஆரலின் தலையோ, தப்பினால் கழுத்தோ மாட்டிவிடும் என்கிற நிலை.

வானத்தின் ஒரு மூலையிலிருந்து பாய்ந்து வந்த கூர்மையான அம்பு முதலையின் மேல் தாடையைத் தைத்தது. தைத்த வேகத்தில் கீழ்த் தாடையிலும் குத்தி இரண்டையும் இணைத்தது. முதலையின் மேல் தோலை எளிதில் தைத்துவிட முடியாது. அதற்கெனத் தனியாகவே உருவாக்கப்பட்ட அம்புகளாக இருக்க வேண்டும். ஒளியைவிடச் சொனப்பான கூர்மைகொண்ட கல் முனைகள் அம்பின் நுனியில் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். முதலையால் இந்தத் திடீர்த் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. அதற்குள் மேலும் மேலும் அம்புகள் முதலையின் வாயைப் பதம் பார்த்தன. ஏற்கெனவே பாறை முட்கள் கிழித்ததில் வாலில் இருந்த வலி தலைக்கும் தாவியது. இந்த நேரத்தைப் பயன்படுத்திய ஆரல் கையிலிருந்த கல் ஈட்டியால் முதுகும் வயிறும் இணையும் சதைப் பகுதியைக் கிழித்தாள்.

தூக்கத்தில் முனகுவதைப்போல தூரத்திலிருந்து “ஓகோ...ஓகோ... ஓகோ...” எனக் குரல்கள் கேட்டன. அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. பல்லாயிரம் ஆண்டுகளாக வானம் மட்டுமே கூரையாக கிடந்தக் ஆழிப் பரப்பெங்கும் தேடிக்கொண்டிருக்கும் தொப்புள் கொடி உறவுகள்.

கொற்றவைத் தாயின் காலத்திலோ அல்லது அதற்குப் பின்பாகவோ ஒன்றோடு கலந்திருந்த தாய்களும், தாய்மாமன்களும் வெடித்த நிலத்தில் துண்டாகித் தொடர்பறுந்துபோன உயிர்களின் வழித் தோன்றல்கள்.

முகங்களைக் காண்பதற்குள் குட்டையை நோக்கிப் பறந்து வந்து கொண்டிருந்தன அம்பு மழைகள்.

ஆரல் முதலில் தான் யார் எனத் தெரியாமல் தன்னையும் தாக்குகிறார்கள் என நினைத்தாள். உருவனை நோக்கி மிகுதியான அம்புகள் வந்து விழ, தன் மீது விழும் அம்புகளில் இருந்து காத்துக் கொள்ளப் போராடிக்கொண்டிருந்தது.

முதுகின் மீது எவ்வளவு அம்புகள் பாய்ந்தாலும் அதனால் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் வரும் அம்புகளால் தலையைத் தூக்கிக்கூடப் பார்க்க முடியாமல் பெரும் அவதியால் துடித்தது. உடலைத் திருப்ப எவ்வளவோ முயன்று தோற்றது. தலையை உள்ளிழுத்ததும், கால்களும் உடம்பிற்குள் சேர்ந்துகொள்ள, தண்ணீருக்குள் நகரமுடியாமல் உடல் தரையை நோக்கி இறந்த உடலைப்போலச் சென்றுகொண்டிருந்தது. ஆரல் இதையும் கவனித்தாள். பாறை போன்ற உறுதியான ஓடுகளைக் கொண்டிருந்ததால் அதையும் முதலையாகக் கணித்து அடிக்கிறார்கள் என்பது புரிந்ததும் உருவனிடம் சென்று அதன் தலைப் பகுதிக்குச் சென்றாள்.

ஓட்டிற்குள் கண்கள் விரிய குறுத்துக் கிடந்த உருவனைக் கண்ணோடு நோக்கினாள். உருவன் தன் தலையை மெல்ல வெளியே நீட்ட அதைத் தடவிக்கொடுத்தாள். உருவன் தனது நாக்கை வெளியே நீட்டி அவளது கையைச் சப்பித் தனது அன்பை வெளிப்படுத்தியது. சட்டென உருவன் மீது ஏறினாள். உருவன் நீந்தத் துவங்க, ஆரலையும் உருவனையும் சுற்றிலும் மாலைகளாக அம்புகள் பாய்ந்து வந்தன. அவள் கரையேறும் வரையிலும் முதலைக் கூட்டங்கள் தாக்காமல் இருக்கத் தொடர் அம்புகள் மூலம் காப்பரண் அமைக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டாள்.

அதற்குள் காடெங்கும் குலவையொலி கேட்கக்கேட்க, வனத்திலிருந்து கோடிக்கணக்கான பறவைகளும் அந்த ஓசைக்கு அமர்ந்த கிளைகளில் இருந்து விருட்டெனப் பறந்து, தனது வருகையைக் கொண்டாடியதாக நினைத்துக்கொண்டாள்.

காட்டின் தலைவன் இளநாகனுக்குச் செய்தி தெரிந்து அவனும் தனது பரிவாரங்களுடன் ஆழிக் கரைக்கு வந்து நின்று வரவேற்கக் காத்திருந்தான். ஆரலும் உருவனும் கரையை அடைந்தபோது ஓராயிரத்திற்கு மேற்பட்டோர் கரையில் குழுமினர். கரையோரம் பெருத்துக் கிடந்த முதலைக் கூட்டங்கள் மாந்தர்களின் பெருந்திரளைக் கண்டதும் தண்ணீருக்குள் முங்கி வேற்றிடம் நோக்கிப் பாறைக் கூட்டங்களாக நகர்ந்தன.

“என் நாகநாடு உன்னை அழைக்குது...”

தலை வணங்கி இளநாகனின் வரவேற்பை ஏற்றாள். ஆரலை வரவேற்றவன்தான் இந்நிலத்தின் தாய்மாமனாக இருக்கும் என்று எண்ணிக்கொண்டாள். வந்திருந்த பெருந்திரளான கூட்டத்தில் ஆண்களும் பெண்களும் நிறைந்திருந்தனர். அவர்களில் ஒருவர்கூட தன்னுடைய உயரத்திற்கு இணையாக இல்லை என்பதைக் கவனத்தில் கொண்டாள். கூட்டத்தில் தனித்துத் தெரிந்த இளநாகன் அவளது தோளுக்குத்தான் நின்றான். எல்லாருடைய உருவத்திலும்கூட மாறுதல் இருந்தது. முகம் தட்டையாக மூக்குத் தட்டையாக கண்கள் சிறிதாக இருந்தன. அவர்கள் பெரும்பாலானோரின் உடலில் நாகத்தை வரைந்திருந்தார்கள். மஞ்சள் நிறத்திற்கு அவர்களின் உடல் தாவியிருந்தது.

“வணக்கம்... தாய்மாமனே! என்னோட பேரு ஆரல்நங்கை. நான் ஏழ் குறும்பனையின் தொறமுகப் பட்டினம் பொன்பரப்பியைச் சேர்ந்தவ. மாந்தர்கள் பிளவுபட்ட நிலத்துல உடைஞ்சி ஒதுங்கி வாழ வாய்ப்புண்டுன்னு பல நூறு ஆண்டுகளா எங்க மூத்தவங்க சொல்லிக்கிட்டே இருக்காங்க. அதனால வயித்துக்குத் தேடினது போக எங்க கெனா, எங்க ஆதி சொந்தங்களத் தேடுறதா இருந்தது. பல பேர் தேடிக்கிட்டே இருந்தாங்க. யாராலயும் செய்ய முடியாத இந்த நினப்பை என் உருவன் நிறைவேத்தி வச்சிருக்கான். அவனாலதான் இந்தப் பயணம். மூனு திகதி பயணப்பட்டு மரணத் தீவு வந்தேன். அங்கிருந்த கழுகுக் கூட்டத்திடமிருந்து தப்பி ஆழிக்குட்டைக்குள் குதித்தேன். என்னை முதலை கூட்டத்திடமிருந்து காத்தமைக்கு நன்றி!”

“நொம்ப மகிழ்ச்சி! அந்தத் தீவுல எவ்ளோ மரமிருக்கோ, அவ்ளோ சுனைகளும் இருக்கு. அதனால அங்க தீப்புடிக்க வாய்ப்பே இல்ல. இது வரைக்கும் தீப்புடிச்சி நாங்க பாத்ததுமில்ல. அந்தத் தீவுக்கும் எங்காளுங்க யாரும் போறதில்ல. கழுகுக் கூட்டத்தோட தனி இடமாவே அது மாறிப் போச்சு..இங்க பாம்பு அதிகம்.. அங்க கழுகுக மட்டும்தான் வாழுது. அதனால திடீர்ன்னு தீப்புடிச்சதுமே எனக்குத் தகவல் வந்தது. எங்காளுங்க அந்தத் தீவ கவனிச்சிக்கிட்டேதானிருந்தாங்க. நீங்க கடல்ல குதிச்சது தெரிஞ்சதும் ஆச்சர்யாமாயிருந்துச்சு. உடனே நான் கிளம்பி வந்தேன். இந்த இடத்துத் தலைவன் நான். இளநாகன். எனது காவலர்களிடம் முதலைக் கூட்டத்திடமிருந்து உன்னைக் காக்கப் பணித்தேன். எல்லாமே நல்லா முடிஞ்சது. நீ வந்திருக்குறது

நாகநாட்டிற்கு. நீ வந்தது எங்களுக்குக் கொள்ள மகிழ்ச்சி. வா... நம்ம இடத்துக்குப் போகலாம். அங்க வச்சி மத்ததப் பேசிக்கலாம்...”

பறையடித்துக் கொம்பூதி, குலவையிட்டு, பாடல் பாடி ஆடி அவளையும் உருவனையும் அழைத்துப் போயினர்.

அவர்களின் பேச்சுமொழிக்கும், ஆரலின் பேச்சுமொழிக்குமே வேறுபாடு இருந்தது. அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனித்தும் அவர்களின் உடல்மொழியின் வழியாகவுமே ஓரளவுப் புரிந்து கொண்டாள். அவர்களுக்கும் அப்படித்தானிருந்தது. அவர்கள் அறுபத்தியெட்டு நாடுகளில் பார்க்க முடியாத முரட்டு உடல் கட்டுகளைக் கொண்டிருந்ததை ஆரல் கவனித்தாள். வேட்டைதான் வாழ்க்கையாகவிருந்தது.

ஆரல் எல்லாரையும் அணைத்துக் கொஞ்ச நினைத்தாள். ஆனால் இளநாகனின் பார்வைக்குக் கட்டுப்பட்டதைப் போல ஒதுங்கியே நின்றார்கள். இளநாகனின் பார்வையில் கனிவு தெரிந்த பிறகே அவளிடம் ஓடி வந்தார்கள். பெண்கள் கூட்டம் தங்களது கைகளால் அவளை அந்தரத்தில் தூக்கி நடு வானத்தில் மிதப்பது போல ஆடிப் பாடினார்கள். உருவன் அதை அண்ணாந்து பார்த்து பூரிப்பில் துள்ளிக் குதித்தது. ஒத்திசைந்து ஒரே தாள ஆட்டத்தில் தூக்கிச் சென்றனர்.

காட்டின் ஒவ்வொரு மரத்தையும் இருபது பேர் கைக்கோர்த்து அனணத்தாலும் கொள்ளாத பெரு மரங்களாகக் கருங்காலி, நாவல், ஆலமரங்கள் நிறைந்திருந்தன. அவளது பார்வையிலிருந்து ஏதோ ஒரு விலங்கு மரத்தின் இலைகளில் மறைந்து நகர்ந்தபடி பார்ப்பதை உற்றுக் கவனித்தாள். இலெமூர்கள்தான் என்பதை அடையாளம் கண்டாள். வழியெங்கும் மலைபோல எலும்புக்கூடுகள் குவிந்து கிடந்தன. அகண்ட மலைக்குள் நுழையும் முன்பாக அவளைக் கீழிறக்கி உடல் முழுவதும் மஞ்சள் வண்ணப் பிசினை ஒரு கொப்பரையில் இருந்து குழைத்து ஆரலின் மீது தடவினார்கள்.

“எதுக்கு இது..?”

“காடு முழுக்க நாகந்தான். செந்நாகமும் கட்டு விரியனும் பறக்கும் நாகமும் அதிகம். இது பச்சில எண்ணெய். தடவினா அண்டாது.”

அவர்கள் சொல்லியதுபோலவே கண்ணில் திரும்பும் இடத்தில் எல்லாம் ஏதாவது ஒரு நாகம் மாட்டிவிடுகிறது. மரங்களில் அதன் கிளைகளில் காட்டுக்கொடியைப்போல ஆலமர விழுதுகளோடு விழுதுகளாகப் பாம்புகள் தொங்கிக்கொண்டிருந்தன. சில நாகங்கள்

ஏதோ ஒரு நெடுஞ்சாலையை மரங்களுக்கு இடையில் குறுக்கு மறுக்காகப் போட்டது மாதிரி படுத்துக்கிடந்தன. பல நாகங்கள் குட்டி மரத்தின் உடல் பருமனைக்கொண்டும் அய்ம்பது முழங்களைத் தாண்டியும் இருந்தன. ஒரு நாகம் சிறிய பாறையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டிருந்த்துபோலிருக்கவும் கூர்ந்து பார்த்தாள். அது தன் தலையை விரித்துப் படமெடுத்து நின்று கொண்டிருப்பதைப் புரிந்துகொண்டாள். அவளை அறியாமல் உள்ளுக்குள் பேரச்சம் நரம்புகளில் பாவியது. உடன் வந்த மாந்தரி அவளது கைகளை இறுக்கப் பற்றி கண்களால் அச்சப்படத் தேவையில்லை எனத் தெரிவித்தாள். ஆரல் இயல்புக்கு வந்தாள் .

காடுகளின் உள்ளே இரண்டு பக்கங்களிலும் பெரும் பாறைகளால் ஆன குன்றுகள் வரவேற்றன. இரண்டு குன்றுகளுக்கு இடையே நன்னீர் ஓடையொன்று ஓடிக்கொண்டிருந்தது. ஓடையின் கரையில் அவளை அழைத்துப் போனார்கள். பாறைகளை ஆங்காங்கே குடைந்து வீடுகளைப் போன்று தோற்றம் காணப்பட்டது. பாறை வீடுகளில் இருந்து இறங்க மர ஏணிகளை உருவாக்கியிருந்தார்கள். ஓடைத் தடத்தில் நடந்து உள்ளே கொஞ்சம் இருள் அப்பியிருந்த இடத்திற்கு அழைத்துப் போனார்கள். வெளிச்சத்திலிருந்து இருளுக்குக் கண்கள் பழக எடுத்த கால் நொடியில் பாறைக் குகையில் இருக்கிறோம் என அவள் புரிந்துகொண்டாள்.

குகையே ஒரு தனித்த நகரம்போலிருந்தது. குகைக்குள் பாறைகளை உடைத்து அழகாகச் செதுக்கி வீடுகளைப்போல அமைத்திருந்தார்கள். ஒவ்வொரு குடிலிலும் இருபது பேர் தாராளமாகத் தங்கலாம். நீண்ட நெடிய பாறைகளால் ஆன குகையின் நடுவே பெருந் தடாகம் ஒன்று தனது தண்ணீரை அங்கிருந்த தீப்பந்த ஒளியில் சுருள்சுருளாக மிதக்கவிட்டிருந்தது.

முதுவர்களிடமிருந்து கற்ற ஆய்வின் தொடர்ச்சி கொஞ்சம் மிச்சமிருந்தது. பாறைகளில் அவர்கள் வரைந்து வைத்திருந்த ஓவியங்களிலும் புடைப்புச் சிற்பங்களிலும் மூதாதையர்கள் அழிந்த கதையை உருவாக்கியிருந்தார்கள். நிலம் ஒன்றாக இருந்ததையும் மாந்தர்கள் வாழ்ந்ததையும் குறியிட்டு ஒரு பெரும் படமும், உலகம் துண்டாகப் பிளந்து பெரும் நிலங்கள் உள்ளே போனதையும் ஆழி பெருவெள்ளம்போல சூழ்ந்ததையும் குறித்த தெளிவான விளக்கப் படங்கள். இறுதியாக ஒரு புடைப்புச் சிற்பத்தில் மாந்தர்கள் மேற்கு நோக்கிக் காத்திருப்பதைப் போன்ற சிற்பத்தைக் கண்டதும் கலங்கிவிட்டாள். அறுபத்தியெட்டு நாடுகளிலும் முதுவர்கள் இறுதிக்

காலத்தில் கிழக்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் மேற்குத் திசை நோக்கியும் தங்களது உயிரைப் போக்கிக்கொள்ளக் கல் பதுக்கையில் அடைவதற்கும் மேற்கு நோக்கிய புடைப்புச் சிற்பத்திற்குமான இணைப்பைப் புரிந்துகொண்டிருந்தாள். அவளது கண்களில் துளிர்த்த நீரைக் கண்டதும் அனைவரும் கலங்கினர். அனைவருக்கும் ஒரே வகையான உணர்வு மேலிட உறைந்து நின்றார்கள்.

பாறைக் குகையின் உள்ளே ஒரு மேடான தளம்போன்ற பகுதியில் ஒரு மாந்த உருவம் நின்ற வாக்கில் செதுக்கப்பட்டிருந்தது. அதற்குக்கையில்லை. தலையில்லை. ஒரு தூண்தான் என்றே சொல்லலாம். அந்தத் தூணின் முன்பாகக் குருதி காய்ந்தும் காயாமலும் பரவிக் கிடந்தது.

உயிரோடு பிடிக்கப்படும் அனைத்து உயிர்களையும் கொற்றவைக்குப் பலியிட்டு வேண்டுகிறார்கள். வேட்டையில் உயிர் போகும் தறுவாயிலுள்ள விலங்குகளுக்கு அங்கேயே மிருகச் சாணம் கொண்டு கொற்றவை உருவம் பிடித்து விலங்குகளை உயிர் போகச் செய்யும் மரபை முன்னொரு காலத்தின் நினைவாகக் கொடுத்தார்கள்.

கொற்றவைதான் காலத்தின்முன் மூளியாகி நிற்கிறாள். அவளுக்குக் கீழே இரு பாம்புகள் முறுக்கிக்கொண்டிருப்பதைப் போன்ற கல் சிற்பமொன்றுமிருந்தது. பாம்புகளையும் வணங்குகிறார்கள் என்பது புரிய அவளுக்கு நேரமாகவில்லை.

மேட்டுப் பகுதியின் ஓரத்தில் பாறையிலேயே பலகைகள் செதுக்கப்பட்டிருந்தன. நல்லவை கெட்டவை அனத்தையும் அமர்ந்து விவாதிக்கும் பொதுவிடமாக இருந்தது.

பொதுவிடத்தின் முன்பு ஒரு கல்லிருக்கை. அதில் ஆரல் அமர்ந்ததும், சுற்றியிருந்த பெருங் கூட்டத்தின் குலவையால் அப்பாறை நகரம் அதிர்ந்தது.

இளநாகன் ஆரலிடம் விவரமாகக் கேட்டான். ஆரல் எல்லாருக்கும் கேட்கும் விதமாக நடந்ததை உரத்துச் சொன்னாள். முழுதாக அவர்கள் புரிந்துகொள்ளத் தனது கைகளால் உணர்த்திக் காட்டவும் செய்தாள்.

“இந்தக் கணத்தில் நான் உங்களையெல்லாம் பார்த்ததில் எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. நான் கொற்றவைத் தாயின் பல கோடி மகள்களில் ஒருவள். எனது முன்னோர்கள் அதாவது உங்களது முன்னோர்கள் நம் யாவருக்கும் முன்னோர்கள் வனத்தில் வாழ்ந்திருந்த

பல்லாயிரக்கணக்கான உயிர்களோடு வாழ்ந்தார்கள். அவர்கள் மிருகங்களைத் தின்றும் தாவரங்களை உண்டும் வாழ்ந்தார்கள். கற்களால் கருவிகள் செய்து தங்களைக் காத்துக்கொண்டார்கள். இந்த உலகம் பரந்து விரிந்திருக்கிறது. நாம் வாழும் இந்த நிலம்தான் மாந்தர்கள் வாழ்வதற்கு ஏற்ற நிலமாக உருக்கொண்டதாக என் முன்னோர்கள் சொன்னார்கள். நம் முன்னோர்கள் வாழ்ந்த எல்லாவற்றையும் வரைந்தும் அதைப்பாதுகாத்து வருவதை ஓர் இலக்காக நமது தலைமுறைக்குக் கடத்தினார்கள். அதனால்தான் அவர்களால் சில நூறாயிரம் ஆண்டுகளுக்கு நடந்த இயற்கைகச் சுழற்சிப் பேரழிவிலிருந்து தப்பித்தார்கள். அதை எதிர் கொண்டார்கள். பல்லாயிரம் கோடி மாந்தர்கள் புதைந்து அமிழ்ந்து போனாலும் எல்லாருக்கும் கடத்தப்பட்ட அறிவின் தொடர்ச்சியால் நாம் இன்றும் போராடுகிறோம். இயற்கையென்னும் தாயிடம் போராடி நாம் வாழ்கிறோம். தாயிடமிருந்து உணர்ந்துகொள்ள எவ்வளவோ நமக்குக் கொடையாகக் கொடுத்திருக்கிறாள். அதிலிருந்து நமது முன்னோர்கள் அறத்தை வகுத்தார்கள். அறம் பிறழ்ந்தவர்களை இயற்கைத் தாய் பார்த்துக்கொள்வாள் என நகர்த்திவிட்டார்கள். இன்று எங்களது கூட்டம் வெகுவாகப் பல புதிய விடியல்களைக் கண்டிருக்கிறது. கொற்றவையின் அருளோடு அனைத்தையும் வசப்படுத்தும் உத்திகளைக் கைவரப் பெற்றிருக்கிறோம். வானியல் அறிவு, கலையறிவு, மொழியறிவு... எனப் புதிய அத்தியாயங்களை உருவாக்கியிருக்கிறோம். அச்சீற்றம் நிகழ்ந்த பின்பு காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக விடுபட்ட தப்பிப் பிழைத்த மாந்தக் கூட்டத்தைக் காண முடியும் என மாந்தர்கள் நினைத்து அதையொட்டியே காலம்காலமாகக் கடற்பயணம் மேற்கொள்கிறோம். எம் அறிவர்களை, மூத்தவர்களைக் கண்டுவிட மாட்டோமா என ஏங்கித் தேடித்தேடி ஆழிப் பெரும் பயணத்தில் நம் முன்னோர்கள் ஏராளமாகத் தொலைந்துபோன கண்ணீர்க் கதைகள் பல நூறுண்டு. நான் வந்த மரணத்தீவில் தப்பிப் பிழைத்திருந்தால் உங்களை எப்பொழுதோ கண்டிருப்போம். காலம் யாருக்கு எதைக் கொடுக்கிறதோ, கொற்றவை என்ன நினைத்து இந்த உருவனின் முதுகில் என்னை ஏற்றினாளோ தெரியவில்லை. ஆனால், அவள் நாம் இணைய ஒரு பெரு வாய்ப்பை வழங்கி இருக்கிறாள். யாராலும் வந்து திரும்பாத பாதையில் பயணித்திருக்கிறேன். உங்களைக் கண்டடைந்திருக்கிறேன். வரும் திங்களில் நடக்க இருக்கும் கொற்றவை வெறியாட்டு விழாவில் நீங்கள்தான் பேசுபொருள், பாடுபொருள் எல்லாம். நம் உறவுகளைக் காண நீங்களும் கண்டிப்பாக குமரிக்கோட்டிற்கு வாருங்கள். எங்களது

அறுபத்தியெட்டு நாட்டுத் தலைமைத் தாய்களின் சார்பாக உங்களை அழைப்பதில் பெருமிதம் கொள்கிறேன்!''

''உன்னோட அன்புக்கு நன்றி. உன்னோட அழைப்பிற்கும் நன்றி. நாங்கள் தப்பிப் பிழைத்த கதைகள இங்கிருந்த நம் முன்னோர்கள் ஓரளவு எங்களுக்குப் பதிவு செஞ்சி வச்சிருக்கிறாங்க. ஆனால், அவர்களால் முழுமையா செய்ய முடியாத அளவிற்குத் துண்டாடப்பட்ட நெலத்திலிருந்து போராடுறதே பெரும் பாடா இருந்ததாக எங்களுக்குச் சொல்லி இருக்கிறார்கள். அக்காலத்தில் மண் பிளந்து புகுந்தது போக, நூற்றி இருபதுக்கு மேற்பட்ட நாடுகள் இருந்திருக்கு. ஆனா எதுவுமே செய்ய முடியாத நில. இழந்த பொறவு எழுவதற்கு வாய்ப்பில்லாமல் நடைபிணமாக இழந்த மாந்தர்களை நினைத்தே பலர் பல்லாயிரம் மக்கள் அழிந்திருக்கிறார்கள். பின் கொஞ்சம் கொஞ்சமாகத் தடம் எடுத்து இன்று உங்கள் முன்னால் இப்பெரும் நாகர் கூட்டம் நிற்கிறது. இன்னும் பல காத தொலைவுகளில் திரள் திரளாக மாந்தர்கள் கூட்டம் இருக்கிறது. அவர்கள் தனித் தனியாகத் தங்களைத் தற்காத்துக்கொண்டு இன்று ஒவ்வொருவருக்கும் புதிய வாழ்வியல்கள் அமைந்திருக்கின்றன. நல்லா விரிவா தொடர்ந்து இனிமே வர்ற காலத்தில விவாதிப்போம். நாங்களும் கொற்றவை வெறியாட்டு விழாவுல கலந்துக்க ஆர்வமாக இருக்குறோம். எங்களது முன்னோர்கள பார்க்கக் காத்துக் கிடக்குறோம்.''

இளநாகன் ஒரு பெருங் குழுவின் தலைவனாக நின்று பேசிய அனைத்தும் ஆரலைக் கிளர்ச்சியூட்டின. இளநாகனும் ஆரலும் பேசிய பேச்சுகள் உடல் வழியே அப்பேச்சின் சாரம்சத்தை அவர்கள் கொடுத்ததை எல்லாம் நாகர்கள் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். எல்லாமும் அவர்களுக்கும் புரிந்தது.

''நிச்சயமா. என்னால முடியும். எங்க மூத்தவர்கள் கிட்ட சொல்லி, ஆயிரம் திழில எடுத்துட்டு வரேன். எல்லாரும் தயாரா இருங்க.''

கிட்டத்தட்ட மூன்று நாள் பயணத்தில் எதுவுமே உண்ணாமல் இருந்தவளுக்கு நெருப்பில் வதக்கிய வஞ்சிர மீன் கறி அவ்வளவு அற்புதமாக இருந்தது. தன் முன்னால் கூடியிருக்கும் மாந்தர்களோடு ஆடினாள். மூங்கில் மரக்குடுவையில் அவர்கள் பிடித்து வைத்திருந்த விதவிதமான நாகங்களோடு விளையாண்டாள். தான் சந்திக்காத மாந்தர்கள் தன் மீது காட்டுகிற அன்பில் சொக்கிப் போனாள்.

விடிய விடிய தீப்பந்தங்களைக் கொண்டு குகையை அலங்கரித்தார்கள். விடிய விடிய கதைகளைப் பேசினார்கள். கேட்ட

எல்லாருக்கும் தனக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்லிக் கொண்டே தூங்கிப் போனாள் ஆரல்.

நூறாயிரத்திற்கும் மேற்பட்டோர் நாகநாட்டின் மலைத் தொடர்களில் வசிப்பதை அறிந்துகொண்டாள். கொடிய மிருகங்களிடம் போராடி வாழ்வதே பெரும் போராட்டமாக இருப்பதையும் முன்னோர்களில் இருந்த சில அறிவர்களின் முயற்சியால் மரபையும் அறிவியலையும் காத்து வருவதாகவும் இளநாகன் சொன்னான்.

இளநாகன்தான் அங்கே தலைவன். மாந்தரிகளுக்கும் பொறுப்பு ஒதுக்கப்பட்டிருந்தது. மாந்தரிகளை வேட்டைக்குப் பயன்படுத்தாமல் முடக்கியிருந்தனர். பாறை வீடுகளை அமைப்பது. வேட்டை உணவுகளைச் சமைத்துப் பகிர்ந்தளிப்பது. குழந்தைகளைப் பெற்றெடுப்பது என்பனவே மாந்தரிகள் பணியாக இருந்தது. மாந்தரிகள் மாந்தர்களைவிடக் குறைவான உயரமுடையவர்களாக இருந்தனர். அந்தக் கூட்டத்திலேயே மிக உயரமான மாந்தரி என்றால் ஆரல்தான். இவை எல்லாமும் அவளுக்குப் புதிய ஒன்றாக இருந்தது.

“எங்க நாட்டில எல்லாம் மாந்தரிக முன்னாடி நின்னு செய்வாவோ... இங்க எல்லாமே மாறிக் கெடக்குதே!”

“இங்கயும் அப்படித்தானிருந்துச்சு. பல காலமான போராட்டம் அது. பல தலமுறையா பெரியவுக சொன்னதச் சொல்றென். ஒரு பெரிய கல்லு ஏதோ வானத்துல இருந்து வுழுந்துச்சாம். கடலு திடீர்னு பொங்கி வந்துச்சாம். ஒரே இடத்துல இருந்த எல்லாரும் மூழ்கிப் போனாங்களாம். கண்ணு மின்னாடியே பூமி பொளந்து கோடி கோடியா மக்க உள்ள மண்ணுக்குள்ள போச்சாம். மிதந்து கிடந்தவங்க. மிஞ்சின நெலத்துல தேங்குனவங்கன்னு நாங்க ஒதுங்கினமாம். அதுக்கப்புறம் எல்லாமே மாறிப் போச்சு. இங்க எதுவுமே இல்ல. ஒரு பக்கம் நெருப்புக் குளம்பு மண்ணுக்குள்ள இருந்து பொளந்து கொட்டிக்கிட்டே இருந்துச்சாம். அப்ப நாகம்தான் அதிகம் பெருத்துச்சாம். மக்களக் காக்கப் பெரிய போராட்டமா இருந்துச்சாம். குழந்தைகள தின்னுப்புடுமாம் நாகங்க. குழந்தைகளக் காக்க மாந்தரிக போராட, நாங்க வேட்டையாடிக் கொடுக்க, அப்படியே பழகி பழகி, நாங்க வேட்டையப் பாத்துக்குறோம். மாந்தரிக வீட்ட பாத்துக்குங்க. பிரிவினைலாம் இல்ல.”

பல ஆயிரம் ஆண்டுக் கதைகளை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்வது என்பது கடத்துவது. ஒரு மாந்தன் வாழ்நாளில் தங்களது கதைகளை ஆயிரம் முறையாவது கேட்டிருக்கக் கூடும். அவன் ஆயிரம்

முறையாவது மற்றவருக்குச் சொல்லியிருக்க வேண்டும் என்பது ஓர் இயல்பாக இருந்தது. வரலாற்றை மறந்தால் வாழ்வதன் அர்த்தம் ஏதுமில்லை. மீண்டும் ஆதி விலங்கு நிலைக்கே போக எந்த மாந்தனும் தயாராக இல்லாதபோது வரலாற்றை மானுடத்திற்கு விட்டுச் செல்வதை ஒரு கடமையாகக் கொள்கிறான்.

“நான் இதைப் பிரிவினையா சொல்லல. எங்க பக்கம் மாந்தரிக உயரமா இருப்பாங்க. மாந்தர்கள் கொஞ்சம் குள்ளமா இருப்பாங்க. ஏன் தெரியுமா..?”

“தெரிஞ்சுக்குறோம்.. சொல்லுங்க!”

“மாந்தர்களத் தவிர எல்லா மிருகமும் கலவிக்கு அப்புறம் பெண் மிருகத்த விட்டுட்டு போயிடும்... ஒரு சில மிருகம்தான் பெண்ணோட இருக்கும். பெரும்பாலும் பெண் மிருகம்தான் கருவை சொமந்து குட்டிகளைப் பெத்துக்குது. ஆண் மிருகத்தோட தேவை முடிஞ்சதும் அது தன்னோட வேலையப் பார்க்குது. மாந்த இனத்திலயும் அப்படித்தான். கொஞ்சம் கொஞ்சமா அறிவுக் கண் திறக்க ஆரம்பிச்சதும் மாந்தங்க குடும்ப முறைய நேசிச்சாங்க. ஆனா தாய்தான் முதல்லங்கறதாலயும் ஆணைவிடப் பெண் வலிமையாவும் இருக்குறதால தாயக் கொண்டு எல்லாம் அமைஞ்சது. அதனால அங்க தாய்கள் உயரமா இருக்காங்க. தன் துணையத் தேடும் மாந்தரிகளும் அதே மாதிரி பாத்துக்குறாங்க. அறிவுபெற்ற மாந்த இனத்தின் சிந்தனைத் தூரம்தான் இதுக்கெல்லாம் அடிப்படை!’

“புரியுது... ஆனா இங்க அப்படி வழக்கமில்ல. ஆண்கள் வேட்டையாடவும், பெண்கள் குழந்தைங்க வளர்க்கிறத பாத்துக்கிறதாலயும் இப்படியே பழகிடுச்சு. ஆண்கள் உயரமாவும், பெண்கள் உயரம் கம்மியாவும் இருக்குறதுக்குக் காரணம் தெரியல. எல்லா விலங்கும் ஆண் உயரமாதான் இருந்திருக்கு. அதான் இயற்கை!”

“இயற்கையின் படைப்புல நாமதான் பேசுறோம். கத்துக்குறோம். உருவாக்குறோம். அப்படியிருக்கும்போது விலங்குல இருந்து மாந்தர்கள் மாறுபட வேண்டியிருக்கலாம். எனக்கும் இதைப் பத்தித் தெரியல.”

ஆரல் ஒருவாறாகப் புரிந்துகொண்டாள். தன் நாட்டிலிருக்கும் முறைமைகளை, ஆய்வுகளை, நிலத்தில் உழுது பயிரிடும் முறையை, மொழி உருவான விதத்தை, கணிய முயற்சிகளை என எல்லாவற்றையும் சொன்னாள். இரண்டு நாள்கள் தங்கினாள். கூட்டம் கூட்டமாக வந்து பார்த்து அவளை அணைத்துக் கொண்டார்கள்.

நாகநாடே அவளைப் பற்றித்தான் பேச்சாக இருந்தது. அவளைத் தேடிக் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துப் பேசி வியந்துகொண்டே இருந்தார்கள். உயர்ந்த சிகரங்களுக்கு அழைத்துப் போனார்கள். தூரத்திலிருந்த தீவுக் கூட்டங்களைக் காட்டினார்கள். பளிங்கு கல் கோளம் கொண்டு தூரப் பார்க்கும் ஒளிப் பெருக்கியில் பல காத தூரம் இருக்கும் இடங்களைக் காட்டினார்கள்.

ஆடைகளுக்கு நாகத் தோல்களையும் பதப்படுத்தி அணிந்திருந்தனர். இளநாகன் அவளுக்கும் உடைமாற்றிக் கொள்ள கருநிறப் பொட்டுகளும், வெண் பொட்டுகளும், பூத்திருந்த ஆடைகளைக் கொடுத்தான்.

ஆரல் இளநாகனைக் கண்டதிலிருந்தே அவன் மீது வசப் பட்டிருந்தாள். பல ஆண்டுகளாக அவளது கனவில் உறவாடியவனாக அவன் தோன்றினான். அவனது சொற்கள் கெட்டித்திருந்தது. மொழி குழைவாகி இசை நயத்துடன் வளர்ந்திருந்த இடத்திலிருந்து வந்தவளுக்கு அதைப் புரிந்துகொள்ளக் கூடுதல் நேரம் தேவைப்பட்டது. அவனது மொழியுச்சரிப்பைப் புரிந்துகொள்வதற்காக அவனையே உற்றுப் பார்த்தவள் சொற்களோடு அவனையும் சேர்த்து உள்ளுக்குள் பூட்டிக்கொண்டாள்.

இரண்டு நாளிலும் அவன் கூடவே இருந்தாள். அவள் கண்களில் தென்பட்ட காதலை அவனும்கூடப் புரிந்து கொண்டான். இளவயதில் நாகநாட்டிற்கு அவன் பொறுப்பேற்கப் பல காரணங்கள் இருந்தன.

நாகநாட்டின் தென் கிழக்கில் ஆழிகளைத் தாண்டி ஒரு நாடிருந்தது. அங்கும் மாந்தர்கள் இருந்தார்கள். எல்லாரும் கடல் கொண்டதால் பிரிந்து கிளைத்தவர்கள்தான் என்றாலும் அவர்கள் இருப்பதையே சில நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் நாகநாட்டினர் கண்டுகொண்டிருந்தனர். அவர்கள் முழு அடர் கருப்பில் முடியெல்லாம் சுருண்டு நாகர்களைவிட உயரமாக இருந்தனர். அவர்கள் வாழ்ந்த பகுதி ஆரப்பர் நாடு என்று அழைத்தார்கள்.

நாகநாட்டிற்கும் ஆரப்ப நாட்டிற்கும் எப்படியோ ஆதியிலிருந்து முரண் முளைத்துக் கூராகி பெருஞ்சண்டைகளே நடந்தன. இளநாகனின் தந்தை பொறுப்பிலிருந்தபோது பல நூறு தோணிகளில் நாகர்களை ஏற்றிக்கொண்டு ஆரப்பர் நாட்டிற்கு படையெடுத்துச் சென்றார். கருப்பர்களிடம் பலத்த அடிவாங்கினர் நாகநாட்டினர். இளநாகனின்

தந்தையின் தலையை வெட்டி அவர்களின் தெய்வத்திற்குப் படையலிட்டனர் ஆரப்ப நாட்டினர்.

தந்தையை இழந்த இளநாகன் பல நாள்கள் காத்திருந்து திட்டமிட்டு ஈராயிரம் தோணிகளில் பத்தாயிரம் வீரர்களைக் கொண்டு கருப்பர்களிடம் சண்டையிட்டு வென்றான். மண்டியிட்ட கருப்பர் தலைவனை நெஞ்சோடு அணைத்தான்.

“நாம் ஆதி முன்னோடிகளின் ஒரே கூட்டம். நிலம் பிரிந்திருந்தாலும் வழக்கு மாறி இருந்தாலும் நாம் ஒரே தாய் மக்கள். நமக்குள்ள சண்ட வேணாம். நாம ஒன்னா நிப்போம்.”

இளநாகனின் முதிர்ச்சியான பேச்சால் இரண்டு இனமாக சண்டையிட்டுக் கொண்டிருந்த அவர்கள் ஓரினமானார்கள். அதிலிருந்து நாகநாட்டிற்கு அவனே தலைவனானான். அவன் மீது மாந்தர்கள் அளவு கடந்து மதிப்பூட்டினார்கள்.

எல்லாக் கதைகளையும் கேட்டு இன்னும் மகிழ்ந்தாள். இன்னும் மாந்தர் கூட்டம் பல இடங்களில் தப்பிப் பிழைத்திருப்பது அவளின் மனதைக் குளிரச் செய்தது.

ஆரல் இரவு தங்க கற்குகை ஒதுக்கப்பட்டது. ஒரு நாளில் இளநாகனின் மீது சொக்கிய உணர்வு அவளைத் தூங்கவே விடவில்லை. அத்தனை அலுப்பையும் உடல் வைத்திருந்து அவளைத் தூக்கத்திற்குத் தூக்கிக்கொண்டுபோக, அதிலும் இளநாகனே நிறைந்துகொண்டான்.

வனம் முழுக்கச் சுற்றினாள். எல்லா இடங்களைப் பற்றியும் விரிவாக அறிந்துகொண்டாள். ஆரப்பர் நாட்டிற்கும் போக வேண்டும் என்கிற ஆவல் அவளிடமிருந்தாலும் அண்ணன் திருக்கையனை நினைத்துத் தன் முடிவை மாற்றிக்கொண்டாள். எப்போது வேண்டுமானாலும் வர முடியும் என்கிற நம்பிக்கை ஆரலிடமிருந்தது. அதோடு இளநாகனைத் திரும்பப் பார்க்கவும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்த நினைத்தாள்.

அவர்கள் வைத்திருந்த வத்தை நீண்ட தூரக் கடற் பயணங்களுக்குப் பயன்படாது என அறிந்தாள். தீவு வட்டத்திலேயே மீன் பிடிப்பதால் அவர்களுக்கும் தேவைப்படாமல் இருந்தது. ஆரலின் வருகை அவர்களுக்கு புதிய நம்பிக்கையைத் தந்தது.

ஆரல் விரிவான வரைபடத்தை வரைந்தாள். திசைப் போக்குகளைக் கணிக்க ஆமைகள்தான் அளவுகள் என்று சுட்டிக்

காட்டினாள். தான் சென்று மீண்டும் ஐந்து நாள்களில் திரும்பி வந்து கொற்றவை வெறியாட்டு நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக அழைத்துச் சிறப்புச் செய்வேன் என வாக்களித்தாள். மொத்த மாந்தக் கூட்டமும் உருவனையும் ஆரலையும் வழி அனுப்பி வைத்தது.

அவர்களது முப்பது தோணிகளில் ஆள்கள் ஏறிக்கொண்டார்கள். நடுவாக இளநாகனின் தோணியில் ஆரலும் உருவனும் வந்தார்கள். ஆரலால் அவனிடம் நேரடியாகச் சொல்லவும் முடியவில்லை. அவனைப் பிரியவும் மனமில்லை. அவனது கைகள் அவளது விரைத்த உடலில் பட்டாலே நெகிழ்ந்து இளகித் துரும்பானதைப் போலுணர்ந்தாள். அவன் அருகிலேயே நின்றுகொண்டிருந்தாலும் அவனைத் தனக்குள் வைத்திருப்பதாகக் கற்பிதம் செய்தாள். அவனும் வாய் திறந்து அவள் எதிர்பார்த்த வார்த்தைகளைச் சொல்லவில்லை. ஆனால், இருந்ததுபோலிருந்தது.

ஆழிக் குட்டையில் முதலைக் கூட்டங்களை விரட்டியபடி அழைத்துப் போனார்கள். குட்டையாக இருந்த ஆழி இரண்டு மலைகளைப் பிளந்தபடி ஊடுருவிப் பேராழியாக மாறியது.

உருவன் இரண்டு நாளில் எல்லாச் சோர்வும் நீங்கி உறுதியாக இருந்தான். பேராழியின் முன் தோணிக் கூட்டம் வந்து நின்றது. ஆரலுக்குத் தங்களிடமிருந்த ஏராளமான பொருள்களை, உடைகளை பரிசாக அவள் எடுத்துப் போக நாகர்கள் முயன்றனர். உருவனின் முதுகில் பயணிப்பதால் எதையும் எடுத்துப் போக முடியாது என மறுத்து அடுத்த முறை திமிலோடு வரும்போது பெற்றுக்கொள்வதாக உறுதியளித்தாள். இளநாகன் கொடுத்த நாகமணி மட்டும் அவளது கழுத்தில் ஒளி அள்ளி வீசியது.

அவள் இளநாகனைக் கூர்ந்து பார்த்தாள். பிரிவின் துயர் அவனது கண்களில் வடிந்ததை உணர்ந்தாள்.

“நான் கிளம்பட்டுமா?”

அவளது கைகளைப் பிடித்தான். இழுத்தான். அவன் இழுக்கும் முன்பாகவே அவனை மார்போடு தழுவினாள். அவ்வளவு பேர் இருந்தும் இது வழக்கமான நடைமுறை அணைப்பாக இல்லாத ஒன்று என்பது அனைவருக்கும் ஊகிக்கக் கூடியதாக இருந்தது தெரிந்தும் அணைத்துக்கொண்டாள். அவளது புடைத்த முலைகள் தகித்து அடங்கின. அந்தக் கணத்தில் ஆழ்ந்த இளநாகன் மெல்லத் தன்னை விடுவித்துக்கொண்டு சொன்னான்.

“உனக்குத் தோணுறது எனக்கும் தோணுது. அத காலம் முடிவு பண்ணட்டும். என்னத் தேடி நீ திரும்பி வந்தா. அத உறுதியா பேசலாம். இல்லாட்டியும் இந்த அணைப்புலயே ஓட்டிடுவேன்!”

“கண்டிப்பா வருவேன்... உம் மனசுல என்ன இருக்குன்னு தெரிஞ்சாலும் நீ பேசட்டும்னுதான் இருந்தேன். போற நேரத்துல எல்லாத்தையும் சொல்லிட முடியல. ஆனா ஒன்னெ ஒன்னு சொல்றென். நெனப்ப இங்க விட்டுட்டு ஒடம்ப எடுத்துட்டு போறென்!”

அந்த வார்த்தைக்குப் பிறகு அவள் அவனிடம் எதுவும் பேசவில்லை.

உருவனோடு ஆழியில் குதித்தாள் ஆரல். உருவனின் கழுத்துக் கவணைப் பிடித்து அவனது முதுகில் கால் தடம் போன்ற தடுப்பில் நின்றபடி நாகர்களை நோக்கிக் கையாட்டினாள். நாகர்களும் கையாட்டினார்கள். இளநாகன் முகத்தை அழுந்த ஒருமுறை பார்த்தாள்.

உருவன் நீரில் பறந்துகொண்டிருந்தான்!

5 துலைத் திங்கள் இருபத்து ஒன்பதாம் திகதி

செம்பன் எந்தப் பகுதியில் நிற்கிறான் எனத் தெரியவில்லை. மழை தனது தாளத்தை அதிகரிக்கத் தொடங்கியது. மரங்களின் தழைகள் மத்தளம்போல மேகம் கொட்டும் நீரை வாங்கி ஓசையைப் பெருக்கிக்கொண்டிருந்தன. வாஞ்சியின் கையில் விழுந்த நீர்க் கட்டிகள் எலும்பு வரை பாய்ந்து வலியேற்படுத்தியது. நீர்ப் பெருக்கைத் தாங்கி பல ஆயிரம் ஆண்டுகளாக குமரி நிலத்திலிருக்கும் ஆலமரத்தின் முதன்மைத்

தண்டை நோக்கி மரத்திலிருந்து மரம் தாவினாள். பரந்து கிடக்கும் அதன் விழுமரத்தின் நுனி விழுதொன்றைப் பற்றி சரசரவென மேலேறினாள்.

அலங்கு அவள் போகும் திசையறிந்து தானிருந்த மரத்தின் ஊடாகவே மரக் கிளைகளுக்குள் கடந்து முன்னோக்கி மூத்த வேர் மரத்தை நோக்கி ஓடியது. அலங்குவின் பாய்ச்சல் அவ்வளவு உவப்பானதாக இல்லை. நீர் தரைச் செடிகளை, குமரிச்செடிகளையே மூழ்கடிக்குமளவு பெருகியது. மீறிச் சென்று மூத்த மரத்தின் அடித் தண்டில் குகைபோல இருந்த அகண்ட பொந்துக்குள் ஓடியது. பொந்துக்குள் மழை பெருக்கிய எந்த நீரின் அறிகுறியும் இல்லை. குளிரும் இல்லை. சுற்றிலும் மழை பொழிந்தபோதும் குகை இளஞ்சூட்டைத் தக்க வைத்திருந்தது. உள்ளே நடமாட்டமிருந்தது. ஏற்கெனவே பொந்துக்குள் செந்நாய்க் கூட்டமொன்று பதுங்கி வெடவெடத்துக் கிடந்தது. சில செந்நாய்கள் மரத்தின் உள்புறமாகவே மேலேறிக்கொண்டிருந்தன.

புதிய மிருகமான அலங்கை கண்டதும் செந்நாய்கள் ஒன்றாகக் கூடின. கடும் சண்டைக்கான சூழல். செவளையால் இத்தனை செந்நாய்களைச் சமாளிக்க முடியாது. ஆனாலும் தானும் மரக் குகையின் ஒரு பாகத்தில் நின்று வாலை விறைத்துத் தயாரானது. மேலிருந்து விழுதுகளில் தாவித்தாவி பறந்து வந்த இருவாஞ்சி கத்தினாள்.

“டேய்... செவளை மேலே ஏறு!”

பசியைவிட உயிர் மீட்டலே தேவையாக இருந்தபடியால் செந்நாய்கள் சட்டென இருவாஞ்சியின் குரலுக்குக் கட்டுப்பட்டு தாவியேறும் செவளையை விட்டுவிட்டுத் தனது பாதுகாப்புக்காக ஆங்காங்கே பதுங்கின. சில மேலேறவும் செய்தன.

இருவாஞ்சி சடசடவென ஆலமரத்தின் தலைப் பகுதியை நோக்கி ஏறிக்கொண்டிருந்தாள். கீழே நீர் புரண்டு ஓடியது. சிறு மரங்கள் பெயர்ந்து ஓடின. ஓர் ஆளின் முட்டி வரை வளர்ந்திருந்த செந்நாய்களும் கரடிகளும் நீரின் வேகத்தில் அடித்துச் செல்லப் பட்டன.

ஆல மரத்தின் நடுப்பகுதிக்கு வந்திருந்தாள். அவ்விடத்தில் ஒரே நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுத்து உறங்கலாம். அவ்வளவு அகலமாக மரம் பரந்திருந்தது. மழை, சாரல் நிலைக்கு மாறி அமைதிக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. கொஞ்சம் நிதானித்துத் தன்னை நிலைப்படுத்திக்கொண்டாள். அவளின் உடலருகே எந்த

அசைவுமில்லாமல் ஏதோ ஒன்று இருப்பதை மனம் கணித்தது. தனது இடுப்பில் வைத்திருந்த கல் கூர்வாளை எடுக்கக் கையைக் கொண்டுபோன கணத்தில் அவளுக்குப் புரிந்தது.

இலெமூர்கள். இலைக்குள் அடைந்திருக்கின்றன என்று உணர்ந்தாள். இவ்வளவு தூரம் மேலேறி வந்திருக்கிறோம். அவை கண்ணில் படாமல் இலை தழைகளில் எப்படி மறைந்தன என்று ஆச்சர்யமாக இருந்தது. அவற்றைப் படித்தது போதுமானதில்லை எனத் தன்னையே ஒரு முறை இடிந்துகொண்டாள். ஆழ்ந்து கவனித்தபோது பத்துக்கு மேலானவை என ஊகித்தாள். ஆல் இலைக் கொத்தொன்றை நகர்த்தினாள்.

அசப்பில் மாந்தக் குழந்தைபோலவேயிருந்தது. மூக்குத் தட்டையாகச் செங்கருப்பில் முகம், அரை மாந்தனாக அரை மந்தியின் எச்சமாக இருந்தது. சடையாக உடம்பில் முடிகள். கைக் கூப்பி வணங்கினாள். மழையின் குளிரில் அதன் நீள் கரங்கள் நடுங்கின. கனிவாக இலெமூர் அவளைப் பார்த்தது. கண்ணால் அவளது வணக்கத்தை ஏற்றுக்கொண்டது. இடுப்பில் வைத்திருந்த கூர்வாளுக்கு அருகே இருந்த மூங்கில் குழலைக் கையிலெடுத்தாள். சுற்றிலும் ஒருமுறை பார்த்தாள். செம்பன் தென்படவில்லை. மூங்கில் குழலை வாயில் வைத்து ஊதினாள். சாரலை மீறிக் காற்றில் ஊதலின் மொழி போய்ச் சேர்ந்தது. எதிரே பதினெட்டுப் பாகத் தூரத்தில் செம்மரத்தின் கிளையிலிருந்த செம்பனின் குழலும் பேசியது.

தாய்மாமன் கடுமான் கிள்ளி தலைமையில் வேட்டைக்குக் கிளம்பியது ஏழ் குறும்பனையின் தலைநகரத்திலிருந்து ஒரு பிரிவு. மாதத்தில் மும்முறை வேட்டை. வேட்டை என்பது குடிகளின் தூய மரபு. நகரம் மூன்று தலைமையின் கீழ் இயங்கியது. முக்கோன நகரத்தில் ஒவ்வொரு பக்க அணைப்பிற்கும் ஒரு தாய். முக்கோண வலைப் பின்னல் ஒவ்வொரு பக்கத்திலும் பரந்து விரிந்திருக்கும். விரிந்த பகுதியிலிருந்து கொற்றவை அரங்கம் நோக்கி நெருங்கி வரும் நகர நுணுக்கம் உடையது. ஒவ்வொரு தாயின் இணைத் தலைமை என்பது தாயின் மூத்த அண்ணனோ அல்லது தம்பியோதான். இது திட்டமிட்ட நெறி. இந்த வழக்கம் என்பது இந்தச் சட்ட நெறி என்பது தொடர்ச்சியாக மூத்தவர்களைப் பற்றி வருவது. தாய்க்கு வேட்டைக்கான நிலையில்லாமல் போனால் அவளுக்கு அடுத்தவள் வேட்டைக்கு வருவாள். அவளும் வரவில்லையென்றால் அடுத்தவள் வருவாள். அஞ்சாவண்ணி தனது மூத்த மகளின் மூன்றாவது குழந்தைக்காகப் பேறு காலத்திலிருந்தாள்.

வேட்டையும் வேளாண்மையும், காதலும் காமமும், மேன்மையுற்று வளர்ந்த காலங்கள் அவை.

வனம் ஒரு முடிவுறாத தீப்போல அவர்களிடம் படர்ந்துகொண்டே இருந்தது. பஃற்றூளியாறு இரு மலைகள் முத்தமிட்டுக் கொண்ட இடத்திலிருந்து பேரருவியாக வீழ்ந்து நதியாக நிலத்தில் புரண்டோடியது. நதியில் அவ்வப்போது காட்டாறுகள் திடும்மென முளைத்துக் காடறுத்துப் பாறைத் தோலுரித்து மரங்களின் தழையறுத்து மண்ணின் மணம் நிறைத்து வந்து வீழும்.

பஃற்றூளியில் அப்படி வந்து விழும் காட்டாறுகளுக்குக் கணக்கு வழக்கு வைக்க முடியாது. திடும் திடுமெனப் புதிய தடங்களை உருவாக்கிப் புரண்டு வரும். ஆனாலும் அறிவர்கள் கணக்கெடுத்தபடியே இருப்பர். அது ஒரு சேகரிப்பு. எதிர்காலத் தலைமுறைக்குப் பயன்படும் வண்ணம் அவற்றை எருமைத் தோலைப் பதப்படுத்தி அதில் அழியாச் சாறுகளால் வரைந்து நிலவறையில் வைத்திருப்பர்.

ஒவ்வொரு நாட்டிலும் இது ஒரு வழக்கம். புதியவற்றைத் தேடுவதும், பழையவற்றைப் பதப்படுத்தியும் வைப்பது நீண்ட காலமாக ஒரு செயலாகவே இருக்கிறது. உணவுத் தேவையும், குடில் அமைப்பதிலும் பாட்டும் கூத்தும் பொங்கிப் புரளும் நேரங்கள் போக அவர்களுக்கு எப்பொழுதும் மீதமிருந்தன நேரங்கள். அந்த நேரங்களை வகுத்துத் திட்டமிட்டுப் புதியவை தேடியும், பழைமையைப் புடம் போடுவதுமான அக்கறையோடே அவர்களது நாள்கள் கழிந்தன. அதனாலேயே அவர்கள் கடந்து வந்தவற்றைத் தலைமுறைகளுக்குச் சொல்லிச் செல்பவர்களாகவும் இருக்கின்றனர்.

பஃற்றூளி ஆற்றின் கரையில் கடுமான் கிள்ளியோடு நிலமளக்கும் அறிவர் குழுவும் இணைந்து நெடும் பயணம் மேற்கொண்டது. மக்களுக்கான புதிய வசிப்பிடங்கள் தேடி அலைந்தார்கள். வனம் அருகே இருக்க வேண்டும். வனத்தின் நிலம் அரைக் குன்றுபோலச் சாய்ந்த வாக்கில் இருக்க வேண்டும். பெரிய மரங்கள் குறைந்ததாக இருக்க வேண்டும். நதி முகமாக இருக்க வேண்டும். வேளாண்மை செய்ய ஏதுவான நிலமாகவும் இருக்கவேண்டும் என்பதே அவர்களது சிந்தையாகவிருந்தது.

அவர்களுடன் இருவாஞ்சியும், சின்னம்மையின் மகள் பூம்பாலையும் சென்றார்கள். பூம்பாலையுடன் இருவாஞ்சி இருந்தால் அந்த இடமே கலகலப்பாக இருக்கும். ஏட்டிக்கு ஏடி இருவரும் செய்யும் பகடியில் சுற்றி இருப்போர் வந்த வேலையைக் கூட மறந்து விடுவர்.

அப்படிப் பேசிச் சிரித்து விளையாண்டபடி நிலத் தேடலுக்காகச் சென்றபொழுதுதான் முதன் முதலாகச் செம்பனைக் கண்டாள் இருவாஞ்சி.

ஏழ் குறும்பனையில் பல ஆண்களின் பார்வை தன் மீது களித்திருந்தாலும் இருவாஞ்சியின் மனம் யார் மீதும் படரவில்லை. அவள் தனித்திருந்தாள். தனது அகமெங்கும் நீண்டு கிடக்கும் காதலுக்கான விழியைக் காணாது குழைந்திருந்தாள்.

செம்பனும் நிலமளக்கும் குழுவில் இருந்தான். எல்லா முகங்களைப்போலவே அது ஒரு மாந்த முகமென்று அவள் நினைத்ததால் அவன் மீது கவனம் குவியவில்லை. ஏழ் குறும்பனையின் கடைசி ஊரான வென்பாவூரில் இரவுத் தங்கல் முடித்து அதிகாலையிலேயே கிளம்பிவிட்டார்கள். முன் பகலில் நதித் தடத்தில் வாகான நிலமொன்றைக் கண்டார்கள். வனம் அவர்களுக்குக் கண்ணெட்டும் தொலைவிலிருந்தது. பஃற்றூளியின் ஒரு கிளை நீண்ட வாக்கில் வந்து முழங்கால் மடக்காக வளைந்து ஒதுங்கிச் சென்றது. நீரின் போக்கைக் கிராமத்திற்குச் செதுக்கித் திருப்பி பின் நீரோட்டத்தோடு இணைக்க வாகான இடமாகப் படர்ந்திருந்தது.

வந்திருந்த அறுபத்து மூவரும் நிலத்தின் திசைக்கொன்றாகப் பிரிந்தார்கள். சிலர் மண்ணைத் தோண்டி எடுத்து மோந்தார்கள். கொண்டு வந்திருந்த சிறு மண் குடுவையில் மண்ணைப் பரிசோதனைக்காக அள்ளிக்கொண்டார்கள்.

கடுமான் கிள்ளி நிலத்தின் நடு மையத்திலிருந்தான். இருவாஞ்சி பூம்பாலையோடு மரம் தேடிப் போனாள். மரங்களும் வீடு கட்ட அருகிலேயே கிடைத்தால் எளிதாகிவிடும். மணம் முடித்த முன்னூற்றுச் சொச்சம் இணையர்களுக்கு முதலில் கட்டிவிட்டு மேலும் மணப்பவர்களையும் இணைத்து புதிய ஊரமைப்பை உருவாக்கலாம் என அஞ்சாவண்ணி சொன்னதை உள் வாங்கியிருந்தாள்.

காற்றின் அசைவிற்கேற்ப வானில் வண்ணம் தீட்டிக் கொண்டிருந்த மரத் தழைகளின் கிளைகளைத் தன் கையாகப் பாவித்து, தானே மரமாகி, தானே கிளையாகி, தானே வானத்தில் வரைவது போன்ற மனத்தூவலைக் கொண்டிருந்தாள் இருவாஞ்சி. மிதமான குளிரும் உடல் நரம்புகளைக் கிளர்த்தத் தன்னை மறந்தாள். அலங்கு தனது இருப்பைத் தாண்டிக் குரைத்ததை அவளது மனம் கவனிக்கவில்லை. அப்பொழுதுதான் அது நடந்தது.

ஆழியின் அலை பெரும் பாறைகளில் மோதி அந்தப் பாறைகளை அடித்துத் துவைத்துத் தூக்கி எறிய முயல்வதுபோல் காட்டின் உள்ளிருந்து திடும்மென பெரும் நீர் சிவந்த நிறத்தில் மரங்களைப் புரட்டிக்கொண்டு காட்டாறாகிப் பாய்ந்தது. அவள் உணரும் முன் எல்லாம் முடிந்துவிட்டது. பஃற்றூளியாற்றில் கிடந்தாள். பஃற்றூளி அரை யோசனைத் தூரத்திற்கு அகண்டு விரிந்து ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றில் பல கிளைக் காட்டாறுகள் இடை இடையே தடம் பிடித்து பஃற்றூளியில் கலந்ததில் ஆறு செம்மண் குழம்புகளால் கொந்தளித்துத் தாவித்தாவி ஓடும் முன் நீரைப் பிடித்துவிட முடியும் எனப் பின்னீரை தள்ளிக்கொண்டிருந்தது. இருவாஞ்சி சுதாரிக்க முயல்வதற்குள் வேகமாக இழுத்துக்கொண்டு சென்றது. ஏதோ ஒரு மரத்தின் கிளைகளைப் பற்றியிருந்தாள். ஆற்றின் வேகத்தில் மரம் சுழன்று சுழன்று தாவித் தாவியோடியது. உறுதியான அவளது கைப் பற்றலை மீறி நதி மரத்திடமிருந்து அவளைப் பிய்த்தெடுத்து ஒரு பாறையில் வீசியது. கணத்தில் சுதாரித்துப் பாறையின் கவட்டையொன்றைப் பற்றினாள். பல்லாயிரம் ஆண்டுகளாக அந்தப் பாறை நீர் மோதி மோதிக் கரைந்து கவட்டையாக மாறியிருந்ததை உணர்ந்தாள். கண்களுக்கு எட்டியவரை யாரும் தென்படவில்லை. பூம்பாலையைக் காணவில்லை. மற்றவர்கள் எங்கே என்று தெரியவில்லை. வனத்தோடு வாழ்ந்து பழகியவர்கள் ஆகையால் இதுபோன்ற பல்வேறு நேரல்களை சந்தித்தவர்கள் தாம் என்பதால் கொஞ்சம் விளைவை நோக்கிச் சிந்தித்தாள்.

எப்பொழுதும் விழித்துக் கிடக்கும் மனம் இயற்கையின் பேரழகில் மயங்கிக் கவனம் பிசகியதை எண்ணி வருந்தினாள். அலங்குக் குட்டி வேகமாகக் குரைத்தபடி அவளைத் தேடி ஓடி வந்ததும்தான் கொஞ்சம் தன்மையானாள்.

“மத்தவங்க எங்கே?”

அலங்கு தனது ஆளைக் கண்ட மகிழ்ச்சியில் தாவி வந்து அவள் அருகே வாலாட்டியது. அவளின் கரத்தை நாவினால் நக்கியது.

“செவளை மாமா எங்க..? பூம்பாலையப் பாத்தியா..? மத்தவங்களுக்கு என்னாச்சு?”

அலங்கு தொலைவைப் பார்த்துக் குறைத்தது. புரிந்துகொண்டு மெல்ல வழுக்கும் பாறையில் தன் கால்களை தட்டையாகப் பதித்துப் பதித்து ஏறிக் கரையொட்டினாள். எழுந்து நிற்க முயன்றாள். உடல் அடி வாங்கிய களைப்பை வெளித் தள்ளியது. மனத்தை இறுக்கி உடலைப்

பாரத்திலிருந்து விடுவித்தாள். வலி குறைந்தது. கண்களால் அப்பொழுதுதான் தீர்க்கமான பார்வையை வெளிப்படுத்த முடிந்தது.

சுற்றிலும் கவனித்தாள். பஃற்றூளி பால் நிறத்தில் நுரைகள் கொதிக்க ஓடிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே காட்டாற்றால் உருவான சிவந்த தண்ணீர் இடையிடையே கலந்து ஆற்றில் சிவந்த திட்டுகள் உருவாகி மறைவதுபோலவும் காட்சிகொண்டிருந்தது.

அலங்குடன் மெல்லக் கரையில் நடந்தபொழுதுதான் கவனித்தாள். நதியின் ஓரத்தில் இரு பாறைகளுக்கு இடையே முட்டி நின்ற கிளையொன்றைப் பற்றியபடி செம்பன் போராடிக் கொண்டிருந்தான். காட்டிற்குள் ஓடினாள். காட்டுக்கொடிகளை வெட்டிப் பிணைந்து எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள். வளையும் மூங்கில் தண்டெடுத்து வில் மூட்டினாள். தண்டில் கூர் தீட்டி அம்பு உருவாக்கி நொடியில் அதில் கொடியைக் கட்டி அவனை நோக்கி எய்தாள்.

அவன் கொடியைப் பிடிக்க மறுபுறம் உறுதியாக நின்று இழுத்தாள். அதற்குள் மற்றவர்களும் அவர்களைத் தேடிக்கொண்டு வந்தார்கள். பலரைப் பெருயாளிகள் காப்பாற்றியதை அறிந்தாள்.

செம்பன் மேலே வந்தான். நிமிர்ந்து அவளை நன்றியோடு நோக்கினான். அவளும் நோக்கினாள். முதன் முதலாக அர்த்தத்தோடு பார்த்தாள். அவனதில் கரைந்தான். அந்த நொடியில் பற்றிக் கொண்ட செந்தீ நிலமளந்து குடிகள் தங்கும் சிறுவிழாக் காலம் கிளைப்பதற்குள் அவர்களுக்குள் விதை முளைத்து நிலை பெருகி பெருங்காதலாகி அவனைக் காணாத பொழுதுகளில் பசலை பெருக வாழ்ந்தாள்.

தனது கனவுகளில் சிம்மம் சிம்மாசனமிட்டு இருந்தாலும் செம்பனுக்காகவே களத்தில் இறங்கினாள். காதல் எக்காலத்திலும் மாயங்களைச் செய்யும் கன்னி.

இருவாஞ்சியின் மனம் அகண்டு சிலிர்த்தது. செம்பன் அருகில்தானிருக்கிறான். மன வழு குறைந்த உணர்வை மீட்ட அவனது பதில் குழல் ஊதல்போதுமானது. காப்புக் கட்டுவதற்குள் வந்து விடுவதாக அஞ்சாவண்ணியிடம் சொல்லியிருந்தாள். இன்னும் இரண்டு நாள்களே இருக்கின்றன. இதைவிடச் சரியான சந்தர்ப்பம் இனி வாய்க்கப் போவதில்லை. திடமானாள்.

மீண்டும் மரமேறினாள். செவளை அவள் நின்ற இடத்திற்குப் பல கிளைகளை ஏறி வந்து நின்றது. இருவாஞ்சி மரத்தின் தலைப் பகுதியை

நெருங்க நெருங்க எண்ணற்ற பறவைகள் அவளை விநோதமாகப் பார்த்தன. பருந்துகள் குளிருக்கு அடங்காமல் சிறகை விரித்து உடலில் போர்த்தின. வாகாக குடிலைப்போலிருந்த மரத்தின் தலைப்பகுதியில் இருந்த தழைக்கூட்டத்தில் நிலைத்து கண்ணோட்டினாள்.

சாரலின் குளிர்ந்த வெப்பத்தை உள்வாங்கியபடி குமரிக் கோட்டின் தலைவியும் தலைவனும் வந்துகொண்டிருந்தார்கள். காட்டின் திடீராற்றல் அவற்றை எதுவும் செய்ய முடியவில்லை. கிட்டத்தட்ட அறுபதுக்கு மேல் தேறும். முன்னால் வந்தவன் மூன்று கிழட்டானைகளை நிமிர்த்தி வைத்த உயரத்தை உடலாகக் கொண்டிருந்தான்.

உடலெங்கும் சடை சடையாக முடிகள் தொங்கின. கால்களில் செதில் செதிலாகத் தோல் கரண்டிருந்தது. காலின் நகங்கள் மாந்தனின் கால் பெரு விரலைப்போலப் பல மடங்கு பருமானாகவும் நகங்கள் விரலளவிற்கு நீண்டு கெட்டித்திருந்தன. அதன் தலை எட்டு எருமை மாடுகளின் தலையை ஒன்றாகப் பொருத்தியதுபோலிருந்தது. தலையில் முழுவதும் மஞ்சள் வண்ண முடிகள் அடர்ந்து தொங்கியது. முதுகெங்கிலும் காடுகளில் அலைந்து திரிந்ததில் நிறம் மாறிய மஞ்சள் முடிகள் வாலைப்போல படர்ந்திருந்தது. தட்டையான முகத்தில் உதடுகள் பிளந்து நீண்டிருந்த வாயின் இரு பக்கமும் பெருந் தந்தங்களைப் போன்ற பற்கள் மேல் தாடையிலும் கீழ் தாடையிலும் நீண்டிருந்தன.

எதிரில் தென்பட்ட பெரு மரத்தை மலைப் பாம்பு பிடித்த மிருகத்தின் உடலைச் சுருட்டுவதுபோல நாக்கை நீட்டி மரத்தை வளைத்துப் பிடித்தது. நீண்ட வாலை விடைத்துத் தலைப் புறமாக நிமிர்த்தியது. கால் உயர்த்தி உடல் நிமிர்த்தி மாந்தரைப்போல எழுந்து நின்று தலையை இடதும் வலதுமாகத் திருப்ப, மரம் வேரோடு வந்தது. மிக எளிதாக எந்த ஆவேசமுமின்றி இயல்பான வழக்கமாக செய்யும் செயலைப்போலவே நடந்துகொண்டது சிம்மயாளி. அதை அப்படியே தூக்கி ஓடும் ஆற்றில் வீசியதைப் பார்த்ததும் ஒரு கணம் நிலைகுலைந்தாள் இருவாஞ்சி.

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு வேர் பிடித்து ஓங்கி உயர்ந்து அகண்டு பெருத்திருந்த அம்மரத்தையே தனது நாவால் பிடுங்கி எறிகிறதென்றால் சிம்மத்தின் வலிமையை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது. அவளது மேனியெங்கும் மயிர்கள் சிலிர்த்து நின்றன. பின்னால் வந்த வயதான ஒரு சிம்மயாளி தனது நீண்ட நாவில் ஆனையாளிக் குட்டியொன்றைச் சுருட்டித் தூக்கிக்கொண்டு வர,

ஆனையாளிக் குட்டியின் ஓலம் காடதிரக் கேட்டது. அதைக் கண்டு கொள்ளாமல் நாக்கைத் தனது பற்களுக்கு இடையே மெல்ல உள்ளிழுக்க, ஆனையாளியின் உடல் சிம்மயாளியின் பற்கள் கடித்ததில் அதன் குடல், வயிற்றிலிருந்து வெளியே விழுந்தது. அதைக் கண்ட இருவாஞ்சியின் கால்கள் வெடவெடத்தன. இவற்றைக் கொல்வதே பெரும்பாடு. உயிரோடு பிடிப்பது. அதைத் தன் வசமாக்குவது நடக்கிற காரியமாகப் படவில்லை. அஞ்சாவண்ணியோ அதற்கு முன்பான தனது மூத்தவர்களோ எப்படிக் கையாண்டிருப்பார்கள் எனக் கிளைந்தாள். ஒரு கணம் தொலைவில் எங்கோ நிற்கும் செம்பனை நினைத்தாள். உருக்கி உருக்கி இறுக்கிய தனது ஆற்றலை நினைத்தாள்.

அவ்வளவுதான். இறப்பு அல்லது தீரம். இரண்டுக்கும் இடையில் வேறொன்றுமில்லை. வெடவெடத்த கால்களுக்கு மூளை அனுப்பிய செய்தியில் நரம்புகள் விறைப்படைந்தன.

மீண்டுமொறு முறை மூங்கில் குழலூதினாள். தயாராகி விட்டதாகச் செய்தியைச் சேர்த்தது. நம்பிக்கைகொள் உடனிருக்கிறேன் எனச் செம்பன் பதிலுக்குக் குழல் ஊதினான். பொதுவாகச் சிம்மயாளிகள் ஒரு சிறு ஒலியையும் கேட்கும் தன்மையுடையது. முன்னூறு காதத்தில் இருக்கும் தன் காதலியின் ஆசை வெப்பத்தை உணரக் கூடியது. இங்கே அவை பிசகக் காரணியம் இருந்தது. கூட்டமாக வந்த இருமாப்பில் இருந்தன. மழையின் பேரிரைச்சலில் காதுகள் மந்தமடைந்திருந்தன. மழை குறைந்தும்கூட அவ்விரைச்சல் ஆளிகளின் காதுகளில் மீதமிருந்தன.

இருவாஞ்சியின் கண்கள் சிம்மயாளிக் கூட்டத்திடமிருந்தது.

புரட்டியெடுத்த காட்டு நீர் ஒரு சிறு ஓடையாக மாறியிருந்தது. ஆல மரத்தினைத் தாண்டி ஆளிப் பெருங் கூட்டம் போக முன்னால் கூட்டத்தின் நடுவில் வாளிப்பான பதிமூன்று திங்களே ஆன இளங்குட்டிகள் ஓர் பேரானை உயரத்தில் நடந்தன. அவை பெரும் குதூகலத்தில் இருந்தன. ஒன்றையொன்று இடித்து முறைத்துத் தடவி, செம்மண் பொங்கிய நீரைப் பீய்ச்சியடித்துத் தனக்கு யாவும் தெரியும் என்பதுபோல இறுமாந்து விளையாடிச் சென்றன.

இருவாஞ்சியின் விழி விரிந்திருந்தது. கூட்டத்தில் பெண்ணாளியை தொட்டுத்தொட்டு நடந்தான் அவன். அவன் முகத்தில் களை தாண்டவமாடியது. இள மஞ்சளில் அவனது திமில் முடிகள் அவனது நடைக்கேற்ப ஆடியது. துருதுருவென இருந்தான். பெண் மிருகங்கள்

எப்பொழுதுமே பொறுப்பானவை. சாதுவைப் போலிருப்பவை. குட்டிகளின் வளர்ச்சிக்காகத் தன்னை இழக்கவும் தயாராக இருப்பவை. ஆனால், பொதுவாகவே ஆண் மிருகங்கள் சோம்பேறிகள். இரையைக்கூடப் பெரும்பாலும் பெண்களே வேட்டையாடித் தந்துவிடும். எல்லா விலங்குகளிலுமே ஆண் ஒய்யாரமாக வாழ்பவை. அதனால் ஆண் மிருகம்தான் அவளது தேர்வாக இருந்தது. மூர்க்கத்தைக் கைக்கொண்டு மடக்கிவிட்டால் பழக்க எளிதாக இருக்கும் .

இருவாஞ்சி அவனைத் தேர்வு செய்தாள். ஆளிகள் நடந்து வர செந்நாய்கள் பயந்து ஒளிந்தன. இலெமூர்கள் மூச்சையடக்கின. பறவைகள் பறக்க மறந்தன. ஆளிகள் நடந்துபோக இருவாஞ்சி மரக் கிளைகளில் பறந்து போனாள். செவளை வெளியே வர முடியாமல் திகைத்து நின்றது.

மலை, காட்டு நீரால் ஒரு பக்கம் வெட்டியதுபோலப் பிளந்து காயம்பட்ட உடலாகச் சிவந்து கிடந்தது. செம்மண் பகுதியைக் கண்டதும் ஆளிகள் வானை நோக்கிப் பிளிறி மகிழ்வை வெளிப்படுத்தின. ஆளியின் நாக்கு அனைத்திற்கும் பயன்படும். மரத்தை முறுக்கவும் மண்ணை அள்ளவும், உணவுக்கு மிருகங்களை பிடித்திழுத்து வாய்க்குள் திணிக்கவும் ஆளிகள் குட்டி ஈனும்போது பின்னாலிருந்து அவற்றை இழுத்துப் போடவும்கூட நாக்கைப் பயன்படுத்துகின்றன எனக் கேள்விப்பட்டதை முதன்முதலாக நேரில் பார்க்கிறாள்.

ஆளிகள் துண்டாகப் பிளந்து கிடந்த மலையின் அடிவாரத்தில் தனது நாக்கைவிட்டு மலைக்குள் கையை விடுவதுபோல விட்டு வெளியே இழுத்து வெப்ப மண்ணைத் தன்னுடலில் தூவத் துவங்கின.

இதுதான் சரியான நேரமென முடிவு செய்தாள் இருவாஞ்சி. நாக்கைத் துருத்தி சீழ்க்கை ஒலி எழுப்பி செவளையை அழைத்தாள். செவளை பாய்ந்து ஓடி வந்தது. பல மரங்களைத் தாண்டி ஆயிரமாண்டு வேம்பில் நிலைத்திருந்தாள். அவள் பார்வையில் நானூறு கையடி தாண்டி ஆளிகள் மலையைப் பெயர்த்துக் கொண்டிருந்தன.

மூத்த ஆளிகள் தனது நீண்ட மூக்கால் முகர்ந்து மலையை நாவால் குடைந்து மண்ணள்ளி வீச, குட்டிகள் வெளியில் நின்று அதில் குளித்தன. செவளை அவளுக்குக் கீழே தயாராக அவளை மேலே பார்த்தது. உடலுக்குப் பின்னால் செருகியிருந்த வில்லெடுத்து நாணேற்றினாள். மரப் பட்டைகளைப் பிளந்த வாக்கில் பொங்கியூற்றும் வேப்பம் பிசினில் மூவம்பைத் தோய்த்தாள். மூன்றையும் நாணிலேற்றி எறிந்தாள். அம்பு

பாய்ந்து போக, ஒரு கணம் தாமதித்துச் செவளையும் பாய்ந்தது. ஆளிக் கூட்டத்தின் பின்பகுதியில் இருவாஞ்சி தேர்வு செய்திருந்த பதிமூன்று திங்கள் வளர்ந்த ஆளிக் குட்டியின் நடு முதுகில் மூவம்பும் ஈரடிக்கு ஒன்றாக அப்பியது. அதன் முடிகளில் வேப்பம் பிசின் இறுகியது.

இருவாஞ்சியின் கணக்குத் தப்பவில்லை. ஆளி தனது வாலைச் சுழற்றித் தன் மீது விழுந்ததைத் துடைக்கப் பார்த்தது. முடியவில்லை. நாக்கால் ஒரு வளைவு ஓட்டியது அம்பைத் தொடவில்லை. வாலும் நாவும் தேய்த்துக்கொள்ள முடியாதெனத் திட்டமிட்டுக் கூர்ந்து கவனித்து குறிவைத்து நடு முதுகைத் தேர்வு செய்தாளோ அங்கேயே மூவம்புகளும் பாய்ந்து தைத்து வேப்பம் பிசினால் கீழே விழாமல் குத்திட்டு நின்றன.

ஆளி மீண்டும் வெறித்தனமாக முயன்று பார்த்தது. தூரத்திலிருந்து பெரிசுகள் வீசிய செம்மண் புழுதியில் சற்றுத் தடுமாறியது. உடம்பில் ஏதோ ஒன்று இருப்பதும் செம்மண் படர்ந்து வீசியதால் கவனிக்க முடியாமலும் இருந்த அந்த நேரம் செவளை ஆளியின் வாலைப் பாய்ந்து கவ்விக் கடித்தது. இளங்குட்டி மூர்க்கமேற்பட ஆவேசமாகத் திரும்பி வாலை வேகமாகச் சுழற்ற, செவளை வாலை வாயிலிருந்து சட்டென விட்டு வேப்பமரத்தை நோக்கி ஓடியது. ஆளி தன்னிலை மறந்து வேகமாக செவளையைக் குறி வைத்துத் திரும்பி ஓடி வர, செவளை உயிர் தப்பினால்போதுமெனப் பாய்ந்தது.

ஆளி மிகுந்த வெறியோடு நாக்கை நீட்டிச் செவளையை இழுக்க முயன்று, கூட்டத்தைவிட்டு வேகமாக வெளியே வந்தது. இருவாஞ்சி மகிழ்ந்தாள். செம்பனின் திட்டம் அதுதான். இளங்குட்டியைத்தான் நமக்கானதாக மாற்ற முடியும். இளங்குட்டிதான் வீரியமாகச் செயல்படுவதாக நினைத்துத் தன்னை அலட்டிக்கொண்டு அங்குமிங்கும் குதித்துத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளத் துடிக்கும்.

அது எப்போதும் உண்டென்றாலும் தாய், குட்டிகள் தனித்துவமாக இயங்கும்வரையும் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொள்ளும் மாந்த இயல்பு ஆளிகளுக்கும் உண்டு. அதே நேரத்தில் கூட்டத்திலிருந்து ஆளி பிரிந்துவிட்டால் மற்ற ஆளிகள் கூட்டத்திற்குள் சேர்க்காது. சேர்க்காத ஆளிதான் நம்மோடு இணங்கும் எனச் செம்பன் சொன்னதைக் கூர்ந்தாள். மடமடவென செயல்பட்டாள்.

ஆளி வேகமாகத் துரத்த, செவளை நான்கு கால்களையும் பதினாறாக்கிப் பாய, செந்நாய்கள் அலறி ஓடத் துவங்கின. காடே அதிர்ந்தது. செம்மண் புழுதியில் முரட்டுச் சிம்மங்கள் தன்னிடமிருந்த

இளங்குட்டியை யாரோ போக்குக் காட்டி அதனை கூட்டத்திலிருந்து வெளியேற்றுகிறார்கள் என்பதைக் கவனிக்காமல் உடல் சூட்டைப் போக்கிக்கொண்டிருந்தன. தாவி வரும் இளங் குட்டியை நோக்கி இடுப்பிலிருந்த கல் வாளைக் கையில் பிடித்தபடி மரத்திலிருந்து தாவி அம்புகள் தைத்த நடுமுதுகில் குதித்தாள். செவளை திரும்பிப் பார்த்தபடியே பதினாறு காலில் பாய்ந்தது.

ஆளியின் கவனம் தன் மீது பாய்ந்து நின்ற இருவாஞ்சியின் மீது திரும்பியது. தனது நாக்கை முழுவதுமாக வெளியே விட்டு உடலின் மேற்பரப்பில் சுழட்டியது. அந்த நேரம் திரும்பிப் பார்த்த செவளை தனது கால்களைப் பரப்பி உடல் சத்தை உள்வாங்கி சுழன்று அதே வேகத்தோடு மீண்டும் திரும்பி வந்தது. அதன் பாய்ச்சல் இப்பொழுதும் வாலை நோக்கியே இருந்தது. வாலை இறுகக் கடிக்க சிம்மம் ஒருபுறம் வாலை சுழற்றிச்சுழற்றிப் பார்க்க, பிடி விடாத செவளை வாலின் சுழற்சிக்கு ஏற்ப அந்தரத்தில் ‘‘வீல்...வீல்’’ எனக் காற்றின் சத்தத்துடன் சுற்றியது. கடித்த பிடியை விடவில்லை.

இருவாஞ்சி, நாக்குச் சுழன்று தன்மேல் வீசும் போதெல்லாம் அந்தரத்தில் மேல் நோக்கி எம்பிக் குதித்துத் தப்பினாள். அவளின் கவனம் முழுக்க, நாக்கில் கத்தியை இறக்குவதிலேயே இருந்தது.

அந்த நேரத்தில் செம்பன் விரைவாக வெளிப்பட்டான். மரங்களுக்கிடையே தாவித் தாவி அம்பெய்தபடி ஓடி வந்தான். ஓர் ஆனையையே ஒரே சுழற்றலில் தூக்கி வீசக் கூடிய ஆளியால் எதுவும் செய்ய முடியவில்லை. மாந்தர்கள் சூழ்ச்சியால் சூழ்வதை அது புரிந்துகொள்ளக் கூடிய நேரத்திற்குள் நாக்கு சுழன்று மேலே வர, உடல் திமிற, இருவாஞ்சி அந்தரத்தில் பறந்தாள். மூச்சை இழுத்துப் பிடித்து உடலைக் காற்றாக்கினாள். மேலேறும் பொழுதே இடுப்பிலிருந்த கலயத்தைத் திறந்து கல் வாளை அதற்குள் நனைத்தாள்.

உடனடியாக மூடியபடியே மிகக் கவனமாக ஆளியின் நுனி நாக்கை நோக்கி அந்தரத்தில் குதித்தாள். குதித்த வேகத்தில் நாக்கில் ஆழம் பொருந்த கல் வாளை இறக்கினாள். ஆழமான குத்து. கல் வாள் நாக்கில் முழுகிப் போயிருந்தது. அதே வேகத்தில் இருவாஞ்சி மூச்சை உள்ளிழுத்து உடலை இலேசாக்கி மேலெழுந்து பறக்க, இரத்தம் பீய்ச்சியடித்தது, ஆளியின் மர நாக்கில். மேலே எழுந்த வேகத்தில் பாய்ந்து மீண்டும் ஆளியின் மீது குதித்தாள். ஆளியின் மயில் கழுத்து போன்ற நீளமான பகுதியில் அடர்ந்திருந்த திமில் முடிகளைக் கொத்தாகப்

பிடித்தாள். மிக வேகமாக நார்க் கயிற்றைச் சுழற்றி வீசினாள். கயிறு சுழன்று கழுத்திற்குக் கீழே சென்று அதன் முனை கழுத்தை வளைத்து மேலே இருந்த அவளிடம் வந்தது. ஆளியின் கழுத்தை வளைத்து கீழே விழுந்து விடாதபடி தன்னோடு இறுக்கிக்கொண்டாள்.

ஆளி அனைத்தையும் மறந்து பிளிறியது. நாக்கை எல்லாப் பக்கமும் சுழற்றியது. கோவமாக வாலை தரையில் அடிக்க, செவளை பேரடி வாங்கித் துள்ளி ஓடியது. செம்பன் மரங்களில் தாவி வந்தபடியே அருகே நெருங்கி தொடரம்பை எய்தான். அந்தத் தொடரம்பால் ஒரு பொழுதும் அதன் தோலைத் துளைக்க முடியாதென அவனுக்குத் தெரியும். சிம்மத்திற்கு தொடர் சினமூட்டுவதே அம்புகளின் நோக்கம்.

எங்கிருந்து தாக்குதல் என்பதே தெரியாமல் குழம்பித் துடித்தது ஆளி. அதனால் ஏற்பட்ட அசட்டு மூர்க்கத்தில் நிலை குலைந்தது. இருவாஞ்சி உடும்புப் பிடியாகக் கழுத்தில் படுத்தபடி கிடந்தாள். ஆளி தாவித் தாவி ஓடியது . ஒவ்வொரு தாவலிலும் அரையாள் உயரக் குமரிச் செடிகள் குலைந்து கூழாக வழிந்தன. குமரிச் செடியின் கூர் முள்களும் குத்தி ஆளியை காயப்படுத்த, ஆளி சமநிலை முழுதாக குழைந்து தன்னிலை மறந்து வெறியோடு தாண்டவமாடியது.

செம்பன் அம்பெய்துகொண்டே மரத்துக்கு மரம் தாவிக் கொண்டிருந்ததைக் கண்ட சிம்மக்குட்டி அவனைத் துரத்தத் தொடங்கி தனது கூட்ட எல்லையைக்கடந்துகொண்டிருந்தது.

ஆளி தனது கூட்டத்திலிருந்து விலகி வெகுதூரம் தாவித்தாவிச் செம்பனைத் துரத்தி வந்தது. அவன் தைத்த அம்புகள் அதன் உடலில் குத்திக்குத்தி உடல் முழுவதும் அம்புகளாகப் படர்ந்திருந்தாலும் அதன் வினையால் அதற்குள் எந்த மாற்றமும் நிகழவில்லை.

இருவாஞ்சி தனது பிடியை விடாமல் ஆளியின் போக்கிற்கேற்ப, ஓட்டத்திற்கு ஏற்ப அதன் உடம்பில் ஒண்டிக்கொண்டாள். கீழே ஒரு பக்கம் செம்பனும் செவளையும் ஆளிக்குப் போக்கு காட்டினார்கள். ஆளியின் மேலிருந்த இருவாஞ்சி ஆளியின் கோபத்தைத் தணிக்க இடைவிடாமல் அதன் திமில் முடிகளை தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். கழுத்திலிருந்து மெல்ல மெல்ல தலைக்குத் வந்தாள்.

தனது முரட்டுப் பற்களால் தலை மீதிருக்கும் இருவாஞ்சியை மடக்கப் பார்த்தது. ஆளியின் தாறுமாறான வேகத்தில் கல் வாளால் நனைக்கப்பட்டு நாக்கில் சொறுகப்பட்ட கரும்போகச் சாறு உள்ளிறங்கி அதன் இரத்த ஓட்டத்தில் தாறுமாறாகப் பரவியது. மயக்க நிலைக்குத்

தள்ளியது. ஆளியின் கண்ணைக் கண் கொண்டு பார்த்தாள். ஆளியின் கண்களில் கெட்டியான திரவம்போலக் கண்ணீர். இருவாஞ்சி அதைத் துடைத்தாள். அதன் தலையில் பெருத்துக் கிடந்த முடிகளை நீவினாள். ஆளியின் வேகம் குலைந்து மெல்லத் தள்ளாடியது. அதன் நாக்கு ஆளியின் மனதிற்குக் கட்டுப்பட மறுத்து வெளியே தளர்ந்து தொங்கியது. அதில் ஆளியின் எச்சில் சுனையாக வழிந்தோடியது.

“வாஞ்சி.. மாத்து மருந்து கொடுக்குறேன். இல்லன்னா அது முழுசா மயங்கிடும்!”

“சீக்கிரம் செம்பா... தள்ளாடுது..!”

செம்பன் தனது இடுப்பிலிருந்த கலயத்திலிருந்து மயக்க முறியை அம்பில் தோய்த்தான். மூவம்புகளைத் துவண்டு தொங்கிய நாக்கில் தைத்தான். அசலான தைத்தல்.

ஆளி தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தது. கீழே சாயாமல் தன்னைத் தற்காத்துக்கொள்ளப் போராடிக்கொண்டிருந்தது. அதன் கண்களில் இருவாஞ்சியின் முகம் மொத்தமும் சிறு துளியாக மிதந்தது. கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளாட்டம் தளர்ந்து உறுதியாகிக்கொண்டிருந்தான் சிம்மம். செம்பனும் இருவாஞ்சியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். நாளை சிம்மத்தோடு காப்புக்கட்டும் விழாவில் நிறகப் போகிறோம் என்பதே அவர்களுக்குள் எல்லையில்லாப் பூரிப்பை தந்தது. செவளை அல்லையில் அடி வாங்கியிருந்ததைத் தாமதமாகப் புரிந்து செம்பனை நோக்கி வாலாட்டியபடி வந்தது. ஆளி முகத்தில் பழைய ஆத்திரமில்லை. வெறியில்லை. தன்னைத் தானே உணர்ந்து ஒரு கட்டுப்பட்ட சித்தனைப்போலக் கனிவோடு இருவாஞ்சியை பார்த்தது. கொற்றவைக்கு நன்றியைச் சொல்லி சிம்மத்தின் கண்ணை அகழ்ந்து பார்த்தாள். அந்தக் கண்களின் வழியே இருவாஞ்சியைத் தனக்குள் ஏற்றிக்கொண்டது. இருவாஞ்சி அது உணரும் வண்ணம் உரத்துச் சொன்னாள்.

“தும்பன்... தும்ப... தும்பா!”

6 துலைத் திங்கள் பத்தொன்பதாம் திகதி

பஃற்றூளி ஆற்றின் கழிமுகத்தோரம் திருக்கையன் கடுங் கோபமாக நின்றிருந்தான். ஏழ் குன்றநாட்டின் தலையில் உருவாகி ஏழ் குணக்கரையையும் ஏழ் குறும்பனையையும் இணைத்த கரையாகப் பஃற்றூளி ஆழியில் விழுந்தது. அது கலக்குமிடத்தில் மண்ணுக்குள்ளிலிருந்து தண்ணீர் பொங்கிக் கொதிப்பதுபோலிருந்தது. ஆற்று மீன்களைக் கழிமுகத்தில் காத்திருந்த முதலைகள் தாவிப் பிடித்தன. முதலைகளின் மூக்கில் அமர்ந்திருந்த குருகுகள் முதலைகளால் பிடிக்க முடியாத மீன்களைச் சட்டெனக் கவ்விப் பறந்தன. பறவைக் கூட்டத்தின் கிளர்ச்சி ஒலிகளும், நதியை ஒட்டிய கரையில் மரங்களின் காற்றுக்கேற்ற அசைவும், ஆழியில் குதிக்கும் பஃற்றூளி ஆற்றின் நீர்க் கொதிப்பும், பெரும் பாறைகள் விசும்பிலிருந்து உருண்டு விழுவதைப்போலக் சத்தம் எழுப்பிக்கொண்டிருந்தன.

கொற்றவை வெறியாட்டுக்கு முன்னதாகக் கிளம்பவேண்டிய தருணத்தில் ஆரல் நங்கை காணாமல் போய்விட்டாள். ஆழிக் கரையில் தன் ஊரை ஒட்டிய அனைத்துப் பரப்புகளிலும் சதுப்பு நிலங்களிலும் அலையாத்திக் கூட்ட மரங்களிலும் ஊடு பாவித் தேடிவிட்டான். கழிமுகத்தோரம் உள் நீண்டு கிடக்கும் சதுப்பு நிலத்திலிருந்து உள்வாங்கி அடர்ந்து பெருத்திருக்கும் மாங்குரோவ் புதர்களிலும், மரக் கூட்டங்களுக்கு இடையே மிதக்கும் வாய்க்கால்களிலும் வத்தையை ஓட்டிச் சென்று அலசிவிட்டான். நீர் நீண்ட அந்த வனமெங்கும் திண்திமிலில் ஏறி வளைந்து வளைந்து தேடினான். திமிலோட்டி தனது அடங்காத தோள்களே சோர்வைக் கெஞ்சிக் கேட்குமளவு தேடி அலுத்துவிட்டான். ஆரல் நங்கை பயங்கரச் சுட்டி. நிலம் விட்டு நிலம்

தாவுவாள். வனங்களில் பரவிச் செம்மாந்திருப்பாள். கண்டதைப் பிடித்துத் தீயிட்டுத் தின்பாள். இரவென்றும் பாராமல் சதுப்பு நிலத்தில் பாவியிருப்பாள்.

திருக்கையன் ஆரல் நங்கையின் ஆற்றல் தெரிந்து கண்டுகொள்ளாமலிருப்பான். கொற்றவை வெறியாட்டுக்கு முக்கால் திங்களே இருக்கும் வேளையில் வெறியாட்டுக்கு வரும் மாந்தர்களுக்கு மீன் உணவுகளைக் கொண்டு சேர்க்கும் பெரும் பணியிருந்தது. பிடித்த அனைத்து மீன்களையும் உப்பளத்தில் சேர்த்துக் கெடாமல் இருக்க உப்புக் கல்லைப் போட்டு மூடியிருந்தார்கள்.

மாந்தக் கணிப்பில் முதல் விளைச்சல் என்றால் அது நீரைக் கல்லாக உருவாக்கியதுதான். முதன் முதலில் வனங்களில் பாறைகளில் தேங்கிக் கிடக்கும் உப்புப் படிமனைக்கொண்டுதான் சுவையாக இறைச்சிகளை மாற்றும் வழக்கமிருந்த்து. சில தாவரங்களை வதக்கியும் அதிலிருந்து உப்புச் சுவையைக் கூடுதலாகப் பெற்று வந்த மாந்தக் கூட்டத்திற்கு ஆழிக் கரையோரங்களில் விளைந்த உப்பு அளவுக்கு ஈடு எதுவும் கிடைக்கவில்லை.

சரியான உப்பின் சுவை கடல் மீன்களைப் பிடித்து உண்ணும்போது துவங்கியது. பஃற்றூளி ஆற்றிலோ குமரியாற்றிலோ அல்லது சிற்றாறுகளிலோ நீர்த் தேக்கங்களிலோ கிடைக்கிற மீன்களைச் சுட்டுத் தின்பதில் இருந்த ருசிக் குறைபாடு, ஆழியில் கிடைக்கும் மீன்களில் கூடும் உப்புச் சுவை இரண்டிலிருந்து பிறந்ததுதான் உப்பு விளைச்சல். ஆழியில் பிடித்த மீனை நன்னீரில் கழுவி உப்பைக் குறைத்தார்கள். அதன் மூலம் சுவையான மீன் உணவு கிடைத்தது. நன்னீர் மீன்களை ஆழி நீரில் கழுவி தீயிலிட்டுத் தின்றதில் புதிய சுவை கிடைத்தது. ஆழியிலிருந்து ஒதுங்கும் நீர் படிமனாக வெள்ளையாகத் தேங்கியதைச் சேமித்ததில் அந்த ஆய்வு புதிய வழிகளை உருவாக்கியது. ஆழி மட்டம் குறையும்போது தேங்கிய உவரி நீர் ஆவியாகிக் காய்ந்து வெள்ளை மண் துகளாகி வெளேறெனத் தேங்கிக் கிடப்பதை இறைச்சித் துண்டங்களுக்குப் பயன்படுத்திப் பார்க்க, புதிய ருசியறிந்தார்கள். அதிலிருந்து ஆழியின் கழி முகத்தோரம் வாய்க்கால் அமைத்து அதிலிருந்து நீரைச் சதுப்பு நிலங்களுக்குத் திருப்பினார்கள். அந்த நீரை சதுப்பு நிலங்களில், வண்டல் நிலங்களில் பாத்தி பாத்தியாகப் பிரித்துத் தேக்கிவைத்ததில் நிலம் காய்ந்ததும் உப்புப் படிமனாகப் படிந்ததைச் சுரண்டி வாரினார்கள். சுரண்டி வாரியதில் கட்டி கட்டியாகத் திரண்டது. ஆழிக் கரையில்லாத அனைத்து நாடுகளுக்கும் ஊர்களுக்கும்

மாந்தர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். எல்லா நாடுகளிலும் உணவில் உப்பும் ஒரு கலவையானது அப்படித்தான். அதனுடைய வளர்ச்சியாகச் சில மலைகளை வெட்டும்போது அதனுள் மண்ணில் ஒன்றாக உப்பும் இருந்ததைப் புரிந்து அதிலிருந்தும் ஓரளவு உப்பைச் சேகரித்தார்கள்.

திருக்கையன் தலைமையில் ஏழ்பனைக்கு வரும் மாந்தர்களுக்குத் தேவையான மீன்களை உப்பில் தோய்த்துப் பதப்படுத்திப் பெருயாளிகள் வண்டிகளில் ஏற்றி அனுப்பும் வேலையெல்லாம் முடிந்த பிறகுதான் ஆரல் காணாமல் போனாள்.

திருக்கையன் எல்லா நாடுகளிலும் நடக்கும் கொற்றவை வெறியாட்டுக்குத் தவறாமல் போக நினைப்பான். பெருந் திரளாக மாந்தர்கள் கூடிக் களிப்பதைப் பார்ப்பதே அவனுக்குப் புத்துணர்ச்சியாக இருக்கும். போன ஆண்டு நடந்த வெறியாட்டு நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமல் போனதால் இந்த ஆண்டு சொந்த நாடான ஏழ் குறும்பனையில் நடைபெறும் விழாவிற்கு முன் கூட்டியே காப்புக் கட்டும் அன்றே சென்றுவிட வேண்டும் எனத் தீர்மானித்திருந்தான்.

ஆரலும் அப்படித்தான் நினைத்திருந்தாள். உருவனோடு விளையாட்டாக ஆழிக்குள் போனவள். காணாமல் போய்விட்டாள்.

ஆரல் காணாமல் போனதில்தான் திருக்கையன் மிகவும் குழம்பிப் போனான். அவனது ஏற்பாடுகள் முழுக்கத் தேங்கிவிட்டன. தனது அக்காக்களையும் தம்பிகளையும் பொன்பரப்பியிலிருந்து கிளம்பிய மற்றவர்களுடன் அனுப்பிவிட்டு, தங்கையைத் தேடி ஆழியின் கரைகளில் அலைந்தான். அவனுக்கு உருவன் மீது எப்பொழுதுமே கோபம்தான். அவன் ஆரலைச் சும்மா இருக்க விடுவதே இல்லை. எங்கேயாவது இழுத்துக்கொண்டு சென்றுவிடுகிறான். ஆரல் அவளுக்கான துணையைத் தேடும் அக்கறையே இல்லாமல் அந்த உருவனுடன் சுற்றுவது திருக்கையனுக்குக் கவலையாக இருந்தது.

ஆரலின் உற்ற தோழி இருவாஞ்சி செம்பனுடன் வந்து நின்றபோது திருக்கையன் பொய்யாக அவளிடம் கோபித்துக் கொண்டான்.

“நங்க ஆம்பளயே பாக்காம உருவங்கூட சுத்துறா... நீ என்னான்னு கேக்க மாட்ட... ஆனா உனக்கு மட்டும் தொண அமைச்சுக்குவியோ..?”

“அண்ணே... ஆரலுக்கு உருவனாட்டம் தொண வேணுமாம். நான் எங்க போறது..? இப்பக்கூட அவ செம்பன கட்டிக்கிறேன்னு சொல்லட்டும்... நானு விட்டுக் கொடுத்துட்டுப் போயிடுறேன்!”

இருவாஞ்சிக்கும் செம்பனுக்கும் நடுவில் நின்ற ஆரல் சட்டெனச் செம்பனின் தோளில் கைப் போட்டுக்கொண்டாள்.

“வாஞ்சி... மாப்பிள... எனக்கும் மாப்பிளன்னா கசக்கவா போவுது... இப்பவே நான் ஏத்துக்குறேன். செரின்னு சொல்லு அத்தான்!”

“செம்பா... உன்ன வச்சி ரெண்டு திருகாணியும் பல்லாங்குழி விளயாடுதுவோ. பாத்து சூதானமா இருந்துக்க!”

ஆரலும் இருவாஞ்சியும் எப்பொழுதும் இப்படித்தான் என்பதால் செம்பனும் விடாமல் பேசினான்.

“ஒரு கனிய சுவைக்கயில இன்னொரு கனியும் ஒட்டிக்கிட்டு வந்துச்சுன்னா, வேணாம்னா சொல்லப் போறேன்? மச்சா... இருவாஞ்சி மாங்கனின்னா... நங்க பலாச்சுள..!”

“ஏய்! நீ பொல்லாத செம்பனப்பா. உனக்கு வக்காலத்துக்கு வந்தா... நீ பனமரம் தாண்டுறியே...”

“செம்பனுக்கே கேக்குதுன்னா... நான் என்ன சொல்லப் போறேன். என் நங்க வேணும்னா கூப்டுக்கோ. ஊர்ல ஒலகத்துல நடக்காததா. எத்தன தாய்ங்க ரெண்டு ஆம்பளக்குப் பிரியப்பட்டு ஏத்துக்குற மாதிரி. நாங்க ரெண்டு பேரும் செம்பன கட்டிக்கிட்டா போச்சு.”

“பகடிக்குச் சொன்னா... ரெண்டு பேரும் என்ன முடிச்சு விட்டுருவீங்கபோல...’

அவ்வளவு பகடியடிப்பார்கள். செம்பனும் சில சமயம் அவர்கள் உண்மையாகவே பேசுவதுபோலப் பயப்படுவான். கடைசியில் திருக்கையன்தான் இவர்களிடம் மாட்டி முழிபிதுங்கிப் போவான். தங்கையின் விளையாட்டுத் தனத்தைப் புரிந்துகொள்ளும் ஒருவன் எப்போது வருவானோ என எண்ணி வருந்துவான் திருக்கையன்.

ஆரலும் உருவனும் இரண்டு மூன்று நாள்கள்கூடக் காணாமல் போவார்கள். ஊரிலிருக்கும் அறிவர்களும் அவள் பக்கமே நின்று பேசுவதால் கடிந்துகொள்ளக்கூட முடியவில்லை. தனது நான்கு அக்காக்களைவிட, ஆரலின் இரண்டு அண்ணன்களைவிடவும் சிறு வயதிலிருந்தே ஆரல் மீது தனித்த அன்பு அவனுக்கு.

அருகிலிருக்கும் ஊரிலெல்லாம் போய்த் தேடினான். ஆரல் இல்லாமல் அவனுக்குக் கொற்றவை வெறியாட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை. அதனாலேயே இந்த முறை ஆரல் வந்ததும் உருவனைக் காட்டிலோ நதியிலோ ஆழியிலோ விட்டு வந்துவிட வேண்டும் எனப் பிடிவாதமான மனநிலை அவனுக்கு வந்துவிட்டது.

ஆரலும் உருவனும் ஆழிக் கரையில் ஏறியதைக் கண்ட முழியன் ஓடிவந்து திருக்கையனிடம் சொன்னான். திருக்கையனுக்குச் கோபமும் ஆற்றாமையும் பொங்கியெழுந்தது. வேகமாக ஓடினான்.

கரையோரத்தில் பெருங்கூட்டத்திடம் நின்று வாய் ஓட்டிக் கொண்டிருந்தாள். வந்த வேகத்தில் எதையும் கவனிக்க முடியவில்லை அவனால். கோவத்தில் திமில் வளிக்கும் கட்டையாலேயே உருவனை நாலு சாத்துச் சாத்தினான்.

உருவன் அவனது கோபத்தைக் கண்டுகொள்ளவே இல்லை. அவன் அடிக்க அடிக்கத், துள்ளித் துள்ளி ஓடியது. வளைய வளையக் கூட்டத்தைக் கலைத்துக் கலைத்து விளையாடியது.

ஆரல் அதைச் சற்றுநேரம் வேடிக்கைப் பார்த்தாள். அண்ணன் முகத்தில் தென்பட்ட கோவம் அவளை வாட்டியது. அவனது அன்பைக் கண்டு நெகிழ்ந்து போனாள். திருக்கையனிடம் ஓடினாள். துடுப்பைப் பிடுங்கினாள். திருக்கையனை நேருக்கு நேர் பார்த்தாள். திருக்கையன் கண்கள் கலங்கியிருந்தது. ஆரல் பதறினாள்.

“அண்ணே... மன்னிச்சுடுண்ணே! தப்புதான்... தப்புதான். அழுவாத. நீ அழுதா எனக்குத் தாங்குமா?”

அண்ணன் தங்கையின் அன்பைக் கண்டு சுத்தியிருந்த கூட்டமே கலங்கியது. ஆரல் அண்ணனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். திருக்கையனால் சட்டென எதுவும் பேச முடியவில்லை. அவளாலும்.

சுற்றிலும் கூட்டம் தங்களை வேடிக்கை பார்ப்பதை உணர்ந்து நிலைக்குத் திரும்பினான்.

“எங்கதா போன நங்கா..?”

“மரணத் தீவுக்கு!”

“என்னது மரணத் தீவுக்கா?”

திருக்கையன் உடல் ஒரு கணம் சிலிர்த்தது. எட்டடி உடம்பின் மயிர்களும் சட்டெனக் குத்திட்டு நின்றன. மருண்டு மருண்டு ஆரலையும்

உருவனையும் பார்த்தான். கூட்டமும் அதிர்ந்து போயிருந்தது. அவர்களால் நம்பவே முடியவில்லை.

“எப்புடி இது..?”

நாக்குழறக் கேட்டவனின் தோளில் கை போட்டாள். தன்னைவிட அரையடி உயரமான ஆரலை நிமிர்ந்து பார்த்தான்.

“நானே இத எதிர்பார்க்குல. நம்ம மூத்தவங்க சொன்ன மாதிரி. நம்ம விட்டுப் பிரிஞ்ச நம்ம இனத்தோட ஊருக்கே வந்த மாதிரி இருந்துச்சு. உருவன் போன வேகம் காத்தவிட வேகமா இருந்துச்சு. அலையவிட நூறு மடங்கு வேகம். நான் போயி அங்க சேர்ந்ததே எனக்குத் தெரியல. உருவந்தான் என்னை எழுப்பினான். பாத்தா நம்ம கடலுலப் பாக்குற வயசான திமிங்கலத்தைவிட அஞ்சு மடங்கு இருக்குற மிருகங்க எலும்புக்கூடு எங்கப் பார்த்தாலும் பெருங்காடு மாதிரி, மரக் கிளை மாதிரி மண்ணுக்குள்ள பாதி அமுங்கியும் அமுங்காமயும் கிடக்குது. அதெல்லாம் செத்தே பல பரம்பர இருக்கும்னு நினைக்கிறேன். ஆச்சர்யமா இருந்துச்சு. ஆள் தூக்கிக் கழுகுகள் நூறாயிரமாவது இருக்கும்னு நினைக்கிறேன்! அதுங்க விரட்டலன்னா... இன்னும் அந்தத் தீவ முழுசா பார்த்துட்டு வந்திருப்போம்.”

ஆரல் சொல்லச் சொல்ல திருக்கையனின் உடல் நடுங்கியது. அதன் சூட்டை உணர்ந்து அண்ணனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

“நீ பெருஞ்சூரிதான் நங்க! என்னால நம்பவே முடியல. நம்மாளுங்க கடலுக்குள்ள பல தூரம் போயிருக்காங்க. ஆனா மரணத் தீவு இருக்குற பக்கம் மட்டும் போகவே மாட்டாங்க. அங்க என்னென்னவொ இருக்காம். போனவங்க எலும்பக்கூட யாரும் எடுத்து வந்ததில்ல. இங்க நம்ம பெரியதாய் ஆழியில அந்த மார்க்கம் யாருமே போக வேண்டாமுன்னு கட்டளையாவே சொல்லியிருக்காங்க. உனக்கு மறந்து போச்சா?”

“எனக்கு மறக்கல. நம்ம முன்னோருங்க ஆழிக்கு அந்தப் பக்கமா இயற்கை புரண்டதால இருக்கலாம்னுதானே ஆழியோரம் வந்தாங்க. ஆழிப் பக்கமே வராதவுங்க எப்படியாவது நம்ம மாந்தர்களக் கண்டுபுடிக்கணும்னு முயற்சி பண்ணித்தானே இங்கேயே தங்குனாங்க. பல பரம்பரையா இங்கயே வாழுறாங்க. ஆத்துலயே மீனுங்க கிடைக்குது. வனத்துல விலங்கு கிடைக்குது. பயிரு வச்சி வளர்ந்துமிருக்கோம். அப்படியிருந்தும் ஏன் இங்க நிக்கோம்? இங்கயே பல தலமுறையா எதுக்கு வாழுறோம்? மீனுக்காகன்னு இன்னிக்கு ஆகிப் போச்சு. ஆனா நோக்கம் என்ன? ஆழிக்குப் பொறவு கிடக்கிற நம்ம மாந்தரக்

கண்டுக்கிடத்தானே? அதான்... நம்ம மக்க விட்டத நானும் செய்ய முயற்சி பண்ணேன். நம்ம தொப்புள்கொடி உறவுகளையும் பார்த்தேன். எனக்கான தொணையவும் பார்த்தேன்!”

ஆரல் கூற்றில் மொத்தக் கூட்டமும் வாய் பிளந்தது.

“என்னது... நம்ம மக்களப் பாத்தியா..? எப்படி... எங்க இருக்காங்க..? இத ஏன் முன்னாடியே சொல்லல?”

எல்லாரும் ஆளுக்கு ஆள் பேசினார்கள். யாராலும் நம்ப முடிய வில்லை. எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருக்கும் தவிப்பு இது. பத்து நாள் கடற்பயணத்தில்கூட மாந்தர்கள் கண்டு பிடிக்க முடியாத ஒன்று ஏழு நாள் கடற்பயணத்தில் கண்டுகொண்டு வந்திருக்கிறாள் என்பதைக் கேட்கவே அவர்களுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

“மரணத் தீவு பெருந்தீவா இருக்குறதுனால அதுக்குப் பின்னாடி இருக்கிற பல இடங்க நமக்குத் தெரியாமப் போச்சு. மரணத்தீவுக்குப் போனவங்க யாரும் கழுகுக் கூட்டத்திடம் மாட்டி உயிர் பொழைக்க முடியாததால நம்ம மக்க யாருமே அந்தப் பக்கம் திரும்பாம கெடந்திருக்கோம். மரணத்தீவுக் கூட்டத்துக்குக் கிழக்க ஏராளமான இடம் இருக்கு. நாகர்கள் மட்டும் அங்க இல்ல. அங்க இருந்து தெற்கமா போனா ஆரப்பர் நாடு இருக்காம். அங்கயும் மாந்தருங்க பெருங் கூட்டமா இருக்காங்க. அண்ணன் தேடுவன்னுதான் எங்கயும் போகல. உடனே திரும்பீட்டேன்!”

ஆரல் நடந்த எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் சொன்னாள். கூட்டம் மொத்தமும் ஒரு கணம் அடங்கிப் போயிருந்தது. இளநாகனுக்கும் அவளுக்குமான இணைவையும் சேர்த்தே சொன்னாள்.

ஏதும் பேச முடியாதவனாகி தங்கையையே பார்த்தான் திருக்கையன். அவனது ஏக்கமும் அதுதான். ஆழியில் பெருமளவு அவனும் பயணித்தவன்தான். குட்டிக்குட்டியாய் ஆழியின் நடுவே பூக்களைப்போல மலர்ந்து கிடந்த பல தீவுகளைப் பார்த்தவன். மாந்த எலும்புகளும் பறவைக்கூட்டங்களையும், இன்னபிற பெரு மிருகங்களின் எலும்புகளை மட்டுமே கண்டறிந்திருக்கிறான். காலப்போக்கில் தேடுவது வீணென்றே கொண்டுவிட்டான். இதுப்போல பலர் முயன்றுகொண்டிருக்கிறார்கள். மரணத்தீவு திசைக்குப் போகக் கூடாது என்பதற்காகவே அந்தத் திசைவழியை வரைந்து அந்தப் பக்கம் திமிலின் முகம்கூடத்

திரும்பக்கூடாது என ஆழிக்கரையெங்கும் இருக்கும் அனைத்து மாந்தர்களுக்கும் உத்தரவே போட்டிருந்தார்கள்.

அடங்காப் பெரு நெருப்பைப் பொத்தி வைத்திருக்கும் ஆரலின் தேடல் அறிந்தவன் திருக்கையன். அதனாலேயே அவள் போகும் திசைக்கு மறுப்புச் சொல்வதில்லை. கேள்வி எழுவதில்லை. அவளே இரண்டு தீவுக்கூட்டத்தைக் கண்டு சொல்லியிருக்கிறாள்.

ஆழியில் பயணிப்போர் தங்கி இளைப்பாறி வருவதற்கான தீவுகளில் அவள் கண்ட தீவும் ஒன்று.

ஆரலை அருகே அழைத்துக் கட்டிக்கொண்டான். அவனது பார்வை உருவனிடம் இருந்தது. அதில் கனிவும் கூடியிருந்தது.

"நங்க, கொத்தவை வெறியாட்டுக்குத் தேவையான ஏற்பாடுகளச் செய்யாம இருக்கமேன்னுதான் கொஞ்சம் கோவமாயிடுச்சு... உன் சின்ன அண்ணன்களையும் அக்காள்களையும் எப்பொவோ அனுப்பி வச்சிட்டேன். நீ வந்ததும்போலாமுன்னுதான் கலங்கிக் கிடந்தேன். என்னை வெறுக்க மாட்டியே?"

"ஏன் இப்படிப் பேசுற? உன்ன வெறுத்துட்டு எனக்கு என்ன இருக்கு? மனசு தீயா தெறிக்குது... பரபரன்னு இருக்கு... அதான். ஏதாவது செய்யணும்னு துடிக்கிறேன்!"

"நீ துடிக்கிறது தப்பில்ல... உன் ஆளு இளநாகன முதல்ல கூட்டிட்டு வா. அதுக்கப்புறம் எங்க வேண்ணா போ. சேர்ந்து சுத்து யார் கேக்குறது!"

சட்டெனத் தன் தோளில் சாய்ந்திருந்த திருக்கையனை நிமிர்த்தினாள்.

"அதானே... இப்ப என்ன பண்றது?"

திருக்கையன் இளகிப் போனான்.

"நங்கா, நீ கண்டு வந்தது சாதாரணமான ஒன்னு இல்ல. அறுபத்தியெட்டு நாட்டுக்கும் அதுல வாழுற கடைசி உசிருக்கும் ஆனந்தத்தக் கொடுக்குற ஒன்னு. கொத்தவை வெறியாட்டு வேற மாதிரி ஆகப் போகுது. நான் ஒடனே நம்ம நாட்டுத் தாய்க்குத் தகவல் அனுப்புறேன்!"

"அது மட்டுமில்லன்னா... குறைஞ்ச பட்சம் இந்தக் கொத்தவைத் திருவிழாவுல நம்ம உறவுகளும் கலந்துக்கணும். என்கிட்ட திட்டம்

இருக்கு. நான் அவங்க கிட்டயும் சொல்லீட்டேன். இன்னும் அஞ்சு நாளைக்குள்ள வரேன்னு. நாகர்களும் கருப்பர் நாட்டுக்கும் தகவல் சொல்லிருப்பாங்க. அங்க இருந்தும் நம்ம மாந்தர்கள் வருவாங்க. நம்ம கலங்கள தயார் செய்யணும். சரியான மாலுமிகளத் திரட்டணும். இந்தத் திருவிழாவுக்குக் கொறைஞ்சது ரெண்டாயிரம் பேத்தையாவது அழைச்சுட்டு வரணும்... உடனே ஏற்பாடு பண்ணு!"

"திருவிழாவிற்குக் கிளம்பிட்டு இருக்குற எல்லாத்தையும் நிப்பாட்டிடுவொம். அவங்களக்கொண்டு நாக நாட்டுக்குப் போய் அழைச்சிட்டு வருவோம்."

"அண்ணே... மறந்துடாத... என் ஆளும் வறான். அவனைத் தலையில வச்சித் தாங்கணும்!"

"தலையில இருந்து ஒன்னுக்கு போகக்கூட இறக்கிவிட மாட்டேன். போதுமா?"

நங்கை திருக்கையனின் முதுகில் செல்லமாக அடித்தாள். திருக்கையன் எல்லையில்லா மகிழ்ச்சியில் இருந்தான். இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் தன் தங்கையே சாதித்துக் காட்டியிருக்கிறாள். அதோடு தனக்கானவனையும் தேடி அடைந்திருக்கிறாள் என்பதில் பேருவகை அடைந்தான்.

"அது எனக்கும் தெரியும்.'"

"ஏதேது... விட்டா உருவன் ஓட்ட சுமக்குற மாதிரி சுமக்க வைப்பப்போல. வரட்டும் பாப்போம். ஆளு எனக்குப் பிடிக்குணும், தாங்கறதா, இல்ல தூக்கி வீசுறதான்னு அப்புறம்தான் சொல்வேன்."

"டேய் திருக்கயா! என்ன வாய் ரொம்ப நீளுது?"

பொய்க் கோபமாக இடுப்பில் கை வைத்து நங்கை முறைப்பாகச் சொல்லவும், சட்டெனச் சிரித்துவிட்டான்.

"நங்க, உங்கண்ணணா நான். என்ன பண்ணனுமோ அதைப் பண்ணுவேன்...போதுமா?"

தன்னைவிட அரையடி உயரம் மிகுந்த ஆரலின் முகத்தைத் திருக்கையன் நிமிர்ந்து பார்த்துச் சொல்லும்போதே அவனதிகாரத்தில் கைவைக்கக்கூடாதென்ற முனைப்பும் அதீத அன்புமுமிருந்தது.

இருவருக்கும் புரிந்தது. அதன் தோற்றுவாயில் தொடங்கும் பேரன்பு. கெக்கலித்துக்கொண்டார்கள். உருவன் இவர்களைக் கண்டு

மனக் கேந்தல் ஏற்பட்டுத் தனது கூட்டை இடமும் வலமுமாக ஆட்டிக்கொண்டான்.

“சரி நங்க. நம்ம ஊர்ல பாதிப் பேரு போயிட்டாங்க. எனக்கு வெறியாட்டு விழாவ முதல் நாள்ல இருந்து பாத்தாதான் மனசு குளிரும். நாம நம்மாள்கள வர வைக்க என்ன பண்ணணுமோ பண்ணுவோம் வா. போய் தாய் பாடருத்தியைப் பார்ப்போம்.”

உருவன் தரையிலிருந்து இரண்டடித் தாவிக் குதித்தான். ஆரல் நங்கையும் மகிழ்ந்து உடன் குதித்தாள்.

7 துலைத் திங்கள் இருபத்து எட்டாம் திகதி

கோகன் ஏழ் குறும்பனையின் கொற்றவை வெறியாட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியவன். அவனது மனம் நடுங்கிக் கொண்டிருந்தது. தனது இணையரிடம் எப்படிச் சொல்வது எனத் தவித்துக் கிடந்தான்.

கடந்த மூன்று திங்களாகவே அவன் யாரிடமும் பேசுவதில்லை. சொந்த நாடான ஏழ் குன்றத்திலிருந்து கிளம்பி வந்து ஏழ் முன்பாலையில் தனது இணையர் மலைச்சியின் மருங்காவூர் கிராமத்தின் முற்றத்திலிருக்கும் கொற்றவையிடம் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறான். ஒரு மனப் பிறழ்வாளன்போலத் தனக்குத்தானே பேசிக்கொண்டிருப்பதில் உடைந்துபோயிருந்தாள். அவனது செயலுக்குப் பின்னால் என்ன காரணியம் இருக்க முடியுமென ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தாள் மலைச்சி.

கொற்றவை வெறியாட்டுக்குக் கோகன் முன்னமே கிளம்பியிருக்க வேண்டும். ஏன் கிளம்பாமல் இருக்கிறான். வானவியல் துறையில் ஒவ்வோர் ஆண்டும் நடந்தற்றை இவன் தானே விளக்க வேண்டும். அடுத்த ஆண்டு நடக்க வேண்டியதை அரங்கில் சொல்லக் கடமைப்பட்டவன் இப்படித் தனக்கென்ன எனக் இருக்கிறானே என குழம்பிக் கிடந்தாள்.

மலைச்சிக்கு அவன் மீது கொள்ளை ஆசை. அவன் தன் மார்பில் வரைந்த கோலங்களைத் தடவிப் பார்த்தாள். அவன் தனது கணிய விடைகளை அவளது உடலெங்கும் பதித்திருந்தான். அவனது ஒவ்வொரு பதியலிலும் தானே இந்த உலகின் மூலமானதாகவே நினைத்தாள். தன் உடலில் வரையப்பட்டிருக்கும் கதிரவளும் அதனைச் சுற்றி நகர்ந்துகொண்டிருக்கும் கோள்களைப் பற்றி அரை இருளில் விளக்கின் ஒளியில் அவன் காட்டியபடி அது சுழலும் விதத்தைக் கோகன் சொல்லும் ஒவ்வொரு முறையும் அவளது விரிந்த கண்களில் அவை ஒளிர்ந்தபடி நகர்வதுபோலவே மலைச்சிக்குத் தோன்றும். கதிரவளும் நிலவளும் ஒன்றாகி மோகிக்கப் போவதையும் பிரிவதையும் பார்க்க அவளை மட்டும் தனியாக அழைத்துச் சென்று இரண்டும் கூடத் தொடங்கிப் பிரியும் வரைக்குமான அந்த நாள்களை அவளுடன் இருந்து களிப்பான். அந்த நினைவுகளே ஆண்டு முழுவதும் தாங்கும் அளவிற்கு நினைவுகளைச் சேமித்துக்கொள்வாள். கோகன் இடையறாமல் காத்துக்கிடந்து உணர்ந்த இந்தக் கணிய மொழிகள்தான் இனி பயன்பாட்டுக்கே வரப் போகிறது என மகிழ்ந்திருந்தாள்.

ஏழ் பின்பாலை நாடு கோகனைக் கொண்டாடியதும் அதன் பின் அவன் மேலும் தீவிரமாக இயங்கி ஆறு திங்களில் தனது சூத்திரத்தை உறுதிப்படுத்தினான். அன்றிலிருந்து அவன் கேணயன் போல மாறிப்போனதை உணர்ந்தாள்.

அவன் மனம் பிடிப்பற்று எதையோ நினைத்துத் திரிந்ததையும் இரண்டு திங்கள் காணாமல் போனதையும் உடம்பெங்கும் பெரும் தீப் புண்களோடு வந்ததையும், மிகவும் இளைத்துக் களைத்தவனாக ஒடுங்கிக் கிடப்பதையும் தனது குழந்தைகளை மார்போடணைத்து அழுவதையும் அவள் இரு வாரங்களாகப் பார்த்து வருகிறாள்.

கோகனின் பாட்டி தெளிச்சி மாயங்களை உருவாக்கக் கூடியவளாகப் பெயர் பெற்றிருந்தாள். காலத்தை கணித்துச் சொல்வாள். நாளை இரவு பெருமழை பெய்யும் என்றால் பொழியும். சூறை வீசும் என்றால் ஆயிரமாண்டு மரங்களைக்கூட காற்று வேரோடு சாய்த்துச் செல்லும்.

எல்லாரும் சொல்வதைப்போல அவள் மாயக்காரியல்ல. ஏழ் குன்றத்தில் அவளது அறிவுக்கு ஒரு துறையே ஒதுக்கி இருந்தார்கள். தெளிச்சியின் கூற்றின்படியே காலங்காலமாகக் கணக்கில் கொள்ளப்பட்ட நாள் கணக்குத் திருத்தம் செய்யப்பட்டது. ஒரு திங்கள் என்பது நிலவு தோன்றுவதிலிருந்து கணக்கிட்டு அது முழுநிலவாக ஆகும் காலத்தையும் மீண்டும் நிலவு குறைந்து தேய்ந்து மறைவதைக் கொண்டு கணக்கிட்டனர். ஒரு திங்கள் என்பது இத்தனைத் திகதி என்று முடிவு செய்திருந்தனர்.

இவை ஒரு கணக்கீடு. எதற்காக இந்தக் கணக்கீடு. வேட்டையாடி உண்ணலாம். வேளாண்மை அறிவு வளர்ந்துவிட்டது. கிடங்குகளில் மழைக்காலத்திற்குத் தேவையான கூலங்களைச் சேமிக்கும் பழக்கம் வந்துவிட்டது. பின் காலக்கணக்கீடு எதற்கு. ஆதியில் மாந்தர் உருவானதில் இருந்தே இதெல்லாம் தொடங்கிவிட்டது. நெருப்புக்கும் மழைக்கும் இடிக்கும் குளிருக்கும் புயலுக்கும், காரணியங்களைத் தேடி அவர்களின் மூளை அலைந்தது. அவர்கள் இயற்கை தரும் பேராற்றலைக் கண்டு அஞ்சினார்கள். அச்சத்தினால் அறிவு பிறந்தது. அறிவினால் தற்காத்துக்கொள்ளத் தேடலைத் தொடங்கினார்கள்.

நூறாயிரம் ஆண்டுகளாகப் பலவற்றுக்கு விடை தேடிக்கொண்டே இருந்தார்கள். வெப்பம் எங்கிருந்து வருகிறது. மழை எதனால் பெய்கிறது. காற்றுக்கு என்ன விதமான தேவை. நிலம் ஏன் நகர்கிறது. ஆழி ஏன் பொங்குகிறது. ஓர் இடத்தில் குளிராகவும் மற்றொரு நிலம் சுடும் மணலாகவும் எப்படி மாறியது. மாந்த உடலின் நோய்களுக்கும் இந்த இயற்கை மாற்றங்களுக்கும் தொடர்பிருப்பது எப்படி. உடலும்

இயற்கையும் ஒன்றுபோலவே பிணைந்திருப்பது எப்படி என்றெல்லாம் நுணுகி ஆய்ந்தார்கள்.

அள்ளிப் பருக முடியாத உவர்ப்பைக் கொண்ட ஆழியில் எப்படி இவ்வளவு நீர் உருவானது. வானிலிருந்து இரவில் மின்னுவதென்ன? ஏதோ ஒரு நாளில் எரிந்துகொண்டே விழுபவை என்ன?

கேள்விகள் ஒன்றிலிருந்து ஒன்றாகப் பெருகிக்கொண்டே வந்தது. வந்ததற்கு யாரோ ஒருவர் காத்திருந்து பார்த்திருந்து கேட்டிருந்து தனக்குக் கிடைத்த உண்மைகளை விட்டுச் சென்றனர். அந்த உண்மை. அப்போது வரை உண்மை. அது மேலும் கூர்மையாக, அல்லது அதிலிருந்து வேறு புதிய புதிர்களை இந்த இயற்கை கொடுக்கும். அதைக் கற்று மற்றவருக்கும் தொடர்ச்சியாக எடுத்துப் போனார்கள் மாந்தர்கள்.

பாறைகளில் வரைந்தார்கள். வாய் வழியே நகர்த்தினார்கள். சைகையால் பேசியதிலிருந்து பொருளால் பேசினார்கள். பொருள்களைக் காலத்தோடும் நிலத்தோடும் அவர்களின் ஆன்மாவும் இணைக்க மொழியை அதன் கருவியாகக் கண்டடைந்தார்கள். எழுதவும் அதன் பொருளையும் தொடர்ந்து கடத்தினார்கள். பாறைகளில் செதுக்கினார்கள். அதற்கான மூலப் பொருள்களை உருவாக்கினார்கள். இலைகளில் எழுதி, மண்ணில் எழுதி, பனையோலையில் எழுதினார்கள். பனையோலை பட்டுவிடாமல், சிதைந்துவிடாமல் இருக்க, பல நூறு ஆண்டுகளை பனையிலைகள் தாங்குவதற்காக நட்டிளமைப் பனையிலைகள் சரியானவை எனக் கண்டார்கள். அந்தப் பனையிலைகளை வெட்டிச் சேர்த்து, வெந்நீரில் முக்கியெடுத்துக் காய வைத்தார்கள். காய்ந்ததைப் பளிங்கு கொண்டு தேய்த்தார்கள். மஞ்சள் பூசிக் காய வைத்து, அதன் மீது எழுதத் துவங்கினார்கள். ஒரு பனையோலைகள் பதப்படுத்தப்பட்டால் ஏழுநூறு ஆண்டுகள் தாங்குகின்றன என்பதைக் கண்டறிந்து அதைப் பிரதியெடுத்துவிட்டு பழையதை அழித்தார்கள். இப்படித் திட்டமிட்டு எழுத்தை எங்கே எழுதுவது? எப்படிப் பாதுகாப்பது? எழுத்தை எப்படி உருவாக்குவது? மொழியாகுவது எப்படி? என்பதற்கே தொடர் வரலாறுகள் இருந்தன.

ஒன்றிலிருந்து ஒன்றை அல்லது ஒன்றிலிருந்து பலவாகச் சிந்தித்து மாந்தக் கூட்டத்திற்குப் பொதுவாக்கினார்கள்.

கோகன் கண்டடைந்த பல முடிவுகளுக்கு ஒரு தொடர்ச்சி இருந்தது. அவனுக்கு முன்னால் பல்லாயிரம் பேர் தேடினர். எழுதினர். வரைந்தனர். சொல்லினர். பல்லாயிரம் பேர் கோகனைப் போல இன்னமும்

புதியவற்றைத் தேடிக்கொண்டிருக்கிறனர். பழையவற்றை ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். அப்படித்தான் ஒரு நாளை எப்படிக் கணக்கிடுவது எனக் கண்டார்கள்.

ஒரு நாளில் தோன்றுபவை சிற்சில மாற்றங்களுடன் தோன்றிக் கொண்டும், மறைந்துகொண்டும் இருக்கின்றன. எதை வைத்து அதற்கும் முன்னும் பின்னுமான தொடக்க முடிப்பைக் கொள்வ தெனச் சிந்தித்தார்கள். அதன்படிதான் பழையவர்கள் சொல்லியபடி கொற்றவையின் வரலாற்றை அளந்தார்கள். எத்தனையோ கொற்றவைகள் பிறந்து, தொடர்ந்து வரலாற்றைக் கொடுத்தார்கள்.

நிலவில்லாத அமைவாதை நாளில் பகல் மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த இரவைக் கொற்றவைக்கானதாக ஒதுக்கி வைத்தனர்.

கோகனின் மூத்தோள் தெளிச்சி விடவில்லை. பழைய முறையில் இருந்த கணக்கில் எடுக்கப்படாத நாள்களைக் கணக்கில் கொண்டாள். ஒரு திங்கள் என்பதை இருபத்தியேழு திகதிகளிலிருந்து முப்பத்தி எட்டுத் திகதிகள் வரையாகத் திட்ட வரையறை செய்தாள். இருபத்தி ஒன்பது திங்களைப் பதினெட்டு திங்களாகவும், அந்தப் பதினெட்டுத் திங்களை ஓர் ஆண்டாகவும் கணக்கிட்டாள். சுழல் முறையில் ஐம்பத்தி ஏழு ஆண்டுகள் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து மீண்டும் பழையபடி ஒன்றிலிருந்து ஐம்பத்தியேழு ஆண்டுகள் அதேபோல நிகழ்வதாகக் கணக்கிட்டாள். பழையவற்றிலிருந்து மாறுதல்களைச் சமைத்தாள்.

தெளிச்சியின் கணக்கைப் பிற கணியர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. பழையவற்றைப் பொருத்திப் பார்த்தார்கள். பெரும் விவாதங்கள் நீண்டன. அவை முப்பது ஆண்டுகள் நீண்டு ஒரு வழியாக இந்தப் புதிய முறையை ஏற்றுக்கொண்டனர். இவை எல்லாம் கொற்றவை அரங்கத்தில் ஆண்டுக்கொரு முறையும் கணியர்களின் விவாதங்கள் வெவ்வேறு பகுதியில் கூடித் தொடர்ந்து செப்பனிட்டனர். கோகன் தனது பாட்டி தெளிச்சியின் வழியில் பயின்றவன். இன்னும் துல்லியமாக நாள்களைக் கணித்தவன்.

சென்ற ஆண்டு ஏழ் பின்பாலையில் வானவியல்தான் முக்கிய விவாதப் பொருளாக இருந்தது. ஏழ் பின்பாலை நாடுகளின் நிலவியல் விசித்திரமானது. பன்மலை அடுக்ககத்தின் அடிவாரங்களில் அதன் நகரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. பன்மலை பல மலைத்தொடர்களைக் கொண்டு வறண்ட தாவரங்கள் மிகுந்து காணக்கூடிய மலை. அதில்

அடர்ந்த வனங்கள் ஏதுமில்லை. கதிரவளின் முழுமையான பகல் பெரும்பாலும் கிடைக்கக் கூடிய நிலம் என்றால் அது இதுதான். அதனால் அரைக் கோள அமைப்பில் அந்த நகரங்களும் பேரூர்களும் கிராமங்களும் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள்கூட அரைக் கோள வடிவத்தில் காற்று வெளியேற நான்கு சாளரங்கள் கொண்டு முப்பது முள உயரத்தில் தரையில் சுடு கற்களால் சுவர் எழுப்பப்பட்டு பிராட்சை மண்ணால் பூசி அதன் மீது பசுஞ்சாணியைக் கொண்டு மெழுகி இருந்தார்கள். மேற்கூரைகள் நாணல் தண்டினால் வேயப்பட்டு அதன் மீது பசுமைக் கொடிகள் படரவிட்டு வெப்பம் கீழிறங்காமல் பார்த்துக்கொண்டனர். பசுங்கொடிகளில் பூச்சிகள் அண்டாமல் இருக்க வாரம் தோறும் எரிந்த விறகுகளின் சாம்பலைத் தூவினார்கள். எல்லா வீடுகளும் நகரங்களும் கிழக்கு நோக்கிய திசையிலேயே தனது முகப்பைக் கொண்டிருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தன. அதாவது காலை மஞ்சள் வெயில் வீடுகளில் வீசியபடியே நகர்ந்து முற்பகலில் கதிரவளின் வெளிரும் ஒளி, கூரையின் மீது மட்டும் பாயும்படியாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்டிருந்தது. ஒவ்வோர் ஊருக்கும் நகரத்திற்கும் மலையிலிருந்து ஓடும் சிற்றாறுகளைத் திருப்பி, கிராமங்களிலும் நகரங்களிலும் பேரூர்களிலும் பொதுவில் உருவாக்கப்பட்ட பெருங் குளங்களுக்கு விடப்பட்டு, அதிலிருந்து நீர் மீண்டும் ஓர் ஆறாகப் பாய்ந்து செல்லும்படி அமைக்கப்பட்டிருந்தது. இதே வடிவம்தான் ஏழ் பின்பாலை முழுவதுமே. நகரத்திற்கும் பேரூருக்கும் கிராமத்திற்கும் ஏற்றபடி சிற்சில மாற்றங்களுடன் அறிவர்களால் உருவாக்கப்பட்டிருந்தது. பின் பாலை நாட்டின் தாய் மாச்சடை அரைக்கோள வடிவத்தில் முப்பதாயிரம் பேருக்கு மேல் அமர்ந்து விவாதிக்க கூடிய கொற்றவை அரங்கில் இந்த விவாதத்தைக் கூர்ந்து கவனித்தாள். அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும், தாய்மாமன்களும் வீற்றிருக்க, ஏழ் குன்றநாடுகளின் கடைக் கோடியிலிருக்கும் மேருமலை அடுக்குத் தொடரின் காலடியில் வீற்றிருக்கும் வெண்குளம் கிராமத்திலிருந்து வந்த கோகன் தனது நிலையை அழகாக எடுத்து வைத்தான்.

தெளிச்சி வகுத்த கணக்கைப் பின்பற்றி நாள்களைப் பொதுவாகத் திட்டமிட்டு வந்த மரபைக் காப்பாற்றி வந்தவள் காந்தளி.

காந்தளி நூற்றியிருபத்தேழைக் கடந்தவள். பேச்சில் ஆழமும் கறார் தன்மையும் கொண்டவள். பத்து முழ உயரத்தைத், தனது கூன் முதுகு எட்டாகக் குறைத்துக் காட்டுவதைக் குறித்து அக்கறையில்லாத பெரும் முதுவச்சி அவள். அவளின் உடலெங்கும் விண் நட்சத்திரங்களை

வரைந்திருந்தாள். காலத்தை உடம்பிலிருந்து விசும்புக்கும், விசும்பிலிருந்து உடம்புக்குமாக இணைத்துப் பார்ப்பவள். காந்தளி சொல்வதே தீர்க்கமானதாக இருந்ததை முதலில் உடைத்தது கோகன்தான்.

“உன் புதிய எண்ணியலை அரங்கில் வை!”

மூத்தவர்களின் மீது அன்பும் மரியாதையும் கொண்ட மக்கள்தான் அவர்கள் அனைவரும். அதே நேரம் புதிய உடைப்புகளை ஏற்றுக் கொள்ளும் போக்கும் பண்பும் அவசியமென்ற தொடர் கன்னியைப் பற்றியிருந்தவர்கள் அவர்கள்.

கோகன் அவையில் மண் பரப்பித் தரவேண்டும் என்று கேட்டான். உடனடியாக, மூன்று கண்டி மண் அரங்கில் கொட்டப்பட்டுச் சமன்படுத்தப்பட்டது. கோகன், கோகனைவிடக் கால் முழம் உயரக் குறைவாக இருந்த தனது இணையர் மலைச்சியை அழைத்தான். மலைச்சி திடகாத்திரமான தனது ஒற்றைத் தோளில் விரல் அளவில் வெட்டப்பட்ட பல நூறு குச்சிகளை மூட்டையாகச் சுமந்து வந்தாள். அனைவரும் கூர்மையாகப் பார்க்க கோகன் எல்லாருக்கும் கேட்கும் வண்ணம் முழங்கினான்.

“கொற்றவைத் தாயின் அறிவிலிருந்து நாம் மாந்தர்களானோம். கொற்றவைத் தாயே நம்மைக் காப்பவள். நம்மை நாகரிகமடையச் செய்தவள், வேட்டைகளின் தலைவி. அவளை வணங்குகிறேன். கொற்றவையின் வழித்தடங்களில் மூதுயிர்த்த கொற்றவைகளை வணங்குகிறேன். அவையில் இருக்கும் எமது தாய்களுக்கும் எங்களை வழிநடத்தும் சிறந்தோருக்கும் எங்களுக்கு அறிவைப் பெருக்க நல்லுள்ளம் தந்த எங்களது மூத்தோருக்கும், எனக்குக் கணிய வல்லமை தந்த முதுவச்சி தெளிச்சிக்கும், எனது அறிவில் திறம் தேற்றிய பெரும் பாட்டி மதுவந்திக்கும் வணக்கங்கள். எனது வேண்டுகோள் ஒன்றுதான். எனது மூத்தோள் தாய் காந்தளி உட்பட அனைவருமே தங்களது சந்தேகங்களை இடையில் முன் மொழியாமல் குறிப்பு வைத்து எனது கணக்கை நான் முடித்த பிறகு கேட்டால் எனது சிந்தனை அறுபடாமல் இருக்க வழி கிடைக்கும்.”

ஏழ் பின்பாலையின் தாய் மாச்சடை அனைத்துத் தாய்களையும், அவையில் இருந்த தாய்மாமன்களையும் ஒருமுறை தன் அகண்ட கண்களால் உற்று நோக்கினார். பின் கணிய வல்லுநர் குழுமத்தைப்

பார்த்தார். குறிப்பாகக் காந்தளியைக் கூர்ந்து பார்த்தாள். அனைவரின் பார்வையிலும் இணக்கம் கிடைத்தது.

“தொடங்கு கோகா..!”

கோகன் சொல்லத் தொடங்கினான். மலைச்சி அவனின் கணியத்திற்கு ஏற்பக் குச்சிகளைச் சேகரித்துக் கொடுக்கத் தொடங்கினாள்.

“நாம் இதுவரை ஒரு நாளை நிலவு தொடங்குவதிலிருந்து தொடங்கி இருக்கிறோம். அதைக்கொண்டே காலத்தை அளக்கிறோம். அந்த ஒரு திகதியை எவ்வளவு துல்லியமாகக் கணக்கிட முடியும் என்பதையே நான் உங்கள் முன் வைக்கிறேன். எனது பாட்டியின் கணிய முறையில்தான்.. இது வரை நாம் ஆண்டைக் கணக்கிட்டோம். அது சரியான தோற்றத்தை அளித்த போதிலும் நாம் மிகச் சிலநேரத்தைக் கணிக்கத் தவறிவிட்டோம். எனது மூத்தோரின் தொடர்ச்சியாக எனது கணியத்தை நிலவிலிருந்து தொடங்குவதற்குப் பதில் நிலவிலிருந்தும், கதிரிலிருந்தும் நான் தொடங்கியிருக்கிறேன்!”

கோகன் நிறுத்த அரங்கில் பெருத்த அமைதி நிலவியது. கணியச்சி காந்தளியின் பெரும் புருவம் ஒரு முறை உயர்ந்து தாழ்ந்தது.

“கதிரவளிலிருந்து பகல் மட்டுமே கிடைக்கிறது. அதோடு கொற்றவைத் தாய்க்காகச் சில வாதைகளை ஒதுக்கியிருக்கிறோம். இத மாத்துறது அறிவுக்கு எட்டிய செயலா..?”

காந்தளியின் பேச்சை இடை மறுத்தான் கோகன்.

“நிலவிலிருந்து தொடங்கினால் இரவு மட்டுமே கிடைக்கிறது. இரவு நமக்குப் பொதுவாகவே பயன்படுவதில்லை. பகலே நம்மை இயக்குகிறது. சூரியே நம்மை இயக்குவதாக என் உள்ளம் சொல்கிறது. இந்தக் குமரியின் நாடுகள் மட்டுமல்ல. மாந்தர் இடம் புகாத அனைத்து நிலங்களும் மரங்களும் காடும் நதியும் கடைசி உயிரும்கூடக் கதிரவளையே நம்பி இருக்கின்றன. நாம் வாழ்கிற இந்த நிலம் பல்வேறு இயற்கை அடக்கங்களைக் கொண்டது. ஆழி, நதி, பனி, வனம், பாலை, கோடு, நிலம் என அனைத்தையும் இணைத்து நாம் வாழ்கிற இந்தப் பருத்த இயற்கையின் பேருண்மையை நம் முதுவர்கள் அண்டமெனப் பெயரிட்டார்கள். இந்த அண்டத்தில் அவ்வப்போது மழையையும் சூறையையும் தீயையும் இயற்கையின் பேராற்றல் நமக்களிக்கிறது. அவை உருவாகும் விதமும்கூட நமது முன்னோர்களால் கணிக்க முடிந்தது. நமது

கணியர்கள் வகுத்து வந்த பருவங்களில் சிறு சிறு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் அவை ஒப்பக்கூடியதே. இந்த அண்டம் பிளந்ததாகவும், ஆழி உயர்ந்ததாகவும், உள் சுருண்டு போன வரலாறுகளை நம் முன்னோர்கள் அளித்திருக்கிறார்கள். அது பற்றிய காலங்களும் அதற்கான முன் நிகழ்வுகளை நமக்கு அளித்திருக்கிறார்கள். நமது அறிவர்களின் இடையற்ற பெரு முயற்சியால் நாம் வாழும் நிலத்தைத் தவிர மாந்தர்கள் வேறு எங்குமே இல்லை என்பதையும் நமக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள். அவர்களது கணிப்பின்படி இலெமூர்கள் நமது ஆதியாக இருக்கக் கூடும். இல்லாமல் போகவும் கூடும். மந்திகள் நமது முன்னோர்களாக இருக்கவும் கூடும். ஆக இந்த நிலமே ஏழ் குறும்பனையை நடுவாகக்கொண்டு சுற்றளவில் கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்குமாக நூற்றுச் சொச்ச காத தூரங்களில் மாந்தர் தோன்றி நிலைத்திருக்கிறோம். ஏதோ ஒன்றிலிருந்து மாற்றம் பெற்றே ஒவ்வொன்றும் உருவாகியிருக்க முடியும். இந்த நிலம்... காற்று... விசை... பொருள்... உயிர்கள்... அனைத்துமே ஒன்றிலிருந்து பலவாக, பலவற்றிலிருந்து ஒன்றிரண்டாகக் கிளைத்திருக்கும் வாய்ப்பே அதிகமென நமது முதுவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையும்கூட. நாம் பார்க்கிற திடப் பொருளுக்குள் திரவமிருக்கிறது. திரவப்பொருளுக்குள் திடமிருக்கிறது. எல்லாம் எல்லாவற்றையும் சார்ந்தே இருக்கிறது. அது எறும்பாக இருந்தாலும் சரி. ஆளியாக இருந்தாலும் சரி.. மாந்தராக இருந்தாலும் சரி... அதன் பொருட்டே எனது ஆய்வு. இருளை நாம் கடந்துவிட்டோம். நிலவில்லாத பொழுதுகளில்கூட மாந்தர்களின் தோல் ஏற்றுக்கொள்கிறது. சூடும் ஒளியுமாக இருக்கிற கதிரே... கதிரவளே நமது உடலுக்கானவளாக இருக்கிறாள். அண்டத்தின் வாழ்வின் ஒளி முழுமையாகக் கதிரவளிடமிருந்தே கிடைக்கிறது.. காந்தளி தாய் தனது உடலையே அண்டத்தோடு இணைத்துப் பார்க்கிறார்.. விசும்போடு உடல் கூறுகளை இணைத்துப் பார்க்கிறார். மாந்த உடல் மட்டுமல்ல... அனைத்துயிரிலும் அண்டம் தன்னைப் பொருத்திக்கொள்கிறது..”

காந்தளி ஏதோ சொல்ல வர,

“தெரியும். ‘ஏன் இயற்கைப் படைப்புகளில் ஆண்பால், பெண் பாலென்ற பேதப் பகுப்பு?’ என்று கேட்கிறீர்கள். மாந்தர்கள் மட்டும் இல்லை. இவ்வண்டத்தின் அனைத்து உயிர்களின் தோற்றுவாய் பெண்ணுயிரி. அவ்வுயிரே இவ்வண்டத்தின் ஆணிவேர். ஆகவே நிலவையும் கதிரவளையும் உங்களையும் ஒன்றாகப் பார்க்கிறேன்.

கதிரிலிருந்து ஒளியிலிருந்து முளைத்தவள். கதிரவள், ஒளியாள் என்றும் கொள்ளலாம்.''

காந்தளியின் முகம் சாந்தமடைந்து கனிவாகக் கோகனைப் பார்த்தாள். கோகன் முகம் மலர்ந்து பேரூக்கம் பெற்றான். காந்தளி அவனது கூற்றின் மீது பெரு நம்பிக்கையோடு கொண்டாடிப் பேச முற்பட, தடுத்து அவரை அமர்த்தினாள் மாச்சடை .

''காந்தளி தாயே புரிகிறது. ஆனால் நாம் விவாதிக்க வேண்டிய துறைகள் நிறைய உண்டு. அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்கள் சென்று சேர வேண்டும். கோகனின் விளக்கம் முழுவதுமாக முடிந்ததும் கொண்டாடலாம். செம்மான் கறியை வதக்கி வைத்திருக்கிறோம். தெங்கக் கள்ளும் வடித்து வைத்திருக்கிறோம். எல்லாம் முடிந்த பிறகு தின்று, குடித்து, புரண்டு கொண்டாடலாம் இப்போது பொறு. கோகன் முடிக்கட்டும். நீ உனது விளக்கத்தைத் தொடங்கலாம் கோகா.''

காந்தளிக்கு நிலையை விளக்கிய மாச்சடை அவளை ஒரு அழுத்தத்திற்குள் பிடித்து வைத்துக்கொண்டு, கோகனைக் கணியத்தை நோக்கி நகர்த்தினாள்.

''இப்போது நான் உணர்ந்தது எனது திறன் அல்ல. பல கணியர்கள் ஒன்றைத் தொட்டு வேறு ஒன்றாகக் குழம்பி இதுவரை வகுத்துப் புதிய ஒன்றாக நாம் கணக்கிடுகிற அனைத்தையும் தவிடு பொடியாக்கும் வகையில் ஓராயிரத்துச் சொச்சம் ஆண்டுகளுக்கு முன்னால் முதுவச்சி மதிவந்தி வகுத்த கணியம்தான்!''

அரங்கில் இருந்த தாய்கள் அதிர்ந்து பார்த்தார்கள். கோகனின் மூளை குழம்பிவிட்டதாக எண்ணினர். யாரை ஒதுக்கி வைத்துக் காலம் சுழல்கிறதோ அவளைக் குறித்துப் பேசுவது அங்கிருக்கும் எவருக்கும் பிடிக்கவில்லை.

''கோகா, மதிவந்தித் தாயின் ஆளுமையை நாம் புறக்கணிக்க வில்லை. நமது முதுவர்கள் மதிவந்தியைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். பிடிவாதமும் அகந்தையும் அவள் உடலோடு பிறந்ததாம். தான் சொல்வதைக் கண் மூடிக் கேட்க வேண்டும் என்று நமது தாய்களுக்குக் கட்டளை இட்டிருக்கிறாள். அதையும் தாண்டி மதிவந்தியின் பேச்சைச் செவி மடுத்துத்தான் பார்த்தனர். ஆனால் நடந்தது வேறு ஒன்று. நரம்பில் புடைத்து ஓடிய திமிரால் அவளிடம் பயின்ற அறிவர்கள் ஆயிரம் பேரோடு காணாமல் போனவள். எரிமலைக் குழம்புகளில் எல்லா ஆய்வையும் எறிந்துவிட்டு மாந்த இனத்திலேயே

இல்லாத வகையில் கூட்டுத் தற்கொலையை அரங்கேற்றிவிட்டாள். அவளைக் குறித்து அதன் பிறகு எந்த நாடும் பேசக் கூடாதென்றே முடிவு செய்திருக்கிறோம். ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு மதுவந்தியை நினைவூட்டுவது சரியா. அவள் காட்டிய கணிய அறிவைவிடப் பல மடங்கு முன்னேறிய பிறகு... பழையதில் போவது சரியா?"

காந்தளி மொத்தக் கூட்டமும் கிடுகிடுக்க உரத்து கூவினாள். கோகன் அமைதியாகக் காந்தளியை பார்த்தான். காந்தளியின் கண்கள் காந்தள் மலர்களைப்போலச் சிவந்து விரிந்தன.

"நாம் எவ்வளவு முன்னோக்கி நகர்ந்தாலும் நமக்குத் தாய் கொற்றவைதானே?"

"கோகா, விதண்டா வினை பேசாதே!"

"காந்தளி, எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு மதுரை பெருவியச்சி தாய் மாந்தரால் பறக்க முடியும் எனச் சொன்னபோது நமது மூத்தோர்கள் நகையாடினார்கள். அவளைப் பளித்தும் தூற்றினார்கள். பெருவியச்சி தன்னையே முன்னிறுத்தி உடலைக் காற்றாக்கிப் பறந்ததும் கொண்டாடினார்கள். நினைவிருக்கா... அவள், தான் சொன்னதை நிறுவத் தன்னை மீறிப் பயிற்சிசெய்து, தனது முயற்சியை உலகிற்குக் காட்டிய பிறகு எல்லாரும் கொண்டாடும்போது, வானத்திலிருந்து பறந்து விழுந்து ஒரு பறவை தன்னை முறித்துக்கொண்டதைப்போல முறித்துக்கொண்டு தன்னை நீத்தாள். நினைவிருக்கா?"

காந்தளிக்கு மட்டுமல்ல. எல்லாருக்கும் பெருவியச்சியைத் தெரியும். எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் பெருவியச்சி சிறு தெய்வம்போல வணங்கப்படுகிறாள். அவளது முயற்சிகளில் பல வெற்றிகளை அடைந்து பலர் தனது கண்ணுக்குப் புலப்படாத ஐம்புலன்களையும் கண்டு, கட்டுக்குள் வைத்துப் பல தடங்களுக்கு பயணமாகிக்கொண்டிருந்தார்கள். காந்தளிக்குப் பெருவியச்சியைப் பற்றி மாச்சடை சொன்னதுமே எதுவும் பேசத் தோன்றவில்லை.

"இன்றுவரை நாம் அவளை வணங்கி அவளது தரவுகளைக் கொண்டு அந்த அறிவின்படி பலர் பயின்று, உடம்பைக் காற்றாக்கித் தக்கையாக மிதந்து பறக்கவில்லையா? பறத்தலை எளிதாக்கியவள் அல்லவா பெருவியச்சி. பறந்து தன்னை முறித்துக்கொள்ளும்போது அவள், இதை நான் சொல்லவில்லை. நான் ஏற்கெனவே இருந்த பழைய முறையைச் சொன்னேன். மிகப் பெரிய கொடூர மிருகங்களை, ஆளிகளைவிடப் பல மடங்கு பெரிதான விலங்குகளைத் தாண்டித்

தப்பிக்கவோ, ஓடவோ முடியாதபடி மாந்தரிகள் நடுங்கி அஞ்சி ஒளிந்து வாழ்ந்தபோது காமாட்சி என்னும் முதுவச்சி தன் உடலைக் காற்றாக்கிப் பறந்த வரலாற்றை... இன்று அப்பெரு மிருகங்கள் இல்லையென்பதால் மறந்துவிட்டோம். நான் நினைவூட்டினேன். காமாட்சியிடமிருந்து அவள் கற்றாள். அவள் இறப்புக்குப் பின் அது எழுதப்பட்டு, அதன் பின் நம் மக்களில் சிலர் அம்முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். அதனால... முதலில் கோகன் என்னதான் மதிவந்தியை முன் வைத்துப் பேசுகிறான் எனப் பார்ப்போம். தவறாக இருந்தால் உன் அணியில் இருக்கும் அறுபத்தியொரு பேரும் சேர்ந்து மறுக்கலாம்... இப்ப... கோகனுக்கான நேரம்!”

மாச்சடை திட்டவட்டமாக, உறுதியாக நிறுத்தவும், காந்தளி புரிந்துகொண்டாள். கோகன் நிறுவத் தொடங்கினான்.

மதிவந்தி. கொஞ்சம் குழப்பமானவள். அவள் இரண்டு முடிவுகளை மாற்றிச்சொன்னதால் அவளது கணியத்தை அன்று யாருமே கண்டுகொள்ளவில்லை. அவளை அன்று எல்லாரும் தூற்றியதால் தனது அறிவை வரைந்தும், எழுதியும் வைத்தாள். அதோடு நிற்கவில்லை. நமது மரபில் கிழக்கிருத்தல்,மேற்கிருத்தல், தெற்கிருத்தல் நடைமுறை இருக்கிறது. முன்னோர்கள் இயற்கையால் அழிந்த திசைகளை நினைவேந்தி தங்களது இறுதிக் காலத்தை அவர்களுக்குப் படையலிடுவது வழக்கம். ஒரு பொழுதும் தன்னைத் தானே விரக்தியில் அழித்துக்கொள்ளுதல் கிடையாது. பெருவியச்சிகூட தற்கொலையாளி கிடையாது. முயற்சியில் அரை நுணுக்கத்தில் தோற்றவள். ஆனால் மதிவந்திதான் முதல் தற்கொலையாளி. அதற்குக் காரணம் அவளுடைய முடிவுகளை யாரும் கண்டுகொள்ளாமல் விட்டதுதான்.

பல்லாயிரம் ஆண்டுக் குறிப்புகளையும் அவற்றின் சாத்தியப் போக்குகளையும் இடைவிடாமல் ஆய்ந்தாள். பெரும் அறிவுச் செறுக்கித் தனது அறிவு அகந்தையால் அவள் ஆடிய ஆட்டத்தை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் பொறுத்துக் கொண்டார்கள்.

மதுவந்தி கதிரவளை முன் மொழிந்து முன் காலங்களில் விசும்பில் ஏற்பட்ட மாறுதல்களைத் துல்லியமாக அணுகினாள். பளிங்குக் கற்களில் குவிந்த ஆடிகளை உருவாக்கி ஒன்றிலிருந்து மற்றொன்று மற்றொன்றிலிருந்து இன்னும் நீண்ட தொலைவெனத் தூரத்திலிருப்பதை நெருக்கமாகப் பார்க்கும் வடிவக் கலையை கற்றாள். விசும்பில் திரளும்

நட்சத்திரக் கூட்டங்கள் தன் கண் முன்னே ஒளிர்வதை அவளே கண்டாள். அவள் பின்னே ஓர் அறிவர் கூட்டம் பெரிதாகத் திரள ஆரம்பித்தது.

தனது அம்புகளுக்கு முன்னால் தூரத்தில் ஓடும் மிருகத்தைக் கிட்டத்தில் பார்த்து எது குறிப் புள்ளியோ அதைக் கச்சிதமாகத் தாக்கி அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தினாள். இரவுகளில் குடில்களே உறங்கும்போது வெட்ட வெளியில் பளிங்கு ஆடிகளில் பலவற்றை இடைவெளி விட்டுவிட்டுப் பிரம்புகளில் கட்டி, தீயின் ஒளி பாய்ச்சி அதன் கூரில் வானம் பார்ப்பாள். ஒரு திகதி இரு திகதியல்ல. தனது பதினெட்டாவது தொடக்கத்திலிருந்து தற்கொலை செய்துகொள்ளும் நூற்றிப் பதினொரு வயது வரை அப்படித்தான் இருந்தாள்.

“மதிவந்தி... மருதாவூர் பக்கத்துல ஏதோ வானத்துல இருந்து பிளம்பு மாறிக் காட்டி மறைஞ்சு போச்சாம்..!”

அந்த இடம் தேடி ஓடுவாள். அவளுக்கு முன்னவர்களின் குறில்களை நெடில்களாக்கிப் பார்ப்பாள்.

“அடியே மதி... நெருப்புக் குழம்பு பக்கத்துல என்னமோ விழுந்துச்சாம். நெருப்புக் கொழம்பு பச்சச் தண்ணியா ஓடுதாம்..!”

யாருமே அண்ட அஞ்சுகிற எரிமலைக் குழம்புகள் நீராக ஓடிய தடங்களில் தனது உச்சிதனை முகர்வாள். அவள்தான் முதலில் இந்த நிலம் உருண்டுகொண்டே இருக்கக் கூடியது எனச் சொன்னவள்.

“நாமும் ஆடிக்கொண்டே இருக்கிறோம். நம்மை ஏதோ அணைத்துக்கொண்டே இருக்கிறது. இழுத்துப் பிடித்துக்கொண்டே இருக்கிறது!”

அவளை ஓடிவந்து அணைத்துக்கொண்டு, “எங்க உருளு பார்க்கலாம்!” என்றார்கள்.

“நமது நிலம் உழன்றுகொண்டே இருக்கிறது. அல்லது கதிரவளை நாம் சுற்றிக்கொண்டிருக்கிறோம்.”

ஈராயிரம் காதம் அலைந்ததில் ஓர் ஊரில் ஒருபோதும் கதிரவள் மறைந்ததே இல்லை. இங்கே மறையும்போது அங்கே விழித்திருக்கிறாள். இன்னும் தூரம் போனாலும் நாம் சொல்லும் நேர அளவில் வெளிச்சம் பாய்ச்சுகிறாள்.

அப்படியானல் நாம் இருப்பது ஓர் உருண்டைபோல ஒரு நிலம். உருண்டை நிற்காமல் சுற்றுகிறது. நாமும் அதனடிப்படையில் நிலையாகிறோம். கதிரவளும் சுற்றுகிறாள். பறவையை அடிக்கும் கவணை

வேகமாகச் சுற்றிக் காட்டினாள்.வேகமாகச் சுற்றும்போது கவணின் கல்லை வைக்கும் தோல் மெதுவாகச் சுற்றும்போது தெரியாமலும் வேகமாகச் சுற்றும்போது கூர்மையாக அந்தப் பகுதி தெரிவதைச் சுட்டிக் காட்டிப் பேசினாள்.

இப்படிக் கதிரவளும் நிலமும் சுத்தும்போது ஒவ்வொரு திங்களிலும் விசும்பில் ஏதோ ஒன்று வளைய வருகிறது. மதிவந்தி மிக அழுத்தமான தெள்ளலை வெளிப்படுத்தினாள்.

“நம் பார்வையில் என்னவாகப் புரிந்துகொள்கிறோமோ... அந்தத் திங்கள் முழுவதும் ஒரு திகதியில் எண்ணற்ற அதி உன்னத மாயங்கள் தோன்றி மறைவதைப்போல, திங்களிலும் மாற்றங்கள், விண்மீன்களின் கோலாகலம் நிகழ்கிறது. முதல் திங்கள் மறைந்து மீண்டும் மீண்டும் வெவ்வேறு புலங்களைக் காட்டி மீண்டும் முதலை நோக்கி வானம் வருகிறது... வானத்தில் ஓரைகளும் சூரியும் நிலவும், மீன்களும் ஒளிர்களும் இருளும் வந்துகொண்டே இருக்கிறன. அதனால் இதான் திகதி, இதான் திங்கள், இதான் ஆண்டு. இதுவும் ஒரு பெரும் சுற்றில் அறுபது ஆண்டுகளுக்குப் பின்னால் வேறொன்றாக மாறுகிறது, அதிலும் ஒரு சுழற்சி இருக்கக் கூடும்!”

திட்ட வட்டமாகத் தீர்மானித்து எழுதிவிட்டாள். முன்னவர்களின் கணக்குகளையும் எழுதி முன்னவர்கள் காலத்தையும் சேர்த்து வரைந்தாள். முன்னவர் காலக் கணக்கில் அந்தந்தக் காலங்களில் ஏற்பட்ட வெடிப்புகள் பற்றியும் கணக்கிட்டு அவர்களின் எண்ணியலையும் தனது எண்ணியல் மாற்றத்தையும் கணக்கிட்டு, அவளின் கணியத்தில் இத்தனையாவது ஆண்டுகளில் இவை நடக்கும் எனத் துல்லியமாக எழுதினாள். யாரும் அழித்து விடாமலிருக்க எரிமலைக் குழம்பு பொங்கிக்கொண்டிருக்கும் பகுதியில் இருந்த குகையொன்றில் தன் உயிரும் உடலும் வேக பாறைகளில் உறுதிப்படுத்திவிட்டு அந்தக் குகையிலேயே தனது அறிவர் கூட்டத்தோடு கூட்டுத் தற்கொலை செய்துகொண்டாள். அவளோடு ஆயிரக்கணக்கான அறிவர்களும் சேர்ந்து இறந்து போனதில் அன்றிருந்த முதுவச்சிகள் அதிர்ந்து போனார்கள். அறுபத்தியெட்டு நாடும் திகைத்துப் போனது.

மாந்த இனத்தில் இது பெரும் கேடான முடிவு. இம்முடிவை இனி வரும் பரம்பரைகள் தொடரக் கூடாது என்பதற்காகவே குகையைச் சுற்றிலும் வேலி அமைத்து அந்த இடத்திற்கு யாரும் எக்காலத்திலும்

போகக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள். அவள் எழுதியது மட்டும் குகையின் வெப்பத்தைத் தாண்டிக் கற்களில் அமிழ்ந்து போனது.

கோகன் அவளைக் கொஞ்சம் படிக்கத் துவங்கியிருந்தான். தனது பாட்டி தெளிச்சியின் கணியம் அவனுக்குப் பொய்க்கத் துவங்கியது. அப்போதிலிருந்துதான். மிக நம்பிக்கையாக மதிவந்தியை உணர்ந்து பேசத் துவங்கினான்.

“எனது கணக்குப்படி ஒருநாள் என்பது கதிரவ, நிலவு நிலையில் பன்னிரண்டு ஓரைகளாக அளக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒரு நாளை அறுபது நாழிகைகளாகக் கொள்கிறேன்.’’

மலைச்சியும் கோகனின் குழுவும் அறுபது குச்சிகளை மணலில் வரிசையாக வைக்கிறார்கள். முப்பது குச்சிகள் ஒரு பகுதியிலும் மீத முப்பது குச்சிகள் தனியாகவும் வைக்கிறார்கள்.

முதல் முப்பது குச்சிகள் வைத்த இடத்தில் கதிரவள் என்றும், அடுத்த முப்பது குச்சிகள் வைத்த இடத்தில் நிலவென்றும் எழுதுகிறான் கோகன்.

“ஒரு நாள் என்பதை ஆறு பொழுதுகளாக வரையறுக்கலாம் என்பதைத் திண்ணமாகக் கொள்கிறேன். கதிரவள் தோன்றும் நேரமே ஒரு நாளின் துவக்க நேரம். ஒரு கைச் சொடக்கை விநாடி எனலாம். அறுபது கைச் சொடக்கு ஒரு நாடி. இருபத்தி நாலு நாடிகள் சேர்ந்தது ஒரு நாழிகை. இரண்டரை நாழிகை என்பது ஓர் ஓரை.’’

கோகனின் அறிவர் குழுவில் இருந்தவர்கள் கோகன் சொல்லச் சொல்லத் தங்களது கையால் ஒருவர் சொடக்கிக் காட்ட, அதற்கேற்ற வகையில் ஒரு நிமிடத்திற்கான அறுபது குச்சிகளை மணலில் நட்டனர். இருபத்தி நாலு குச்சிகளைத் தனியே வைத்து ஒரு நாழிகை என எழுதினர். பின் இரண்டு குச்சிகளையும் அதனோடு அளவில் பாதியாக இருந்த ஒரு குச்சியையும் நட்டு ஓர் ஓரை என எழுதினர். கோகன் சொல்ல வந்த குறிப்புகளை அவையோர் எளிதாகப் புரிந்துகொள்வதற்காகக் கோகன் செய்திருந்த ஏற்பாடு அவையில் உள்ளோருக்கும் எளிதாகப் புரிந்தது. தாய் மாச்சடை வியந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.கோகன் தொடர்ந்து பேச, அதற்கேற்ற வகையில் தொடர்ந்து வரைந்தும் குச்சிகளைக் கொண்டு தெளிவாக அடுக்கியும் வந்தார்கள்.

“கதிரவள் தோன்றும் நேரத்திலிருந்து பத்து நாழிகை என்பது ஒரு பொழுது. ஓரையாககு கொண்டால் நான்கு. காலை, நண்பகல், எற்பாடு

என மூன்று பொழுதுகள். முப்பது நாழிகைகள் அல்லது பன்னிரண்டு ஓரைகளில் கதிரவள் மறைகிறாள். பின் மாலை, யாமம், வைகறை எனத் துவங்கி முடிவதிலும் மூன்று பொழுதுகள் முப்பது நாழிகைகள் அல்லது பன்னிரண்டு ஓரைகளில் முடிகிறது. மொத்தமாக ஆறு பொழுதுகளாகக் காலத்தைப் பிரித்திருக்கிறேன். துல்லியமாகக் கணக்கிட வேண்டும் என்கிற நோக்கத்தில் எங்களது குழு இரவு பகலாகப் பல நாள்கள் கணக்கெடுத்து இந்த முடிவை அறிவிக்கிறோம். மொத்தம் அறுபது நாழிகைகளை ஒரு நாளில் பகுக்கும்போது நமக்கு எண்பத்து ஆறாயிரத்து நானூறு விநாடிகளைக் குறிக்கிறது.''

கோகன் உருவாக்கிய இந்த நாள் கணக்கு, அங்கிருந்த கணியர்களின் மனதில் தெள்ளிய நீராக ஓடியது. யாரிடமும் எந்த மறுப்பும் இல்லை. எதிர் தரப்புக் கணியர்களுக்கு மாற்றுக் கருத்து எதுவும் உண்டா எனத் தலைமைத் தாய்கள் அவர்களைக் கவனித்தனர். யாரிடமிருந்தும் பேச்சு மூச்சில்லை. அவர்கள் கண்களைத் திறந்து வைத்துக்கொண்டே மூளை அடுக்குகளில் சரி பார்த்துக்கொண்டிருப்பதை ஊகித்தனர்.

''இந்த வகையில் கணக்கிடும்போது மிக எளிதாக ஒரு நாளை உணர முடிகிறது. அந்தவகையில் பூரணையில் இருந்து அமைவாதை வரை அரைத் திங்களாகவும், மீண்டும் அமைவாதையிலிருந்து பூரணையாக நிலவு பொழிந்து நிற்கும் காலம் அரைத் திங்களாகவும் வரையறை செய்திருக்கிறோம். ஆண்டின் தொடக்கமாகக் கதிரவள் கிழக்கிலிருந்து உதயமாவதை ஒட்டிக் கடகத் திங்கள் முதல் நாளைக் கொள்கிறோம். தேவையற்ற இணைப்புகளை நீக்கி விண்கோள்களில் நமது முன்னோர் கண்டு அவற்றிற்கு அடையாளமிட்டு அழைத்த பெயர்களான கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை, சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை ஆகியவற்றை முழுமைப்படுத்தி ஆறு திங்களுக்கு ஒரு முறை கதிரவள் தனது உதயத்தில் சிறிய மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதைக் கணக்கிட்டு ஓராண்டுக்கு இரு அயனமாகவும் பிரித்திருக்கிறோம். இன்னும் தெளிவுபட விளக்க எங்களிடம் ஏராளமான குறிப்புகள் இருக்கின்றன. அதைக் கணியர்களுடன் அமர்ந்து தொடர் விவாதங்களில் செம்மைப் படுத்துவோம்.

அது மட்டுமல்ல நமது திங்களில் பலவற்றில் பகல் கூடுதலாகச் சில நேரமும், இரவு கூடுதலாகச் சில பொழுதுகளும் வரும். அங்கும் எல்லா நாள்களுக்கும் பயன்படுத்தும் பொது விதியைக் கையாள வேண்டும். உதாரணமாக மேழத் திங்களிலும் துலைத் திங்களிலும் பகல் முப்பது நாழிகையும் இரவு முப்பது நாழிகையும் மிகச் சரியாக இருக்கும்.

ஆனால் விடைத் திங்களில் முக்கால் நாழிகை பகல் நீண்டிருக்கும். அதேபோல ஆடவைத் திங்களில் ஒன்றும் கால் நாழிகையும், கடகத் திங்களில் ஒன்றும் அரை நாழிகையும், மடங்கல் திங்களில் ஒன்றும் கால் நாழிகையும், கன்னித் திங்களில் முக்கால் நாழிகையும் பகல் அதிகமான நேரத்தை, அதாவது கதிரவள் மறைவதும் தோன்றுவதிலும் காலத்தை அதிகமாக எடுத்துக்கொள்கிறது.

அதேபோல நளித் திங்களில் முக்கால் நாழிகையை இரா அதிகமாக எடுத்துக் கொள்கிறது. சிலைத் திங்கள் ஒன்னே கால் நாழிகையையும், சுறவம் ஒன்றும் அரை நாழிகையையும், கும்பத் திங்கள் ஒன்றும் அரை நாழிகையையும், மீனத் திங்கள் முக்கால் நாழிகையும் எடுத்துக் கொள்கிறது. இவையே நான் அறிந்த கணிதம் இதுவே நமது முன்னோர்கள் வகுத்துச் சென்ற காலத்தேரின் முழுமை. இது அண்டம் முழுக்க மாறுபடும். சில நிலங்களில் மதிவந்தியின் கருத்துப்படி கதிரவளே தெரியாமல் போகவும் வாய்ப்புகளுண்டு. சில நிலங்களில் கதிரவளே முழுமையாக நீடிக்கும் வாய்ப்புகளுமுண்டு. எனது ஆய்வு நமது நிலப்பரப்பில்தான். மாந்தன் வாழும் இந்த நிலத்தைக் கொண்டே ஆய்வு. இது இன்னும் கூர்மையாகச் சொல்வதானால் நம்மைக் கதிரவளோ.. அல்லது கதிரவளையும் நிலவையும் நாமே சுற்றுகிறோமோ என்கிற அய்யப்பாடும் உண்டு. நானோ எனது இளையோரோ எதிர் வரும் கணியத்தில் எனது கருவை, இல்லையில்லை மதிவந்தியின் கணியத்தை உடைக்கவும் வாய்ப்புண்டு.

நிலத்தில் எந்த உயிரும் ஏதோ ஒரு விசையால் சமப்படுத் துவதால்தான் நிலையாக நடக்கிறோம். மேலே எறிகிற எந்தப் பொருளும் ஏன் கீழே வந்து விழ வேண்டும்..? பறவைகள் எப்படிப் பறக்கின்றன..? தண்ணீர் ஏன் மேலே போகாமல் அருவியாகின்றன..? ஏன் மேலிருந்து நீர் பொழிகிறது..? நம்மைச் சுற்றிப் படர்ந்திருக்கும் காற்றால் நாம் எப்படி வாழ முடிகிறது..? தாவரங்களில் இருந்து நீர் வெளியேறி விசும்பில் எப்படிக் கூடுகிறது..?”

கோகன் மேலும் அவற்றைக் குறித்து விரிவாகப் பேசப் பேச அரங்கு ஆழ்ந்த அமைதியைக் கொண்டிருந்தது. மலைச்சியும் அவன் சொல்லச் சொல்ல அவற்றைக் குச்சியால் அடுக்கிக் காட்டி ஒரு வரைபடம் போல மணலில் வரைந்திருந்தாள்.

கோகன் ஆண்டுக் கணக்கை முன்னோர் வரைவு செய்ததிலிருந்து ஒவ்வோர் ஆண்டுக்கும் இருந்த பழைய கணிய முறை மாற்றியமைக்க

வேண்டும் என்ற வேண்டுகோளையும் அரங்கில் வைத்தான்.

காந்தளி எதுவும் பேசவில்லை. தன் மனமெங்கும் இடம் வலமாகக் காலம் கலைந்து சிதைந்துகொண்டிருந்தது. அவளால் அறுதியிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும் கோகனின் கணியத்தை ஒப்புக்கொள்ளவே செய்தாள்.

ஏழ் பின்பாலையின் தாய் உட்பட அனைவரும் கோகனின் குழுவை ஏற்றுக்கொண்டனர். அதை அரங்கில் இருந்த அனைத்துத் தாய்களின் ஒப்புதலோடு முழுமையான ஆண்டுக் கணக்கை அடுத்த ஆண்டில் பொறுப்பேற்று நடத்தும் ஏழ் குறும்பனையின் பெருநகரில் வைப்பது என்றும் அதற்கு முன்னதாகக் கடகத் திங்களில் இருந்து அறிவர்கள் குழு இக்கணக்கைப் பயன்படுத்திக் கணிப்பு சரியானதா எனப் பார்க்க வேண்டும் எனவும், அதையும் அவையோர் ஆய்ந்து சரியானதாக இருக்கும் பட்சத்தில் பின்பற்றுவது என்றும் அதைப் பிரம்பூரின் கொற்றவையாட்டு விழாவில் முறைப்படி அறிவிப்பது என்றும் மாச்சடை அறிவிக்க, அனைத்துத் தாய்களும் குலவையிட்டு மகிழ்ந்ததை மலைச்சி எண்ணிப் பார்த்தாள்.

எல்லாராலும் கொண்டாடப்படுகிற கணியனாக இருக்கிற கோகனுக்கு என்ன தருக்கம். கோகன் ஏன் இப்படி சூல்போல் தனக்குள் முடங்கிக்கொள்கிறான் என மலைச்சியால் புரிந்துகொள்ள முடியவில்லை. கோகன் தன்னைப் பின்பற்றி ஆய்வுகளைத் தொடரும் தனது குழுவுடனும் பேசுவதை நிறுத்தி விட்டிருந்தான்.

ஆறு திங்களுக்கு முன்பிருந்த கோகன் இப்போதில்லை. ஆரம்பத்தில் கோகனின் தனித்திருத்தலை அவனது கணிய ஆய்வாக எடுத்துக்கொண்டாள் மலைச்சி. ஆனால், கோகன் அவனது குழுவினரிடம்கூட விவாதிப்பதில்லை. அவனது கணியக் குழு மொத்தமும் ஏழ் குறும்பனை நோக்கிச் செல்வதற்குத் தயாராக இருந்த பொழுதிலும் அவன் யாரிடமும் எதுவும் சொல்லாமல் அமைதி காத்தான். மக்கள் திரள் திரளாகப் பிரம்பூர் நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டே ஓர் அமைதியான இறுக்கத்தில் இருப்பதையும், அவன் மனம் வெந்தனலாகக் குழம்பிக் கொண்டிருந்ததையும் மலைச்சி கவனித்தபடியே இருந்தாள். அவனை முழுதாக உள் வாங்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தாள். அவனைப் பற்றிய அந்த நினைப்பின் வெப்பத்திலேயே அவளும் அரையுடம்பாகத் தேய்ந்துகொண்டிருந்தாள்.

ஏழ் குறும்பனையின் தாய்க்குச் செய்தியைச் சொல்ல ஆளனுப்பியிருந்தாள். அவளே எதிர் பாராத வண்ணம் தென்னன் வந்துகொண்டிருந்தான். செய்தியறிந்து தன்னை விசாரிக்கத்தான் தென்னன் வருகிறான் என ஆவலோடு அவனைக் காண ஓடினாள். அதற்குள் தனக்கு முன்னால் இடையில் வெளிப்பட்ட கோகன் தென்னனை அழைக்க, தென்னன் கோகனருகே போனான். கோகன் அவனிடத்தில் படபடப்பாக ஏதோ கூறினான். தென்னனின் உடல் மிதமான குளிரிலும் வியர்த்துக் கொட்டியது. முகத்தில் யாரோ அறைந்து அதனால் வெறிந்தவன்போல தென்னன் மாறினான். தென்னனுக்கு இதை எப்படிக் கையாள்வதெனப் புரியாமல் தடுமாறினான். இருவரும் அவசரமாக அந்த இடத்தை விட்டு அகன்றனர். கோகனின் உடம்பெங்கும் வியாபித்திருந்த இறுக்கம் தென்னனின் முகத்திலும் படர ஆரம்பித்தது!

8 கன்னித் திங்கள் முப்பதாம் திகதி

செங்கோடனுக்கு முன் வேங்கையும் கடம்பமும் கருங்காலியும் சந்தனமும் என நூற்றியெட்டு அடிமரக் கட்டைகள் எரிந்துகொண்டிருந்தன. அதன் மீது முன்னூற்றுப் பத்துப் பேர் புங்கைக் கொட்டையை நசுக்கி எடுத்த எண்ணெய்யையும் மிருகக் கொழுப்புகளிலிருந்து சேகரித்த எண்ணெய்யையும் ஊற்றிக்கொண்டிருந்தார்கள். செந்தீ கொழுந்து விட்டு

எரிந்துகொண்டிருந்தது. விசும்பு பிளந்து அதிலிருந்து தரையில் தீக்கொட்டித் தரையெங்கும் தீயாகப் படர்ந்ததுபோலிருந்தது அவர்கள் தீயெரித்த பகுதி. அதில் உயிரோடிருந்த கிழட்டு மாந்தரிகளைக் கட்டித் தூக்கிப் போட்டார்கள். அவர்கள் நெருப்பில் கதறி வெந்து உருகி உடலில்லா எலும்பாகச் சரிவதை எந்தவித அசூயையும் இல்லாமல் வேடிக்கை பார்த்தார்கள். சிலர் அவர்கள் வேக வேகமாக இறைச்சியிலிருந்து எடுத்த கொழுப்பு எண்ணெய்யை அள்ளி ஊற்றினார்கள். எலும்புகளும் வெடித்து வெந்து தீயாகிக் காற்றில் காரலைப் பரப்பிக் கலைந்து ஒதுங்கியதைப் பற்றி அக்கறைப் படவில்லை. அவர்கள் அப்படியானவர்கள்.

அது சிற்றூருமல்ல. பேரூருமல்ல. நகரமுமல்ல. வனமும் அல்ல. வறண்ட பாலையுமல்ல. செம்மண்ணுமல்ல. கரு மண்ணுமல்ல. கலவையான சொதசொதப்பான பிராட்சை மண் நிலமது. ஆழியின் ஒரு கரையும் பண்மலை அடுக்ககத்தின் ஒரு நதியும் அதனோடு உறவுகொண்டாடியது. வாழ அஞ்சுகிற மாந்தர்களைக் கொண்ட பகுதி அது. தென்பாலியும் கொல்லமும் அதன் முந்தைய பெயர்கள். இரண்டும் ஒன்றாகி மூர்க்கங்குடி என்றானது. அதற்கும் தலைவனிருந்தான். அவனுக்குப் பெயரிருந்தது.

பெருந்தேற்றன். நீட்டி அளந்தால் பத்து முழம் ஒரு சாண் ஏழு விரல் தொடுவான். மிருகங்களுடன் மோதி மோதி உடலெங்கும் தழும்புகளைக் கொண்டவன். பிசிராகிப் போன நெடுஞ்சடை முடி கொண்டவன். பெருந்தேற்றன் உடல் முழுக்க மாந்த மண்டையோட்டு மாலையை அணிந்திருப்பான். அவன் வருவதைப் பத்துக் காதத் தொலைவில் இருந்தே கணித்து விடலாம். உடலெங்கும் குருதி தெறித்தே சிவந்து கிடக்கும் அவனது மார்பு மற்றும் உடலின் வீச்சம் அத்தகையது. நூற்று நாற்பது வயதுகளைக் கடந்தும், கிழடு தொடாமல், நரை பிடிக்காமல், தோல் சுருங்காமல், பிளந்த கருங்காலி மரத்தின்

இணைப்புத் திசுவிலிருந்து புறத்துக்கு வந்த இளஞ் சிவப்புத் திசுவைப்போல நடு முதுகு இறுகியவன். கைகளும் கால்களும் கழுத்தும் புட்டமும் தொடையும் பெருகி இறுகியவன். பெருந்தேற்றனுக்குத் திட்டுத்திட்டாக உடலின் கருமை பிறழ்ந்து ஆங்காங்கே பொட்டுகளைப்போலப் கருத்த உடம்பில் வெளிர் தோல்கள் முளைத்திருந்தன. அங்கிருந்த பலருக்கும் அத்தகைய உடல் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தது.

அந்த நிலத்தைப் பொறுத்தவரை அறமென்று ஏதுமில்லை. சட்டம் என்று ஏதுமில்லை. பெருந்தேற்றன் என்ன சொல்கிறானோ அதுவே அறம். அதுவே சட்டம். அவனது சொல்லுக்கு மறுசொல் பேசிய ஒருவரும் உடல் பொருள் ஆவியுடன் இருக்க முடியாது. அவர்களின் உயிர் போகப்போக, அவனது உடலை செம்மானின் கூரிய கொம்புகளால் குத்திக் கிழிப்பர். கிழிக்கும்பொழுதே சிலர் வெறி பீடித்து அள்ளைச் சதைகளைக் கடிப்பர். காலின் சதைப் பகுதியும் இரத்தம் பாய்ந்தோடும் கணையமும் பெருந்தேற்றனுக்குப் பிய்த்துக் கொடுத்துவிட வேண்டும். மற்றவற்றைப் பிய்ப்பவர், கடிப்பவர் தின்றுகொள்ளலாம். மாந்தரிகளுக்கு அங்கே எந்த அதிகாரமுமில்லை. வல்லுறவுக்கும், மழலை ஊற்றெடுக்கும் ஓர் இயந்திர உடலாக மட்டுமே பயன்படுத்தப்பட்டனர். தன்னைவிட உயரம் அதிகமான மாந்தரிகளிடமிருந்து மழலையை மட்டும் பெற்றார்கள். மாந்தரிகளிடமிருந்து பிறக்கும் மாந்தனைக் கொண்டாடினார்கள். மாந்தரிகளைக் கட்டிவைத்து வதைத்தார்கள். வெறிக் கூச்சலோடு கூட்டாகத் தூக்கிக்கொண்டு போய் வல்லுறவு கொள்வது அங்கே மிக இயல்பான ஒன்று. எல்லா மிருகங்களிலும் ஆண் மிருகம் எக்காள நிலை அடைகிறது. ஆண் மிருகம் தனக்கானதைச் சாதித்து நிமிர்கிறது. பின்புறம் காட்டும் பெண் மிருகங்கள் எல்லாவற்றையும் தாங்கிக் குட்டிகள்ப் போட்டு பாதுகாத்து இறந்துபோகும். மடந்தையாக உழலும்போது வெறி கிளைத்த மாந்தர் கூட்டத்தில் மாந்தரிகள் மட்டும் எப்படி எல்லாரையும் கட்டுப்படுத்த முடியும். அறிவு விதை கிளைத்தாலும் ஆணுக்குக் கீழ்தானே மிருகங்களைப்போல இயங்க வேண்டும். மாந்தர் ஒரு வகை ஆதி மிருகம்தானே என்கிற தன் புள்ளிகளைச் சேர்த்த ஆண் கூட்டத்தால் மூர்க்கங்குடி வேறாகத் தன்னைப் புடைத்துக்கொண்டது.

அவர்கள் அமைத்திருந்த வீடுகள் முழுக்க மிருக எலும்புகளால் ஆனவை. ஆதி மிருகங்கள் இறந்து செல்லரித்த மலைபோல எலும்புகளாக மிஞ்சியிருந்த பகுதியில் அதுவும் ஒன்று. வானளவைத் தொடும் மிருகங்களின் எஞ்சிய எலும்புக் கூடுகள் நிறைந்த பகுதியது.

சிம்மயாளியைப்போலப் பல மடங்கு பெரியவையாக மிருக எச்சங்கள் இருந்தன. அவையே பெரும் கூடார வீடுகளைப் போலிருந்தன. அவர்கள் மிருகத்தைக் கொன்று அதன் உடல்களைக் கிழித்துக் குடைந்து, உடல் தசைகளைத் தின்றுவிட்டு அதன் தோல்களை உடலுக்குக் குளிரின் கதகதப்பிற்காக மட்டுமே போர்த்திக்கொள்வார்கள். அது அலங்கரிப்பிற்காக மட்டும்தான். உடல் பாகங்களை மறைக்கும் சிந்தனையில்லை. அதுவே ஆடை. மாந்தச் சிந்தனையிலிருந்து விலகிச் சில ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து மாந்தர்களின் மீதான தீராத வன்மம் கொண்ட மிருக மாந்தர்கள்.

மிருக வேட்டையும், காமமும் மட்டுமே குவிந்து கிடக்கிற மூர்க்கன் குடியில் ஒவ்வொருவனுக்கும் ஒரு கனவிருந்தது. அனைவரின் கனவும் ஒன்றாகவே மாறிப் போனது செங்கோடனுக்குப் பிறகுதான். செங்கோடனின் வழியில் வாய்த்தவனாக, பிரதியாக பெருந்தேற்றன் மாறிப் போனான்.

செங்கோடன் ஏழ்மதுரையில்தான் பிறந்தவன். ஏழ் மதுரையின் தலைநகரத்தின் தாய்தான் இவனுடைய அம்மா. அவள் தமிழி. தமிழியின் தாய்க்குத் தரித்ததில் தமிழி மட்டுமே மாந்தரியாகப் பிறந்தாள். மற்றதெல்லாம் ஆண் குழந்தைகள்.

ஏழ்மதுரையின் பொறுப்பைத் தனது தாய்க்குப் பின் ஏற்ற தமிழி மிகச் சிறப்பாக ஒரு வகை அறிவுத் தளத்தில் ஏழ் மதுரையின் செங்குன்றத்தை நடத்தினாள். முதல் முதலாக அவளது அதிகாரத்தில் அசைவெழுத்துகளை உருவ அமைப்பிலிருந்து கோட்டுருவ அமைப்புக்கு மாற்றியமைக்கத் தொடங்கினார்கள். தமிழி ஒரு நாட்டின் தாயாக இருந்ததைக் காட்டிலும் மொழியின் வளர்ச்சியிலேயே அவளது ஆர்வம் பற்றியெறிந்தது. அறுபத்தியேழு நாட்டின் தாய்களின் முன்பு ஏழ்தெங்கத் தலைநகர் மறையூரில் நடைபெற்ற கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் முதன்முதலாக அவளே அறிவராக நின்று தனது ஆய்வு முறைகளை வெளியிட்டாள்.

அதுவரை உருவத்தைக் குறிக்கும் வகையில் வரைந்தோ, எழுதியோ வந்தனர். அதனால் பல செய்திகளைக் குறிக்க
முடியாமல் நுண்ணுணர்ந்து படிக்கும் முறை மட்டுமே இருந்தது. அதனால் அறிவர்கள் தளத்தில் மட்டுமே மொழியுருவம் புழங் கியது. கடைசி மாந்தருக்கும் புரியும் படியாக உருவாக்க வேண்டிய தேவையை உணர்ந்தாள். அது தமிழியைத் தொடர்ந்து சிந்திக்கத் தூண்டியதன்

விளைவாக அசைவெழுத்து முறையிலிருந்து கோட்டெழுத்துக்கு எழுத்து முறையை மாற்றியமைக்கத் தொடர்ந்து முயன்றாள்.

எண்ணிலடங்கா உயிர்களையும் மாந்தப் பெயர்களை, மருத்துவக் குறிப்புகளையும், வரலாற்று ஆய்வகங்களிலும் குறிப்பான சொற்களை எளிய முறையில் எழுதி அதன் மூலம் தனது மக்களுக்குப் புதிய விடியலைக் காட்ட முயன்றாள்.

மொழிக்கான எழுத்தை உருவாக்குவதில் தமிழிக்கு முன்பாகவே தொடர் முயற்சிகள் இருந்தாலும் அவை அசைவெழுத்து முறைமைக்குள் சிக்கிவிட்டன. அதிலிருந்து குறிப்புணர்த்தல் உருவாக்குவதில் அதிக ஆர்வமில்லாமல் முடங்கியிருந்தது மொழியியல் துறை. எழுதி என்ன செய்வது. தேவையான அளவிற்குத் தீட்டும் முறையாலும் சிற்சில குறிப்புகளை அதில் அடக்குவதின் மூலமாகவும் மாந்தர்கள் புரிந்துகொண்டுவிடுகிறார்கள். தேவைக்கேற்ப உருவ எழுத்துகளின் புரிதல் தேவையான அளவிற்கு நீடிக்கும்போது அதற்கு மேலான அவசியம் ஏதுமில்லை என்று அறிவிக்கப்படாத முடிவொன்று மூழ்கியிருந்தது.

தமிழி அசரவில்லை. அசை எழுத்துகளைத் தொடர்ந்து கவனித்து வந்தாள். அசை எழுத்துகளில் இருந்து அதன் வடிவத்தைச் சிதைக்காமல் அதைக் குண்டுக் கோடுகளாக்கப் பயிற்சி மேற்கொண்டாள். ஒவ்வொரு கோடுகளுக்கும் ஓர் ஒலிப்பு முறையை மனதில் ஏந்தித் தொடர் பயிற்சிகள் செய்தாள். கோடுகளை இணைத்துச் சொல்லிப் பயின்றாள். யாரிடம் பேசினாலும் பேசும்போது உருவாகும் சொற்களுக்கு மனதிற்குள் கோட்டு எழுத்துகளை இணைத்துப் பார்த்தாள்.

காடுகளுக்குள் புகுந்து மரம் செடிகளையும் மிருகங்களையும் கூப்பிட்டுப் பார்த்தாள். மூளைக்குள் எழுத்துகளும் சேர்ந்து நாக்கைச் சுழட்டியது. சிறு முயற்சி அவளைப் பெருகச் செய்தது. தனது தம்பிகளுக்கும் அதைப் பயிற்சி அளித்தாள். அதன் மூலம் தன்னையும் திருத்தினாள். அவர்களையும் திருத்தினாள்.

ஏழ் மதுரையின் தலைநகரில் மொழியை உருவாக்கும் புதிய ஆய்வகச் சாலையொன்றை அமைத்து அறுபத்தியெட்டு நாட்டிலும் இருக்கிற அறிவர்களையும் சிற்பிகளையும் ஓவியர்களையும் அழைத்து எல்லாவற்றையும் வரைந்தும் செதுக்கியும் திரட்டினாள்.

தென்மதுரையின் அரங்கில் அவை முன் வைத்துப் பேசியும் எழுதியும் இதுவரை சேகரித்த எழுத்துச் சிற்பங்களையும் தேக்க இலைகளைப் பதம்போட்டு அதில் வரைந்து வைத்திருந்ததையும்

காட்டினாள். அவள் உருவாக்கத்தில் மாந்தர்கள் வழக்கத்தில் புழங்கும் நானூறு சொற்கள் உருவாகியிருந்தன. கல்லில் உருவங்களை உள்ளபடியே செதுக்கும் மாறன், தமிழியை முழுச் சிலையாக, அவளின் பிரதியாக, அவளேயாகச் செதுக்கினான். கல்லைச் செதுக்கிச்செதுக்கித் தமிழியின் மனதைச் செதுக்கினான் மாறன். மாறனும் தமிழியும் அனைத்து நாடுகளின் விதிகளின்படி காத்திருந்து திருமணம் செய்துகொண்டனர்.

ஏழ் மதுரையின் நகர, கிராம, பேரூர்களின் அமைப்பு சதுர வடிவத்தில் எழுப்பப்பட்டிருந்தது. அறுபத்தியெட்டு நாடுகளில் ஆழிப்பரப்புகளில் இருக்கும் குடில்களைத் தவிர மற்றவை ஒவ்வொரு நிலத்துக்கும் தக்க வேறுபடும். ஏழ் மதுரையைப் பொறுத்தவரையில் தரைக் குடில்கள்தான்.

மலையொதுக்கத்திலிருந்து பெரும்பாலான ஊர்களும் பேரூர்களும், நகரங்களும் தள்ளியே உருவாக்கப்பட்டன. மழைகளின் நீர்த் தடங்களில் ஏழ் நகரங்களும் அதனை ஒட்டியே பேரூர்களும் அமைந்திருந்தன. மலையொதுக்கம் தாண்டிச் சமவெளிகளில் உருவாகியிருந்த நகர்களில் காற்றின் திசை, வெப்பத்தின் நிலைக்குத் தகுந்தார்போல சதுர வடிவத்தில் குடில்கள் உருவாக்கப்பட்டிருந்தன. நன்னீர்ப் போக்கும் கழிநீர்ப் போக்கு முறையும் ஏழ் மதுரையில் மாறியிருந்தது. தரைக் குடில்களும் அதையொட்டி இருவகைக் கால்வாய்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒரு கால்வாயில் நதிநீர் உள் நுழைந்து வெளியேறும். மறு கால்வாயில் கழிவு நீர் வெளியேறும். குடிலமைப்பில் காற்று பாயும் திசைகளுக்குச் சாளரமும் மேலே செம்மண்ணைத் தீயில் சுட்டு உருவான நீளமான கட்டைகள் போன்ற ஓடுகளால் மேற்பரப்பு வேயப்பட்டிருந்தது.

கருங்கல் சுவர்களால் சுவர் எழுப்பி அதில் முழுக்க மண் மெழுகி அதன் மீது சுண்ணாம்பையும் மூலிகை இலைகளால் அரைத்து வரைந்த படங்களையும் கொண்டிருந்தது.

எல்லா நிலத்திலும் ஏழ் மதுரையைப் பொறுத்தவரை இத்தகைய அமைப்பே நீடித்தது. அறுபத்தியெட்டு நாடுகளிலும் பெரு நகராக இருந்தது ஏழ் மதுரையின் தென்மதுரையே. தென்மதுரையில் மட்டும்தான் நானூறு ஆயிரம் மாந்தர்கள் அதிக ஒப்பமாக வாழ்ந்தனர்.

தமிழிக்குத் தனக்கு உடன் பிறந்த பெண்கள் இல்லாததால் உடன் பிறந்த தமக்கன்களின் அதிகாரத் தோரணை உள் மட்டத்தில் நிரம்பியிருந்தது. தமிழி தனது அதிகார எல்லைகளில் தனது

அண்ணன்களையும் தம்பிகளையும் இணைத்திருக்க ஒரே காரணியம்தானிருந்தது. தனது மொழி முயற்சிகள் தடையில்லாமல் ஈடேறும். புதிய சொற்களும் புதிய எழுத்துருவின் மூலம் மாந்த உலகில் பெயரற்ற செடிகளும் கொடிகளும் விலங்குகளும் பறவைகளும் கண்ணில் தென்படும் உயிரிகளும் கண்ணில் தென்படாத உயிரிகளும் பெயர் பெறும். அசைவெழுத்து முறையில் முறையில் ஒரு மரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல மரம் போலொன்றை வரைந்து அந்த மரத்தின் குறிப்பான இலைகளின் வேறுபாட்டைக் கணித்து வேறுபடும் தன்மையைக் கொண்டு அதற்குக் குறிப்புக் கொடுத்துப் பெயராக்கி இருந்தார்கள். தமிழி அந்தவகையில்தான் புதிய பெயர்களைச் சூட்டினாள். ஆனால், எழுதும்போது தனித்திறன் படைத்த அறிவர்கள் வரைஞர்களைக்கொண்டே அதைச் செய்ய முடிந்தது.

இதற்காகப் பல காலம் முயன்று இருபத்து நான்கு எழுத்துருக்களை உருவாக்கினாள். இருபத்து நான்கு எழுத்துகளையும் கொண்டே அனைத்துச் சொற்களையும் எழுதிப் பார்த்தாள். உடலும் அதனுள்ளே உடலை இயங்க வைக்கும் உயிரைப் பற்றிய ஞானம் அடைந்தவளாக, ஐந்து எழுத்துகளை உயிர் எழுத்தாகவும் பதினெட்டு மெய் எழுத்தாகவும் கண்டடைந்தாள். எழுத்துகள் ஐந்தும் தடைபடாமல் குரல்வளைவில் இருந்து நேரடியாக வெளிப்பட்டதால் அதை உயிராக்கினாள். நெஞ்சிலிருந்து காற்று எழுத்தை உச்சரிக்கும்போது சிறு தடையேற்பட்டு வெளிவரும் எழுத்துகளை மெய்யாக்கினாள். நெடில் எழுத்தின் தேவைக்காக ஒரே ஒரு குறியீட்டு எழுத்தையும் உருவாக்கினாள். எண் முறைகள் ஏற்கெனவே செழித்து வளர்ந்திருந்தபடியால் அவளால் எழுத்தை உருவாக்க முடிந்தது. தமிழியிடம் எழுத்து முறைமையைடக் கற்றுத் தேர்ந்த ஆறு நூறுக்கும் மேற்பட்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் தமிழியின் மனவோட்டத்தை நன்கு அறிந்தவர்கள்.

அ,இ,உ,எ,ஒ -உயிர் எழுத்துக்கள்.

க,ங,ச,ஞ,ட,ண,த,ந,ப,ம,ய,ர,ல,வ,ழ,ள,ற,ன...மெய் எழுத்துகள்.

நெடில் குறியீடு -1

என்றாக்கினாள்.

அதன் மூலம் சொற்களை எளிதாக எழுதினாள்.

தாய் என்பதை த அ1இய,

மரம் என்பதை மர 1ம,

ஆண்டு =அ1ணட உ,

செடி =ச எ ட இ,

மலர் =மல1ர ,

கனி= க னஇ,

வனம் =வன அம,

வில் =வ இ1ல,

ஆறு = அ1ர உ

தனது ஆய்வால் புதிய அலையொன்று உலகெங்கிலும் உருவாகப் போவதை அவள் மனது நம்பியது.

இதனால் தமிழியால் நகர நிர்வாகத்தைக் கவனிக்க முடியவில்லை. தமிழியின் நகரம் ஒழுங்கு சீர் நிலையில் இருந்து புரண்டுகொண்டிருந்தது. தமிழிக்கு பெண் குழந்தையேதும் பிறக்கவில்லை. பிறந்தவை அனைத்தும் ஆண் குழந்தைகளே. மூத்தவன் செங்கோடன்.

தமிழியும் ஒரே பெண்ணாகப் பிறந்தாள். அவளுக்குப் பிறந்தவர்களும் ஆண்களாகவே இருந்தனர். ஏழ் மதுரையின் தலைமையேற்க அறுபத்தியெட்டு நாட்டிலும் இல்லாத விதமாக ஆண் தலைமையாகச் செங்கோடன் உருவானான்.

அவன் வேட்டைக்குச் சென்றால் வகை தொகையில்லாமல் விலங்குகளைக் கொன்றான். உணவுக்கான வேட்டையில் குட்டி மிருகங்களையும் வயிற்றில் குட்டிகளைச் சுமக்கும் மிருகங்களையும் கொல்லக்கூடாது என்பது காலகாலமாக இருந்து வரும் எழுதப்படாத நியதி. அதைத் தகர்த்துத் தன் மனம்போன போக்கில் உழன்றான். உணவுக்காகத்தான் வேட்டை என்பது போய் தனது திறத்தை நிறுவக் கண்ணில் தென்படும் எல்லா மிருகங்களையும் கொன்றான்.

அவனது இரண்டாவது வெறியாக மாந்தரிகள் இருந்தார்கள். நகர அரங்கிற்கு விவாதிக்க வரும் சிறு வழக்குகளில் மாந்தரிகளைப் பிரித்துத் தன் வசப்படுத்தினான். காமம் அவனது தலையில் புதிய வடிவத்தில் அமர்ந்துகொண்டது. எல்லையில்லாக் காமத்தின் அடிகளை நுனிகளைத் தேடி வெறியோடு அலைந்தான்.

தமிழியிடமும் மாறனிடமும் இதைக் குறித்த செய்திகள் அரசல் புரசலாக வந்தது. செங்கோடனிடம் கடுமையாகச் சொல்லிப் பார்த்தாள். உனக்கான இணையை நீயே தேர்ந்தெடு. அல்லது நாங்கள் தேர்ந்தெடுக்கிறோம். திருமணத்தின் வாயிலாக ஓர் எளிய வாழ்முறையைக் கையாள்வதே ஒரு நகரக் காவலனுக்குப் பேரழகு என்று மன்றாடிப் பார்த்தனர். அவன் காதுகளில் வண்டு புகுந்ததாக நினைத்துக் குடைந்தபடியே சென்றுகொண்டிருந்தான்.

தமிழியின் உள்ளுக்குள் புரண்டுகொண்டிருந்த மொழியறிவுக்குள் அவள் முடங்கிப் போனாள். செங்கோடனைப்போலவே அவனுக்கு இளையவர்களும் வாய்த்தனர்.

ஏழ் மதுரையின் மற்ற நகரத் தாய்களுக்கும் இது எதிரொலித்தது. எல்லா நாட்டிலும் தாய்மாமன்கள் இணைத் தலைமைப் பொறுப்பில் இருப்பார்கள். தாய்மாமன்கள் இல்லாமல் வளர்ந்த செங்கோடனுக்கும் அவனது தம்பிகளுக்கும் தாய்களின் நோக்கத்தைப் புரியவைக்க முடியவில்லை. கட்டுப்படுத்தப் போராடினார்கள். பொதுவாகத் தனி மாந்தரிகளும் மாந்தர்களும் இதுபோன்ற குழப்பமான சிறு நடவடிக்கையில் ஈடுபடும்போது கிராமத்து, பேரூர்களின் நகரங்களின் தலைநகரங்களின் தாய்களும் தாய்மாமன்களின் முன்னிலையில் தீர்த்து வைக்கப்படும். மிக அரிதான வழக்குகளுக்குத் தென்பாலிக்கோ, கொல்லத்திற்கோ அனுப்பி ஆறு திங்கள் தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அது எல்லா நாடுகளிலும் எதிரொலித்துப் பெருங் குழப்பத்தை உண்டு பண்ணியது.

அனைத்து நாடுகளின் தாய்களும் இணை அதிகாரம் பொருந்திய தாய்மாமன்களும் நிறைந்த அரங்கில் வரலாற்றில் முதலாகத் தலைமையில் இருக்கும் செங்கோடன் தென்பாலிக்கு அனுப்பப்பட்டான். அவனோடு சேர்ந்து அவனது தம்பிகளும் அவன் உருவாக்கிய ஒரு சிறு குழப்பப் படையும் சேர்த்து அனுப்பப்பட்டனர். ஆறு திங்கள் அவன் காடுகளில் வாழ வேண்டும் என்பது தண்டனை.

ஆதியில் கணக்கு வழக்கில்லாத பாலுறவும் அதனால் சண்டைகளும் ஆற்றாமைகளும் பொறாமைகளும் கோபமும் நிறைந்து வழிந்துகொண்டிருந்தது. மிருகத்திலிருந்து தோன்றியதால் மிருகங்களைப்போலவே நடந்துகொண்ட மாந்தர்களைக் கொற்றவைதான் செதுக்கினாள். ஒரு சிறு படையை உருவாக்கிச் சிக்கல்களைத் தீர்த்தாள். ஓர் ஆணுக்கு ஒரு பெண்தான் என்று

திட்டமாக்கினாள். இருவருக்கும் ஒத்துப் போகவில்லை என்றால் இருவரும் பொதுவில் அறிவித்துவிட்டுப் பின் தனக்கான இன்னொரு துணையைத் தேடலாம் என்று முடிவு செய்து அதை நடைமுறைப்படுத்தினார்கள். அதனால் தான் அவள் கொற்றவையாக வணங்கப்பட்டாள். கொற்றவைகளில் இவளும் ஓர் ஆதிக் கொற்றவைதான். அதுவே உருமாறி வந்து நாகரிகச் சமூகமாக அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள்.

செங்கோடனுடன் போனவர்கள் செங்கோடனுடன் நின்று போனார்கள். ஏழ் மதுரைக்குள் அவர்கள் யாரும் திரும்பி வரவே இல்லை. தமிழியும் மாறனும் இணைந்து தெற்கிருந்து உயிர் நீத்தார்கள். கல் பதுக்கையெங்கும் அவளது அறிவுச் செறிவை எழுதி வைத்துக்கொண்டாடினார்கள் மாந்தர்கள்.

தமிழியின் பெயராலேயே அவளது மொழி முறைக்குத் தமிழி என அவளது கல் பதுக்கையில் எழுதி அதையே எல்லா நாடுகளுக்கும் அறிவித்தார்கள். அவர்கள் பேசுவதிலிருந்து எழுதவும், எழுத்துருக்கள் அனைத்துக் கடைக்கோடி மாந்தர்களிடம் செல்லவும் பத்து வயதிற்கு மேலான அனைவரையும் மொழியைக் கற்கவும் கல்விச் சாலைகளைத் திறந்து அறிவர்களைப் பெருக்கினார்கள். ஏழ் மதுரையைத் தமிழியின் சிற்றன்னை மகள் வல்லத்தி தலைமையேற்று நடத்தினாள்.

செங்கோடனைப்போலச் சிலர் தென்பாலிக்கும் கொல்லத்திற்கும் தண்டனைக் காலத்தில் சென்று தன்னை மாற்றியமைத்துக்கொண்டு மீண்டு வந்திருக்கின்றனர். பலர் திரும்பியதே இல்லை. காமத்தில் திளைத்தும், ஒழுங்கு சீர்களை மீறியும் தனது தாய்களையும், தமையன்களையும், குழந்தைகளையும், விதிகளை மீறி மிருகங்களையும் கொன்ற பலர் அக்காட்டில் இருந்தனர். அக்காடு தென்பாலியையும் கொல்லத்தையும் இணைத்திருந்தது.

செங்கோடன் திரும்பும் எண்ணத்தில் இல்லை. அவனது தம்பிகளுக்கும் அவர்களுடன் சென்ற மாந்தரிகளுக்கும் கட்டற்ற இந்த வாழ்வியல் பிடித்திருந்தது. அதுவே நிலைத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் மூர்க்கங்குடியர்களாக மாறிப்போனார்கள். இந்தப் பரம்பரையில் தொடர்பவன்தான் பெருந்தேற்றன்.

பெருந்தேற்றன் மூர்க்கங்குடியை வழி நடத்துபவனாக மாறினான். அவனது மனதில் வேரொன்று குடியேறியது. பெருந்தேற்றன் அக்காட்டிற்குப் பொறுப்பேற்றான். மூர்க்கர்களை இணைத்து

மூர்க்கங்குடி எனப் புதிய பெயரிட்டு தானே வல்லமையுடையவனாக மாற்றிக்கொண்டு குரூரமான விதிகளை உருவாக்கினான்.

மாந்தரிகளுக்கு அதிகாரமில்லை. எந்த விலங்கையும் கொல்லலாம். மாந்தரிகளை யார் வேண்டுமானாலும் விருப்பத்திற்குக் கவர்ந்துகொள்ளலாம். கூட்டாகப் புணரலாம். கொன்று தின்னலாம். அவர்களுக்கான தெய்வமாகச் செங்கோடனின் உருவம் பொதித்தான். பெருந்தேற்றனை உருவாக்கியவன் செங்கோடனின் வழி வந்தவர்களே. தலைவனாக நிமிர்ந்து மூர்க்கங்குடியில் நுழைந்த யாவரையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து இந்த நிலத்தின் தலைவனாக்கிய செங்கோடனுக்கு நன்றி செலுத்துவதுபோலச் செங்கோடனைக் கொண்டாடினான்.

செங்கோடனுக்குள் கனன்று கொண்டிருந்த வெப்பத்தை, அவன் போனபிறகு எட்டாவது தலைமுறையான பெருந்தேற்றனுக்குள் மடை மாற்றியவன் கொம்பன். அறுபத்தியெட்டு நாடுகளையும் அழித்துத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்பது அவனது மூளை நரம்புகளில் ஊறிக்கிடந்தது. அவனால் தீர்க்க முடியாமல்போன கணக்கைப் பெருந்தேற்றனுக்கு ஏற்றிவிட்டு மாண்டுபோனான் தகப்பன் கொம்பன். அது தீராப் பகையாகப் பெருந்தேற்றனுக்குள் புகுந்து வெறியாகி விசும்பைத் தொட்டிருந்தது.

அறிவிற் சிறந்தவர்களாகக் காட்டிக்கொள்ளும் அனைத்து நாடுகளையும் அழிக்க வேண்டும். மாந்தர்களையும் அடிமையானவர்களாக்க வேண்டும். அவர்களின் வாழ்வியல் அறத்தை வீழ்த்த வேண்டும். அனைத்துப் பெண்களையும் புணர்ந்து கொண்டே கொல்ல வேண்டும். இப்பெருங் கனவுக்காகச் சில ஆண்டுகளாக அவ்வப்போது அறுபத்தியெட்டு நாடுகளையும் தாக்கியிருக்கிறார்கள். கருணையற்ற பெரும் இழப்புகளை உருவாக்கி இருக்கிறார்கள். மாந்தரிகளைக் கவர்ந்து வந்து தங்களுக்கான புணரும் பிண்டமாக மாற்றி இருக்கிறார்கள். தொடர் சண்டையில் மாந்த இழப்புகளையும் பெருத்த சேதங்களையும் அடைந்திருக்கிறார்கள். ஆயினும் அடங்கியதில்லை.

பெருந்தேற்றனுக்கு இப்போதெல்லாம் வேட்டையில் ஆர்வமில்லை. காமத்தில் குறியில்லை. மாந்தரிகளின் உறுப்புகளின் மீதிருந்த தீராத வேட்கை ஏதுமில்லை. ஆனால் ஆறு திங்களாகவே அவன் தவத்திலிருப்பதுபோலிருக்கிறான்.

அவன் பேச்சைச் தட்டாத காமன், செந்தூரன், வீமனைக் கொண்டு ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தான். காடுகளுக்குள் திமிரித் திரிந்த பரிகளைப் பிடித்து நீண்ட தூரப் பயணத்திற்குப் பழக்கினார்கள். ஆனைகளை வேட்டையாடித் தந்தங்களில் கூர் தீட்டினார்கள். மிருகங்களின் காலெலும்புகளில் பன்றியின் பற்களைத் தைத்து, பிடித்து வைத்த மிருகங்களின் உடம்பில் கோடிழுத்துப் பார்த்தார்கள். ஒரே இழுவில் மிருக உடலின் மொத்தக் குடலும் சரிந்து விழக் கண்டார்கள். எரிமலைக்குழம்புகள் கக்கி வீழ்ந்து கிடந்த கருங்கல் கட்டிகளை எடுத்து வந்து கூர் தீட்டினார்கள். அதையும் கல் குச்சிகளின் முனைகளில் கட்டிச் சோதித்துப் பார்த்தார்கள். மிருகங்களை வெட்டிப் பழகினார்கள். பரிகளின் இளங்குட்டிகளைத் தீயில் பொசுக்கித் தின்று உடல் ஏற்றினார்கள். திட்டமிட்ட ஒரு பெரும் படையை உருவாக்கினார்கள். மாந்தன்களை மட்டுமே கொண்ட படை. பரிப்படையும் எருமைப்படையும், ஆனைப் படையும், அலங்கு கூட்டமும், மாந்தவெறிக் கூட்டமும் அமைந்த அந்தப் படைத் தினவோடு காத்திருந்தது.

பெருந்தேற்றன் அவனது குழுவை அழைத்தான். மாந்தரிகளையும் மகவுகளையும் தவிர அனைவரையும் ஒருங்கிணைத்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவனைப் பொறுப்பாக்கினான். நூற்றுப் பத்தாயிரம் மாந்தர்களின் வன்படையொன்று தயாரானது.

வெட்டுக் கத்திகளும் குத்தும் கத்திகளும் எலும்பு வேல்களும், தோல் கவண்களும், நொடியில் உயிர்கொல்லும் சாறு தடவிய வில்லம்புகளும், எருதின் தலை வெட்டித் தோலுரிக்கப்பட்ட தலைக் கவசங்களும் திட்டமிட்டுச் சேமிக்கப்பட்டன. பதினாறு வகை மரப்பட்டைகளும் பாம்பின் தலை நறுக்கப்பட்ட உடலங்களும் கடுக்காயும் கொண்டு பதப்படுத்தப்பட்ட பானத்தைத் தயாரித்து வைத்திருந்தார்கள். கடுகளவும் கருணையற்றுத் தாக்க வேண்டும். எல்லாம் முன்பே செப்பனிடப்பட்டிருந்தது.

அவர்களின் நோக்கம் ஏழ் குறும்பனை மீது கவிழ்ந்து கிடந்தது. அறுபத்தியெட்டு நாடுகளின் அறிவர்களும் முதுவர்களும், பாடினியரும் பாணரும் விறலியரும் பொருநரும் தலைமைகளும் தீரர்களும் கூடுமிடம் கொற்றவை வெறியாட்டு. அதுவே அவர்களின் இலக்காக இருந்தது.

நதியின் வழியே ஊடறுக்க, நிலத்தின் வழியே மோத, வனத்தின் வழியே தீமூட்ட வகை வகையாகக் குழுக்களைப் பிரித்தான். ஏழ்

குறும்பனையழிந்தால் அனைத்தும் அழிந்தது. பிரம்பூருக்கு வரும் அனைத்து நாடுகளின் தாய்களும் அறிவர்களும் பாணர் பாடினியர்களும் கணியர்களும் அழிந்தால் மொத்தமாக அழிந்தது. பிசிறக் கூடாது குறி.

மாந்தர்களைக் கொன்று தின்றவனும், மாந்தரிகளைப் புணர்ந்து எரியும் நெருப்பில் தூக்கி எறிந்து கதறியழும்போது பன்றி எண்ணெய் ஊற்றித் தீயை வளர்த்து, எரிந்த உடல்களைத் தின்று சாம்பலை அள்ளி உடலெங்கும் பூசி வெறி கொண்டாடிய செங்கோடனின் செதுக்கிய உருவம் முன் நின்று வேண்டினார்கள்.

நூற்றுப் பத்தாயிரம் படைகளுக்கும் எதிரிகளைச் சிதறடிக்கும் திட்டத்தைப் பெருந்தேற்றன் வரைந்து காட்டினான். ஏழ் குறும்பனையைத் தொட வேண்டும் என்றால் இருபத்தியொரு நாடுகளை ஊடறுத்துக் கடக்க வேண்டும். யாருக்கும் சந்தேகம் கிளை விடாதபடி எந்தப் படை எங்கிருந்து கிளம்ப வேண்டும், எந்த வழியே சென்று சேர வேண்டும் என்பதை எல்லாம் திட்ட வட்டமாக வரைந்து அதன்படி ஒழுங்கு அமைக்கப்பட்டுத் தயாராக இருந்த அப்படை நீண்ட நாள்களாகத் தணியாத வேட்கையோடு காத்திருந்தது. போர் வெறியில் வெற்றியைச் சுவைக்கும் அந்த நாளுக்காக அனைவரும் கிளம்பிப் பெருஞ்சுவர் நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

9 துலைத் திங்கள் முப்பதாம் திகதி

செய்தி அறுபத்தியெட்டு நாடுகளுக்கும் தீயாகப் பரவியது. பொதுவாக நாட்டின் தாய்களின், தாய்மாமன்களின் செய்திகளை ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கொண்டு செல்லவென்றே எல்லா ஊர்களிலும், நகரங்களிலும் பயிற்சி பெற்ற மகரயாளிகளும் அதை விரைவாக ஓட்டிச் சென்று செய்தி கொடுப்பவரும் இருந்தார்கள். அந்தச் செய்தி எல்லா மக்களுக்கும் செல்ல வேண்டு மென்றால் எல்லாருக்கும் சொல்வார்கள்.

இத்தனையாயிரம் ஆண்டுகளில் இது புதிய துவக்கம். ஏழ் குறும்பனை நகரத்தை நோக்கி வந்துகொண்டிருந்த மக்களும், ஏழ்பனையிலிருந்த மக்களுக்கும் நம்பவே முடியாத செய்தியாக அது இருந்தது. பலர் அதிர்ந்து போயினர். பலர் ஆச்சர்யப்பட்டனர். எப்பொழுதும் நடக்கும் கொற்றவை வெறியாட்டு நிகழ்வைவிட இது கூடுதல் கொண்டாட்டமாக மாறியது. அஞ்சாவண்ணிக்குக் குடிகொண்டிருந்த கவலைகள் எல்லாம் ஓடிய மூலை தெரியவில்லை. தென்னனின் கவலையை அடியோடு மறந்துவிட்டாள்.

கடுமான் கிள்ளியிடம் நேற்று வருத்தமாகத் தென்னனைப் பற்றிப் பேசினாள். தென்னன் எப்போதுமே முன் கூட்டியே வந்துவிடுபவன். தென்னனின் அக்கா பூந்தோகையே ஏழ்பின்பாலையின் வெண்குளத்திலிருந்து அவளது குடியனைத்தும் பிறட்டி எடுத்துக்கொண்டு வந்துவிட்டாள், தென்னனைத் தவிர.

அவளிடமும் தென்னன் பற்றி விசாரித்தும் பலனேதுமில்லை. தென்னன் தாங்கள் கிளம்ப இரு வாரங்கள் இருக்கும் முன்பே கிளம்பிவிட்டானென்ற செய்தி பேரதிர்வைக் கொடுத்தது.

அஞ்சாவண்ணி அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் அவர்களின் இணை சகோதர்களும் கூடி இந்த ஆண்டு வெறியாட்டும், பல்லிய பேரிசைப் நிகழ்வும், அறிவையும் தெளிவையும் ஆயும் நாள்களில் தென்னன் வராததும் செய்தி தராததும் அவளைக் கோபப்படுத்தியது. ஆனால் தென்னன் காரணியமின்றி வராமல் இருக்கப் போவதில்லை எனக் காதல் தடுத்தது. அவனின் நினைப்பே மசக்கை தந்தது. மெல்லிருக்கமும் மூண்டது. வெந்தணல் போலிருந்தாள்.

கிள்ளியால் நகரத் தேவைகளுக்காகப் பெரும் அலைச்சலில் இருந்தான். அவனால் வேறுபக்கம் கவனத்தைத் திருப்பக்கூட வாய்ப்பில்லை. நகரின் அனைத்து வழிகளையும் நிர்வாகத்தையும் அறிந்தவன். அஞ்சாவண்ணியிடம் பேச வந்தபோதுகூட தொடர்ந்து ஆட்கள் திட்டமிடல் குறித்து விவாதிக்க வந்தார்கள். வேறு வழியில்லாமல் கிள்ளியும் ஆட்களை விட்டு தென்னனைத் தேடச் சொன்னான். கடைசியாக வந்த குழுவிலிருந்து ஒருவர் தென்னன் ஏழ் குணக்கரையில் இருப்பதாகவும் கணியன் கோகனோடு பார்த்ததாகவும் சொன்ன செய்தியை எந்த அளவு நம்புவதெனத் தெரியவில்லை. கணியன் கோகனும் இதுவரை தான் வருவதாகவோ தங்குவதற்கான குடில்

இருக்கிறதா என்றோகூட ஆட்களை அனுப்பி விசாரிக்கவில்லை. அந்தக் குழப்பம் ஆழியில் மிதந்த தக்கையாக கரை தெரியாமலிருக்கிறது.

அறுபத்தியெட்டு நாட்டிலிருந்து பலரும் வந்துவிட்டார்கள். இன்றிலிருந்து பதினைந்து நாளில் கொற்றவைத் தாய்க்கு விருந்து. படையல்.

கொற்றவை யார்? எப்படி இருப்பாள்..? புடைப்பாக இருப்பாளா..? புட்டம் பெருத்திருப்பாளா..? கீறி வைக்கும் கைகால் நகமறுக்காமல் இருந்திருப்பாளா..? அல்லது உடலெங்கும் மயிர் தொங்க, வால் முளைத்த மந்தியிலிருந்து மாந்திரியாயிருப்பாளா..? நாமிருக்கும் சராசரி உயரம் பத்தடியிருப்பாளா..? அல்லது ஆதியில் முளைத்து வளர்ந்த விலங்குகளைபோல இரு மடங்கு உயரம் கூடியிருப்பாளா..? எதுவும் திட்டமிட்டுச் சொல்ல முடியாது.

காத்தவள். இயற்கையின் பெரும் சீற்றத்திலிருந்தும் வான் உயரம் கொண்ட விலங்குகளிடமிருந்தும் ஆலமரம் போன்ற பறந்து விரிந்த பறவைகளிடமிருந்து காத்தவளாக, மாந்திகளிடமிருந்த குணக் குறையை களைந்தவள் என்றும் மாந்தர்களை செப்பனிட்டவள், வாழக் கற்றுக் கொடுத்தவள், மொழியறிவித்தவள், குகையோவியங்களைத் தலைமுறைக்கு வளர்த்தவள். அறிவின் தொடர்ச்சியை விட்டுச் சென்றவள். ஆகையால் கொற்றவை இந்த பேரண்டத்தின் தாயாகி நிற்கிறாள். அவள் ஒருத்தியா..? காலம் தோறும் காத்தவளெல்லாம் கொற்றவையா..? என்றெல்லாம் விவாதங்கள் தொடங்கி முனையறுந்து போயின. கொற்றவை வெறியாட்டு என்றால் இப்பேரண்டத்தின் இதர ஊர்வன, பறப்பன, மிதப்பன, நடப்பன என யாவற்றுக்கும்கூட ஒரு கனிவுண்டு. கனிவில் அன்பு பெருக்க பல்லியம் இசைக்கும் அந்தக் கடை நாளில் எல்லா உயிரும் கரைந்துருகி கண்ணீர்விட்டு நன்றி செழுத்தும் என்றே மாந்தர்கள் புரிந்துவைத்திருக்கிறார்கள். பல்லிய இசையின் பேரிகையில் கிளம்பும் பேரானந்தமாக இருக்கலாம்.

தாயை அண்டமே கொண்டாடும்போது தென்னனிடமிருந்து தகவல் வராததும், அருகன் மெந்தாரகை குழு வந்து சேராததும், கோகனும் மலைச்சியோடும் அவனது பரிவாரங்களோடும் இதுவரை வந்து சேரா தகவல்களால் மனம் குன்றி சோர்ந்து கிடந்தாள் அஞ்சாவண்ணி. அப்போதுதான் அவளுக்கு அந்தப் புதிய செய்தி கிடைத்தது.

அஞ்சாவண்ணியின் மன இறுக்கத்தை துடைத்துப் போட்டு அறுபத்தியெட்டு நாடுகளுக்கும் பெருந்தாயாக, வணங்கக் கூடியவளாக

இருவாஞ்சி மாறியிருக்கிறாள் என்பதை முதலில் நம்ப மறுத்தாள். இத்தனையாயிரம் ஆண்டுகளில் சிம்மயாளியை உயிரோடு கொண்டு வந்தவர்கள் யாருமில்லை.

ஒத்தை சிம்மயாளி இருபது ஆனைக் கூட்டத்தையே சிதைத்து விடும் வெறிகொண்டது. ஆனையாளிகளையும், மகரயாளிகளையும், பெருயாளிகளையும், ஞமலயாளிகளையும்கூட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய வல்லமை இருந்தது. அதோடு எந்த விலங்கினத்தையும் தங்களது வலிமையாலும் திடத்தாலும் அன்பாலும் மண்டியிட செய்துவிடுவர். ஆனால் சிம்மத்தை அடக்கவே முடியாது என்பதுதான் விதி. அதனால் சிம்மத்தை எப்படியேனும் கொல்பவர்கள் மாமாந்தர்களாக கொண்டாடப் பட்டனர். அவர்களும்கூட மொத்த வனத்திற்கே கரும்போக சாற்றைக் கொண்டு, மயக்கமடித்துதான், கூட்டத்திலிருந்து விலகி தனித்து வாழும் ஒற்றை ஆளியை கொன்றிருக்கிறார்கள். ஆனால் இருவாஞ்சி, ஆளியை வீழ்த்தி அதன் மீதமர்ந்து வருகிறாள். தெரித்து ஓடும் மாந்தர் கூட்டத்தைச் சிரித்து, அமர்த்தி, அருகே வரச் சொல்லி நலம் விசாரிக்கிறாள் என்றெல்லாம் கேள்விப்படும்போது அஞ்சாவண்ணியால் அதை கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை.

ஒரு குழந்தையைபோல அவள் சொல்வதை எல்லாம் ஆளி கேட்பதாகச் சொல்வதை அவளால் எப்படி நம்ப முடியும். அவளது இளங்காலத்தில் ஆளியைக் கொன்ற நினைவுகள் வந்து போயின. மலைத்துப் போனாள்.

இருவாஞ்சி எப்படிச் சாதித்தாள்..? செவளை உயிரோடிருக் கிறதா..? இருவாஞ்சிக்கு ஏதும் உடல் பாதிப்பில்லையா..? செம்பன் உடன் சென்றானா..? என்று பல கேள்விகள் குடைந்தெடுத்தது. காப்புக் கட்டுக்காக இன்று வந்து குழுமியிருந்த அறுபத்தியேழு நிலத்தின் தலைமைத் தாய்களுக்கும், தாய்மாமன்களுக்கும் அதற்குள் செய்தி எட்டியிருந்தது. அஞ்சாவண்ணியைப் பார்க்க வந்துவிட்டார்கள்.

ஏற்கெனவே ஆழி உடைந்து நிலம் துண்டாடப்பட்டதில் காணாமல் போன உறவுகளைக் குறித்து ஆரலும் திருக்கையனும் அனுப்பிய செய்தியே எல்லா நாடுகளுக்கும் மாந்தர்களுக்கும் எல்லையில்லா மகிழ்ச்சியில் குதித்துக்கொண்டிருந்தார்கள். இருவாஞ்சி தந்தது கூடுதல் இனிப்பு.

நாக நாட்டினரையும், ஆரப்பர் நாட்டினரையும் அழைத்து வர, நாவாய்களும் திமில்களும் சென்றிருக்கின்றன. அவர்களும் கொற்றவை வெறியாட்டத்தில் கலந்துகொள்ள இருக்கிறார்கள் என்கிற செய்தி தெரிந்திருந்த அனைத்து மாந்தர்களின் பரவசத்துக்கு அளவில்லாமல் இருந்தது. அதைக் குறித்த பேச்சுகளே அடங்கிய பாடில்லை. அதற்குள் இது புதிய ஒன்று.

காற்று வழிச் செய்திதான் முதலில் வந்தது. கிள்ளியின் மகள் பொன்னூந்தி தனது குடும்பத்தோடு ஏழ் தோகைநாடிலிருந்து வந்தவள் உறுதிப் பூர்வமான தாக்கலைக் கொண்டு வந்தாள்.

“வாளிப்பா இருக்கு. இளங்குட்டின்னு சொல்றா. அதே அவ்ளோ ஒசரமா இருக்கு. பக்கத்துல போகவே பயமா இருந்துச்சு. ஆண் குட்டி தும்பான்னு பேரு வச்சிருக்கா. மலையிலேயே கெடந்ததால நிலத்தில் வாழ பயிற்சிப் கொடுக்குறா. வாஞ்சி சொன்னா உக்காருது... நிக்குது... நாக்க தும்பிக்கையாட்டம் நீட்டுது... யப்பா! நான் பாத்ததுமே மயக்கம் போட்டுட்டேன். இத்தோ சண்டி நீளம் செம்பன் அண்ணனும் கூட இருக்காவ செவளைக்குதான் கொஞ்சம் வலுவா அடி வுழுந்துருக்கு. இன்னேரம் பிரம்பூருக்குப் பக்கத்துல நெருங்கியிருப்பா.”

பொன்னூந்தி கண்கள் விரியப் பேசினாள். சிம்மயாளி எழுந்து நின்றபோது தன் தலையை வானத்தில் குவித்துத்தான் பார்க்க முடிந்தது. அவளது எட்டே கால் அடி உயரம் ஆளியின் முன்பு சுண்டுவிரலாக மாறியது. வந்திருந்த குழுவினர் அனைவருக்குமே ஆளியைப் பார்த்ததுமில்லாமல் அதைக் கைப்பற்றித் தன்னடக்கத் துக்குள் வைத்திருக்கும் இருவாஞ்சியையும் செம்பனையுமே மனதில் ஏந்தி நின்றார்கள். அவர்கள் கொற்றவையை நேரில் கண்டதுபோல ஆனந்தமடைந்தார்கள்.

அஞ்சாவண்ணியால் நிலைகொள்ள முடியவில்லை. குடிலை விட்டு வெளியில் வந்தாள். எல்லார் முகங்களும் வானத்தில் மின்னும் ஐங்கோணமாக மின்னின. அவளிடம் பேச ஓடிவந்தார்கள். அவளுக்கு என்ன பேசுவதெனத் தெரியவில்லை. பேசவும் முடியவில்லை.

ஏழ் மகரந்தத்திலிருந்து வந்திருந்த ஒரு நூற்றைத் தாண்டிய வயதுடைய முதுவச்சி பாரியாள் அஞ்சாவண்ணியின் கரத்தை மென்மையாகப் பற்றினாள். அவளின் கிழட்டு உடம்பில் தோல்கள் தடித்துச் சுருங்கியிருந்தன. முகத்தின் புருவ மத்தியில் இளம் பருவத்தில்

வரைந்திருந்த உடுக்கைத் தோலின் சுருக்கத்தில் முரசாக காட்சியளித்தது.

அஞ்சாவண்ணி முதுவச்சியை வணங்கினாள்.

“கும்பத்துல நான் உயிர்க்கட்டைபோலாம்னு இருக்கேன். இது வரைக்கும் யார் கிட்டயும் கொடுக்காம பத்திரமா வச்சிருந்தேன். உம்மவ பெரிய வேல பண்ணிருக்கா... நான் அப்படியான ஒருத்திக்குத்தான் இது போயிச் சேரணும்னு நினைச்சேன். இத அவ கையில கொடுத்திடு.”

முதுவச்சியின் குரல் பிசிறின்றி வந்தது. அவள், தான் நடக்க வைத்திருந்த நீண்ட மூங்கில் குழலை கீழே இறக்கினாள். கூன் விழுந்த முதுகை வளைத்து தரையில் கையூன்றி அமர்ந்தாள். அவள் அமர்ந்ததால் அஞ்சாவண்ணியும் அமர்ந்தாள். முதுவச்சி அப்படியென்ன கொண்டு வந்திருக்கிறாள் இருவாஞ்சிக்கு என ஆர்வம் மேலிடப் பார்த்தாள்.

முதுவச்சி, தான் ஊன்றி நடக்கும் மூங்கில் குழலின் மேல் பகுதியில் அடைத்து வைத்திருந்த மூடியை அகற்றினாள். அதனுள்ளிருந்து கருப்பாக ஏதோ ஒன்றை இழுக்க அது வெளியே வந்துகொண்டே இருந்தது. எட்டடி உயரமிருக்கும். அவர்களைச் சுற்றியிருந்த கூட்டம் மொத்தமும் கவனித்தது. கத்தி போன்று நீண்டிருந்த அந்தக் கருப்பனை முழுதாக வெளியே எடுத்தாள். அஞ்சாவண்ணி அதைக் கூர்ந்து பார்த்தாள். புரிபடவில்லை.

“அம்மே... என்ன இது..!?”

“இது அபூர்வமான ஒன்னு. கல்லுல கத்தி செய்யிற மாதிரி இதுலயும் செய்யலாம். இதை ஒடைக்க முடியாது. வெட்ட முடியாது. வலுவானது. உறுதியானது. இதுக்குப் பேரெல்லாம் கிடையாது. நானா எம் மனசுக்குள்ள வச்சிருக்கேன் பேரு. உறுதியா இருவி நிக்கிறதால இரும்பு. இரும்புன்னு வச்சிருக்கேன். நல்லாருக்கா. இதை உன் வீரத்திக்கிட்ட கொடு!”

அஞ்சாவண்ணி அதைத் தொட்டுப் பார்த்தாள். குளிர்ந்திருந்தது. கைக்குள் பிடித்தாள். அத்தனை உறுதியாகவிருந்தது. கிள்ளியை எதிரே நிற்கச் சொன்னாள். கிள்ளியிடம் ஒரு முனையையும் மறுமுனையைத் தானும் பிடித்துக்கொண்டு மோதிப் பார்த்தாள். வளையவேயில்லை. தனது இடுப்பிலிருந்து கற்கோடாரி எடுத்துத் தனது மொத்த வலுவையும் திரட்டி வெட்டிப் பார்த்தாள். கற்கோடாரியின் முனை தெறித்துச் சிதறியது. அஞ்சாவண்ணி ஆச்சர்யமாகப் பார்த்தாள்.

“அம்மே... இதை என்ன செய்யிறது. வளைக்கவும் முடியல. கல்லு மாதிரி செதுக்கவும் முடியாது. கழி மாதிரி ஊணி நடக்கத்தான் பயன்படும்போல.”

நூற்று இருபது வயதிற்கு மேலிருக்கும் முதுவச்சி கையூன்றி எழுந்தபடி ஆவேசமாகக் கத்தினாள்.

“இல்ல... ஒனக்கு விளங்குல. இதைப் பத்தி யாருகிட்டயும் சொல்லாம எனக்குள்ள வச்சிருந்தேன். இதொட கதய கேளு. நான் இத ஒரு நா ரெண்டா பொளந்து கிடந்த கருங்கல் மலை யிலதான் கண்டெடுத்தேன். கல்லு மாதிரி இருந்துச்சி. கதிரவள் வந்தப்ப அங்கங்க கரும் பளிங்கா மின்னுச்சு. ஏதோ மினுங்குற கல்லுன்னுதான் கண்டுக்காம இருந்தேன். இந்த இயற்கையில என்னன்னமொ கிடக்குது அது மாதிரி இதுவும் ஏதோ ஒன்னுன்னு தூக்கிட்டு வந்து குடிசையில போட்டிருந்தேன். எம்மவ ஒரு நா கடமான் கொண்டு வந்தா. கல்லுக் கூட்டி அடுப்பெரிக்க, இதயும் முக்கல்லுல ஒன்னா வச்சேன். நெருப்ப எரியவுட்டா. நல்லா நெருப்பு கணந்து எரியுது. இந்த இரும்பு அது பாட்டுக்கு உருகி வழியுது. பயந்து போயி மவகிட்ட காட்டினேன். அவ தண்ணியெடுத்து ஊத்தினா. அது எப்படி நலங்கு மலங்கா உருகி ஓடுச்சோ அப்படியே தண்ணியூத்தி அணைச்சதும் இருந்தது. ஒரு நாகம் மாதிரி பயமான பயம். பொறவு. கொத்தவைத் தாய மனசில வேண்டி தனியா நெருப்பு மூட்டி பார்த்தேன். திரும்பவும் ஓடுச்சி. தண்ணியூத்தினா கெட்டியாயிடுச்சு. அப்புறம் என்ன? நெருப்புல வேக வச்சி, இந்த இரும்ப தண்ணியா மூங்கிக் குழலுல புடிச்சேன். மூங்கி வெந்து ஒடஞ்சது. தண்ணி ஊத்தினேன். கம்பாட்டாம் இருக்குது. நெருப்புல தக தகன்னு செவக்கும் கொடுந்தீயில வெந்தா இது கொழம்பா கொதிக்கும். நமக்கேத்த மாதிரி இதை நெருப்பா இருக்கும்போதே நமக்கு எப்படித் தேவையோ அப்புடி தட்டி வச்சுக்கணும். எப்பவோ பாத்தது... யாருக்கும் கொடுக்க மனசு வரல. அந்த மலைக்குப் பல முறை இதுமாதிரி வேற ஏதாவது சிக்குமான்னு தேடிப் போனேன். என் நொள்ளக் கண்ணுக்கு ஒன்னும் சிக்கல. இந்தா... இத உன் மவகிட்ட கொடு. மொத்தக் காட்டையும் அடக்கி ஆளும் சிம்மயாளிய புடிச்சதுக்காக என்னோட பரிசு!”

முதுவச்சி பேச்சில் உண்மையிருந்தது. உடனடியாக அவள் முன்னாலேயே தீ மூட்டச் சொன்னாள். தீ மூட்டினார்கள். தீயை மூன்று கல் வைத்து உயரமான இடத்தில் நெருப்பு கனன்று எரியத் துவங்கியது. மூன்று கற்களுக்குச் சற்றுத் தள்ளி கீழே பெரிய பள்ளம் தோண்டப்பட்டு, மூன்று கல்லிலிருந்து மெல்லிய வாய்காலை ஏற்படுத்தி, பள்ளத்தில்

சுடுமண் பானையை வைத்து பாரியாளின் சொல்படி செய்தார்கள். இரும்பு ஒரு வேளை உருகினால் கால்வாய் வழியே பானைக்குள் வந்து நிரம்ப ஏதுவாக வடிவமைத்தார்கள். இரும்புக்கோலை நிமிர்த்தி வைத்து அது சாய்ந்து விடாதபடி ஆறு பக்கமும் கல் ஈட்டிகளைக் கொண்டு வந்து அரண் வைத்தார்கள். கருப்பாக இருந்த இரும்பு, தீயின் நாக்குகளின் தீண்டலால் இளமஞ்சளாகச் சிவக்கத் தொடங்கியது. எல்லாரும் அதை வியப்பாகப் பார்த்துக்கொண்டிருக்க, இரும்பு முழுமையான சிகப்பாக மாறித் தனது உறுதியை இழந்து, அடி நுனி காயம்பட்ட இடத்திலிருந்து வரும் குருதியைப்போலத் தண்ணீராகச் சுடுமண்பானையில் கொட்டத்தொடங்கியது. இரும்பு உருகி சிவந்த தண்ணீராக பானையில் வழிய, அதன் மேற்பகுதி சாய்ந்து விடாமல் தொடர்ந்து அதைக் கவனித்தார்கள். கல் கத்திகளின் அச்சுக்களை எடுத்து வந்து அருகே வைத்துக்கொண்டார்கள். பானையில் கொதித்த குழம்பாகக் கரைந்து நின்ற இரும்பு நீரை அச்சில் ஊற்ற, ஏழடிக்கு வாகான கல் அச்சில் குழம்பு படர்ந்து ஒரு கத்தியின் வடிவத்தில் மலர்ந்து கொண்டது. கல் தீற்றல் கொண்டு மேலும் கூர்மையாக்கினார்கள். ஒரு சில துளிகளில் அது மீண்டும் திடமானது. கல் இடுக்கியால் அதை மேலெடுத்து மேலும் கூர் பகுதியில் கல் சுத்தியால் அடித்துத் தட்டினார்கள். அதன் மீது நீரை ஊற்றினார்கள். சிவப்பு கருப்பாகித் திடமாகியது. சூடு தணிந்ததும் நிமிர்த்திப் பிடித்து நின்று கம்பீரமாக நின்று பார்த்தாள் அஞ்சாவண்ணி. கதிரவளின் ஒளியில் மினுங்கியது கத்தி. சுற்றி நின்ற எல்லாரும் வியந்து பார்க்க, தன் பெரு விரலால் கத்தியில் கீறி குருதியின் வழியே ஆழம் பார்த்தாள். அவள் மனது பாரியாள் கண்டெடுத்த இரும்பின் வழியே புதிய கதவுகள் திறக்கப் போவதை எண்ணி மகிழ்ந்தது. இந்த ஆண்டு கொற்றவை வெறியாட்டில் எத்தனை நல்லவை நடக்கின்றன என எண்ணிப் பார்த்தாள். முதல் தகவலாக ஆரல் தொப்புள்கொடி உறவுகளைக் கண்டடைந்தது, இரண்டாவதாக இருவாஞ்சி சிம்மனை அடக்கியது, மூன்றாவதாக இப்புதிய கருவியொன்று கைக்குள் வந்திருப்பது என அவளால் இருப்புக்கொள்ள முடியவில்லை. முதுவச்சியை வணங்கினாள்.

“அம்மே... நானே எம் மவளப் பாக்கத்தான் போறேன். அவகிட்ட இதைக் கொடுத்துடுறேன். நீங்க தங்க ஏற்பாடாகியிருக்கு. கிள்ளி பார்த்துக்குவான். வரட்டுமா?”

அஞ்சாவண்ணி அவளை வணங்கிவிட்டுக் கையில் இரும்புக் கத்தியுடன் வேகமாக அங்கிருந்து கிளம்பினாள். கிள்ளி வருபவர்களைத்

தங்க வைக்கச் சென்றான்.

தனது தொழுவத்தில் மேய்ந்துகொண்டிருந்த மகரயாளியின் அருகே போனாள். குறிப்பறிந்து அவள் அருகே வந்து நின்று பணிவாகப் படுத்தது. அதன் மீதேறி அவள் கிளம்ப, மக்கள் கூட்டம் கூட்டமாக எதிரில் வந்துகொண்டிருந்தனர்.

அவள் எதிரே மகரயாளியில் வேகமாக வந்துகொண்டிருந்தான் யாழன். அவனது கையில் ஒரு பனையோலை. அஞ்சாவண்ணியை இடைமறித்தான்.

“யாழா... யார் அனுப்பினா செய்தி..?”

“தென்னன்.”

தென்னன் என்றதும் அவளது முகம் பூவாக மின்னியது. அவன் அனுப்பிய செய்தியைப் படித்ததும் வெயிலில் வதங்கியதுபோல முகம் புண்ணாகியது.

10 துலைத் திங்கள் இருபதாம் திகதி

ஆழி அலைகளைத் திமிறிக் கொண்டு பாய்ந்துகொண்டிருந்தன திண் திமில்கள். இரவு வானில் மீன் பரல்கள் வளைந்து வளைந்து விளையாடிக்கொண்டிருந்தன. திண் திமிலின் வேகத்திற்கு ஈடு கொடுக்கப் பாய்ந்து வந்த இளங் கெளுத்திகளும், திருக்கைகளும் காற்றின் போக்கில் பாய் மரமிழுத்துச் சென்ற வேகத்திற்கு முடியாமல் அலைகளை மீறித் தாவிக் குதித்துத் தனது இருப்பைத் திண் திமிலில் இருப்போருக்குக் காட்டிக் கொண்டிருந்தன. மீன் கொழுப்பால் வெண் சங்கில் எரிந்து கொண்டிருந்த திரி அவ்வப்போது அலையை மீறி வெடித்து குண்டு குண்டான நெருப்புத் துண்டங்களைக் காற்றில் வீசிக் கொண்டிருந்தது. அது உண்டாக்கிய ஒளியில் கடல் ஐம்பது அடி தூரத்திற்கு மின்னிக் கொண்டே நகர்ந்தது.

பதினைந்து திமில்களும் முன்னோக்கி நீந்திக்கொண்டிருந்தது. அதன் நடுத் திமிலின் முன் பக்கம் அமைத்திருந்த பந்தலின் கீழே பலாப் பலகையில் ஆரல் நங்கை படுத்திருந்தாள். சங்கு விளக்கின் ஒளியில் இளமஞ்சள் நிறத்தில் தனது தோளில் தலை வைத்துப் படுத்துத் தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் இளநாகனை பற்றிப் எண்ணிக்கொண்டிருந்தாள். மரணத் தீவிற்கு உருவன் அழைத்துச் சென்றதும், அங்கிருந்து தப்பித்து ஆழிக் குட்டையில் குதித்ததும் முதலைக் கூட்டத்திடமிருந்து நாகர்கள் காப்பாற்றியதும் இளநாகனைக் கண்டதும் அவனின் பார்வைப் பொறியில் இத்தனை கால வண்ணங்களைத் தொலைத்ததையும் அவளால் நம்பவே முடியவில்லை.

பொன்பரப்பியில் திருக்கையனிடமும் சுற்றத்தினரிடமும் நடந்த விவரங்களைச் சொன்னதும் திருக்கையன் உடனடியாகக் களத்திலிறங்கினான். வெறியாட்டு விழாவிற்குக் குறைந்த காலமே

இருப்பதால் உடனடியாக நாகர்களையும் ஆரப்பர்களையும் அழைத்து வர முடிவு செய்தான். நாட்டின் தாய் ஏழ்குறும்பனைக்குக் கிளம்பி விட்டபடியால் அவர்களுக்குத் தகவலை அனுப்பிவிட்டு, தானே முன்னின்று இரண்டு நாவாய்களையும் பத்துக் கொடுந் திமில்களையும் பதினைந்து திண் திமில்களையும் ஏற்பாடு செய்தான்.

வெறியாட்டுக்குக் கிளம்பிக்கொண்டிருந்த திமிலர் கூட்டம் அதை விடுத்து, தமது உறவுகளைப் பார்க்க முண்டியடித்து வந்தது. நெடும் பயணம் என்பதால் கடலில் கரை கண்ட மாந்தரிகளையும் மாந்தன்களையும் பொறுக்கியெடுத்துப் பயணத்திற்குத் தயார் படுத்தினான். உருவனின் வேகத்தைக் கணக்கிட்டு நாவாய் போய்ச்சேர ஆகும் நாள்களை திட்டமிட்டான். கொடுந் திமிலும் திண் திமிலும் பயிற்சி பெற்ற திமிலோட்டிகளையும் நாவாய்க்கான மாலுமிகளையும் தேர்வு செய்தான்.

ஆரல் திருக்கையனின் எந்தச் செய்கையிலும் தலையிடவில்லை. அவளது நினைவெல்லாம் நாகர் தீவின் இளநாகனிடமிருந்தது. அவனை நினைத்து மருகிக் கிடந்தாள்.

நாவாய்கள் மரணத்தீவிற்குச் சென்று சேரத் தாமதமாகும் என்பதால் நாவாய்களோடு வழிகாட்டலுக்கு உருவனையும் சேர்த்து மறுநாளே அனுப்பி வைத்தான். இரண்டாம் நாள், திண் திமிலில் ஆரலை ஏற்றிக்கொண்டு கிளம்பினான். கொடுந் திமில்களும் திண் திமில்களும் ஆழியை அலசிக்கொண்டு சென்றன. திருக்கையனுக்கு மூன்று விதமான படபடப்பிருந்தது. தனது முன்னோர்களின் வழித் தோன்றலைச் சக மாந்தர்களை, பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பு பிளந்த நிலத்தால் துண்டிக்கப்பட்ட சொந்தங்களைக் காண்பதும், தனது சுட்டித் தங்கையின் மணாளனின் முகம் காண்பதுவுமாக அவனது படபடப்புக் கூடியது.

மூன்றாவதாகத் தாய் நிலத்தின் மாந்த உரிமைகளை, நடைமுறைகளைப், புரிந்து கொள்ளவும், இங்கேயான பழக்க வழக்கங்களுடன் ஒத்துப் போகவுமாக மச்சான் இருப்பானா என்கிற வினாவும் உள்ளில் பொங்கி அவனை அலைக்கழித்தது.

பத்துக் கொடுந் திமிலோடும், பதினைந்து திண் திமிலோடும் ஆரலையும் அழைத்து வந்திருந்தான் திருக்கையன். கொடுந் திமிலுக்கும் திண் திமிலுக்கும் ஆழியின் கரைக்குப் போவதில் சிக்கலில்லை என்பதை அக்கரை கண்ட ஆரலின் மூலம் தெரிந்துகொண்டான். அவர்களிடம்

நீண்ட தூரப் பயணத்திற்கான கலங்கள் இல்லை என்பதையும் ஆரல் தெளிவுபடுத்தியிருந்தாள். ஆனால் முன்னால் கிளம்பிப் பின்னால் வந்துகொண்டிருக்கும் நாவாய்கள் மரணத்தீவைத் தாண்டி உள் நுழையக் கழிமுகத்துறை இருக்குமாவென்ற சந்தேகம் திருக்கையனுக்கு இருந்தது. உருவன் போகும் அனைத்துத் தடத்திலும் ஆழியில் நீந்தலாம். ஆனால் சேரும் இடம் உருவனை ஒத்துத் திட்டமிட முடியாது. திண் திமிலுக்கும் கொடுந்திமிலுக்கும் ஓதம் அறிய வேண்டியதில்லை. ஆழி உள் வாங்கினாலும் ஆழி நிறைந்து கரையைத் தட்டினாலும் அதற்கேற்ப நீண்டக் கயிறுகளை கரையோடு பிணைத்துத் திமில்களை இழுக்க முடியும்.

நாவாய்கள் அப்படியில்லை. நாவாயைக் கரையொட்டி நிறுத்த முடியாது. கரையிலிருந்து பருவத்தைப் பொருத்தோ, அன்றைய முன் பின் காற்றோட்டத்தை ஒட்டியோ, ஆழிகளுக்குள் இருக்கும் மணல் புற்றுகளின் இடைவெளியில் மாற்றமில்லாமலோ இருந்தாலும் சிக்கலாகிவிடும். திடீரெனக் கடல் தனது கரையிலிருந்து ஆயிரம் அடிகளைத் தாண்டிக்கூட உள் வாங்கும். மாலையில் பொங்கிச் கரையை நக்கி விளையாடும் நீர் காலையில் பல பாக தூரத்திற்கு உள்ளிழுத்துக் கொள்ளும். சில பருவங்களில் கடலிருந்த தடமே கரையில் தென்படாமல் போகவும் வாய்ப்புண்டு.

அதுபோன்ற தருணங்களில் நாவாயின் முகரியிலிருந்து கீழ் நோக்கி நகரும் ஏராவும் அணியமுகரியும் நீர் படாமல் தரை தட்டினால் மேலேந்தி நிற்பதை மீண்டும் ஆழிக்குள் இறக்குவது பெரும்பாடு. அதோடு தரை தட்டிவிட்டால் ஏதேனும் பெரும் பாறையிடுக்கில் மாட்டி முகரியில் விரிசல் உண்டானால் அதன் பிறகு விரிசலைச் சரி செய்வது முடியாத காரியம்.

ஒரு நாவாயில் நூறு வயதான சுறாக்களை ஏற்றி வரக்கூடிய அளவுக்கு மிகப் பெரிதாக இருந்தது. மாந்தர்கள் ஐநூற்றுக்கும் குறையாத அளவுக்குப் பயணிக்கக் கூடிய அளவிலே இருபத்தி மூன்று பாய்மரங்கள் கட்டக் கூடிய வகையில் நாற்பது பாக நீளத்திற்கு இருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது.

பொன்பரப்பியின் முன் துறையில் பத்து நாவாய்கள் இப்படி மிதந்துகொண்டிருந்தன. அவற்றில் நான்கு ஏற்கெனவே ஏழ் குறும்பனைக்கு மாந்தர்களை ஏற்றிக்கொண்டு கிளம்பிவிட்டன. இரண்டு நாவாய்களைத் திருக்கையன் நாகநாட்டிற்கு அனுப்பினான். கழிமுகத்

துறையிலிருந்து தேவையான உணவுப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டு திண் திமில்களும் கொடுந் திமில்களும் ஆழம் நிரம்பிய முன் துறையில் நிறுத்தப்பட்டிந்த நாவாய்களுக்கு மாற்றி விட்டு அங்கிருந்து நாக நாட்டிற்கு ஆரல் வழி காட்டப் பயணமாகின.

ஆரலும் திருக்கையனும் அவனோடு வந்திருந்த முதல் குழுவும் தொலைவிலிருந்தே மரணத் தீவைக் கண்டதும் உள்ளுக்குள் ஒருவித அச்சத்தோடு பார்த்தார்கள். தொலைவிலிருந்து பார்க்கும் பொழுதே உடல் நரம்புகளில் சிலீரெனப் பாய்ந்தது நடுக்கம். பயத்தை உருவாக்கக் கூடிய அளவுக்கு தீவே எலும்புக் கூடுகளின் மலைகளாகக் காட்சியளித்தது. கிட்டத்தட்ட நாற்பது காத தூரங்களுக்கு மேலிருந்தன ஒவ்வொரு மலையும். ஆறு மலைகள் திரண்டு பார்க்கும் கோணத்தில் ஆழியைவிட பெருத்திருந்தன. மரணத் தீவின் மேலே பறந்துகொண்டிருக்கும் பெரிய கழுகுகளைப் போல அவர்களது வாழ்நாளில் வேறெங்கும் பார்த்ததே இல்லை. ஒரு கழுகு சாதாரணமாக ஒரு மாந்தனையே கவ்விச் செல்லும் வலுவுடையது என்பதைத் திருக்கையன் உணர்ந்தான். ஆரல் நடந்த கதைகளைச் சொல்லும்போது கூட திருக்கையானால் முழுதாக உணர முடியவில்லை. நேரில் பார்த்ததும் ஆரல் எவ்வளவு பெரிய போராட்டத்தை முன்னெடுத்திருப்பாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

“எல்லாத் திமிலையும் மரணத் தீவுக்கிட்ட கொண்டு போவ வேண்டாம். ஆழியின் தரை மட்டமும் நமக்குத் தெளிவா தெரியாது. கழுகுகள் பயங்கரமானவை. ஆழியில் நிறுத்திக்கோங்க. மரணத் தீவ வடக்கால சுத்தி உள்ள வந்தா ஒரு நீர்தடம் உள்ளோடி போகும் அதனுள்ளே குட்டையைப்போல ஆழி தேங்கிக் கிடக்கும். திமிலையே புரட்டிப் போடுமளவுக்குப் பெரிய பெரிய முதலைங்க இருக்கு. நாகர்களுக்குப் பழக்கபட்ட ஒன்றாக இருப்பதால். அவர்கள் நமக்குத் துணையாக வந்தால் நல்லாருக்கும். ஒரு திமிலில் முதல்ல நானும் அண்ணனும் போறோம். உங்களை அவர்கள் வந்து அழைத்து வருவார்கள்.”

திருக்கையனுக்கு ஆரல் சொல்வது சரியெனப்பட்டது. ஆரலைப் பற்றி முழுவதுமாக அறிந்தவர்களாகப் படகோட்டிகளிருந்தார்கள்.

இன்னமும் நாவாய்கள் வந்து சேரவில்லை. இருபத்தி நான்கு திமில்களும் ஆரலின் திமிலைப் பின்தொடர்ந்து மரணத்தீவை வடக்கில் கடந்து நீர்த் தடம் புகுந்த சிறிய கழிமுகத்துறைக்கு வெளியே ஆழியில் ஆடிக்கொண்டிருக்க, ஆரலும் திருக்கையனும் திமிலில் வந்த

படகோட்டிகளும் நீர்த் தடத்தில் பாய் மரத்தை இறக்கிவிட்டுத் துடுப்புப் போடத் துவங்கினர்.

ஆரல், பளிங்கு ஆடியைக் கண்ணுக்கு முன் வைத்துப் பார்த்துக்கொண்டே வந்தாள். முதலைக் கூட்டங்கள் மிதந்து கொண்டிருந்ததைக் கண்டதும், தனது இடுப்பில் கட்டியிருந்த கூம்பை எடுத்து வாயில் வைத்து ஊதத் தொடங்கினாள்.

ஆழிக் குட்டையின் உள் புறத்திலிருந்த தீவிலிருந்து மறு ஊதல் ஒலி மலைகளை, அருவிகளின் ஓசையைத் தாண்டி, பறவைகளின் கூச்சலைத் தாண்டி அவர்களிடம் வந்து சேர்ந்தது. ஒலியைகேட்டதும் ஆரலால் மகிழ்ச்சியை தாங்க முடியவில்லை. துள்ளிக் கொண்டிருந்த அவளது மனம் இளநாகனை நோக்கி அலைகளை விட, தன்னைத் தின்ன வரும் திமிங்கலத்தின் பிடியில் இருந்து தப்பிக்கப் போராடும் குட்டிச்சுறாவின் படபடப்போடு வேகமாகக் கரைக்குச் சென்றது. நாகர் தீவிலிருந்து முரசு பெருத்த ஓசையுடன் முழுங்க, அதன் அதிர்வில் ஆழிக்குட்டையில் மிதந்த முதலைகள் அச்சமடைந்து எந்தத் திசையில் இருந்து அதிர்ந்து பரவுகின்றன ஓசைகள் எனக் கணிக்க முடியாமல் அங்கும் இங்கும் அலைந்து உழன்றுகொண்டிருந்தன. அவை அலைந்த பதற்றத்தில் நீரின் தரையில் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த மணல்துகள்கள் கலங்கி நீருக்குள் எங்குச் செல்வதெனத் தெரியாமல் குழம்பின. கொம்பூதல் ஒலியால் பறவைகள் சடசடத்துப் பறந்தன. அவை பறந்த வேகத்தில் இயல்பாக வீசிக்கொண்டிருந்த காற்றும் தடுமாறிச் சுழன்றது. காட்டின் தலைவனான நாகங்கள் மரக்கிளைகளை முறுக்குவதுபோலத் தங்களை இறுக்கிக்கொண்டன. தீவின் முகப்பில் ஆரவாரத்தோடு காத்திருந்த மஞ்சள் முகங்கள் தென்படத் துவங்கின.

தலைவன் இளநாகன் ஆரலின் மனதை அறிந்தவன் போலிருந்தான். அவள் உடனே திரும்பி வருவாள் என அவன் மனம் கணித்திருந்தது. அவள் அவனைப் பிரிந்து சென்ற கணத்திலிருந்து ஒவ்வொரு விநாடியும் அவனைச் சோதித்துக்கொண்டிருந்தான். அவனது உடலில் எப்போதுமில்லாத அளவில் நீர் சுரந்து கொண்டிருந்தது. உறக்கம் தொலைத்ததில் கண்ணின் வெண் திரையிலும், சிவந்த நரம்புகள் வெடித்துக் கருங்கோளத்தைத் தின்ன முயன்றுகொண்டிருந்தன. தனது மாந்தர்கள் முன்னால் காட்டக் கூடாது என அவன் துடித்தபொழுதெல்லாம் மாந்தர்களுக்கு அவனது எண்ணங்கள் பரிமாறப்பட்டன. தனது அளவுக்கதிகமான கட்டுப்பாட்டால் அவனே எல்லாருக்கும் தனது வெம்மையைப் பறை சாற்றிக்கொண்டிருந்தான்

என்றுதான் சொல்ல வேண்டும். ஆரலின் நினைப்பில் உடல் சூடாகி இதய நாளங்களில் குறுதி பீறிடுவதை அவனால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. புதிய மண்ணில் விரைவாகப் படரும் பாசியைப்போல அவனது மூளைகள் அமைதியாக உறங்கிக்கொண்டிருந்த நரம்புகள் சுறுசுறுப்பாகி அவனைப் பசலைப் பிணியால் வதக்கியது. ஆரல் ஐந்து நாள்களுக்குள் வந்துவிட்டாள். இல்லையேல் கங்கு கரை காணாத கடலில் நீந்திச் சென்றாவது அவளைக் காண முயன்றிருப்பான். ஆனால், அவள் வருவாள் என்பதில் மாற்றில்லாமல் அவன் உறுதியாக இருந்தான். ஆரல் பிரியும்போது அவளது கண்களில் தென்பட்ட ஏக்கம், அவள் கைகளைப் பிடித்தபோது விரல்களில் வெந்துகொண்டிருந்த கனப்பு அவனுக்கு அந்த உறுதியைக் கொடுத்திருந்தது. எங்கிருந்தோ வந்து தனது மனதை வென்ற அவள் தனக்காக என்ன வேண்டுமானாலும் செய்வாள் எனத் திடமாக நம்பினான். அதனால் ஆழிக்குட்டையின் அருகிலேயே அவனது தளத்தை மாற்றியிருந்தான். இரவும் பகலும் அங்கேயே கொட்டடி ஏற்படுத்திக் காத்திருந்தான். ஆழியின் தூரத்தக்கைகள்கூட அவனுக்கு அவளாகத் தெரிந்தன. நீந்திச் செல்லும் நட்சத்திர மீன்கள் விசுக்கென நீரைக்கிழித்து மேலே தாவி, மீண்டும் நீருக்குள் கத்தி போல ஊடுருவிச் செல்வதை ஒரு குழந்தையாக நின்று தனக்குள் இரசித்துக்கொண்டிருந்தான்.

தன் நாட்டிலிருந்து குமரிக்கோட்டுக்குக் கிளம்பவேண்டியவர்கள் எனப் பட்டியல் தயாரித்திருந்தான். குமரிக்கோட்டுக்குப் போவது உறவுகளைச் சந்திப்பது மட்டுமல்லாமல் அவர்கள் வளர்ந்திருக்கிற அறிவைத் தங்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்கிற கோரிக்கையும் அவன் மனதில் இருந்தது. அதனால் முதன்மையாக அங்கே செல்ல வேண்டியவர்கள் யார் யார் என்பது பற்றிய தெளிவைக்கொண்டிருந்தான். ஆரப்பர் தலைவனுக்கும் இதை ஒட்டியே செய்தியனுப்பி இருந்தான்.

ஊதல் கேட்டதும் வத்தைகளில் ஒரு குழு முன்னால் சென்றது. மிகச் சிறப்பான முறையில் வரவேற்றான். திருக்கையனும் ஆரலும் நீர்த் தடத்தில் வர வாகாக நாகர்களின் வத்தைகள் இரு புறமும் அணிவகுக்கத் தொடங்கின. முதலைக் கூட்டங்கள் எங்கே ஒதுங்கின என்றே புலப்படவில்லை. வந்தவர்களுக்குப் பூமாலை சூட்டி, களைப்பு நீங்க, உடும்பு சூப்பை பருகத் தந்தனர்.

ஆரலும் இளநாகனும் எல்லாரையும் மறந்து கண்களால் கவ்விக்கொண்டிருந்தனர். எல்லாரையும் கைத்தூக்கிக் கும்பிட்டு

வரவேற்றாலும் பூமாலை சூட்டி அவர்களை அணைத்துக் கொண்டாலும். நான்கு கண்களில் விளையாடிய உரையாடல்களை எழுத்தில் சொல்லிவிட முடியுமென்று தோன்றவில்லை. அவ்வளவு கூட்டத்துக்கு இடையில் அனைவரையும் வரவேற்று வழிநடத்திக்கொண்டிருந்த இளந்தேகமும், உயர்ந்த தோள்களுக்கு மேல் சிவப்பாடை சூடியிருந்த இளநாகனை அடையாளம் கண்டு கொண்டான் திருக்கையன். திருக்கையனுக்கு மட்டுமில்லை, உடன் வந்தவர்களுக்கும் புரிந்தது. நாகர்களைப் பார்த்ததும் அவர்களின் உருவ அமைப்பைக் கண்டதும் மஞ்சள் உடல்களைப் பார்த்ததும் எண்ணற்ற மனக் கிளர்ச்சியில் தவித்த அவர்கள் அதையும் தாண்டி ஆரல் மற்றும் இளநாகனின் பார்வைகளால் தங்களுக்குள் கள்ளச் சிரிப்பைப் பகிர்ந்தார்கள். ஆரல் குமரிக்கோட்டிலிருந்து கிளம்பும்போதே கோட்டிப் பிடித்தவளைப்போல நாகநாட்டையும் இளநாகனையும் பற்றிப் புலம்பி வந்ததில் பலரின் காதுகள் ரீங்காரமிட்டிருந்தன.

யாருக்கும் வசப்படாத, அறுபத்தியெட்டு நாடுகளின் மாந்தர்களிடம் சிக்காத ஆரல், சிக்கிக்கொண்டது இவனிடமா என முதலில் வியந்தான் திருக்கையன். கரையேறி நின்றதும் மற்ற திமில்களை அழைத்து வர, இளநாகன் செய்த ஏற்பாடுகளும் எல்லாரும் அவனுக்குக் கொடுத்த மரியாதையும் அவன் மற்றவர்களிடம் நடந்துகொண்ட பண்பையும் அந்த ஓர் இரவு விருந்திற்குள்ளே திருக்கையானால் உணர முடிந்தது.

எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செய்தபடியே இருந்தாலும் இளநாகனின் பார்வை ஆரலையே சுற்றி வந்ததையும் ஆரல் அவனைக் கண்ட கணம் முதல், மலர்ந்த செங்காந்தளாகச் சிவந்திருப்பதையும் அவனால் உள்வாங்க முடிந்தது. ஆரல் சரியான முடிவைத்தான் எடுப்பாள் எனத் திருக்கையனுக்குத் தெரிந்திருந்தாலும் இறுதிக்காலம் வரை ஒன்றாகப் பயணிக்கப் போகிறவர்கள் எண்ணம் அன்னம்போல ஒன்றாக இருக்க வேண்டும் என்கிற சிறிய அச்ச உணர்வும் திருக்கையனுக்கு இருந்தது. எல்லாம் நீங்கி முழுமையாக இளநாகனைத் திருக்கையன் மனது ஏற்றுக் கொண்டுவிட்டது.

நாவாய்களின் வருகைக்காக ஆழிக் குட்டையைக் கடந்து மரணத்தீவிற்கு வெளியே வடக்கே இளநாகன் அனுப்பிய நாகர்கள் காத்திருந்தார்கள். ஆழியில் மின்னும் மீன்கள் ஆழியில் ஒளிச் சிப்பிகளாக மிதந்தன. தொலைவில் வந்துகொண்டிருந்த நாவாயைக் கண்டதும் நாகர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கினர். அவர்களுக்கு நாவாய்கள் அந்த இரவின் முக்கால் பிறையொளியில் ஆழியில் மிதக்கும் மலையாகத் தோன்றியது. நாவாய்களைப் பின்னால் விளைந்த விண் மீன்களால்

தெளித்த விசும்பு ஆழியின் அலைகளில் மிதந்தபடி வானையும் ஆழியையும் முறுக்கியிருந்தது. சாதாரணமாகப் பார்த்தால் விசும்பே ஆழியைப்போலத்தான் இருந்தது. நீகான் கட்டளைப் படி முன்னதாக நாகர்கள் காத்திருந்த வத்தையை நோக்கி உருவன் வந்து சேர்ந்தான். முதலில் உருவனை நாகர்கள் ஒளிரும் மீன்கள் என நினைத்தார்கள். உருவன் அருகில் வந்து வத்தையிடம் நின்றதும்தான் அது உருவன் என அவர்களுக்குத் தெரிந்தது.

நாவாய்களின் வேகத்திற்கு ஈடுகொடுத்துப் பொறுமையாக வந்தான் உருவன். நாவாயைச் செலுத்தும் நீகான், உருவனை இரவில் அடையாளம் காண்பதற்காக உருவனின் முதுகில் ஒளிரும் கற்களை பிசின் கொண்டு ஒட்டியிருந்தான். இரவில் உருவனின் முதுகில் ஒளிர்ந்த அந்தக் கற்களை விளக்காகக் கொண்டு நீகான்கள் நாவாயை ஓட்டி வந்தனர். தொலைவிலேயே மரணத்தீவை நீகான்கள் கண்டு கொண்டதால் இரண்டு நாவாய்களின் வேகத்தையும் குறைக்க நடுமரக்கம்பத்தின் மேல் பாயையும் நடுப்பாயையும் சுருட்டிக் கட்டினார்கள். பின் மரப்பாயையும் சுருட்டிக் கட்டச் சொல்லிவிட்டு நீகான்கள் சுக்கானை தூரத்தில் ஒளிரும் வெளிச்சத் திசைக்குத் திருப்பினர். காற்றின் வேகத்தைத் திசை மாற்றிய சுக்கானை இழுத்துக் கட்டினர். நாவாய்கள் தங்களின் வேகத்தைக் குறைத்தன. வத்தையில் நின்ற நாகர்கள் தங்களது தீப்பந்தத்தை உயர்த்திக் காட்டி இடதும் வலதுமாக ஆட்டினர். நீகான்களும் பதிலுக்கு அவ்வாறே செய்தனர். நீகான், பாய்மரம் கட்டியவர்களிடம் நங்கூரத்தை இறக்கச் சொன்னான்.

ஆழிக்கரையோரம் வந்து நங்கூரமிட்டு நிற்பதை வத்தைகளில் காத்திருந்த நாகர்கள் வந்து சொன்னார்கள். திருக்கையன் நாகர்கள் சிலரோடு திமிலில் நாவாயை நோக்கிச் சென்றான். உடன் வந்த நாகர்கள் வழி காட்ட நேராக ஆரப்பர் நாட்டுக்கு ஒரு நாவாயில் திருக்கையன் வருவதாக ஏற்பாடு. இன்னொரு நாவாயில் நாகர்களை ஏற்றிக்கொள்வதாகத் திட்டம். இளநாகன் ஆரப்பர் நாட்டினருக்கு வந்திருந்தவர்களை அறிமுகம் செய்வதற்காகக் கிளம்பினான். இளநாகன் இவர்கள் வரும் முன்பாகவே குமரிக்கோட்டுக்குக் கிளம்ப வேண்டிய முன் தயாரிப்புப் பணிகளைச் செய்துவைத்திருந்தான். அதனால் நாகநாட்டில் கிடைக்கக் கூடிய மணிகளையும், குமரிக் கோட்டில் தாய்களுக்குப் பரிசாகக் கொடுக்க, கல்லால் செதுக்கிய நாக உருவங்களை எடுத்து வைத்திருந்தனர். முடக்கு வாதைப் பிணிக்குப் பயன்படும் நாகக்குட்டிகளையும் மர உறைகளில் அடைத்து வைத்திருந்தார்கள்.

கொடிய நஞ்சைக் கொண்ட பாம்புகள் சிலவற்றையும் பிடித்து அகலக் கொப்பறைகளில் மூடி வைத்திருந்தனர். அவை குருதி உறைந்து நெஞ்சடைப்பு வருவோரைக் குணமாக்கப் பயன்படக் கூடியவை. பாம்பின் தோலால் செய்யப்பட்ட உடைகளை எடுத்து வைத்தனர். இளநாகன் கொடுத்திருந்த உத்தரவுப்படி அவற்றை வத்தைகளில் ஏற்றி ஆழியில் நிற்கும் நாவாய்களில் ஏற்றினர். கொற்றவை வெறியாட்டுக்காகத் திட்டமிட்டவர்களை ஏற்றிக்கொண்டு வத்தைகளும் திமில்களும் நாவாயை நோக்கிப் பயணமாகின. இளநாகன் ஆரலுடன் திமில்களைக் கூட்டிக்கொண்டு ஆரப்பர் நாட்டை நோக்கிப் பயணமானான்.

ஆரலின் தோளில் கிடந்த இளநாகனின் உதட்டில் வீசிக் கொண்டிருந்த சங்குத் தீயின் வெளிச்சத்தை அப்படியே அள்ளிப் பருகுவதுபோல அவளது உதடு குவிந்தது. காற்று உதட்டில் தேக்கி வைத்திருந்த உப்பை உறிஞ்சினாள்.

“நங்க, உவக்குலயா..?”

“நான் உப்பத் தின்னு வளந்தவ. உப்பக் குடிக்கிற மீனத் தின்னு வளந்தவ. இந்த உவப்பு எனக்குத் தித்திக்குது. நீ கொடுத்த மலைத்தேனவிட, உன் உதடு கொடுக்குற உப்புத்தே சொவையா இருக்கு.”

“எனக்கு எல்லாமே கனவு மாதிரி இருக்கு நங்க! எத்தன ஆயிரம் ஆண்டு போச்சோ தெரியல. இவ்ளோ காலம் நம்ம மக்கள பிரிச்ச கடலு... உன் மூலமா ஒன்னு சேர்த்திருக்கு.”

“நீயும் நானும் சேரனும்னு இவ்ளோ நாள் இயற்கை காத்துகிட்டிருந்துச்சோ என்னவோ.”

அழுந்த முத்தமிட்டு அவளை இறுக்கி அணைத்துக்கொண்டான். தூரத்தில் மின்னிய தீயைக் கண்டு திமிலில் இருந்த திமிலோட்டி சூரன் கத்தினான்.

“கடலுக்குள்ள தீயா..? இல்ல, தீவுக்குள்ள தீயா? தெரியல. என்னமோ எரியுது!”

ஆரலிடமிருந்து சட்டென விடுபட்டு எழுந்தான் இளநாகன். இரவு முழுக்கப் பயணித்திருந்தார்கள். வைகறை புலர இன்னும் நேரமிருந்தது. பனி போர்த்திய அந்தத் தீவில் எரிந்த தீயின் சிவந்த வெளிச்சத்தில் இருள் கூட்டம் அசைவதுபோல மாந்தர்கள் அசைவதை வைத்து ஆரப்பர் நாட்டின் எல்லைக்குள் வந்து விட்டதைப் புரிந்துகொண்டான்.

கொம்புகளை எடுத்துத் திமிலில் வந்தவர்கள் உடம்பிலுள்ள மொத்தக் காற்றையும் பீய்ச்சி அடிப்பது போல ஊத, எதிர்ப்புறத்திலிருந்து பறையொலிகள் கேட்கத் தொடங்க, அந்தப் பேரோசையில் மரங்களில் உறங்கிக் கிடந்த பறவைகள் சத்தமெழுப்பிப் பறக்கத் தொடங்கவும், தூங்கிக் கிடந்த வைகறை அலுப்பைத் துவட்டிப் புலரவும் சரியாகவிருந்தது.

ஆரப்பர் நாட்டிற்கு முன்பே தகவல் போயிருந்தமையால் அவர்களும் தயாராகவே இருந்தனர். இளநாகனை ஆரப்பர் தலைவன் செம்படவன் கழித்துறையிலேயே வந்து நின்று உடம்போடு இறுக்கிக்கொண்டான். தலைவி வடிவாங்கியும் உடன் நின்று அவனைத் தழுவினாள். ஆரலை இளநாகன் அறிமுகப்படுத்தினான்.

ஆரப்பர் நாட்டினர் குமரிக்கோட்டு மாந்தர்களைவிடத் தோல் வாளிப்பான கருமையில் மினுங்கிக் கிடந்தனர். ஆரல் அசந்து போனாள். கிட்டத்தட்ட பத்து ஓரைகளில் முடிந்த பயணத்தில் வந்தடைந்த ஆரப்பர் நாட்டில் மாந்தர்கள் எப்படி நம்மைவிட மினுங்கும் கருப்பில் சிவந்து கிடக்கிறார்கள். மூன்று யோசனை தூரத்திற்கு அந்தப் பக்கமிருக்கும் நாகர்கள் மஞ்சளாக இருக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருந்தது. நிலத்தின் தன்மைகள்தான் உடலின் மாற்றத்தை உருவாக்குகிறதோ என்று அய்யம் கொண்டாள். அவளைப் பார்த்ததும் அவர்களின் கண்ணில் தாரைதாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தது. ஆரல் அவர்களை தழுவிக்கொண்டாள். கிட்டத்தட்ட அவளுக்கு இணையான உயரத்தில்தான் ஆரப்பர்கள் இருந்தார்கள். அவளது கண்ணிலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. வந்திருந்தவர்களை மொத்தக் கூட்டமும் ஆராவாரத்துடன் தூக்கிக் கொண்டாடினார்கள்.

ஆரப்பர்கள் கொண்டு வந்திருந்த தூக்கிகளில் அவர்களை அமர வைத்துத் தூக்கிச் சென்றனர். நாகர்களைப்போலவே ஆரப்பர் நாடுகளிலும் மாந்தர்களே தலைமையேறியிருந்தனர்.

11 நளித் திங்கள் ஒன்றாம் திகதி

தென்னனும் கோகனும் முன்னால் பெருயாளியில் சென்று கொண்டிருக்க, பின்னால் சிம்மயாளியில் இருவாஞ்சியும் செம்பனும் சென்றுகொண்டிருந்தனர். சிம்மத்தின் ஒவ்வொரு எட்டிற்கும் பெருயாளிகள் தங்களது மூக்கிலிருந்து திட எச்சில் வீசியடிக்க, நாலுகால் பாய்ச்சலில் ஓடவேண்டியதிருந்தது. பின்னால் வரும் தும்பன் அருகில் வந்து விடுமோ என்கிற கூடுதல் பயத்திலும் விரைவாகச் சென்றது. தென்னன் மகரயாளியைச் செலுத்தும் தூதுவர்களிடம் இருவாஞ்சிக்குச் செய்தி கொடுத்திருந்தான். தும்பனோடு ஏழ் குறும்பனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இருவாஞ்சியை வழியிலேயே கண்டு செய்தியைத் தூதுவன் கொடுத்ததும் தனது பாதையை மாற்றித் தென்னன் போகும் பயண திசையைக் கேட்டு அதற்கேற்றபடி தனது வழியை உருவாக்கிக் காற்றைத் துளைத்துக்கொண்டு பறந்து வந்திருந்தாள்.

கோகனுக்குச் சிம்மத்தைக் கண்டதும் தேங்கியிருக்கும் குழப்பங்கள் காணாமல் போய் விதிர்த்து நின்றான். சிம்மத்தோடு இருவாஞ்சி வந்து நின்றதும் உச்சி முகர்ந்து வாரியணைத்து மகளைத் தோளில் சுமந்து செல்லவேண்டிய தென்னன் ஒரு முறை சிம்மத்தை நிமிர்ந்து பார்த்து அதிர்ந்து, ஆச்சர்யப்பட்டுத் தன்னிலைக்கு வந்ததோடு சரி. சிம்மத்தைக் கண்ட எருமைகள் தங்களது கட்டுக்குள்ளிருந்து பிரித்துக்கொண்டு ஓடியதைக் கண்டும்கூட தென்னனால் சிரிக்க முடியவில்லை. தென்னன் இதுபோன்றதொரு பெருங் குழப்பத்தில் இருந்ததை, தான் பிறந்ததிலிருந்து கண்டவள் இல்லை வாஞ்சி. ஏழ் பின்பாலையில் தென்னன் தன் அதிகாரம் வகைப்பட்ட தனது தமக்கைகளின் ஆழ் நிலத்திலிருந்தபோதும், தனது உடனதிகாரம்

கொண்ட அக்காக்களின் மீது கொண்ட அன்பைவிடக் கூடுதலான இழையை வாஞ்சி மீது கொண்டிருந்தான்.

அஞ்சாவண்ணி பெற்றெடுத்த பதினேழு குழந்தைகளில் கடை குழந்தையான இருவாஞ்சி மீது ஏற்பட்ட கட்டற்ற அன்பிற்குக் காரணியம் அறிந்தவனில்லை. பிறந்தபோது இரு நாள்கள் அழாமல் சிரிக்காமல் முனக்கிக் கிடந்த மகள் என்பதுதான் ஈர்ப்பின் ஓட்டமா என்று தெரியவில்லை. இருவாஞ்சி பிறந்தபோது தென்னன் தனது நிலத்திலிருந்தான்.

பிறப்பு இயல்பான ஒன்றாதலால் அவன் தனது முன்னோர்களால் விதைக்கவென்றே செப்பனிட்ட நிலத்தில் சாமை விதைத்துக் கொண்டிருந்தான். தன் இடுப்பில் இருந்த குடுவைக்குள்ளிருந்து அள்ளிச் சாமையை நிலத்தில் வீசி எறிந்தபோதுதான் இருவாஞ்சி பிறந்து மூன்று நாளான செய்தி வந்தது. சாமையைத் தூவும் பொழுதே மூக்கால் கவ்விப் பிடித்தோடும் பறவைகளுக்கு மீதமிருந்த சாமையை வீசியெறிந்துவிட்டுக் கிளம்பினான். உடனிருந்து எருமையோட்டிக்கொண்டிருந்த அக்கா பூந்தோகையிடம் தகவலைச் சொல்லிவிட்டு காற்றாய்ப் பறந்தான். தான் விதைத்து முடிந்ததும் வருவதாகப் பூந்தோகை சொன்னாள். நிலத்திலிருந்த மற்றவர்கள் பத்துக் குழி நிலத்திலும் உழுதுகொண்டும் விதைத்துக் கொண்டுமிருந்தார்கள்.

பிறந்து இரண்டாவது நாளும் மௌனத்தைக் கட்டிய மகள் மீது பயணத்தின் திசையெங்கும் பாசக்கயிற்றை வீசிக்கொண்டே சென்றான்.

இருவாஞ்சி மொத்த பிரம்பூர் நகரமும் சிரித்துக் கொண்டாடி மகிழ்ந்தும்கூட கள்ள மௌனம் காட்டியவள், தென்னன் தாழையில் அவளையேந்திய மறுகணம் வெடித்து அழுதாள். அவன் தூக்கிக் கொற்றவைக்கு முகம் காட்ட அவள் சிரித்தாள். திரண்டிருந்த மொத்த மாந்தரிகளும் குலவையிட்டுக் கொண்டாடினர்.

“அத்தன் தூக்கினதும்தான் அழுவுறா... சிரிக்கிறா... அழுத்தம் புடிச்ச பிறவி!”

மூத்த கிழவி அங்கலாயித்தாள். இருவாஞ்சி அப்பனின் மகள். தென்னனின் மகள். அஞ்சாவண்ணியைவிட அதிக வேட்கை தென்னனுக்கும் இருவாஞ்சிக்குமே அமைந்தது. தென்னன் அவளைக் கொண்டாடினான். காட்டில் தனித்துவிட்டுப் பழக்கினான். தென்னன் கற்ற அறிவை முன்னத்தி மகள்களுக்கும் இல்லாமல் முன்னத்தி மகன்களுக்கும் வாய்க்காமல் இருவாஞ்சியே வாங்கிக்கொண்டாள்.

அஞ்சாவண்ணியுடன் ஆண்டில் பாதி நாள்களிருக்கும் தென்னனின் மீதி நாள்களை இருவாஞ்சிக்கானதாகத் திருப்பினான். காடும் மலையும் மழையும் குளிரும், நீரும், நதியும் வளியும் தீயும் தென்னனிடமிருந்தே கற்றாள். தென்னன் முகம் சுழித்தோ, வீரம் மறுத்தோ, வெட்கியோ, குமைந்தோ, மனத் தாழ்ந்தோ இருவாஞ்சி பார்த்ததே இல்லை.

தெற்கிருந்த தென்னனின் ஓட்டி மோனத்தியின் இறுதி நாள்களில்கூட அவன் கலங்கிப் பார்த்ததே இல்லை இருவாஞ்சி.

மோனத்தி இருநூற்றைக் கடந்தவள். ஒன்பதரை அடியை ஏழடியாக வளைத்திருந்தது காலம். விரல்களிலிருந்த ரேகை உடலெங்கும் அழுந்தி, தோல்கள் கட்டு விரியனைப்போலிருந்தவள் மகாப் பிரத்தானத்தை அடைய முடிவெடுத்ததை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தென்னனுக்குத்தான் பேரிழப்பாகத் தோன்றியது. எவ்வளவு வேலைகள் இருந்தாலும் தினமும் அவளுடன் இரு நாழிகை நேரமாகவாவது உடனிருப்பான். அவளோடு இருக்கும் தருணங்களில் இரு பாகத் தொலைவாவது நடப்பான்.

விரல் பிடிப்பில் உள்ளங்கைத் தடமாகவே மாறிப்போன அவளது பல்லாண்டு காலப் புன்னைக் கிளை அவளது வேக நடைக்கு ஈடு கொடுத்துத் தனது கால்களை அகட்டிப் போடும். மோனத்தியின் கால்களும் புன்னைக் கிளையின் அடித்தடமும் வெண்டலோடிய முள்ளங்கிப்போல பிளந்துகிடக்கும். பார்ப்பவர்களுக்கு மோனத்திக்கு மூன்று கால்கள் என்பதாகவே தோன்றும். வேக நடையிலும் செறிந்த சொற்களை அள்ளி வீசுவாள்.

பரையிடமும் பரணிடமும் சேயோளிடமும், சேயோனிடமும், ஓட்டனிடமும் சேகரித்ததை அவர்கள் அவர்களின் முன்னோர்களிடம் உள்வாங்கிக் கொடுத்ததைப்போலவே, மோனத்தி பூட்டி பூட்டனுக்கும், பாட்டி பாட்டனுக்கும், தாய் தகப்பனுக்கும் மகள் மகனுக்கும், பெயர்த்தி பெயரனுக்கும், கொள்ளுப் பெயர்த்தி கொள்ளுப் பெயரனுக்கும், எள்ளுப் பெயர்த்தி எள்ளுப் பெயரனுக்கும் சொல்லிக்கொடுத்தாள். அதோடு, தான் திரட்டிய அறிவையும் இணைத்துக் கொடுத்தாள்.

தென்னன் பூட்டியிடமிருந்து நிறையக் கற்றான். காயம்பட்ட உடல் தோலைத் துளிகளில் மாற்றும் முறிஞ்சான் குழைச் செடியை காட்டிக்கொடுத்து அதன் பக்குவம் கற்றுக்கொடுத்தாள். பெரு வெட்டை மருந்திட்டுத் தைக்கக் கற்றுக்கொடுத்தாள். உடலின் எலும்புகளின்

எண்ணிக்கையைச் சொல்லிக்கொடுத்தாள். சிறு குடல் பெருங்குடலின் நீளத்தை அளந்து காட்டினாள். கண்ணில் ஓடும் ரேகைகளை கணித்துச் சொன்னாள். உடலின் ஒரு புறத்தில் ஏற்படும் வாதைக்கு மற்றோர் இடத்தில் அதைச் சரி செய்யும் கணுக்களை அடையாளம் காட்டினாள்.

குழந்தைப் பேற்றில் அவள் கைவைத்து ஒரு குழந்தைகூட மாண்டதில்லை. தலைகீழாகக் கிடக்கும் குழந்தைகளைத் தாயின் வயிற்றின் வயிற்றிலிருந்து உருட்டி மீண்டும் தலை வெளியே வரும்படி செய்வதில் வித்தைக்காரி. தலை புரண்டு, குடல் உடலில் சுருண்டு தாயின் வயிற்றிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கும் குழந்தையை வெளியே கொண்டு வருவதில் தேர்ந்தவள். தாயின் புழைக்குள் கைவிட்டு வயிற்றுக்குள் வழித்தடம் மாறி மேலேறி நிற்கும் குழந்தையின் உடலில் சிக்கியிருக்கும் குடல்களை மெல்லக் கழற்றுவாள். அந்நேரத்தில் தாய்க்கு ஏற்படும் வலி போக்க மயக்கச் சாறு கொடுத்து அமர்த்துவாள். குருதி அதிகம் வெளியேறாமல் இருக்க மண் நீர்த்தொட்டியில் தாயைப் படுக்க வைத்து மோனத்தியும் நீருக்குள் செல்வாள். பின் குழந்தையை வயிற்றுக்குள் மெல்லத் திருப்பித் தலைப்பகுதியை வெளியேற்றும் பகுதிக்கு நகர்த்துவாள். கைகளை அகல விரித்துத் தலையின் மேற்பகுதியிலிருந்து காது வரை குழந்தையைப் பிடித்து மெல்ல இழுப்பாள். நீருக்குள் தொப்புள் குடலோடு குதிக்கும் குழந்தையை அள்ளி மேலெடுத்துத் தொப்புள் கொடி நறுக்கிக் கட்டி அதை தாய்க்குள் நுழைப்பாள். மகப்பேறு ஆண் பெண் இருவருமே பார்ப்பார்கள். பேதங்கள் இல்லை. மோனத்தியின் வழியே மருத்துவத்துறை எல்லா வகையான உடல் சிக்கலையும் தீர்த்துவிடக் கூடியதாக இருந்தது.

உடலில் ஏற்படும் ஏதோ ஒரு பிணிக்கு ஏதோ ஒரு புள்ளியில் குணமாக்கும் கலையைக் காட்டிக் கொடுத்தாள். உயிர் நிலைகளின் ஓட்டத்தைக் கணித்த சூழ் புள்ளிகளின் சூட்சமத்தை மோனத்தியிடம் முறையாகப் பயின்று தேர்ந்தான் தென்னன். மாந்த உடம்பின் பெரும் பிணிகளை நீக்கும் அனைத்து மருத்துவத்தையும் சாறுகளையும் உணவுகளையும் படைத்துக் கொடுத்தாள் பெரும் மருத்துவச்சி மோனத்தி. அவளால்தான் அறுபத்தியெட்டு நாடுகளிலிருந்த மற்ற மாந்தர்களைவிடத் திடமானவனாக உடலைக் களிமண் உருண்டையாக உருட்டிக்கொள்ளும் வித்தையைக் கற்றான்.

கற்றதோடு இல்லாமல் தன்னிடமிருந்ததை எல்லாருக்கும் கற்றுக்கொடுத்தான். எல்லா நாட்டிலும் இவனால் உருவாக்கப்பட்ட பட்டறைகளே அறுநூற்றைத் தாண்டும். எல்லா இடத்திலும் சூழ்

புள்ளிகளைக் கற்ற பயிற்றுநர்கள் இருந்தார்கள். மருத்துவமும் பார்த்தார்கள். எல்லா ஆற்றல்களுக்கும் மூலமாக, காய்ந்த மூங்கில் இனத்தில் வெட்டியெடுக்கப்பட்ட சிறுவாரைக் கம்பையும், பிரம்பையும் கைக்கொண்டார்கள். நூறு பேர் ஒரே நேரத்தில் வீசும் கற்களை சிலம்பச் சுழற்றலால் தடுக்கும் வல்லமையைப் பெற்றார்கள். விழும் மழைத் துளியில் நனையாமல் சிலம்பைச் சுழற்றி அடை காக்கும் வீரத்தைக் கற்றார்கள். உணவுத் தேவைக்கான ஓட்டத்தைத் தவிர, உடலை இரும்பாக்கவும் இசையைக் கொண்டாடுவதும்தான் அறுபத்தியெட்டு நாட்டிலும் இருந்த பேருவகை.

தன்னிடமிருக்கும் அனைத்து அறிவையும் மற்றவர்களுக்கு மாற்றிவிட்டப் பின் வெறும் உடலாக உண்டு, உறங்கி, செயலற்று இருக்க மோனத்திக்கு விருப்பமில்லை. அதனால் அவள் எடுத்த முடிவு எப்பொழுதும் முதுவர்கள் மேற்கொள்வதுதான் என்றாலும் இருவாஞ்சி தென்னனை நினைத்தே கவலைப்பட்டாள்.

தென்னன் தன்னுடைய அறிவு தன்னுடையதில்லை. தன்னுடைய முன்னோர்கள் அறிவர்கள் விட்டுச் சென்ற தொடர்ச்சி என்றே எண்ணுபவன். அதையே தனது அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்த முற்படுபவன். அவனது ஆழமான தூய பேரன்பைத் தனது பூட்டி மீது கொண்டிருந்தவன். அதனால் மோனத்தியின் முடிவு அவனை மிகவும் உருக்கிவிடும் என அப்பாவை நினைத்து மருகினாள் இருவாஞ்சி.

ஆனால் தென்னனோ பூட்டியின் அனைத்து வகை உறவுகளையும் முறையாகச் சென்று அழைத்தான். கொள்ளுப் பெயர்த்திகளும் பெயரன்களும், எள்ளுப் பெயர்த்திகளும் பெயரன்களும் கூடியிருக்க மோனத்திக்கு மகாப் பிரத்தானம் செய்ய முன் வந்தான்.

அவள் மாந்த சமூகத்திற்கு விட்டுச் சென்ற அனைத்து வகைத் தழைகளையும் கொண்டு இடித்துப் பச்சிலை எடுத்தான். அவள் அதிகம் விரும்பும் உடும்புக் கறிக்காகக் காடு மேடலைந்து இள உடும்பைக் கொய்து, தானே வாட்டி எடுத்துப் பானையில் நிரப்பினான். குமரி ஆற்றின் அடிமடியில் நீர் சேகரித்துக் கொண்டு வந்து, பிரிமனை செய்து அதன் மீது வைத்த மோந்தல் பானையில் நிரப்பினான்.

மோனத்தி, இளவங்கப் பஞ்சில் தானே நெய்த ஆடைகளை ஒன்று விடாமல் சேர்த்துக்கொண்டு வந்தான்.

செம்புரைக்கல் மலை தேடிப் போய் வசமான கல்லறுத்தான். எட்டுப் பாக நீளமும் மூன்று பாக அகலத்தில் ஐந்து கல்லைக் கல்தச்சர்கள்

அறுத்தார்கள். மிகக் கடினமான வேலை அது. செம்புரைக் கல் மென்மையானதும், திடமானதுமாக இருக்கும். கல் உளி சரியாக நுணுக்குகளில் தட்டாமல் விட்டால் முழுக் கல்லும் சிதைந்துவிடும். கல்லுக்கென வாட்டம் உண்டு .

தேர்ந்த தச்சர்கள் கல்லின் தரத்தையும், கல் பிளக்கும் உத்தியையும் கல் இளகிக்கொடுக்கும் இடத்தையும் அறிவார்கள். ஒரே தட்டில் கல்லை இரண்டாகப் பிளந்தும் விட முடியும். கல் தச்சர்கள் உடனிருந்து செய்து கொடுத்தார்கள். அக்கல்லில் அவள் விரும்பும் கருநாகப் பாம்பின் உடல் வரைந்து அவளது பெயரைத் தமிழியில் எழுதி வைத்தான்.

ஐந்து பாகப் பள்ளம் தோண்டி மண் எடுத்து நால் பக்கமும் செங்குத்தாகக் கல்லை இறக்கி, மேலே மூன்று பாகமும், மண்ணுக்குள் ஐந்து பாகமும் உள்ளிருக்கச் செய்தார்கள். தரைக்கு வெங்குச்சங் கற்களைப் பரப்பினார்கள். அதன் மீது ஆற்று மணலைக் கொட்டிச் சமப்படுத்தினார்கள். ஒரு குளிர்ந்த உறைவிடமாக மாறியது கல் பதுக்கை.

மேலே ஒரு கல் கொண்டு மூடி, நீருக்கு மேலே எட்டிப் பார்க்கும் நாரைகளின் தலையைப்போல வீற்றிருந்தது கல் பதுக்கை. முன் பக்கம் செம்புரைக் கல்லை வட்ட வடிவில் அகழ்ந்து மாந்தன் உள்ளே போகும் வண்ணம் அமைத்தார்கள். பத்துப் பாக உயரத்தில் கல்லில் முகம் செதுக்கி உடல் செதுக்கி கல் பதுக்கைக்கு ஏழடி தள்ளி நிறுத்தி வைத்தார்கள்.

ஆயிரக்கணக்கான கல் பதுக்கைகளால் நிரம்பிய அந்த நிலத்தில் மாந்தக் கல் உருவங்கள் கட்டி முடிக்கப்படாத அரங்கத் தூண்களைப் போலப் பரவிக் கிடந்தன. அதே நிலத்தில்தான் மோனத்தியும் மகா பிரத்தானம் செய்தாள்.

மூன்று நாள் கொண்டாட்டம் அது. அனைத்து உறவுகளும் மொத்த ஊரினரும் வந்திருக்க, அறிவர்கள் சூழ்ந்திருக்க, மோனத்தி எல்லாருடனும் உண்டு, உறங்கி, தனது வளர்ப்பு விலங்குகளுக்கு முத்தமிட்டு, பறை முழங்க, கொம்பு ஒலிக்க, கல் பதுக்கையை நோக்கிப் பயணமானாள். அவள் கல் பதுக்கை வந்து நிற்க, ஆடிப் பாடி அனைவரும் களைத்திருக்கும் அந்திப்பொழுதில் தென்னனை நெஞ்சாரத் தழுவினாள். தென்னனின் உடல் நடுங்குவதை கவனித்தாள். நிமிர்ந்து அவன் முகம் பார்த்துச் சொன்னாள்.

“எனக்கு எல்லாமே முடிஞ்சது. இந்த உடம்ப எவ்ளோ நாள் சொமக்குறது தென்னா? ஏதோ என்னால ஆனத எல்லாருக்கும் கொடுத்திருக்கேன்... நீங்களும் கொடுக்கணும்.. கொத்தவைய மனசுல வச்சிக்கிட்டு, மாந்தர் நல்லாருக்க எல்லாரும் அறிவக் கொடுங்க... அவ்ளோதான். வரட்டுமா...”

எல்லாரையும் ஒரு முறை பார்த்தாள் மோனத்தி. அனைவரும் குலவையிட்டனர். மகாப் பிரத்தானத்திற்கு வந்திருந்த மெந்தாரகையும் அருகனும் ஆதிப்பேரியாழைப் போர்த்தியிருந்த துணிகளை விலக்கினர். அழல் செந்நிறத்தில் அறுபத்தயொரு நரம்புகளைக் கட்டியிருந்த யாழை, அருகன் நின்றுகொண்டு வாசிக்கத் துவங்கினான். மெந்தாரகையும் இணைந்து அந்த ஒற்றை யாழில் மேற்செம்பாலைப் பண் இசைத்தார்கள். மொத்த மாந்தக் கூட்டமும் மேற் செம்பாலை உருகி யாழில் வழிவதைக் கேட்டு இறுகிப்போனது. பறவைகளும் விலங்குகளும் அசைய மறந்துவிட்டன. மேற் செம்பாலைப் பண் அந்த நிலத்தையே கட்டுக்குள் கொண்டுவந்துவிட்டது. நரம்புகளின் மீட்டலில் உயிர் வழிய, ஓட்டி கல் வட்டம் வழியே உள்ளே தூக்கி விடப்பட்டாள். அவளுக்கான அனைத்தும் அங்கிருந்தது. தனது உடைகளைக் களைந்தாள். தனது பதின்மூன்றாவது வயதில் இடது கையில் மணிக்கட்டிலிருந்து தோள் வரை வரைந்த நீண்ட நாகத்தின் அலகைத் தடவிக்கொடுத்தாள். தனது இணையன் காத்தனின் முகத்தை ஒரு முறை நினைத்துக்கொண்டாள். மூடியிட்ட பானையிலிருந்து பச்சிலையை அள்ளி உடலெங்கும் பூசினாள். உடல் குளிர்ச்சியடைவதைக் கவனித்தாள். முகத்திலும் பூசினாள். முகம் கொற்றவையாகிக்கொண்டிருந்தது. தெற்குத் திசையில் அமர்ந்து கண்மூடிக் கொற்றவையை வேண்டினாள்.

“மூடுங்கள்!”

அவளது குரல் திடமாக ஒலித்தது. தென்னன் மனதை இறுக்கிக் கொண்டு வட்டப் பாதையை மூடினான். இருள் ஒளிர்ந்து அரவணைத்துக்கொண்டது, மோனத்தியை!

மோனத்தியின் உயரத்திற்கு ஈடாகச் செதுக்கிய கல்தூண் அதன் அருகிலேயே நடப்பட்டது. சுற்றிலும் இருக்கும் எல்லாக் கல் பதுக்கைகளிலும் இது போன்ற தூண்கள் அந்தப் பகுதி முழுக்கவே நிறைந்து மின்னிக்கொண்டிருந்தன.

நான்கு திகதிகள் இரவும் பகலும் அருகனும் மெந்தாரகையும் அவர்களது குழுவினரும் மாறி மாறி இசைத்து மோனத்தியை

அமைதிப்படுத்தினார்கள். கல் பதுக்கைக்கு நுழைவதற்கு முன்னால் திடமான மனப்பயிற்சிகள் உண்டு. தெற்கிருக்கும் யாவரும் முன்னமே மூன்று திங்கள் தம்மைப் தனிமைப்படுத்திப் பழகுவார்கள். உணவைக் குறைத்து நீர் மட்டுமே அருந்தப் பழகுவார்கள். நீரையும் மறுத்துக் காற்றில் கிடைக்கும் உணவிற்குப் பழகுவார்கள். காற்றின் உணவையும் மறுத்துப் பழகுவார்கள்.

பதிநாலாவது நாளில் அந்தியில் கல் பதுக்கையில் தலை வைத்துப் படுத்துப்பார்த்தான் அருகன். அவனது காதுகளுக்குள் அவளது அழைப்பு ஏதுமில்லை. உள்ளிருந்து எந்தச் சலனமும் தட்டுப்படவில்லை. நீண்ட நேரம் அருகன் உன்னிப்பாக மனதைக் கல் பதுக்கைக்குள் வைத்தான். பேரமைதி.

மோனத்தியின் கல் பதுக்கை முன், குழுவினர் அனைவரும் விழுந்து வணங்கினர். சிலர் அவளின் பதுக்கை இருந்த இடத்தின் மண்ணைத் தங்களது இடுப்புக் கலயங்களில் சேமித்துக் கொண்டார்கள்.

தென்னனிடம் சென்று அருகன் நடந்தவற்றைச் சொன்னான்.

“பெருந்தாய் கூப்பிடல. காது வச்சிக் கேட்டோம். தட்டிப் பார்த்தோம். எதுவும் சமிங்கை இல்ல. எங்கக் கடமைய முடிச்சுகிட்டு வந்துட்டோம்!”

எல்லாவற்றையும் கேட்டதும் அவனை அணைத்துக் கொண்டான் தென்னன். தென்னனின் உடல் நடுங்குவதை அருகன் உணர்ந்தான். சில விநாடிகள் அமைதியாக இருந்து பின் விடைகொடுத்தான் தென்னன். மாந்தர்கள் இதுபோலத் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொள்வது இயல்பான ஒன்றுதான். குமரிக்கோடு முழுக்கவே முதுவர்களின் கல் பதுக்கைகளும், கல் திட்டைகளும் நிறைந்து கிடந்ததன. இயற்கை வழிபட்ட இறப்பைத் தாண்டி அக வயப்பட்ட இறப்பை விரும்பியேற்றல் என்பது அறுபத்தியெட்டு நாட்டிலும் ஒரு மரபுதான். இருவாஞ்சி தென்னனை ஆழ்ந்து கவனித்தாள். இறுக்கமான மனநிலையில் இருந்தானே தவிர கலங்கினான் இல்லை.

ஓட்டியின் நிழலில் வளர்ந்து அவள் மகாப் பிரத்தானம் எய்தும்போதுகூட திடமாக இருந்த தென்னனின் முகமா இப்படி இருக்கிறது. தனக்கு முன்னால் சென்றாலும் பேசி விடும் நேர்கை அமைந்தாலும் அத்தன் தென்னனிடம் பேசத் தோணவில்லை. அதேநேரம் உடனிருந்த கோகனும் பேரமைதியோடு வருவதுதான் மனதை வதைத்தது. ஏழ் குறும்பனை கொண்டாட்டத்தை நோக்கிப் போகவேண்டியவர்கள்

சம்மந்தமில்லாமல் ஏழ் குணக்கரைநாட்டில் பயணம் செய்வதும் புதிராக இருந்தது.

கோகன் மெலிந்திருந்து தாடியில் நரைகள் பூத்திருப்பதை இருவாஞ்சி பார்வையால் குறிப்பெடுத்துக்கொண்டாள். அவனின் முகம் வதங்கி இறக்கும் தருவாயிலிருக்கும் நரியைப்போலச் சூம்பிக் கிடந்ததைச் செம்பனும் கவனிக்கத் தவறவில்லை. ஏதோ நம் அறிவுக்கு எட்டாத சிக்கல் ஒன்று இருப்பதை இருவரும் புரிந்துகொண்டார்கள்.

கோகனை அவர்கள் இப்படிப் பார்த்ததே இல்லை. கோகன் பொதுவாகப் பெரும் பகடியடிப்பவன். அவனது தீவிரமான கணிய ஆய்வுக்கு ஏற்றபடி உர்ரென இருப்பவன் கிடையாது. எப்பொழுதும் மழலைகள் சூழ்ந்திருப்பான். அவனது முகத்தில் எப்பொழுதும் ஒளிந்து கிடக்கும் புன்னகை கடும் குழப்பத்தோடு அவனைக் காணச் செல்வோரையும் மாற்றிவிடும் தன்மையுடையது. எந்தக் குழப்பத்திற்கு விடை தேடி வந்தார்களோ அதைக் கூட மறந்து கோகனின் பேச்சில் திளைத்துச் சுவையோடு செல்வர். அப்படிப்பட்ட கோகனின் உயிரோட்டமற்ற செயல்பாடே தென்னனையும் தொற்றியிருக்கக் கூடும். எல்லாவற்றிற்கும் விடை கொடுக்கும் தென்னன் கோகனின் மனதைவிடச் சொல்லிழந்தவனாகக் காணப்பட்டதுதான் இருவாஞ்சிக்கு அளவில்லாப் பிதுக்கலாக இருந்தது. செம்பன் இருவாஞ்சியிடம் கண்களால் கேட்டுப் பார்த்தான். உதட்டால் பிதுக்கினாள். அவளுக்குள் இந்த இருவரின் மனதிலும் சுழன்றடிக்கும் மனமுடிச்சை அவர்களாகச் சொல்லாமல் தெரியப்போவதில்லை என்றெண்ணினாள். உலகம் விரும்பாத ஏதோ ஒன்று நிகழப் போகிறது என்பது மட்டும் புரிந்தது.

12 துலைத் திங்கள் முப்பதாம் திகதி

அருகனும் மெந்தாரகையும் ஏழ் மதுரையின் பாடலியூரிலிருந்து வேகமாக வெளியேறிக்கொண்டிருந்தார்கள். குழவலும் கொஞ்சலும் ததும்ப நிறைந்து பொங்கிய நேற்றைய நாள் இப்பொழுதில்லை. இருவரும் பேசிக்கொள்ளவுமில்லை. இரண்டு துளிகளில் சில நூறு சண்டையிடும் மெந்தாரகையின் அமைதிதான் அருகனை மேலும் குழப்பியது.

ஒரு திங்களுக்கு முன்பு அத்தனை மகிழ்வோடு பாடலியூலிருந்து இசைப்போரும் இசைக் கருவிகளைக்கொண்டு செல்லவும் தேவையான ஆயிரத்து எழுநூறு பேரையும் பெருயாளிகளின் நானூறு வண்டிகளும் அவற்றிற்கு வழிநடைக்குத் தேவையான உணவுகளையும் சேகரித்துத் தனது குழுவைக் கிளப்புவதற்கான ஆயத்த வேலையிலிருந்தான் அருகன். ஆதிப் பேரியாழ் அவன் உருவாக்கிய இசை அரங்கில் இருமாப்போடு கம்பீரமாக நின்றிருந்தது.

“ஆதிப் பேரிய எப்ப உருவாக்கப் போறோம்?”

மெந்தாரகையின் கேள்விக்கு உடனே விடையிறுத்தான் அருகன்.

“நம்மிடம் பேரிதான் பதினோரு கருவிகள் இருக்கிறதே!”

அவனை முறைத்துப் பார்த்தாள்.

“போன ஆண்டு இதே திங்களில் பேசியதை மறந்துட்டியா..?”

அவன் மறக்கவில்லை.

அடர்ந்த நீலக் காட்டில் பல நூற்றாண்டு காலத் தணக்கு அகால மரம் மூப்படைந்து கல் பதுக்கைக்காகக் காத்திருக்கும் தாயைப் போல நரம்புகள் தளர்ந்து தோல் பட்டைகள் கிழிந்து, இலைகள் உதிர்ந்து கிளைகள் காய்ந்து அடிப்பகுதி மட்டும் ஈரத்தோடு தனது கடைசி உயிரை மிச்சம் வைத்திருப்பதை அறிந்து பாடலியூர்த் தாயிடம் அனுமதி கேட்டு, முப்பது தச்சர்களையும், அதை ஏற்றி வர இருபது பெருயாளி வண்டிகளும், வண்டிகளுக்குள் ஏற்ற தீரர்கள் இருநூற்று அறுவர்களையும் அழைத்துப்

போய் அரைத் திங்கள் பாடுபட்டு வெட்டி வந்தான். சிம்மங்களின் குணங்களை அறிய அது வாழுமிடத்திற்குத் தேடிப் போன இருவாஞ்சியும் செம்பனும் குமரியாற்றோரம் வயது மூப்பில் இறந்து கிடந்த சிம்மயாளியின் தோலையும் அதன் உடம்பிலிருந்த நரம்புகளையும் கொண்டு வந்து கொடுத்தனர். சிம்மத்தோலை எருமைப்பாலில் முக்கியெடுத்து மட்டமான நிழல் தரையில் விரித்து இழுத்து எல்லா பக்கமும் தோலின் நுனிகளில் உளிகொண்டு இறுக்கிப் பதப்படுத்தினர். உலர்ந்து விரைப்போடு இருந்த தோலில் அதன் முடிகளை நீக்கிக் காய வைத்திருந்தார்கள் அருகனின் குழுவினர்.

அடிப் பகுதி சிறு வட்டச் சுற்று ஆறடியைக் கொண்டிருந்தது. ஈரடிக்கு மேல் நோக்கி நீண்டு மேல் பகுதி பெரு வட்டமாக பதினெட்டு அடியாக உருமாறியிருந்தது தணக்கு மரம். அடிப் பகுதியில் பெரு வட்டத்தின் உள் பக்கம் குழியாடியைப்போலச் செதுக்கப்பட்டிருந்தது. மெந்தாரகையும் வேனிலும் சிம்மத்தோலைத் தணக்கு மரத்தின் பெரு வட்டத்தின் மேல் போர்த்தினர் . குமரிச் செடியின் நாரால் தோலை இறுக்கித் தணக்கு மரத்தில் கட்டி அதில் மரப் பிசின்களைத் தேய்த்தனர். தோல் மரத்தோடு இறுகிப் பிணைத்துக் கொண்டது. பெரு வட்டத்தைச் சுற்றிப் போர்த்தப்பட்டிருந்த தோலின் நடுப் பகுதியில் ஒரே சீராக ஆயிரம் துளைகள் இடப்பட்டிருந்தன. தோலின் துளைகளின் வழியே பாய்ந்த வெளிச்சத்தில் தணக்கின் குழியாடிப் பகுதியில் பூக்களை வரைந்தது போலிருந்தது. அதன் தண்டுப் பகுதியை இருபத்து நான்கு அடிக்கு நீட்டி நாகம் படமெடுத்ததைப்போலப் பெரு வட்டத்தில் குவிந்து நிழல் பரப்பும்படி செதுக்கியிருந்தார்கள். அந்த நிழல் குடையின் அந்தக் குடையின் நுனியில் மயில் கழுத்தைப் புனைந்து, மயிலின் அலகுகள் கீழ் நோக்கிப் பார்த்தபடிக்குக் கூர்மையாகத் தச்சர்கள் செதுக்கி இருந்தார்கள். குடைக்குள் ஆயிரம் மர முறுக்காணிகள் அடித்திருந்தார்கள். நரம்புகளைக் கட்டும் வகையில் தகைப்பு உருவாக்கியிருந்தார்கள்.

சிம்மத்தின் நரம்புகளை ஊறலிட்டுக் காய வைத்திருந்தனர். ஆயிரம் துளைகளிலும் நரம்புகளை விட்டு மேலே இழுத்துக் குடைபோலக் கவிந்து கிடந்த தணரின் உள் புறம் தகைப்பில் இருந்த முறுக்காணிகளில் நரம்புகளை இழுத்து இரண்டிரண்டாகக் கட்டினர். நரம்புகள் சிவந்த மஞ்சளில் மின்னிக்கொண்டிருந்தன. நீண்டு வளைந்த குடையில் செந்நிற அழல் வண்ணம் தீட்டித் தமிழியில் உருவான ஆண்டையும் உருவாக்கியவர்களின் பெயர்களையும் எழுதினார்கள். எல்லாம் முடிந்தது.

ஆயிரம் நரம்புகளைக் கொண்ட ஆதிப் பேரியாழை வியந்து பார்த்தது அருகனின் குழு. நூறு நரம்புகளைக் கொண்ட பேரியாழ்தான் அறுபத்தியெட்டு நாடுகளிலும் வியந்து பார்க்கப்பட்டது. ஆதிப் பேரியாழ் ஆயிரம் நரம்புகளைக் கொண்டு பழுத்த ஆனையைப் போல நிற்பதை அவர்களாலேயே நம்ப முடியவில்லை. இதுவரை இல்லாத அசாத்தியமான முயற்சி இது.

சுற்றிலும் மாந்தர்கள் அமரும் படியும், நிற்கும் படியும் வட்ட ஏணிப் பலகையை அமைத்தார்கள். எழுபது பேர் கொண்ட குழுவில் ஒவ்வொருவருக்கும் ஏழு நரம்புகளை மீட்ட அவர்களின் ஒவ்வொரு விரலிலும் மகரயாளியின் கொம்பைச் சொருகியிருந்தார்கள். ஏழு நரம்புகளுக்கு இடைவெளியாக ஏழு நரம்புகள் விடப்பட்டிருந்தன. செம்பாலைப் பண்ணை மீட்டி மீட்டிச் சுருதி சரியாகும் தவவுப் பகுதியை சரி செய்து பார்த்தார்கள். நரம்புகள் சரியாகக் கட்டப்பட்டு ஒலி அந்த அரங்கைத் துளைத்துக் காற்றில் வெளியேற ஆரம்பித்தது. இனி எந்தப் பண்களையும் வாசிக்க முடியும் என்கிற திடமான முடிவுக்கு வந்தார்கள். ஆதி யாழை மட்டும் கொண்டு செல்லத் தனியாக வண்டியொன்றை உருவாக்கினர். மூன்று பெருயாளிகளின் பின்னால் பிணைத்து இழுத்து வரக் கூடிய அளவு பேரடை கொண்டதாக இருந்தது வண்டி. அந்த நாளில் இதற்காக உழைத்த முன்னுற்று இருபது பேருக்கும் தேக்கம் மதுவும், மிளாக் கறியுமாகக் கொடுத்து அவர்களைக் களித்துக் கிடக்க வைத்தான் அருகன்.

மெந்தாரகை அருகனோடு நீண்ட நாள் காய்ந்து கிடந்த பசலையைக் கூட்டி அவன் உடலைத் தன் உடலோடு திகட்டத் திகட்டத் தின்னக் கொடுத்தாள். மூன்று திங்கள் வேறு எந்த நினைவும் இன்றி உழைத்திருக்கிறார்கள். மெந்தாரகைக்கு மட்டுமல்ல அருகனுக்கும் பெருங் கனவது.

உள்ளும் புறமுமாகச் செழித்துக் கிடக்கும் அறுபத்தியெட்டு நாடுகளில் வாழும் அனைத்து மாந்தர்களுக்குமான தேவையென்று எதுவுமே இல்லாமலிருந்தது. காமம், உணவு, இருப்பிடம், ஆடை முதலியவற்றைத் தாண்டி அவர்களது சுற்றம் பெருங்கனவுகள் நிரம்பியதல்ல.

கூட்டுச் சமூக வாழ்நிலையில் அனைவரும் வாழத் தேவையான உழைப்பென்பது ஓர் ஆண்டுக்கே மூன்று திங்கள் பகல் உழைப்புப் போதுமானது. சேகரித்து வைப்பதென்பது உழைப்பின் உபரியை

வீணாக்காமல் இருக்க, ஆங்காங்கே சேமிப்புக் கலன் வைத்திருந்தார்கள். பெருங் குளிர் காலத்தில் மட்டுமே சேமிப்புக் கலனிலிருக்கும் உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவார்கள். நீண்ட நாள் சேமிப்பென்பது தேவையற்ற ஒன்றாக இருந்தது. அப்படியிருக்கும் கூட்டுச் சமூக வாழ்நிலையில் அறிவர்களின் வேலை இடையறாத ஒன்றாக இருந்தது. அவர்களே நிலச் செப்பனிடுதல் தொடங்கி, சமூக வளர்ச்சிக்கான உரையாடல் வெளி வரை பன்முகத் தன்மையோடு இயங்குபவர்களாக இருந்தனர். அவர்கள் உள் வாங்கும் செய்திகள் அலசப்பட்டு, அதன் காரணியம் ஆராயப்பட்டு, அது அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்லவும், அதை ஒட்டிய கிராமக் கூட்டங்களும் நகரத் தெருக் கூட்டங்களும் போடப்பட்டு மக்களுக்கு எடுத்துரைக்கவும் மக்களிலிருந்து புதிய கருத்துகள் ஏதெனுமிருந்தால் உள் வாங்கப்பட்டு, தெளிந்த வரலாற்றுத் தடங்களைப் பதிந்துகொண்டிருந்தார்கள் அறிவர்கள். அவற்றைத் தங்களது மொழியில் சுவர்களிலும், பாறைகளிலும், குகைகளிலும், காட்சியகத்திலும் செதுக்கியும் வரைந்தும் சேமித்தார்கள். கடைக் கோட்டிலிருக்கும் கடைசி மாந்தனுக்கும் புதிய தொடக்கங்களைப் பற்றிய அறிவை வளர்த்திருந்தார்கள். ஊர்க் கூட்டங்கள் முன் மாலையில் தொடங்கி இரவேறும் தருவாயில் முடிவுறும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் தொடர்ந்து ஊர்க் கூட்டம் நடக்கும். ஊர்க்கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு எல்லாவற்றின் பொருள்களை ஆராய்வார்கள்.

அருகனும் அப்படியான ஓர் அறிவைக்கொண்டிருந்தான். அவனது தேடல் சந்தம், ஓசை தொடர்புடையது. புதிய கருவிகளைத் தேடியும், அதன் ஓசைகளையும் கொண்டு புதிய பண்களை வடிவமைத்தான். அருகனுடைய தனிப்பட்ட வேலையில்லை இது. அறுபத்தியெட்டு நாடுகளிலும் இருக்கும் பாடினியர்கள், விறலியர்கள், பாணர்கள், பொருநர்கள், சதிராடிகள் குழுக்களின் கூட்டு முயற்சி இது. அதன் தலைமையைத்தான் அருகன் ஏற்றிருந்தான். பல்லியத்தை ஒருங்கிணைக்கும் குழுவின் தலைவனாக அவனிருந்தான்.

பொதுவாக மற்றத் துறைகளில் இருக்கும் கூட்டு மன உழைப்பை விட பண்ணிசைத்தல் மாபெரும் செயல். இசைக்கிறவர்களும், பாடுகிறவர்களின் மனமும் ஒரு புள்ளியில் நிற்க வேண்டும். ஓராயிரம் பேர்களுக்கு மேல் அமர்ந்து ஒரே நேரத்தில் நிலத்தைப் பிளந்து வானை மண்டியிடச் செய்யும் மன உணர்வு படிமங்களின் ஒப்பற்ற கோர்வைதான் பல்லியம். பல்லியம் இசைப்பதற்குத் தொடர் பல்லாண்டு காலப் பயிற்சி

வேண்டும். தோல் கருவிகளைப் பயன்படுத்துவோருக்குக் கொடுத்த தத்தகாரம் பிசகாமல் அடிக்க, பாடினியர்களின் உயர்ந்த குரல் முழுமையாக அரங்கில் வியாபிக்கும் வண்ணம், நரம்புக் கருவிகளை மீட்ட வேண்டும். நரம்புக் கருவிகளின் ஒலியலை அடங்காத வகையில் காற்றுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். இத்தனை கருவிகளுக்கு ஏற்ற தாளத்தில் சதிராடிகளின் குழு ஆட வேண்டும். பல்லாயிரம் பேர் அமரும் அரங்கில் ஓராயிரம் பேரின் ஞானமும் ஒரு புள்ளியில் குவியும் அசாத்தியமே பல்லியமென்னும் பேரிசைக் கொண்டாட்டம்.

மெந்தாரகைதான் முதன் முதலில் மகரயாழுக்கு அறுபத்தொரு நரம்புகளைக் கட்டியவள். அறுபத்தொரு நரம்புகளிலும் ஒத்திசைவான ஓசையை மீட்டவள். அவள் மகர யாழில் பல்வேறு தேர்வுகளை எழுதிப் பார்த்தாள். அதனுடனேயே உறங்கினாள். உணவுத் தேடலில் அறிவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதனால் அதனோடே கிடந்தாள்.

அடிப்படையில் அருகனும் மெந்தாரகையும் ஏழ் குணக்கரையின் பாடலியூர் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்கள். வேட்டைக்குக் குடிகள் காட்டில் நுழையும்போதெல்லாம் அவர்கள் குலவையையும் பறையையும், தும்பிகளின் ரீங்காரத்தையும், ஊதல் மொழிகளையும் பறவைகளின் குரல்மொழியையும் கணக்கிட்டு அதனோடு பேசி, அதுபோல முழங்கி நாவையும் உடலையும் மனதையும் ஒன்றாக்கினார்கள். அவர்கள் ஒன்றாவதில் தொடங்கிக் கிள்ளையானர்கள். மூக்கு விடைத்துப் பறவையானர்கள். காட்டின் மரங்களானார்கள். காமத்தில் முகிழும் ஓசைகளிலும் புதிய பார்வைகளைப் பெற்றார்கள். மழையும் இடியும் சூறையும் தரும் ஒலிகளிலிருந்து பெற்று அதைப்போல ஒன்றை உருவாக்கினார்கள். அமைதிபோலிருக்கும் காற்றில் ஏகாந்த ஒலிகள் கிளர்வதைக் கண்டு அவற்றைத் தனதாக்கினார்கள். பெற்றவற்றை நிகழ்த்திப் பார்த்து மக்களிடம் கொண்டு சென்றார்கள். உழைக்கும் மக்களை மகிழ்விக்கும் பெரும்பாட்டைக் கொண்டார்கள்.

நரம்புக் கருவிகளையும், காற்றுக் கருவிகளையும் தோல் கருவிகளையும் யாழ், குழல், முழவு எனச் சிறப்புப் பெயர்களின் கீழ் அனைத்துக் கருவிகளையும் பொதுப்படுத்தினர்.

அறுபத்தியெட்டு நாடுகளிலும் அவரவர் வைத்திருந்த இசைக் கருவிகள் குறித்துத் தங்களுக்குத் தெரிவிக்கலாம் என எல்லாச் சிற்றூர் பேரூர்களின் தாய்களுக்கும் ஓலை அனுப்பினார்கள். ஒவ்வொரு தாயும்

தனது அரவணைப்பில் இருக்கும் பொருநர்களையும், பாடினியர்களையும், கருவிகளை உருவாக்கியவர்களையும் இசைத்தவர்களையும் அடையாளம் கண்டு மெந்தாரகையிடம் ஒப்படைத்தார்கள். மெந்தாரகை ஊர் ஊராக அலைந்தாள். ஒவ்வொரு கருவியாக வாசிக்கச் சொல்லிக் கேட்டு, அதன் ஒலிகளின் அளவைக் கொண்டும், ஒலிகளின் மாறுதல்களைக் கொண்டும், புதிய ஓசைகளைக் கொண்டும் அவற்றிற்குப் பெயரிட்டாள். உருவாக்கியவர்களே பெயரிட்டிருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டாள். அனைத்துக் கருவிகளையும் ஒலித் தன்மையும் ஓசையும் மாறாமல் ஒவ்வொரு கருவியையும் பலவாகச் செய்யச் சொன்னாள்.

மெந்தாரகை தலைமையில் யாழ் கருவிகளையும், குழல் கருவிகளையும், முழவுக் கருவிகளையும் கண்டடையக் குழு உருவாக்கப்பட்டது.

யாழ் கருவிகளை மெந்தாரகை நூற்று முப்பத்தாறு பேர் கொண்ட தனது குழுவின் மூலம் அறுபத்தியெட்டு நாடுகளிலும் தேடித் தேடி ஒன்றாக்கினார்கள்.

வில் யாழ், முளரி யாழ், சீறி யாழ், பேரி யாழ், சகோட யாழ், செங்கோட்டு யாழ், மகர யாழ், ஆதி யாழ் என ஒவ்வொன்றிலும் நன்றாக இசைப்பவர்களையும் ஒருங்கிணைத்தார்கள். யாழ் கருவிகளும் அவற்றை இசைப்பவர்களுமாக முன்னூற்றைத் தாண்டியது.

வேனில் தலைமையிலான குழு முழவுக் கருவிகளையும் அதை இசைப்போரையும் தேடியடைந்தது.

ஆகுளி, உறுமி, தவில், பறை, மிருதங்கம், மத்தளம், பெரும் பறை, பஞ்சறை, மேளம், முரசு, தமுக்கு, பேரிகை, பம்பை, மண் மேளம், கஞ்சிரா, ஐம்முக முழவம், கிடிகிட்டி என மக்கள் பயன்பாட்டிலிருந்த கருவிகளை ஒருங்கிணைத்து அதை இசைப்போரையும் அழைத்துக்கொண்டு அருகன் உருவாக்கிய இசையரங்கிற்குக் கொண்டுவந்து சேர்த்தாள் வேனில்.

கொம்பு, தாரை, புல்லாங்குழல், சங்கு, மகுடி, எக்காளம், சாரங்கி போன்ற கருவிகள் வைத்திருப்பவர்களையும், ஊதுகிறவர்களையும் ஒருங்கிணைத்து அரங்கிற்குக் கொண்டு வந்தது களியன் தலைமையிலான குழு.

இசைக் கருவிகளை வைத்திருந்த இசைத்த அறுபத்தியெட்டு நாட்டிலுமிருந்த அறிவர்களை ஒரு குழுவாக்கும் முயற்சியில் வெற்றி

கண்டார்கள். முதுவர்கள் ஒவ்வொரு பகுதிக்குமென உருவாக்கி வைத்திருந்த கருவிகளை அந்தந்த நாட்டளவில் ஒருங்கிணைத்து வைத்து, ஆமந்திரிகை செய்து மக்களை வியப்பிலாழ்த்தி வந்தார்கள்.

அதனுடைய உச்சமாக ஆமந்திரிகைக் கூட்டிசையை மாபெரும் பல்லியம் வாசித்தலாக மடை மாற்றி, ஒவ்வோர் இசைக் கருவிகளிலும் துணைக் கருவிகள் பல உருவாக்கி ஒரேநேரத்தில் அறுநூறு இசைக் கருவிகளும், தொண்ணூறு பாடினிகளும், விறலியரும், பாணர்களையும், பொருநர், கூத்தர்களையும், சதிராடிகளையும் கொண்டு குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்ற ஐஞ்சுரங்களையும் கொண்டு பல்வேறு பண்களைப் பாடி, இசைத்து, ஆடி ஏழ் பின்பாலையின் கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் அனைவரையும் மெய் மறக்க வைத்திருந்தனர்.

அருகனுக்கும் மெந்தாராகைக்கும் எப்பொழுதும் ஓயாத வாய்ப் போர் நிகழும். வாய்ப் போரில் புதிய பண்கள் சமரிடும். சமரின் முடிவில் புதிய இசை பிறக்கும்.

“ஆ..ஈ..ஊ..ஏ...” என்பாள் மெந்தாரகை.

“ரா..ரீ..ரூ..ரே...” என்பான் அருகன்.

“கா..கீ..கூ.கே...” எனக் கொஞ்சுவாள் மெந்தாராகை

“தா..தீ..தூ..தே...” பதிலடி கொடுப்பான் அருகன்.

அப்படித்தான் அவர்களிருந்தார்கள். இசையும் கூத்தும் களிப்பும், காதலும், காமமும் ஒருங்கே நிலை பெற்றவர்கள் அவர்கள்.

சுரங்களைப் பூரணர்கள் வகைப்படுத்தி விட்டுச் சென்றதிலிருந்து மேலும் பகுத்தறியும் போக்கை உணர்ந்து செயல்பட்டவள் மெந்தாரகை.

ஐஞ்சுரங்களையும் இயற்கையில் நளின ஒலிகளை எழுப்பிய பறவைகளையும் விலங்குகளிடமிருந்து கேட்டு அதிலிருந்து உண்டாக்கினார்கள். ஐஞ்சுரங்களும் ஆ, ஐ, ஈ, ஓ, ஊ என்கிற தொனியில் உருவாக்கி அதிலிருந்து பல்வேறு பண்களை உருவாக்கிக் கொடுத்தார்கள். பூரணர்கள் உருவாக்கிக் கொடுத்த ஏழு பண்களில்தான் பாட்டிசைத்தார்கள். அதிலிருந்து மேலும் பண்களை உருவாக்கும் முயற்சியில் அறுபத்தியெட்டு நாடுகளைச் சேர்ந்த பாடினியரும் பாணர்களும் முயற்சித்தனர்.

அருகனும் மெந்தாரகையும் இந்த ஆண்டு நடைபெறும் விழாவில் புதிய மாற்றங்களைச் செய்து பல்வேறு புதிய பண்கள் உருவாக்கப்பட்டதைச் சொல்ல விரும்பியிருந்தார்கள். குரல், இளி,

துத்தம், விளரி, கைக்கிளை என்கிற ஐஞ்சுரங்களை வழுவாக்கக் கூடுதலாக உழை, தாரம் என இரண்டு சுரங்களைக் கண்டு குரல், துத்தம், கைக்கிளை, உழை, விளரி, தாரம் என்று இணைத்து ஏழாக்கினார்கள். ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற புதிய சுரங்களால் புதிய துவக்கம் கண்டனர்.

செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என்ற ஏழ்பெரும் பண்களையும், புதிய சுரங்களால் பெருக்கும் முயற்சியில் இறங்கினர். ஒரு பண்ணுக்குரிய நரம்படைவுகளை மாற்றி அமைத்துப் பார்த்ததில் துணைப் பண்கள் கிடைத்தன. கொல்லி, குறிஞ்சி, யாழ்முறி, சீகாமரம், நட்டப்பண், தக்கப்பண், பழம்பஞ்சுரம், காந்தாரம், பஞ்சமம், மேகப்பண், புறநீர்மை, சாதாரி, நட்டபாடை, இத்தளம், செந்துருத்தி, தக்கேசி, செவ்வழி, பியந்தைக் காந்தாரம், ஆம்பல், காஞ்சி, நைவளம், காமரம் எனப் புதியதை உண்டாக்கிப் பண் பெருக்கினார்கள். இப்பண்களை ஏழ் பின்பாலையில் நடந்த கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் நிறுவவும் செய்தார்கள்.

மந்தித்துக் கிடந்த பண்கள் புதிய பண்களில் பொலிவை யடைந்தன. இந்தாண்டு தொடங்கும் ஏழ் குறும்பனைக் கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் மேலும் பதிமூன்று பண்கள் இசைக்கப்பட்டு, பெயரிடப்பட்டுத் தயாராகவிருந்தன. புதியவையும் பழைய பண்களையும் இணைத்து ஆயிரம் இசைஞர்களைக் கொண்ட பேரிசை நிகழ்வாக பல்லியம் இசைக்க வேண்டுமெனக் காத்திருந்தனர். ஒரு பண்ணில் தொடங்கி மற்றொரு பண்ணிற்குத் தாவிச் செல்லும் புதிய உத்தியைப் பல திங்கள் ஒத்திகைக்குப் பின் செழுமைப் படுத்தியிருந்தனர்.

அதோடு மாந்தர்கள் குறிப்பிட்ட இசைக்கு வெறி வந்ததுபோல ஆடுவதையும், மனதில் தேங்கிக் கிடக்கும் உணர்வுகளை வாய் மொழியாகக் கொட்டுவதையும் புரிந்துகொண்டனர். மாந்த மனதை இசையால் கட்டுப்படுத்த முடியும் என்பதை உணர்ந்திருந்தாலும் இது கூடுதலான பார்வைகளைத் திறந்துவிட்டது. இசையால் மாந்தர்களின் பிணிகளைச் சரி செய்ய முடியுமென்று நம்பினான் அருகன். அதற்கான முயற்சிகளைத் தொடங்கியதிலிருந்து, புதிய ஆக்கங்கள் உருவாகின. அதைச் செப்பனிட்டு மெருகேற்றினார்கள்.

யாருக்குக் குழந்தை பிறந்தாலும் அவர்களுக்கு வலி தெரியாமல் இருக்க, அந்தந்தக் கிராமங்களில், பேரூர்களில் நகரங்களில் குழு அமைத்து, பிறப்பின் நாள்களில் தொடர்ந்து இசைத்து, பாடி

மாந்தரிகளின் வலியைப் போக்கத் தங்களை அர்ப்பணம் செய்துகொண்டார்கள்.

தேவையான இடங்களில் மழை வேண்டிப் பாடினார்கள். முதுவர்கள் கல் பதுக்கைகளுக்குள் ஒப்படைக்கும்போது தொடர்ந்து பல தினங்கள் அவர்கள் அந்தச் சூழலுக்குப் பழகப் பாட்டிசைத்து அவர்களை அமைதிப் படுத்தினார்கள். அதையும் தாண்டிச் சில முதுவர்கள் உயிர் துறத்தலைக் கைவிடும்போது கரையேற்றி மீண்டும் வாழ்வதற்கு அறிவர்களிடம் சொல்லி அவரவர் ஊர்களுக்கு இடம் பெயர்த்தினார்கள்.

இசையும் பாட்டும் கூத்துமே அறுபத்தியெட்டு நாடுகளின் ஏகாந்த வாழ்விற்கான அச்சாணியாக இருந்தது. எல்லா நாடுகளிலிருந்தும் பிடாரர்களும் பூரனர்களும் பிரம்பூரை நோக்கிச் சென்றுகொண்டிருக்க, ஏழ் குறும்பனையை நோக்கிக் கிளம்பும் சமயத்தில் தென்னனிடமிருந்து வந்த திடீரழைப்பால் மெந்தாரகையும் அருகனும் நிலைகுலைந்து போயினர். பல்லியத்திற்கான ஒத்திகையே மூன்று திங்களைத் தின்றிருந்தது. மிகுந்த மன அலையோடு களித்திருந்த பேரின்பம் சட்டென விடுபட்டதுபோல அவர்களுக்குத் தோன்றியது. ஏழ் குறும்பனையின் தாய் அஞ்சாவண்ணிக்குச் செய்தியனுப்பிவிட்டு தென்னன் வரச்சொன்ன ஏழ் குணக்கரைத் தலைநகரை நோக்கி செல்லத் தொடங்கினர். அவர்கள் இல்லாமல் அவர்களது குழுவும் ஆதிப் பேரியாழும் பிரம்பூருக்குப் பயணமாகியது.

13 துலைத் திங்கள் இருபத்து எட்டாம் திகதி

காமனும், செந்தூரனும், வீமனும் முதல் அகண்ட பெரும் படையை வழி நடத்திக் கொண்டிருந்தார்கள். இதற்கு முன்பு இப்படி ஒரு

போருக்கு அவர்கள் தயாரான நினைவே இல்லை. அலை அலையாக மூர்க்கர்கள் நகர்ந்துகொண்டிருந்தார்கள். எறும்புகள் ஊர்வதுபோலச் சுறுசுறுப்பாக வரிசை பிசகாமல் தலைமைகளின் வழிகாட்டுதல் நெறி மீறாமல் அப்பெருங்கூட்டம் விரைந்து கொண்டிருந்தது. ஏழ் குறும்பனையில் கொற்றவை வெறியாட்டுக்கு மாந்தர்கள் முழுக் கவனத்தோடு ஈடுபடும் இவ்வேளையே தாக்கச் சரியான தருணம் என்பது அவர்களுடைய எண்ணமாக இருந்தது.

மூர்க்கங்குடிக்கும் அறுபத்தியெட்டு நாடுகளுக்கும் எல்லை இருவது யோசனைத் தொலைவுகளைக் கொண்டதாக இருந்தது. இடையே இரு மலைகளைக் கடந்து வெண்ணாற்றைத் தாண்டி வரவேண்டும்.

காமன் தனது படையணியை முதல் எல்லையான ஏழ் காந்தள் நாட்டிற்குள் நுழைய வேண்டும். அதன் எல்லைப் புறமாகப் பயணித்து ஏழ் மதுரையின் எல்லையினூடாக நகர்ந்து ஏழ் முன்பாலைகளின் எல்லை வழியே ஊடுருவி ஏழ் குணக்கரையைக் கடந்து குமரியாற்றைத் தாண்டினால் ஏழ் குறும்பனை தலைநகரம். அதுவரை நூற்றுப் பத்தாயிரம் கொண்ட பெரும் படையை வழிநடத்தி இத்தனைக் கண்டங்களைத் தாண்டிச் செல்வது எப்படி என்பதற்காகத் திட்டங்கள் வகுத்ததில் காமனின் பங்கு அளப்பறியது.

மூர்க்கங்குடிக்கும் அறுபத்தியெட்டு நாடுகளுக்கும் இடையே நிறுத்தப்பட்ட எல்லையைக் காப்பதில் மட்டுமே அறுபத்தியெட்டு நாடுகளும் கவனம் செலுத்தியிருந்தன.

வெண்ணாற்றுக்கு முன்பாக இரண்டு யோசனைத் தொலைவில் பத்துப் பாக உயரத்தில் சுடு மண்ணாலும் பாறைகளாலும் சுண்ணாம்புக் குழம்பாலும் கட்டப்பட்ட, பத்து யோசனைத் தொலைவு கொண்ட நீண்ட பெரும் சுவர் கட்டியிருந்தார்கள் அறுபத்தியெட்டு நாட்டைச் சேர்ந்த கட்டட வல்லுநர்கள். எழுபது அடி உயரத்தில், இருபதடி அகலத்தில் மிக வலுவாக எக்காலத்திலும் யாராலும் சிதைத்துவிட முடியாதபடி உறுதியாக இருந்தது சுவர். அதன் மேல் பாகத்தைக் கூம்பாய்ச்சியாக எட்டடிக்குக்

கட்டி, அதில் பளிங்குக் கற்களால் நிரவியிருந்தார்கள். அச்சுவர்களை இதுவரை சிம்மம் போன்ற விலங்குகள்கூட மோதித் தகர்க்க முடிந்ததில்லை. இவ்வேற்பாடும் கூட மூர்க்கங்குடி ஏற்கெனவே நிகழ்த்திய படையெடுப்புகளால்தான். இந்த நீண்ட பெரும் சுவர்கட்டப் பட்ட பிறகு முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எந்தப் படையெடுப்பும் நிகழவில்லை. இனி பெருந்தேற்றனால் எந்த முயற்சியும் செய்ய முடியாது. செய்ய மாட்டான் என்கிற முடிவுக்கு அறுபத்தியெட்டு நாடுகளும் வந்து சில ஆண்டுகள் ஆனபடியால் அவ்வப்போது காவல் நிற்கும் ஆள்களும் விலக்கிக் கொள்ளப்பட்டிருந்தார்கள்.

பெருந்தேற்றன் சினம் எல்லையற்று இருந்த அளவிற்குக் காத்திருக்கும் பொறுமையும் இருந்தது. காமனைக் கொண்டு திட்டங்கள் வகுத்தான். முதலில் உளவு பார்க்க ஆள் அனுப்பினான். உளவுப் பார்க்க போக வேண்டும் என்பதே கடினமான ஒன்றுதான். பெருஞ்சுவர் யாராலும் தாண்ட முடியாத குறுக்குத் தடை. அதற்குப் பல முறை முயன்றார்கள். ஆனையாளிகளைச் சுவரின் முன்பு நிறுத்தி, அதன் தும்பிக்கையின் நுனியில் கால் பாதம் பதித்து, அதில் நின்று நார்க் கயிற்றை வீசி, அந்த நார்க் கயிறும் மறு புறமிருந்த ஏதாவது ஒரு மரக் கிளையில் மாட்டினால் மட்டுமே ஒருவன் மேலே ஏற முடியும். அப்படி ஏறினால்கூடக் கூம்பாய்ச்சியாக எழுந்து நிற்கும் அந்த எட்டடியின் பளிங்கு வலுக்களில் தாக்குப் பிடித்து மேலே ஏற வேண்டும். அத்தகைய கடினமான ஒன்றைத் செய்வதற்கே பல நாள்கள் முயன்றார்கள்.

ஒரு வழியாக பளிங்குக் கற்களை கல் சுத்தியால் தட்டித்தட்டி உடைத்துத் தடம் வைத்தார்கள். அப்படி ஏறிச் சென்ற அம்பதிற்கும் மேற்பட்ட உளவு ஆட்களால்தான் இன்று இப்படை தயாராக காரணம். காமனும் பலமுறை நேரடியாகச் சென்று அறுபத்தி எட்டு நாடுகளையும் கவனித்திருக்கிறான். ஆட்கள் பல நாட்கள் உளவு பார்த்தார்கள். அதன் வெளிப்பாடே கொற்றவைக்கு வெறியாட்டுதான் சரியான தருணம் என்கிற முடிவுக்கு வந்தார்கள்.

பெருந்தேற்றன் காமனையும் செந்தூரனையும் வீமனையும் மட்டுமே தனது அந்தரங்கக் குழுவில் வைத்திருந்தான். முப்பது யோசனைச் சுற்றளவைக்கொண்ட மூர்க்கங்குடியைப் பெருந்தேற்றனின் எண்ணங்களுக்கு ஏற்றபடி நிர்வகிப்பதும் இவர்கள் மூவர் மட்டுமே. இவர்களுக்குக் கீழ் எழுநூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் இருந்தார்கள்.

வீமன் சென்ற ஆண்டே ஏழ் பின்பாலையில் நடந்த வெறியாட்டு நிகழ்வை மையமாக வைத்துத் தாக்குதல் தொடுக்கலாம் எனப் பெருந்தேற்றனிடம் தனது திட்டத்தை அறிவித்தான்.

“அதைவிட அழுத்தமான ஒன்ன சொல்லட்டுமா..?”

காமனின் முகத்தைக் குறியோடு கவனித்தான் பெருந்தேற்றன்.

“நாம பல தடவ முயற்சி பண்ணியும் அவங்கள தோக்கடிக்க முடியல. ஒரு தடவ காந்தள் நாடு நம்மகிட்ட வசமா சிக்குச்சு. ஆனா அலை அலையா அறுபத்தியெட்டு நாடும் தொடர்ந்து மாந்தர்கள் அனுப்பி நம்மை அடிச்சுத் தொரத்தினாங்க.. ஏழ் பின்பாலையும் நம்ம பார்வைக்கு முதல்ல அடிக்கிற இடமா இருக்கும்.. பின்னால மொத்தமா எல்லாம் சேர்ந்துக்கும். அதனால அது வேண்டாம்.”

“காமா... என்ன சொல்லுற..? அவங்களோட ஒப்பிடும்போது நமக்குப் படை பலம் கிடையாது. நம்ம ஆள்கள்கிட்ட மூர்க்கம்தான் இருக்கு... அறிவு கிடையாது. முதல்ல இருக்கிற நாட்ட அடிச்சா அங்க கிடைக்கிற உணவை எடுத்துக்கலாம். அங்க இருந்து கொஞ்சம் பேர நமக்கு அடிமையா சேர்த்துக்கலாம். அவங்கள முன்கள பலி வீரர்களா வச்சிக்கிட்டு அடுத்த நாட்டிற்கு நகர முடி...”

பெருந்தேற்றன் பேசும்போது குறுக்க பேசினால் அவனுக்குப் பிடிக்காது என்று தெரியும். ஆனாலும் காமன் இடை மறித்தான்.

“தேற்றா... இதுக்கு முன்பும் நாம அப்படித்தான் பண்ணினோம். அதனால என்ன மாறிடுச்சு. நாம நுழையவே முடியாத பெருஞ் சுவர்தான் இப்ப நமக்கு நிக்கிது.”

“உனக்கு என்ன தோணுதோ. அத சொல்லித் தொல!”

பெருந்தேற்றனுக்கு அந்தச் சுவரை நினைத்தாலே பற்றிக் கொண்டு வந்தது.

“அந்தச் சுவத்தப் பத்தி ஏன் அச்சப்படுற? அதான் நமது குழு பல ஆண்டா ஆயிரம் பேருக்கு மேல உழைச்சிருக்கோம். அந்தச் சுவரோட அடிப்படையே பன்னிரண்டு அடி.. அந்தப் பன்னிரண்டு அடிக்குக் கீழ நாம போகணும்னா... நாம நூறு அடியிலருந்தே பாதை அமைக்கணும். அவ்ளோ பெரிய ஒண்ண நாம சாதிச்சிருக்கோம்! பெரிய சுரங்கம் அது. நம்மாள முடியும். அந்தப் பாதை நம்ம எண்ணத்த நிறவேத்தும்!”

“வழி கிடைச்சாலும் நம்மோட படைகளச் சுரங்கக் குழி வழியா வெளியேத்திக் கொண்டு போறதுக்குள்ள நாம சோர்வாயிடுவோம்!”

“அதத்தான் நானும் சொல்றென். நாம திரட்டியிருக்கப் படை செவுர் வரைக்கும் போய் நிக்கட்டும். கொஞ்சம் பேரு மட்டும் ஒவ்வொருத்தரா உள்ள போலாம்!”

“க்கும், இவ்வளவு பெரிய பட போனாலே வெல்ல முடியுமான்னு சந்தேகமா இருக்குது. இதுல எப்படி..?”

“அது ஒருவகையில நல்லதுதான்!”

“என்ன சொல்ற..?”

“ஒவ்வொருத்தரா கொத்தவ வெறியாட்டுக்குப் போற மத்த நாட்டுக்காரவுக மாதிரி நாமளும் அவங்களோட கலந்துபோவணும். மொத்தமா அவங்ககூட எல்லாத் தலைமையும் நிக்கிற எடத்துல தாக்குறோம். தலைமைகள் அழிஞ்சா மக்கள் தானா நம்மகிட்ட மாட்டிக்கிட்ட மாதிரிதான். ஒரு திருத்தம் என்னன்னா... வீமன் சொன்ன மாதிரி கொத்தவை வெறியாட்டுக்குத்தான் தாக்கப் போறோம். இந்த ஆண்டு ஏழ் தெங்கத்துல வேணாம். அடுத்த ஆண்டு ஏழ் குறும்பனையில நடக்கும்போது அங்க அடிப்போம்!”

“புரியற மாதிரி சொல்லு...”

“நமக்குப் பக்கத்துல இருக்கிறத அடிக்க ஆரம்பிச்சா, ஒடனே மத்தவங்க சேந்து வந்து நம்மளத் தாக்குவாங்க. நம்மளால எளிதா வெல்ல முடியாது. நம்ம படையப் பிரிச்சி ஒவ்வொரு நாட்டுக்கும் நானூறு பேரா அனுப்புவோம். நாம கொஞ்சம் கொஞ்சமா நேரா ஏழ் குறும்பனைக்குள்ள போவோம். அப்பதான் மாந்தர்களுக்கு உளப் பூர்வமா அச்சம் வரும். அவங்க மண்ட கொழம்பும். கொழப்பத்துல தப்புத் தப்பா முடிவெடுப்பாங்க. அவங்க அடி பலமா வாங்குவாங்க.. எல்லா நாட்டையும் தாண்டி நாம இவ்ளோ தூரம் வந்திருக்கோம்னா. அவங்க நெனப்பு எல்லாம் மத்த நாட்டையும் அடிச்சிப் பிடிச்சிட்டாங்கன்னு நெனப்பு வரும். நெனெப்பே பயத்தக் கொடுக்கும். அதனால பாதிப் பேரு சண்ட வேணாம்னு சரணடைஞ்சிடுவாங்க. நாம விடாம தலைமைகளக் குறி வச்சு அடிப்போம். நாம அடிக்கிற நேரத்த மத்த நாட்டுல இருக்கிற நம்மாள்களுக்கும் சொல்லிட்டா. அதே நேரத்துல அந்தந்த நாட்ல பதுங்கி அடிக்க ஆரம்பிப்பாங்க. நம்ம ஆள்கள் நாநூறு பேரு ஒரு நாட்ட அழிச்சிற முடியாது. ஆனா, எல்லா எடத்துலயும் நாம்ம பூந்து அடிச்சிருக்கோம்ன்னு மாந்தர்கள நம்ப வச்சிட்டாபோதும். எல்லாமே நம்ம கைக்கு வந்துடும். அப்புறம் உனக்கு என்ன தோணுதோ அதைப் பண்ணு.”

காமன் சொன்னதைக் கேட்டதும் வீமனின் முகம் மலர்ந்தது. பெருந்தேற்றன் திக்குமுக்காடிப் போனான். காமனின் முடிவிற்காக அவனைத் தூக்கி அந்தரத்தில் வீசிக்கொஞ்சினான்.

அந்த ஆண்டும் ஏழ் குறும்பனைக்காக விட்டுக்கொடுத்துக் காத்திருந்தார்கள். நூற்றுப் பத்தாயிரம் பேர் கொண்ட படை சிறியதென்றாலும் அவர்களிடம் இருந்த வெறுப்பும் வெறியும் அதற்காகப் பயின்றதும் வலுவாக வழி நடத்தும் காமனும் வீமனும் இருந்ததால் உறுதியான வெற்றியை அடைய முடியும் என நம்பினார்கள்.

மேரு மலையின் அடிவாரத்திலேயே பெரும் படையை நடக்க வைத்து அழைத்து வர ஒரு வாரம் பிடித்தது. வழியில் உணவுக்குத் தேவையான அனைத்தையும் சேகரித்து எடுத்து வந்திருந்தார்கள். அவர்கள் உருவாக்கிச் செப்பனிட்டு வைத்திருந்த அனைத்து கருவிகளும் ஒவ்வொரு குழுவுக்குத் தக்கபடி மூட்டையாகக் கட்டி எடுத்து வந்தார்கள். தங்களது உடல்களில் பூத்திருந்த வெண் தோல்களைக் கருமையால் மூடினர். உடலின் வீச்சம் போக்க, நாற்றச் செடிகளை வதக்கி நீராக்கி அதை அவ்வப்போது தெளித்துக் கொண்டார்கள். வெண்ணாற்றைக் கடந்து வந்த வன்படை கண்ணுக்கெட்டும் தூரம் வரை பரந்து விரிந்து நின்ற எல்லைச் சுவர் அருகே வந்து நின்றார்கள். அந்தச் சுவரே அப்படைக்கு அச்சத்தைத் தரக் கூடியதாக எதிரியின் வலிமையை உணர்த்துவதாக அமைந்திருந்தது.

கிணிக்கன் கேட்டான்.

“கயிறு திரித்து சுவத்துலபோட்டு எல்லாரும் ஏறிப்போவோமா?”

“அப்படிப் போனா நாம் கொத்தவ வெறியாட்டு முடிஞ்சி அடுத்த வாரம்தான் போய்ச் சேருவோம்!”

“பின்ன எப்படி..?”

வீமனின் குழு முன்னால் வந்தது. சுவற்றுக்கு முன்பிருந்த ஆனை படுத்திருப்பதுபோலக் காய்ந்து இலையற்று மரக் காளான் பூத்துக் கிடந்த, மரப்புழுக்கள் தின்று ஓடுகளாக இருந்த பெரு மரங்களைச் சிலர் நகர்த்தினார்கள்.

அதை நகர்த்தியதும் இரு ஆனைகள் உள்ளே போகுமளவுக்கு தரை உள்ளிறங்கியது. சுவரின் தரைக்குக் கீழே சுரங்கம் அமைத்திருந்தார்கள். அந்தச் சுரங்கமும் படிக்கட்டுப்போல கீழிறங்கி சுவரைக் கடந்து மேலேரும் விதமாகச் செதுக்கியிருந்தார்கள்.

இதேபோல ஆறு இடங்களில் வழி அமைத்திருந்தார்கள். வீரர்கள் வாயடைத்து நின்றார்கள்

“எல்லா விலங்குகளையும் கட்டிப்போடுங்கள். பரிகளையும் பெருயாளிகளையும் சுமைசுமக்க வைத்துக்கொள்ளுங்கள். ஆனைப் படையைச் சரியான இடத்தில் நிறுத்துங்கள். ஒவ்வொரு குழுவும் நாங்கள் சொன்னபடி போய்ச் சேரவேண்டும். சொன்னபடி வெறியாட்டு நிகழ்வில் பல்லியம் இசைக்கத் தொடங்கும் பின் மாலையில் தாக்கத் துவங்க வேண்டும். ஏழ் குறும்பனைத் தலைநகரம் செல்லும் முப்பதினாயிரம் பேரும், மற்ற நாடுகளுக்குத் தனித்தனிப் பிரிவாகப் பிரிந்து செல்லும் இருபத்தியெட்டாயிரம் பேரும் மாற்று உடைகளை அணிந்துகொண்டு சாதாரண மக்களைப்போலச் செல்ல வேண்டும். பிரிந்து, ஏழ் குறும்பனையை விட்டு மற்ற நாடுகளுக்குச் செல்லும் நீங்கள் எதிர்த்திசையில் நடப்பதால் மிகவும் அடக்கமாக இருக்க வேண்டும். அறுபத்தியெட்டு நாடுகளுக்கும் நாங்கள் அமைத்த தலைமைகளுக்குக் கட்டுப்பட்டு வீரர்கள் நடக்க வேண்டும். உங்களின் வெறியை வெற்றி வரும்வரை அடக்கி வையுங்கள். மீதி இருக்கும் பெரும் படை செந்தூரனின் தலைமையில்தான் இயங்கும். இன்னும் சொல்லவேண்டும் என்றால் செந்தூரன்தான் பெருந்தேற்றன். அவனது போர்த் திறமைகள் யாவரும் தெரிந்ததே. செந்தூரனின் படை மெதுவாக நகர்ந்து சுவருக்கு அந்தப் பக்கம் வந்து காத்திருக்க வேண்டும். பல்லியம் இசைக்கத் தொடங்கும் நாளில் இங்கிருந்து நீங்கள் போரிட்டுக்கொண்டே உள்ளே நுழையுங்கள். அவர்களிடம் சண்டை செய்யப் போதுமான கருவிகள் இல்லை. போர் உத்தியில்லை. முப்பது ஆண்டுகளாக நாம் சண்டை செய்யாததால் அவர்கள் விலங்கு வேட்டையைத் தவிர ஒன்றும் அறியாத குழந்தைகளாக இருப்பார்கள். சுவர் காவலையே பத்தாண்டுகளாக மறந்தவர்கள். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்... அவர்கள் தகவலை வேகமாகப் பரப்பக் கூடியவர்கள். அறிவாளிகள். நாம் மகரயாளியைப் பிடித்தால் சுட்டுத் தின்போம். அவர்கள் தங்களது உடலில் ஒன்றாக அவற்றைப் பாதுகாக்கிறார்கள். தூர நிலைகளுக்குச் செய்தியைக் கடத்துவதற்கு அவர்களுக்கு அவை பெரும் துணையாக இருக்கின்றன. எல்லா மட்டத்திலும் இயங்கத் தெளிவாக இருப்பவர்கள். எந்த நிலையிலும், நீங்கள் யார்? எதற்காக வந்திருக்கிறீர்கள்? என யாருக்கும் தெரியக்கூடாது. அதேநேரம் எந்த உயிரும் சடுதியில் போகக் கூடாது. ஒரு வீரன் குறைந்தது நூறு பேரையாவது கொல்ல வேண்டும். அதுவும்கூட சரியான நேரத்திற்குக் காத்திருத்தல் முக்கியம். அந்த

மாலையில் பல்லியம் இசைக்கும்போது அறுபத்தியெட்டு நாடுகளிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் நாங்கள் தொடுப்போம். ஏழ் குறும்பனையை நாங்கள் சிறைப் பிடிப்போம். ஏழ் குறும்பனையில் முக்கியமான தாய்களையும், தாய்மாமன்களையும், கலைஞர்களையும், பல்துறை அறிவர்களையும் மொத்தமாகக் கொன்றழிப்போம். அவர்கள் இல்லாமல் குமரிக்கோடே இல்லை. அவர்களை அழித்ததும் மற்றவர்களை அடிமை ஆக்கி, சொல்வதைச் செய்யப் பணிப்போம். அடி பணியாதவர்களைத் தீயில் பொசுக்குவோம். அதே நேரம் நீங்கள் ஒவ்வோர் ஊரின் தலைமைத் தாய்களையும், தாய்மாமன்களையும் கொல்லுங்கள். எல்லா நாடுகளைப் பணிய வைக்க இந்தத் திட்டமே சரியானது. அதுவரை உங்கள் பேச்சை அடக்குங்கள். காமத்தை அடக்குங்கள். மறைந்து நில்லுங்கள். நாம் காத்திருந்த நம் கனவு, நம் எதிரில்தான் இருக்கிறது... எதிரியின் குருதியை நமது நாக்கு சுவைப்பதில்தான் இருக்கிறது!''

வீமன் தனது உரத்த குரலில் சொல்ல, வீமனுக்கு நூறு அடி தள்ளியிருந்தவன் அப்படியே வீமன் சொன்னதையே சொல்ல, அவனுக்கு நூறடியில் நின்றிருந்தவன் அதேபோலக் கேட்டு உரக்கச் சொல்ல, அப்படி தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அது நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களுக்கும், படையணிக்கும் முழுதாக வரிவிடாமல் புரியும்படி போய்ச் சேர்ந்தது.

வீமன் சொல்லிவிட்டுப் பெருயாளியில் அமர்ந்து அனைத்தையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பெருந்தேற்றனைப் பார்த்தான். பெருந்தேற்றன் முகத்தை இவ்வளவு அமைதியாக சாந்தமாக முதன் முதலில் வீமன் இன்றுதான் பார்க்கிறான். பெருந்தேற்றன் தலையாட்டினான்.

‘‘புறப்படுங்கள்!'' என்றான் வீமன். கூட்டம் கூட்டமாக ஆறு வழித்தடங்களிலும் சுவருக்கு முன்பிருந்த சுரங்க வழியில் நுழைந்து சுவருக்கு அந்தப் புறமாக அப்பெரும் படை உள்ளே நுழைந்துகொண்டிருந்தது.

அவர்களின் இலக்குப்படி பயணித்தால் மிகச் சரியாக இருபது நாளில் ஏழ் குறும்பனையை நெருங்கி விடுவர். எல்லா இடங்களுக்கும் நியமிக்கப்பட்ட உளவுக்குழு அவர்கள் போய்ச் சேர்ந்ததை ஏழ் குறும்பனைக்குள் நுழையும் பெருந்தேற்றனிடம் கொண்டு செல்வதற்கே தனி நியமனம் வைத்திருந்தான்.

14 நளித் திங்கள் ஒன்றாம் நாள்

ஆழியின் அகண்டப் பரப்பில் அவர்கள் பயணித்துக் கொண்டிருந்தார்கள். மாந்த வளர்ச்சியில் நதி எவ்வளவு பாதைகளை போட்டுக்கொடுத்ததோ அதுபோலத்தான் ஆழியும் தன் பங்கிற்கு மாந்தரைத் தத்தெடுத்துக்கொண்டது. இன்று மாந்தர்கள் உச்சமாக பார்ப்பதும் அரிய செயலொன்றாகக் காண்பதும் கடலோடிகளின் வாழ்வைக் கொண்டே. பரந்த ஆழியின் கொதிக்கும் நுரைகளில் அலைகளில் நூறு பேருக்கு மேல் பயணிக்கும் திமில்களை அவர்கள் உருவாக்கியிருந்தார்கள். ஆமைக் கூட்டங்களை துணைக்கு கொண்டும் விசும்பில் பரவிக்கிடக்கும் வான் மீன்களைக் கொண்டும் திசையைக் கணித்தார்கள். திசையைக் கணிக்கத் தொடங்கியதில் தான் வான் கணியம் அவர்களுக்குப் பிடிபட ஆரம்பித்தது. காட்டில் திசைக் கணிப்பதைவிட நுட்பமான திசையறிதல் அது. வனம் இளைப்பாற இடமளிக்கும். குளுமையூட்டும். சூட்டுவிக்கும். உணவூட்டும். இது எதுவுமற்றப் பயணம் ஆழியின் வெம்மை.

அள்ளியள்ளிக் கொடுத்தாலும் சூட்டையே தரும் பெரும் நீர் வாழ்க்கை. பாதுகாப்பான பயணம் என எதுவுமில்லை. ஆனால், சவாலற்ற வாழ்க்கையை மாந்தர் விரும்புவதில்லை. கடல் பரப்பை அதனால்தான் மாந்தர் தன் அகத்தில் வைத்திருந்தார்கள். ஆழி ஒத்துழைத்தது. ஆழிக்கு மாந்தர்களும் கட்டுப்பட்டார்கள். இருவருக்குமான சவால் மோதி இன்புறுவது. மோதிக் களைப்படைவது. மோதித் தாக்குவது. ஆழிக்கும் மாந்தருக்குமான உறவு இது.

கொடுந் திமிலும், திண் திமிலும், அடங்குத் திமிலும் கரைக்கு மேலே, கரையொட்டி, கரையில் மோதித் தழும்பிக்கொண்டிருந்தன. கோகனும் தென்னனும் இருவாஞ்சியும் செம்பனும் அவற்றைப் பார்த்தபடி வந்தனர்.

கோகன் மனதில் பொரியூட்டிய ஒரு நாளில் தொடங்கி அடிக்கடி இங்கே வந்திருக்கிறான். கொடுந் திமிலில் சென்று ஆழியின் அடியாழம் தேடிப் பயணித்திருக்கிறான். ஆழிக்குள் தாக்குப் பிடிக்கும் மாந்தர்களை அவர்களுடன் கூட்டிச்சென்று ஆழிக்குள் கண்ணோட்டுவான். ஆழியின் தன்மைகள் மாறிப் பெருகியதை ஆழியில் அவ்வப்போது நிகழ்ந்த மாற்றங்களைத் திமிலோட்டிகளிடம் கேட்டறிந்தான். அவன் மனமெங்கும் பல செய்திகள் தேங்கிக் கிடந்தன. முதுவர்கள் விட்டுச் சென்ற ஆதிக் குறிப்புகளை வைத்து அலசியிருக்கிறான். அவனிடம் சொல்ல நிறைய இருந்தன. ஆழி அவனை வெறித்துப் பார்த்தபடி அலை வீசிக்கொண்டிருந்தது.

கரையில் நூறடிக்கு மேற்பட்ட தூண் போன்ற அமைப்பு சுடுமண்ணால் எழுப்பப்பட்டிருந்தது. அதற்குள் ஆள் சென்று மேலேறும் வகையில் உள்புறமாக ஏணிகள் அமைக்கப் பட்டிருந்தன. ஏணியில் ஏறித் திமிங்கலத்தின் எண்ணெய்ப் பிசினால் எரியும்படி ஓர் அகண்ட சுடுமண் குண்டான் அகல் வைக்கப்பட்டிருந்தது. குண்டான் அகலில் எண்ணெய் ஊற்றி நெருப்பைப் பற்ற வைத்தால் கொழுந்து விட்டெறியும் அந்த தீயின் வெளிச்சம் கடற்கரையைச் சுற்றிலும் இருந்த ஒரு பாகத்திற்குப் பரவி காற்றின் வேகத்திற்கு ஏற்ப எட்டுத் திசைகளிலும் அலைந்துகொண்டே ஓர் இரவை கடத்தும். ஆழியில் மிதக்கும் திமில்களுக்கும் நாவாய்களுக்கும் இரவுத் திசைக் காட்டியாக அக்கலங்கரை விளக்கை அமைத்திருந்தார்கள். பெரும்பாலும் நீண்ட பயணங்கள் செல்வோர் குறைவு. ஆயினும் அந்தி மயங்குவதற்குள் கரைக்கு வர முடியாமல் போகிறவர்களுக்கும், சுற்றியிருக்கும் மாந்தக் குடில்களுக்கும் இவ்வெளிச்சம் தேவையாய் இருந்தது. இரவுப் பயணத்தில் மாந்தரின் கடைசி வெளிச்சம் அது.

கொடுந் திமில்தான் நீண்ட பயணங்களுக்கு உதவும். ஆழியில் இறங்கி நின்று பாயும் மீன்களில் தோதான ஒன்றை வளிக்கும் ஆள்களைத் தவிர மீந்த அனைவரும் ஒரே சுழியில் திட்டமிட்டுக் கொடுவாளை ஆழ இறக்குவர். இது ஆழிக்குள் நடக்கும் போராட்டம். வால் கீறாமல் கொடுவாளைச் சொருகி மீண்டு வருவது மீளக் குழந்தையாதல்போல. கொடுவாள் சொருகியதும் அனைத்துக் கொடுவாளிலும்

பிணைக்கப்பட்டிருக்கும் நார்க் கயிறு திமிலிலும் பிணைந்திருக்கும் நார்க் கயிறு இழுபடும். அதற்குள் மீன் உயிர் விட வேண்டும். காற்றின் போக்கில் பாய் மரம் இழுபடும் நேரமும் ஒத்திருக்க வேண்டும்.

ஆரல் நங்கை பெரும்பாலும் மீன் மீளாப் பகுதியில் வாள் இறக்குவாள். அவளைப்போல ஒவ்வொரு கொடுந் திமிலுக்கும் சிறந்த ஒருத்தி உண்டு. சிறந்த ஒருவனும் உண்டு.

திண் திமில் அளவில் சிறியவை. நீண்ட பயணங்கள் செய்ய முடியாதவை. சிறு மீன் கூட்டங்களை அள்ளிவரப் போதுமானவை. பதினைந்து பேர் வரை சென்றுவரத் தோதானவை. திண் திமில்கள் தூரத்து ஆழியில் கலந்து மீன்களை மொய்த்துக் கொண்டிருந்தன. குருகுகள் மிச்ச மீதியைத் தேடிக் கூட்டமாக அலைந்துகொண்டிருந்தன. ஆழியிலிருந்து மேலே எம்பிக் குதிக்கும் மீன்களைக் குருகுகள் கூட்டங்கூட்டமாகப் பறந்தபடி, கவ்விப் பிடித்துப் பறந்தபடி இருந்தன. இருவாஞ்சியும் செம்பனும் அதைப் பார்த்தபடியே சென்றுகொண்டிருந்தனர். அவர்களால் அதை இரசிக்க முடியவில்லை.

இருவாஞ்சி பலமுறை ஆழிப் பரப்பிற்கு வந்திருக்கிறாள். இருவாஞ்சிக்கு ஆரல் என்றால் அவ்வளவு உயிர். தனது நாட்டைத் தாண்டிப் பிறிதொரு நாட்டில் வசிப்பவளைப் பல காத தூரம் பயணப்பட்டுப் பார்க்க வருவதில் இருவாஞ்சி சுகமாகவே உணர்ந்தாள். எப்போதெல்லாம் தோன்றுகிறதோ உடனே ஆரலைப் பார்க்க வந்துவிடுவாள். ஆரலோடு ஆழியின் பரப்புகளில் சுற்றியிருக்கிறாள். தாவிப் பிடிக்க வந்து ஏமாந்து போகும் அலைகளில் புரண்டு களித்திருக்கிறாள். திமிலில் ஏறிப் பறந்து சுறாக்களைப் பிடித்திருக்கிறாள். எதிரிகளே இல்லாத வாழ்வில் இயற்கையின் முரண்களே எதிரிகள். அவற்றைக் கவர அல்லது வீழ்த்த விரும்பாத மாந்த மனம் இருந்தால் அவ்வாழ்க்கையே வீண்.

செம்பனிடம் காதலுற்று மனம் கட்டுமீறித் துடிப்பதைத் தன் தோழி ஆரலிடம் சொல்லி மாள்வாள். செம்பனைத் தனது தாய்க்கும் தந்தைக்கும் அறிமுகப்படுத்தும் முன்பே ஆரல் நங்கையிடம் அழைத்து வந்து அவனைக் காட்டி, ‘உனக்குப் பிடித்திருந்தாதான் எனக்கும்’ என்றாள். செம்பனை முதல் பார்வையிலேயே ஆரலுக்கும் பிடித்திருந்தது. செம்பன் பல வேளைகளில் இருவாஞ்சியிடம் கேட்பான்.

“நீ பேசாம நங்காவையே கட்டிக்கோ...”

“அவ எப்பவும் என்கூட இருக்குறா. முதல்ல அவளத்தான் கட்டிக்கிட்டேன்... இனிமேதான் உன்னக் கட்டிக்கிலாம்னு பாக்குறேன்.”

“ஓ! இப்படிப் போகுதா சேதி... அப்படின்னா நானும் ஒருத்தன பாக்குறென். அவன நினச்சுகிட்டு உன்ன கட்டிக்கிறேன்.”

அவனைத் தாவிக் கடித்தாள். நெஞ்சைக் கீறி மோகத்தின் வெப்பத்தில் அவனை நிலைகுலைய வைத்துக்கொண்டே கேட்டாள்.

“இப்ப சொல்லுடா செம்பா... என்ன சொன்ன?”

செம்பனால் எதுவும் சொல்ல முடியவில்லை. அவளை அணைத்துக்கொண்டான்.

“டேய் செம்பா! என் ஆளை நீ என் கண்ணு முன்னால தொடுவியா? என்னை வென்றுட்டு நீ தொடு!”

கட்டிக்கொண்டிருந்த செம்பனும் வாஞ்சியும் கொஞ்சம் கிலேசம் குறையாமல் அரைக் கண்ணில் பார்த்தனர்.

“நங்க, எனக்குச் செம்பன் வேணும். உனக்கு நான் வேணும். செம்பன ரெண்டு பேரும் கட்டிக்கலாமா..?”

சட்டெனச் செம்பன் நிமிர்ந்தான்.

“ஏதேது... என்ன வச்சி நீங்க ரெண்டு பேரும் வெளையாடப் பாக்குறீங்களா..?”

வேண்டுமென்றே அவனை நெருங்கி வந்தாள் நங்கை. வாஞ்சியைப் பார்த்துக் கண்ணாளி செய்தாள். வாஞ்சியும் தலையசைத்தாள்.

“ஆமா மச்சா... வாஞ்சியும் நானும் எல்லாத்தையும் பங்கு போட்டுத்தான் திம்போம். உன்ன மட்டும் விட்றுவமா..?”

செம்பனின் முகத்தின் அருகே ஆரல் கைகளைக் கொண்டு வர, தடுமாறி கொஞ்சம் விலகிய செம்பன் குழப்பமாகக் கேட்டான்.

“ஆகா... அடியே சிறுக்கியளா! சிம்மம் தின்னு தூக்கியெறியிற சதைய அடுத்தது தின்னு செரிக்கிற மாதிரி, ரெண்டு கோட்டானும் பிச்சுப்பிச்சுத் திங்க பாக்குறீங்க. விளையாட்டு வெனையாவுது. உங்க ரெண்டு பேரு பக்கமும் தலை வச்சே படுக்கமாட்டேன். நான் போறேன்..!”

“செம்பா... என்ன விட்டுட்டுப் போயிடுவியா..?”

“மச்சா... என்ன விட்டுட்டுப் போயிடுவியா..?”

வாஞ்சியும் நங்கையும் மாறிமாறிக் கூப்பிட, செம்பன் நிலை குலைந்தான். பொன்பரப்பி ஆழிக் கரையில் மூளை பிதுங்கிப் போனான்.

“ஏண்டி வாஞ்சி... போற போக்கப் பாத்தா, செம்பன் தலை தெறிக்க பிடறி பொடனியில அடிக்க ஓடிருவான் போல. உம்மேல இம்புட்டுத்தான் ஆச... பாத்துக்கோ!”

எல்லா விளையாட்டையும் ரசித்தாள் வாஞ்சி.

“எம்மேல ஆச இல்லாதவன்கூட எனக்கென்ன ஆச வேண்டிக் கிடக்கு... போ செம்பா போ... எனக்கு நங்கா இருக்கா.”

செம்பனுக்கு உள்ளூர ஏறிய கோவம் கொஞ்சம் எட்டிப் பார்த்தது.

“ஏய்... அறிவோடத்தான் பேசுறியா. உன் மேல எவ்ளோ ஆசன்னு ஒனக்கு நான் சொல்லித்தான் தெரியணுமா..? இல்ல, நிரூபிக்க ஒரு கையத் துண்டா போடட்டுமா..?”

ஆரலுக்கு அவனைச் சோதித்ததுபோதுமென்றாகிவிட்டது. செம்பனின் கோவத்தில்கூட காதல்தான் மிகுந்திருப்பதை ஆரல் ஊகித்தாள்.

“யோவ் மச்சா... வாஞ்சி வீம்புக்கு வெட்டிக் காட்டுன்னு சொன்னாலும் சொல்லுவா. நீயும் வெட்டிக்கிட்டு நிப்ப போல. நான் ஒரண்டைக்குச் சொன்னேன். ஒன்ன சீண்டுற உரிமை எப்பவும் எனக்கு இருக்கு. அத மட்டும் நாபகத்துல வச்சிக்க. உங்க பொருத்தம் இந்த நாட்ல எங்கயும் காணுமா. கோவத்தை முதல்ல வெட்டி வீசு!”

ஆரலுடன் ஊடாடும்போது இருவாஞ்சி ஆழியின் பரப்பின் நீட்சியை முதுவர்களிடம் கேட்டிருக்கிறாள்.

விசும்பின் குட்டை என்றார்கள் அவர்கள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் மேகத்தோடு கலவி கொள்ளும் ஆழியைக் குட்டை என்றதும் ஆச்சர்யப்பட்டாள் இருவாஞ்சி.

இடுங்கிய கண்களை அகட்டி ஆழி நிலத்தின் முதுவச்சி கண்ணாளி சொன்னாள்.

“முன்னெல்லாம் கடலே இல்லியாம்... எப்பவொ இரண்டு மூணு தடவ நிலம் ஒடஞ்சி பாளமா பிளந்துதாம். அதோ அந்த ஆழிக்கு அந்தாண்ட தூரமா இருக்கிற மண்ணும் இந்த மண்ணும் ஒரே வயித்துல கிடந்த புள்ளங்கதான். கொத்தவை நினைச்சாளோ..? இல்ல அதுக்கு முந்தியா தெரியாது. விசும்பு இடிச்சு, மின்னி மாந்த மக்களெல்லாம் அலறி,

மெருகம் பறவையெல்லாம் கதறிக்கிட்டே மண்ணுக்குள்ள போயிருக்கு... மலையங் காடெல்லாம் மண்ணுக்குள்ள போயி மண்ணுக்கு அடியில கிடந்ததெல்லாம் மேல வந்து துண்டு துண்டா பொளந்து ஆழிக்கு அப்பால கொஞ்ச மாந்தரையும் இந்தாண்ட கொஞ்சம் மாந்தரையும் மிச்சம் வச்சுப்புட்டு அல்லாத்தையும் இந்த மண்ணு முழுங்கிப் புச்சாம். விசும்ப முட்டுற மெருகம்லாம் தாக்குப் புடிக்க முடியாம மண்ணுக்குள்ளயும் தண்ணிக்குள்ளயுமா கெடந்திருக்கு. அதெல்லாம் சீராகப் பல தலமுறையாச்சாம். அதுலதான் இந்தப் பள்ளம் விழுந்து இந்தத் தண்ணி கிடக்குதாம். அங்கங்க மண்ணு முட்டி இந்த ஆழியிலயும் சின்ன சின்ன ஊரு இருக்குது. இந்த ஆழியத் தாண்டியும் கொஞ்சம் நம்ம மாந்தருங்க இருக்காவன்னு சொல்லியிருக்காவ. கொடுந் திமிலு நமக்கெதுக்கு. ஒரே காரணத்துலதான் உண்டாச்சு. எப்படியாவது அந்தக் கரையில இருக்குற ஆளுங்கள பாத்துப்புடுனும்னு மொத்தமா நிறய பேர ஏத்திக்கிறதுக்காகக் கட்டுனதுதான் இப்ப பெரிய மீனப் புடிச்சியாற வச்சிருக்கோம். பல காலமா அந்தக் கெரைக்குப் போவ முடில. மரணத்தீவு நம்மாலுவோ அப்பப்ப மாட்டிக்கிறது மட்டும்தான் நடக்குது. பாப்பம்... கொந்தவைய மனசுல வச்சி முயிச்சி பண்ணிட்டிருக்கோம்.”

கண்ணாளி சொன்னதும் இருவாஞ்சியால் அதைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. மாரிக் காலத்தில் விசும்பு கொட்டும் மழையும், மரத்தையே சாய்க்கும் காற்றையும் பார்த்து அரண்டிருக்கிறாள். ஆனால், மண்ணே பிளந்துகொள்ளுமா. அப்படியானால் கீழே என்ன இருக்கும். நீரும் மண்ணும்தானே இருக்கும். அது எப்படிப் பிளக்கும் என்று பல நாள் நினைத்துக் கொள்வாள். இதைப் பற்றிப் பலரிடம் கேட்டிருக்கிறாள். கேட்க கேட்க அவளுக்கு வியப்பாக இருந்தது.

அதிலிருந்தே மாந்தர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள். தாங்கள் அறிந்த, அறிவுத் துலக்கிய யாவற்றையும் பதிந்தார்கள். கற்களில் பானைகளில் குகைகளில் மரங்களில் எழுதினார்கள். வாய்வழியே பேசியவற்றையெல்லாம் எழுத்தாக்க முயன்றார்கள்.

எழுத்துகள் முதலில் அழிந்துவிட வாய்ப்பற்ற பச்சிலைகளைக் கொண்டு ஓவியங்களாகத் தீட்டினார்கள். ஓவியங்களின் மூலம் மறைபொருள் தன்மையும் மிக எளிதாகப் புரிந்துகொள்ளவும் முடியாமலிருந்தது. நடந்த ஒன்றை முழுவதுமாக விளக்கப் போதுமானதாக இல்லாமலிருந்ததை அறிவர்கள் உணர்ந்தார்கள். அங்கிருந்து தொடங்கியதுதான் எழுத்தின் வளர்ச்சி. அதில் இன்னொரு கிளையாக வளர்ந்தது. மாந்தர்களின் எண்ணிக்கைக்கு, விலங்குகளின்

எண்ணிகைக்கு மரங்களின் எண்ணிக்கைக்கு என அறிவர்கள் சிந்தித்தார்கள். அதன் விளைவாக எண்ணியலும், எடையியலும், தூர அளவையும், நீட்டல் அளவையும், உயர அளவையும், கண்ணுக்குத் தெரியாத பருப்பொருளின் எடை மற்றும் அதன் தன்மை வரை ஆராய்ந்தார்கள். கண்ணுக்குத் தெரியாத காற்றின் அலைகளைக் கணக்கிட்டார்கள். பளிங்கு ஆடி கொண்டு கண்ணால் காண முடியாத துகள்களைக் கண்டு அதன் எடையைக் குறிக்க முயன்றார்கள். அதற்கு உயரம் அகலம் ஆழம் அளந்து பெயரிட்டார்கள். மரங்கள், மாந்தர்கள், விலங்குகளுக்குப் பெயரிட்டார்கள். பறவைகளுக்குப் பெயரிட்டார்கள். அந்தப் பெயர்கள் வைப்பதையே விவாதமாக்கினார்கள். ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு பொருள்படும் தன்மை வேண்டும். பொருளில்லாத எது ஒன்றையும் எழுத்தாக்கக் கூடாது என்கிற விதிகளை முன் மொழிந்தார்கள்.

தெம்மொழியின் பெயரால் தம்மொழியாகி ஆயிரமாண்டு தொடர்ச்சியில் தமிழி தாய் அறிவை ஏற்று அவளின் நினைவாகத் தாம் பேசிய மொழிக்கு தமிழி பெயரிட்டார்கள்.

அணிலின் எலும்புகள் மென்மையாக எழுதத் தோதாக இருந்ததை அறிந்தார்கள். மேசத்தின் முடிகளை ஒருங்கிணைத்து, பதப்படுத்திப் பச்சிலையில் நனைத்து எழுதினார்கள். பனையின் பசுந்தழையில் எழுதிப் பச்சிலையில் நனைத்துக் காயவைத்துப் படித்தார்கள். எழுத்து வசப்பட்டுவிட்டது. எழுதியவர்களோடு நின்றுவிடக் கூடாது என்பதற்காக அறிவர் குழுக்களைக் கொண்டு அனைத்து மாந்தர்களுக்கும் எழுதக் கற்றுக்கொடுத்தார்கள். புதிய வீச்சைத் தமிழ்ச் சமூகம் தொடங்கிப் பல பரம்பரைகளுக்குக் கடத்திக் கொண்டு வந்தார்கள். பேசுவதை எழுத்தாக்கி, எழுதியதைப் பேசி ஒரு நெடுங்காலப் புதிய சமூக மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தார்கள். கல் பதுக்கைகளில் எழுத்தைப் பதுக்கினார்கள்.

அதனால் மண் உள்ளே போனதும், பாறைகள் காணாமல் போனதும், விலங்குகள் மண் பிளக்க அடியாளத்தில் வீழ்ந்து மாண்டு போனதும் பற்றி நிறைய தெரிந்துகொண்டாள். நமது முன்னோர்கள் யாராவது மண் பிளந்து ஆழி சூழ்ந்ததில் பிழைத்திருப்பார்களா... எங்கே இருப்பார்கள்... இந்த ஆழியைக் கடந்தால் அவர்களிடம் போகலாமா... என்றெல்லாம் நினைத்து நினைத்துப் புலம்பிப் புலம்பி அதிலிருந்து விடுபட்டேவிட்டாள் இருவாஞ்சி.

ஆழிக்கரையில் பெரும் மௌனத்தோடு பயணிப்பது அத்தனை கசப்பாக இருந்தது. இந்நேரத்திற்கு அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்கள் முன்னிலையில் காப்புக் கட்டப்பட்டிருக்கும். ஒரு வேளை தந்தை அழைக்காமல் இருந்திருந்தால் இருவாஞ்சியும் அங்கே இருந்திருப்பாள். தகப்பனின் சொந்தங்களும் நிறைந்து வந்திருப்பார்கள். எல்லாரையும் ஒரே இடத்தில் பார்ப்பதை நினைத்து அவளது மனது குதுகலமாக இருந்தது. எல்லாம் மாறி ஏன் இங்கே செல்கிறோம் என்றே தெரியாமல் செல்வதை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

கலங்கரை விளக்கின் தீயைத் தூரத்தில் பெரும் சுடர் விட்டெறியும் ஏழ் குணக்கரைத் தலைநகரத்தின் மதில் மேல் எறிந்த தீ தின்று கொண்டிருந்தது. நகரத்தை அவர்கள் நெருங்க நெருங்க நகரின் மதில் அவர்களை முழுதாக ஈர்த்துக்கொண்டிருந்தது. கண்களால் பருகியபடியே அதை நோக்கி வேகமாகப் போனார்கள்

15 நளித் திங்கள் இரண்டாம் திகதி

பெருந்தேற்றன் ஏழ் குறும்பனையின் நகருக்கு வெளியே கிள்ளி உருவாக்கியிருந்த குடிலில் அமர்ந்திருந்தான். குடிலின் உள்ளே எந்தப் புழுக்கமும் இல்லை. அந்தரத்தில் இருந்த குடில், தூரத்தில் கருத்து மேகம்போல அமுங்கிக் கிடந்த மலையிலிருந்து மழைச் சாரலைப்போல வந்து தொட்டுத்தொட்டு ஓடிக்கொண்டிருந்தது காற்று.

துலைத் திங்களிலேயே கூதல் ஆரம்பித்துவிடும். நளியில் இன்னும் அடர் கூடுதலாகி ஆறு மணிக்கு மேல் மிருகத்தோல் போர்த்தாமல் வெளியில் தலை காட்டவே முடியாது. தரையில் இருந்த பலகையில் குளிர் அனத்திக்கொண்டிருந்தது. வெறும் பாதம் பலகையில் பட்டதுமே தலையுச்சிக்குப் போனது குளிரின் நரம்பு.

குமரிக்கோட்டின் தரையெல்லாம் பூத்துக் கிடக்கும் பனிப் பாறைகள் திடும்மென உடைந்து விழும்போது வரும் பேரோசை தொலைவில் கிடக்கும் பிரம்பூரிலும் அதிர்ந்துகொண்டிருக்கும். அந்தரத்துக் குடியிருப்புகள் கீழிருந்து வரும் அனல் குழாய்களின் வழியேதான் கொஞ்சம் கதகதப்பான நிலையைத் தரும்.

ஏழ் குறும்பனை வாசிகளுக்குப் பழகியது. மூர்க்கங் குடியாள்களுக்குப் பழக்கமில்லாமல் பல் கிட்டித்து வெட வெடப்பாகவே கிடந்தார்கள். வந்து இரண்டு நாள்களாகிவிட்டுன. முப்பதினாயிரம் வீரர்களும் எல்லாக் குடில்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பெருந்தேற்றன் இரண்டு நாள்களில் ஏழ் குறும்பனையின் பிரம்பூர் நகரத்தைச் சுற்றிக் காமன் வீமனோடு அங்குலம் அங்குலமாக அலசிவிட்டான். அவர்கள் நினைத்ததைவிடப் பாதுகாப்பான வலுவான அரண்களோடு நகர் இருந்தது. தலைநகரத்தின் தலைவி அஞ்சாவண்ணி வசிக்கும் தெரு முழுவதிலும் கூடுதல் பாதுகாப்பு இருந்தது. பார்ப்பதற்கு எல்லாத் தெருவும் ஒன்றுபோலவே இருந்தாலும் அவளிருந்த தெரு பாதுகாப்பு வீரர்கள் அதிகம் பேர் தங்கியிருந்தனர். நகரத்தின் முக்கியப் பொறுப்புகளில் இருந்த யாவரும் ஒரே தெருவில் குடியிருந்தனர்.

திடீரெனப் பெருந்தேற்றனின் உள்ளத்தில்தான் சார்ந்திருக்கிற, தான் உருவாக்கியிருக்கிற அனைத்தின் மீதும் வெறுப்பு வந்தது.

இது எப்படி அவனுக்குத் தோன்றியிருக்கும். இதுவரை போரை நேரடியாகத் தொடுத்ததால் மாந்தர்களைப் பற்றிய புரிதல் இல்லாமல் இருந்திருக்கலாம். இந்த நகரங்களை, கிராமத்து மக்களை, தாய்களின் அளவரிய நேசிப்புப் புரியாமல் இருந்திருக்கலாம். ஒரே விதமாகத் தொடர்ந்து கொடுக்கப்பட்டதைக் காத்து வரும் மனதிற்கு இது விசித்திரமாக இருந்தது. நாம் ஏன் இத்தனை வெறி கொண்டிருக்கிறோம்? நமக்கும் இவர்களுக்கும் என்னதான் தீராப் பகை? நமது முன்னவர்கள் நமக்குப் பகையை ஏன் சொல்லிக் கொடுத்து வளர்த்திருக்கிறார்கள்? இத்தனை நாடுகளும் ஒற்றுமையாக இருக்கின்றன. அவன் கேள்விப்பட்ட வரையில் இவர்கள் எப்பொழுதும் படையெடுத்து நம்மைப்போல் பழி உணர்ச்சியோடு நடந்து கொண்டதில்லை. நம்மை யார் என்றே தெரியாமல் நமக்கான உணவைத் தருகிறார்கள். வரும் வழியில் மாந்தர்கள் களைப்பு நீங்க உணவளித்துப் படுக்க இடம் கொடுக்கிறார்கள். ஒரு சின்ன முகச் சுழிப்புக்கூட இல்லாமல் உளமாற வரவேற்றுத் தாங்குகிறார்கள். இவர்கள் மாந்தர்கள்தானா? இப்படி நடந்துகொள்ள முடியுமா? நாம் தொடர்ந்து தாக்கியிருக்கிறோம் பேரழிவைக் கொடுத்திருக்கிறோம். ஒருபோதும் நம்மைவிட வலுவாகவும் மாந்தர் தொகையிலும் பெருத்திருந்தும் இவ்வளவு அதி மனப்பாங்கான மாற்றங்களை உள் வாங்கியிருந்தும்கூட தாக்கும்போது எதிர்த்துத் தாக்கினார்களே ஒழிய ஒருபோதும் தேடி வந்து நம்மைத் தாக்கவில்லை. அழிக்க நினைக்கவில்லை.

சட்டென மனம் உதறினான். தனது பாதையும் கொள்கையும் திரும்ப முடியாத தொலைவில் நிற்கிறது. நாம் இப்படி மாற வேண்டிய தேவை எங்கிருந்தது. இவர்களால்தான் நாம் மாறினோம். சில நூறு ஆண்டுகளாக அதையொட்டியே உள்ளுக்குள் வாழ்ந்திருக்கிறோம். நமது முழுமையான விடுதலையே இவர்களை தமது கட்டுக்குள் வைப்பதுதான். இப்படியான ஊடாட்ட மனமே தவறு. தனக்குக் கீழ் இருக்கும் யாருக்குவேண்டுமானலும் இந்த எண்ணம் வரலாம். தலைவனுக்கு வரக்கூடாது. ஒருவேளை அவர்கள் வளர்ந்திருப்பதில் நமக்குப் பொறாமை இருக்கலாம். பொறாமையில்கூட நமக்கு இப்படி ஒரு தவறான எண்ணம் தோன்றியிருக்கலாம். ஏன் நாமும் இவர்களை வென்றிருந்தால் நமக்கு எதிரிகள் இல்லை என்னும்போது இலக்குகள் மாறி இருந்திருக்கும். நாமும் புதியவை படைப்போம். இந்த நாட்டு மாந்தர்களை அடிமையாக்கினாலே போதும். நமது மாந்தர்களுக்கு வேண்டிய அனைத்தும் கிடைத்துவிடும். உழைக்க வேண்டியதில்லை. வேட்டையாட

வேண்டியதில்லை. அடிமைகளைக் கொண்டு அனைத்தும் செய்யலாம். அதை வைத்து நமது மாந்தர்கள் கொண்டாட்டமாக வாழ்வர்.

பெருந்தேற்றனுக்குள் இப்படியான மாறுபட்ட வடிவம் நிகழ்ந்திருக்கும் என உடன் இருப்பவர்களால்கூட சொல்ல முடியாது. ஆனால், அவன் உள்ளுக்குள் புதிய மாந்தர்களை, தான் பிறந்ததிலிருந்து பார்க்காத அன்பை, பகிர்தலைப் பார்த்ததனால் தோன்றிய உண்மை. அது அவனது மனதுக்குள்ளே புதைந்தும் விட்டது.

கிள்ளியின் அறிவை, நகர நிர்வாகத்திலும் பாதுகாப்பிலும் திறமையானவனாக இருந்ததை, தொடர்ந்து சுற்றி அலைந்து கவனித்ததில் புரிந்துகொண்டான். மாந்தர்கள் இவ்வளவு பேர் இருந்தும் என்ன தேவையோ அது மிகச் சரியாக நடக்கிறது. கூச்சல் இல்லை. குழப்பம் இல்லை. பெருந்தேற்றனுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை. தனது மொத்தப் படைக்கு ஈடான மாந்தர்கள் வாழும் நகரம் இது. அதோடு திருவிழாக் காலங்களில் குவியும் மாந்தர்கள். இவ்வளவு பேர் கூடும் இடத்தில் எப்படி இவ்வளவு அமைதியாக வேலைகள் நடக்கின்றன. நாம் வெறும் நூற்றுப் பத்தாயிரம் பேருக்குப் பயிற்சியளித்து மூவாண்டுகளாகத் திட்டமிட்டுமே நிறையச் சொதப்பல்கள் நடந்தன. சொதப்பியவர்களுக்குச் சாட்டையடி கொடுத்துத்தான் வழிப்படுத்த முடிந்தது.

பெருஞ்சுவர் நோக்கி வருவதற்குள் அவர்களது படைக்குள்ளேயே கலகங்கள் நடந்தன. வரும் பயணத்திலேயே அதனால் கருணையற்றுச் சிலரைக் கொல்லவேண்டி வந்ததையும் நினைத்துப் பார்த்தான். தனது குழப்பம் சரியானதா..? இல்லை, தான்தான் அதிகக் கற்பனை பண்ணுகிறோமோ..? என்றெல்லாம் நினைத்தான்.

“காமா, இந்த நகரத்திலேயே கிட்டத்தட்ட தொண்ணறாயிரம் மாந்தர்கள் இருப்பார்கள். வெளியிலிருந்து இரு நூறாயிரம் பேராவது வருவார்கள். நாமோ முப்பதாயிரம் பேர்தான் இருக்கிறோம். அதோடு இது அவர்களது வாழிடம். இங்க அவங்க இன்னும் வலிமையா இருப்பாங்க. கொஞ்சம் பதட்டமா இருக்கு!”

மாந்தர்கள் எல்லாக் காலத்திலும் தாங்கள் சிந்தித்ததை நேரடியாகச் சொல்ல மாட்டார்கள். எவ்வளவு காத்திரமான மாந்தனும் தனது எண்ணத்தைக் கடத்தும்போது, அல்லது அதைக் குறித்துச் சொல்லப்படாமல் காப்பதற்காக வேறு ஒன்றைத் திணிப்பதில் வல்லவர்கள். உண்மையைச் சரியாகப் பேசியிருந்தாலே மாந்தன் விடுபட்டிருப்பான். அரை உண்மைக்கான போராட்டம்தான் மாந்த

இனத்தையே காவு கொடுத்து விடவும் செய்யும். அதிகார நுகர்வுக்காக விளையாடும் விளையாட்டு இது.

“இத நானும் முன்னாடியே ஊகிச்சேன் தேற்றா. ஆனா அதுதான் நமக்கு வலிமையும்கூட. குழந்தைகளப் பாதுகாக்கணும்னு பாதிப் பேர் அதுல ஒதுங்கிடுவாங்க. அதோட நம்மள மாதிரி பயிற்சி எடுத்துக்கிட்டு, திட்டமிட்டுக் காத்திருந்து நம்மள எதுக்கப் போறதில்ல. அது மட்டுமில்ல. திருவிழா எப்படியும் மூன்னூறு ஆயிரம் பேராவது திரள்கிற நாள் இது. இன்னும் சொல்லப் போனா இவங்க பேசுறதுல இருந்து வெளியில இருந்து கடல் தாண்டி இருக்கிற சில புதிய மாந்தர்களும் இந்த விழாவுல கலந்துக்கப் போறாங்க. மற்ற நாள்களவிட பல்லியம் இசைக்குறன்னிக்கு வந்து சேர்ற கூட்டம்தான் இதுவரைக்குமான திருவிழாவிலயே பெரிய கூட்டம். அவ்வளவு மாந்தர்களை வழி நடத்தவே அவர்களுக்குக் காலம் போதாது. அத்தனை பேரும் அரங்கத்துல இருப்பாங்க. போன தடவ ஏழ் பின்பாலை வெறியாட்டுலதான் இதையெல்லாம் கவனிச்சுப் பார்த்தேன். அருகன்னு ஒருத்தன் இருக்கான் அவனோட குழு உருவாக்குற இசையில மாந்தர்கள் தங்கள மறந்தே போயிடுவாங்க. நானே என்ன மறந்துட்டேன். அந்த நேரம் தெரியுமா. அதனாலதான் அந்த நாளத் தேர்ந்தெடுத்தேன். அரங்கத்திற்கு மூன்று வழி இருக்கு. மூன்று வழியவும் நாம மறைச்சி நின்னு தாக்கணும். நாம சேகரிச்சி வச்சிருக்கிற எண்ணெய கொண்டு மூன்று வாயில்லயும் தீ வச்சிடணும். அதோட நின்னு நிதானிச்சு எரியிற மாதிரி நம்ம கிட்ட பிசின் இருக்கு. அதையும் தீக்குள்ள உருட்டிப் போட்டுட்டா. தீய அணைக்கவே அவங்களால முடியாது. அதோட இங்கிருந்து நாம போனதும் நம்ம ஆள் நாம இருக்கிற இடத்தையும் தீ வச்சுடுவான். அதேபோல தெருக்கள்ள இருக்கிற எல்லாக் குடிலையும் தீ வச்சி எரிக்கிறதுக்கும் ஆள் தயார் பண்ணிருக்கேன். அதோட இருபதினாயிரம் பேர் உள்ள ஊடுருவித் தாக்கத் தயாரா இருக்கணும். வெளியே ஒவ்வொரு வழியிலயும் மீதி படைகள் நின்னாபோதும். இந்த நகரத்தை விட்டு ஒரு உயிர்கூட வெளிய போகாம அழிக்கணும். அப்படி செஞ்சிட்டா ஒரே இரவுல அறுபத்தியெட்டு நாடும் நம்ம வசமாயிடும்!”

“சிறப்பு காமா! திருவிழா நெருங்குது. இன்னும் பதிமூனு நாள்தான் இருக்கு. அஞ்சாவண்ணியும் கிள்ளியும் ஏதோ குழப்பத்துல இருக்கிற மாதிரி இருக்கே..?”

“நீ நெனக்கிறது சரிதான். ஆனா, திருவிழாங்கறதுதான் இவங்களுக்கு முக்கியமான ஒன்னு. அது சரியா நடக்கணுமேங்கற பதட்டமிருக்கலாம்.”

“நம்ம உருவாக்கின எல்லாக் கருவியும் கொண்டு வந்தாச்சுல்ல?”

“எல்லாம் குழு குழுவா வரும் போதே உணவுப் பொருளுக்குள்ள மறச்சி எடுத்துட்டு வந்திருக்கோம். எல்லாரும் நல்லா தூங்கிக் களைப்பப் போக்கிட்டு தெளிவா இருக்காங்க. யார் யார் எப்படி நுழையணும்னு நம்மோட தளபதிங்க பாடம் எடுத்துக்கிட்டு இருக்காங்க. அவங்க இடத்துக்குள்ளயே வந்து, அவங்க இடத்துலயே தங்கி, அவங்க உணவச் சாப்பிட்டு, அவங்களக் கொல்லத் தயாரா இருக்கு நம்ம படை! உங்க உத்தரவுக்காகத்தான் காத்திட்டு இருக்கோம்!”

வீமன் விரிவாகச் சொன்னதும் முழுமையான உவகையடைந்தான் பெருந்தேற்றன். அப்போது அஞ்சாவண்ணியின் நடவடிக்கைகளைக் கவனிக்க அனுப்பிய ஒற்றன் விருமன் வேகமாக வந்தான்.

“என்ன விருமா... ஏதேனும் செய்தி உண்டா..?”

“ஆமா தேற்றா... அஞ்சாவண்ணி எங்கயோ கிளம்பி போயிட்டிருக்கா. அவளோட ஆளு தென்னனைக் காணோமாம். அவளோட பதினேழாவது மகளையும் காணோமாம். அவளோட கடைசி மக இந்த நேரத்துல போயி பொறுப்பில்லாம ஏதோ காட்டுக்குள்ள மிருகத்தப் பிடிக்கப் போயிருக்காளாம்...”

“அப்படியா? பொறுப்பு நம்மள மாதிரி திட்டமிட்டு எதிர்த்தாதான் வரும். அதை விடு. அஞ்சாவண்ணியை யார் பின் தொடர்றா?”

“மல்லன் போறான். நான் உனக்குச் செய்தி சொல்லணுமின்னு ஓடியாந்தேன்!”

“சரி... நீ போய் அங்கயே கவனி. சந்தேகம் வரக் கூடாது.”

விருமன் கிளம்பியதும் பெருந்தேற்றன் வீமனின் முகத்தைப் பார்த்தான். அஞ்சாவண்ணியைப் பற்றிய குழப்பம் புரிந்ததை உணர்ந்த விதமாகப் புன்னகைத்தான் வீமன்.

16 நளித் திங்கள் இரண்டாம் நாள்

ஏழ் குறும்பனை நாடுகளின் எல்லை முடிவிலிருந்து தொடங்கிய ஏழ் குணக்கரை நாடுகளின் தலைநகர் வீற்றிருந்தது. கோடிக் கணக்கான தெங்கம் மரங்கள் விசும்பில் மின்னிய நட்சத்திரப் பரல்களைத் தனது தோகையால் உருட்டி விளையாடிக்கொண்டிருந்தன. ஏழ் குறும்பனையைத் தாண்டியதுமே ஏழ் குணக்கரையின் எல்லையில் தொடங்கி, ஏழ் மதுரையின் சில காத தூரமும், அதற்கடுத்து ஏழ் தெங்கத்தின் ஆழிக்கரை முழுக்கவே தெங்க மரங்களின் ஆட்சிதான். தெங்க மரங்கள் சதுப்புக்காட்டு நிலங்களையும் உப்பு வயல்களையும் மட்டும் விட்டுவைத்திருக்கின்றன.

எங்குத் திரும்பினாலும் தெங்கம் தனது காய்ந்த குலைகளைக் கடலில் உதிர்த்துக்கொண்டே இருக்கும். அவை நிலத்தின் மீதும், ஆழியின் மீதும், ஆறுகளின் மீதும் கலவிகொண்டு புதிய தெங்கத்தை உருவாக்கத் தூவிக்கொண்டிருக்கின்றன போலும். விழுந்ததும் அவை அலையில் நகர்ந்து நகர்ந்து, சிறு மண் பிடிப்பு ஏற்பட்டதுமே கொட்டைக்குள் ஈரத்தால் பிளந்து, காத்திருக்கும் வேர்கள் அதைப் பிடித்துக்கொண்டு முளைத்துக்கொண்டே இருக்கும். தெங்க வேர்கள் ஆழம் ஊடுருவுவதில்லை. ஆனாலும் மண் பரப்பில் வளைந்து நெளிந்து ஆழியின் அலைகளைத் தன் மீது வாங்கிக்கொண்டுகூட உறுதியாக நிற்கும். வளர்ந்த மரம் மீண்டும் காய் கொடையை மண்ணுக்குத் தள்ளிவிட்டு, அவை பாட்டுக்கு அலைகளின் ஆசைக்கேற்பப் பேரோசையோடு உடலை மடக்கி ஆடும் பண்புகளை வளர்த்திருந்தன. அவற்றில் வயது ஓய்ந்தவை நடுகற்களைப்போலத் தனித்தனியாகக் கரைகளில் இலையுதிர்ந்து மொட்டையாக நிற்கும்.

உளுத்துப்போய், பட்டை மட்டுமே எஞ்சியிருந்த பல்லாயிரம் மரங்களில் துளையிட்டுக் கூடமைத்திருந்த ஈரடிக்குக் குறையாத கிளிக் கூட்டங்களின் கால் அடிக் குஞ்சுகள் முனங்கும் ஒலியும், இறையான் பூச்சிகளின் இரைதலும் நான்கடி அகல வவ்வால்கள் பறக்கும் சிறகசைவைத் தவிர தூரத்தில் ஆழியின் பேரலைச் சலனமும் இணைந்து ஏழ் குணக்கரையின் தலைநகரத்தை அந்த இரவிலும் திகிலூட்டியது. ஏழ் குணக்கரை நகரத்தின் கொற்றவை களத்தின் முன்பாகக் கூடியிருந்த பலரின் முகங்களிலும் ஒரு வித அச்ச உணர்விருந்தது.

அஞ்சாவண்ணியைத் தொடர்ந்து வந்த காமனின் உளவு ஆள் மல்லன், அஞ்சாவண்ணியின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஏழ் குணக்கரைக்கு அஞ்சாவண்ணி வலது பாதையில் நுழைய, கவனம் பிசகி இடது பாதையில் சென்றான். ஒரு சிற்றாற்றை கடக்க முடியாமல் தடுமாறி நின்றான். அப்போது தொலைவில் தெங்கத் தோப்பும் அதில் மாந்த நடமாட்டம் இருப்பதையும் கண்டு அங்கே போனான். ஒரு பெருங் கூட்டம் எந்தச் சலனமும் இல்லாமல் இருந்தது. சிலர் காவலுக்காக நடப்பதைப்போலக் குறுக்கும் மறுக்குமாக நடப்பதைக் கவனித்துத் தனது பெருயாளியை மறைவாக அமர்த்திவிட்டு அங்கே சென்றான்.

அறுபத்தியெட்டு நாடுகளின் தலைமைகளும் ஏழ் குறும்பனைக்குப் போய்விட்டபடியாகச் செய்தி சென்றதால் யாவரும் தெங்கப் பட்டினத்தில் கூடியிருந்தனர். அஞ்சாவண்ணியிடம் ஒரு வித பதற்றமிருந்தது. இன்னும் பதிநான்கு நாள்களே கொற்றவை வெறியாட்டு நிகழ்வுக்கு இருக்கும்பொழுது, மாந்தர்களும் திரள் திரளாக ஏழ் குறும்பனை நகரில் குவிந்துகொண்டிருப்பதால் விழா குழப்பமில்லாமல் நடக்க வேண்டுமே என அவளுக்கு அச்சமாக இருந்தது.

“எவ்வளவுதான் இருந்தாலும் காப்புக்கட்டுக்கே வந்துவிட்ட மற்ற தாய்களையும் தாய்மாமன்களையும் தன்னையும் பல காத தூரம் இருக்கும் ஏழ் குணக்கரைக்கு வரவழைக்க என்ன காரணம். எதுவாக இருந்தாலும் ஏழ் குறும்பனையிலேயே கூடிக் கலந்திருக்கலாமே. தென்னனுக்கு மூளை கெட்டு விட்டதா. ஏன் இந்த அவசரக் கூட்டம்?” என்கிற குழப்பம் அவளைத் தின்றுகொண்டிருந்தது. பொதுவாக முக்கியமான கூட்டமென்றால்தான் அழைப்பார்கள். அதேபோலத்தான் எல்லாரும் வந்திருக்கிறார்கள். ஒரு வேளை வெளியிலிருந்து வரும் நமது சொந்தங்களைப் பற்றி இருக்குமோ. அதற்கு ஏன் முக்கியமான நாளில் என்னையும் இங்கே வரவைக்க வேண்டும்..”

அவள் குழப்பத்தின் உச்சியில் நின்றாள்.

ஏழ் குணக்கரையின் பெருங் கூட்டத்தில் இருவாஞ்சியைத் தேடினாள் அஞ்சாவண்ணி. தென்னன் ஒட்டுமொத்தமாக அறுபத்தி எட்டு நாடுகளைச் சார்ந்த அனைவரையும் வரவழைத்துவிட்டதால் தெங்கப்பட்டினக் கொற்றவை அரங்கே விழித்துக் கிடந்தது. எந்தெந்த நாடுகளில் இருந்து தலைமைத் தாய்கள் எந்த வழியாக வருவார்கள். அவர்களை எப்படி எங்கெங்கே உபசரிக்க வேண்டும். வரும் வழியில் எங்கெங்கே தங்குவார்கள். எத்தனையாவது நாளில் ஏழ் குறும்பனையின்

தலைநகர் பிரம்பூர் வந்தடைவர் என்பது ஏற்கெனவே கிள்ளியின் மூலம் அனைத்தும் அறிந்திருந்தான்.

துல்லியமான திட்டமிடலில் கிள்ளி கூர்மையானவன் என்பது தென்னனுக்குத் தெரியும். சொந்த ஊரிலிருந்து ஏழ்பனைக்குக் கிளம்பி வரும் வழியில் எப்படியோ செய்தி அனுப்பி அதுவும் வந்து சேர்ந்ததால் கோகனைச் சந்தித்ததும் உடனடியாக அங்கிருந்த கூர்மையானவர்களைத் திரட்டி யார் யார் எங்கே வந்திருக்கக் கூடும், எங்கே வழியில் அவர்களை மடக்கித் திருப்ப வேண்டும் என்பதை எல்லாம் கணித்து ஆள்களை அனுப்பினான்.

அவனது திட்டமிடலைத் தாண்டியும் ஏழ்பனையில் தாய்களும் தாய்மாமன்களும் வழியில் ஓய்வே எடுக்காமல் விரைவாக வந்து காப்புக்கட்டிலேயே கலந்துவிட்டனர். காப்புக்கட்டில் கலந்து கொள்வதை ஒரு வகையில் தங்களது அதிகாரமாகக் கருதியதால் திட்டமிட்டதைவிட அவர்களால் முன்னதாகவே பிரம்பூருக்குள் வந்துவிட முடிந்தது. அதனால் காப்புக்கட்டு நிகழ்வில் இருந்தவர்களைத் தேடிச் செய்தி சேர்ப்பதில் மேலும் தாமதமாகிவிட்டது. அதனால் தென்னன் நினைத்ததைவிடத் தாமதமாகவே தெங்கப்பட்டினத்திற்கு வந்தார்கள்.

அஞ்சாவண்ணி வருவதிலும் நேரம் நீண்டது. ஒரு வழியாகத் தெங்கப்பட்டினத்தில் நுழைந்த அஞ்சாவண்ணிக்கு மக்கள் கூட்டம் கூட்டமாக அரங்கை நோக்கிச் செல்வதைக் கவனித்தபடியே வந்தாள். தங்களைச் சுமந்து வந்த வாகனங்களுக்கெனத் தனிக் கொட்டடி இருந்தது. கொட்டடி முழுவதும் எருமைகளும் ஆனைகளும், மகரயாளிகளும் பெருயாளிகளும் நிறைந்து கிடந்தன. அவளின் பார்வையில் தென்னனின் பெருயாளி கண்ணில் பட்டது. ஆறு அடி உயரத்தில் பதிமூன்றடி நீளமிருந்த பெருயாளி இவளைக் கண்டதும் தனது நீண்ட மூக்கால் அவளின் முகத்தருகே சென்று மோர்ந்தது. முக்கின் நுனியில் தடித்து நீண்டு வளர்ந்த குத்தீட்டி போன்ற மீசை முடியைத் தடவினாள். அவளின் கண்கள் இருவாஞ்சியின் சிம்மத்தைத் தேடிக்கொண்டிருந்தன. அதற்கான தடயமே அங்கில்லை. ஒருவேளை மற்ற மிருகங்கள் அஞ்சி நடுங்கக் கூடும் என வேறு எங்காவது நிறுத்தியிருப்பாள் என ஊகித்தாள். தென்னனின் பெருயாளியிடம் கண்களால் விடை வாங்கினாள்.

அரங்கிற்குள் வந்தவர்களை யார் யார் எங்கே அமர வேண்டும் எனத் திட்டமிட்டு அவர்களுக்கு இருக்கையை ஏற்படுத்தியிருந்தான்

தென்னன். முக்கியர்களைத் தவிர மக்களை உள்ளே அனுமதிக்க வேண்டாம் என உறுதியாக அரங்கக் காப்பாளர்களிடம் உத்தரவிட்டிருந்தான். அதனால் அரங்கக் காப்பாளர்கள் கவனமாக இருந்தனர். யார் யார் ஓலையைக் கொண்டு வருகிறார்களோ அவர்களை மட்டும் அனுமதித்தான். அஞ்சாவண்ணியைக் கண்டதும் வேகமாக வந்த தென்னன் அவளைக் கட்டியணைத்து அவளது முதுகில் மெல்லத் தட்டினான். அவ்வளவுதான் அவனது உரையாடல் என்று புரிந்துகொண்டாள். அவளுக்கான இருக்கையைக் காட்டினான். அவள் சென்று அமர்ந்தாள். அவளின் கண்கள் அனைவரையும் ஓட்டியது. ஓடும் கண்களில் தொலைவில் அந்தப் பக்க நுழைபரணுக்கு அருகே இருக்கையில் அமர்ந்திருந்த இருவாஞ்சியும் செம்பனும் தென் பட்டனர். அவர்களது பார்வையும் இவளை நோக்கித்தான் இருந்தது. உதட்டிலிருந்து நேசப் புன்னகை மூவருக்கும் வழிந்தது

ஏழ் குணக்கரையில் கொற்றவை வெறியாட்டுக்குக் கிளம்பியவர்கள் போக, தலைநகர் தெங்கப்பட்டினத்தில் இருக்கும் இருநூறு ஆயிரத்துச் சொச்சம் மக்களும் பிரம்பூரில் கூடவேண்டிய தாய்களும் தாய்மாமன்களும் முக்கியர்களும் இங்கே வந்து குவிந்து வருவதை வியப்பாகப் பார்த்தனர். அந்த ஆச்சர்யத்தோடு இருவாஞ்சி சிம்மத்தில் வந்தது கூடுதல் பரபரப்பை உண்டு பண்ணியது. தென்னனும் கோகனும் வரும் மனநிலை புரியாமல் தவித்துக்கொண்டிருந்த இருவாஞ்சிக்கும் செம்பனுக்கும் மாந்தர்களின் வரவேற்பை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் தவித்தனர். ஏழ் குறும்பனையின் அடுத்த தலைவியாக வரப்போகிறவள் என்பது மாந்தர்களுக்குத் தெரிந்தது. அறுபத்தியெட்டு நாடுகளிலும் ஏதோ ஒன்றில் சிறந்தவர்கள்தான் தலைமைக்கு வர முடியும். அது நாடுகளின் எந்த நிலத்திலிருந்தாலும் சரி.

தற்போதைய தலைவிகள் இறந்தாலோ அல்லது அரசியல் நடவடிக்கைகளில் இருந்து விலகிவிட்டாலோ அல்லது மகாப் பிரத்தானத்தை ஏற்றுக் கொண்டுவிட்டாலோ அதன் பிறகு இந்த தீரம் மிக்கவர்கள்தான் நாடுகளை வழி நடத்தக் கூடியவர்கள். இருக்கும் தலைமைகள் தங்களது காலம் முடியும் வரை புதிதாகப் பொறுப்பேற்பவர்கள் அவர்களுடனிருந்து அதுவரை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு வருவர். அதன் மூலம் அனைத்துத் துறைகளைக் குறித்த அறிவின் பொதுப் பண்புகளைக் கற்று வருவர்.

ஏழ் குறும்பனையைப் பொருத்தவரை சிம்மத்தை அடக்கிக் கொணர்ந்த இருவாஞ்சிதான் அஞ்சாவண்ணிக்குப் பிறகு தலைமை. இதுபோன்ற வீரஞ் செறிந்த புதியவர்கள் அமையவில்லை எனில் பழைய தலைமைகளின் குடும்பத்தில் அடுத்ததாக இருக்கும் மாந்தரிகள் பொறுப்பேற்பார்கள். பொறுப்பேற்பதில் கூடுதலான மாந்தரிகள் முன் வந்தால் அவர்களை அறிவர் குழு உடல் தேர்வுகள் வைத்தும் மனத்தேர்வுகள் வைத்தும் தேர்வுசெய்வர். ஆனால் இருவாஞ்சிக்கு அப்படி எந்த தேர்வும் செய்யவேண்டிய தேவை இல்லாதபடி தும்பனை அடக்கி நிறுவிவிட்டாள். அதனால் இருவாஞ்சியை ஏழ்பனையின் தலைவியாகவே நினைத்து மாந்தர்கள் தங்களது வரவேற்பைச் சிறப்பாகச் செய்ய முயன்றார்கள். குலவை ஓதிப் பாட்டிசைத்துப் பேராட்டம் போட்டபடி மாந்தர்கள் இருவாஞ்சியைக் கொண்டாடிச் சிம்மத்தை முன்னே கண்டு அஞ்சி வியந்து, பின் சிம்மத்தின் பின்னே பெருந்திரளாக ஊர்வலமாக வரத் தொடங்கினர்.

இன்னொரு புறம், ஆரல் நங்கையும் திருக்கையனும் கடலோடியதையும் மூத்த உறவின் வழி மாந்தர்களை ஆரலும் திருக்கையனும் அழைத்து வரும் செய்தியும் எல்லா நாடுகளுக்கும் சென்று சேர்ந்திருந்தது. அந்தந்த நாடுகளில் அவர்கள் வருவார்களா மாட்டார்களா என்று தெரியாமலேயே அவர்களுக்காகத் தங்களது சிறந்த உணவைப் புடம் போட்டு வைத்துக் காத்திருந்தனர்

ஆரல், இளநாகனையும், ஆரப்பர் நாட்டின் தலைவன் செம்படவனையும், அவர்களுடன் ஈராயிரம் மாந்தர்களையும் அழைத்து வந்திருக்கும் செய்தியும் பரபரப்பாக இருந்தது. ஆழி வழியே மாந்தர்களை நேரடியாகப் பொன்பரப்பி அழைத்துச் சென்று அங்கிருந்து நடுவாந்திரம் இருக்கும் ஏழ்பனைத் தலைநகர் பிரம்பூர் அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தனர் ஆரலும் திருக்கையனும்.

ஆனால் ஆழியில் மீன் பிடிக்கச் செல்லும்போது இளைப்பாறும் நடுத்திட்டொன்றில் திண் திமில் கூட்டம் ஒன்று கிட்டத் தட்ட பத்துத் திமில்களில் குறிப்பாக ஏழ் குறும்பனையின் நான்காவது தலைநகரான பொன்பரப்பி நகரின் தாயும் ஆழியில் மிதந்ததைக் கண்டதும் ஆரலுக்கு வித்தியாசமாகத் தோன்றியது. அவர்களுக்கும் தென்னன் செய்தி வைத்திருந்தான்.

கொண்டாட்டத்தோடும் புதிய ஓர் இலக்கை அடைந்த களிப்பிலும் வந்த ஆரலுக்கு அது பெருத்த ஏமாற்றம். அதோடு பல ஆயிரம்

ஆண்டுகளாக நடக்குமா... கிடைப்பார்களா... யார் அவர்கள்... உண்மையாகவே இருக்கக் கூடுமா... எல்லாமே செவி வழிச் செய்திகள்தானா... என ஏங்கிய தொப்புள் உறவுகளைக் கண்டு, அவர்களை அழைத்து வரும்போது வரவேற்க ஆளில்லை என்பது பெருத்த ஏமாற்றமாக இருந்தது.

ஆரலுக்கு மட்டுமல்ல இவ்வளவு தூரம் பயணப்பட்டுத் தேடி வந்த நம்மைக் குறைந்த அளவில்கூட வரவேற்க ஆளில்லாதது குறித்து இளநாகனது மனது வெட்கமடைந்தது. ஆரலிடம் குறிப்பை ஒப்படைத்த பொன்பரப்பியின் தாயிடமிருந்து எந்தச் செய்தியையும் பெற முடியவில்லை. மூன்று நாள் பயணத்தில் வந்திருக்கக் கூடிய உறவுகளைக்கூட வரவேற்க ஆளில்லாதது வெறுமையைத் தூண்டினாலும் காரணியம் வேறாக இருக்குமென ஆரல் ஊகித்தாள்.

இளநாகனிடமும் ஆரப்பர் தலைவனின் செம்படவனிடமும் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏழ் குறும்பனை நோக்கி வந்துகொண்டிருந்த நாவாய்களையும் திமில்களையும் வழியில் தடுத்து நிறுத்தி ஏழ் குணக்கரை நோக்கித் திருப்பி இருந்தார்கள். இன்னொரு பயணம் அவர்களுக்கு இறுக்கமாக இருந்தாலும் செய்திக்கேற்றபடி அவர்களை வேகமாக வழிநடத்தி வந்தாள். அவளுக்குள் ஒன்று ஓடிக்கொண்டிருந்தது.

ஏழ் குணக்கரைத் தலைநகரின் கழித் துறைமுகத்தில் நாட்டின் தாய் மச்சக்கன்னியே நேரடியாக நின்று வரவேற்றாள். மச்சக்கன்னியைத் பார்த்ததும்தான் ஆரலின் மனம் அடங்கியது. இளநாகனுக்கான மரியாதைக் குறைவில் ஒடுங்கிக் கிடந்த ஆரலுக்கு இளகியது.

இளநாகன் ஏழ் குணக்கரையின் துறைமுக நேர்த்தியைக் கண்டு மலைத்துப் போனான். ஆழியில் இருந்து கழித்துறை வழியே உள் முகத்திற்கு நாவாய்களே நேரடியாக நுழையும்படி அமைக்கப்பட்டிருந்தது. ஆழிக்குள் நுழைந்து கரையைத் தொட நாவாய்களால் முடியாது. ஆனால் இயற்கை கொடுத்த வழிகளைப் பயன்படுத்தி பெரும் கற்களையும் மரத்தடுப்புகளையும் கொண்டு நாவாய்கள் அலைப் பரப்புக்கு கீழே அறுபதடி அடிமட்டம் இருந்தாலும் அவை தரை தட்டாமல் வந்து கரையில் நிற்கும். கரைக்கு நெருங்கும்பொழுதே நாவாயோடு இணைத்துக் கயிற்றில் கட்டப்பட்டிருக்கும் பத்துக்கும் மேற்பட்ட பாறைகளால் பிணைக்கப்பட்ட மர நங்கூரங்களை, மர நெம்புகோலால் கடலில் தள்ளிவிடுவர். நங்கூரங்கள் ஆழியின் தரையில் போய்த் தனது பேரெடையோடு உறுதியாக நிலைகொள்ளும். ஆழியில் அலை

கொதிப்பில் நாவாய்கள் அமைதியாகத் தள்ளாடும். அவ்வளவுதான். பேரலையே வந்தாலும் நாவாய் நுழையும் கழிமுகத்தில் உட்புகா வண்ணம் அரைக்கோளத்தில் ஒரு தடுப்பை உருவாக்கியிருந்தார்கள்.

தெங்கப்பட்டினத்தில் ஏற்கெனவே பத்து நாவாய்கள் நின்றிருந்தன. ஏகப்பட்ட திண் திமில்களும், கொடுந் திமில்களும் வரிசைகட்டி நின்றன. மாந்த இனத்தின் வளர்ச்சியை எண்ணி வியந்து நின்றான் இளநாகன். இந்த அறிவைக் கற்றுத் தன் நாட்டிற்கும் பயன்படுத்த வேண்டுமென நினைத்துக்கொண்டான். செம்படவனுக்கும் அதே மனநிலைதான்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட இரு நாடுகளின் மாந்தர்களையும் சில மணித்துளிகளில் இறக்கப்பட்டு அவர்களுக்கு மாந்தர் கூட்டம் எதிர் நின்று கட்டியணைத்து வரவேற்பைக் கொடுத்ததில் எல்லாரும் சமநிலைக்குத் திரும்பினார்கள். தாய் மச்சக்கன்னி குழப்பத்தில் இருந்ததால் அவளால் சரியாக உரையாட முடியவில்லை.

ஆரப்பர் நாட்டிலிருந்தும், நாக நாட்டிலிருந்தும் இருந்த சில முக்கியர்களை மட்டும் அரங்கத்திற்கு அழைத்து வந்தனர். மற்றவர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

ஏழ் குணக்கரை அரங்கில் எல்லாருமே வந்துவிட்டிருந்தனர். தாய் மச்சக்கன்னி கூட்டத்தின் அமைதியைக் குலைத்தாள்.

“எங்களைப் பார்க்க வந்திருக்கிற நமது தொப்புள் உறவுகளே, உங்களை வரவேற்கிறேன். நாக நாட்டின் தலைவன் இளநாகனுக்கும் ஆரப்பர் நாட்டுத் தலைவன் செம்படனுக்கும் எங்களது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். உங்க நாட்டிலிருந்து உங்களோடு அரங்கத்திற்கு வந்தவர்களையும், சில முக்கியக் காரணங்களால் அரங்கில் அனுமதிக்க முடியாமல் வெளியில் தங்க வைக்கப் பட்டிருக்கும் எமது உறவுகளுக்கும் சேர்த்து குமரிக்கோட்டின் தாய்களின் தாய்மாமன்களின் சார்பாக ஏழ் குணக்கரையின் தாயான மச்சக்கன்னி ஆகிய நான் வரவேற்று வணங்குகிறேன்.”

இளநாகனும் செம்படவனும் தங்கள் இருக்கையில் இருந்து எழுந்து எல்லாரையும் வணங்கினார்கள். அறுபத்தியெட்டு நாடுகளின் முக்கியர்களும் எழுந்து வணங்கினார்கள்.

மச்சக்கன்னி தொடர்ந்து நின்று பேசத் துவங்கினாள். அமர்ந்திருந்த அனைவரும் அவளை நிமிர்ந்து பார்க்க மிகுந்த சிரமப்பட

வேண்டியிருந்தது. அறுபத்தியெட்டு நாடுகளில் மிக அதிகமான உயரம் கொண்டவள் அவள். பன்னிரண்டு முழம், ஒரு சாண், ஒரு விரல் நான்கு தோரை உயரமுள்ளவள். இரண்டு முழ அகலத் தோள்களைக் கொண்டவள். முகம் தட்டையிலிருந்து புடைத்த பாறைபோலிருக்கும்.

“உங்களைச் சிறப்பாக வரவேற்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம். எல்லாரும் கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் இருக்க வேண்டியவர்கள். உங்களையும் அங்கேதான் அழைத்து வருவதாக ஆரல் ஓலையனுப்பி இருந்தாள். ஆனால் உங்களையும் இங்கே வரவைக்க வேண்டியதாகிவிட்டது. அதற்கான காரணங்கள் எங்களுக்கும் பிடிபடவில்லை. எங்களின் அறிவர்கள் கோகனும் தென்னனும்தான் இதைக் குறித்துச் சொல்ல வேண்டும். நாம இப்படியே அமைதிய விரும்புறதால மாத்தம் வரப்போகுதா கோகா?”

கோகன் எப்படி ஆரம்பிப்பது எனத் தெரியாமல் தடுமாறினான்.

“ஏ... மச்சக்கன்னி! ஏழ் குணக்கரைக்குத் தாய்தான் நீ. எங்களுக்கு முன்னாடியே தெரியும்!”

அந்த நேர இறுக்கத்தை மறந்து அஞ்சாவண்ணி பேச, அதன் பொருள் உணர முடியாமல் கண்களைச் சுருக்கி அஞ்சாவண்ணியைப் பார்த்தாள்,

“பின்ன என்னடி... தெங்க மரமாட்டம் நீளமா இருக்க. நிமிந்து பார்க்க முடியுதா... தரையில படுத்து தலைகீழா அன்னாந்து பார்க்க சொல்லுவபோல கழுத்து சுழுக்குது... உக்காந்தே சொல்லு.”

கூடியிருந்த மொத்தக்கூட்டமும் கொல்லெனச் சிரிக்க, அதுவரை இருந்த அந்த இடத்தின் மயானம் தொலைந்து இயல்பு திரும்பியது. மச்சக்கன்னியும் நாணி சட்டென கீழே அமர்ந்தாள். ஏழ் மதுரை தாய் பாண்டியத்தி, கோகனை நோக்கி கேள்வியைத் திருப்பினாள்.

“கோகா... உனது கணியத்தின் மீதுள்ள நம்பிக்கையாலேயே ஆதித் தாயின் விழாக் கொண்டாட்ட நிகழ்வைத் தாண்டியும் ஏழ் குணக்கரையில் கூடியிருக்கிறோம். ஏழ்பனையில் கூடி விவாதிக்க முடியாத எது ஒன்று தெங்கப்பட்டினத்திற்கு இழுத்து வந்திருக்கிறது. அவ்வளவு கடுமையான சிக்கல் என்ன?”

கோகன் இந்த நேரடிக் கேள்வியில் உறைந்துபோனான். ஏற்கெனவே அவன் மனம் திக்கற்றுத் தவித்துக் கொண்டிருந்தது. தன் சொல்லை நம்பி அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் முக்கியமான

மாந்தர்களும் வருகை தந்த பதற்றத்தில் அவனிருந்தான். வார்த்தை வராமல் தடுமாறி தென்னனைப் பார்த்தான். தென்னன் கண்களால் அசைவு கொடுத்துப் பேசச் சொன்னான். எல்லாரையும் ஒருமுறை பார்த்த கோகன் தனது உள்ளத்தில் ஆறு திங்களாக ப் பீடித்திருந்த நோயின் கணுவை வெளித் தள்ளத் துவங்கினான்.

“என்னை நம்பி ஆதித்தாய் கொற்றவை வெறியாட்டு வேலைகள விட்டுட்டு வந்த உங்க எல்லாருக்கும் என்னோட அன்பும் வணக்கமும். ரொம்ப யோசிச்சி, தயங்கி கொத்தவை மேல பாரத்தப் போட்டுட்டுத்தான் உங்கள வரவழச்சேன். இது உண்மையா பொய்யா... நடக்குமா... நடக்காதான்னு பல கேள்வி எனக்குள்ள இருக்கு. ஆனா அறிவர்கள் உருவாக்கின கால அளவியல் பொய்யில்ல. எப்ப மழையடிக்கும், எப்ப கதிரடிக்கும், எப்ப காத்தடிக்கும்னு கால காலமா கணிச்சி வச்சிருக்காங்க. ஒவ்வொரு நிலத்தொன்மைக்கு ஏத்த மாதிரி அந்தந்த நிலத்துக்கான கணியம் வேறு வேறா இருந்தது. அதாவது மலையில வாழும் மாந்தருக்கு வறண்ட நிலத்துல வாழுற மாந்தர்களோட கணியம் பொருந்தாது. ஆற்றோரத்துல இருக்குற மாந்தருக்கான கணியம் வேற. ஆழியோரத்துல வாழுற மாந்தர்களுக்கான கணியம் வேற அதேமாதிரிதான் குணப்பண்பும் மாறும். அதனால மாந்தர்கள் உருவாக்குற வானவியல் அந்தந்த நிலத்தப் பொறுத்து மாறுது. எல்லாருக்கும் ஒரே கணியம் பொருந்தாது. அதுதான் உண்மை. ஆனா அவங்க எல்லாருக்கும் நிலாவும் கதிரொளியும் ஒன்னுதான். நாம நிலாவ சீக்கிரம் பார்க்குறப்ப, ஏழ் காந்தள் மாந்தர்கள் நாம கணிக்கிற காலப் பருவம் தாண்டிப் பார்ப்பாங்க. நமக்கு கதிரொளி மறையரப்ப அவங்களுக்குக் காட்சியளிக்கும் அது தூர அளவீடு. நேரத்தைப் பொறுத்தவரைக்கும் ஒண்னுதான். நாம் கணிச்சதெல்லாம் ஒட்டு மொத்தமான இந்தப் பொது அளவீடுதான். மாந்தர்களோட குண அளவீடில்லை இது. பேரண்டத்துக்கான தீர்க்க அளவீடு. அந்த அறிவுப்புதிர் கொடுத்த இணக்கம் இது நாள் வரைக்கும் ஒத்துதான் போச்சு. ஆனா அவர்கள் ஆண்டுக் கணக்கென எடுத்துக்கிட்ட இது வரைக்குமான பார்வையில கொஞ்சம் பிழை இருந்ததால அவர்கள் கொடுத்த கணியத்தைப் பயின்று மேலும் முன்னேத்தும் விதமா கதிரவளிலிருந்து காலத்தைக் கணிச்சேன். அறிவர்கள்கிட்ட நான் கத்துக்கிட்டு, அதை மேலும் சீராக்க முயற்சி செஞ்சி, ஓரளவு சரியான திசையில போறோம்ங்கற நம்பிக்கையின் அடிப்படையில எனக்குக் கொஞ்ச காலமா ஓடிட்டு இருக்கிற என்னோட பயத்தை உங்களுக்குச் சொல்ல நினைக்கிறேன்.”

இருவாஞ்சி செம்பனை ஆழமாகப் பார்த்தாள். செம்பன் முகமும் கெட்டிப்பட்டிருந்தது. எல்லாரின் முகமும் கூர்மையடைந்து கோகனை நோக்கி நீண்டிருந்தது.

“முதுவச்சி மதிவந்தி கையாண்ட கணியத்தை ஆராய்ந்து நிலவிலிருந்து தொடங்கிய கணியத்தை மாத்தி கதிரொளிலிருந்து தொடங்கும்போது உறுதியான கால அளவியல் எனக்கு உண்டாச்சு. அதை எல்லாரும் ஏத்துக்கிட்டீங்க. அதுக்கப்புறம்தான் நான் இது வரைக்கும் குறிச்சி வச்சிருந்த பழைய முதுவர்களின் அளவுகள முழுக்க ஆராஞ்சேன். அவங்க கணியத்துல நிலம் உடைஞ்ச காலக் குறிப்புகள் கிடைச்சது. அதுவும் எத்தனை காலத்துக்கு ஒரு முறை இந்த மாத்தம் வரும்னு துல்லியமா அளவிட்டிருக்காங்க. அவங்க அளவு முறை நிலவை வச்சி இருந்தது. அதை ஒட்டியே பல பரம்பரையா நாம ஆய்வு செஞ்சதுல நிறைய நாள்கள அவங்க விட்ட இடத்திலிருந்து தொடரத் தவற விட்டிருக்கோம். ஏதோ ஒரு இடத்துல அந்தப் பிழை தொடங்கி அதன் பிறகு அந்த பிழையிலிருந்து மேலும் மேலும் பல ஆயிரம் ஆண்டுகளா மாறிப் போயிருக்குது கால அளவு. அதனால அந்தத் துல்லியம்போதுமானதா எனக்குப் படல. அதுக்கப்புறம் எல்லாத்தையும் செங்கதிரோள் உருவாகுற முறையில இருந்து கணக்குப் போட்டேன். அதுல ஒரு பெரிய உண்மை தெரிஞ்சது!”

கோகன் ஏதோ பெரிய செய்தி ஒன்றை வைத்துக்கொண்டு தவிக்கிறான். அது மாந்தர் குலத்திற்கு ஆபத்தான செய்தி பொதிந்திருப்பதாக எல்லாராலும் புரிந்துகொள்ள முடிந்தது. கோகன் மேலும் தொடர்ந்தான்.

“அவங்க கணிய விதிப்படி, ஒரு நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால நிலம், ஆழிக்குள்ள போயிருக்கு. அவர்கள் அதிலிருந்துதான் வழிவழியா தோராயமா கணக்க எடுத்துட்டு வந்திருக்காங்க அதுக்கப்புறம் மூணு முறை ஆழி, நிலத்தை முழுங்கினதைக் கணக்கெடுத்திருக்காங்க. அதோட தொடர்ச்சியா இரண்டு முறை நிலம் பிளந்துகிட்டுத் தனித்தனியா போனது. அதில ஒரு முறை மொத்தாமா நம்ம மாந்தர்களும் விலங்குகளும் பறவைகளும் மண்ணுல உள்ள எல்லா உயிரும் மண்ணுக்குள்ள போச்சு. தப்பிப் பிழைச்சவங்கன்னு கொஞ்சம்பேருதான் அதிலயும் நம்ம மாந்தர்கள் கொஞ்சம்பேரு பிரிஞ்சி வேற திசையில கிடக்கிற ஆழியத் தாண்டி நிக்கிற நிலத்துல வாழுறதா ஒரு நம்பிக்கை நமக்கிருக்கு. அதையும் நம்ம முன்னோர்கள் உறுதிப் படுத்தியிருக்காங்க இதோ இப்போது நம்ம கண்ணு முன்னாடியே எங்கயோ கடக்கிற நிலத்திலிருந்து

நாகர் தலைவனையும், ஆரப்பர் தலைவனையும் கண்டு ஆரல் கூட்டி வந்திருக்கிறதால அது உண்மையும்னு ஆகிப் போச்சு.”

மேலும் தொடரட்டும் என்பதுபோல அனைவரின் பார்வையுமிருந்தது.

“கணியர்களின் பழைய திகதி முறை மாற்றியதிலிருந்து எல்லாக் கணியத் திகதிகளும் மாறிவிட்டன. அவர்களின் வழியில் ஒழிந்து கிடந்த திகதிகளை அவர்களிடம் முழுமையாக முறைப் படுத்தாமை எனப் பல இருந்தன. எல்லாவற்றையும் செழுமைப்படுத்தியது எமது கணியக் குழு. கிடைத்த செய்தியில் பல உண்மைகள் மறைந்து கிடந்தன. அனைத்தையும் தேடி இந்த எட்டுத் திங்களாகக் குமரி முழுவதும் அலைந்து திரிந்தேன். இதன் உண்மை கசப்பானது என்பதால் யாரையும் துணைக்கு அழைத்துக்கொள்ளாமல் தேடினேன். என் நரம்புகள் நடுங்கியதுபோலவே நடந்துவிட்டது.”

அனைவரின் முகமும், திடீர் மழைக்குமுன் விசும்பில் இருளும் தன்மையை ஒத்திருந்தது. அஞ்சாவண்ணி குரல் உடைந்துபோய்க் கேட்டாள்.

“கோகா, உன் கணியத்தை மொத்த மாந்தர்களும் ஏத்துகிட்டாங்க. அதுப்படிதான் போன ஆண்டு வரைக்கும் எல்லாருக்கும் அதைச் சொல்லிருக்கோம் கணிய முறையை மாத்தியிருக்கோம். அப்படியிருந்தும் ஏன் எங்கள சந்தேகப்படுற? நீ சொல்றத நாங்க உணர மாட்டோமோ? கொற்றவைத் தாய்க்குக் கூடியிருக்கிறப்போ நீ சொல்ல வரதை நேராவே சொல்லலாமே. ஏன் இத்தன கிடங்கை?”

சட்டென, அமைதியான நிலத்திலிருந்து கிடைத்த வெடிப்பில் பீறிடும் நீரைப்போலக் கோகனின் கண்களிலிருந்து தாரை தாரையாகச் சுனை வழிந்தது. அவனது அழுகை பல திங்களாக அடங்கிக் கிடந்து உடைத்துச் சிதறி வரும் பேரருவி. மனக்கிடங்கின் வேர்களிலிருந்து பீறிடுவது. இனியும் இறுக்க முடியாமல் திரண்டு வருவது அது. அடக்க முடியாமல் கதறியழுதான். மாந்தர்களின் அழுகையும் ஊற்றெடுக்கும் கண்ணீர் நதித்தடத்தையும் ஏழேழு நாட்டிலும் யாரும் கண்டதில்லை. பல்லியம் இசைக்கும்போது இசையால் உந்தப்பட்டு மனதில் அடியிலிருந்து பீறிட்டு எழும் வெடிப்பின் கண்ணீரைக் கண்டிருக்கிறார்கள். எப்பொழுதாவது இளஞ்சாவைக் கண்டு அழுதிருக்கிறார்கள். இந்த அழுகை புதிய அழுகை. தென்னன் அவனருகே சென்று அவனைத் தனது தோளில் புதைத்துக்கொண்டான். அவனது

அழுகையிலிருந்து வழிந்த கண்ணீர் அனைவரின் கண்களில் குளமானது. எல்லாரும் ஏதோ பெருந்துயரொன்று நம்மைச் சூழ்ந்திருப்பதைபோலவே வருந்தினர். யாரிடமும் பேசுவதற்குச் சொற்கள் இல்லை. அருவி வழிந்து ஆற்றில் கலந்து ஆழியில் கரையட்டும் எனக் காத்திருந்தனர். கோகன் முகத்தின் துயரை வழித்து எறிந்துவிட்டு உடைந்த குரலைச் செருமி நேராக்கினான். எல்லாரையும் கூராக்கிப் பார்த்தான்.

“அம்மா என் மனசில கிடந்த பாரத்தை இறக்கி வைக்கிறேன். எனக்குப் புரிய ஆரம்பிச்ச முதல் திங்களிலிருந்து எவ்வளவோ அச போட்டுப் பாத்துட்டேன். தீவிரமா தேடினேன். நான் நினைக்கிறது சரியானதான்னு எனக்குள்ளயே பல குழப்பம். அச்சம். ஆறாத நடுக்கம். பீராய்ஞ்சி பார்த்துட்டேன். கிடச்ச குறிப்புகள வச்சி எல்லா நிலத்திலயும் தேடி வெறி புடிச்சி அலைஞ்சி பாத்துட்டேன். எல்லாக் குறிப்புகளும் சொன்னதில் கிட்டத்தட்ட பலது ஒத்துப் போச்சு. ரெண்டு திங்களுக்கு முன்னால ஏழ் மதுரையில நிலம் கொஞ்சம் ஆட்டம் கண்டது நமக்குத் தெரியும். ஆழித் தண்ணி கரையோரத்துல சில ஊர்களையே மூழ்கடிச்சது உங்க எல்லாருக்கும் தெரியும். பரணியாற்றோட தண்ணீர் வத்திப் போனதும் உங்களுக்குத் தெரியும். மதிவந்தி தாய் மறைஞ்ச எரிமலைக் கொழம்புகூட பழைய தீவிரத்துல இல்ல. இதெல்லாமே ஏற்கெனவே மதிவந்தி தாய் எழுதி வச்ச பாறைகளில் கிடக்கு. இதையும் நான் கொற்றவைப் பீடத்துலதான் சொல்லணும்னு நினைச்சேன். என்னால முடியல. ஒரு வேள நான் நினைக்கிறது நடந்து போச்சுன்னா. அப்ப யாருகிட்ட சொல்ல முடியும்? அதான் கொத்தவைய நெனச்சிக்கிட்டு தாய் முன்னாடி இறைஞ்சி நின்னேன். அவதான் சொன்னா, உனக்கு அத காட்டிட்டேன். நீ உடனே செயல் படுத்துன்னு. அதான் தென்னனை வரவழைச்சேன். தென்னன்தான் ஏழ் குறும்பனைக்குப் போன உங்கள எல்லாம் திரும்ப ஏழ் குணக்கரைக்கு வர வச்சது. குறிப்பா தெங்கப்பட்டினம்தான் அதுக்குச் சரியான எடம்கிறதால எல்லாரையும் இங்க வர வச்சோம். ஏழ் குறும்பனை ஆழிக்கரையும், ஏழ் குணக்கரை ஆழிக்கரையும், ஏழ் தெங்க ஆழிக்கரையும் நமக்கு இப்ப உதவும்னு நம்புறேன். அதோட திமில் கட்டுமானத்துல ஏழ் குணக்கரைத் தலநகரம் தெங்கப்பட்டினம்தான் வலிமையாக இருக்குங்கறதால வர வச்சேன். நம்ம முன்னோர்கள் கண்டடைந்து நம்மகிட்ட விட்டுட்டுப் போன அனைத்து அறிவும் அழியாம இருக்கணும். முடிஞ்சவரைக்கும் அறிவர்களையும் மாந்தர்களையும் காப்பாத்தணும். அதுக்கு ஒரே வழி மூடுதிமில்தான். அதுதான் சிப்பிக்குள்ள பூட்டின முத்து மாதிரி எல்லாத்தையும் பூட்டி

வைக்கும். எவ்ளோ தண்ணியிலயும் மிதக்கும். அதுதான் தென்னனோட திட்டம்!”

ஏதோ சிக்கலான, மிகவும் ஆபத்தான ஒரு செய்தி என்ற அளவில்தான் கூடியிருந்த அனைவரும் நம்பிக் கொண்டிருந்தனர். மூடுதிமில் குறித்துக் கோகன் பேசியதும் எல்லார் முகங்களிலும் தீவிரக் கவலை படிந்தது. மூடுதிமில் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. அது எப்படி இருக்கும் எனச் சிலர் மனத்தசை போட்டுப் பார்த்தனர். கோகன் நிறுத்திய இடத்தில் தென்னன் தொடர்ந்தான்.

“ஏன்னா காலம் நம்மகிட்ட இல்லை. நாம உடனே ஏதாவது செஞ்சாகணும். இந்தக் குமரி நாடு மண்ணுக்குள்ள போகப் போகுது. இந்த நிலமே துண்டு துண்டாகப் போகுது நாம எல்லாரும் மொத்தமாப் போகப்போறோம்!”

மச்சக்கன்னி அதிர்ந்து எழுந்தாள். மொத்த கூட்டமும் அதிர்ந்து எழுந்தது. வந்திருந்த உறவுகளும் எழுந்து நின்றார்கள். ஒரு சொல்லில் யாரும் சொல்லாமலே எழுந்து நின்றார்கள். தென்னனையும் கோகனையும் மாறி மாறிப் பார்த்தார்கள். அவர்களால் இதை எப்படி எடுத்துக்கொள்வது என்றே தெரியாமல் விளித்தனர்.

“என்ன சொல்ற..!?”

“ஆமா தாயே! எனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியல!”

“கோகா, எதுவாக இருந்தாலும் சொல்லு. நம் முன்னோர்கள் எதையும் எதிர்கொள்ளும் பக்குவத்தையும் அதை மாற்றியமைக்கக் கூடிய அறிவையும் நமக்குக் கொடுத்துருக்கிறாங்க.”

“ஆமா தாயே... ஆனா, இது எனக்கு நடுக்கமா இருக்கு.”

“தென்னா, என்னதான்னு நீயாவது சொல்லேன்?”

தென்னனுக்கும் எப்படிச் சொல்வதெனத் தெரியவில்லை. கோகனை சொல்லும்படி பார்வையால் வேண்டினான். கோகன் சொல்லத் தொடங்கினான்.

ஏழ் பின்பாலை நகரத்தில் ஆண்டுக் கணக்கு நிறுவலுக்குப் பிறகு கோகன் மீண்டும் தனது குழுவோடு முதுவச்சி மதிவந்தி தனது கூட்டத்தோடு தற்கொலை செய்துகொண்ட பொங்கி வெடிக்கும் எரிமலை குழம்பிருந்த கடைக்கோடிக்குச் சென்றான்.

நிலத்தின் அடியிலிருந்து கிளர்ந்து, அகண்டுக் கிடந்த மலையின் மேல்புறத்தை உடைத்தபடி பொத்துக்கொண்டு மேலே பறந்து விழுந்துகொண்டிருந்தன நெருப்புப் பாறைகள். அதோடு பீய்ச்சி அடித்துக்கொண்டிருந்த நெருப்பு நீர்க் குழம்புகள் மடல் விரிந்த இதழைப்போலக் குவிந்து, ஒற்றைத் தண்டிலிருந்து கிளைத்துப் பறந்து விழுந்துகொண்டிருந்தன. எரியும் பாறைகள் வானத்தைத் தொட்டுவிட முயன்று தோற்று, மலை அடுக்குளில் விழுந்து சிதறிக்கொண்டிருந்தன. நெருப்பு உமிழ்ந்த திசையெங்கும் புகை படலங்கள் கரு வெள்ளை குமிழ் தோகைகளை வீசி ஆடிக் கொண்டிருந்தன.

அங்குதான் கோகன் சென்றான். வழியெங்கும் அப்பெரு நெருப்புக் குழம்புகளுக்கு வழி விட்டும் சில புற்கள் தாக்குப் பிடித்திருந்தன. நீர்த் தடாகங்களும் ஆங்காங்கே தென்பட்டன. அதையொட்டி நீண்ட தூரம் நடந்தான். எரிமலைக் குழம்புகள் தென்பட்ட பாறைகள் மறைந்து புல்வெளி தெரிந்தது. எரிமலைக்குச் சற்றுத் தள்ளியே பசுமையும் போர்த்திக் கிடந்த அந்த மலையடிவாரத்தை வியந்தபடி நடந்தான். அவனுக்கு இயற்கையின் பேராற்றல் புரிய ஆரம்பித்தது. நிலத்தின் அடியில் எங்கோ ஓடிக் கொண்டு இருக்கும் எரியும் பாறைகள் உருகி அழுத்தம் தாழாமல் கிடைக்கும் இடைவெளியில் பீய்ச்சியடிக்கின்றன. எப்படி மலையின் அடுக்குகளில் நிலத்தின் உள்ளிருந்து நீர் வெளியேறி அருவியாகக் கொட்டுகிறதோ, அதேபோலத்தான் எரிமலைக் குழம்புகளும் எனப் புரிந்துகொள்ள அவனுக்கு நேரமெடுக்கவில்லை. அதனால்தான் ஒரு பக்கம் பாறைகளில் எரிநீர் அல்லது குழம்புகளாகக் கொதித்துக்கொண்டிருக்கும் பாறைத்துகள்கள் குபுக் குபுக்கென மேலே எரிந்து எதிர் மழைகளாகப் பொழிந்து கொண்டிருக்கின்றன. மறுபக்கம் இதன் சுவடே அற்று நீர்த் தடாகங்கள் குளிர்ந்தும் கிடக்கின்றன. சில பெயர் பெறா உயிரிகள் தாக்குப் பிடித்திருந்தன. கோகன் அகண்டு பரந்த மலை அடியில் ஆலமரத்தின் நீண்ட வேராக ஒரு தடம் ஒன்று நுழைந்தது.

‘மதிவந்தி இவ்வளவு தூரம் ஏன் வந்தாள்? ஏன் நெருப்புப் பாறைகளை ஒட்டிய மலையைத் தேர்ந்தெடுத்தாள்?’ எனக் குழம்பினான். அவனோடு வந்த குழுவினர் இரை தேடிச் செல்லும் முதல் எறும்பைப் பின்தொடர்ந்து வந்தனர். குகைக்குள் ஓரிடத்தில் தடுப்புகள் பெரும் பெரும் தூண்களாக கற்கள் நிறுத்தப் பட்டிருந்தன. மாந்தரும்கூட ஒவ்வொருவராக நுழையக் கூடிய வகையில் வழி அமைக்கப்பட்டிருந்தது.

பெரு மிருகங்கள் ஏதும் உள்ளே நுழைந்து விடாமல் இருக்க இந்த ஏற்பாடாக இருக்கலாம் என நினைத்தான்.

குகை உள்ளே செல்லச் செல்ல அகண்டு விரிந்திருக்க, ஆங்காங்கே சுவர் ஓவியங்களும் தமிழி வரைவெழுத்துகளும் எழுதப்பட்டிருந்தன. குகைக்குள் மென் சூடு பரவிக் கிடந்தது.

கோகன் மனதுக்கு ஒவ்வொன்றாய் விளங்கத் தொடங்கியது. மாந்தர்களும் விலங்குகளும் நுழைய நினைக்காத இந்த எரிமலைக் குன்றை மதிவந்தி தேர்வு செய்யக் காரணியம் தங்களது ஆய்வுகள் அப்போது ஏற்றுக்கொள்ளப்படாவிடினும் எதிர்காலத்தில் தனது கணியத்தை எவராவது தேடி வரக்கூடும் என முதுவச்சி மதிவந்தி உணர்ந்திருக்கிறாள். அது மிக முக்கியமானது என்பதையும் அவள் மனது அறிந்திருக்கிறது. ஆகவே, பாதுகாப்பாக இருக்க வேண்டும். தனது மாந்தர் இனத்திற்கு விட்டுச் செல்ல வேண்டும் என முடிவெடுத்து இருப்பதாகவே புரிந்துகொண்டான். கூட்டுத் தற்கொலைகூட, அப்படியாவது மாந்த இனத்தின் அறிவர்கள் இதற்கான காரணியம் தேடி வந்து, பார்வையிட்டுக் கண்டு கொள்வார்கள் என்கிற நோக்கத்தினால் இருக்கக்கூடும்.

விசும்பில் மதிவந்திக்கு முன்பான கணிய முயற்சிகளில் தொடங்கி, மதிவந்தி உருவாக்கிய கணக்கெடுப்பு வரை அனைத்தும் பதியப்பட்டிருந்தது. இதைக்கொண்டே சென்ற ஆண்டில் கதிரவளும் நிலவளும் சமநிலைப்பட்டு அங்கிருந்து கதிரவள் தொடங்குகிற முதல் நாளே ஆண்டின் முதல் நாளாக மதிவந்தித் தாய் கண்டறிந்திருக்கிறாள் என்பதையும் புரிந்துகொண்டான். எல்லாம் அசைவெழுத்துக்களால் தூரிகைகளால் எழுதப்பட்டிருந்ததால், செதுக்கப்பட்டிருந்ததால் அதைப் புரிந்துகொள்ள நேரம் பிடித்தது. அதன் அடிப்படையில்தான் கோகனும் சென்ற ஆண்டு நடந்த வெறியாட்டில் ஆண்டுக் கணக்கை நிறுவினான்.

அதன் பிறகு அடிக்கடி இம்மலைக்குத் தனியனாக வரத் தொடங்கி தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டான். அதில்தான் உண்மைகள் புரியத் தொடங்கின. விதை விழுந்து வெடித்துக் காற்றின் ஈரத்தில், மண்ணின் ஈரத்தில் தனது முதல் வேரை ஊன்றும்போது மண் அசைந்து கொடுத்து அவ்வேரைத் தனக்குள் அனுமதித்ததுபோல அவன் அந்த உண்மைகளை தனக்குள் அனுமதிக்கத் தொடங்கினான். பல்லாயிரம் ஆண்டுகளாகச் சரியான வழியில் சென்ற ஆய்வு எங்கோ தடைப் பட்டுப் புதிய முறைமைகள் உருவாகி இருக்கின்றன.

மதிவந்திக்கும் முன்னரான ஒரு நீண்ட தலை முறையில் கணித்த வண்ணத்தி தாயின் முடிவுகளுக்கு ஏற்ப அவள் கணித்தபடி நாற்பத்தி எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை இயற்கையின் பெரும் சீற்றம் நிகழ்ந்ததும், அதிலிருந்து குறைவான இழப்புகளோடு மாந்த இனம் தப்பிப் பிழைத்ததையும், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட அவ்வப்பொழுதான இயற்கையின் மாற்றங்களை நுணுக்கமாக அறிந்து வைத்திருந்ததையும், அதற்கேற்பத் தங்களது வாழிடத்தை இடம் பெயர்த்தியதையும் மிகத் தெளிவாக மதிவந்தி குறித்திருந்தாள்.

கணியள் பேகச்சி ஆய்விலிருந்துதான் இந்த அறிவியல் கொஞ்சம் கொஞ்சமாகத் திசை மாறி இருப்பதையும் மதிவந்தி சுட்டி இருந்தாள்.

அவள் காற்றில் இருந்தும், கனவில் இருந்தும், கண்ணீரில் இருந்தும், எல்லாவற்றையும் கணித்து முடித்திருக்கிறாள். தன் உடல் நோக, உயிர் நோக, கால்களையும் கைகளையும் தோல்களில் வதைக்கும் அரிப்பையும்கூட அவள் பெரிதுபடுத்தவில்லை. அதனால் உடல் முழுக்கச் சொறிந்து உடலே தீ வெந்ததுபோல் இருந்தாள். நரம்புகளையும் மூளையையும் மிகக் கடுமையாக வதைத்து உருவாக்கி இருக்கிறாள்.

தன்னை முழுதாக நம்பிய தனது குழுவையும் முழுதாகக் கசக்கிப் பிழிந்து அதை மட்டுமே குறிக்கோளாக அவர்களை மாற்றி இருக்கிறாள். ஈராயிரம் காத தூரங்களில் ஆங்காங்கே தனது குழுவை நிலை நிறுத்தி இருந்தாள்.

அவர்களைப் பத்தாண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் நிறுத்தி ஒவ்வொருவரின் நிலைப்பாட்டையும் கேட்டு அறிந்து, அதில் அவள் கண்ட பேரண்டத்தில் தோன்றி நிலைத்த, தோன்றிக் காணாமல் போகிற,தோன்றிக் கண் முன்னே விழுகிற கோள்களைப் புரிந்துகொண்டாள்.

எரி நட்சத்திரங்களைப் புரிந்துகொண்டாள். எப்பொழுதும் நிலைத்தே இருக்கிற கோள்கள் ஈராயிரம் காத தூரத்தில் நிலைத்திருக்கிற தனது குழு, ஒரே காலத்தில் எல்லா இடத்திலும் மாற்றமடைந்த தன்மைகளைக் குறித்துக் கவனமாகக் கலந்திருக்கிறாள்.

அவளே கதிரவள், அவளே நிலவு. விசும்பில் துலக்கமாகத் தெரிகின்ற கதிரவளும், நிலவும்தான் முதன்மையான கண்ணுக்கு நேரடியாகத் தெரிகிற கோள்கள்.

அவை நாம் வாழும் இந்நிலப் பரப்பைப்போல ஒன்றுதான். நம் நிலத்தைவிடவும் பன்மடங்கு பெரிதாக இருப்பதால் நமக்குத் தெரிகிறது அல்லது நெருக்கமாக இருக்கிறது. இதைத் தாண்டியும் பல கோள்கள் இருப்பதும், இவற்றைவிடத் தூரமாக இருப்பதால் மதிவந்தி உருவாக்கிய பளிங்குத் தொலைக் கோள் கருவியின் வழியாக அவளது குழு கண்டு அதே கணக்கிட்டதை வைத்து மற்ற கோள்களுக்குப் பெயர்களையும் உருவாக்கினாள்.

செம் மஞ்சள் நிறத்தில் எல்லா நிலத்திலும் இருந்தவர்கள் கொடுத்த குறிப்பைக் கொண்டு அழல் அல்லது செவ்வாய் என்று பெயரிட்டாள்.

எல்லா இடங்களிலும் ஏதோ ஒரு வகையில் போக்குக் காட்டி மறைபொருளாக காட்சியளிப்பதை உறுதியாகப் புரிந்ததால் புந்தி எனப் பெயரிட்டாள்.

இருப்பதிலேயே தொலைவில் இருந்தாலும் அதன் சட்டகத்தைப் புரிந்து அது அளவில் பெரியதாக இருப்பதை எல்லா பக்கமிருந்தவர்களும் உறுதிப் படுத்தவும், அதற்கு வியா என்றே பொருள் கொண்டாள். பெரியதென்றால் வியா. ஆகவே வியாழனாயிற்று.

நல் வெளிச்சம் பொருந்திய கோள் பார்க்கக் கூசியது. ஆழியில் எல்லா மீன்களை விட தகதகத்து நீந்திச் செல்லும் மீனை வைகுறுமீன் என்பர். அதை ஒத்திருந்ததுபோல் தோன்றியதால் வெள்ளி என்றாகியது.

காணக் கிடைக்கையில் கறுத்து அதில் ஒளியிருக்கிறதா எனத் தெரியாமல் இருண்டு ஒளிர்ந்துகொண்டிருந்த கோள் காரி என்றாள்.

நிலவிலிருந்து கணித்த தாய்களின் நினைவாக நிலவைத் திங்கள் என்றாள். அந்தத் திங்களையே நாள் தொடக்கத்திற்கும் பயன்படுத்தினாள். கதிரவளை ஞாயிறு என்று பொருள் கொடுத்து அவற்றை மறக்காமல் இருக்க ஆண்டுக் கணக்கை எழுதி வைத்ததுபோலத் திங்களில் வரும் வாரத்திற்கு ஏற்றவாறு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புந்தி, வியா, வெள்ளி, காரி என்று திங்களில் பங்கைப் பகுத்தவள் மதிவந்தியே.

எப்பவும் தெரியக்கூடிய இந்தக் கோள்களைத் தாண்டிப் பல இருந்தன. அவற்றை இந்த முதன்மைக் கோள்களின் துணைக் கோள்கள் என்றாள். அவை உதிரும், நகர்ந்து கொண்டே காட்சியளிக்கும்,

காணாமல் போகும் தன்மையுடையது எனத் தனது ஓலையில் குறிப்பெடுத்தாள்.

ஒவ்வொரு தளத்திலும் மதிவந்தியின் ஞானம் அளப்பறியது. எல்லாவற்றையும் கண்டதும் கோகனின் மனம் திக்கு முக்காடியது. தெளிவான வரையறை. திடமான பார்வை. அவள் புதியதொன்றைத் தரவில்லை. சரியாகக் கணித்திருந்த ஆய்வின் நுனி எங்கோ தடம் பிரண்டதைத் தங்களது குழுவின் முயற்சியால் மீண்டும் நிலைக்குத் திருப்பி இருக்கிறாள் என்பதை எல்லாம் அரங்கில் கூடி இருக்கும் தாய்களிடம் சொன்னான்.

"அப்புறம் ஏன் அவ சொன்னத ஆரும் ஏத்துக்கல, கோகா?"

மச்சக்கன்னியின் கேள்விக்கு அவனால் உடனடியாகப் பதில் தர முடியவில்லை. ஆழ்ந்து சிந்தித்தான். அவையில் இருந்த யாவரும் அவனது அமைதி திரும்பட்டும் எனக் காத்திருந்தனர்.

"மதிவந்தி தாய் கோவக்காரங்களா இருந்திருக்கு. அதோட அன்னிய நிலமைக்கு திசமாறிப் போய்ட்ட கணியத்தைத்தான் எல்லாரும் ஆழமா நம்புனாங்க. வெடுக்வெடுக்குன்னு பேசுற மதிவந்தித் தாயோட திமிரும் குறையல. அவளோட திமிர்ப் பேச்சு, அவங்க கண்ட உண்மய காது கொடுத்துக் கேக்க விடாம பண்ணிடுச்சு!"

"சரி கோகா, அன்னிக்குக் காது கொடுத்துக் கேக்கல.. அதுக்காக ஆய்ரம் பேரொட தற்கொல செஞ்சிக்கணுமா..?"

ஏழ் முன்பாலையின் பெருந்தாய் தவிட்டி கேட்ட கேள்வி அங்கிருந்த அனைவரின் மனதிலும் அப்போது ஓடிக் கொண்டிருந்தது தான்.

"இல்ல தாயே, எனக்கு எல்லா வெவரமும் இப்ப தெரியும். மதிவந்தி மன்னிப்புக் கேட்டுருக்காங்க. அவங்க சொல்ல வந்தத காது கொடுத்துக் கேக்கணும்னு கெஞ்சிருக்காங்க. அன்னிக்கிருந்த நெலமையில நம்மோட முதுவச்சிகளுக்கும் இருந்த திமிரும் பிடிப்பும் அவங்கள புறக்கணிச்சிடுச்சி. அதுமட்டுமில்ல. மதிவந்தி தாய் கூட்டத்தொட தற்கொலை செஞ்சிக்கிட்டதுக்கும் காரணியம் இருக்கு. மாந்தக் கூட்டமே சிந்திக்காத ஒண்ண, நாம கூட்டமா செஞ்சம்னா அதுக்கப்புறமாவது அவங்க தேடி வந்து நிலமைய புரிஞ்சிக்கிடட்டும்... கணியத்தத் தெரிஞ்சிக்கிடட்டும். அப்பதான் மாத்துச் சிந்தனையில மாந்தக் கூட்டத்தக் காப்பாத்தலாம்னு நினச்சாங்க. ஒட்டு மொத்த மாந்த

இனத்துக்காகத்தான் அவங்க ஆய்ரம் பேரும் தன்னையே அழிச்சிக்கிட்டாங்க. கொத்தவை எப்படி இருப்பாங்கன்னு நம்மளால சொல்ல முடியல. மாந்த இனத்துக்கு யாரெல்லாம் முன்னாடி நின்னாங்களோ, அவங்க எல்லாம்தான். நாம வணங்குற கொத்தவ யார் யார் எந்த நிலையிலிருந்து அவங்கள அழைக்கிறாங்களோ, அவங்க எண்ணத்துல யார் இருக்காங்களோ, அவங்க கொத்தவையா அவங்களுக்குள்ள வராங்க. அதுபோலத்தான் கொத்தவயா என் மனசுல நிக்கிறாங்க. இந்த மதிவந்தித் தாயும்!''

எல்லாருடைய முகத்திலும் ஓர் அதிர்வு தென்பட்டது. மதிவந்தித் தாயின் முகத்தை தங்களது மனதிற்குள் கொண்டுவர முயன்றார்கள். மதிவந்தியை யாரும் கண்டதில்லை. சில தலைமுறைகளாக அந்தப் பெயரைக்கூட யாரும் உச்சரிக்க மறுத்திருந்தார்கள். குமரிக்கோட்டின் அழிந்த பேருருவத்தை, நாளங்களுக்குள் செலுத்த மறுத்த அவளை எல்லாரும் ஏந்தினார்கள். கொற்றவைகள் உருவமற்றவர்கள். கொற்றவைகள் ஒருபொழுதும் ஒருத்தியல்ல. இப்பேரண்டத்தின் அனைத்துயிரின் கூட்டத்தி. மதிவந்தி என்கிற பெயரை முணு முணுத்தார்கள். அந்த அவையே ஒரு கணம் மதிவந்திக்காக வருந்தி ஏங்கியது. அதைக் கவனித்த கோகனும் அமைதி காத்தான். அவன் நெஞ்சும் மதிவந்திக்காக உருகியது.எல்லாரின் மனங்களிலும் அவர்கள் பெயர்த்த உருவமாக அவர்களுக்குள் கலந்தாள். கோகனே மீண்டும் சொல்லத் துவங்கினான்.

“இதுக்கு முன்ன நமக்குப் பல தகவல் இருக்கு. பொன்பரப்பி ஆழி பத்தடி உயர்ந்திருக்கு. ஏழ் தெங்கம் வரைக்கும் இதே நிலமைதான். அதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா நடக்குற மாற்றங்கள். அதுக்கேத்த மாதிரி நம்மோட கரைகளும் மாறி இருக்கு. ஆழிக் கரையோட குடில்களையும் எப்பவும் தற்காலிகமானதா மட்டும் வச்சி மாத்திக்கிட்டிருக்கோம். அதேபோல மறை பிறையிலயும் முழுப் பிறையிலயும் ஏற்படுற தண்ணீர்ப் பெருக்கமும், பின் ஆழி உள் வாங்குறதும்கூட வளமையா இருக்கிறதுதான். ஆனா, இது அப்படியில்ல. தட்டு நகர்வது கதிரவளும் நிலவும் ஏற்படுத்துற தாக்கம். கோள்கள் தங்களது கதிர்களோட உணர்வுகளால இயங்குது. விளக்கமா சொல்லணும்னா நாம இருக்கிறது ஒரு கோள்தான். அது மாதிரிதான் மற்ற அண்டங்களும். ஒவ்வொன்னுக்கும் இடையில கோடிக்கணக்கான கதிர்கள். கதிரவளிடமிருந்து நம்மை நோக்கி வரும் வெளிச்சத்தைக் கதிர் என்று புரிந்துகொண்டால், நிலவிலிருந்து நமக்குக் கிடைப்பது கதிரின்

மூலம்தான் பல கோடிக்கணக்கான அலைகளைப்போலக் கதிர்கள் நம்மீது ஒளியைப் பாய்ச்சுகின்றன. அப்படித்தான் மதிவந்தி கண்டு பிடித்த நமது கண்ணுக்குத் தெரியாத, நாம் ஆராயாத கோள்களின் சுழற்சி மட்டும் கால அளவையால் நமது நிலத்திலும் மாற்றம் உண்டாகும். அதேபோல நமது மாற்றத்தில் அந்தக் கோள்களிலும் மாற்றம் உண்டாகும். அப்படி இந்த மாற்றம் நடக்கும்போதெல்லாம் நம்ம குமரிக்கோட்டில் நமக்குக் கீழ இருக்கிற மண்ணு, மண்ணுக்குக் கீழ பாறை, அதுக்குக் கீழ தண்ணி, அதுக்கடியில இருக்கிற மண்ணு, பாறைன்னு அது தன்னோட இறுக்கத்துல இருந்து விடுபட்டு ஒன்னுக்குள்ள ஒன்னு மோதுது; பிரளுது. அதனால் பிளவும் ஏற்படுது. கீழ கொந்தளிச்சா மேல இருக்கிற நாம திசைக் கொண்ணா தூக்கி எறியப்படுவோம். புதைஞ்சு போவோம். ஆழி பெருகி நம்மள மூழ்கடிக்கும். ஆழியோட தரை மேல நிக்கும். கொத்தவை வெறியாட்டு முடிஞ்சி இருபதிலிருந்து முப்பது நாளுக்குள்ள இந்த நிலத்துல பெரிய வெடிப்பு உண்டாகப் போகுது. அது இந்த நெலத்தையே புரட்டிப் போடலாம். ஒருவேள மதிவந்தி தாயோட கணியம் பொய்ச்சிதுன்னாலும் தப்பில்ல. முன் விழிப்பா இருக்கலாமே. ஆனா, அவங்க சொன்னது உண்மன்னு எம் மனசு சொல்லுது. அதனால அதில இருந்து எப்படி மாந்த இனத்தக் காப்பத்தணும்னு முடிவு பண்ணுங்க. இத கொத்தவ வெறியாட்டுல சொல்லிருப்பேன். ஆனா, நேரம் கொறைவா இருக்கு. தென்னன்கிட்ட இதச் சொன்னதும் தென்னன்தான் தெங்கப்பட்டினத்தில் கூடுறதுதான் சரின்னு சொல்ல எல்லாரையும் ஒண்ணா கூட்டினோம்.”

அவர்களால் எதுவும் பேச முடியவில்லை. பெருந் துயரின் நீளத்தை அளக்க முடியாமல் குமைந்தார்கள். தென்னனை நோக்கி எல்லாரின் பார்வையும் ஒரு முகமாகத் திரும்பியது. தென்னன் என்ன செய்வதெனச் சொல்லத் தொடங்கினான்.

17 துலைத் திங்கள்முப்பதாம் திகதி

நல்லனின் மனதில் கொற்றவை வெறியாட்டு என்பதெல்லாம் என்னவென்றே தெரியாத அல்லது மறந்துபோன நினைவில் அவன் புழங்கிக்கொண்டிருந்தான் . அரை மந்திபோலப் பித்து நிலையில் இருந்தான். அவன் எவ்வளவோ போராடியும் குணத்தியிடம் இருந்து பிரிவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

குணத்தி கடிவாளம் இல்லாத பெருயாளியைப் போன்றவள். மூர்க்கமாக மண்ணுக்குள் மூக்கை நுழைத்து உடலே மூடிப் போக ஊடுருவும் பெருயாளியின் குணம் அப்படியே இருந்தது.

ஏழ் தெங்க நாடுகளில் ஒன்றான கொம்பூதி நாட்டின் மேலூரைச் சேர்ந்தவள். அவளின் ஓட்டம் கலைத் திண்மம் ஒன்றிற்குள் நுழைந்தால் அதையொட்டியே விரியும் பெருங் கனவெளியில் தனித்து நடப்பாள். மலைகளை வனங்களை மலர்களைச் செடி கொடிகளை மரங்களை நேசிப்பவளாக அவளிருந்தாள். ஒரு மரம் எத்தனையாவது நாளில் விதை விடுகிறது. அவ்விதை எத்தனையாவது திங்கள் வரை தனது உயிர்த்திடத்தைத் தக்க வைத்துக்கொள்கிறது. அவ்விதை எப்போது செடியாகிறது. செடியிலிருந்து மரமாவது குறித்த தேடலைச் சிந்தித்தவளாக, மாந்த உடலைப்போலவே செடிகளும் கொடிகளும் கொண்டிருந்த உடல் நரம்புகளை ஆராய முயன்றாள். தன்னையே ஒரு விதையாகக் கிளைவிடும் இலையாகத் தண்டெய்தும் உடலாகக் கை விரிந்த கிளையாக ஒளியிலும் மண்ணின் ஈரத்திலும் காற்றிலும் தன் உணவை ஏற்கும் ஓர் உயிரியாகக் கற்பனை செய்துகொண்டாள்.

அதுவே அவளை நல்லனிடமிருந்து விலக்கியது. இருவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள்தான். நல்லன் எள் பயிரிடுவதில் தேர்ந்தவன்.

நல்லன் நிலத்தை உழுது பயிரிடுவதில் சில மாற்றங்களைக் கொண்டிருந்தவன். நிலத்தைக் கைகளால் கொத்திப் பயிரிடுவதைவிட இன்னும் ஆழமாக நிலத்தைக் கீறி மண்ணைப் புரட்டிப் போடுவதின் மூலம் மண் இறுகல் ஒரு பருவம் வரை தாங்கி உலர் மண்ணாக நீடிக்கும். தூவல் மண்ணில் தெளிக்கும் விதை மூன்றாவது நாளில் இலை விட்டு

வளர்வதைப் புரிந்துகொண்டவன். அதனால் மண்ணை ஆழக் கீறக் கல் ஏரை பயன்படுத்தினான். பின் பக்கம் அழுந்திப் பிடிக்க ஏரின் முன் நுகத்தை மாந்தர்களைக் கொண்டு இழுத்தான். கல் ஏரில் நிலம் கிழிக்கும் கல்லோடு இன்னோரு கீறும் கூரிய கல்லை இணைத்து இன்னும் ஆழம் பார்த்தான். விளைச்சல் வழக்கத்தைவிடக் கூடுதலாக இருந்தது. கொம்பூதி நாடுகளில் அதிக விளைச்சல் காட்டியது நல்லனின் குழுதான். அதனாலேயே குணத்திக்கு நல்லனைப் பிடித்து போனது.

அது பிடித்தம்தான். அவளுக்குள் மரமாதலைத் தவிர வேறு எதுவும் பிடிப்பில்லை. குணத்தியின் தாய்க்கு நீண்ட மரமாகிக் பூக்காமல் கிடக்கும் மகள் குணத்திக்கு நல்லனையாவது பிடித்துப் போனதே என்பதால் விரைவாக அரங்கில் திகதி குறித்து, புரிய நாள் கொடுத்து, மணம் முடித்து வைத்தாள். புரிதலைக் கொண்டு வர இருவரும் முயன்று இணைவிற்குப் பிறகும் கூடத் தனித்துக் கிடந்தார்கள்.

ஒரு மனம் வெந்த நாளில் அவனை விட்டு விலகினாள். விலகலும் ஊர் கூடிப் பொதுவில் பேசிப் பிரிவதுதான். இருவருக்காக இருவரின் சார்பில் பேசிய மாந்தர்களால் எதுவும் பிணைக்க முடியவில்லை. நல்லன் எவ்வளவோ முயன்றும் அவள் மறுத்துவிட்டாள்.

நல்லன் குணத்தியை முழுதாக உள்ளே வாங்கி இருந்தான். வெளித் துப்பவோ மாற்றுத் தேடவோ முடியாத மன அலைவில் அவள் போன காடுகளுக்குள் சுற்றித் திரிந்தான். பித்தாகித் தனக்குத் தானே முணுத்துக்கொண்டான்.

“ஏ... செஞ்சந்தன மரமே... உன்னபோலவே அவ மனசையும் கல்லாக்கிட்டியே.. நான் எந்தக் கோடாரியாலயும் பொளக்க முடியாத இருளுக்குள்ள மூழ்கிட்டியே.. உன் நாத்தம்போல அவ நாத்தமும் என்ன இழுத்து போவுதே.. என்ன செய்ய..”

நீண்டு வளர்ந்து விசும்பின் கருமேகத்தைத் துடைத்து வெள்ளையடித்துக் கொண்டிருந்த செஞ் சந்தனம் இவனது பித்துக் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாரில்லை. பெரும் பாறையொன்றின் உச்சியில் நின்று சுற்றிலும் கவனித்துப் பார்த்தான்.

காட்டின் பறவையைப்போலத் திரியும் குணத்தியை நல்லனின் கண்களால் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் கண்களுக்கு வேறு ஒன்று தட்டுப்பட்டது. முதலில் அவன் கூட்டமாகச் செல்லும் அவர்களைப் பற்றிக் குழம்பினான். துலைத் திங்கள் என்ற நினைவுகள் கூட அற்றுப் போயிருந்தது. எங்கோ ஒரு மூலையில் கிடந்த கொற்றவையை

நினைத்தான். அதன் பின் கொற்றவை வெறியாட்டுக்குச் செல்பவர்கள் என்று கணக்கிட்டது அவனது வெள்ளந்தி மனது.

அவன் நினைவெல்லாம் குணத்தியே நிறைந்திருந்தாள். அவளின் மனம் ஊறும் திசையில் தானும் நடக்க உறுதி பூண்டிருந்தான். அவளின் மனதைப் படித்து அவளுக்கேற்றாற்போலத் தன்னையும் தகவமைக்கக் துடித்துக்கொண்டிருந்தன அவனது எண்ணங்கள். அவன் பல இடங்களுக்கு அலைந்து மீண்டும் அப்பாறைக்கே வந்து சேர்வதற்குள் மாலையாகிப் போகும். இப்பாறையை அவன் ஒரு தளமாகப் பாவித்தான்.

குணத்திக்கு இப்பாறை தெரியும். இப்பாறையில் பெரும் பனி போர்த்திய பொழுதெல்லாம் அவளது கதகதப்பு அவனுக்கு வாய்த்திருக்கிறது. அதனால் எப்படியும் அவள் இவனது நினைவு வந்தால் தேடி வருவாள். தனக்குப் பீடித்திருக்கும் பசலை நோயை இக்காட்டில் இருக்கும் மிருகங்களும் பறவைகளும் ஊரும் உயிர்களும் தாவரங்களும் அவளிடம் தூது சொல்லி குணத்தியின் பிடிவாதத்தைத் தகர்த்துத் தன்னிடம் அழைத்து வரும் என மலை போல நம்பினான். காட்டுத் தாவரங்களின் கனிகளை மட்டும் உண்டு உடல் நலிந்து கிடந்தாலும் இப்பாறையை விட்டு அவன் போகவே இல்லை.

பாறையைத் தனது குடிலாகக் கொள்ளத் தொடங்கினான். தனக்குத் தெரிந்த மொழியில் பாறையில் அவளின் முகம் வரைந்து பார்த்துக் கொண்டிருப்பான்.

காட்டின் நடுவனாக நின்றிருக்கும் அப்பாறையின் மேல் தளத்திற்கு மிருகங்கள் வருவதில்லை. அவ்வப்போது வந்தமரும் கூகைகளும் மைனாக்களும் அன்றில்களும் அவனது கதைகளைக் கேட்டபடி அமர்ந்திருக்கும். அவனது கதை என்பது குணத்தி மீது அவன் கொண்டிருக்கும் காதல்தான். அவனது காதல் நிரம்பிய சொற்குவியல்களைக் கேட்ட பறவைகளும் தங்களின் துணையை தேடிச் செல்லும். எல்லாப் பறவைகளைவிட அன்றில்கள் தனிக் குணம் கொண்டவை. உலகில் இருக்கும் அனைத்து உயிரிகளிடமிருந்தும் கிடைக்கும் உவகையை அப்படியே எடுத்துச் செல்லும். கூட்டில் அமர்ந்ததும் ஆணும் பெண்ணுமாக அவர்கள் பார்த்ததை, கேட்டதையெல்லாம் பகிர்ந்து ஊடாடும் அழகியல் நிரம்பப் பெற்றவை அவை. அன்றில்களே அவனோடு தங்களின் இணையரோடு பகிர்ந்த காதலை அவனிடம் சொல்லும் அளவுக்கு அவன் காட்டில் பறவையானான். அல்லது பறவைகளின் உற்றனானான். அவனது கதைகளைக் கேட்காத

பறவைகளே இக்காட்டில் இல்லை. எங்கோ நீண்ட தூரம் பறந்து போக நினைக்கும் பறவைகள் கூட அவனிடம் கொஞ்ச நேரம் அமர்ந்து இளைப்பாறிவிட்டுச் செல்லும் அளவுக்கு அவனோடு பறவைகளுக்கு இணக்கமிருந்தது. அல்லது பறவைகளின் மொழி அறிந்தவனாக இருக்கக் கூடும்.

ஆகவே அவர்களை முதலில் சரியாகக் கவனிக்கவில்லை. முதலில் ஆனைக் கூட்டங்கள் ஓய்வெடுக்கும் என்றெண்ணினான். நேரம் செல்லச்செல்லதான் அது காலையில், தான் கண்ட அதே மாந்தர்கள் என்பது புரிந்தது.

தொடர்ந்து வைகறையிலிருந்து ஒரே இடத்தில் அவர்கள் முகாமிட்டிருந்தது அவனுக்கு வியப்பாக இருந்தது. வேட்டைக்குத் தனித் தனியாகச் சிறு கூட்டமாகப் போகும் மரபு குடிகளிடம் இல்லை. கிளம்பினால் மொத்த ஊரும்தான் வேட்டைக்குக் கிளம்பும். கிளம்பினாலும் இப்படி ஒரே இடத்தில் தங்குவதில்லை. அவர்கள் தங்கியதன் மூலம் வெறியாட்டுக்குக் கிளம்பியவர்கள் இல்லை என்கிற முடிவுக்கும் வந்திருந்தான். அக்கூட்டத்தில் மாந்தரிகளே இல்லை. அதுவே அவனுக்கு வியப்பாகவும் கூர்ந்து கவனித்ததில் அவர்களின் முகங்கள் இயல்புக்குரியதாகவும் இல்லையென்று புரிந்துகொண்டான். அவர்களை அணுகிக் கேட்டு விடலாம் எனப் பாறையிலிருந்து இறங்கத் தொடங்கியவனுக்கு நெருங்க நெருங்க அது சரியானதாகப் படவில்லை.

அவர்களிடம் அறுபத்தியெட்டு நாடுகள் வேட்டைக்கோ, அல்லது நில வள முயற்சிக்கோ உருவாக்கி வைத்திருப்பது போன்ற கருவிகள் எதுவும் வைத்திருக்கவில்லை. அவன் இதுவரை யாரும் பார்க்காத கருவிகளை அவர்கள் வைத்திருந்ததைக் கவனித்தான்.

குணத்தியாக இருந்தால் நேரடியாகச் சென்று கேட்டிருப்பாள். முறையற்றவர்கள் என்றால் பதிலடி கொடுக்கத் தயங்க மாட்டாள். அத்தகைய சுபாவமற்றவனாக மென்மையை முறுக்கியூற்றிய இள நெஞ்சினன்தான் நல்லன். சூதுவாதை அறியாத குழந்தை போன்றவனாக இருந்தான். அதனால் அதற்கு மேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. ஊருக்குள் சென்று ஊர்த் தாயிடம் தகவலைச் சொல்ல முடிவெடுத்து காட்டின் ஊடறுத்துச் சென்ற சுனையின் வழித் தடத்தில் வேகமாகப் பயணித்தான்.

முதன் முதலாக அவனது நடையில் புதிய வேகமிருந்தது. கிட்டத் தட்ட ஓட்டத்திற்கு முன்பான நடை அது. கிழித்த முட்களை திரும்பிப்

பார்க்கும் மனநிலைகூட இல்லாமல் நடந்தான். ஊரின் மைய ஒலியாகத் தகதகத்துக் கொண்டிருந்த கல் தூண் விளக்கை திசையாக்கிக் கொண்டு நடந்தான். ஊரை விட்டு வந்து சில திங்களாகி இருந்தன. மாற்று இணைவிற்கு இவனது தாய் மஞ்சனவிழி எவ்வளவோ முயன்றும் மறுத்துவிட்டான். ஒரு வேளை மாற்று இணைவைக் குணத்தி செய்திருந்தால் இவன் மனம் மாறி இருக்குமோ என்னவோ.

ஊர் வடிவம் வட்டமாக இருந்தது. ஊரின் முன் பக்கத்தில் இருந்த கொட்டடியில் கட்டப்பட்டிருந்த பெருயாளிகளும் மகரயாளிகளும் அவனது அரவம் கேட்டு நிமிர்ந்து பார்த்தன. பெருயாளிகள் மூக்கின் முன்பு வெடித்திருந்த மயிர்களைக் கொண்டு அவனது வாடையைப் பிடிக்க முயன்றுகொண்டிருந்தன. கொட்டடியைக் கடந்து வட்டமாகச் சுற்றி அரண்போலிருந்த தடுப்புச் சுவரில் மரக் கதவிருக்கும் பகுதிக்கு வந்து கதவைத் திறந்தான். உள்ளே குடில்களும் வட்டமாக நாணல் தண்டுகளால் கூரை வேய்ந்த அமைப்பிலிருந்தன. ஏழ் தெங்க நாடுகளின் ஆழிக் கரையோரக் குடில்களைத் தவிர அனைத்துக் குடில்களின் அமைப்பும் அப்படித்தானிருந்தன. ஏழ் தெங்க நாடுகளில் ஒவ்வொரு வீட்டிற்கு அருகேயும் ஓராள் ஆழத்தில் வெட்டப்பட்டு மண் சுடு கற்களால் ஆழம் வரைக்கும் வட்டமாகக் கட்டப்பட்ட தனக்குத் தானே நீர் ஊறிக்கொள்ளும் கிணற்று அமைப்புகள் இருந்தன. பெருத்த பச்சைச் சுரையைக் கதிரவளின் ஒளியில் காய வைத்து அதன் உள்ளிருக்கும் சத்தையும் விதைகளையும் சுரண்டிய பிறகு குடுவையாக மாற்றி உருளையில் கயிறு கட்டி நீர் இறைத்துக் கொள்ள ஏதுவாக அமைத்திருந்தார்கள்.

வட்ட அமைப்பில் நடுவாந்திரமிருந்த ஊர்த் தாயின் வீட்டிற்குப் புடனியில் கால் தெறிக்க ஓடினான். ஒன்பது அடியில் மூச்சிரைக்க ஓடி வந்த நல்லனைக் கண்டு ஊர்க் காவல் அலங்குகள் முறைத்துக்கொண்டு நின்றன. அவனை அண்டாமல் சற்றுத் தள்ளி அவனைக் கவனித்தபடியே வந்தன. அலங்குகளுக்கு அவனது நாற்றம் பிடிபடவில்லை. ஊரில் இருக்கும் யாவரின் நாற்றமும் அறிந்த அலங்குகளால் நல்லனின் நாற்றத்தைப் பொருத்திப் பார்க்க முடியவில்லை. பல நாள்களாகக் காட்டிற்குள் கிடந்ததில் நல்லனின் உடல் நாற்றம் ஊரின் நாற்றத்தோடு பொருந்தவில்லை. ஆனால் மாந்தன் என்பதால் அமைதி காத்து அலங்குகள் அவனைத் தொடர்ந்தன.

அலங்குகளின் சிறிய முனகல் கேட்டு ஊர்த் தாய் எளினி குடிலுக்குள் இருந்த மூங்கில் குடுவை விளக்கை ஏற்றி அதைப் பிடித்தபடி

வெளியே வந்தாள்.

பத்தடிக்கு மேலிருக்கும் உயரம் அவளுடையது. எண்பதுகளைக் கடந்து நரை பிடிக்காத கருங்கூந்தல்காரி அவள். வட்டமான முகத்தில் அழுந்தச் சிவந்த மையை அகண்ட நெத்தியில் வைத்திருந்தாள். கையில் உறுதியான மாம்போத்துக் கவட்டை.

முதலில் நல்லனின் முகம் பிடிபடவில்லை. இருளில் மூங்கில் விளக்கை அவனது முகத்திற்கு அருகில் தூக்கிப் பிடித்துப் பார்த்தாள். முகம் முழுவதும் வியர்வை வழிந்தோட நின்றிருந்த நல்லனைக் கண்டதும் அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

நல்லன் மீண்டும் ஊருக்குள் திரும்பியதில் அவளது முகம் மூங்கில் விளக்கில் ஒளிர்ந்த தீயைவிட அதிகமாக மலர்ந்தது. அவனின் வழியும் வியர்வைகளோடு தன்னோடு ஆரத் தழுவினான். தழுவலில் அவனது உடல் நடுங்குவதும் ஏதோ சொல்ல வருவதையும் அறிந்துகொண்டாள். உடல் தழுவலில் இருந்து அவனை நிமிர்த்திக் கண்ணோடு பார்த்தாள்.

“நல்லா.. என்ன நேர்ந்தது குணத்திய பார்த்தியா.. ”

“இல்ல.. காட்டுக்குள்ள காட்டுக்குள்ள வேத்தாளுங்க கூட்டமா தெம்படுறாங்க.. அவங்க உருவம் செரியில்ல.. நாம பார்க்காத கருவியெல்லாம் வச்சிருக்காங்க.. ஒரே இடத்துல எதுக்காகவோ காத்துட்டு இருக்க மாதிரி தெரியுது..”

ஊர்த் தாய் எளினிக்கு ஒன்றும் பிடபடவில்லை. யாரோ கொஞ்சம் பேர் கூட்டமாக எதற்கோ வந்திருக்கலாம். நல்லன் வேறு மனவசப் பட்டவனாகத் திரிகிறான். அவன் சொல்வதைக் காது கொடுப்பது சரியான முடிவாக இருக்குமாவென அலைக்கழிந்தாள். காட்டிற்குள் புகுந்து ஊரைத் துறந்தவன். ஊருக்காக ஓடி வந்திருக்கிறான். அதனால் ஒரு பார்வையை ஓட்டி விடுவது நல்லது என முடிவெடுத்தாள்.

அவளது இணையன் வேனுரில் இருக்கிறான். எளினி தன்னோடு தனது குடிலில் இருந்த இரண்டு மகள்களையும் மூன்று மகன்களையும் அழைத்துக்கொண்டாள். பெயரன் பெயர்த்திகளையும் எள்ளுப் பெயர்த்திகளையும் தூக்கத்திலிருந்து எழும்பாமல் கவனத்தோடு இயங்கினாள். அவ்வனத்திற்குள் செல்லத் தேவையான கருவிகளை உடனடியாகச் சேகரித்தார்கள் அவர்கள். நல்லன் அவர்களுக்கு வழி காட்டினான்.

இருளில் காட்டின் மரங்களின் கிளைகள் அசந்து தூங்கிக்கொண்டிருந்தன. இலைகள் மட்டும் விழித்தபடி மரங்களுக்கு தேவையான உணவைக் காற்றில் ஈர்த்துக் கொண்டிருந்தன. இரவுண்ணிப் பறவைகள்கூடத் தங்களது வேட்டையை முடித்துக் கொண்டு இருப்பிடத்திற்குத் திரும்பியிருந்தன. நல்லனுக்குக் காட்டின் பாதை இருளிலும் பழகியிருந்தது. அவன் முன்னால் நடக்க எளினி தனது குடும்பத்தோடு பின்னால் தொடர்ந்தாள்.

இரவின் வெம்மை உடலில் சில்லென ஊடுருவ அவர்கள் அப்பெரும் பாறையின் அடிவாரத்தைத் தொட்டிருந்தார்கள். அடிவாரத்தை நெருங்கும் வேளையில்தான் அவர்களுக்குக் காட்டிற்குள் புதிய ஒளி சன்னமாகப் படர்ந்திருப்பது புரிந்தது. நல்லன் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான். அறுபத்தியெட்டு நாடுகளிலிருந்து அவர்கள் யாராக இருக்கக் கூடும் என எண்ணியபடியே காட்டு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த கொடியொன்றை பற்றி ஏறிக்கொண்டிருந்தாள் எளினி.

எழுபதிற்கு மேல் தாண்டியவள்தான். ஆனால் வலிமையோ பதினாறில் நிற்கிறது. எல்லாரையும் தரையில் நிறுத்திவிட்டுச் சரசரவென ஏறிக்கொண்டிருந்தாள். ஒரு மரக் கிளையின் ஊடாகப் பறவையைப்போல நடந்தாள். உறங்கிக் கொண்டிருந்த இலெமுர்கள் மெல்லக் கண் விழித்து அவளது நடையை வியந்து பார்த்தபடி எழும்பாமல் கிடந்தன. நானூறுக்கும் குறையாத பெருங் கூட்டம்.

எட்டுத் திசையிலும் ஆங்காங்கே காவலுக்கு ஒருவர் நின்றிருந்தனர். அவர்களின் கரங்களில் இருந்த கருவிகள் வினையாக இருந்தன. பொதுவாக உழவுக் கருவிகள், வேட்டைக் கருவிகள் போலில்லை அவை. பெருயாளிகளின் மண்டை நடுவாந்திரமிருந்தது. கீழும் மேலும் என ஆளி மண்டைக்கு இடையில் நீண்டிருந்த பற்களைப் போன்ற இரு கூர் முனைகளைக் கொண்டிருந்தது பல கருவிகளின் தோற்றம். மண்டையைப் பிடித்தபடி ஒருவன் நின்றிருந்தான். வலப் பக்கமிருந்து இன்னொருவன் சற்றொப்ப அதே போன்ற கருவியைக் கையில் பிடித்தபடி நடந்து அவனிடம் வந்து நின்றான்.

“இன்னும் எத்தன நாள் காத்திருக்கனும்”

“டே.. எனக்கும் தெரியல.. நம்ம கூட்டத் தலைவர் எப்ப சொல்றாரோ அப்ப..”

“இந்தக் காட்டுக்குள்ளயே இருந்தா எனக்கு இன்னும் வெறி அதிகமாயிடும்.. நாளைக்கு ஊருக்குள்ள போயி ஏதாவது ஒன்ன தேத்துவமா.. காஞ்சி கெடக்குது உடம்பு.. இந்த இடத்துக்கு வரதுக்கே எத்தன நாள் ஆச்சுன்னு தெரியல.. என்னிக்கு உள்ள புகுந்து அடிக்க போறோம்”

“வேகப்படாத.. நம்ம உறுதியா நிப்பம்னு தெரிஞ்சுதான்.. நம்மள எடுத்துருக்காங்க.. பல ஆண்டா போட்ட திட்டம்.. கொஞ்சம் தப்பானாலும் நம்ம இனமே அழிஞ்சி பூடும்.. காத்திரு..”

“புரியுதுடா மூளி.. ”

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு அவர்களுக்கு மேலே நின்றிருந்த எளினிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவர்கள் யாராக இருக்கக் கூடும். ஏன் நமது ஊரைத் தாக்க நினைக்கிறார்கள்.

மூன்று திங்களுக்கு முன்பாக வட எல்லை ஊரான செம்பூரிலிருந்து ஒரு பிரச்சனை கிளைவிட்டது. செம்பூரின் மதியன் தனது ஊரைச் சேர்ந்த ஒரு மாந்தரியின் மீது காதல் வயப்பட்டுவிட்டான். அம்மங்கை வெள்ளந்திக்கு அவனைப் பிடிக்கவில்லை. பிடிக்காதபோது ஏறெடுக்க முடியாது என அவள் மறுத்த பிறகும் அவன் விடுவதாக இல்லை. அது சிறிய சிக்கலாக இருந்த பொழுதும் தலைநகரத் தாய் தலையிடும் அளவுக்கு வளர்ந்தது. ஏழ் தெங்கத் தலைமைத் தாய் தவிட்டி வரைக்கும் இச்சிக்கல் செல்ல அவன் ஒரு முடிவு செய்தான். ஏழ் தெங்கத்தின் அனைத்துத் தலைமைகளுக்கும் தேடித் தேடி சென்று தனக்கு வெள்ளந்தி வேண்டுமென்று முறையிட்டான்.

செம்பூர் இளவட்ட மாந்தர்களும் அவனுக்குத் துணையாக நின்றனர். அதனால் ஏழ் தெங்கத் தலைநகரத் தாய்களும் சிற்றூர் பேரூர்த் தாய்களும் கூடி விசாரனணையைத் தொடங்கினர். மதியனும் வெள்ளந்தியும் அரங்கில் நிறுத்தப்பட்டுத் தாய்களின் முன்பு பகிரப்பட்டது.

“என்ன பல நாளா சுத்தி வந்தாலும்.. எனக்கு ஏன் பிடிக்கலன்னு தெரியல..”

வெள்ளந்தியின் வார்த்தைகளில் கடுமையில்லை. அன்பிருந்தது. அவனைப் புறக்கணிக்க நினைக்கவில்லை. நீண்ட கால வாழ்க்கைக்குப் புறத் தோற்றங்கள் மட்டுமே போதுமானதில்லை என்றே அவள் உறுதியாக இருந்தாள்.

“அவள் வேறு யாரையும் நெனைக்காதப்ப என்னை ஏன் மறுக்கிறா.. அவளுக்காக எப்படி வேண்ணாலும் நான் மாறிக்குவேன்”

ஏழ் தெங்கத்தின் தாய் தவிட்டி எல்லாவற்றையும் புரிந்து கொண்டாள். தனது உறுதியான வார்த்தையைச் சொன்னாள்.

“வெள்ளந்திக்கு விருப்பமில்லைனா நாம ஊட்ட முடியாது. எத்தனக் கூப்பாடு போட்டாலும் அத மாத்த முடியாது. எல்லாரும் கேட்டுக்கங்க. இந்த அண்டத்து மாந்த இனத்தைப் பொறுத்தவரைக்கும் பெண்தான் முதல்ல. ஒரு ஆணைத் தாங்கிப் பெத்துக் கொடுக்கிற இடத்திலயும் அவதான் இருக்கிறா மத்த மிருகங்க பெண்ணோட உறவாடிட்டு அதுங்க போயிடுது. பின்னாடி அவங்க கொழந்தைங்க கிட்டயும் உறவாடுது. இது பொதுவா விலங்கினத்துல நடக்குறது. ஆரம்பத்துல இதுக்கான கட்டுப்பாடு இல்லாம இருந்தோம். மாந்த இனம் அறிவ உண்டாக்கினதும் மாந்த இனத்தின் தலைபோற பிரச்சனை... உறவுதான்! சிக்கலான உறவு... இரு பால் உறவு... பலர் பால் உறவு... இதைப் பத்தியெல்லாம் பேசி அழகான முடிவுக்கு வந்ததுதான். ஒரு ஆண்... ஒரு பெண்... கூடிவாழும்போது விருப்பமில்லைன்னா பிரிஞ்சிடலாம். யாரும் யாரையும் கட்டாயப்படுத்தி வாழவைக்க முடியாது. அதனால வெள்ளந்தி அவ பாட்டுக்கு இருக்கட்டும். செம்பூர்க்காரனுங்க மதியனுக்குப் புரியற மாதிரி சொல்லுங்க. வெள்ளந்திக்காக எல்லாமே மாறுறேன்னு சொல்லுற மதியனால தனக்கு இன்னொரு இணையக் கண்டுபிடிக்கவும் முடியும். அதனால வெள்ளந்தி பாட்டுக்கு இருக்கட்டும். அவளுக்குப் பிடிச்சவன தேர்வு பண்றதோ, இல்ல, காலம் முழுக்க இணையில்லாம வாழுறதோ அவ முடிவு. நாம யாரும் தூண்டக்கூடாது!”

அதோடு முடிந்து போனதாகத் தொடங்கிய முடக்கம் செம்பூருக்கும் கரூருக்குமாகச் சிறு சிறு சண்டைகளைக் கொண்டு வந்து சேர்த்துக்கொண்டிருக்கிறது. செம்பூரின் ஊர்த் தலைவியின் தம்பியும் ஊர்க் கட்டுப் பாட்டைக் காத்து வந்தவனுமான தாய் மாமன் மதியன் மனம் கிறங்கி உள்ளூரில் சில பல சிக்கலை உருவாக்க, அது சார்ந்து ஏதோ ஒன்று சிக்கலாக மேலூரில் செம்பூர் மாந்தரிகளும் மாந்தர்களுக்கும் உரசல் நீடிக்கிறது.

அதற்காகவா ஓர் ஊரையே தாக்கச் செம்பூர் மாந்தர்கள் முயல்வார்கள் எனச் சிந்தித்தாள் எளினி. கிளையும் இலையும் ஆடாமலே நகர்தல் தெரியாமலே ஒரு குரல் மட்டும் காதுக்குள் கேட்க, சட்டெனத் திரும்பினாள் எளினி.

குணத்தி நின்றிருந்தாள். எளினியால் நம்பவே முடியவில்லை. இந்நேரத்தில் இவள் எங்கே. இக்காட்டிற்குள் எப்படிக் கிடக்கிறாள் என வியந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

“இவங்க ஊர அழிக்க வந்தவங்க. செம்பூர்க்காரங்க இல்ல. மூர்க்கங்குடி!”

“மூர்க்கங்குடியா..?”

சட்டென எளினியின் வாயைப் பொத்தினாள் குணத்தி.

“இது பெரிசா திட்டம் போட்ட மாதிரி தெரியுது. அவங்க வந்த தடத்துல இருந்து கவனிச்சிட்டுதான் வரேன். நல்லன் செஞ்ச வேலையையும் பாத்தேன்... நீ வருவன்னு நினச்சேன்.”

“இப்ப என்ன செய்யிறது..?”

“அதோ... அந்தக் கூட்டத்துல தனியா படுத்திருக்கானே, அவென் பேரு சிமன். அவந்தான் தலைவன் அவன் சொல்றதுக்காகக் காத்திருக்காங்க. காலையில ஊரத் திரட்டி இந்தக் கூட்டத்த கைப்பத்துங்க. அவங்க வாயில இருந்து எதுக்கு வந்திருக்காங்கன்னு கேளுங்க. நான் அதுக்குள்ள எல்லா நாட்டுக்கும் தகவல் அனுப்புறேன். மத்த ஊருலயும் அவங்க பூந்திருக்கலாம்!”

எளினி வியப்பாகக் குணத்தியைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே குணத்தியின் கண்கள் உடல் மெலிந்து அந்தக் கூட்டத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் நல்லனின் மீது கனிவோடு நிலைத்தது. நல்லனும் அவள் கண்களின் ஒளியை முதல்முதலாகக் கண்டுகொண்டான்.

18 நளித் திங்கள் மூன்றாம் திகதி

நல்லன நிகழ வேண்டிய நிலையில் அல்லனவும் அலைந்து கொண்டிருந்தன. ஏழ் குணக்கரை வந்ததில் இருந்து ஒருநாள் முழுமையாகக் கடந்துவிட்டது. யாரிடமும் நிலையான தூக்கமில்லை. கண்கள் எரிந்து சிவந்து கிடந்தன. குமரிக்கோட்டு மாந்தர்கள் யாவருக்கும் இதைச் சொல்வதா வேண்டாமா..? எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்றே புரியவில்லை. அரங்கத்திற்கு வெளியே வந்து வானை உற்றுப் பார்த்தாள் அஞ்சாவண்ணி. எந்தச் சலனமும் இல்லாமல் வெள்ளிப் பூத்துக்கிடந்தது.

கோகனின் கணியத்தை மதிவந்தியின் வரைவை நம்புவதா வேண்டாமா என்பதைத் தாண்டி அது மாந்த இனத்தின் இறுதி வாய்ப்பு. ஒருவேளை நடக்காமல் போனால் நல்லதுதான். ஆனால் கோகன் சொன்னதுபோல நடந்துவிட்டால், இப்பூவுலகின் அனைத்து உயிரிகளுக்குமான நேர்ச்சியெனில், நமக்குக் கிடைத்திருக்கும் இந்தக் கணியம் உண்மையெனில், தெரிந்தே நாம் அதற்கு மாற்றுத் தேடாவிடில் அது தவறென அனைவரும் நினைத்தனர். இந்த நிலம் நேராகப் பிளக்குமா... குறுக்காகப் பிளக்குமா... துண்டு துண்டாக உடையுமா... அல்லது நிலத்தின் மீது ஆழி பெருகி மூழ்கடிக்குமா... நிலத்தின் அடியில் பூக்கும் தாவர நெருப்புக் குழம்புகள் மேலெழுந்து கொட்டி அழிக்குமா... விசும்பிலிருந்து எரிகற்கள் கொட்டித்தீர்க்குமா... என முழுமையாகக் கணிக்க முடியவில்லை அவர்களால்.

ஏழ் குணக்கரைக்குக் கணியர் காந்தளி தாயும் இன்னும் பல நூறு கணியர்களும் வந்து சேர்ந்திருந்தனர். கணிய முயற்சியில் அறுபத்தியெட்டு நாடுகளில் இருந்த அனைத்துக் கணியர்களுக்கும் அழைப்பு நேற்றே விடுக்கப்பட்டிருந்தது. ஏழ் குறும்பனைக்கு அனைவரும் வந்துவிட்டிருந்தபடியால் அங்கிருந்து விரைவாகக் கிளம்பி வந்துவிட்டனர்.

இதுவரை, கடந்த இரண்டாண்டுகளில் அவர்கள் கண்ட வான்வெளி மாற்றங்களைக் கேட்டறிந்தார்கள். ஆழியில் ஏற்பட்ட புதிய ஏற்ற இறக்கங்களைக் குறித்து அலசினார்கள். நிலத்தில் உண்டான நடுக்கங்களைக் குறித்து விவாதித்தார்கள். மதிவந்தித் தாய் விவரித்து வரைந்திருந்த கணியக் குறியீடுகள் கிட்டத்தட்ட ஒத்துப் போயிருந்தன. அதனால் கூடுமான உண்மைகள் பொதிந்திருக்கின்றன என ஒப்புக்கொண்டார்கள்.

வேறு ஒரு நல்லதற்கான மாற்றம் குறித்துக் கோகன் சொல்லி யிருந்தால் இந்நேரம் அவனைத் தூக்கிக் கொண்டாடியிருப்பார்கள். ஆனால், இது கண் முன்னே திரண்டு வரும் தீயது. அழித்தல் பண்புடையது. நசுக்கும் வல்லமையுடையது. ஒட்டு மொத்த வளர்ச்சியை, அறிவை, தேடுதலை, முன்னகர்ந்து வந்த மாந்த இனத்திற்கு இயற்கை விடுக்கும் போட்டி. மாந்தர்கள் விலங்குகளைபோலிருந்த காலம் தொடங்கி, விலங்குகளிலிருந்து பிரிந்து மாந்த விலங்கினமாகப் பிரிந்து, நெருப்பை அறிந்து, மொழியை அறிந்து, கற்றலை அறிந்து, கற்பித்தலை அறிந்து பெரும் ஊழ்க சமூகமாகக் கிளைவிட்டிருக்கும் நீண்ட பயணத்தில் பல்வேறு ஊழிகளைக் கண்டவர்கள். மிருகங்களிடமிருந்தும் இயற்கையிடமும் பல்வேறு போராட்டங்களை நிகழ்த்தியவர்கள். கூண்டோடு அழிந்திடாமல் தற்காத்துக்கொண்டு மீண்டவர்கள். அவர்களால் உறுதியாக இப்பேரூழியை வெல்ல முடியும் எனத் தென்னன் உறுதியாக நம்பினான். அரங்கில் அவனது அறிவுக்கு எட்டியதை எல்லாருக்கும் புரியும்படி சொன்னான்.

“இந்தத் தமிழி இனம் பல்லாயிரம் கோடியில இருந்து முளச்சி, பல அழிவுக்கு உள்ளாச்சு. இப்பேரண்டமே ஒடைஞ்சு அங்கங்க நிலம் ஒதுங்கிப் போயிருக்கு. குமரிக்கோட்டுக்குக் கிழக்க நாக நாட்டினரும், தெக்க ஆரப்பர் நாட்டினரும் இருக்குற மாதிரி மேற்கிலயும் நிலம் ஒதுங்கி இருக்கலாம். மேரு மலையும் குமரிக் கோட்டையும் தாண்டிப் போக முடியாத அளவுக்குப் பனி நிலமா கிடக்கிறதால நமக்குத் தெரியல. ஆரல் மாதிரி யாராவது ஒரு மாந்தர் பனி மலையையும் ஆழி வழியா தாண்டிப் போய் நம்ம சொந்தங்களக் காணலாம். அது நடக்கிறப்ப நடக்கும். இவ்ளோ நடந்தும் நெலச்சி நிக்கறதுக்கு கொத்தவை துணையிருக்கா. அதோட நாம பின்னோக்கிப் போகாம இருக்க முடிஞ்ச வரைக்கும் வாய்மொழியா, கத வழியா, வரைஞ்சது, எழுதினதுன்னு முன்னோருங்க நம்மள நேர்ப்பாதையில நடத்திட்டுப் போயிருக்காங்க. அந்த வழியத்தான் நாம இன்னும் ஆழமா பத்தி நிக்கணும். அதுதான் நம்ம முதுவங்க நமக்கு

விட்டுட்டுப் போன செய்தி. கடைசி மாந்தர் இருக்குற வரைக்கும் இத நாம செஞ்சே ஆகணும். நம்மளவிட பேரறிவு நுணுக்கம் இல்லாத எவ்வளவோ வெலங்குங்க, நம்மவிட வலுவான உயிருங்க இன்னிக்கு நம்ம காட்சிச்சாலையில மட்டும்தான் நினைவா இருக்குது. ஆனா, அத்தனயும் தாக்குப் பிடிச்சி மாந்தக் கூட்டம் இன்னிவரைக்கும் இருக்கு. இன்னும் கோடி ஆண்டுகள்கூட தன்னோட அறிவால தாக்குப்பிடிக்கும். மறைஞ்ச விலங்குகள், பறவைகள் மாதிரி மாந்த இனத்துக்கு ஏதும் ஆயிடக் கூடாது. நிலம் பொளக்கலாம், வானத்திலிருந்து ஏதாவது கொட்டலாம், ஆழி பொங்கி அழிக்கலாம்... எது நடந்தாலும் முதல்ல நாம பாதுகாக்க வேண்டியது... நாம இது வரைக்கும் சேர்த்த ஊழ்கம்தான்! அதனால் நமது கணியத்தப் பாதுகாக்கணும். நமது மொழியப் பாதுகாக்கணும். நாம சேகரிச்ச பல்வேறு தொற சார்ந்த கண்டுபிடிப்புகளப் பாதுகாக்கணும். அதோட நம்மக் கொழந்தங்களப் பாதுகாக்கணும். அறிவர்களப் பாதுகாக்குணும். அதனால நம்ம அறிவுக் கெட்டின எல்லா முயற்சியும் செய்யணும்”

எல்லாரும் தென்னன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். எல்லாருக்கும் தென்னனின் உடல்மொழியும் உணர்ச்சியும் தன்னிச்சையாகத் தொற்றிக்கொண்டது.

“ஏழ் குணக்கரையில எல்லாரையும் கூட்டக் காரணியம் இருக்கு. அறுபத்தியெட்டு நாட்லயும் ஏழ் குணக்கரைதான் ஆழியப் பத்தி முழுசா அறிஞ்சி வச்சிருக்குது. அதோட நாவாய், திமிலு கட்டுறதுலயும் வலிமையா இருக்கு. நம்ம அறிவ முதல்ல பாதுகாக்கச் சிறந்த வழி மூடுதிமில்தான். ஏழ் குணக்கரையிலதான் மூடுதிமில்கள் உண்டாச்சு. ஆழியில போகும்போதும் எதிர்பாராத விதமா பெருமழயோ, சுழலோ வந்தா தப்பிக்கறதுக்காக, நம்ம மாந்தர்கள் உருவாக்குன மூடுதிமில் பல பேரக் காப்பாத்துச்சு. அதுதான் இப்ப நமக்கு ஒதவப் போவுது. தெங்கம், ஒரு இடத்துல விழுந்து, ஆழியில மிதந்து, பல காலம் கழிச்சு ஒதுங்கி, மறு கரையில சேர்ந்து, வேர் விட்டு மரமாகுது. அதுபோல, நம்ம முன்னோர்கள் கொடுத்த அறிவை இந்த ஊழியில பொழைச்சுக் கிடக்குற நம்ம மாந்தர்கள் புரிஞ்சி வழி நடத்த, அந்த அறிவ எல்லாம் சேகரிச்சு, மூடுதிமிலுக்குள்ள வச்சி மூடி ஆழிக்குள்ள இறக்கணும். ஒவ்வொரு மூடுதிமிலுக்குள்ளயும் எல்லாத் துறை சார்ந்த அறிவர்கள குழு குழுவா பிரிச்சி உள்ள வச்சி, ஒரு கடலோடிய கூட உள்ள வச்சி வேண்டிய உணவ அவங்களுக்குக் கொடுத்து முழுசா மூடிடணும். கிட்டத்தட்ட நம்ம முதுவர்கள் தாங்களாவே உயிரப் போக்கிக்க கல் பதுக்கைக்குள்ள போகுற மாதிரியானதுதான்.

வேற வழி இல்ல. நாம நெனைச்ச அந்தக் காலக்கணக்கு முடிஞ்சி அவங்களே மூடுதிமில உடைச்சி திந்திமிலா மாத்தி கரையேறுவாங்க. இதுல உள்ள இருக்கிற பல அறிவர்கள் மாண்டும் போகலாம். ஆனா எதோ ஒரு திமிலாவது மீண்டு மாந்த இனத்துக்கு உதவணும்னுதான் மூடுதிமில் மட்டுமே அம்பதாயிரத்துக்கு மேல செய்யவேண்டும். வழமையைவிடப் பெரிதாக. இது முதல் கட்டம்!"

தென்னனின் அறிவைப் பற்றி அஞ்சாவண்ணிக்குத் தெரியும் என்றாலும் குறைந்த நேரத்தில் இவ்வளவு கச்சிதமாக சிந்திக்கிறானே என்பதில் இந்தக் கொடுங் கணத்திலும் காதலுற்றாள். இருவாஞ்சிக்குத் தந்தை சொல்லும் திட்டம் முழுதாக விளங்கத் தொடங்கியது. அவள் தென்னனின் பேச்சினூடே அதை கனவாக்கிப் பார்த்தாள். ஆரல், தான் செய்ய வேண்டிய பகுதிகளைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினாள். இளநாகனும் செம்படவனும் தங்களது முன்னோர்கள் இக்கட்டான சூழலை எதிர்கொள்ளச் சிந்திப்பதைப் பற்றிப் பெருமிதம் அடைந்தார்கள். தங்களது வாழ்விடங்களை எப்படிப் பாதுகாப்பதெனத் தெரியாமல் முழித்தார்கள். அரங்கில் கூடியிருந்த ஒவ்வொருவருக்கும் இதில் தங்களது நிலையென்ன, தேவையென்ன என்பது பற்றி ஒரு மனதில் கேட்டபடியும், ஒரு மனதில் பதில்களைச் சிந்தித்தபடியும் இருந்தனர்.

"இரண்டாவது கட்டம் மாந்தக் கூட்டத்தப் பாதுகாக்குறது எப்படிங்கறதுதான். நிலம் ரெண்டு துண்டாகும்னா நீண்ட மரங்கள வெட்டிப் படுக்கவசமா வச்சிக்கணும். பொளந்து விரிஞ்சாலும் மரம் பாலமா இருக்கணும். ஒவ்வொரு மரத்துலயும். வேர்களக் கட்டி வச்சிக்கணும். பிளக்கும்போது விழுந்தாலும் வேர, கயிற புடிச்சுத் தப்பிக்கணும். ஒவ்வொரு சிற்றூர்லயும் பேரூர்லயும் தலைநகரத்துலயும் இருக்குற மாந்தர்கள் காடில்லாத மரமில்லாத மட்டமான வெட்டவெளி சமவெளித் தரைப் பகுதிக்கு இடம் பெயரணும்."

"விலங்குகள்..?"

"வேற வழியில்ல. அதுங்க தப்பிப் பிழைக்க அதுங்கதான் போராடணும். நமக்கிருக்க காலம் ரொம்ப கம்மி. நாம மொட்டத் தரைக்குப் போற மாதிரி விலங்குகளையும் மொட்டத் தரைக்குக் கொண்டுவர முடியாது. அதோட, அப்ப என்ன நடக்கும்னே நமக்குத் தெரியாது. மாந்தர்களே பல நூறு ஆயிரம் பேரு அழியலாம். நான் இருப்பனா, நீங்க இருப்பீங்களான்னுகூட தெரியாது. பொழச்சவங்கதான் அடுத்த தலைமுறைய நகத்தணும். மிருகங்களுக்கும் அதான் நில. இந்த

நெலம் உருவானதிலிருந்து பல உயிரிகள் புதுசா தோன்றுது. பல உயிரிகள் அழியுது. புதிய ஒன்னு உருவாவுது. பல உயிர்கள் தப்பிப் பொழைக்குது. இயற்கை அதற்கான அறிவையும் கொடுத்திருக்கு. நம்ம முன்னோர்களே விலங்குகளிடம் இருந்துதான் எப்படித் தன்னோட சூழல வடிவமைக்கிறதுன்னு கத்துக்கிட்டாங்க. நம்மோட மருத்துவ வளர்ச்சிக்குப் பின்னாடி விலங்குகளோட, பறவைகளோட தற்காத்துக்குற அறிவும், மருந்தும் இருக்கு. அதனால நம்ம எல்லையில இருந்து நாம சிந்திக்கலாம். அதுங்க போராட்டத்த அதுங்க பாத்துக்கும்.”

எல்லாருக்கும் எல்லாம் புரிந்தது. அவரவர் கோணத்தில் யாரை எப்படித் திரட்டலாம் என வகுக்கத் தொடங்கினார்கள்.

19 நளித் திங்கள் நான்காம் திகதி

இருவாஞ்சியும் செம்பனும் நிலைகுலைந்து நின்றுவிட்டார்கள். முதலில் ஏழ் குணக்கரையில் யாராவது தனிக்கூட்டமாகக் கூடியிருக்கிறார்களா என்பதை அறிய செய்தியை உடனடியாகக் கொண்டு செல்லும் தூதுக்குழுவை அணுகினார்கள். ஒவ்வொரு நாட்டிலும் சிற்றூரிலும் பேரூரிலும் ஒரு சிறு குழு உண்டு. அந்தந்த ஊரிலிருந்த தாய்களும் தாய்மாமனும் அதைக் கண்காணிப்பார்கள். அவர்கள் எந்தச் சூழலுக்கும் ஏற்ற வண்ணம் தயாராக இருப்பவர்கள். அவர்கள் வேகமாகச் செயல்படும்படி அவர்களிடம் எப்போதும் தயாரான விரைவு விலங்குகள் உண்டு. மகரயாளிகளை விரைவான தகவல் அனுப்பப்

பயன்படுத்தினார்கள். தேவையெனில் அவர்களே கிளம்பி வந்துவிடுவார்கள்.

அப்படியாக வந்து சேர்ந்தவன்தான் அரையன். எளினியின் கடைசி மகன். ஏழ் தெங்கத்தின் மேலூரிலிருந்து அவன் கொண்டு வந்த செய்தி இன்னொரு புதிய சிக்கலாக இருந்தது. அஞ்சாவண்ணியிடமோ அரங்கத்திலோ அதைச் சொல்லும் மனநிலை அரங்கத்தில் இல்லை. ஏழ் குணக்கரை தாய் மச்சக்கன்னிக்குச் செய்தி கொண்டு வந்திருப்பதாக அரையன் சொன்னதுமே, 'என்ன செய்தி?' என நேரடியாகவே கேட்டாள், அரங்கின் முறுமுனை நுழைபுலத்தின் அருகே அமர்ந்திருந்த இருவாஞ்சி.

"எங்க மேலூருக்குக் கெழக்க இருக்க வனத்துல நானூறு பேரு கருவிய வச்சிக்கிட்டு காத்திருந்தாங்க. விடியறதுக்குள்ள எங்கம்மா ஊரையே திரட்டிட்டு வந்து அவங்கள சிறை புடிச்சது. அவனுங்க கூட்டத் தலைவன அடிச்சு விசாரிச்சதுல எல்லா நாட்டுக்குள்ளயும் ஊடுருவியிருக்கறதாவும். கொத்தவை வெறியாட்டுல பல்லியம் இசைக்கிறப்ப ஏழ் குறும்பனையத் தாக்கவும், ஏழ் குறும்பனையில கலகம் உருவாக்கவும் ஆள்கள் கூடியிருப்பதாகவும் அதே நேரத்துல மத்த நாட்டுலயும் தாக்குதல் நடத்தப் போறதாவும் சொன்னான். எல்லாரும் மூர்க்கங்குடி ஆள்கள்!"

இருவாஞ்சிக்குப் படபடப்பாக இருந்தது. அரையனைக் கிளம்பச் சொல்லிவிட்டு, தென்னன் பேசிக்கொண்டிருக்கும்போது இடைமறிக்க வேண்டாம் எனச் செம்பனை அழைத்து விவரத்தைச் சொன்னாள். செம்பன் ஏழ் குணக்கரைத் தாயிடம் விவரத்தைக் கடத்தினான். அவள் அங்கிருந்த எல்லாத் தாய்களிடம் மூர்க்கங் குடியினர் சூழ்ந்திருக்கும் தகவலை எடுத்துரைத்தாள்.

அதேநேரம் இருவாஞ்சியும் செம்பனும் திடுக்கிடும்படி மற்றொரு செய்தியும் துணைக்குழுவிடமிருந்து வந்தது. ஏழ் குணக்கரையின் தலைநகரத்திலிருந்து ஏழ் குறும்பனை செல்லும் வழியில் ஒரு காத தூரத்தில் இருந்த வடுவூரில் ஒரு கூட்டம் தெங்க மரக் கூட்டத்தில் முகாமிட்டிருப்பதாக வடுவூரின் தாயிடமிருந்து செய்தியைக் கொண்டுவந்தார்கள்.

உடனடியாகத் தூரத்தில் அவையில் அமர்ந்திருக்கும் அஞ்சாவண்ணியை வெளியே வரும்படி கண்களால் செய்தியை

கடத்தினாள். அஞ்சாவண்ணி அரங்கின் அமைதி குலையாத வண்ணம் கூட்டத்திலிருந்து அகன்றாள்.

சிம்மயாளியை அரங்கத்திற்கு வெளியே விலங்குகள் கட்டப்படும் கொட்டிலுக்குள் கொண்டுசெல்லாமல் தனியே வாகை மரத்தினடியில் நிறுத்தியிருந்தாள். அவள் செம்பனுடன் நகரத்திற்குள் நுழைந்தபோதே சிம்மத்திற்குப் பின்னால் கூட்டம் திரளத் தொடங்கியிருந்தது. அதனால் சிம்மத்தை வெகு தொலைவில் மறைவாக நிறுத்தவேண்டியிருந்தது.

அரங்கிலிருந்து வெளியே வந்த இருவாஞ்சி வேகமாகச் சிம்மத்தை நோக்கிப் போக, தனியே மறைத்து வைத்திருந்த சிம்மம் இருந்த இடம் முழுவதும் மாந்தக்கூட்டமாக இருந்தது. இருவாஞ்சி கூட்டத்தை விலக்கிக்கொண்டு சிம்மயாளியை நோக்கி வந்தாள். தும்பன் பெரிய பாறையைப்போலப் படுத்திருந்தது. அரங்கத்திற்குள் என்ன நடக்கிறதென வேடிக்கை பார்க்க வந்த மாந்தக் கூட்டத்தின் வேடிக்கைப் பொருளாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது. மாந்தர்கள் ஆளியின் அருகே செல்லாமல் தொலைவில் நின்றபடியே அதைப் பிரமிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களின் வாழ்நாளில் முதல் முறையாகச் சிம்மத்தை இவ்வளவு அருகில் இருந்து பார்ப்பது இதுதான் முதல்முறை. சிம்மத்தைப் பார்த்தபடி வெள்ளந்தியாக இருக்கும் இந்த மாந்தக் கூட்டத்தையா இயற்கைப் பேரூழி அழிக்கப்போகிறது. எவ்வளவு அழகாகக் கொஞ்சிப் பேசிக்கொண்டிருக்கும் இந்த அப்பாவிகளையா கடல் அழைத்துக்கொள்ளப் போகிறது. இருவாஞ்சியால் தாங்க முடியவில்லை. அவளது கண்களில் இருந்து அவளையும் தாண்டி நீர் துளிர்க்க, சட்டெனச் சுதாரித்துக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்

சிம்மத்தைப் பொறுத்தவரை மேரு கோட்டிலிருந்து பன்மலை அடுக்கத்தின் வழியாக ஏழ் குன்றத்துக்கு மேலேயே நடமாடி குமரியாற்றின் கரையில் இளைப்பாறி மீண்டும் திரும்பிப் பயணிக்கும். மாந்தர்கள் வாழும் பகுதிக்கே அவை வருவதில்லை. அதனால் மாந்தர்களுக்குப் பெரும்பாலும் சிம்மத்தின் உருவம் என்பது ஒரு குறிப்பான வரையறை இல்லாத மிருக நினைவுதான் இருந்தது. அதை உடைத்து மாந்தர்களோடு ஒன்றாக உலவும்படி தும்பனைக் கொண்டுவந்துவிட்டாள் இருவாஞ்சி.

மாந்தக் கூட்டத்திற்குக் கட்டுப்படாத, வளைக்க முடியாத குமரியின் ஆதி மிருகம் ஆளியையே தன்வசப் படுத்திய இருவாஞ்சி வேகமாக ஆளியிடம் வருவதைப் பார்த்த கூட்டம் அவள் வரவரத் தங்களது குலவை மொழியெழுப்பி வரவேற்றார்கள். சிலர் இருவாஞ்சி முன் சென்று

அவளை அணைத்துக்கொண்டனர். எல்லாரும் அதே அன்பை வெளிப்படுத்த அவளருகே வர , செம்பன் யாவரையும் தடுத்து நிறுத்தினான்.

“உங்க அன்புக்கு வணக்கம். வடுவூர் வரைக்கும் வேகமா போகணும். அதனால இருவாஞ்சிக்கு வழி விடுங்க!”

இருவாஞ்சி சிம்மத்தின் அருகே போக, அதற்குள் அரங்கிலிருந்து வெளியே வந்த அஞ்சாவண்ணி, கூட்டம் இருந்த திசையைக் கண்டு ஒருவாறு ஊகித்துத் தானும் வந்துவிட்டாள். தாய் வேகமாக வருவதைக் கண்டதும் அம்மாவிடம் தானும் ஓடினாள்.

தன்னை நோக்கி ஓடிவரும் மகளை ஆரத்தழுவினாள் அஞ்சாவண்ணி. ஆனால், அவளின் பார்வை எதிரில் படர்ந்த விசும்பையே மறைத்துக்கொண்டு நின்ற ஆளியின் உருவத்தால் விதிர்க்க வைத்துவிட்டது.

“வாஞ்சி, குமரிக்கண்டமே ஆழியில முழுகப் போகுதுன்னு சொல்றாங்க. மாந்தக் குலமே தவிச்சுக் கிடக்கிற இந்நேரத்துல நீயும் செம்பனும்தான் முன்ன நிக்கணும். அதை விட்டுட்டு எங்க கிளம்புறீங்க?”

“அது நடக்க இன்னும் முப்பது நாளாவது ஆகும். அது வரைக்கும் நாம் உயிர் வாழணுமில்ல அம்மா?”

“என்ன சொல்ற..?”

“இப்பதான் ஏழ் தெங்கத்துல கொம்பூதி நாட்ல இருக்கிற மேலூரிலிருந்து ஒரு தகவல் வந்தது. அது உனக்கும் சொல்லியிருப்பாங்கன்னு நினைக்கிறேன். மூர்க்கங்குடி ஆள்கள் கருவிகளோட உள்ள புகுந்திருக்காங்களாம். அரையன் சொன்னத வச்சுப் பார்த்தா எல்லா நாடுகளிலும் புகுந்திருக்காங்க. அதோட கொத்தவை வெறியாட்டுல வச்சி ஏழ் குறும்பனையத் தாக்கவும் பெரும் படையோட வந்திருக்காங்களாம். இப்ப வடூவூர்ல இருந்தும் செய்தி வந்திருக்கு. நானும் செம்பனும் அவங்களத் தாக்கி முழு உண்மைய தெரிஞ்சுக்குறோம். நீ எல்லாத் தாய்களுக்கும் சொல்லி என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணு. நான் பிரம்பூர் வரதுக்குள்ள எல்லாரும் அங்க இருந்தாதான் இந்த ஆண்டு கொற்றவைக்கு வெறியாட்டு நடக்கும்.”

அஞ்சாவண்ணிக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாகக் கிடைக்கிற செய்திகளால் நொந்து போனாள். தொடர்ந்து விரட்டும் துன்பங்களை நினைத்து ஒரு கணம் மருண்டாள்.

அஞ்சாவண்ணியின் முகத்தை நிமிர்ந்து பார்க்கும் மனஉறுதிகூட இருவாஞ்சியிடம் இல்லை. நேற்று பின்னிரவில் தேடிவந்த ஆரலைப் பார்த்தும் அப்படித்தான் அவள் மனம் இருந்தது. ஒன்றுக்குள் ஒன்றாக இறுகிக் கிடந்த மனம் தனித்து விக்கித்து நிற்பதற்கு அவளுக்குக் காரணியம் புரியாமல் இல்லை. ஏன் அரங்கிற்குள் இருந்த யாவருக்குமே அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். ஆரல், இளநாகனை அறிமுகப்படுத்தியதும் வேறு நாள்களாக இருந்திருந்தால் இளநாகனை வம்புக்கு இழுத்துப் பயமுறுத்தி இருப்பாள். இப்போது அப்படியில்லை. ஆரலை அணைத்துக்கொண்டு ஓரிரு வார்த்தைகள் பேசியதோடு சரி. பேசும் சக்தியை அரங்கின் உள்ளிருந்த அனைவருமே இழந்துவிட்டார்கள். ஆரலுக்கும் அது புரிந்ததால் அவளாலும் இயல்பாக இருக்க முடியவில்லை. அஞ்சாவண்ணித் தாயின் மனநிலைக்காக சில நொடிகள் அமைதி காத்தாள். அஞ்சாவண்ணி தெளிந்தாள்.

“வாஞ்சி, எனக்கும் கூட்டத்துல சொன்னாங்க. ஆனா வடுவூர் புதுசா இருக்கு. உங்க ரெண்டு பேருக்கும் நான் சொல்றது இதுதான்... எது நடந்தாலும் அதை எதித்து நின்னுதான் ஆவணும். முதல்ல வடுவூர் போயி நிலமைய தெரிஞ்சுக்கிட்டு நேரா ஏழ்பனை வாங்க, நாங்க அங்க காத்திருக்கோம். உங்களால இன்னும் பல தீரத்த பண்ண முடியும். இவ்ளோ பேர விட்டுட்டு உங்க மேல நம்பிக்கை வக்கிறேன்னா ஒரே காரணியம்தான் இருக்கு. குமரியில யாரும் நெருங்கத் துணியாத சிம்மயாளியவே உங்களுக்கு முதுகு சொமக்க வச்சிருக்கீங்க. இந்தத் துணிவப் பாத்து நான் மட்டுமில்ல, அறுபத்தியெட்டுத் தாய்களும் விதிர்த்துப் போய் நிக்கிறோம். இந்தக் கொத்தவை வெறியாட்டுல கண்டமே உன் பேச்சாதான் நிக்கப் போகுதுன்னு நினைச்சிகிட்டேதான் தெங்கப்பட்டினம் வந்தேன். எல்லாம் மாறிப் போச்சு. தமிழிநாட்டு உருவமே உன்னுதாகி நிக்க வேண்டியது. பரவால்ல. எல்லாம் கொத்தவை உருட்டி வச்சிருப்பா. நாம என்ன செய்யணும்னு அவ முடிவா இருக்கும்!”

மகளைத் தாய் நிமிர்த்திப் பார்த்தாள். இருவரின் கண்களிலும் வார்த்தைகள் விழுந்து கலந்தன. அன்பைக் கண்கள் சொல்லின. அஞ்சாவண்ணி தன் கையில் கொண்டுவந்திருந்த ஊன்று கோலை மகளிடம் நீட்டினாள். செம்பனும் அருகே வந்து பார்த்தான். ஊன்று கோளின் ஒரு பிடியை உருவினாள். கல் ஈட்டியைவிடகு கூர்மையான கருவி அது என்பது மட்டும் புரிந்தது.

“சிம்மயாளிய வசப்படுத்திக்கொண்டு வந்ததுக்காக ஒரு முதுவச்சி தேடி வந்து கொடுத்த இந்தக் குமரிக்கோட்டின் புதிய பரிசு இது. உங்க

ரெண்டு பேருக்கு மட்டுமே இது சேரணும். இது பேரு இரும்பு. இப்போ ஈட்டியா இருக்குறது. இதை நெருப்பில வதக்கித் தண்ணியா வச்சுக்கலாம். வாளாவோ, கத்தியாவோ எப்படி வேண்ணாலும் பதியன் போட்டு மீண்டும் நீரில முக்கி நீ நினைச்ச உருவத்தக் கொடுக்கலாம். இதை உடைக்க முடியாது. செதுக்கும் உளியாகக்கூடப் பயன்படுத்தலாம். எவ்வளவு கடினமான தோலையும் குத்திக் கிழிக்கிற வல்லமையுள்ளது. வாங்கிக்கங்க. மூர்க்கர்கள வெல்ல இது உங்களுக்கு உதவியா இருக்கும்.”

இருவாஞ்சியும் செம்பனும் அதைக் கையில் வாங்கினர். இருவாஞ்சி அதன் கூரான முன் முனையில் ஆட்காட்டி விரல் வைத்துப் பார்த்தாள். தோலைப் பதம் பார்த்து சிவப்புக் குருதியை வழிய விடத் தொடங்கியது.

இருவாஞ்சி சிம்மத்தை நெருங்க, சிம்மம் அவளது வாடையை உணர்ந்து சட்டென எழுந்தது. தொலைவில் நின்ற அஞ்சாவண்ணி சிம்மத்தின் அருகில் வந்தாள். அதன் முன் காலின் மூட்டளவே நின்றவள் மூட்டைத் தடவிக்கொடுத்தாள். இருவாஞ்சி அதன் மீது தாவியேறினாள். வாகாக அவள் மேலேற தனது உடலை வளைத்த்துத் தனது வாலால் அவளைத் தாங்கித் தூக்கி மேலேற்றிவிட்டது. ஏறி அமர்ந்த இருவாஞ்சியைப் பார்த்தவள் சட்டென அரங்கை நோக்கி நடக்கத் தொடங்கினாள். செம்பனும் அவ்வாறே ஏறினான். சுற்றி இருந்த மாந்தர்கள் ஆரவாரிக்க சிம்மன் வேகப் பாய்ச்சலாகத் தனது ஓட்டத்தில் தன்னையே பின்னால் புழுதியால் மறைத்துக்கொள்ள, திடீரென வானில் திரண்ட மேகக் கூட்டங்கள்போல செம்மண் புழுதியால் அவர்கள் சென்ற சாலை நிறைந்திருந்தது.

20 நளித் திங்கள் ஆறாம் திகதி

திண் திமிலும் கொடுந்திமிலும் அலையை ஊடறுத்துப் பாய்ந்துகொண்டிருந்தன. திருக்கையன் விசும்பில் பொங்கும் நிலவொளியில் ஆழியின் மென்னலைகள் மிதந்து ஊடாடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான். இக்கடலா நம்மைத் தின்னப் போகிறது. பிறந்து வளர்ந்த ஈராவது அகவையிலேயே தாய் மீனாள் ஆழிக் கரையில் நின்றுகொண்டு அலைகளில் தூக்கிப் போட்டுத் தவழ்ந்து வா என்று இறுமாந்திருந்த நினைவுகள் அவனை அரித்துத் தின்றது.

“திருக்கையா... இந்தப் பேராழி நமக்கெல்லாம் தாய். நமக்கான உணவைச் சேகரித்து வளர்த்து நம்மிடம் தருவா. நீ இந்த உப்புத் தண்ணியில முழுவிச் சாவ அவ ஒருபோதும் சம்மதிக்க மாட்டா. நீ நீந்து. இந்த ஆழியும் ஒரு கொத்தவதான். அவ உன்ன மீனாக்கிக் காட்டுவா!”

குழந்தையிலிருந்து விரைந்தோடும் நண்டுகள் பிடித்து, உள் சுருங்கும் ஆமைகள் பார்த்து, நத்தைகளின் பேச்சுக்களைச் செவிக்குக் கொடுத்து, சங்குகளின் இசைக்கு ஆடி, மீன்களின் செதில்களை உடம்பில் பூசி வளர்ந்த இந்த உடலை, உணவைக் கொடுத்த தாயே விழுங்குவாளா என்றெல்லாம் நினைத்தான். ஆனால், கோகன் மிகச் சிறந்த கணியன். அவனது கணியம் தப்பியதில்லை. மழை குறித்தும் வானிலிருந்து சிதறி விழும் கற்களைக் குறித்தெல்லாம் எச்சரித்து மாந்தர்களுக்கு விழிப்பூட்டி இடம் பெயர்த்தி இருக்கிறான்.

நிலம் பல்வேறு பாறை அடுக்குகளாக ஒன்றின் மேல் ஒன்றாக மிதக்கும் தட்டுகளாக நகர்வதைக் கணித்துச் சொன்னவன். இப்போதிருக்கும் அறிவர் குழுமத்தின் தலைமகன். அவனது முடிவு தப்பாது. விசும்பைத் தன் கண்களால் துளைத்துப் பரந்து கிடக்கும் விண் கோளங்களைக் கண்டு சொன்னவன். அவனால் தான் திருக்கையன் வேறு வழியின்றி நாகநாட்டிற்குத் திமிலோட்டிக் கொண்டிருக்கிறான்.

சீரான காற்றில் விரிந்த பாய்மரம் சடசடத்தபடி கொடுந்திமில் இழுத்துச் சென்றது. போகும் திசைக்கேற்ப, காற்றின் நிலைக்கு ஏற்பப் பாய்மரத்தை நகர்த்தவும் மூவர் இருந்தனர். தேவையெனில் கொடுந் திமிலில் அரைக் கட்டைக்குக் கீழிருந்து வெளியே மிதந்தபடி உடன் வரும் துடுப்புகளை வலிக்க, இரு புறத்திற்கும் முப்பது பேர் இருந்தனர். அவர்களோடு இளநாகனோடு வந்த நாக நாட்டின் முக்கியப் பொறுப்பாளர்களும், ஆரப்பர் நாட்டின் பொறுப்பாளர்களும் வந்தனர். இவர்களைப் பின்தொடர்ந்து இன்னும் பலரை ஏற்றியபடி ஆறு திண் திமில்கள் வந்து கொண்டிருந்தன. திருக்கையனோடு வரும் குழுவில் மூடுதிமில் செய்யக்கூடிய பல திமிலர்களும் கம்மியர்களும் உடன் வந்தனர். அவர்களது எண்ணமெல்லாம் நாக நாட்டு மாந்தர்களையும் ஆரப்பர் நாட்டு மாந்தர்களையும் எப்பாடுபட்டாவது இப்பேரூழியில் இருந்து காக்க வேண்டும். அல்லது அவர்களோடு மாள வேண்டும் என்பதுதான். அறுபத்தியெட்டு நாட்டுத் தலைமைகளும் கூடி எடுத்த முடிவு.

ஆரலை ஏழ் குணக்கரையில் இருந்தபடி, ஏழ் குறும்பனைத் துறைமுகங்கள், ஏழ் மதுரைத் துறைமுகங்கள், ஏழ் தெங்கத் துறைமுகங்களின் துறைகளில் உருவாக்க வேண்டிய மூடுதிமில் உருவாக்கக் குழுவிற்குத் தலைமையாகவும், திருக்கையனை நாக நாட்டிற்கும் அனுப்புவதென முடிவெடுத்தார்கள்.

திருக்கையன் முன்னால் பிரிந்து சென்று ஆழிப்பெருங் கடலில் மிதக்கும் நிலப் பரப்பில் வாழும் மூத்தவர்களைக் காக்கும் பெரும் பொறுப்பைத் தானே மனமுவந்து ஏற்றான். அவனது ஒரே கவலை. ஒரு வேளை ஊழியின் தாண்டவத்தில் ஊர் திரும்பாமலே போய்விட்டால் என்ன செய்வதென நினைத்து உள்ளுக்குள் வருந்தினான். வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

தாய்கள் தெளிவாகச் சிந்திக்கக் கூடியவர்கள். தாய் மாமன்களும் அறிவிற் சிறந்தவர்கள். முன்னோர்களின் அறிவை அதனாலேயே மேலும் கூர்மையாக்க அவர்களால் முடிந்தது. எத்தனையோ மாந்தர்கள் தமிழியர்களுக்காக உயிரைக் கொடுத்து அறிவை விட்டுச் சென்றுள்ளார்கள். கேள்விப்பட்டவரை ஆயிரம் பேரோடு யார் ஒருவரும் தன்னுயிர்க் கொலையில் ஈடுபட்டதில்லை.

ஆனால், தாய் மதிவந்தி ஆயிரம் பேரோடு மாந்தக் குடிக்காகத் தங்களையே கருவியாக்கி மாண்டது குறித்து கோகன் விவரிக்கும்போது மொத்த அரங்கமும் கண்ணீரால் நிரம்பியது. திருக்கையனின்

உடல்மயிர்கள் தோலை திமிர்த்திக்கொண்டு சிலிர்த்ததை இப்பொழுதும் நினைத்தான். தானும் அப்படியொரு கடமையாற்ற வேண்டும் என எண்ணினான். அதற்கேற்றாற் போலவே இப்பயணத்தை அரங்கம் அவனுக்கு வழங்கியது.

ஆரலை ஒருமுறை அணைத்துக்கொள்ளும் அவகாசத்தைத் தவிர அவன் நேரம் எடுக்க விரும்பவில்லை. ஏனெனில் நாக நாட்டிலும், ஆரப்பர் நாட்டிலும் நிலைமையை விளக்க வேண்டும். அதோடு உடன் வந்திருக்கும் கம்மியர்களைக் கொண்டு தேர்ந்த மரங்களை ஆய்வு செய்து நுணுக்கமான தச்சர்களைக் கண்டுபிடித்து மூடுதிமில்களை உருவாக்கவேண்டும். அதோடு காற்றுப் புகாமல், நீர்ப் புகாமல் திமில்களை அடைக்கத் தேவையான பிசின்களையும் நார்களையும் சேர்க்கவேண்டும்.

கவனம் பிசகாமல் அங்கிருக்கும் மாந்தர்களின் தலைமைகளைக் கொண்டு மாந்தர்களைக் காடுகள் இல்லா, பாறைகள் குறைவான மேடான சமதரைத்தளத்திற்கு நகர்த்த வேண்டும். பெரும் கூட்டத்தையே காப்பாற்ற, இயற்கைத் தாயோடும் போராடத் தனக்கு வலிமையைத் தரவேண்டும் எனக் கொற்றவையிடம் மனமுருகி வேண்டினான். அவனின் மனதினைப் படித்தவள்போல ஆழியில் எந்தச் சிக்கலும் இல்லாமல் கரையில் கழி ஓதத்தை கொடுத்திருந்தாள்.

கழி ஓதத்தில் ஆழியின் நீர் முன் துறையை ஊடுருவிக் கரைக்கே திண் திமிலையும் கொடுந் திமிலையும் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். அப்படித்தான் நாகநாட்டிற்குப் போய்ச் சேர்ந்தான் திருக்கையன். ஆரலோ பரபரப்பாகத் தெங்கப்பட்டினத்தில் இயங்கிக் கொண்டிருந்தாள்.

இளநாகனையும் ஆரப்பர் தலைவனையும் தாய்கள் கொற்றவை வெறியாட்டு நிகழ்வு முடிந்த பின்பே அனுப்ப முடிவு செய்தனர். ஊழியின் தாண்டவத்தை அறிந்துகொண்ட இளநாகனும் செம்படவனும் எங்களது மாந்தர்களிடம் நாங்கள் இருக்க வேண்டுமென எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர்.

“நீங்க... உங்களையும் எங்களையும் பிரிக்காதீங்க. நாம எல்லாரும் ஒன்னுதான். நாம எல்லாரும் சேர்ந்துதான் இந்த பேரூழியக் கடக்கணும். செத்தா எல்லாரும் ஒன்னா சாவோம். மீண்டா எல்லாரும் மீள்வோம். ஆரல் அங்க கவனிச்ச அடிப்படையில சிலவற்றை எங்ககிட்ட சொன்னா. நுட்ப வளர்ச்சி குறைவா இருக்கறதா எங்களுக்குப் படுது. கொத்தவ விழாவுல கலந்துக்கங்க. அங்க இருந்து முன்ன பின்ன இருபதிலிருந்து முப்பது நாள்ன்னு கோகன் கணிச்சிருக்கான். அவன்

சொன்னா சரியாத்தான் இருக்கும். நாங்களும் இங்க எல்லா ஏற்பாடும் ஒருபக்கம் பண்ணிகிட்டேதான் நம்ம தாய்க்கும் விழா எடுக்கப் போறோம். தாய்க்கு விழா எடுக்குறத நிறுத்த முடியாது. உங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள இங்கிருந்து திருக்கையன் தலைமையில நாகநாட்டிற்குப் போய்ப் பாத்துக்குவாங்க. நீங்களும் கொத்தவ விழா முடிஞ்சதும் புறப்பட ஏற்பாடு செய்றோம். எத்தனையோ தலமுறைகளக் கடந்து வந்த மாந்தக் கூட்டம் இதையும் எதிர்கொள்ளும்.”

ஏழ் குறும்பனைத் தாய் அஞ்சாவண்ணி முடிவாகச் சொல்லிவிட்டாள். அஞ்சாவண்ணிக்குப் பல சிக்கல்கள் இருந்தன. ஒரு பக்கம் மூர்க்கங்குடி வெறியர்கள் ஏழ்பனைக்குள் நிற்பது. மறுபக்கம் கொற்றவை விழா ஏற்பாடுகள் திட்டமிட்டதுபோல நடக்கணும். பேரூழியை எதிர்கொள்ளணும். மூன்றுக்கும் முகம் கொடுக்கத் திண்ணம் கொண்டுவிட்டாள். அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்களும் அதற்கு இணையாகச் செய்ய வேண்டியவற்றைத் திட்டமிட்டனர்.

அதன்படியே ஆரலிடம் மூடுதிமில் உருவாக்கும் பணியையும் தென்னனிடம் அறிவர்களையும் ஆவணங்களையும் தேர்வுசெய்து சேகரிக்கும் பணியையும் ஒப்படைத்தனர். தென்னன் குழுவில் கோகனும், கொற்றைவை வெறியாட்டில் பல்லியம் இசைத்து முடிந்த பிறகு அருகனும் மெந்தாரகையும் இணைந்து கொள்ளும்படி முடித்தனர்.

இருவாஞ்சிக்கும் செம்பனுக்கும் என்ன வேலை என்பதை அரங்கக் கூட்டம் முடியும் முன்பே கிளம்பியதிலேயே தீர்மானிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் மொத்த மூர்க்கங்குடியர்களை அழிக்கும் பணியில் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளத் துவங்கி விட்டார்கள்.

21 நளித் திங்கள் நான்காம் திகதி

செம்பன் தெங்க மரத்தின் உச்சியில் அமர்ந்திருந்தான். அவனது பார்வை இருநூறு மரங்களைத் தாண்டிக் கும்பலாக இருந்த அந்தக் கூட்டத்தைக் கவனித்தது. தகவல் சொன்னவர்கள் மிகச் சரியாகச் சொல்லியிருப்பதைப் புரிந்துகொண்டான். நானூறு பேர்களுக்குக் குறையாமல் இருப்பார்கள். 'நானூறு பேர்கள் கொண்ட சிறுசிறு குழுக்களாக அவர்களால் என்ன செய்துவிட முடியும் என நினைத்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறார்கள்' என்று எண்ணினான்.

அதுவே இன்னொரு முடிச்சை அவிழ்த்துவிட்டது. அரையன் சொன்னதுபோல எல்லா நாடுகளிலும் ஆள்கள் புகுந்திருக்கிறார்கள் என்றால் எவ்வளவு பேர்... ஏழ் குறும்பனைக்குள் புகுந்தவர்கள் எவ்வளவு பேர் என்பது திட்டவட்டமாகத் தெரிய வேண்டும்.

ஏழ் குறும்பனைக்குள் கலகம் செய்து என்ன சாதித்துவிட முடியும். அந்தக் குழப்பத்தால் அவர்கள் எதை உருவாக்கப் பார்க்கிறார்கள் என்றெல்லாம் முழுமையாகத் தெரியவேண்டுமெனில் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குபவனை உயிரோடு பிடித்து உண்மைகளை வெளிக் கொணர வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டான். இரு விரல்களின் பின்புறத்தைக் கீழுதட்டிற்கு எடுத்துச் சென்று உதட்டை வெளியே இழுத்துக் கவட்டை விரல்களுக்குள் மெலிதாக அழுத்திப் பிடித்து அடி நாவிலிருந்து ஊதினான்.

மெல்லிய காற்று சீழ்க்கையொலியாக வெளியே தள்ளியது. தென்னன் இருந்த மரத்திற்கு இருநூறு அடி தள்ளியிருந்த தும்பனின் மேல் அமர்ந்திருந்த இருவாஞ்சிக்கு சென்று சேர்த்தது.

இருவாஞ்சிக்குப் பின்னே வெறியாட்டுக்குக் கிளம்பிப் போகும் தறுவாயில் இருந்த ஊர் மாந்தர்கள், முன்னூற்றுக்கும் மேல் திரண்டிருந்தனர். வடுவூரிலிருந்து தகவல் கொண்டு வந்தவனும் அங்கே இருந்தான். அவன்தான் இவர்களை ஒருங்கிணைத் திருந்தான். ஒரு

பொழுதில் செம்பனும் இருவாஞ்சியும் அவ்விடத்தை அடைந்துவிட்டார்கள். அவர்கள் தங்களது வேட்டைக்குப் பயன்படும் கருவிகளைச் சுமந்தபடி நின்றிருந்தனர்.

இருவாஞ்சி தென்னனின் சீழ்க்கையொலி கொண்டு புரிந்து கொண்டுவிட்டாள். அந்தக் கூட்டம் முன் தயாரிப்போடு வந்திருக்கிற கூட்டம். பிரத்யேகமாகக் தாக்கும் கலைகளை கற்ற கூட்டம். அவர்களது கருவிகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை என்பதை எல்லாம் புரிந்துகொள்ள அந்த ஒற்றை ஒலிபோதுமானதாக இருந்தது.

தனக்குப் பின்னால் இந்தச் சமரில் பங்கெடுக்க வேண்டும் என்கிற ஆவலில் நின்ற ஊர்க் கூட்டத்திடம் சொன்னாள்.

“சும்மா... சாதாரண ஆளுங்கதான். நானும் செம்பனுமே பார்த்துக்குறோம். தேவையெனில் நாங்க கூப்பிடுவோம். அப்ப வந்தாபோதும்!”

“இல்ல... நாங்களும் எதாச்சும் செய்யணும்!”

இருவாஞ்சி யோசித்தாள்.

“சரி... நான் சொல்ற மாதிரி செய்ங்க. அவங்க இருக்கிற இடத்தில இருந்து நூறு தெங்கமரம் தாண்டி வட்டமா அவங்களச் சுத்தி நில்லுங்க. உங்களத் தாண்டி ஒருத்தன் போக நினைச்சாலும் அவன அடிங்க. யாரும் தப்பிப் போகக் கூடாது. இவர்களுடைய ஒற்றர்கள் அங்கங்க ஊடுருவி இருப்பாங்கன்னு நினைக்கிறேன். அவங்களுக்கும் இவங்களுக்கும் தொடர்பு ஏற்படவே கூடாது. இவங்கள தொட்டா நாம மிச்சம் வைக்கக் கூடாது!”

இருவாஞ்சி மீது ஏற்கெனவே அவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை இருந்தது. இதுவரை யாரும் செய்யத் துணியாத சிம்மத்தை வேடிக்கை பார்க்கக்கூடப் போகத் தயங்கிய மாந்தக் கூட்டத்தில் சிம்மத்தையே தனது சொல்லுக்குக் கட்டுப்படும்படி உருவாக்கியவளை ஆதியந்தக் கொற்றவையாகவே பார்த்தார்கள். அதோடு இவர்கள் இதுவரை பார்த்திராத புதிய கருவியொன்றையும் அவள் வைத்திருந்ததைக் கண்டார்கள். அதனால் அவள் சொன்னபடி மூர்க்கர்களைச் சுற்றி வட்டமிட்டு மறைந்து நின்றார்கள். இருவாஞ்சியோ செம்பனோ தனது சக மாந்தர்கள் மீது சண்டை இட்டவர்களில்லை. தென்னன் சிலம்ப அடிவரிசைகளைக் கற்றுக்கொடுத்து அதைச் சரிபார்க்க எதிர்

நின்றவர்களிடம் சண்டையிட வைத்தது மட்டும்தான் அவள் நினைவில் கசடாகத் தேங்கி இருக்கிறது.

மூத்தவர்கள் போரிட்ட கதைகளை அறிந்திருந்த நினைவுகள் மட்டுமே உண்டு. அவர்களுக்கும் இது கன்னிப்போர்தான். ஆயினும் மூத்தோர்கள் கொடுத்துச் சென்ற அறிவும் தீரமும் நிரம்பப் பெற்றவளாக இருந்தாள். அதை மட்டுமே நம்பினாள். அரையனின் தாயிடம் பிடிபட்டவர்கள் அகாலவேளையில் அசந்தநேரம் என்பதால் எளிதாகிவிட்டது. இது அப்படியில்லை. காத்திருக்க நேரமும் இல்லை. நேரடிச் சமர்தான்.

சிம்மத்தின் பிடரியைப் பற்றி மெல்ல இழுத்தாள். அது இரண்டே தாவலில் செம்பனிருந்த மரம் பக்கம் சென்று தெங்க மரத்தின் ஓலையைப் பற்றி மெல்ல இழுக்க, மரம் மெல்ல வளைந்து கொடுக்க தென்னன் தும்பன் மீது குதித்தான்.

“வாஞ்சி, அவர்களது கருவிகள் கூர்மையா இருக்கு. பெருயாளிகளின் பற்களக் கொண்டு குத்தீட்டிகள் செஞ்சிருக்காங்க. பளிங்கைச் செதுக்கிக் கல் கோடாரிகள் செய்திருக்காங்க. அவங்களத் தாக்கினா காயம்படாம தப்பிச்சுக்க உடம்பு மேல மரக்கவசம் அணிஞ்சிருக்காங்க... என்ன செய்யலாம்! மேலூர்க்காரங்க மாதிரி அசர்கிற நேரத்தில தாக்கலாமா?”

“செம்பா, அதுக்கான நேரம் நம்மகிட்ட இல்ல. அவங்க இதுக்குப் பயிற்சி எடுத்துத் தயாரா வந்திருக்காங்க. நமக்கு இதுல பயிற்சி இல்ல. ஆனா வேட்டைக்குப் பழகியிருக்கோம். நல்லதுக்காக உழைச்சி உருவேறின ஒடம்பு நம்மளோடது. நீ மரத்தில நின்னு வில்லேந்தி அடி. நான் நிலத்துல நின்னு சண்ட செய்யிறேன். இங்க தொடங்குற நம்ம வெற்றிதான் ஏழ் குறும்பனையக் காக்கவும் பயிற்சியா அமையப் போவுது!”

“அப்டியே செய்யலாம். அவர்களின் ஈட்டிகளில் உடனே உயிர்போகும் நஞ்சு தடவப்பட்டிருக்கலாம். தும்பனுக்கு அது சிக்கலாவும்.”

“சரி... ஒண்ணு செய். கருவிகள ஒவ்வொருத்தர் கையில இருக்கா. இல்ல, தனியா ஓரிடத்தில் வச்சிருக்காங்களா..?”

“அவங்க மொத்தம் இருபத்தி மூனு கூடாரம் கட்டியிருக்கிறாங்க.. எல்லாமே தெங்க ஓலை கூடாரம். பாதுகாப்புக்காக நிக்கிறவங்க

கையிலதான் இதெல்லாம் பாத்தேன். மத்தவங்கங்களொடது கூடாரத்துல யார் கண்ணிலும் படக்கூடாதுன்னு மறைச்சி வச்சிருக்கலாம்.''

இருவாஞ்சி மூர்க்கர்களின் முன்னெச்சரிக்கைத் தெளிவைப் புரிந்துகொண்டாள். மூளைக்கு இதை எப்படிச் செயல்படுத்துவது எனச் சிந்திக்க நேரம் கொடுத்தாள். துளி நேரம்தான். மூளை உருவாக்கிய எண்ணங்களை உடலுக்குத் தள்ளியது.

''இப்படிச் செய்யலாமா?''

''எப்படி?''

''நீ மேல இருந்து கூடாரத்துக்குத் தீயம்ப அனுப்பிக் கூடாரத்த எரிய வை. அதுல அவங்க குழம்புவாங்க. நான் கீழ இருந்து மறைஞ்சி தாக்குறேன். தேவப்படும்போது தும்பன அழைச்சிக்கலாம்.''

''சரிதான்!''

செம்பன் தும்பன் மீதிருந்த நார்க் கயிற்றையும் அம்புகள் வைத்திருந்த குடுக்கையையும் எடுத்துக்கொண்டான். மீண்டும் மரமேறினான். தெங்கமரக் கூட்டத்திடம் சிக்குப் பட்ட காற்று தப்பிக்க முடியாமல் பேரிரைச்சலைக் கிளப்பிக்கொண்டிருந்தது. தெங்கம் மட்டைகளும் தெங்கத்தின் காய்ந்த குலைகளும் காற்றை அடக்கி வைக்க முயன்று தோற்றுக் கீழே விழுந்துகொண்டிருந்தன. இவ்விரைச்சலில் மூர்க்கர்களுக்குத் தங்களைச் சுற்றி ஒரு வட்டம் உருவாகியிருப்பதைக் கவனிக்க முடியாமல் இருந்தது.

அவன் மேலிருந்து நாணில் அம்பேற்றுவதை பார்த்துக் கொண்டிருந்தாள் இருவாஞ்சி. இருபத்தி மூன்று அம்புகளை எண்ணி எடுத்தான். எல்லாவற்றிலும் புங்கை விதையை மசித்து எண்ணையாக்கி அதை உருண்டையுருட்டி வைத்திருந்தான். சிம்மன் இருவாஞ்சிக்கு அடங்கவில்லையெனில் கடைசியாக அதை மிரட்டி ஓட வைக்க தீ வலிய கருவி என அறிந்து வைத்திருந்தான். அதற்காக உருட்டி வைத்திருந்த எண்ணெய்க் கோந்துகள் எதிரியின் கூடாரத்தைச் சிதைக்க இப்போது உதவுகிறது. கோந்தின் மீது காய்ந்து பொடிபோலிருந்த சாணப் பயிரின் இலைகளைத் தூவினான்.

ஓர் அம்பில் இடுப்பு உறையிலிருந்து எடுத்த வெங்குச்சங் கற்களைக் கொண்டு ஒன்றிலிருந்து ஒன்றைக் கீறித் தீ மூட்டியதும் அம்பு தகதகவென எரியத் துவங்க, இரண்டாவது அம்பை முதல் அம்பில் பற்ற வைத்து முதல் அம்பைக் குறி தவறாமல் எய்தான். அவனையே

கவனித்துக்கொண்டிருந்தாள் இருவாஞ்சி. பாய்ந்த அம்பு ஓர் ஓரத்தில் இருந்த கடைசிக் கூடாரத்தைத் தைத்துப், பற்றி எரிந்தது.

மூர்க்கர்கள் தங்களைச் சுற்றி வட்டம் படிந்திருப்பதையும் தங்களைத் தாக்க இரு வேங்கைகள் காத்திருந்ததையும் அறியாமல் இருந்தனர். அவர்களுக்குள் கும்மாளமிட்டுத் தெங்கங் கள்ளை பருகிக்கொண்டிருந்தனர். திடீரென அக்கூட்டம் ஒரு கூடாரம் பற்றி எரிவதைக் கண்டு குழம்பித் திகைத்து அங்கே ஓடியது. தீயை நோக்கி ஓடத் துவங்கியவர்களை மறைந்து ஓடியபடியே கவனித்தாள் இருவாஞ்சி. தாய் அஞ்சாவண்ணியிடம் முதுவச்சி பரிசாக அளித்த இரும்புக் குத்தீட்டியை கையில் ஏந்தினாள். அவள் உடலில் முக்காலுக்கு நீண்டிருந்த குத்தீட்டியை முழுவதுமாகப் பார்த்தாள். கதிரவளின் ஒளியில் குத்தீட்டி மினுங்கியது. தன் வாழ்நாளில் தனது முதுவர்களின் வாழ்நாளில் பார்த்திராத புதிய கருவி. இப்போர் வருமென முன்பே யூகித்து இக்கருவியைக் கொற்றவை முதுவச்சியிடம் கொடுத்துத் தன்னிடம் சேர்க்கச் சொல்லியிருப்பாளோ என்றவள் மனம் நினைத்தது.

கொற்றவையை வேண்டினாள். அவ்வளவுதான். அதே வேகத்தோடு கூட்டத்திற்குள் புகுந்தாள். தன்னிடமிருந்த விரல் அளவில் பாதியிருந்த குறு கல் ஈட்டியை ஆள்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் பிடித்திருந்தாள். மறு கையில் இரும்புக் குத்தீட்டி. கூட்டத்தின் குழப்பத்தில் தனியே புகுந்த ஒற்றை வேங்கை, வாகாகக் கிடைத்தவர்களின் தொண்டையைக் குத்திக் கிழித்தது. உடனடி மரணம். செம்பன் இரண்டாவது அம்பை எரிந்து கொண்டிருந்த கூடாரத்தின் எதிர்புறம் கடைசியாக இருந்த மற்றொரு கூடாரத்தில் எய்தான்.

கூட்டம் தனது அறிவை இழந்து நிலைகுலைந்து இங்கும் அங்குமாகத் தடுமாறி ஓடிக்கொண்டிருந்தது, ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரம், இன்னொரு மரத்திலிருந்து இன்னொரு மரம் எனத் தாவித்தாவிப் பறந்தபடி அம்பெய்திக்கொண்டிருந்தான் செம்பன். தெங்கம் மரங்கள் அவன் தாவ வளைந்து வளைந்து ஆடிக் கொண்டிருந்தன. செம்பன் வெவ்வேறு எதிர்ப் புறங்களில் கூடாரங்களை நோக்கித் தீயை எறிய, அந்தப் பெருங் குழப்பத்தில் தீயாய்ப் பரவினாள் இருவாஞ்சி.

மூர்க்கர்களுக்குத் தாங்கள் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம் எனப் புரிபடுவதற்குள் அறுபத்து மூன்று உயிர்கள் உடல்களிலிருந்து வெளியேறியிருந்தன. இரும்புக் குத்தீட்டியின் கூர் முனையில்

தொண்டைச் சதைகள் ஒட்டிக்கிடந்தன. இருவாஞ்சியின் உடலெங்கும் கொல்லப்பட்டவர்களின் குருதி வழிந்து கொண்டிருந்தது. இருவாஞ்சியின் முகத்தில் புதிய முகமொன்று பொலிந்துகொண்டிருந்தது. அது குருதியின் சிவந்த கோலங்களால் ஆன புதிய முகம். மேலிருந்து செம்பன் என்கிற ஒற்றை ஆள்தான் இவ்வளவு வேலையைக் காட்டுகிறான் என்று நினைத்து மூர்க்கர்கள் தெங்கம் போதையில் அவர்களது அம்புக் கூடாரத்தை நோக்கி ஓடினர். அம்புக் கூடாரம் எரிந்து சிதைந்திருந்தது. கையிருப்பைக் கொண்டு செம்பனின் மீது அம்புகளை ஏவினர். அவன் மரத்திற்கு மரம் தாவிப் போக்குக்காட்டிக் கொண்டிருந்தான். இருவாஞ்சி ஒரு விநாடிக்குள் ஒருவர் என மிக வேகமாகக் குத்திக்கொண்டிருந்தாள். அவளது குறி நேரடியாகத் தொண்டையைக் கிழிப்பதுதான். உள்ளுக்குள் புகுந்த இருவாஞ்சியை உணர்ந்து தனித்தனியே ஓடுவதிலிருந்து சட்டென மூர்க்கர்களின் கூட்டத்தலைவன் பொறையன் ஓங்கிக் குரல் எழுப்பினான்.

“யாரும் எங்கயும் ஓடாதீங்க. அப்படியே நில்லுங்க. உங்க கிட்ட இருக்க கருவிய தயாரா வைங்க!”

கட்டுப்பட்டதுபோல ஆங்காங்கே அப்படியே நின்றார்கள். அந்தநேரத்தில் செம்பன் எய்த அம்பு ஒருவனைப் பதம் பார்த்து அவன் கீழே விழுந்தும் அப்படியே நின்றார்கள். அவர்களின் காலடிகளில் நிறைய உடல்கள் தங்களது கை கால்களில் பீறிடும் குருதியில் தூக்கித் தூக்கி வீசியபடி துடித்துக்கொண்டிருந்தன.

பொறையன் தெங்கமரக் கூட்டமே அஞ்சும்படி ஓங்கிக் கத்தினான்.

“மேலயிருக்கிறது ஒருத்தர்தான். கீழயும் ஒருத்தர் தான். இரண்டு பேர் இவ்வளவு பேர எதிர்த்து நிக்கிறாங்க. நாம ஏன் சும்மா இருக்கணும்..? எரியறது எரியட்டும். இருக்கிறதைக் கொண்டு எதிர்த்து அடிங்க! முதல்ல வளையம் போடுங்க! ”

அவர்களுக்கு எல்லாம் புரிந்தது. பொறையனை நடுவாந்திரம் நிற்க வைத்துச் சுற்றி வட்டமிட்டு அரண் அமைத்தார்கள். மேலேயிருந்து தாக்கினால் தடுக்கும் வண்ணம் உடல் மறைப்புப் பலகையை உயர்த்திப் பிடித்தார்கள். எல்லாரும் உறுதியாக விழிப்பாக நின்றார்கள்.

இருவாஞ்சி தெங்கமட்டைகளில் ஒளிந்து இருந்து கவனித்தாள். இனி நேரடியாகத்தான் மோத வேண்டும், வேறு வழியில்லை. நேரடியாக மோத வேண்டும் என்றால் தன்னிடம் இருக்கும் கருவிகள் போதாது.

இரும்புக் குத்தீட்டியைத் தவிர மற்றவை எல்லாமே குறுவாள், குறுங்கத்திகளும், குறு ஈட்டிகளும்தான். அவளது பார்வை சுற்றிலும் தேடியது. அவளால் துண்டாடப் பட்ட ஒருவனின் உடலின் கீழே ஒரு கொடுங் கருவி இருந்தது. கருவியை உற்றுப் பார்த்தாள். எலும்புக் கருவி அது. ஆறடிக்குக் குறையாமல் இருந்தது. இரண்டு நுனியும் கல் ஈட்டியின் கூர்மையோடு இருந்தது. நடுவில் கைப்பிடி போன்ற அமைப்பிருந்தது. நடுவில் பிடித்துக்கொண்டு வருவோரை எந்த முனை வழியாகவும் குத்திக் கிழிக்கலாம். அதோடு இருபுறமும் அது கத்தியைப்போலவும் இருந்தது. வெட்டியும் வீசலாம். புரிந்தது. அவர்கள் இது போன்ற கருவிகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். மாந்த வேட்டையாடச் சிந்தை முடிவெடுத்தால் அதற்கேற்பக் கருவிகளையும் உருவாக்கி விடுகிறது மாந்த மூளை.

கிட்டத் தட்ட எதிரில் இரு நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். எல்லாரும் சுதாரித்து கவனமாகவும் இருக்கிறார்கள். மறைப்புக் கவசமும் வைத்திருக்கிறார்கள். உடலில் வெட்டினால் வாளின் கூர் மழுங்கிவிடும்படியான கவச உடையணிந்து இருக்கிறார்கள். யாவரின் கரங்களிலும் கருவிகளும் இருக்கின்றன. கதிரவளின் ஒளியில் அவை ஒளித் தீற்றல்களைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. அவ்வளவு கூர்மை.

மறைவிலிருந்து செம்பனுக்குச் சமிக்ஞையும் அனுப்ப முடியாது. ஆனால் செம்பன் தன்னைத் தேடிக்கொண்டிருக்கிறான் எனப் புரிந்தது. ஒரு கணம் மரங்களின் மட்டைகள் காற்றில் ஆடும் நடனத்தின் ஒலிகளைத் தவிர ஏதுமில்லை.

நிதானிக்க நேரமில்லை. அவர்கள் இன்னும் தெளிவாவதற்குள் ஏதாவது செய்ய வேண்டும்.

“தும்பா..!”

கத்தி அழைத்தபடி வேகமாகக் கருவியை எடுக்க ஓடினாள். கூட்டம் அவளை நோக்கி ஓடி வரத் துவங்கியது. செம்பன் மரத்திலிருந்து கண்டுவிட்டான். அவள் கருவியை நோக்கி ஓடுகிறாள் எனக் கண்டு கொண்டான். கூட்டம் அவளை நெருங்கு வதற்குள் அவள் கருவியை எடுக்க வேண்டும். கூட்டம் நெருங்க விடாமல் வானிலிருந்து அம்புகளை எய்தான். ஒன்றிரண்டென உடல்கள் கீழே விழுந்தாலும்போதுமானதில்லை. தொடர்ந்து அம்புகளை எய்தான். அவள் வேகமாக ஓடினாள். அவள் கருவியின் கைப்பிடியை பிடிப்பதற்கும் அவர்களில் ஒருவனின் கத்தி அவளின் தலையை நெருங்கவும் சரியாக இருந்தது.

சட்டென எடுத்த வேகத்தில், கத்தியின் பின் புறத்தால் வீசப்பட்ட கத்தியைத் தடுத்தாள். தன் முன்னே நிற்கும் அவனை அந்தரத்தில் பறந்து அவனது உயரம் தாண்டி மேலேறி மேலிருந்து தலைக்குள் கூம்பாச்சியாக இரும்பீட்டியால் இறக்கினாள். ஈட்டி இறங்கிய தடத்தில் மூளை பிதுங்கிப் பொதுபொதுவென வெளியே வந்தது.

அப்போது பாய்ந்து வந்த தும்பனைக் கண்டதும் ஒட்டு மொத்தக் கூட்டமே நடுங்கியது. எந்தச் சிம்மத்திடமும் இதுவரை மூர்க்கங்குடியில் ஒருவனும் வாலாட்டியதில்லை. அது நடமாடும் எந்தத் திசையிலும் தலைவைத்துப் படுத்ததும் இல்லை. சிம்மமே ஏழ் குணக்கரையில் எப்படி நுழைந்தது என்றெல்லாம் அவர்களால் யோசிக்க முடியவில்லை. தலைதெறிக்க தும்பனின் எதிர் திசையில் ஓட ஆரம்பித்தார்கள்.

செம்பன் ஓடியவர்களை அம்பால் வீழ்த்த, இருவாஞ்சி இரும்பீட்டியால் குத்தித் தூக்கிப் பின்னால் வீசிக்கொண்டே ஓடினாள். தும்பன் தனது நாக்கால் ஒரே சாட்டலில் பத்துப் பேரை தூக்கியடித்தான். அவர்கள் நீண்ட தூரம் ஓட முடியாமல் ஊர் மாந்தர்கள் சூழ, மூன்று நாழிகைக்குள் அப்போர் முடிவுக்கு வந்தது. பொறையன் தன் வாழ்நாளில் முதன் முதலாக மண்டியிட்டு அமர்ந்தான். இதுவரை பெண்களை வெறும் பிண்டமாகப் பார்த்தவன் இருவாஞ்சியின் முன்னே கூனிக் குறுகிப் போனான்.

இருபத்தி எட்டுப் பேரைச் சிறைப் பிடித்தார்கள். அதில் அஞ்சாவண்ணியைத் தொடர்ந்து வந்த உளவாளி மல்லனும் ஒருவன். தும்பன் உடலை மடக்கி அமர, இருவாஞ்சி அதன் மீது ஏறி அமர்ந்தாள். பொறையன் நடப்பதெல்லாம் கனவா என நம்ப முடியாமல் பயந்து அந்தக் குரூர மிருகத்தையும் அதன் மீது அமர்ந்திருக்கும் இருவாஞ்சியையும் அகல விழி விரிய பார்த்துக்கொண்டிருந்தான்.

இருவாஞ்சி கேட்டாள்.

“எதுக்காக இங்க வந்தீங்க..? உங்க திட்டம் என்ன..?”

அனைவரும் அமைதியாக இருந்தனர். உயிர் போனாலும் எதையும் சொல்லிவிடக் கூடாதென உறுதியாக இருந்தார்கள்.

அவள் யோசிக்கவே இல்லை. இரும்பீட்டியால் ஒருவனின் வலது கண்ணில் குத்தி உள்ளே அழுத்திக் குடைந்தபடி வெளியே இழுத்தாள். மூர்க்கங்குடியில் ஓர் ஆண் அப்படிக் கதறித் துடித்ததை மூர்க்கங்குடியில்

பிறந்து வளர்ந்த எவரும் பார்த்ததில்லை. குத்தீட்டியில் பாதிக் கண் ஒட்டிக்கொண்டு வந்தது. அதைக் கண்டதும் மல்லன் பதறினான்.

“நான் சொல்றேன்! நான் சொல்றேன்! எங்க தலைவன் பெருந்தேற்றன். ஏழ் குறும்பனையக் கொத்தவை வெறியாட்டுல பல்லியம் இசைக்கும்போது தாக்கிப் பிடிக்கக் காத்திருக்கான். இதுக்காக நாங்க பல காலமா பயிற்சி செஞ்சோம். அறுபத்தியெட்டு நாட்டையும் பயமுறுத்துவதற்காக, எல்லா இடத்திலும் நாங்க இருக்கோம்னு காட்ட, எல்லா நாட்டுக்குள்ளும் பல்லியம் அறங்கேறும் அதேநேரத்துல தாக்கிக் குழப்பலாம்னு குழு குழுவா காத்திருக்கோம்!”

“எவ்வளவு படைகள்?”

“நூற்றுப் பத்தாயிரம் படைகள். முப்பதினாயிரம் படைகள் ஏழ் குறும்பனையில இருக்கு. இருபத்தி எட்டாயிரம் பேர் மற்ற நாடுகள்ள குழு குழுவா பரவி இருக்கோம். அறுபதினாயிரம் பேர் கொண்ட படை மூர்க்கங்குடி எல்லையில தயாரா இருக்கு.”

அவளின் மனம் அதிர்ந்தது. நூற்றுப் பத்தாயிரம் பேர் கொண்ட படைகளா..? அப்படியானால் மூர்க்கங்குடி ஒரு சிறிய நிலமல்ல. படைகளே அவ்வளவு என்றால் குடிகளின் எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு இருக்கலாம். அதோடு இவ்வளவு பெரிய படை எப்படிப் பெருஞ்சுவரைத் தாண்டி நுழைந்தது. பல்லியம் இசைக்கும் சமயம் என்றால் நம்மை எவ்வளவு காலமாக வேவு பார்க்கிறார்கள். செம்பன் எப்படித் தன் உயிரைப் பணயம் வைத்து பெருஞ்சுவர் கடந்து மூர்க்கங் குடியில் நுழைந்து கரும்போகச் சாறு கொண்டு வந்திருப்பான் என்றெல்லாம் நினைத்தாள்.

“உன் பெயர் என்ன..?

“மல்லன்...”

“இந்தக் கூட்டத்துக்கு யார் தலைவன்?”

மல்லன் பொறையனைக் கைகாட்ட, சட்டெனத் தன்னிடமிருந்த குத்தீட்டியை, தும்பனின் மேலிருந்து அவன் மீது வீசினாள் இருவாஞ்சி. அது பொறையனின் மார்பைக் கிழித்து முதுகின் வழியே பாதி வெளிவந்து நின்றது.

“நீ யார்..?”

“அஞ்சாவண்ணியை உளவு பார்க்க வந்தேன். திச மாறி என் கூட்டத்துல சேர்ந்துட்டேன்.”

“உன் தலைவன் எங்கே..?”

“பிரம்பூர்ல...”

நேரக் குறைவு. ஊர் மாந்தர்களிடமிருந்து விடைபெற்றார்கள். ஊர் மாந்தர்களில் மிகச் சிறப்பாகச் சண்டையிட்டவர்களைத் தேர்வு செய்து தங்களோடு இணைத்துக்கொண்டார்கள். மூர்க்கர்கள் வைத்திருந்த கருவிகளில் எரிந்தது போக அனைத்தும் சேகரிக்கப்பட்டு சிம்மனின் முதுகில் ஏறினார்கள். அந்தக் கருவிகளோடு மல்லனைக் கட்டி உடன் கொண்டு போனார்கள். செம்பனையும் இருவாஞ்சியையும் சுமந்து கொண்டு தும்பன் நான்கு கால்களால் பாயத் துவங்கினான். ஒரு பாயல் என்பது அம்பது அடிகளைத் தாண்டியது.

22 நளித் திங்கள் ஐந்தாம் திகதி

என்னதான் குமரித் தாய்கள் ஆழி கடந்து வந்த சிறப்பு விருந்தினர்களிடம் கொற்றவை வெறியாட்டு முடிந்து போகலாம் எனச் சொன்னாலும் இளநாகனின் மனம் துடித்துக்கொண்டிருந்தது. பெரும் பேரிடர் சூழ்ந்திருக்க சொந்த மக்களைக் கைவிட்டு இங்கே விருந்துண்பது தலைவனுக்கு அழகல்ல என அவன் மனதை வெகுவாக அரித்துக்கொண்டிருந்தது.

அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் தாய்மாமன்களும் இருந்த அரங்கின் முடிவைச் சட்டென அவனால் அந்நேரத்தில் மறுக்க முடியவில்லை. ஆரப்பர் தலைவனுக்கும் உடன் வந்தவர்களும்கூட அதே நிலையில்தான் அப்போது இருந்தனர். கோகனின் கணிய அறிவின் வியப்பும் மொத்த மாந்தக் கூட்டமே அழிந்துபோகும் வாய்ப்புகளிருப்பதையும் கேட்டதிலிருந்து செயலற்றுத்தான் போயினர். வாழ்வோ மரணமோ தன் கூட்டத்தோடு இருக்க வேண்டும் என இளநாகன் நினைக்கும்பொழுதில் மொத்தக் கூட்டமும் கலைந்து அவரவர் வேலைகளைப் பார்க்கப் பரபரப்பாகக் கிளம்பிக்கொண்டிருந்தார்கள்.

“அனைத்துத் தாய்களுக்கும், எங்களின் முன்னோர் வழிவந்த தாய்களுக்கும் வணக்கம். நீங்க எல்லாரும் பெரிய சிக்கலில் இருக்கிற நேரத்தில நாங்க இங்க வந்திருக்கோம். இங்க வந்ததாலதான் எங்களுக்கும் நம்மள புடிச்சிக்கிட்டிருக்கிற அல்லல முன்கூட்டியே தெரிஞ்சிக்க முடிஞ்சது. ஆழிக்கு அந்தப் பக்கம் நாங்க இருக்கோம். எங்கள சுத்தி ஆழி பரந்து கிடக்குது. உண்மையச் சொன்னா உங்களவிட அங்கிருக்கிறவங்களுக்குத்தான் அல்லல் அதிகம். அதனால இக்கட்டான இப்பேரிடரை எதிர்கொள்ள நாங்களும் எங்க நாட்டுக்குப் போகணும்னு விரும்புறோம்.”

இளநாகனின் குரல் உயர்ந்து அரங்கை நிறைத்தது. கிளம்பிய யாவரும் ஒரு கணம் அப்படியே நின்றனர். யாருக்கும் எப்படி அதற்கு

உடனடியாகப் பதில் சொல்வதெனத் தெரியவில்லை. அஞ்சாவண்ணிதான் அவ்வமைதியைக் கலைத்தாள்.

''எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாடி பிரிஞ்சி போனவங்க நீங்க. ஆனாலும் நீங்க எங்களது உறவு. உங்கள ஆரல் கண்டதும், இங்க அழைச்சிட்டு வந்த கதையும் எங்களுக்குத் தெரியும். இங்க அறுபத்தியெட்டு நாடுகளின் பாதுகாப்பு எப்படியோ, அப்படித்தான் உங்களையும் காக்கணும்னு நாங்க விரும்புறோம். கால வேகத்தில் தனித் தனியா ஒதுங்கிக் கிடந்தாலும் நாம எல்லாம் ஒண்ணுதான். ஆனா உங்களவிட நமது முன்னோர்கள் கொடுத்த அறிவின் ஏற்றத்தால கொஞ்சம் முன்னேற்றமா இங்க பார்வை வளர்ந்திருக்கு. உங்களிடம் போதுமான பாதுகாப்பு நிலைகள் குறைவா இருக்குறதையும் நாங்க கேள்விபட்டோம். உங்களத் தப்பா சொல்லல... முன்னாடி நடந்த நேர்ச்சியில உங்க முன்னோர்கள் பொழச்சிக் கிடந்ததே பெரும்பாடுதான். அதனால உங்களுக்கு அறிவு முன்னோக்கிப் போதுமான அளவுக்கு வளரலன்னாலும் நாங்க எப்பவும் உங்ககூட இருக்கிறோம். திரும்பவும் உங்களப் பிரிய எங்களுக்கு மனசில்ல. அதனால மூடுதிமில் உருவாக்கப்பட்டதும் அதை எடுத்துக்கொண்டு உங்களிடத்திற்குச் சேர்க்க வேண்டும். அதேபோல உங்களோட வந்திருக்கிற நம்ம உறவுகள்ல கொஞ்சம் பேர திருக்கையன் தலைமையிலான குழு முன்னாடியே கொண்டு போய் விட்டுடும். அங்க வேண்டிய தேவைகள அது கவனிக்கும். கொத்தவை நிகழ்வு முக்கியமானது. அது எங்களுக்கு மட்டுமில்ல... உங்களுக்கும் காக்கும் தெய்வம்தான். கொத்தவையைப் பார்த்து மனசார வேண்டிக்குவோம். இப்ப இருக்கிற நிலமையில எவ்ளோ பேரு பிசாசம் ஆவப் போறோம், எவ்ளோ பேரு பொழைச்சிக் கிடப்போம்னு தெரியல. நம்மோட அறிவுக்குத் தக்கனம் முயற்சி எடுக்குறோம். அதனால கொத்தவை நிகழ்வு முடிஞ்ச மறுநாளே உங்கள கரை சேர்த்த ஆரல் அக்கரையில கொண்டுபோய் விடுவா. அதுவரைக்கும் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கணும்னு எல்லாரின் சார்பா கேட்டுக்குறேன்.''

அஞ்சாவண்ணி சொன்னதை அரங்கம் ஏற்றுக்கொண்டது. உடனடியாக மொத்த மாந்தக் கூட்டமும் கொடுத்த வேலைகளை முடிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பிச் செல்ல ஆரம்பித்தன. நாக நாட்டுத் தலைவனோடும், ஆரப்பர் தலைவனோடும் விவாதித்து உடன் வந்திருந்தவர்களில் தெளிவாக இயங்கக் கூடிய மாந்தக் கூட்டத்தை

வழிநடத்தக்கூடிய ஆற்றல் கொண்ட ஒரு பிரிவைத் திருக்கையன் வழிநடத்த அறிவுறுத்தினர்.

இரு நாட்டு தலைமையும் மறுத்துச் சொல்ல வாய்ப்பில்லாமல் கிளம்பினர். இளநாகனையும் செம்படவனையும் ஆரல் அழைத்துக் கொண்டு தெங்கப்பட்டினத் துறைக்குச் சென்றாள். அவளோடு ஏழ் குணக்கரையின் திமிலர்களும் கம்மியர்களும் உடன் சென்றனர்.

ஆனாலும், இளநாகன் அவைக்காகக் கட்டுப்பட்டாலும் வெளியே வந்ததில் இருந்து மனதில் கொதித்துக்கொண்டிருக்கும் கேள்விகளுக்கு அவனால் சிறந்த பதிலைத் தர முடியவில்லை. இதை ஆரல் அறிந்திருந்தாலும் அதைக் குறித்து மீண்டும் விவாதிக்க அவள் விரும்பவில்லை. இளநாகனின் மீது காதல் கூடியது. அவன் அணைப்பில் முங்கிப்போக வேண்டும் என அவள் மனம் துடியாய்த் துடித்தது. அவனது நெஞ்சோடு தனது நெஞ்சைப் பிளந்து ஒன்றாக்கிக்கொள்ள வேண்டும்போலத் துடித்தது. தனது காதலால் அவனது மனதை நிரப்பி, காற்றில் மிதக்கும் இளவம் பஞ்சுக் கூட்டங்களைப்போல இருவரும் மிதக்க வேண்டுமென அவள் விரும்பினாள். அவ்வளவு உணர்வுகளையும் நெஞ்சுக்குள் புதைத்துக்கொண்டு காத்திரமாகச் செயல்பட ஆரம்பித்தாள்.

இளநாகனையும் செம்படவனையும் அவள் தனித்து விட விரும்பவில்லை. மூடுதிமில் கட்டும் அளப்பறிய வேலைகளில் அவர்களை இணைத்துக்கொண்டாள். அதோடு இனி உயிரோடு எவ்வளவு காலம் இருக்க முடியும் என்கிற நம்பிக்கை நேற்றே அறுந்திருந்தது. மூடுதிமில் ஒட்டுமொத்த மாந்த இனத்திற்கும் உடனடியாக உருவாக்கிவிடக் கூடிய சூழலும் இல்லை. மூடுதிமில் என்பதுகூட ஒரு முயற்சிதான். பிழைத்துக் கிடந்தால் இது காறும் சேர்த்த அறிவைக் கொண்டு மீண்டும் அடுத்தத் தலைமுறைக்கு நகர்த்தலாம் என்பதாலேயே இந்த முடிவிற்கும் தாய்கள் வந்திருக்கக் கூடும்.

தெங்கத் துறையில், வேம்பும் புன்னையும் நாவலும் இலுப்பையும் தேக்கும் பெரு மரங்களாக வெட்டப்பட்டு, காய்ந்து மலைபோலக் குவிந்து கிடந்தன. பெரும்பாலான மரங்கள் காய்ந்து உயிர்போகும் தறுவாயில் வந்திருந்தன. மரங்களின் கடைசியை அறிந்தவர்கள் அவர்கள். வாழ்நிலை முடிந்து பட்டுப்போகத் துடித்துக்கொண்டிருக்கும் உயிர் வாதையிலிருந்து மீட்பது போலொரு போராட்டம் அது. மிச்சமிருக்கும் பச்சையம் துடித்துக் கொண்டிருக்கும் நிலையில்தான் பொதுவாக மரங்களை வெட்ட வேண்டும்

என்பது குடிகளின் மரபு. உயிர் போகத் துடித்துக்கொண்டிருக்கும் விலங்குகளை உடனடியாகக் கொன்று அதன் வலியை போக்குவதுபோல, மரங்களையும் தேவையின் கருதி அதன் வலியைப் போக்கிப் பின் அதைத் தங்களது தேவைக்குப் பயன்படுத்துவது இங்கு வழக்கமான ஒன்று.

காலம் கைவசமில்லாமல் இருந்தது. மரங்களை அடையாளம் காண்பது, அவற்றைச் செதுக்குவது. அதைக் கட்டுவது. தெங்கப் பட்டினத்தில் மட்டும் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற் கூடங்கள் இருந்தன. முதலில் மொத்தத் துறைமுகக் கம்மியர்களையும் அழைத்து அவர்களுக்கு விரிவாகப் புரியவைக்க வேண்டும்.

ஆரல் தன்னுடன் வந்திருந்த ஏழுநூறு மாந்தர்களையும் அழைத்தாள்.

“உடனடியாக செயல்படுங்கள்! ஏழ் குணக்கரை ஆழிக்கரையில் இருக்கும் அனைத்துத் திமில் கம்மியர்களையும் தச்சர்களையும் உடனே தெங்கத்திற்கு வரச் சொல்லுங்கள். அதோடு அந்தந்தத் துறைமுகக் கழிமுகங்களில் தயாரிப்பிலிருக்கும் அனைத்து நாவாய், திமில்களின் வேலைகளையும் நிறுத்தச் சொல்லுங்கள். ஒரு குழு பிரிந்து எல்லாப் பகுதிகளில் இருக்கும் மரங்களையும் உடனடியாகத் பயன்படுத்தும் வகையில் இருப்பதைக் கண்டு அவற்றையும் எல்லாத் துறைமுகங்களிலும் தயார் நிலையில் வைக்கச் சொல்லுங்கள். நகர, கிராம மாந்தர்களிடம் தெங்க நார்களைக் கொண்டு வாருங்கள். மரப் பிசின்களையும், பால் பிசின்களையும் சேகரிக்க ஒரு குழுவை ஏற்படுத்துங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒருவர் தலைமையேற்க வேண்டும். நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். நேரம் குறைவாக இருக்கிறது. கம்மியர்களும் தச்சர்களும் திமிலர்களும் கொற்றவை வெறியாட்டுக்குக் கிளம்பியிருந்தால் உடனடியாகத் திரும்ப அழைக்க வேண்டும். அதே நேரம் மாந்தர்களுக்கு இதன் காரணியத்தை விளக்கிவிட வேண்டாம். அவங்க அச்சப்பட்டா அது குழப்பத்தை உண்டாக்கும். அந்தக் குழப்பம் நம்மோட வேகத்தைத் தடைப்படுத்தும். வேகமாவும் நுணுக்கமாவும் விவேகமாவும் நீங்க எல்லாரும் நடந்துகிட்டாதான் எல்லாருக்கும் பயன்படும். புரியுதா?”

குழு குழுவாகப் பிரிந்து நின்றார்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒருவன் தலைமையேற்க முன் வந்தான். தடாலடியான இந்நடவடிக்கையிலும் ஓர் ஒழுங்கு இருந்தது. அது அறிவர்களின் தொடர் கற்பித்தலில் வந்த விளைவு. அனைவரும் பிரிந்து சென்றார்கள்.

தெங்கத்துக்குள் நுழைந்த குழு அனைவருக்கும் ஆரல் அழைத்ததையும், அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களின் கட்டளை இது என்றும் அறிவுறுத்தப்பட்டது. கட்டளை என்கிற சொல் ஓர் அறத்தின் சொல்லாகப் பார்க்கப்பட்டது. திடீர் நடவடிக்கை அமையும்போது இத்தகைய சொல் பயன்படுத்தப்படும் என்பதை யாவரும் அறிந்து ஆரலின் முன்பு கூடினர். ஆரல், குமரிக்கோட்டில் இருக்கும் எல்லாத் துறைமுகங்களுக்கும் ஆள் அனுப்பினாள். அங்கேயும் இதே வேலைகளைத் தொடங்க வேண்டும் எனச் சொல்லியனுப்பினாள்.

ஆரல் தனது மாந்தக் கூட்டத்தை எண்ணி வியந்தாள். அவர்களின் முன்பு தனித்த மேடையொன்றில் நின்று எல்லாரையும் ஆழ்ந்து பார்த்தாள். ஒரு போர் தலைமையைப்போலக் கட்டளைகள் கொடுக்க ஆரம்பித்தாள்.

“நம்மகிட்ட திமில் இருக்கு. நாவா இருக்கு. வல்லம் இருக்கு. கலம் இருக்கு. ஆனா மூடுதிமில் இல்ல. மூடுதிமில் பத்தியும் நமக்குத் தெரியாது. நாம ஒண்ணு ரெண்டு செஞ்சத வச்சி நமக்கு அதை முழுமையா பண்ணிட முடியும்னு நம்ப முடியாது. ஆனா செஞ்சுதான் ஆகணும். நம்ம கிட்ட மூடுதிமிலப் பத்தித் தெரிஞ்சுக்கிற திறந்த மூளை இருக்கு. ஏத்துக்கிட்டு அத உருவாக்கிடலாம்னு நம்பிக்கை இருக்கு. மூடுதிமில்னா என்ன..? திமில் மேல இன்னொரு திமில் கவுத்த மாதிரி. உருண்டையா ஒன்ன உருவாக்கணும். தெங்கம் குலை தண்ணியில மெதக்குற மாதிரி திமிலும் மிதக்கணும். உள்ள பத்துல இருந்து ஆயிரம் பேர் வரைக்கும் தங்க முடியணும். தேவைப்பட்டா திமில திறக்கவும் முடியணும். காத்துக்கூட பூற முடியாமவும் இருக்கணும். மூச்சி திணறும்போது எந்த பக்கமும் திறந்து மூச்சி இழுக்கிற மாதிரி குழாய் பதிக்கணும். அதுக்கான மாதிரி வரைபடத்தை நான் தரேன். அதை வச்சி கம்மியர்களைக் கொண்டு வேகமா செய்யணும். நம்மிடம் இருக்கிற கொடுந் திமில்களையும் திண் திமில்களையும் மூடுதிமிலா மாத்தணும். நாவாய்களையும் பிரிச்சிடலாம். அவற்றிலிருந்தும் மொத்தமா நமக்குத் தேவையானது கிடைக்கும். ஒன்னு ரெண்டு பல நூறு ஆயிரத்துக்கு மேல செய்யணும். யார் எந்த வேலையில இருந்தாலும் அதையெல்லாம் ஒதுக்கி வைக்கச் சொல்லுங்க. உணவுக்கான ஓட்டமும் வேண்டாம். இருக்கிற உணவு இன்னும் இரண்டு திங்களுக்குச் சமாளிக்கலாம். தேவைன்னா கொற்றவை வெறியாட்டு முடிந்து கூட்டத்துக்குச் சேகரித்த உணவும் வரும். அதோட எல்லாரும் அவங்க அவங்க ஊர் திரும்பினதும் உணவுக் கலனில் இருக்கிற உணவைக் கொண்டுவந்து இங்க சேர்ப்பாங்க. அதுக்குப் பிறகு

பொழச்சிக் கிடந்தா உழைச்சிக்கலாம். நம்மோட மொத்த உழைப்பும் இத நோக்கித்தான் இருக்கணும். புரியுதா?''

ஆரலின் மனதுக்குள் இருந்த வரைபட மாதிரியை அவர்கள் முன்னே உருவாக்கினாள். அங்கிருந்த சில கம்மியர்களும் நெளிவு சுழிவுகளைச் சொல்லி முழுமையான ஒரு மூடுதிமில் மாதிரித் திட்டம் உருவானது. ஏற்கெனவே இருந்த மாதிரியைவிட இது சிறப்பானதாகப்பட்டது. அதை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு குழுவும் பறந்தது. இள நாகன் ஆரலைக் கண்டு வியந்து கொண்டிருந்தான். கூடவே முழுக் கவனத்தையும் அவர்களின் வேலைத் திட்டங்களில் வைத்தான்.

23 நளித் திங்கள் மூன்றாம் நாள்

ஏழ் குறும்பனையின் தலைநகரில் ஒருபுறம் கட்டுக்கடங்காமல் மாந்தர்கள் குவிந்துகொண்டிருந்தனர். அவர்களின் உடல் சூட்டாலும்,

வெளியேற்றிய கெட்ட காற்றாலும் தங்கள் குளிரை அடக்கிக்கொள்ள வேண்டி இருந்தது. அவர்களைச் சுமந்து வந்த, அவர்களுக்குப் பொதிகளை ஏற்றி வந்த விலங்குகள் கூட்டமும் இதுவரை அறுபத்தியெட்டு நாடுகளிலும் நடந்த கொற்றவை வெறியாட்டுக் கூட்டங்கள்போல் இல்லை. ஏழ்பனையின் தெருக்கள் மாந்தத் தலைகளால் பிதுங்கி வழிந்துகொண்டிருந்தது. மாந்த உடல்களின் வியர்வை நாற்றமும் பயண வாகனங்களின் கழிவுநாற்றங்களும், மீந்த இறைச்சிகளின் வாடையும், இரவைப் பகலாக்கும் வேம்பு, புங்கைக் கொட்டை எண்ணெய்களில் எரியும் தீயும் புதிய எரிச்சலான வாடையை உருவாக்கி, எப்பொழுதும் நறுமண நாற்றத்தை வளியில் வீசிக்கொண்டே இருக்கக் கூடிய பிரம்பூரையே திணறடித்துக்கொண்டிருந்தன.

கொற்றவை அரங்கைப் பார்வையிட்டு, வேண்டுதல் செய்து போகும் தொடர்ச்சியான மாந்தக் கூட்டம் நீண்ட வரிசையில் நெரிசலில் வழிபட்டு நகர்ந்துகொண்டிருந்தது.

அக்கூட்டத்தில் திடீரென ஈராயிரம் பேருக்கும் அதிகமான இளந்தாரிகள் கூட்டம் தங்களது வேட்டைக் கருவிகளை ச்சேகரித்தபடி கொற்றவை அரங்குக்குள் கூடத் தொடங்கினார்கள். அதைக் கண்ட பெருந்தேற்றனின் ஒற்றன் வேகமாக அவ்விடத்திலிருந்து கிளம்பினான்.

பெருந்தேற்றனுக்குப் புதிதாக ஈராயிரம் நகர மாந்தர்கள் கருவிகளுடன் கூடுவது குறித்த தகவலை, அங்குப் பார்த்தவற்றை அப்படியே ஒப்பித்தான். காமனையும் வீமனையும் உடனடியாக அழைத்தான். காமன் நகரத்தையும், நகரத்தில் கொற்றவை வெறியாட்டு நிகழ்வையும் நிர்வகிக்கும் கிள்ளியைத் தொடர்ந்து உளவு பார்த்துக்கொண்டிருந்தான். பெருந்தேற்றன் அழைத்ததும் விரைவாக வந்து சேர்ந்தான்.

வீமன் படைப் பிரிவுகள் எப்படி அமைதி காக்க வேண்டும், எப்போது கருவிகளை ஏந்த வேண்டும். எப்படியான கட்டளை பிறப்பிப்போம் எனக் குடில்களைத் தாண்டி இருந்த மரக் கூட்ட மைதானத்தில் கூடியிருந்த தனது தலைமை வீரர்களிடம் விவாதித்துக்கொண்டிருந்தான். அவனும் பெருந்தேற்றன் அழைப்பில் உடனடியாகக் கிளம்பி வந்தான். பெருந்தேற்றன் தனது தங்குமிடத்தில் படபடப்பாக உழன்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும் இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை.

ஒருவரை ஒருவர் பார்த்து உதட்டைப் பிதுக்கிக்கொண்டனர். தலைவனே தனது நடுக்கம் நடுங்கிப் பேசட்டும் என அமைதி காத்தனர்.

“என்ன நடக்கிறது? இதுவரை பாதுகாப்பாகத்தானே கவனமாகத் தானே எல்லாவற்றையும் கையாண்டோம். எப்படி அரங்கில் ஈராயிரம் வீரர்கள் திடீரெனக் கூடினர். நம்மைக் கண்டுபிடித்து விட்டார்களா?”

வீமன்தான் முதலில் வாயைத் திறந்தான்.

“தேற்றா... எதற்கு இந்தப் பதற்றம். நம் திட்டப்படி சரியாக நகர்ந்துகொண்டிருக்கிறோம். இதுவரை நம்மை அச்சமூட்டும் செய்திகள் எதுவும் இல்லை. நம்மவர்களில் எல்லா நாடுகளிலும் பரவிப் பாதுகாப்பான இடத்தில் நிலை பெற்றுவிட்டார்கள். அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உடன் சென்று நிர்மாணித்தவர்கள் திரும்பி வந்து நம்மிடம் செய்தி சொல்லியதையும் ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். கட்டுக்கடங்காத கூட்டம் வந்துகொண்டிருப்பதால் ஒழுங்கு செய்ய ஈராயிரம் பேர் கூடி இருக்கலாம். ஈராயிரம் பேர் கூடியதற்காக நமது படையைக் குறைச்சிப் பாக்கலாமா?”

“இது பல ஆண்டுகளா கொதிச்சிக் கிடக்குற ஆச. ஆனா நாம தொடர்ந்து தோத்துருக்கோம். இந்தத் தடவ வெல்லணும்னு கடுமையா சில ஆண்டுகளா ஒழைச்சிருக்கோம். எங்கயும் ஒரு சிறு தவறுகூட நடக்கக் கூடாது. இந்த இந்த வாட்டி விட்டுட்டா... அவ்ளோதான்”

பெருந்தேற்றனின் உடல் தன்னிச்சையாக நடுங்கத் தொடங்கியது. வீமன் ஆறுதல் வார்த்தைகளாகச் சொன்னபோதும் அவனது மனமும் துடிக்கத் தொடங்கியது. எப்படிப் திடீரெனக் கூட ஆரம்பித்திருப்பார்கள் எனப் புரியாது குழம்பினான்.

வீமனும் காமனும் இந்தப் போராட்டத்தை முழுமையாக அறிந்தவர்கள். பெருந்தேற்றனைப்போலவே இந்த நாளுக்காகத்

தவமாய்க் கிடப்பவர்கள். காமன் இன்னும் விழிப்பாகக் கிடப்பவன். ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து அணிகளை உருவாக்கியவன். அதனால் இருவரிடமும் தோன்றிய அச்சத்தைக் கண்டு சிரித்தான்.

“தேற்றா... சின்ன சின்ன பயம்கூட நம்ம தின்னுப்புடும். நாம மூளை குழம்பினா தடுமாறுவோம். தடுமாறினா நோக்கம் சிதறும். நோக்கம் சிதறினா. நம்மளோட வேகம் தடைப்படும். வேகம் தடைப்பட்டா அழிஞ்சிறுவோம். நகர நிர்வாகியான கிள்ளியை நான் உளவு பாத்துகிட்டுதான் இருக்கேன். அச்சப்பட ஏதுமில்லை.

“என்ன சொல்ற..?”

“ஆமா, இந்த வாட்டி முன்னையவிட கூட்டம் அதிகமா வருது. உணவுப் பற்றாக்குறைக்கு என்ன செய்யிறதுன்னு தெரியாம மீண்டும் வேட்டைக்குப் போறதுக்காகக் கூடியிருக்காங்க.”

“எதனால..?”

“அவங்க போட்டக் கணக்கவிட முப்பதாயிரம் பேர் கூடி இருக்கு. அதுவும் அந்த முப்பதாயிரம் பேரும் அம்பதாயிரம் பேர் திங்கிறத சேர்த்துத் திங்கிறவங்க.”

“முப்பதாயிரம் பேர் கூடுதல்ன்னா..?”

பெருந்தேற்றனுக்குச் சட்டெனப் புரிந்தது. தன்னையும் அறியாமல் சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்தான்.

எல்லா நாடுகளிலும் நடக்கும் வெறியாட்டுக்குச் சென்றிருக்கிறான் கிள்ளி. கடைசியாக நடந்த வெறியாட்டுக் கூட்டத்தின் அளவையும் அதைவிடக் கூடுதலாக ஐம்பதாயிரம் பேர் கூடுதலாக வரக்கூடும் என்றே திட்டமிட்டிருந்தான். அதற்குக் காரணியம் இல்லாமல் இல்லை. இந்த ஆண்டில் கோகனின் சொல்லுரையைக் கேட்கப் புதிய இளையோர் குழு கற்றுக்கொள்ளும் ஆர்வத்துடன் கூடுதலாக நிறையும் என நம்பினான். அதோடு பல்லியம் இசைத்தலில் பெருஞ் சாதனையைச் செய்யப்போகும் அருகன் மெந்தாரகைக் குழுவைப் பற்றி எல்லா நாடுகளுக்கும் செய்தி சென்றிருந்தது. அவர்கள் உருவாக்கிய ஆயிரம் இழை கொண்ட ஆதிப்பேரியாழை அவர்கள் உருவாக்கிக்கொண்டிருக்கும்போதே கூட்டம் கூட்டமாக மாந்தர்கள் ஆவலோடு பார்க்கச் சென்றிருந்தனர். அதனால் கட்டாயம் ஆதிப் பேரியாழுக்காகக் குமரிக்கோடே திரண்டாலும் ஆச்சர்யமில்லை என அஞ்சாவண்ணி சொல்லியிருந்தாள். கிள்ளி அஞ்சாவண்ணியிடம் இறுதியான தனது திட்டத்தை விரிவாக

எடுத்துச்சொல்லி மொத்த ஏழ் குறும்பனை மாந்தர்களையும் இடைப் பணிக்குக் கேட்டு வாங்கியிருந்தான். அஞ்சாவண்ணியும் தனது தம்பியின் செயல் திட்டத்தைத் தனது கூட்டத்தின் முன்பு வைத்து ஆராய்ந்து திருப்தியாக உணர்ந்த பின் நிகழ்விற்கான ஏற்பாட்டு வேலைகளுக்கு ஏழ்பனை மாந்தர்களையும் பயன்படுத்தக் கிள்ளிக்கு ஒப்புதல் அளித்தாள். கிள்ளியின் தலைமையின் கீழ் ஒழுங்கு செய்திருந்த குழுவில் இருந்து முதல் தகவல் வரும்போது அவன் ஆச்சர்யமடைந்தான்.

“நாம... எதிர்பார்த்ததுதான். ஆனா பல்லியம் இசைக்குறன்னிக்கு மட்டும் தோரயமா இரு நூறாயிரத்தைத் தொடலாம். மத்த நாள்கள்ல அதிகமா வந்து வந்து போற மாந்தர்களோட கணக்கு ஒரு நாளைக்கு பத்தாயிரம் பேரு வரும். அதிலும் ரொம்பப் பக்கத்துல இருந்து வர்றவங்க உணவைக் கட்டிக்கொண்டு வந்துருவாங்க. பிரம்பூர் மாந்தர்களுக்கு முன்பே தேவையான கையிருப்பை ஒதுக்கிவிட்டோம். அதனால கொத்தவைக் காப்பிலிருந்து விழா முடியற வரைக்கும் மொத்தத் தேவைக்கான உணவு இருப்பு ஏறக்குறைய இருநூற்றி அம்பது ஆயிரம் பேருக்கு இருந்தாபோதும் மத்தபடி தேவையான தங்குமிடத்தையும் உருவாக்கியிருக்கோம். பயப்பட வேண்டாம். தேவன்னா... நம்ம கிடங்குல இருக்கிற சேமிப்ப வச்சு ஒப்பேத்தலாம்.”

நினைத்ததைவிட வேறு ஒன்று நடந்துகொண்டிருந்தது. நேரம் நெருங்க நெருங்க தொடர்ந்து வந்த தகவல்களால் அவனுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. ஆரலும் திருக்கையனும் இரண்டு நாவாய்களிலும் கொடுந்திமில்களிலும் திண் திமில்களிலும் ஆழியால் பிரிந்த மாந்தர்களைக் கண்டு அழைத்துக் கொண்டு வரப் போகிறார்கள். அவர்களைக் காணப் பெருங்கூட்டம் கூடலாம். மாந்தர்கள் சாரி சாரியாக வந்து குவிந்துகொண்டே இருக்கிறார்கள். இருவாஞ்சி வேறு சிம்மயாளியை அடக்கி வந்திருக்கிறாள். இதைக் கேள்விப்பட்டும் கூட்டம் கூடலாம்.

ஆனால், நகரக் கொள்ளளவைத் தாண்டிக்கொண்டிருக்கும் கூட்டத்திற்குச் சிறப்புச் செய்ய முடியவில்லை என்றால் அது அறுபத்தியெட்டு நாடுகளிலும் எதிரொலிக்கும். மொத்தத் தாய்களும் அமர்ந்து கேள்வி கேட்பதை நினைத்துப் பார்க்கவே அஞ்சினான் கிள்ளி. கிட்டதட்ட உணவுத் தேடலுக்காகவே ஆறு திங்களை ஒதுக்கியிருந்தார்கள். எல்லா நாடுகளிலும் விளைந்த சாமையையும் திணையையும் காணத்தையும் பத்தாயத்தில் சேகரித்திருந்தார்கள். வாரம்தோறும் வேட்டையாடப்பட்ட விலங்குகளை உப்புக்களில் நிரவிக்

கதிரவ ஒளியில் காய வைத்து உப்புக் கண்டமாக்கியிருந்தார்கள். வேட்டையின்போது கொல்லாமல் உயிரோடு மாட்டிய விலங்குகளைத் தனிக் கொட்டடியில் அடைத்து வைத்துக் கடைசி நேர உணவுக்காகச் சேர்த்திருந்தார்கள். தேன் எடுத்துக் குடுவைகளில் அடைத்து வைத்திருந்தார்கள். ஏராளமான மீன்கள் சேகரிக்கப்பட்டு உப்பில் வதக்கி வைத்திருந்தார்கள். எல்லாம் சரியாகவே திட்டமிடப்பட்டிருந்தது.

உடனடியாக நகரத்தை நோக்கி வரும் கூட்டத்தை முன்னதாக இருக்கும் கிராமங்களுக்குத் தனது குழுவை அனுப்பி, வரும் மாந்தர்களை ஆங்காங்கே தங்க வைப்பதற்கும், உணவு கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யச் சொன்னான். அஞ்சாவண்ணியும் திடீர் அமர்வுக்குச் சென்றிருப்பதால் உடனடியாகக் கிள்ளியால் இது மட்டுமே சாத்தியமான ஒன்றாக இருந்தது.

கிள்ளிக்கு இவை எல்லாவற்றையும் தீர்க்கக் கூடிய ஆற்றலிருப்பதாகத் தன்னை உணர்ந்தவன். அத்தகைய பயிற்சியை அக்கா அஞ்சாவண்ணியிடமிருந்து கற்றவன். இத்தனை இடர்பாடுகளை அவனால் கையாள முடியும். அறுபத்து எட்டு நாடுகளின் தாய்களுக்கும் கொற்றவை வெறியாட்டைவிட வேறென்ன முக்கியமாக இருக்க முடியும். அவர்கள் அவசியம் என்றால் ஏழ்பனையின் சொற்போர் அரங்கிலேயே கூடியிருக்கலாமே. அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் மாமன்களும் தங்குவதற்கு உண்டான அழகான குடில்களை நமது வடிவமைப்பாளர்கள் உருவாக்கியிருக்கும்போது இங்கு வந்த ஒரே நாளில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார்கள். காரணியம் இன்றிப் போக வாய்ப்பில்லை.

ஏழ் குணக்கரை நோக்கி அவர்கள் போனது வியப்பான ஒன்றாகக் கிள்ளி நினைத்தான். தனக்கு அழைப்பு விடுக்க வில்லையே. யார் அவர்களை அழைத்தது. ஆனாலும் அதையே நினைத்துக்கொண்டிருக்கவும் அவனுக்கு நேரமில்லை. அவனது சார்பில் போனவர்கள் கொண்டு வந்த முதல் தகவல் அவனைத் திக்குமுக்காட வைத்தது.

ஆரல் தம்மிடமிருந்து பிரிந்துபோன, காணாமல்போன முன்னோர்களின் வழித்தோன்றல்களைக் கண்டடைந்து அவர்களைத் தனது நாவாய்களைக் கொண்டு தெங்கப்பட்டினத்தில் நிறுத்தியதைச் சொன்னார்கள். கிள்ளி ஏழ்பனைக் கொற்றவை வெறியாட்டு விழாவில் நிகழப்போகும் பல்வேறு உணர்ச்சிகளை அசை போட ஆரம்பித்தான்.

காப்புக் கட்டி மூன்று நாள்களாகிவிட்டன. மூன்று நாளும் ஒவ்வொரு துறை சார்ந்த அறிவர்களால் கொற்றவைக்கு ஆராட்டு நடந்தது. சந்தனத்தாலும் பூக்களாலும் அவர்கள் கொற்றவைக்குப் பூசை செய்வர். பத்திலிருந்து பதிமூன்றாவது நாள் வரை தலைமைத் தாய்மாமன்களாலும், பதினான்கிலிருந்து பதினாறாவது வரையான நாள்களில் தலைமைத் தாய்களாலும் கொற்றவை வழிபாடு நடக்கும். பதினைந்தாவது நாள் இரவு பல்லியத்தோடு முடியும். பதினாறாவது நாளில் அரங்கக் கூட்டம் நடக்கும். இது தொடர்ச்சியாகப் பின்பற்றி வரும் பண்பாடு. அதை எல்லா நாடுகளும் பின்பற்றி வருகின்றன.

இன்னும் பத்து நாள்களில் நடக்க இருக்கும் கொற்றவைத் தாய்க்கான சிறப்பில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது. அவளைத் தேடி வரும் மாந்தக் கூட்டம் மனச் சிக்கல் அடைந்தால் கொற்றவைத் தாயின் மனமும் துவண்டு போகும். அது நல்லதல்ல.

பிரம்பூரில் விரைவாக வேட்டையாடக்கூடிய ஈராயிரம் பேரைத் திரட்டி உடனடியாகக் கூடுதல் உணவை உருவாக்கத் திட்டம் தீட்டினான் கிள்ளி.

அவனது எண்ணத்தைப் புரிந்துகொண்ட மாந்தரிகளும் மாந்தர்களும் செயல்பட ஆரம்பித்தார்கள். ஒவ்வொரு குடிலுக்கும் உடனடியாகத் தீயாகப் பற்றியது தகவல். தீரத்தோடு ஈராயிரம் பேர் கொண்ட மாந்தர்கள் கொற்றவை அரங்கில் கூடினார்கள். இக்காலங்களில் விலங்குகள் அருகில் நடமாடாது. கொற்றவை விழாவிற்காக வழிவிட்டு அடர் வனங்களில் தங்களது இருப்பிடத்தை மாற்றியிருக்கும். கடைசிநேரத்தில் வனவேட்டை என்பது போராட்டத்தின் உச்சமாக இருக்கும்.

அரங்கில் பல்லியத்திற்கான ஒத்திகை ஒரு பக்கம் நடந்து கொண்டிருந்தது. கலைஞர்கள் கூடித் தாங்கள் அமர வேண்டிய, இசைக் கருவிகளைப் பொருத்த வேண்டிய இடங்களைக் குறித்து ஆய்ந்துகொண்டிருந்தார்கள். அருகன் ஒவ்வோர் இசைக் குழுவும் எங்கெங்கே எப்படி உட்கார வேண்டும். எங்கே கருவிகள் பொருத்த வேண்டும் எனத் தனது திட்டத்தைத் தனக்குக் கீழிருந்து கவனிக்கும் சிறு தலைமைகளிடம் ஒப்புவித்து அதன் மாதிரிப் படங்களையும் வரைந்து ஒவ்வொருவருக்கும் கொடுத்தனுப்பி இருந்தான். அதனால் அவர்களின் திட்டத்தில் சிறு குழப்பங்களைத் தவிர்த்துப் பெரிய சிக்கல் ஏதுமில்லாமலிருந்தது. அருகனும் மெந்தாரகையும் குழுவில்

முழுவதுமாகத் தங்களை இணைத்துக்கொள்ள முடியாமல் தவித்தனர். அருகன் ஆவணச் சேமிப்பிற்காகப் பாடலியூர் சென்றிருக்கிறான். மெந்தாரகை ஒத்திகை செய்துகொண்டிருக்கிறாள். தாய்கள் கட்டளையிடாமல் மறந்தும்கூட அரங்கத்தில் நடந்தவற்றை வெளியில் சொல்லக் கூடாது என்பதால் உள்ளுக்குள் புழுங்கிக்கொண்டிருந்தாள்.

கிள்ளி தனது குழுவுடன் வந்து சேர்ந்தான். உணவுச் சேகரிப்பிற்காகக் கருவிகளுடன் வந்திருந்த இளந்தாரிகளின் கூட்டத்தைப் பெருமிதமாகப் பார்வையிட்டான்.

“இருவாஞ்சி சிம்மத்தக் கொண்டுவந்த செய்தி தெரிஞ்சி மாந்தங்க வராங்களா..? இல்ல, அருகனும் மெந்தாரகையும் உருவாக்கின ஆயிரம் இழையில செஞ்ச யாழுக்காக மாந்தங்க வராங்களா..? அதையெல்லாம் தாண்டி பொன்பரப்பி மாந்தரி ஆரல் நங்கை மரணத்தீவுல நுழைஞ்சதும் இல்லாம, அதைத் தாண்டி வாழ்ந்த நம்ம தொப்புள் உறவுகளப் பத்தித் தெரிஞ்சி அவங்களையும் கூட்டிட்டு வந்திருக்கா. நம்ம கொத்தவைக்கு இது வரைக்கும் இல்லாத ஒரு பேருவகையான கொண்டாட்டத்த நாம கொடுக்கணும்னுதான் இத்தனையும் நமக்காக உருவாக்கி இருக்கா. அதைப் பாக்கக்கூட நம்ம கணக்கத் தாண்டிய கூட்டம் வரலாம். எப்படி வந்தாலும் சரி... ஏழ்பனைக்குக் கிடைத்த ஒரு உன்னதமான தருணம் இது. இதுக்கு முன்னாடியும் இப்படி ஒரு விழா நடந்திருக்கக் கூடாது. இனிமேயும் இப்படி நடத்த முடியுமான்னு குமரிக்கோடே வாயப் பொளக்கணும்! அதனால எதுக்கும் நாம தயாரா இருப்போம். நாம உணவைச் சேகரிக்கத் தயாராவோம். நம்ம கொத்தவைக் கொண்டாடட்டதுக்கு வழிவிட்டு மிருகங்க நம்ம எல்லைக்குள்ளயே இருக்காது. ஆனாலும் வேற வழி இல்ல. நாம் இதைச் செஞ்சிதான் ஆகணும். இந்த வேட்டை வழக்கமா நம்ம தாய் நின்னு ஆடுற வேட்டை இல்லை. நாம தனியா நின்னு ஏழ்பனையோட மானத்தைக் காப்பாத்தணும்! தயாரா?”

புதிய ஆச்சர்யங்களுக்கு ஏற்றபடி நாமும் தயாராக வேண்டும் என முடிவு செய்த கிள்ளியின் சொற்களின் கனத்தை அரங்கில் கூடியிருந்த வீரர்கள் புரிந்துகொண்டு வேட்டைக்குத் தேவையான கருவிகளோடு ஏழ்பனை நகரத்திற்கு வெளியே மாந்தத் திரள் நுழையாத இடமாகத் தேர்வுசெய்து அங்கே ஒரு நாழிகைக்குள் கூடினர்.

அப்போதுதான் அந்தத் தகவலும் வந்து சேர்ந்தது. கடுமான் கிள்ளி அதிர்ந்துபோனான்.

24 நளித் திங்கள் ஐந்தாம் திகதி

அஞ்சாவண்ணி, பெருந்தேற்றனின் முந்தைய படையெடுப்பை அறிந்தவள். அவனது படையோடு களத்தில் சமரிட்டவள். அறுபத்தியெட்டு நாட்டு மக்களுக்குள்ளும் மூர்க்கங்குடிக்கும் இடையிலான கடைசிப் போரில் நின்று எழுப்பிய பெருஞ்சுவரிலும் பங்கு கொண்டவள்.

அவள் மட்டுமல்ல குமரிக்கோட்டின் எல்லாத் தாய்களுக்கும் அந்தச் சண்டையிலும் சுவர் கட்டுமானத்திலும் பங்கிருந்தது. ஆனால், இது புதுவிதமான சுளுக்கு. சில நேரங்களில் எங்கே பிடித்தத்தென தடவுவதற்குள் உயிரையும் கவ்விப் பிடித்துவிடும் சில நரம்புகள். அப்படி ஓர் உயிர்வாதைதான் இப்பிணி. மூக்கையும் கண்ணையும் காதையும் ஆசனங்களையும் வாயையும் வியர்வை வெளியேற்றும் முடிகளையும்கூடக் சேர்த்து மூடி இருக்கிறார்கள். உயிர் வெளியேறக்கூட வழியற்ற அடைப்பு இது.

பெருந்தேற்றன் வழமைபோல் இல்லை. குருதியைக் குடித்து உடல் நரம்புகளை முறுக்குபவன் இல்லை. அவனுக்கு இவை எதுவும் தேவையில்லை. அவனுக்கு கட்டுக் கடங்காத பசி ஒன்றிருந்தது. அப்பசிக்கான உறைவாள் குமரி. தீனி மாந்தர்கள். அதற்காகவே ஊடுருவித் தாக்கும் திட்டத்தோடு வந்திருக்கிறான்.

குமரியின் மொத்த மாந்தக் கூட்டமும் கொண்டாட்ட மனநிலையில் இருக்கும் திங்களிது. கொற்றவை வெறியாட்டு நிகழ்வின்போதான தாக்குதல் திட்டம் என்பது பெருந்தேற்றனின் அகண்ட அறிவை உணர்த்தியது. அஞ்சாவண்ணி அவனையும் அவனது அறிவையும் வியந்து பார்த்தாள்.

தென்னனுக்கும் கோகனுக்கும் ஆவணங்களை ஒருங்கிணைக்கும் வேலைகளுக்கு ஒதுக்கி அனுப்பி வைத்திருந்தார்கள். மெந்தாரகைக்குப் பல்லியம் ஒத்திகைகளை முதலில் முடிக்கும்படியும், கொற்றவை வெறியாட்டு முடிந்த பிறகு, கலை சார்ந்த நுணுக்கங்களை ஆவணமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அனுப்பி வைத்திருந்தார்கள். அருகனுக்கு ஆவணத்தைத் திரட்டும் வேலைக்கு அனுப்பப்பட்டான். முக்கியர்களுக்கு செய்ய வேண்டிய மாற்றுத் திட்டங்களுக்கான

வேலைகளை அளித்து அனுப்பி வைத்ததும் அரங்கில் அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் மாமன்களும் மட்டும் தனியே கூடினார்கள்.

அஞ்சாவண்ணி நடந்துகொண்டிருக்கும் புதிய சிக்கலைக் குறித்துச் சுருக்கமாகச் சொன்னாள். இருவாஞ்சி ஏழ் குணக்கரையின் காடொன்றில் கூடியிருக்கும் மூர்க்கர்களை அழிக்கச் செம்பனோடு சென்றுவிட்டதை எல்லாருக்கும் சொன்னாள்.

உடனடியாக எல்லா நாடுகளின் தாய் மாமன்களின் தலைமையில் பதுங்கியிருக்கும் மூர்க்கர்களைத் தாக்கி அழிக்கவும் அவர்களைத் தாக்கி அழித்ததும் ஒவ்வொரு நாடுகளில் இருந்து படைகளைத் திரட்டிக்கொண்டு பெருஞ்சுவர் முன்பு குழுமியிருக்கும் மூர்க்கர் படையைத் தாக்குதல் தொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களும் செல்லும் வழியில் படைகளைத் திரட்டிக்கொண்டு ஏழ்பனைக்குச் செல்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. இம்முடிவு எடுப்பதைவிட வழி ஏதுமில்லை.

குமரிக்கோட்டின் ஒரு கடைக் கோடியான ஏழ்பனையில் இருந்து மறு கடைக்கோடியான ஏழ் காந்தள் வரவேண்டும். அங்கிருந்து பெருஞ்சுவருக்கு முன்பாக வந்து நிற்க வேண்டும் எனத் தாய் மாமன்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்கள். ஒவ்வொரு நாட்டில் பதுங்கியிருக்கும் மூர்க்கங் குடியர்களையும் அழிக்க வேண்டும். அதோடு படையும் திரட்டி வரவேண்டும். அவர்கள் ஈராயிரம் காதங்கள்கூட அவர்களின் நாடு இருக்கும் திசை நோக்கிப் பயணிக்க வேண்டும். கருவிகள் வேண்டும். மாந்தர்கள் தயார் நிலையில் இருக்கவேண்டும். அதற்குத் தூதுக்குழுதான் வேகமாகச் செயல்பட வேண்டும்.

அந்தந்த நாட்டில் மூர்க்கர்கள் எங்கே பதுங்கி இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்கு அந்தந்த நாட்டின் நகர, கிராமத் தாய்கள் அங்கிருக்க வேண்டும். எல்லாருக்கும் கொற்றவை வெறியாட்டுக் கனவுண்டு. அவர்கள் ஏழ்பனைக்கு நகர்ந்திருந்தால் வேறு யாரை அடையாளம் காண்பது என்பதில் தூதுக்குழு சிக்கல் இல்லாமல் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அது சாத்தியம்.

முடிவானதும் அனைவரும் பிரிந்தார்கள். ஏழ்பனையில் நடக்கும் சமர் என்பதால் அஞ்சாவண்ணியைத் தலைமையேற்கும்படி எல்லா நாடுகளும் வலியுறுத்தின. அவளும் வீரஞ் செறிந்தவள் என்பதால் அதை ஏற்றுக்கொண்டு படைகளைப் பிரிக்கத் தொடங்கினாள். அதற்குக்

கிள்ளியை வர வைத்தால் இன்னும் தெளிவான வரையறை கிடைக்கும் என நம்பினாள்.

அஞ்சாவண்ணி தலைமையில் ஏழ்பனை நகருக்கு வெளியே துணை நகரத் தாய்களின் வழியே இக்குறுகிய காலத்திற்குள் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட படையணியைத்தான் திரட்ட முடிந்தது. பிரம்பூருக்குள் எந்தச் சிறு செய்தியும் போய்விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். அவர்களுக்கு ஒரே ஆறுதல் பெருந்தேற்றனின் முப்பதாயிரம் படைகளும் சிறு சிறு குழுக்களாக ஆங்காங்கே பதுங்கி இருப்பதுதான். இன்னும் பத்து நாளில் நடக்க இருக்கும் பல்லியத்தின்போதுதான் அவர்கள் தாக்கத் திட்டமிட்டிருப்பதை முன்பே அறிந்ததனால் அஞ்சாவண்ணி சில முடிவுகளை எடுத்திருந்தாள். எப்படியும் தனித் தனிக் குழுக்களும் கதிரவள் மறையும்போது ஒன்றாகக் கூடக்கூடும். அதற்குள் இருவாஞ்சியும் வந்துவிடுவாள். அவள் தரும் தகவலிலும் கூடுதலாக வழி கிடைக்கும் என நம்பினார்கள். அவர்கள் வருவதற்காகக் காத்திருந்தார்கள்.

கிள்ளி, பெருயாளியில் வேகமாக வந்து சேர்ந்தான். அவனது உடலெங்கும் வியர்வை முத்துக்கள். மனதின் தர்க்கங்கள் படபடப்பாக்கி வியர்வையில் அவனைக் குளிக்க வைத்தன. அஞ்சாவண்ணியும் மற்ற தாய்களும் தங்களோடு வந்திருந்தவர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்கள்.

அஞ்சாவண்ணி தனது தம்பியைக் கண்டதும் மகிழ்ந்தாள். அவனது மனநடுக்கத்தை உணர்ந்து அவனை நெஞ்சோடு தழுவினாள். அக்காவின் உறுதி மிக்க மனதை அறிந்தவன் ஆதலால் அவனும் திடமானான்.

“கிள்ளி... ஒன்னை வரச்சொன்ன காரணியம்?”

“நீ அனுப்பிய ஆள் எல்லாத்தையும் சொன்னா... இது எப்படின்னு குழப்பமா இருக்கு.”

“அவங்க திட்டம் பெரிசா இருக்கும்னு நினைக்கிறேன். அதனாலதான் விழாக் காலத்தத் தேர்ந்தெடுத்திருக்காங்க. கொஞ்சம் முன்னாடியே தெரிஞ்சது நல்லதா போச்சு. இல்லன்னா இழப்பு சொல்ல முடியாத அளவுக்கு இருந்திருக்கும்!”

அப்போது படையில் இருந்த விலங்குகள் அரண்டன. பின்னால் ஏதோ ஒன்று புழுதி மண்டலத்திற்குள் அகப்பட்டு அசைந்து வருவதுபோலிருந்தது. முதலில் எல்லாரும் சூறைக்காற்று என்றே

நினைத்தனர். ஆறாயிரம் பேர் கொண்ட அப்படையில் இருந்த யாவரின் பார்வையும் பின்னே திரும்பியது. வீரர்களை சுமந்து வந்த பெருயாளிகளும் ஆனைகளும் எருமைகளும் கூட்டத்தைக் கலைத்துக்கொண்டு ஓடத் துவங்கின. அப்படையே ஒரு கணம் கலைந்து சிதறியது. சிதறிய படையைக் கட்டுக்குள் வைக்கவே முடியவில்லை. மாந்தர்களைவிட விலங்குகள் அதிகமாக அரண்டன. அஞ்சாவண்ணி வேகமாக அப்புழுதிக்குள் ஓடினாள். அவள் ஓடி வருவதைக் கண்டதும் தும்பனின் மேலிருந்த இருவாஞ்சி தும்பனின் திமில் முடியை விட்டாள். அப்பெருங் கூட்டத்திற்குள் பிளிறியபடி வந்த தும்பன், தனது கால்களை உறுதியாக நிறுத்தியது. வந்த வேகத்தில் தனது கால்களால் நிலை கொள்ள முயன்றதால் தரையில் தும்பனின் கால் நகங்கள் கீறி தரை அரையடிக்குப் பள்ளம் விழுந்தது. அதன் மீது இருவாஞ்சியும் செம்பனும் அமர்ந்திருந்தனர்.

இருவாஞ்சியின் கறுத்த உடலெங்கும் குருதி காய்ந்து ஆங்காங்கே கெட்டிப் பட்டிருந்தது. கையில் இரும்புக் குத்தீட்டியும், மறுகையில் பெருயாளியின் மண்டையால் செய்யப்பட்ட இரு முனைக் கத்தியும் குருதி காய்ந்த வாக்கிலிருந்தது. அவளின் பின்னே இருநூற்றுக்கும் அதிகமான சிறு படையொன்றும் ஆராவாரித்துக் கொண்டு வந்தன. எல்லாத் தாய்களும் வீரர்களும், தும்பனையும் இருவாஞ்சியையும் செம்பனையுமே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

மிரண்டு ஓடிய மிருகங்களைச் சரிசெய்து அழைத்து வந்த படை வீரர்கள் தும்பனைக் கண்டு அரண்டனர். அனைவரின் முன்பும், ஒரு குழந்தை ஓடிவந்து மூச்சிரைப்பதைப்போல, நாக்கை வெளித் தள்ளி மூக்கில் நீர் வடியக் காற்றைத் துப்பியது.

தும்பனிடமிருந்து குதித்துக் கீழே வந்து அனைத்துத் தாய்களின் முன்பும் வந்து நின்று வணங்கினர். எல்லாத் தாய்களும் அவர்களது வணக்கத்தை ஏற்றுக்கொண்டனர். இருவாஞ்சி தாய்மாமன் கிள்ளியிடம் ஓடிவந்து ஒரு குழந்தையைப்போல அண்டிக்கொண்டாள். அவனுக்கு நடந்தது என்ன எனத் தெரியவே நேரமாயிற்று. ஏற்கெனவே மூர்க்கர்கள் உள்ளே நுழைந்த கலக்கத்தில் இருந்தான். இப்பேரிகையைக் கண்டதும் மேலும் பயந்து நடுங்கிப்போனான். மூர்க்கர்கள் ஏதோ செய்கிறார்கள் என்றே அவனது மனம் கெட்டித்துப்போனது. இருவாஞ்சியைக் கண்டதும் அவனது மனதில் மாயத்தோற்றங்கள் கண் முன்னே உருக்கொண்டதுபோலிருந்தவன் அதிலிருந்து மீண்டான்.

கிள்ளி அவளைத் தோளோடு அணைத்துக்கொண்டு பெருமிதமாகப் பார்த்தான். தாய் மாமனாகத் தனது வாழ்வு பூர்த்தியடைந்ததைப்போல் நிலைகொண்டான். இதுவரை இறுக்கமாக இருந்த அந்தநேரத்தின் சமநிலை குலைந்து அப்போது தன்னை மீட்டுக்கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும். செம்பன் நேராகச் சொல்ல வந்ததை சொல்லத் தொடங்கினான்.

“வடுவூரில் நிலைத்திருந்த நானூறு மூர்க்கர்களையும் அழித்தோம். சிலரைச் சிறைப் பிடித்து விசாரண செஞ்சதில மேலூர் அரையன் சொன்னது முழுமையான உண்ம. நூற்றுப் பத்தாயிரம் பேர் கொண்ட படை உள்ளே நுழைஞ்சிருக்கு. நாம எதிர்த்துச் சண்டையிட முடியாதபடியான நேரத்திற்குக் காத்திருந்து நம்மள முற்றுகையிட்டிருக்காங்க.”

“நூற்றுப் பத்தாயிரம் பேரென்றால்... எப்படி அவ்வளவு பெரிய படை நுழையும் வரை நமக்குத் தெரியாமல்போனது!”

மச்சக் கன்னியின் கேள்விக்கு இருவாஞ்சி பதிலளித்தாள்.

“சில ஆண்டுகளா அவங்க நம்மக்கூட சண்டைய நிறுத்திட்டாங்க. நாமளும் இடையில் மதில் எழுப்பி அவர்கள் கூட்டமாக வர முடியாதபடி செஞ்சிட்டோம். அதோட நாம வேவு பார்க்கும் மாந்தரிகளையும் திருப்பி அழைச்சிக்கிட்டோம்.. அவங்க சண்டைய முடிச்சிக் கிட்டாங்கன்னு நம்ப வச்சி அமைதியா இருந்து உள்ளே புகுந்திருக்காங்க.. இரண்டாண்டுகளுக்கு மேலா பெருஞ்சுவரின் புடையைக் கொடைஞ்சி சுரங்கம் தோண்டி இருக்காங்க. ஆனையே உள்ள நொழையிற மாதிரியான சுரங்கமாம்,, ஆறு சுரங்க வழி அமைச்சிருக்காங்க.. கொற்றவை வெறியாட்ட சாக்கா வச்சிகிட்டு நாம அந்தக் கவனத்துல இருந்துட்டோம்... தெளிவான திட்டத்தோட.. கிளம்பி வந்திருக்காங்க..”

எல்லாரும் அவர்கள் சொல்வதைச் செவி மடுத்து முதலில் கேட்கத் தயாரானார்கள்.

“அதாவது நூற்றுப் பத்தாயிரம் பேரையும் மூன்று குழுவா பிரிச்சிருக்காங்க. முதல் குழு நம்ம விழாக் காலநேரத்தைப் பயன்படுத்தி பயணிகளா உள்ள வந்து ஏழ்பனைத் தலைநகரத்தில் தங்கிக்கொள்வார்கள். அப்படி வந்திருப்பவர்கள் முப்பதாயிரம் பேரு. அவங்க வந்து ஏற்கெனவே தங்கீட்டாங்க. இரண்டாவது குழு ஆனைப் படை, பெருயாளிப் படை, எருமைப் படை, பரிப் படை, காலாட் படைன்னு ஐந்து படைகள். இதுங்க நாம கட்டி வச்ச பெருஞ்சுவரத் தாண்டி உள்ள

வந்து காத்திருக்குது. மூன்றாவது குழு ஒவ்வொரு நாட்டுக்குள்ளேயும் நானூறு பேர் கொண்ட சிறுப் படை பிரிவா தனித்தனியா உள்ள நுழைஞ்சி அறுபத்தியெட்டு நாட்டுத் தலைநகரம் இருக்குற இடத்துக்குப் பக்கத்துல நிலைகொள்வாங்க. அவங்களும் உள்ள வந்து தயாரா இருக்காங்க. மேலூரில் எளினித் தாய் தலைமையில் அப்படி வந்த ஒரு படைய அழிச்சிட்டாங்க. நாங்களும் வடுவூரிலிருந்த படைய அழிச்சிட்டோம். இதுபோல எல்லா இடத்திலயும் அழிக்கிற வேலைகள் தொடங்கியிருக்கும். எல்லா இடங்களுக்கும் தகவல் போய்த் தேடிக்கிட்டிருக்காங்க அவங்கள. இவங்க எல்லாரும் சேர்ந்து ஒரே நேரத்துல தாக்கப் போறாங்க. கொற்றவை விழாவின் உச்சக்கட்ட நேரத்துல பல்லியம் இசைக்கும்போது மாந்தர்கள் அதில் உருகிக் கிடக்கும்போது நகரத்தைக் கைப்பற்றுவாங்க. அனைத்துத் தாய்களும் தாய் மாமன்களும் ஒரே இடத்தில் வச்சி அழிக்கறதுக்கான வாய்ப்பு இந்த விழா. இது நடந்தா சுற்றி இருக்கிற இடங்களிலும் அவங்க தாக்கும்போது மாந்தர்கள் குழம்பி மொத்தமா சரணடைவாங்க. சரணடைஞ்சவங்கள அடிமையா பயன்படுத்திக்கிட்டு குமரியைத் தங்களோட விருப்பத்துக்கு ஏத்த மாதிரி ஆட்டுவிக்கிறதுதான் அவங்களோட முழுத் திட்டம். இது வாழ்வா சாவான்னு முடிவு பண்ணி, பலநாள் பயிற்சி எடுத்து, வலிமையான கருவிகள், உடம்பைப் பாதுகாக்கிற கவசங்கள்னு எச்சரிக்கையா வந்திருக்காங்க. மூர்க்கங்குடியின் தலைவனே இப்போ பிரம்பூரில்தான் இருக்கான்.”

“என்னது, பெருந்தேற்றேன் ஏழ்பனைத் தலைநகரிலா இருக்கான்?”

எல்லாரும் மலைத்து நின்றுவிட்டார்கள். எவ்வளவு தெளிவான திட்டம். பெருந்தேற்றனே இப்பெரு நிலத்தின் உள்ளே வந்து அமைதியாகக் காத்திருக்கிறான் என்றால் அவன் குமரியைக் கைக்கொள்ள எவ்வளவு வெறியோடு இருப்பான் என்பதை அனைவரும் உணர்ந்தனர். குமரி ஏற்கெனவே பல பிரச்சனைகளில் சிக்குண்டு கிடக்கும்போது இதையும் எதிர்கொள்ளவேண்டிய நிர்பந்தம் அவர்களை அழுத்தியது. மச்சக்கன்னி தீர்மானமாகச் சொன்னாள்.

“நாம் எப்போதும் எதிர்த்துத் தாக்குவதையே விரும்புறோம். நம்ம அறிவர்கள் கொடுத்த வீரமும் நுணுக்கமும் எவ்வளவு மோசமான கணத்தையும் தாங்கப் பழகியிருக்கோம். இது ஒன்னும் எதிர்த்து நிற்க முடியாத பிரச்னையில்ல. கொத்தவை வெறியாட்டுதான் மாந்தர்களுக்கு இருக்கிற ஒரே கடைசியான கொண்டாட்ட நிகழ்வு. அதனால் நாம

எல்லாருக்கும் பறையறைஞ்சி அறிவிக்க வேணாம். இன்னும் ஒன்பது நாள் இருக்கு. இங்கிருக்கிற படையை ஒண்ணா சேர விடக்கூடாது. அவன் உள்ள புகுந்து நம்மை மனக்குழப்பத்துல ஆழ்த்தி வெற்றி பெறலாம்னு நினைச்ச அதே வழிய நாமும் கையாள்வோம். இங்கிருக்கிற படையையும் அவர்களது தலைவன் பெருந்தேற்றனையும் அழிச்சாலேபோதும்... அதுக்குள்ள மற்ற இடங்களிலும் நம்ம மாந்தரிங்களும் மாந்தர்களும் எல்லாரையும் அழிச்சிடுவாங்க. தலைவனும் முக்கியமானவர்களும் அழிஞ்சிட்டா மதில் கிட்ட இருக்கிற படைகள் மனநிலை குழம்பிடும் அவங்களயும் சிறைப் பிடிச்சிடலாம்.''

மச்சக்கன்னி விரிவாக எல்லாவற்றையும் சொன்னதும் எல்லாருக்குள்ளும் புதிய நம்பிக்கைகள் பிறந்தன. செருக்களத்திற்குத் தயாரானார்கள்.

''கிள்ளி... ஒரு குடிலில் நான்கிலிருந்து இருபது பேர் வரை தங்கலாம்னு சொன்ன. அதில் தங்கியிருப்பது மூர்க்கங் குடியர்கள்தான் என்பதை எப்படி யாருக்கும் தெரியாமல் கண்டுபிடிப்பது?''

''உணவுப் பற்றாக்குறை வரும்னு தோணுச்சி. பிரம்பூர்ல ஈராயிரம் பேரத் திரட்டி நகரத்துக்கு வெளியேதான் நள்ளி தலைமையில காத்திருப்பாங்க.. விருந்தினர்களுக்கு உபசரிக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட நம்ம மாந்தர்களோட இவங்களையும் அனுப்பி வைப்போம். கருவிகளோட யார் யார் தங்கியிருக்காங்க. மாந்தன்களா மட்டும் தங்கியிருக்கிற குடில்கள் எது எதுன்னு கணக்கெடுக்கச் சொல்லிடலாம் மூர்க்கங்குடியர்கள அடையாளம் காண அவர்கள் உடலில் கலந்திருக்கிற மாநிறத் தோற்றத்தில கருப்புப் பூசி இருப்பாங்கன்னு நினைக்கிறேன். அதைக் கூர்ந்து கவனிக்கச் சொல்லி அனுப்புவோம். அவர்கள் தரும் தகவல்களைக் கொண்டு அந்தக் குடில்களையே அழித்து விடலாம்!''

அஞ்சாவண்ணியின் கேள்விக்குக் கிள்ளியிடமிருந்து வந்த பதில் ஆறுதலைத் தந்தது.

''நல்லது சொன்ன கிள்ளி. பெருந்தேற்றன முதல்ல கண்டு பிடிக்கணும். இதுவரைக்கும் என்னத் தவிர யாருமே பெருந்தேற்றனப் பார்த்ததில்ல. அவனுடைய உருவம்கூட யாருக்கும் தெரியாது. இதுக்கு முன்னாடி நடந்த சண்டையிலகூட அவந்தான் இவன்னு நா சொன்னா ஒழிய யாருக்கும் தெரியாது. அதனால அவனையும் கண்டுபிடிக்கணும். அதோட, அழிக்கும்போது நமது குமரி மாந்தர்களும் சேர்ந்து அழிந்துவிட வாய்ப்புண்டு. இன்னிக்கு ஒரு நாள் கண்காணிக்கலாம். அதற்கு அடுத்து

எப்படிச் செயலாற்றலாம் எனத் திட்டமிடலாம். ஆனா நகர மாந்தர்களுக்குக்கூட நாம் இங்கே படையோடு நிற்பது தெரியக் கூடாது. ஏன்னா... முன்பே உளவாளிகள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள்!”

“என்னைக்கூடச் சிலர் கவனிக்கிறது புரிஞ்சிது. அவர்களுக்குத் தெரியாமல்தான் இங்க வந்தேன். கவனமா கையாள்றேன் அக்கா.”

கிள்ளி எல்லாவற்றையும் உள்வாங்கினான். நள்ளி வேட்டைக்குத் தயாராக இருப்பாள். அங்கே காத்திருக்கும் ஈராயிரம் பேரையும் உடனடியாக இதற்குச் செயல்படுத்த வடிவத்தைச் சிந்தித்தபடி நள்ளியைத் தேடிப் போனான். அஞ்சாவண்ணியின் மூளை, எப்போதோ பார்த்த பெருந்தேற்றனின் உருவத்தை நினைவூட்டத் திரவத்தைச் சுரந்துகொண்டிருந்தது.

25 நளித் திங்கள் ஆறாம் திகதி

பெருந்தேற்றன் அந்தரத்துக் குடிலில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். ‘தம் தம் தம்... தட தட தம் தம்’ மென முரசின் ஓசை மெலிதாக அவனது காதுகளை வந்தடைய, மெல்லக் கண்களைத் திறந்தான். குடிலின் கூரை வழக்கத்தைவிடக் கருமையாக இருந்தது. கண்களைக் கசக்கி மீண்டும் கூரையைப் பார்த்தான். கூரை எங்கும் மரவட்டைகள் புழுத்துப் பெருகிக்கொண்டிருந்தன. அவனால் அதை நம்ப முடியவில்லை. புதிய கூரையில் கணக்கற்ற கரு மரவட்டைகள் ஊர்ந்து அந்த அறையெங்கும் நிறைத்தன. மர அட்டைகள் தங்களது மெல்லிய கால்களால் ஒன்றின் மேல் ஒன்றாக ஊர்ந்துகொண்டிருந்தன. சில அட்டைகள், கூட்டத்தில் தாக்குப்பிடிக்க முடியாமல் கால் இடறி அவன் மீது விழவும் செய்தன. அவன் உடனடியாக எழ முயற்சித்தான்.

முடியவில்லை. தன் இடுப்பில் யாரோ அமர்ந்திருப்பதுபோலக் கணத்தது. கணம் என்பது எடையல்ல. அழுத்தம். கால்களை, தொடையை அசைக்க முடியாத படி கட்டிப் போட்டிருந்த அந்த அழுத்தத்தை விலக்க எவ்வளவோ முயன்றான். அப்போதுதான் அவள் வந்தாள். பெருந்தேற்றனின் முகத்திற்கு நேராக வந்து நின்று அவனை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் நள்ளி. அவள்தான் இன்று உணவுகளைக் கொடுத்துக் கொண்டிருந்தவள். பெரும்பாலும் தனது காவலன் உணவை வாங்கிக்கொண்டு அனுப்பிவிடுவான். ஆள் மாறி மாறிக்கூட வருவார்கள். அவள் கிளம்பும்போது அவளது முகத்தை பார்த்ததோடு சரி. அந்த முகம் கருத்த முகம். வட்டமான முகம். அவனது நினைவில் தங்கிப் போன முகம். தன் இடமாக இருந்தால் அவளை வசமாகப் பிழிந்திருப்பான். அவளது முட்டை போன்ற கண்களைக் கையை விட்டு பிடுங்கித் தின்றிருப்பான். ஆனால் இருப்பது ஒரு நீண்ட காத்திருப்புக்காக. ஆனால் காவலனைத் தாண்டி அவள் எப்படி உள்ளே நுழைந்தாள். அதோடு தனது உடலின் அழுத்தம் எப்படி நடக்கிறது எனப் புரியாமல் தவித்தான்.

நள்ளியின் பார்வை அவனைக் கொன்று விடுவதாக மிரட்டிக் கொண்டிருந்தது. அவளின் கண்களில் இருந்து கருத்த நாக்குகள் நீண்டன. அவன் தனது கைகளை நீட்டி அவளைத் தடுக்க முயன்றான். அவை காற்றில் அசைந்தன. நீண்டு கொண்டே இருந்த கருத்த நாக்குகள் அவனது தலையை இழுத்துச் சுற்றிக் கொண்டன. நாக்குகளில் விரல்களைப்போலக் கிளைகள் முளைத்தன. அவை அவனது மூக்கிலும் கண்ணிலும் வாயிலும் காதிலும் ஒரு பாம்பைப் போல சரசரவென நுழைந்தன. அவளது பார்வை அவனைக் கேள்விகளால்

துளைத்தெடுத்ததைப்போலிருந்தது. அட்டைகள் அவனது உடலெங்கும் அந்த அறையெங்கும் முழுதாக அடைத்துக் கொண்டு நெளிந்துகொண்டிருந்தன. முகத்தை அந்த நாக்குகள் முழுவதுமாக இறுக்கத் தொடங்கின. அவனது மூளைக்குள் நாக்கு ஊர்வதை அவனால் கவனிக்க முடிந்தது. திமிரக் கூட முடியாமல் முகத்தின் பாகங்களை நாக்குகள் இறுக்க முகம் முழுவதும் வெடித்து நாக்கை மீறிக் குருதியும் சதைகளும் பிதுங்கி வெளியே வரத் தொடங்கின. உடைப்பிலிருந்து வெளித் தள்ளி அவனது ஒற்றைக் கண் பிதுங்கி மேலே ஓடியது. உடலின் கடைசித் துளி வலிமையையும் திரட்டிப் படாரென எழுந்தான். எழுந்த வேகத்தில் கண்ணில் மினிமினி அடித்து விட்டுப் போனது.

சற்று நேரத்திற்கு கண் எரிச்சல் தாங்க முடியாமல் கண்ணை இரண்டு கைகளாலும் தேய்த்துவிட்டான். மொத்த தூக்கத்தையும் கலைத்துப் போட்டுவிட்டது. அவனுக்கு இப்படி நேர்ந்ததே இல்லை. எழுந்து வெளியே வந்தான். அந்தரத்தில் அமைந்திருந்த அந்தக் குடிலின் வெளி நடை மேடையில் தனது காப்பாளன் உலாத்திக் கொண்டிருந்தான்.

பெருவெட்டுப் பூச்சிகள் அறையின் சாளரங்களில் மோதி முகமடிபட்டு மீண்டும் மீண்டும் மோதிக் கொண்டிருந்தன. பெருந்தேற்றன் அந்த நூறு பூச்சிகளையும் பார்த்துக்கொண்டே இருந்தான். அவன் திறந்த கதவை விட்டுத் தீ வெளிச்சம் தென்பட்ட திசையை நோக்கி வெட்டு வண்டுகள் மோதி மோதிக் களிப்புறுவதைப் பார்த்தான். அவனது மனதில் குமரிக் கோட்டின் மாந்தர்களைப் பற்றிய அழகுணர்ச்சிகள் மிதக்கத் தொடங்கியன.

கொன்று அழித்து, தின்று செரிக்க வந்திருக்கக் கூடிய வந்தேறிக் கூட்டத்தையும் அவர்கள் சமமாகப் பாவிக்கிறார்கள். ஒரு வேளை நாம் எதிரி எனத் தெரிந்தால் என்ன ஆவார்கள். இந்த வண்டைப்போல முட்டிமுட்டி மோதித் தங்களையே கொன்று கொள்வார்கள்.

பெருந்தேற்றன் இந்த அகால நேரத்தில் எழுந்து வந்து நிற்பதைக் கண்டதும் காப்பாளன் துணுக்குற்றான். பேசுவதா வேண்டாமா என்றுகூட அவனுக்குத் தெரியவில்லை. ஒன்றுமில்லை என்பதுபோல கண்ணால் சாடை காட்டினான் பெருந்தேற்றன். ஆனால் அவன் மனதுக்குள் குடைந்துகொண்டிருந்த அந்தக் கண்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனுக்குள் இனம்புரியாத அச்சம் கிளரத் தொடங்கியது.

பொதுவாக விருந்தினர்களின் தங்குமிடங்களுக்கு வேண்டிய உணவுகளை நேரடியாக அவர்களது தங்குமிடத்திற்கே வந்து கொடுக்கும் படியாக பிரம்பூரின் குடிகளுக்கு உத்தரவிட்டிருந்தான் கிள்ளி. அதற்கெனத் தனிக் குழுக்களை ஏற்படுத்தி இருந்ததால் ஏழ்பனைக்குள் வரும் விருந்தினர்கள் தங்களது உணவுத் தேவைக்காக அலைய வேண்டிய நிர்பந்தம் ஏதுமில்லாமல் இருந்தது. அதோடு சில இடங்களில் உணவுக் கூடங்களையும் ஏற்படுத்தி இருந்தார்கள். பலர் அங்கும் சென்று தின்பர்.

வழக்கமாக அப்படி உணவு கொண்டு வரும் மாந்தரிக்குப் பதிலாக நள்ளி அவர்களுக்கு உணவு கொடுத்திருந்தாள். அவளது பார்வை அப்போது மிகச் சாதாரணமாகத்தான் இருந்தது. அவளது அந்தக் கோளவிழிகள்தான் இப்போது அவனது தூக்கத்திற்கு வேட்டு வைத்தன.

இருவாஞ்சியும் செம்பனும் எல்லா நாடுகளில் இருந்து வந்துகொண்டிருந்த தகவல்களால் உற்சாகமாக இருந்தனர். எல்லா நாடுகளிலும் மூர்க்கர்கள் பதுங்கியிருக்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு ஆங்காங்கே சமர் தொடங்கிய செய்திகளைத் தாங்கி ஓடும் பிள்ளைகள் வந்துகொண்டிருந்தார்கள். அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்களுக்கும் இச்செய்தி இனித்தது. தொலைதூர நாடுகள் சிலவற்றிலிருந்து மட்டும் இன்னும் சில நாழிகைகளில் செய்திகள் வந்தடையும்.

எல்லாரின் முன்பும் கிள்ளியின் குழுவும் தங்களது உளவில் கண்டறிந்தவற்றைச் சொல்லக் காத்திருந்தனர். நகருக்கு வெளியே உடனடியாக ஏற்படுத்தியிருந்த தற்காலிகக் குடிலுக்குள் விவாதம் நடந்துகொண்டிருந்தது. நள்ளி தலைமையிலான அக்குழு கொடுத்த அறிக்கை அனைவரையும் துணுக்குறச் செய்தது.

பெரும்பாலும் ஏழ்பனைக் குடி மாந்தர்களின் நேரடிச் சொந்தங்கள் வந்தால் ஏழ்பனையில் உறவுகளுடன்தான் தங்குவர். கிள்ளி ஏற்படுத்தியிருக்கும் திருவிழாக் காலக் குடில்களில் சொந்தங்களைச் சாராத வெளி மாந்தர்கள் தங்குவதற்குதான் ஏற்பாடு செய்திருந்தனர். அப்படியிருக்க திருவிழாக் குடில்களில் வந்து தங்கியிருப்போர் திருவிழாத் தொடங்க ஆறு நாள்களுக்கு முன்பே வந்து தங்கியிருப்பதைப் பற்றிய புரிதலே இப்போதுதான் வந்திருக்கிறது. ஆக மூர்க்கர்கள்தான் குடில்களில் மூன்றில் ஒரு பங்கில் ஆக்கிரமித்திருப்பதும் செய்தி அறிந்ததில் இருந்து கவனித்தார்கள். வந்தவர்களை உணவு வழங்கும் குழு மூலம் கணக்கெடுத்திருத்திருந்தார்கள்.

அதோடு அவர்கள் ஒவ்வொருவரின் அறைக்குள்ளும் உணவு வழங்கும் குழுவை அனுமதிக்காமல் வெளியில் நின்றே வாங்கிச் சென்றதையும் கணக்கிட்டு ஆறாயிரத்துக்கு மேலான குடில்களில் மூன்றிலிருந்து பன்னிரண்டு பேர் வரை தங்கியிருப்பதை உறுதி செய்தனர். அந்தக் குடில்கள் முழுக்கப் பின்புறத்தில் இருப்பவை. நுணுக்கமாக நடமாட்டம் குறைவாக இருக்கிற பின்பகுதியைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அஞ்சாவண்ணி அனைத்தையும் கேட்டதும் உறுதியாக எல்லாரையும் பார்த்துவிட்டுச் சொன்னாள்.

“எல்லாக் குடிலையும் கொளுத்திடுவோம்”

யாருமே இதை எதிர் பார்க்கவில்லை. எல்லாரின் கருத்த முகங்களும் ஆங்காங்கே ஏற்றி வைக்கப்பட்டிருந்த அகலின் பொன்னிற ஒளியில் வெளிறியது.

“என்ன சொல்ற ..”

“ஆமா.. இவங்கள எத்தனை தடவ அடிச்சி விரட்டினாலும்.. திரும்பத் திரும்ப நம்மள அடிமையாக்க நினைக்கிறாங்க.. அதோட இயற்கை நடத்தப் போற பேரழிவு பத்தி எதுவும் தெரியாம இருக்காங்க.. ஆனா.. இவங்க தப்பிச்சு, நம்ம மாந்தங்கள கொன்னுட்டா என்னாகுறது... நிரந்தரமா தீர்வு வேனும்னா எல்லாத்தையும் கொளுத்திடலாம்..“

அஞ்சாவண்ணி சொல்லச் சொல்ல அனைவரின் முகத்திலும் புன்னகை தவழத் தொடங்கியது.

உணவுக் குழுவில் ஒருவர், வேட்டைப் பிரிவில் ஒருவர், படைப் பிரிவில் இருவர் என ஒரு குழுவிற்கு நான்கு பேர் பிரிக்கப்பட்டனர். இரு நூறு குழுவிற்கு ஒரு தாய் தலைமையேற்க விரைவாகச் செயல் பட்டனர்.

வழியெங்கும் வரும் மாந்தக் கூட்டத்தை வரவேற்க, வழித் தடமெங்கும் ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருந்த அகல் விளக்குக் கம்பங்கள் முன்பு கொப்பரை கொப்பரையாக எண்ணெய் ஊற்றி அகலுக்குத் தீ வைக்கப் பட்டிருந்தன. முன் யாமத்திற்குள் தீக்குத் தேவையான புன்னை, இலுப்பை, கொட்டையை அரைத்து அதிலிருந்து வழித்தெடுத்த நெய்யைப் பிரம்பூருக்கு வெளியேயும் உள்ளேயும் அலைந்து திரிந்து சேகரித்தார்கள். நகரை நோக்கி வந்தவர்களைத் தடுத்து நிறுத்தியது ஒரு குழு.

இரவுப் பறவைகள் இடைவிடாது குழவும் ஒலியும் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கத் தொடங்கிய பின் யாமத்தில் விருந்தினர் குடில்களை நோக்கிச் சாரி சாரியாக அணி வகுத்த சிறு படைப் பிரிவும் பிரிந்து நகர்ந்தனர். மாந்தர்களைத் தாங்கி வந்த ஆனைகளும் பெருயாளிகளும் தும்பனையும் அங்கேயே விட்டுவிட்டு கைக்கு அடக்கமான கருவிகளை மட்டும் எடுத்துக்கொண்டு திரண்டு வரும் இருளைக் கிழிக்க புறப்பட்ட கதிரவளைப்போல மெல்ல ஊர்ந்தார்கள்.

பெருந்தேற்றன் எப்படியெல்லாம் கனவு கண்டு தனது படைகளைப் பிரித்து உள்ளே ஊடுருவினானோ அதே போன்றதொரு ஊடுருவல். கச்சிதமான திட்டமிடல். அறிவை அறிவால் வெல்லும் முயற்சி.

விசும்பில் நட்சத்திரப் பரல்கள் மின்னிக் கொண்டிருக்க, நிலா முழு வட்டத்திற்காக ஏங்கி ஒளிர்ந்துகொண்டிருக்க, பெருந்தேற்றனின் மூளை நரம்புகள் அவனையும் மீறி இயங்கிக்கொண்டிருந்தன. அந்தக் கண்கள் ஏதோ திட்டமிட்டதைப் போன்ற உணர்வு. தன்னை உளவுப் பார்த்ததை போன்ற எண்ணம். அவனது அடியாழத்தில் உறங்கிக் கிடந்த அரிப்பு மெல்ல மேலெழுந்து அவனை முழுவதும் ஆக்ரமிக்கத் தொடங்கியது. தனது காப்பாளனிடம் சொல்லிக் காமனையும் சோமனையும் உடனடியாக அழைத்து வரச் சொன்னான்.

பிரம்பூரின் குடிகள் உறங்கிக்கொண்டிருக்க, தீரர்கள் குழு குழுவாக விருந்தினர் குடில்களை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். உணவுக் குழுவில் இருந்தவர்கள் மூர்க்கங் குடியர்கள் தங்கியிருந்த குடில்களை அடையாளம் காட்ட, மாபெரும் கொலைக்கான ஒத்திகைபோல ஞாழல் மரங்களில் சிவந்து கிடந்த பூக்களை உதிர்த்தபடி இராப் பறவைகள் விசும்பின் குறைந்த ஒளியில் தனது சிறகை விரித்துக் கூட்டமாகப் பறக்கத் தொடங்கின. ஆனால் இந்தப் பொழுதை அறிந்தோ என்னவோ அதன் சிறகுகளுக்குக் கூடச் சத்தம் எழுப்பும் சக்தியில்லாமல் போனது.

பின் யாமத்தில் அதிகம் இரவோடு உறவாடும் கூகைகளைத்தான் பெருந்தேற்றன் பார்த்திருக்கிறான். அன்றில்கள் சில நேரம் தனது காலம் மறந்து சாமம் மறந்து திளைத்து திடீரெனப் பிறந்த விடியலில் எழுந்ததைப்போலப் சோம்பல் முறித்துக் கொஞ்சலாக கரையும். ஆனால் இவை அன்றில் அல்ல. இதென்ன இரவில் அடையும் பறவைகள் பகல்போலப் பறக்கின்றன என அய்யம் கொண்டான் பெருந்தேற்றன்.

பறவைகள் பறந்த திசையைக் கவனித்தான். அடி வானத்தில் ஒளிரும் கதிரவளை ஒளிக் கற்றைகளைப்போலத் தீப் பந்தங்கள் ஒன்றிலிருந்து சிலவாகி.. பலவாகிப் பெருகுவதைக் கண்டதும் அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை.

அதற்குள் அவனது மனமறிந்து காப்பாளன் காமனையும் சோமனையும் அழைத்து வர, காமனும் சோமனும் தாங்கள் வந்ததுகூட அறியாமல் விக்கித்து, தேற்றன் மேற்கில் பார்த்துக்கொண்டிருப்பதை கண்டனர். கடுங் குளிரில் தூக்கம் வராமல் தவிக்கிறானா.. குளிர் போர்த்தியிருந்த பெருந்தேற்றனின் முகத்தில் துளிர்க்கும் வியர்வையின் பொருள் புரியாமல் திகைத்து அவனது கண்களில் ஒளிரும் தீயின் நாக்குகளை உள் வாங்கி மேற்கில் தங்களது பார்வையைத் திருப்பினர்.

இந்த குளிர் தரும் சூட்டில் தீக் கூட அணைந்துவிடும். ஆனால் அடர்ந்த வெண் பனியில் தீப் பிழம்பாக ஒரு தீக் கூட்டம் எறும்புண்ணிகளைப்போல ஊர்ந்து தங்களது இருப்பிடம் நோக்கி வருவதை அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. சகித்துக் கொள்ள மட்டும் முடியவில்லை.

26 நளித் திங்கள் ஏழாம் திகதி

இருவாஞ்சியும் செம்பனும் தும்பன் மீதமர்ந்து விரைந்து கொண்டிருந்தார்கள். சமரின் இறுதிச் சுற்றுக்காகப் பெருஞ்சுவரை நோக்கி பாய்ந்துகொண்டிருந்தார்கள்.

வானத்தை வெளுத்து வைகறை வண்ணங்களைப் பூசிக் கொண்டிருந்தது. அறுபத்தியெட்டு நாடுகளிலும் புகுந்த சிறு படைக் குழுக்களை அழித்துவிட்டுத் தாய் மாமன்களின் படை பெருஞ்சுவரை

நோக்கிப்பயணித்துக் கொண்டிருந்தது. தாய்களும் தம்மிடமிருந்த படையோடு இணைந்துகொண்ட ஏழ்பனை நகரத் தீரர்களோடும் ஏழ்பனை மாந்தர்களோடும் வழியெங்கும் செய்தி கேட்டுச் சிறு நகர கிராமப் புற மாந்தர்களையும் திரட்டிக்கொண்டு பறந்தார்கள்.

முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டோரை வீழ்த்திய நெகிழ்வில் இருவாஞ்சியின் மார் மீது சாய்ந்து கிடந்தான் செம்பன். செம்பனின் முகத்தில் ஆங்காங்கே தோல் வெந்து கொப்புளங்களாக இருந்தன. உடம்பெங்கும் முகமெங்கும் கருத்த உடலில் மேலும் கருமையும் சாம்பலுமாக நிரவிக் கிடந்தது உடல். கண்களைப் பிரிக்கக்கூட முடியாத அசதியில் உடல் அழுத்தியது. தும்பனின் ஓட்டத்தில் காற்றில் மிதந்து செல்வதுபோல நினைத்து அவள் மீது புரண்டான். இருவாஞ்சி சிம்மத்தின் பிடறியை ஒரு கையாலும் தன் மீது சாய்ந்துறங்கும் செம்பனை ஒரு கையாலும் பிடித்தபடி எதிரே தும்பனின் ஓட்டத்திற்குப் பின்னோக்கிப் பாய்ந்து வரும் மரக் கூட்டங்களின் கிளைகளில் பட்டுவிடாமலும் பறந்து கொண்டிருந்தாள். வேட்டையிலும் நிலமளப்பதிலுமே தனது உடலையும் மனதையும் பயன்படுத்தியவன் செம்பன்.

அவன் ஒரு சிறு போரை முன்னின்று நடத்தியதோ, தும்பனை வளைத்ததோ அதைவிடக் கொடிய சமரொன்றை நோக்கிப் பாய்வதல்லாம் அவனுறுப்பில் தோன்றாத மறைகள். அதைச் செய்து காட்டிய களைப்பு அவனை அழுத்தி இருந்தது.

அஞ்சாவண்ணி சொன்னதுபோலத் திட்டம் சரியாக இருந்தாலும் அறுபத்தியெட்டு நாடுகளின் மாந்தர்கள் தப்பித் தவறிப் பாதித்து விடக் கூடாதே என்கிற வாட்டம் எல்லாரிடமும் தேங்கியிருந்தது. தங்களை அழைத்துச் சென்ற உணவுக் குழுவிடம் ஒரு முறைக்கு நூறு முறை கேட்டுத் தெளிவு பெற்ற பிறகே அக்காரியத்தில் இறங்கினார்கள்.

தொலைவில் இருந்த விருந்தினர் தங்குமிடத்தின் நடை மேடையில் நின்று கொண்டிருந்த பெருந்தேற்றனின் பதற்றத்தைத் தாங்களும் தேக்கியபடி காமனும் சோமனும் வந்தனர். முனைப்போடும் முடிச்சோடும் அவர்களிருந்த அறையை நோக்கிச் செம்பனின் தலைமையில் சிறு குழு நெருங்கிக்கொண்டிருந்தது.

பெருந்தேற்றனின் பார்வையைக் கொண்டே நடக்க இருக்கும் விபரீதத்தை உணர்ந்துகொண்ட காமனும் சோமனும் செய்வதறியாது திகைத்தனர். எவ்வளவு காலம் காத்திருந்து எல்லாரையும் பயிற்றுவித்துப் பல காலம் உளவு பார்த்துப் பெருஞ்சுவரைக் குடைந்து தங்களது

கனவுக்காகக் காத்திருந்தனரோ அது கண் முன்னால் சிதறப் போவதை நம்ப முடியாமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

காமன் உடனடியாகச் செயல்பட்டு, பெருந்தேற்றனைக் குடிலுக்குள் இழுத்துச் சென்றான். பெருந்தேற்றன் விடாப்பிடியாகப் போரிடலாம் என்று சொல்லிக் கொண்டே கருவிகளை எடுக்க ஓடினான். அவனது முகத்தில் பிசிறே இல்லாமல் விரக்தி வடிவமெடுத்து ஆடியது. சோமனுக்கும் காமனின் எண்ணம் சட்டெனத் தொற்றிக் கொண்டது. சரியான திட்டமிட்ட வளைப்பு. அவர்கள் நெருங்குவதற்குள் பெருந்தேற்றனைத் தப்பிக்க வைக்க வேண்டும். சோமனும் காப்பாளனும் குடிலுக்குள் பதுங்கியபடி வெளியே நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தனர். பெருந்தேற்றனின் குடில்தான் எல்லாவற்றையும் தாண்டிய எல்லைப் புறமான சற்று ஒதுக்குப்புறமாக இருந்தது. கடைசிகுடில்.

பாதுகாப்பின் பொருட்டுக் கடைசிக் குடிலை ஏழ் குறும்பனை மாந்தர்களின் மனக் கிடங்கில் ஒளி பிறந்துவிடக்கூடாது என்பதற்காகவும் திட்டங்களுக்கான உரையாடலைத் தொடரும் இடமாகவும் இருக்கட்டுமெனக் காமன் கடைக் கோடியில் தங்க வைத்திருந்தான். பெருந்தேற்றனின் உருவம் மூர்க்கங்குடியில் இருப்பவருக்கே பெரும்பாலும் தெரியாது என்றாலும் கவனமாக இருப்பது நல்லதென அவன் தீட்டியதை நினைத்துத் தன்னையே வியந்துகொண்ட காமன் தங்கும் அறையின் பின் பக்கமிருந்த படலைத் தனது கல் கோடாரியால் அறுத்துத் தழைப்படுத்தினான்.

தாமதிக்கத் துளியளவுகூட நேரமில்லை என்பது புரிந்து சினத்தில் கருவியேந்தி முண்டிக்கொண்டிருந்த பெருந்தேற்றனைக் குதிக்கச் சொல்லி, இழுத்துக்கொண்டுபோய்த் தானும் சேர்ந்து தாவினான்.

தாவும் முன் சோமனுக்குக் கண்ணால் செய்தியனுப்ப, சோமன் அவர்கள் இருளில் மறையும் வரை காத்திருந்து மூக்கை விடைத்து நாக்கை வெளியே நீட்டி ”ஒல்ல்ல்ல்லாஅ...ஒல்ல்லா..” எனத் தனது முழு சக்தியையும் திரட்டி சமிக்--ஞைக் குரல் எழுப்பினான். காப்பாளனும் அதே குரலை ஊத, பக்கத்துக் குடில்களில் சலசலப்புத் தொடங்க, ஒவ்வொரு குடிலில் உறக்கத்தில் இருந்தவர்களும் எழுந்துகொள்ளத் தொடங்கினர்.

ஒரு குடிலில் இருந்து மற்றொரு குடிலுக்கு என ஊதல் தன்னை இடம்பெயர்த்தித் கொண்டே இருந்தது. எல்லாக் குடிலின் காவலனுக்கும் செய்தி பறந்தது. அடுத்த குடிலுக்கு ஊதலைக் கடத்தி விட்டு விரைவாகத்

தனது ஆள்களை ஒவ்வொருவரும் பதறி எழுப்பினர். ஒரு குடிலுக்கும் அடுத்த குடிலுக்கும் இடையே இணைக்கும் நடை மேடையும் இருந்தபடியால் ஒரு காவலன் எல்லாக் கதவையும் தட்டத் தலைப்பட்டான். ஆனால் வாய்ப்பில்லை.

எல்லாக் குடில்களின் மேலும் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தார்கள் பலர். பலர் தீப்பந்தம் பிடித்தபடி இருந்தார்கள். அதோடு அந்தியிலிருந்தே அந்த வளையம் தொடங்கிவிட்டது. தெரிவு செய்யப்பட்ட எல்லாக் குடில்களைச் சுற்றிலும் நாளை விளக்கெறிக்க எதுவுமே இல்லை என்றாலும் சிக்கலில்லை என மரக் கணுக்களில் ஊற்றத் தொடங்கியிருந்தனர்.

வீமனும் காப்பாளனும்கூட பின் வழியே குதித்துத் தங்களின் தலைவன் போன வழியில் ஓடத் துவங்கினர். இருண்ட காடு அவர்கள் மீதும் வெண்பனியின் கருமையைப் போர்த்தியது. இந்த ஒலிக்கு அவர்கள் கட்டறுந்து ஓட வேண்டும். எல்லாக் குடில்களின் கீழும் நின்ற சிறு சிறு குழுவான பெரும் படை புன்னை நெய்யைக் குடில் மீதும் குடிலைச் சுற்றியும் வேகமாக ஊற்ற, உள்ளிருந்த மூர்க்கர்கள் சுதாரித்து வெளியே வந்து பார்க்க, எல்லா குடில்களின் கீழும் தீ கனன்ற பந்தங்களோடு ஆள்கள் நிற்பதைக் கண்டார்கள்.

செம்பன் தான் வந்து நின்ற குடிலின் பின்னால் இருவர் ஓடுவதைக் கண்டுகொண்டு அவர்களை விரட்டத் தொடங்கினான். அவனோடு வந்த குழு அவனைப் பின் பற்றி ஓடியது.

எல்லாக் குடில்களும் ஒரே நேரத்தில் மரநெய்யூற்றித் தீ வைக்கப்பட்டது. உள்ளிருந்த மூர்க்கர்கள் தீ தீண்டாமல் தப்பிக்க மேலிருந்து குதிக்கத் தொடங்கினர். சிலர் நடப்பது என்ன என்று புரிவதற்குள் தீயின் நாக்குக்குத் தன்னைத் தின்னக் கொடுத்து எறிந்துகொண்டே மேலிருந்து கீழே விழுந்தனர். நகரையும் நுழை வாயில்களையும் குடில்களையும் எரித்துவிட, அவர்கள் சேகரித்து வைத்திருந்த எண்ணெய்களும் பிசின்களும் அவர்களையே எரித்ததோடு நிற்காமல் விசும்பைத் தொட்டுவிடக்கூடிய அளவில் வெடித்துக் கிளை பரப்பின. அந்த ஓசையில் உறங்கிக் கிடந்த பிரம்பூர் மாந்தர்கள் திகிலடைந்து எழுந்தார்கள்.

மரண ஓலங்களும் கதறல்களும் மேகங்களைக் கிழித்துக் கொண்டு விசும்பில் பாய்ந்தன. ஏழ் குறும்பனை நகரில் மகிழ்வின் தாலாட்டில் மூச்சைச் சரியான வழியில் விட்டுக்கொண்டிருந்த மாந்தர்கள்

திடுக்கிட்டு விழித்து அலறல் வரும் திசையை நோக்கி ஓடி வந்தனர். தீயோடு குதித்தவர்கள் பலர் காடுகளுக்குள் நீர்த் தடம் தேடி ஓடினர். அவர்களை தின்றத் தீ காட்டையும் பற்றிக் கொள்ள, வனத்தின் ஒரு முனையெங்கும் தீயின் வெம்மை படரத் தொடங்கியது. வனத்தின் அருகாமையில் ஒண்டிக் கிடந்த சிறு விலங்குகள் அலறிப் புடைத்துக்கொண்டு தீயின் எதிர் திசை நோக்கிக் கூட்டம் கூட்டமாக உடன் ஓடி வரும் மூர்க்கர்களைக் கடந்து ஓடத் தொடங்கின.

மரங்கள் காற்றின் வேகத்தில் ஒன்றையொன்று மோதிக் கொள்ளும்போது சில நேரங்களில் உராய்வினால் தீக் கங்குகள் பிடிக்கும். காய்ந்த ஏதாவது இலையோ சருகோ அத்தீக் கங்குகளில் மாட்டினால் அவ்வளவுதான் கதி. காடே பற்றி எரியும். பனிக் மலைகளைக்கூடக் கரைக்கும் காட்டின் பெருந்தீயின் சுவை வேகம்.

அப்படியான ஒரு தீ. அப்படித்தான் தாய்கள் திட்டமிட்டார்கள். ஆனால் பற்றியது பெருந்தீ. தீயை எந்த மாந்தனாலும் அடக்க முடியாது. தப்பிப் பிழைக்கப் போராடியவர்களைத் தூக்கித் தீயில் போட்டவர்களே அரை உடம்பைத் தீக்குக் கொடுத்தார்கள் என்றால் தீயின் நாக்கு எப்படி எந்த திசையில் வளைக்கும் என்றே தெரியாது. குமரிக் கோட்டின் பெரும் பனியே பொழியும் இடத்திலும் தீ எல்லாவற்றையும் மாற்றி விடுகிறது. அதன் கனல் உலகத்தின் பெரு மிருகம் போன்றது. தீயில் வெந்துகொண்டே காடுகளுக்குள் ஓடிய மூர்க்கர்களைக் கண்டு சிறு மிருகங்கள் தெறித்து ஓடின. அவை வருவதைக் கண்ட மகரயாளிகள் சிறு மரங்களைத் தாவித் தாண்டியோடின. உறங்கிக் கிடந்த பறவைகளும் வல்லூறுகளும் மரங்களின் கிளைகளில் வெந்து கொண்டிருந்த வெப்பத்தின் அனப்புப் தாங்காமல் பெருங் கூச்சலிட்டுப் புதிய மேகங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் புகையின் வீச்சைத் தாண்டிப் பறந்தன.

குமரிக் கோட்டிலேயே மிருகங்கள் மாந்தர்கள் தப்பிக்க முடியாத அப் பெரும் நெருப்பில் அண்டமே எரிவதுபோலான தோற்றம் கிடைத்தது.

மேலிருந்து சில மூர்க்கர்கள் தங்களது கருவிகளால் கீழிருந்த படைகளைத் தாக்க, தயாராக இருந்த பிரம்பூரின் வில்லம்புப் படையினர் அவர்களை அம்பெய்து கொல்ல முயன்றனர். அம்புகள் சரமாரியாகக் காலிலும் தலையிலும் வயிற்றிலும் இடுப்பிலும் குத்திக் கிழிக்க, மூர்க்கர்களின் குருதி தீயின் அகண்டத்தைத் தாண்டிப் பீய்ச்சியடிக்க, அவர்கள் அலறித் துடித்து மீண்டும் தீக்குள் விழுந்து உடல் வெந்து

நரம்புகள் வெடித்துக் கீழே சரிந்தனர். பல நூறு காலமாக மாந்தரிகளைத் தீயில் தூக்கிப் போட்டுக் கொன்று சதைகளைக் கிளறித் தின்ற அவர்களுக்குத் தீயில் வெந்துகொண்டிருக்கிறோம். எங்குத் திரும்பினாலும் சம அளவில் மாந்தரிகள். அவர்கள் நமது உறுப்புக்காக ஏங்கவில்லை. மாந்த உறுப்புகளைத் தொடுவதற்கு அவர்கள் சிந்திக்கவில்லை என்பதை வெந்துகொண்டிருந்த தீயில் உடல் கருகிக் கொண்டிருந்தவர்கள் நினைத்துக்கொண்டே வெந்து மாண்டார்கள்.

மாந்தர்களின் உடல் கருகி வெளியேறும் முடை வாசனையை மோர முடியாமல் வீரர்களே சற்றுத் தள்ளி நின்றனர். சிலர் தீயிடமிருந்து தப்பித்துக் கீழே குதித்துக் கிடைத்த கருவிகளைக் கொண்டு சமரிட முயன்று முடியாமல் குத்துப் பட்டு குடல் வெளித் தள்ளச் சுருண்டு விழுந்தார்கள். திக்கெட்டும் தீ மூர்க்கர்களின் குருதியை குடித்து மேலும் மெருகேறிப் பற்றிப் படர்ந்தது. சிலர் தீயையும் மீறி அம்புகளையும் மீறிக் கீழே குதித்துப் படை வீரர்களின் முன்பு படுத்துத் தங்களைக் கொல்ல வேண்டாம் எனக் கெஞ்சினர். அப்படிக் கெஞ்சியவர்களைக் குமரி நாரால் புனையப்பட்ட கயிற்றால் பிணைத்தனர்.

பிரம்பூரிலிருந்து ஓடி வந்த கூட்டத்திற்கு என்ன நடக்கிறதென்றே புரியவில்லை. வெளியிலிருந்து வந்து தங்கியிருந்த குமரிக் கோட்டு மாந்தர்களுக்கும் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதே விடையில்லாமல் இருந்தது. எப்படித் தீப் பிடித்தது. யார் யாரிடம் எதற்காகச் சண்டையிடுகிறார்கள் என எதுவும் தெரியாமல் திகைத்தனர். அறுபத்தியெட்டு நாடுகளிலும் இதுவரை அவர்கள் பார்த்திராத சண்டை இது. எப்பொழுதாவது வனத்தில் தீப்பற்றிப் படர்ந்து பின் தானே எரிந்து அடங்குவதை மட்டுமே இதுவரை பார்த்திருக்கிறார்கள்.

குடில்களில் நிறைந்திருந்த விருந்தினர்கள் தீயில் எரிவதாகப் பானைகளில் நீர் நிரப்பிக் கொண்டு ஓடி வந்தவர்கள் விருந்தினர்களை யாரோ தீயிட்டு எரிப்பதையும் மீறி வெளியே வருபவர்களைக் கருவிகளால் வெட்டி வீழ்த்துவதையும் பார்த்துத் திருப்பித் தாக்கக்கூட தோன்றாமல் அதிர்ந்து நின்றார்கள். அவர்களுக்குச் சொல்ல ஆயிரம் கதைகளோடு காத்திருந்தார்கள் வீரர்கள்.

செம்பனின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிற்குக் கிள்ளியே நடைமுறைச் செயல்களைப் புகுத்தினான். ஒரு நாள் முழுக்கக் கண்காணித்த குழுவின் துல்லியமான புள்ளிகளை வளையங்களாக்கினார்கள்.

கிள்ளியின் குழுவைப் பொறுத்தவரை அவர்கள் தோல்வி அடைந்தவர்கள். இவர்களால் கவனிக்க முடியாமல் போனதால்தான் பெரும் படையே உள்ளே நுழைந்திருக்கிறது. அதோடு பத்து நாள்களாக சோறு போட்டு, சண்டையிடத் தாங்களே வலுக் கூட்டியிருக்கிறோம் என்பதில் மிகக் காட்டமாக இருந்தார்கள். தங்களை ஏமாற்றிய அக்கூட்டத்தையும் அத்தலைவனையும் பலி கொள்ள எதற்கும் துணிந்தவர்களாக உணவு கொடுக்கும் குழுவினரும் வேட்டைக்குத் தயாரான குழுவினரும் காத்திருந்தனர்.

ஒரு நாள் முழுக்கத் தேடியதில் அனைத்தும் பிடிபட்டது. அதற்குத் தலைமையேற்ற நள்ளியிடம் வந்து மூர்க்கர்கள் கருவிகள் பதுக்கியதிலிருந்து காத்திருப்பது மற்றும் தலைவர்கள் தனித் தனியே கூடிப் பேசுவது வரைக்கும், உள் தலைமைகள் எப்படிச் செயலாற்ற வேண்டும் என உரையாடியது வரைக்கும் சேகரித்து அச்சுப் பிசகாமல் மனனம்போல ஒப்புவித்துவிட்டனர்.

பெருயாளியில் பாய்ந்து வந்த அஞ்சாவண்ணி தனது கையில் பிடித்திருந்த தீப்பந்தம் மூலமாகத் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டே பறந்தாள். தொண்ணூறாயிரத்திற்கும் மேலான பிரம்பூர் மாந்தர்களும், வந்து தங்கிருந்த விருந்தினர்களும் அஞ்சாவண்ணியைப் பார்த்ததும் கேள்வியோடு நின்றார்கள்.

அவள் பறக்க, அவளுக்குப் பின்னே இருவாஞ்சி தீப்பந்தம் ஏந்தியபடி தும்பனை நடையாகக் கூட்டிச் செல்ல, தும்பனையும் இருவாஞ்சியையும் கண்டு கூட்டம் நூறடி பின்னால் சென்றது. இருவாஞ்சி தும்பனைப் பிடித்த செய்தியறிந்து அதைக் காண, வரவேற்க, கொண்டாடி மகிழ ஆவலாக இருந்த பிரம்பூரின் மாந்தக் கூட்டம் இந்தத் தீப் பற்றலில் குலைந்து போயிருந்தது. அறுபதடி உயரம் கொண்ட தும்பனைத் திடீரெனப் பார்த்ததும் விக்கித்துப் போனார்கள். திடீரென முன்னாலிருந்த கூட்டம் பயந்து பின்னால் போக, பின்னாலிருந்து கூட்டம் முன்னால் முண்டியடிக்க ஆனை வாயில் மாட்டிய மூங்கில் தண்டைப்போலக் கூட்டம் வதங்கியது. நெரிசலில் சலசலப்பும் முண்டியதில் சிலர் காயமடைந்தும் மூச்சுத் திணறவும்கூடச் செய்தனர். அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்களும் மாந்தக் கூட்டத்தை நோக்கி அமைதியாக இருக்கும்படி தங்களது கைகளை உயரத் தூக்கிக் காட்டினார்கள். மாந்தர்கள் தீயில் வெந்து கறுகுவதை அலறல்களைக் கேட்டு அஞ்சாவண்ணி மருகினாள். தன் நாட்டிலா இத்தனை உயிர்கள் கொல்லப்பட வேண்டும். அதைத் தன் கண் முன்னே பார்த்துக்கொண்டிருக்கும் பெரும் துயரை இவ்வண்டம்

வாழ்நாளில் பார்த்ததில்லை. இனியும் பார்க்கப் போவதுமில்லை. இத்திட்டத்தை எல்லாரையும் நேசிக்கும் தாயே செய்தாள் என்பதை எப்படிச் சொல்வாள். தானே முன்னின்று செய்தாலும் இதைத் தானே செய்யச் சொன்ன பொழுதும் அவளால் தாங்க முடியாத வெறுமையை முதன் முதலாகக் கண்டாள். அவள்தான் இதை செய்ய வேண்டும் என்று சொன்னாள். வேறு வழியில்லை. பொறுப்பை வரலாற்றில் அவள் பெயரால் எழுதித் தொலைக்கட்டும் எனக் கண்ணீரைச் சிந்தி நின்றாள்.

வனத்திற்குள் பெருந்தேற்றனையும் காமனையும் சோமனையும் காப்பாளனையும் விரட்டிச் சென்ற செம்பனின் குழு அவர்கள் மறைந்த தடம் தெரியாமல் திரும்பி வந்தனர்.

தாய் மச்சக்கன்னி தன் முன்னால் கூடியிருக்கும் ஏழ்பனை மாந்தக் கூட்டத்திடம் உரத்துச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

“பிரம்பூர் மாந்தங்களே.. கொத்தவை விழாவுக்கு வந்தவங்களே நீங்க யாரும் பயப்பட வேண்டாம் மொதல்ல.. ஒவ்வொருத்தரும் அவங்க கை நீளுற அளவுக்கு இடைவெளி விட்டு நில்லுங்க.. ”

மொத்த மாந்தக் கூட்டமும் ஒருவர் பின் ஒருவராகத் தங்களுக்கு முன்னே நிற்பவரின் முன்பு கை நீட்டி நின்று இடைவெளி ஏற்படுத்தி நின்றனர். அறுபத்தியெட்டு நாட்டுத் தாய்களும் அவர்களுக்கு இடையே புகுந்து மாந்தர்களின் செவிகளுக்கு குரல் கேட்கும் வண்ணம் நின்று ஒரே செய்தியை சொல்லத் தொடங்கினர்.

“அறுபத்தியெட்டு நாட்டு தாய்களும் இங்கதான் கூடி நிக்கிறோம்.. நாம சந்திக்காத புது இடர்பாடு இது மூர்க்கங் குடியில இருந்து நூறாயிரம் பேர் படயெடுத்து வந்திருக்காங்க.. நம்ம புடிச்சு அடிமையாக்கிபுடனும்னு கங்கணம் கட்டிக்கிட்டு வந்திருக்காங்க அவங்கள்ள முப்பாதாயிரம் பேரு முன்னாடியே இங்க வந்து நம்ம விருந்தினர் குடில்ல தங்கி, பல்லியம் இசைக்கிறப்போ தாக்குறதா திட்டம் போட்டிருந்தாங்க, அததான் நாங்க முறியடிச்சிருக்கோம் இன்னும் அம்பதாயிரம் பேரு படையோட பெருஞ்சுவர்கிட்ட நின்னுகிட்டு இருக்காங்க. அவங்கள தாக்க தாய் மாமங்க படை திரட்டிகிட்டு வந்து கிட்டு இருக்காங்க உங்கள்ல யாருக்கெல்லாம் நல்லா பயிற்சி இருக்குதோ அவங்கல்லாம் போருக்கு வரலாம் வர முடியாதவுங்க கொத்தவ வெறியாட்டுக்கு வந்துகிட்டிருக்கிற மாந்தர்கள வரவேத்து, தங்க இடம் கொடுத்துக் கவனிச்சுக்கலாம்.. அதோட இந்தத் தீய அணைச்சு செத்தவங்கள எல்லாம் குழி தோண்டிப் பொதைக்கனும்.. மிருகங்ககிட்ட பொணத்த விட்டுறக் கூடாது.. அப்புறம்

கரி நாத்தம் புடிச்சு பிற்காலத்துல நம்மையும் தாக்க ஆரம்பிச்சுடும்.. எந்தக் காரணத்தக் கொண்டும் கொத்தவக்கி நடத்தப் போற விழாவுல எந்தத் தேக்கமும் இருக்கக் கூடாது. சிறைப் பட்டவங்கள வாகனக் கொட்டடியில கட்டிப் போடுங்க. விழா முடிஞ்சதும் என்ன செய்யலாம்னு முடிவு பண்ணலாம்.''

எல்லாருக்கும் புரியும்படி உரத்துச் சொன்னார்கள். இவ்வளவு நடந்திருக்கிறது நமக்குத் தெரியாமல் போனதே என ஒரு கணம் தங்களையே நொந்துகொண்டனர். செம்பன் வந்து முன்னால் வந்து நின்றான்.

''கடைசிக் குடிலில இருந்தவங்க தப்பிச்சு போய்ட்டாங்க.. அவங்களத் தேடி போனோம்.. ஆள காங்கல.. எப்படியும் நமக்கு முன்னாடி பெருஞ்சுவர்கிட்ட போயிடுவாங்க''

''செம்பா.. அவந்தான் பெருந்தேற்றனா இருப்பான்.. அவன் எங்க போயிருப்பான்னு நம்மாளால தெரிஞ்சிக்கக் கூடியதுதான். ஏழ்பனை நகரம்தான்.. அவங்க மொத இலக்கு.. அதையே தகர்த்துட்டோம்.. நாம அவங்களுக்கு எந்தத் தீங்கும் இழைக்கல.. அவங்க தான் நம்மள வெறுப்பா நினைக்கிறாங்க.. அதனால நம்ம மேல அவங்க திணிச்ச போருக்கு சரியா திருப்பியடிக்கனணும். கொத்தவய மனசுல ஏந்திக்கிட்டு சமருக்கு அணியமாவோம் ''

செம்பன் உற்சாகமாகி இருவாஞ்சியோடு தும்பன் மீதேற இருவரும் எல்லாருக்கும் முன்னே பாய்ந்தனர். எரிந்த உடல்களைக் கொத்தி தின்ன ஏராளமான கழுகுகள் வரத் தொடங்கின. காட்டில் பதுங்கிய விலங்குகள் மாந்த உடல் வெந்த சுவையை நாக்கிலேற்றிப் பிரம்பூரின் குடில்களைத் தேடி வரத் தொடங்கின. விசும்பின் அடிவாரத்தைத் தனது கற்றைகளால் கீறியபடி கதிரவள் எழுந்துகொண்டிருந்தாள். சிலு சிலுப்பான மென்பனியில் மெல்லக் கண்ணயர்ந்தான் செம்பன்.

27 நளித் திங்கள் ஏழாம் நாள்

நாக நாட்டிலும் ஆரப்பர் நாட்டிலும் சேர்த்துத் தோரயமாக இரு நூறாயிரம் மாந்தர்களாவது இருப்பார்கள். அவர்கள் யாவருமே சிறிய படகுகளை மட்டுமே போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வந்தனர். இளநாகன் ஆரப்பர்களிடம் சண்டையிட முடிவெடுத்த பிறகுதான் நீள் வத்தைகளை உருவாக்கத் தொடங்கினார்கள். நீள் வத்தைகள் நடுவில் பருமனாகவும் முன்னாலும் பின்னாலும் நீண்டு இருக்கும்படி செய்திருந்தார்கள். அதனால் அவர்களிடம் வலிமையான திமில் கட்டுமானங்கள் குறித்த தெளிந்த பார்வை இல்லாமல் இருந்தனர். இரண்டு நாடுகளுக்கும் திருக்கையன் பயணம் செய்ததில் திமில்களை உருவாக்கும் பணி என்பது மிகுந்த சவாலானது என்பதை உணர்ந்தான். திருக்கையனோடு கிளம்பி வந்த கம்மியர்களும் தச்சர்களும் காடுகளில் அலைந்து தேவையான மரங்களைத் தேர்வு செய்ய, நாகர்களும் ஆரப்பர்களும் அவர்கள் அடையாளம் காட்டிய காய்ந்த மரங்களை வெட்டத் தொடங்கினர்.

மாந்த குலத்தைச் சூழ்ந்திருக்கும் பேராபத்தைப் பற்றி அவர்களது நாடுகளின் தலைவர் சொல்லாமல் நீங்களாக வெளிப்படுத்த வேண்டாம் என்று தாய்கள் அறிவுறுத்தி அனுப்பி வைத்தனர். இரண்டாம் நிலைத் தலைவர்களைக் கொண்டுதான் அங்குத் தனது வேலைக்கான ஆள்களைத் தேர்வு செய்தான். முதல் இரண்டு நாள்களுக்குத் திருக்கையனின் குழு சொல்வதை அங்கிருந்த கட்டுமான ஆள்கள் புரிந்துகொள்ள முடியாமல் தடுமாறினர். அவர்களிடம் போதுமான மொழியறிவு இல்லாமல் இருந்தது.

அதனால் கட்டுமான வரைபடங்களைப் பகுதி பகுதியாக வரைந்தனர். அதை அங்கிருக்கும் கம்மியர்களிடமும் தச்சர்களிடமும் கொடுத்துத் தனித்தனிப் பாகங்களாக முதலில் உருவாக்கத் தொடங்கினர். இறுதியாக அவற்றை இணைத்து மூடுதிமிலை உருவாக்கிட முடியும் என ஆழமாக நம்பினான்.

ஆனால் அதற்குத் தேவையான கருவிகள் இல்லாமல் இருந்தன. அவர்கள் வேட்டைக்காக வைத்திருந்த அனைத்துக் கருவிகளையும் கொண்டு வந்து பொதுவில் வைக்கச் சொன்னான்.

அதிலிருந்து தச்சர்கள் சிலவற்றைச் தேர்வுசெய்தனர். கம்மியர் களிடமிருந்த கருவிகளைக் காட்டி அது போன்ற கருவிகளை உருவாக்கவும் ஒரு குழு அமைக்கவேண்டி இருந்தது. வேற்று நிலத்திலிருந்து வந்து அவர்கள் அதிகாரம் செய்வதைச் சட்டென ஆரப்பர்களாலும் நாகர்களாலும் ஏற்க முடியவில்லை. இளநாகனும் செம்படவனும் அனுப்பிய முக்கியர்களுக்கு மட்டும் தெரிந்த உண்மையைச் சொல்ல முடியாமலும் வேலையை நகர்த்த வேண்டும் என்பதிலும் சில குழப்பங்கள் தொடக்கத்தில் வந்தன. குறிப்பாகத் தட்டையான தமிழை அவர்கள் பேசுவதும் புரியாத பல சொற்களில் அவர்கள் வேகமாக உரையாடுவதையும் சட்டென அவனால் உள்வாங்க முடியவில்லை.

ஆனால் உடன் வந்த இந்நாட்டினர் உறுதியாக நின்று திருக்கையனுக்குத் தோள் கொடுக்கத் தொடங்கியதும் எல்லாம் மாறியது.

28 நளித் திங்கள் ஒன்பதாம் நாள்

ஆதியில் இறைச்சித் துண்டிற்கான சண்டை. காமத்திற்கான வேட்டை. பின் குழுத் தலைமைக்கான சண்டை. உறவுச் சண்டை. முன் கோவச் சண்டை. புரிதலற்ற வேகத்தில் சண்டை. யார் பெரியவர் என்கிற சண்டையெல்லாம் நிகழ்ந்தது. தன் இருப்பிடப் போராட்டம். தனது மாந்தர்களுக்காகக் களமாடுதல். பிற உயிர்களிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் மூர்க்க மோதல் என்றிருந்த காலத்தை அணு அணுவாக

நகர்த்தி, சிக்கலின் ஆதிப் புள்ளியைத் தொட்டுத் தீர்வு காணப் போராடி, பெரும் போர்கள் மூளாமல் தடுத்து, குடிகளை அறிவுத் திரட்டிலும் கொண்டாட்டத்திலும் ஆழ்த்துகிற கலைகளை உயர்த்துவதன் வழிச் சமன் செய்தார்கள்.

மூர்க்கங்குடிக்குக்கூட மாந்த அறிவை உழன்று குமைந்து கிடக்கும் உருவமற்ற எண்ணங்களைச் செழுமைப்படுத்தவே மாந்தர்களுக்குத் தண்டனைச் சடங்குகளை வழங்கி அவர்களை நெறிப்படுத்த முயன்றார்கள்.

நெறித்தழையை முறித்துக் களித்தழையை உள் வாங்கிய கோர மனம் மீண்டும் உயிர் பெறுவது எளிதாக இல்லாமல் போய், அவர்களே பெருங்குடியாகிப் பல ஆண்டுகளாக நீடித்து நிற்கிறது பெரும் பகை. வேரின் முதல் நுனியைக் காண முடியாத காலத்திற்கு ஒப்பாகப் பெருத்திருந்த அப்பகைக்கு இறுதி முடிவாக இருக்க வேண்டுமென விரும்பினாள் இருவாஞ்சி. வரப்போகும் பேரூழியில் யார் இருப்போம் பிழைப்போமெனத் தெரியாது. எதிர் காலத்தில் பிழைத்துக் கிடப்போர் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் பகையை வளர்த்துக்கொள்ளக் கூடாது. அதற்கு ஒப்புமையில்லாப் சமரொன்றில் முற்றிலுமாக மூர்க்கங்குடியர்களை அழித்தாக வேண்டும்.

இதுவரை அவர்களை அழித்தது மதியால். இனிதான் நேரடிச் சமர். அஞ்சாவண்ணி அனைவரையும் தீயிட்டுக் கொளுத்தச் சொன்னபோது இருவாஞ்சி மிகவும் துயருற்றாள். தனது தாய்க்குப் பிடித்திருக்கும் வெறி, மாந்த குலத்திற்கே எதிரானது என்றெல்லாம் நினைத்தாள். எல்லாரையும் சிறைப்படுத்தலாமே என்றெல்லாம் தன்னை வாட்டிப் பார்த்தாள். தாயின் முடிவு குறித்து நெடுங்கால மாந்தக் குலத்தின் நீட்டிப்பிற்கும் ஒருவரை ஒருவர் அடிமைகொள்ளாமல் கருத்து நிலையில் மோதிக்கொள்ளும் அறிவுச்சமூகத்திற்கும் தடையாக மூர்க்கங் குடியர்கள் இருப்பார்கள் என்பதைத் தனக்குள் கனன்ற கேள்விகளுக்குப் பதில் தர்க்கங்களூடாக அகன்ற தனது மன ஓட்டத்தின் பரப்பை விரித்து இரு தரப்பில் நின்று மோதிப் புரிந்துகொண்டாள். அதன் பிறகு அவளும் அம்முடிவிற்கு வந்திருந்தாள்.

பெருஞ்சுவருக்கு முன்பாக இரு காத தூரத்தில் திட்ட மிட்டிருந்தபடி தாய்மாமன்கள் திரட்டிவந்த பெரும் படை நின்றிருந்தது. ஆங்காங்கே அறுபத்தியேழு நிலைகளிலும் பதுங்கியிருந்த மூர்க்கக் குழுக்களை அழித்துவிட்டு, ஒவ்வொரு நாட்டிலும் இருந்த வீரர்களை ஒருங்கிணைத்து ஒரு புள்ளியை நோக்கி மொத்தமாகத் திரட்டியிருக்கிறார்கள். அதோடு ஏழ் குறும்பனைக்கு வருவோரைப் பாதுகாக்க, உபசரிக்கக் குழுக்களைப் பிரித்ததுபோக, ஏழ் குறும்பனையிலிருந்தும் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பெரும்படைத் தாய்களின் தலைமையில் வந்து சேர்ந்திருந்தது.

சமரில் நேரும் காயங்களை ஆற்ற, மருந்திட, மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டோரைச் சமர் நடக்கும் தூரத்திலிருந்து ஒரு காத தூரத்திற்குக் கொண்டு செல்லத் தென்னன் தனது மருத்துவக் குழுவையும் ஒருங்கிணைத்திருந்தான். தென்னனுக்குப் பேரூழியில் அறிவுத் திரட்டலைக் கொண்டு சேர்க்கும் பொறுப்பிலிருந்தாலும் சமருக்கும் தன்னைத் தயார்ப்படுத்த வேண்டுமென்று எல்லா இடங்களிலும் இருந்த மருத்துவர்களை, உதவியாளர்களைப் பெருஞ் சுவருக்கு வரும்படி ஆளனுப்பித் தயார் படுத்தியிருந்தான். பெருஞ் சுவருக்கு வடக்கே இருந்த அனைத்துக் கிராமங்களும் இப்பெரும் படைக்கான உணவைச் சேகரித்து அனுப்பிக்கொண்டிருந்தன. நேரக் குறைவில் எதையும் முழுமையாகத் திட்டமிட முடியவில்லை என்றாலும்கூட கிராமத் தாய்களும் மாமன்களும் மாந்தர்களைத் திரட்டி இருந்த சேகரிப்பைப் படைகளுக்கு அனுப்பினார்கள்.

கிட்டத்தட்ட எல்லாரையும் சேர்த்து நாற்பதாயிரத்திற்கு அதிகமான படைப்பிரிவு தயாராக இருந்தது. கொற்றவை வெறியாட்டுக்கு ஏழு நாள்களே இருக்கும் இவ்வேளையில் பயிற்சியில்லாத இப்படையை வைத்துக்கொண்டு நம்மைவிடக் கூடுதலாக இருக்கும் திட்டமிட்ட பல காலம் பயின்று, உறுதியான கருவிகளை உருவாக்கி நேர்கொண்டு நிற்கும் மூர்க்கப் படையை எதிர் கொள்வது அச்சமாகத்தான் இருந்தது. அதனால் மிகக் கவனமாகப் படைகளை நகர்தல், சுழல்தல், நேர்தல் எனப் பிரித்தார்கள்.

நகர்தல் படையில் முன் களத்தில் நிற்கும் வீரர்கள் எருமை மீதமர்ந்து முன்னகர அவர்களைத் தாக்க வரும் மூர்க்கர் படையைச் சற்றுத் தள்ளிப் பின்னகர்ந்து வரும் நேர்தல் படை முன்கள வீரர்களுக்குப் பாதுகாப்பாகப் பின்னிருந்து பெருயாளியின் மீதிருந்து அம்பெய்து தாக்குவர். அக்கணத்தில் சுழல்தலில் இடம் பெறும் வீரர்கள்

தரையிலிருந்து தாக்கியபடியே மூர்க்கர் படையைச் சுற்றி வளைத்தும் தாக்கியும் கொல்ல வேண்டும் . சுழல்தல் படை அரண் அமைத்து எதிரிகளின் மீது தாக்குதல் தொடுக்கும்போது மற்ற இரு படைகளும் தாக்கி அழிக்கும் உத்தியைக் கைக்கொள்ள வேண்டும் என்பதே திட்டம்.

நேர்தல் படைக்குச் செம்பனும், சுழல்தல் படைக்கு இருவாஞ்சியும் தலைமையேற்றனர். நகர்தல் படைக்கு அஞ்சாவண்ணி பொறுப்பேற்றுக்கொண்டாள். ஒவ்வொரு படையணிகளிலும் பல சிறு பிரிவுகளை உண்டாக்கி அவற்றுக்குத் தாய்களும் மாமன்களும் தலைமையேற்றுக் கட்டளைத் தளத்தில் நின்றனர். முன்னகர்ந்து சென்று உளவு பார்க்கப்போன நல்லி விரைந்து வந்தாள். தாய்களின் முன்பு நின்றாள்.

“மூர்க்கங்க பெருஞ்சுவர ஒட்டித்தான் நிக்கிறாங்க. பெருயாளிப் படையே அஞ்சாயிரத்துக்கு மேல இருக்கலாம். ஆனைப் படை இரண்டாயிரம் இருக்கலாம். எல்லாரும் புதுமையான கருவிகள வச்சிருக்காங்க. ஒடம்ப மறைக்கிற கவசம் தரிச்சிருக்காங்க. முன்னாடி பாதி படை நிக்கிது. பெருஞ்சுவருக்குப் பின்னாடியும் படையிருக்கலாம். அப்படியில்லன்னா சுவருக்குப் பின்னாடி இருந்து திங்கத் தேவையானதை அனுப்பும் ஆள்கள் இருக்கலாம். அதோட அவங்களுக்குத் தகவல் போயிருக்குன்னு நினைக்கிறேன். தாக்குறதுக்கான தயார் நெலையில நிக்கிறாங்க!”

நல்லிதான் கண்டவற்றைச் சொல்லி முடிக்கும் முன் செம்பன் இடை மறித்துச் சொன்னான்

“ஆமா, ஏழ்பனைக் குடிலில் இருந்து சிலர் தப்பிப் போயிட்டாங்க. அநேகமா அவங்கதான் தயார் படுத்தி இருப்பாங்க!”

அஞ்சாவண்ணி இருவர் சொன்னதையும் கேட்ட பிறகு உறுதியாகச் சொன்னாள்.

“எந்த நிலமைக்கும் நாமளும் தயாராத்தான் வந்திருக்கோம். நம்மோட கடைசி உசிர் இருக்கிற வரைக்கும் போராடுவோம். மெந்தாரகை நீ உன் ஆள்களக் கொண்டு முரசு கொட்டு. நாம போகும்போது காட்டுல இருக்கிற விலங்குக ஓடட்டும். நாம போருக்குத் தயாரா இருக்கோம்னு அவங்க அறியட்டும்!”

அருகன் தேவையான ஆவணங்களைத் திரட்டியிருந்தான். அவனது குழுவில் இருந்த சிலரிடம் ஆவணங்களை ஒப்படைத்து கோகன்

சொல்லும் வழி முறையைப் பின்பற்றி எங்குச் சேர்க்க வேண்டுமோ அங்குச் சேர்க்கச் சொல்லிவிட்டு, ஏழ்பனைக்குக் கிளம்ப, மெந்தாரகை போர் நடக்கும் இடத்திற்கு முரசு கொட்டும் குழுவுடன் முன்பே வந்துவிட்டிருந்தாள்.

போர் நடக்கும் இடத்தில் தெறிக்கும் குருதியை மோப்பம் பிடித்துக் கொடிய விலங்குகள், ஆள் தூக்கும் பறவைகள் வந்துவிட்டால் சமர் நடந்துகொண்டிருக்கும் பொழுதே அவையும் இரைகளைத் தாக்கும். அவ்வாறு இரைகளான மாந்தர்களைத் தாக்கினால் குழப்பம் ஏற்படும். குழப்பத்தில் சமரின் போக்கே மாறிவிடும். யார் யாரைத் தாக்குவது என்பதே தெரியாத இருளில் மூழ்கிவிடுவார்கள் மாந்தர்கள். முன்பே அப்படியான ஒரு நேர்கை இருந்தபடியால் முரசைக் கொண்டு வந்தார்கள். அதோடு மாந்தர்கள் மாறிமாறித் தாக்கிக்கொள்ளும்போது வெளிப்படும் குருதியையும் சதைத் துண்டுகளையும் வெட்டப்பட்ட உடலங்களையும் காணும் மாந்த மனது விரக்தியில் மூழ்கிவிடும். அதனாலும் தோல்வியில் துவள வாய்ப்புகள் அதிகமாகும் என்பதால் விடக் கூடாது என்பதற்காகவே முன்னேற்பாடாக முரசறைதலை வழக்கமாக்கி வைத்திருந்தார்கள். முரசிலிருந்து அதிர்ந்து தெறிக்கும் பேரோசைக்கு நிலமே அதிர்ந்து அடங்கும்போது விலங்குகள் பறவைகள் எம்மாத்திரம்.

மெந்தாரகை நூற்றுக்கு மேற்பட்ட ஆள் உயர முரசுகளோடு வந்திருந்தாள். திடகாத்திரமான உடல் கட்டுக்கொண்ட மாந்தரிகளும் மாந்தர்களும் அதனுடன் வந்திருந்தார்கள். குடைவுடைய பெரு மரங்களைத் தேர்வுசெய்து அதன் கண்ணை மூடி எருமையின் பதப்படுத்தப்பட்ட முழுத் தோலையும் போர்த்தி இறுக்க அணைந்து கட்டப்பட்டிருந்த முரசுகளைப் பெருயாளி வண்டிகளில் படைக்கு முன்பும் நடுவிலும் இரு புறத்திலும் நடுவிலும் நிறுத்தி இருந்தார்கள். போர் வீரர்களுக்குத் தொல்லையாக, இட நெருக்கடியாக அமையாத வண்ணம் வரிசையாக நிறுத்தப் பட்டிருந்தன. அவை நகர்ந்து முன்னோக்கிப் போக ஓசைக்குப் பழகிய எருமைகள் வண்டிகளில் பூட்டப்பட்டிருந்தன. அதன் மீது வீரர்கள் கருவிகளோடு வரிசையாக நின்றிருந்தனர்.

அஞ்சாவண்ணி உள்ளிட்ட தலைமைத் தாய்களும், தாய் மாமன்களும் படைக்கு நடு மத்தியில் ஆனைகளின் மீது அமர்ந் திருந்தார்கள். அனைவரும் கொற்றவைத் தாயை வேண்டினார்கள்.

“இந்தப் பேரண்டத்தின் நலனுக்காக உழைத்து மாண்ட கோடான கோடித் தாய்களின் பேருருவமாக, அத்தனை முகங்களின் ஒற்றைத்

தாயாக எங்களுக்குக் காட்சி தருகிற எங்களின் தாய் கொற்றவையே உன்னை வணங்குகிறோம். உன் குழந்தையான நாங்கள் எல்லாரும் இணைந்து ஒற்றைக் குரலாக வேண்டி நிற்கிறோம். இந்தச் சமரை நாங்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. ஆனால் எங்களின் மீது திணிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் ஒதுங்கி வாழவே, அமைதியாக இருக்கவே விரும்புகிறோம். ஆதியிலே நானூறுக்கும் மேற்பட்ட குழுக்களாக, நாடுகளாகப் பரிமளித்த பின்னும் இயற்கையின் நகர்வில் நாங்கள் துண்டுகளாக எங்கெங்கோ கிடக்கிறோம். இந்தக் குமரிக்கோட்டில் மீதமிருக்கிற நமது மாந்தர் இனத்தைப் பாதுகாக்க நீங்கள் அளித்ததை எமது குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம். எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிற நீ எங்களுடன் துணையாக நின்று, எங்களோடு சமர் செய்ய வந்திருக்கிற எங்களின் விலங்குகளையும் காத்து, எங்களை வழி நடத்த வேண்டுகிறோம்!''

அஞ்சாவண்ணி மனமுருக எல்லாருக்கும் கேட்கும் வண்ணம் கொற்றைவையை நெஞ்சில் ஏந்தி உரத்துச் சொன்னாள். எல்லாரும் கண் மூடிக் கொற்றைவையை உள் வாங்கி அஞ்சாவண்ணியின் குரலைச் செவி மடுத்தனர்.

மெந்தாரகை முன்புறத்தில் நின்றவாக்கில் திரும்பி அஞ்சாவண்ணியைப் பார்த்தாள். தனது கையிலிருந்த கல் வாளை உயர்த்தி மெந்தாரகைக்குச் சைகை செய்தாள் அஞ்சாவண்ணி.

“தம் தம் தம்... தம் தம்... தம்... தம்தம்தம்தம்...''

எல்லாருக்கும் ஒரே விதமான நய அடிகளைத் தெரிவு செய்து கொடுத்திருந்தாள். முரசிலிருந்து கொட்டுகள் கிளம்பத் தொடங்கியதும், அதன் ஓசை கொடுத்த அதிர்வில் நிலத்திலிருந்த மண்துகள்கள் எழுந்து குதிக்கத் தொடங்கின. காடுகளில் இருந்த பறவைக் கூட்டங்கள் கிரீச்சென மரங்களின் கிளைகளை உந்திக் கீழே தள்ளியபடி பறந்து மேகங்களை முட்ட முயன்றன. வனங்களின் ஊறும் ஊர்வன குமரிச் செடிகளின் முட்கள் கீறுவதை பொருட்படுத்தாமல் அலறிப் பாய்ந்தன. மிருகங்கள் குறுக்கும் மறுக்குமாக எந்தத் திசைக்கு ஓடுவதெனத் தெரியாமல் குழம்பித் தடுமாறி ஒன்றுக்கொன்று மோதி விழுந்து எழுந்து பாய்ந்தன.

அதுவரை சோர்விலிருந்ததைப்போலிருந்த மாந்தர்களின் உடல் மயிற்கால்கள் தானாக எழுந்து நின்றன. உடல் நரம்புகள் புடைத்தன. கைகள் முறுக்கேறின. குருதி வெள்ளெமன உடலுக்குள் தாறுமாறாகப்

பாயத் தொடங்க, நரம்புகள் தலை வரை குருதியைப் பாய்ச்சி முகத்தைக் கருஞ் சிவப்பாக்கின. அறுபத்தியெட்டு நாடுகளின் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட பெரும்படை பெரிய ஆமையொன்று நகர்வதைப்போல மூர்க்கர்களை நோக்கி நகரத் துவங்கியது.

இரு காத தூரத்திலிருக்கும் மூர்க்கம் படையை நோக்கி ஓடி வந்த மிருகங்கள், எதிரே நின்ற மாந்த மிருகப் படையைக் கண்டுத் திகைத்துப் படைக்கு முன்பாகக் கிளையாகப் பிரிந்து புதுப் பாதையை உருவாக்கிப் பாய்ந்து ஓடும் காட்டாற்றைப்போல இரு புறத்திலும் பிரிந்து ஓடின. முரசோசையின் அதிர்வுகள் பெருந்தேற்றனுக்கும் தொற்றியது. எவ்வளவு காலத் திட்டம் நொறுங்கியதில் மனதளவில் துவண்டிருந்தான்.

முப்பதாயிரம் வீரர்கள் தன் கண் முன்னால் எரிந்து இறந்து போனதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. நாம்தான் மூர்க்கரென்றால் அவர்கள் நம்மைவிடக் கொடூரர்களாக மாறியதை அவனால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அவனது ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பெரும் படையே புறமுதுகிட்டுத் தப்பி வந்த பெருந்தேற்றனைக் கண்டு கலங்கியது. அவர்களது கனவு இருண்டு கிடந்தது.

இதைத்தான் அஞ்சாவண்ணி எதிர்பார்த்திருந்தாள். குறுகிய காலத்தில் மூர்க்கர்களை அழிக்க முடியாது. தோல்விதான் அடைவோம் என அவளது மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. முந்தைய சமர்களில் வெற்றி அடைந்திருந்தாலும் அதனால் இழந்த மாந்தர்கள் அதிகம். ஆசையாய் நேசித்த மாந்தர்களின் உடல்களைக் கழுகுகள் கவ்விப் போனதை மறந்துவிட முடியாது. விலங்குகள் முத்தமிட்டுக் கொஞ்சிய மாந்தர்களின் தலைகளை உருட்டிக்கொண்டு போனது இன்றும் நினைவில் ஆழமாகப் பதிந்திருப்பதை உணர்ந்திருந்தாள். அதனால்தான் உறுதியாக எத்தனை ஆண்டுகள் ஆனாலும் இனி மூர்க்கர்கள் உள் நுழையக் கூடாது எனப் பெருஞ்சுவரை எழுப்பினார்கள். அப்படியும் வந்துவிட்டபடியால், இந்த முறை இன்னும் வழுவாக அவர்கள் வந்திருப்பதால் உறுதியாக வெல்வதற்கான களம் மங்கிக் கிடந்தது. அதனால்தான் தீ வைத்து எரிக்கச் சொன்னாள்.

பெருந்தேற்றன் இனி திரும்பப் போவதில்லை. பிரம்பூரின் நடுக் காட்டின் மறைவில் நின்று பற்றி எறியும் தனது மூர்க்கப் படையின் கதறல்களைக் காது கிழியக் கேட்டுவிட்டுத்தான் வந்திருந்தான். அவனது மா நிறமேறிய உடல் துடித்துத் தானாக ஆடுவதை, நடுங்குவதைப் பார்த்த

காமனும் சோமனுமே நடுங்கினார்கள். மாந்த மனது விசித்திரமானது. வேக அன்பைப்போலவே வேகக் கோபத்தையும் கொண்டிருக்கும். பெரும்பான்மை மாந்தர்களிடம் வெட்டி நிற்கும் கோபமே சிறிய விடைக்கும்கூடக் காத்திருக்காமல் எதிர்ப்பது, சண்டையிடுவது, கொல்வது, தாக்குவது, மூர்க்கமாகப் புணர்வது. அதிலும் கூட்டக் கோபம் மிகவும் அல்லல் தருவது. ஒருவனின் கோபம் ஒரு கூட்டத்தைப் பற்றிக்கொண்டால் அங்கே என்ன மிஞ்சும் என்றுகூடத் தெரியாது. தன் சொந்த உறவுகளைக்கூட எட்டி வீழ்த்தும் மாந்தப்புதிர்கள் நிரம்பிய களத்தில் அதைக் கட்டி வைக்கும் கடிவாளமாகத்தான் அதிகாரம் பிறப்பிடம் பெற்றது. அந்த அதிகாரமும் ஒரு தலைமையில் குவியும்போது அங்கும் மீறல்களும் அவதிகளும் மீண்டும் ஒன்றாகத் தலைகாட்டும். இதனால் விளைந்த விளைவுகளைக் கணக்கிட்டுத்தான் கொற்றவைகள் அதை மாற்றத் தங்களையே இழந்தார்கள். தாய் வழிச் சமுகத்தின் தோற்றுவாயில் நிகழாத சண்டையில்லை. வலிமை பொருந்தியவள் வைத்ததே சமூகமாக இருந்ததை மாற்றக் கடும் விளைவுகளை மாந்தச் சமூகம் சந்திக்க வேண்டியிருந்தது. அத்தனை உயிர்ப் பலிகளின் வழியேதான் இன்று பரந்த அழகான கூட்டுக் சமூகம் கிளை பெற்றிருக்கிறது. இதை ஒழிக்க எந்த மூர்க்கர்கள் முன் நின்றாலும் முற்றாக அழிக்கத் தாய்கள் உறுதி ஏற்றுக்கொண்டார்கள்.

பெருஞ்சுவர் நோக்கி அவர்கள் கிளம்பும்போதே முடிவு செய்துவிட்டார்கள். ‘கடைசி மூர்க்கர்கள் இருக்கும் வரை சண்டை யிடுவோம்’ என்று கங்கணம் கட்டியிருந்தார்கள். ‘நயவஞ்சகத் தால்தான் தனது படையை வீழ்த்தினார்கள். ஆனால், பயிற்சி பெற்ற பெரும் படையைக் குறைந்த காலத்திற்குள் படை திரட்டி நம்மை வெல்ல முடியாது’ என்ற முடிவுக்கும் வந்திருந்தார்கள். மிக காத்திரமான சண்டையின் வழி அறுபத்தியெட்டு நாடுகளையும் கசக்கிப் பிழிந்துவிட வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தான் பின்வாங்கி ஓடி வந்த பெருந்தேற்றேன்.

படை ஆழியின் பேரலைப்போல, ஆழியே திரண்டு செல்வதுபோலச் சென்றுகொண்டிருந்தது. படைக்கு அரண்போல முன்னும் பின்னும், இடதிலும் வலதிலும், நடுவிலும் ஓங்கி ஓங்கி முரசை அறைந்தபடி சென்ற மெந்தாரகையின் முரசணிகள், போர்க்களம் நெருங்க நெருங்க, முன் சென்ற முரசணி பின் தங்க, வீரர்களின் அணி வரிசை அவர்களுக்கு வழிவிட்டு முன்னகர, பின்தங்கிய முரசாளர்கள்

தங்களது கொட்டாரத்தை நிறுத்தாமலே போர்ப் படையைப் பின்னிருந்து வளைத்ததுபோல நின்றார்கள்.

கிட்டத்தட்ட இரு படைகளுக்கும் இடையே ஈராயிரம் அடிகளே எஞ்சியிருந்தன. ஆங்காங்கே ஒன்றிரண்டு மரங்களைத் தவிர நான்கடி உயரத்திற்குக் கோரைகள் அடர்ந்து வளர்ந்து கிடந்தன. முன்வரிசையில் மெந்தாரகை முரசடித்துக்கொண்டிருந்தவள் தங்களின் முன்னால் முரசிற்குப் பயந்து ஓடும் விலங்குகள், ஒரு சில இடங்களில் வேகமாகச் சென்று, தயங்கி நின்று, இடையில் பாய்ந்து, திசை மாறி ஓடுவதைக் கண்டாள். மெந்தாரகைக்குள் மண்டை ஓடியது. வேகமாக அஞ்சாவண்ணியை நோக்கி ஓடி வந்தாள். ஓடி வரும் மெந்தாரகையின் மீது அவளது பார்வையும் சுருக்கிட்டு நின்றது.

“தாயே... ஓர் அச்சம்!”

“என்ன மெந்தாரகை?”

“கோரைகளுக்குள் நடமாட்டம் தென்படுகிறது. பதுங்குகுழிகள் தோண்டப்பட்டு அதனுள்ளும் மூர்க்கர்கள் ஒளிந்திருந்து தாக்க வாய்ப்பிருக்கிறது!”

“ஓ... அப்படியும் இருக்கலாம். படை நகர வேண்டாம். மச்சக்கன்னி, எல்லாத் தாய்களையும் உடனடியாக அழையுங்கள்!”

தனது இடுப்பிலிருந்த பையிலிருந்து பளிங்குக்கோளத்தை எடுத்துக் கண்ணில் வைத்து கோரைகளைக் கூர்ந்து கவனித்தாள் அஞ்சாவண்ணி. கோரைகளுக்குள் சாரைகள் நெளிவதுபோலப் படுத்துக்கிடந்த மூர்க்கர்களைக் கண்டாள். நகர்தல் படையில் முன்னின்ற அனைத்துத் தாய்களும் உடனடியாகக் கூடினர்.

“கோரைக்குள் மூர்க்கர்கள் படுத்திருந்து திடீர் தாக்குதல் தொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்! என்ன செய்வது?”

எல்லாரும் ஆளுக்கொரு கருத்துச் சொன்னார்கள். இறுதியான விடையை மச்சக்கன்னி முன்வைத்தாள். அதன்படி போரைத் தொடங்கினார்கள்.

விரைவாக வந்த படை, திடீரெனத் தடைபட்டு நிற்பதைக் கவனித்த பெருந்தேற்றன் காமனிடம் முதன் முதலாகச் சிரித்தபடி சொன்னான்.

“காமா... நமது படையைக் கண்டு அச்சம் கொள்கிறார்கள் என நினைக்கிறேன்!”

“தேற்றா, ஏழ்பனை நகருக்குள் உளவு பார்த்து ஏமாந்தோம். திட்டமிட்டு நயவஞ்சகமாக நம்ம படைய அழிச்சாங்க. ஆனா நாம இப்படி ஒரு படையோட இருப்போம்னு எதிர் பார்த்திருக்க மாட்டாங்க. அதோட அறுபத்தியெட்டு நாட்லயும் ஊடுருவி இருக்கிற சிறு படைகளுக்கும் ஆள் அனுப்பி இருக்கேன். இங்க நாம அடிக்கும்போது அவங்க அங்க அடிச்சுக் குழப்பத்த உண்டாக்குவாங்க. அங்கிருந்து இங்க வரவங்க. அவங்ககிட்ட தகவல் சொல்றதுக்குள்ள, இவங்கள கொன்னுத் தின்னுட்டுத் திரும்பவும் உள்ள போவோம். எப்படியும் நம்ம அடிமைங்கதான் அவங்க.”

காமனும் சொல்லிவிட்டுச் சிரிக்க, அந்தச் சிரிப்பின் ஒலி, அப்பெரும் படையையும் சேர்த்து நிறைத்தது.

முதலில் வெள்ளோட்டம் பார்க்கத் தங்களோடு வந்திருந்த அலங்குகளை ஏவினார்கள் தாய்கள். ஆயிரக்கணக்கான அலங்குகள் தங்களது நான்கு கால்களாலும் கோரைகளை மோர்ந்துகொண்டே பாய்ந்தன. ஓடிய வேகத்தில் கோரைகளில் பதுங்கியிருந்த மூர்க்கர்களின் கூர் வாள்களால் சட் சட்டென வெட்டுப்பட்டு அலங்குகள் ஆங்காங்கே வீழ்ந்தன. மீதியிருந்த அலங்குகள் போராடிப் பார்த்தன. அவர்கள் பல இடங்களில் குழி தோண்டிப் படுத்துக்கிடந்தார்கள். அவர்களின் வாள்களிலும் ஈட்டிகளிலும் தடவியிருந்த நஞ்சுச்சாறு பட்டதும் உயிர் வாதையில் துடித்துக் கீழே விழுந்து இறந்தன. அவர்கள் கோரைகளுக்குள் பாம்பைப்போலப் பதுங்கியிருந்து ஈட்டியால் குத்தியதால் அவற்றால் எதிர்த்து நிற்க முடியவில்லை. அலங்குகள் பாதிக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் திரும்பி ஓடி வந்தன. குமரிக்கோட்டின் முதல் பலியாக அலங்குகள் உயிரைக் கொடுத்துக்கொண்டிருப்பதை மிகுந்த வலியோடு பார்த்துக்கொண்டிருந்த அஞ்சாவண்ணி இருவாஞ்சியைப் பார்த்தாள்.

இருவாஞ்சி நகர்தல் படைக்கு முன்னே தாய்களின் திட்டப்படி தும்பனைக் கொண்டுவந்து நிறுத்தினாள். தும்பனின் உடலில் இறந்த ஆனைகளின் தோலினால் மறைப்புக் கட்டியிருந்தார்கள். தும்பனின் பிடறிவரை படுத்தபடியே முன்னேறினாள். தும்பனின் இடது பெருங் கண்ணின் முன்பு தனது முகத்தைக் கொண்டு போனாள். அவள் பேச நினைத்தைப் பேசினாள். தும்பன் தனது பிடரியைச் சிலிர்த்துத் தனது நீண்ட நாக்கை வானத்தை நோக்கி நீட்டிப் பிளிறியது. இருவாஞ்சி பாயத் தயாரான தும்பன் மீதிருந்து தாவிக் கீழே குதிக்க, தும்பன் கோரைகளை நசுக்கியபடி பாய்ந்தது.

தும்பன் சமவெளியில் மிதந்த காற்றைப் பிளந்துகொண்டு பாய்ந்தது. தும்பன் இடவலமாகச் சுழன்று சுழன்று ஒரு சுருளைப் போல ஓட, நகர்தல் படை வேகமாக முன்னேறியது.

கோரைகளுக்குள் பதுங்கியிருந்த மூர்க்கர்கள், திடீரெனப் பெரும் புயல் ஒன்று வீசுவதுபோல இடை நின்ற சிறு மரங்களைப் பிய்த்துத் தூக்கி அடித்தபடி வரும் சிம்மத்தைக் கண்டு மிரண்டார்கள். அது என்னவென்றுகூட அவர்களால் ஊகிக்க முடியவில்லை. ஈட்டிகளையும் வாள்களையும் விட்டுவிட்டு அலறி ஓட ஆரம்பித்தார்கள். சிலரை மிதித்தும், நாவால் தூக்கி மரத்தின் மீது அடித்தும், பாறைமீது வீசியும் அதகளப்படுத்தியது தும்பன். சிம்மயாளியின் அருகில்கூட இதுவரை சென்று பார்க்காத பெருந்தேற்றனும் அவனது படையும் எதிர்பாராத இப்பெரு மிருகத்தின் துவம்சத்தால் நிலைகுலைந்தனர். கோரைகளில் பதுங்கியிருந்தவர்கள் தெறித்துப் பின்னோக்கி ஓடினர். குறைந்தது ஈராயிரம் ஆள்களாவது இருப்பார்கள். யாவரையும் தூக்கி அந்தரத்தில் வீசிப் பந்தாடிக்கொண்டிருந்தான் தும்பன். நகர்தல் படை முன்னேற, நேர்தல் படை அம்புகளைப் பொழியத் துவங்க, மூர்க்கர்கள் படையும் சுதாரித்துத் தாக்கத் தொடங்கியது.

இருவாஞ்சி தும்பனுக்கு சமிக்ஞை அனுப்ப, தும்பன் மீண்டும் இருவாஞ்சியை நோக்கி வர, அவன் மீதேறி இருவாஞ்சி சுழல்தல் படை கொண்டு எதிரிப் படையை வளையமிடத் தொடங்கினாள். சமர் கொடுக்கப் போகும் பெருஞ்சேதம் என்பது இரு தரப்புக்கும் கடுமையாக இருக்கும் என உணர்ந்திருந்தார்கள். போரின் உச்சக் கட்ட நிலை ஏற ஏற, வெளிர்ந்த வானம் குருதிக்கடலின் அலைகளால் செஞ்சிவப்பாக நிறம் மாறத் தொடங்கியது.

29 நளித் திங்கள் ஆறாம் திகதி

அவர்கள் கழித்துறையின் உள் ஆழியில் மிதந்துகொண்டிருந்த நாவாயின் முன் பக்க அறையில் இருந்தார்கள். அங்கிருந்து கவனித்தால்தான் மரத் தச்சர்களின், கம்மியர்கள் பணிகளைக் கவனிக்கமுடியும். ஆரல், மூடுதிமில் உருவாக்கக் கிளம்பிய திலிருந்தே அவர்களின் தங்குமிடம் இந்த நாவாய்தான். இளநாகனுக்கும் செம்படவனுக்கும் துறைமுக நகரில் இருந்த குடிலைத்தான் முதலில் ஒதுக்கினாள். இளநாகன், தான் ஆரலுடன் தங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டான். செம்படவனும், அவர்கள் காதலில் விழுந்திருப்பதைப் புரிந்துகொண்டு, தனியே தனது நாட்டினர் சிலருடன் தங்கிக்கொள்வதாகச் சொல்லிவிட்டான். செம்படவன் இரவுத் தூக்கத்திற்கு நகருக்குள்ளும், பகல்பொழுதை மூடுதிமில் உருவாக்க நுணுக்கத்தைத் தெரிந்துகொள்வதிலும் செலவிட்டான். ஆரல் கழித்துறையில் இருந்தால்தான் வேலையை வேகப்படுத்த முடியும் என்பதால் நாவாயில் படுக்கையை ஏற்படுத்திக்கொண்டாள். இளநாகனும் அவளுடன் பகிர்ந்துகொண்டான்.

ஆரலுக்கு இடப்பட்டிருந்த வேலைகளும் முக்கியமாக இருந்தன. அதோடு கோகன் அறிவித்திருந்த இயற்கையின் விதியை எண்ணியும் மருண்டாள். இயற்கையின் நேர்ச்சியில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற பேரிடியால் அவளால் இளநாகனை விட்டுப் பிரியவே கூடாது என முடிவெடுத்திருந்தாள். தாய்களும், இளநாகனையும் செம்படவனையும் கொற்றவை வெறியாட்டு முடிந்தபிறகு போகலாம்' எனச்

சொன்னது மற்றவர்களைவிட ஆரலுக்குப் பெரு மகிழ்ச்சி என்றே சொல்லலாம்.

இளநாகனிடம் 'நூறாண்டுக் காதலை' கிடைத்த இத்தருணத்தில் கொட்டினாள். எல்லா வேலைகளில் கவனமிருந்ததைப்போல அவனோடு இறுகிக் குழைவதிலும், மையலுற்று மயங்கி கூடுவதிலும்கூட விடாப்பிடியான ஆர்வம்கொண்டிருந்தாள். இளநாகன் தன் மக்கள்மீது கொண்டிருந்த நினைவுகளைக்கூடத் தனது பேரின்பக் காதல் அங்குசத்தால் உருக்கி வெளித் தள்ளினாள்.

இருவரும் கூடுகையில் மென்னியத்தைப் பரிமாறிக் கொண்டாலும் திருக்கைகள் தொட்டுக்கொள்ளும் புணர்விலிருந்து உடைத்து, இரு ஆளிகளின் பெருஞ்சமரைப்போல் கூடினார்கள். ஒவ்வொரு இணைவிலும் இதுதான் வாழ்வின் கடைசித் துளிகளைப்போல வெறியாட்டம் ஆடினார்கள். அதேநேரம் மூடுதிமில் உருவாக்கத்திலும் தாய்களின் கனவை நூறு மடங்காக்கினார்கள்.

கோகன் கொண்டுவந்த வானியல் மற்றும் நாட்கணக்கு, காலக் கணக்குக் குறிப்புகளுக்கான ஆவணங்கள் அடங்கிய மூட்டைகளைச் செய்து முடித்திருந்த மூடுதிமில்களினுள் அடைத்திருந்தாள், ஆரல். அந்த ஆவணங்கள் பல பிரதிகள் எடுக்கப்பட்டு, கொண்டு வந்திருந்தபடியால் அவற்றைப் பல மூடுதிமில்களில் அடைத்தனர். அதேபோல மருத்துவக் குறிப்புகள், தமிழியின் மொழிக் குறிப்புகள், இசைக் குறிப்புகள், நிலக் குறிப்புகள் எனச் சேகரித்த அறிவின் அனைத்துக் குறிப்புகளும் தென்னனின் ஆள்களாலும் அருகனின் ஆள்களாலும் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் பல பிரதிகளாக எடுக்கப்பட்டு, பல மூட்டைகளாகக் கட்டப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் உடனிருந்து இளநாகனும் கோகனும் செம்படவனும் ஒழுங்குசெய்து கொடுக்க, பல்வேறு மூடுதிமில்களில் அடைக்கப்பட்டு, மூடுதிமிலில் தண்ணீர் உள்ளே நுழையாத படியும் காற்று உள்ளே புக முடியாதவாறும் இறுக்கமாக அடைக்கப்பட்டு, மூடுதிமிலில் மேற்புறத்தில் என்ன ஆவணங்கள் என்பதற்கான குறியீடுகளை அழியாத மையால் வரைந்திருந்தனர்.

ஒவ்வொன்றிலும் பரையும் பரனும், சேயோளும் சேயோனும், ஓட்டியும் ஓட்டனும், பூட்டியும் பூட்டனும், பாட்டியும் பாட்டனும், தாய்களும் தந்தைகளுமான ஏழேழு பரம்பரைகளாகப் பல்லாயிரம் தலைமுறைகளாக உருத் திரட்டிய காலத்தின் படிமங்களைப் பல ஆயிரம் மூடுதிமில்களில்

அடைத்து அவை தாய்களின் கண்ணசைவிற்காக ஆழியின் உள் முகத்தில் மிதந்த அலைகளில் தவழ்ந்தபடி இருந்தன. மேலும் ஆவணங்கள் வந்துகொண்டே இருந்தன. அதோடு மாந்தர்களுக்கான மூடுதிமில் உருவாக்கும் வேலைகள் இரவு பகலாக நடந்துகொண்டே இருந்தன.

எதிர்பார்த்ததைவிட அதிகமாகவும் விரைவாகவும் பணிகளை முடுக்கிவிட்டிருந்தாள். கொற்றவை வெறியாட்டுக் காலத்தில் ஒரு திங்களுக்கு ஆழியில் மீன் பிடிக்க அனுமதிப்பதில்லை தாய்கள். அதனால் எண்ணற்ற திமில்கள் கரையில் ஒதுங்கியிருந்தன. அவை யாவற்றையும் பிரித்தும் சிலவற்றை அதனோடு மெருகேற்றியும் மூடுதிமில்கள் தயாராகிக்கொண்டிருந்தன.

கொற்றவை வெறியாட்டு நிகழ்வுக்காக இளநாகனையும் செம்படவனையும் அழைத்துச் செல்ல ஆரல், இங்கு வேலைகளை அதிகப்படுத்தினாள். கண் முன்னே இருக்கும் மூடுதிமில் கூட்டங்களை ஆய்வு செய்துகொண்டிருந்தாள். அப்போது வேகமாக இளநாகனும் செம்படவனும் தேடி வந்தார்கள்.

“ஆரல், ஏழ்பனையில் மூர்க்கங்கன்னு யாரோ அழிக்கப் பட்டாங்களாம்... தெரியுமா.. “

“தெரியும்...”

ஆரல் இங்கிருந்தாலும் எல்லாத் தகவலையும் சேகரித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை நினைத்து ஆச்சர்யப்பட்டான்.

“அது மட்டுமில்ல... கொடூரமான மூர்க்கர்கள் நெருங்கவே கூடாதுன்னு எழுப்பியிருந்த இடத்திலும் அவங்க படை இருக்கு. அதை அழிக்க தாய்மாமன்களின் படைகள் கிளம்பிப் போனது. அவங்களும் பெருஞ்சுவர நெருங்கிட்டாங்க. இன்னேரத்துக்கு ஏழ்பனையில் இருந்த தாய்களின் படைகளும் பெருஞ்சுவரை நெருங்கியிருக்கும்.”

“இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்..?”

“இங்கிருக்கிற மாந்தர்கள் தோற்றத்திலதான் வேற வேறயா இருப்பாங்க. உணர்வில எல்லாரும் ஒரே வகைதான். இது தாய்கள் வழி நடத்துகிற சமூகம். தாய் எவ்வழியோ குழந்தைகளும் அவ்வழிதான். நேற்றே ஏழ்பனையின் தற்காலிகக் குடிகளில் தங்கியிருந்த மூர்க்கர்கள் எரிக்கப்பட்ட தகவல் தெரியும்.. கிட்டத் தட்ட பல காத தூரம் பயணப்படணும். அதனால அவர்கள் ஓய்வே எடுக்க நேரமிருக்காது.. வேறு வழியில்லை.. இதை எதிர் கொண்டுதான் ஆகணும் என்னும்போது

அப்படித்தான் செயல்பட வேண்டும்... என் மனமெல்லாம் சமர்க் களத்தில்தான் இருக்கு..”

இளநாகனுக்குப் புரிந்தது. ஆனால், அவள் சொன்னதில் புதிய கவலை ஒன்று அவனைச் சூழ்ந்தது.

“ஆரல்... நான் ஒன்னு சொல்லவா..?”

என்ன என்பதுபோல அவனை நிமிர்ந்து பார்த்தாள். இளநாகன் தயங்கி, ஆனால் உறுதியான குரலில் சொன்னான்.

“இந்தக் கட்டுமான வேலைகளப் பார்த்துட்டோம். கம்மியர்களோட சேர்ந்து நாங்களும் நிறையக் கத்துக்கிட்டோம். அதனால நானும் செம்படவனும் சண்டைக்குப்போலாம்னு இருக்கோம். எங்களால இதுக்கு மேல சும்மா இருக்க முடியாது...”

ஆரல் இளநாகனைக் கூர்ந்து பார்த்தாள். அவன் கண்களில் தெரிந்த உறுதி அவளையும் பற்றியிருந்தது.

“எப்படிப் போவீங்க..!”

“அதுக்குத்தான்... உன்கிட்ட வந்தோம். ஏதாவது ஏற்பாடு பண்றியா..?”

ஆரலுக்கும் போர் நடக்கும் இடத்திற்குப் போக வேண்டும் என்றுதான் உள்ளுக்குள் அரித்துக்கொண்டிருந்தது.

“நானும் வரேன்... ஆனையில போலாம். ஆனைதான் காடுகள ஊடறுத்துச் சீக்கிரமா போவும்.”

“ நீ... எப்படி?”

“எல்லாருக்கும் வேலைகளப் பிரிச்சுக் கொடுத்தாச்சு. எனக்குத் துணையா இயங்குற தலைமைகளே ஆயிரம் பேர் இருக்காங்க. அவங்க நின்னு செய்யட்டும். நாம போகலாம்...”

ஆரல் மடமடவெனத் தனது குழுக்களை அழைத்து விபரத்தைச் சொன்னாள். அவர்களும் போகச் சொன்னார்கள். ஏழ் குணக்கரைக் கொட்டடியில் இருந்த மூன்று ஆனைகளில் ஏறினார்கள்.

30 நளித் திங்கள் எட்டாம் திகதி

சொல்லப்போனால் அறுபத்தியெட்டு நாடுகள் சேர்ந்து தாங்களால் உருவான நாட்டை எதிர்த்துப் போரிட்டு மாண்ட அளவில் இது ஒரு தோல்விப் போர்தான்.

முதல் நாளின் அந்தி சாய்கையிலேயே குமரிப் படைகளின் தோல்வி உறுதியாகிவிட்டது. மூர்க்கர்கள் மிக வலிமையாகக் காய் நகர்த்தினார்கள். படைகளின் தலைவனாகச் செயல்பட்ட செந்தூரன் நிறைய உத்திகளைக் கையாண்டான். பெருந்தேற்றனே வியக்கும் வண்ணம் அவனது போர்த் தந்திரம் இருந்தது. கோரையில் பதுங்கியிருந்தவர்களை தும்பன் விரட்டிய உற்சாகத்தில் அம்புகளை எய்துகொண்டே நகர்ந்தாலும் அவர்கள் வைத்திருந்த உடல் கவச உடைகளாலும் மறைப்புப் பலகையாலும் அவர்களை எதுவுமே செய்ய முடியவில்லை. முன்னகர்ந்த படையின் முதல் பிரிவு ஆங்காங்கே ஆனைகளே உள்ளே விழுமளவு அவர்கள் வெட்டியிருந்த குழிகளும் குழிகள் என்றே தெரியாமல் இருக்க இலைகளைக் கொண்டும் மூடியிருந்ததால் வேகமாக நகர்ந்த படை பொத்துபொத்தெனக் குழியில் விழுந்தன. விழுந்தவர்களை நஞ்சு ஈட்டியாலும், நஞ்சு அம்பாலும் குத்திக் கிழித்தனர். உடனடி மரணம்... பேரடி!

என்னதான் தாய்களின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட போதிலும் சமரில் வீரர்கள்தான், எதிர்வரும் வீரனைத் தேர்வுசெய்து அடித்து வீழ்த்த வேண்டும். பதுங்குகுழிகளைத் தாண்டவே முடியாதபடி திணறியது குமரிப் படை. சுழல் படைதான் ஓரளவு தாக்குப் பிடித்தது.

முதல்நாளில் குமரிப் படையில் காயம்பட்டவர்களே ஈராயிரத்தைத் தாண்டினர். கொல்லப்பட்டவர்களைக் கணக்கெடுக்கும் நேரம்கூட இல்லை. தோராயமாக ஆறாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கலாம். மூர்க்கங்குடியர்களின் மரண விகிதம் இதில் குறைவாகத்தான் இருக்கும்.

ஆரலும் இளநாகனும் செம்படவனும் கருக்கலில் வந்தடைந் தார்கள். போரின் முதல்நாள் முடிவுரை எழுதப்பட்டுவிட்டது. இருளில் சண்டை செய்வது இரு தரப்புக்குமே வாய்ப்பில்லை என்பதால் இயற்கை தானே அந்த இரவை அவர்களுக்கு வழங்கியது.

காட்டு விலங்குகள் குருதியின் நாற்றத்திற்கு, உடல்களின் நாற்றத்திற்கு ஏங்கிக் காடுகளுக்குள் இருந்து சத்தமெழுப்பின. நரிகளும் செந்நாய்களும் ஓநாய்களும் காட்டைச் சுற்றி நின்று ஊளையிட்டன. கூடாரம் ஏதுமில்லை. மருத்துவத்திற்காக அமைக்கப்பட்ட தற்காலிகக் கூடாரங்கள் தவிர தனியிடம் என ஏதுமில்லை.

இறந்து கிடந்த உடல்களைப் பதற்றத்தோடு மாந்தர்கள் புரட்டிப் பார்த்தார்கள். தீப்பந்த வெளிச்சத்தில் யாராவது உயிருடன் இருக்கிறார்களா என ஒரு கூட்டம் தேடிக்கொண்டிருந்தது. ஆங்காங்கே எரிந்துகொண்டிருந்த தீப்பந்த வெளிச்சம் தவிர காய்ந்து நின்ற மரங்களில் சிலவற்றை எரித்தும்விட்டிருந்தார்கள். அம்மரங்கள் நின்றபடியே கொளுந்துவிட்டு எரிந்தன. காய்ந்த மரங்களைத் தின்று கொழுத்திருந்த மரப்புழுக்கள் தீயில் வெடித்துக் காற்றில் நாறின. கிடைத்த ஒளியில் மாண்டவர்களை ஒரே இடத்தில் கொண்டு செல்லும் பணிகளும் நடந்துகொண்டிருந்தன. இதெல்லாம் திட்டமிட்டு வருவதில்லை. இதெல்லாம் தானாகவே நடந்தன.

எல்லாவற்றையும் பார்த்தபடியே செம்படவனும் இளநாகனும் ஆரலும் வந்தனர். மாண்ட உடல்களில் நஞ்சு பாய்ந்து, கருத்த உடல்களில் நீலம் பாய்ந்திருந்தது.

தூரத்தில் தும்பன் தூங்கிக்கொண்டிருந்தான். அவன் மாந்தர்களின் சண்டையில் சிக்குண்டவன்போல வெறித்திருந்தான். சிம்மக் கூட்டங்கள் ஒன்றொடொன்று மோதிக்கொள்ளும்போது குட்டிகள் தனித்திருந்து அவற்றைp பார்த்து மிரண்ட நினைவுதான் அதற்குண்டு. இந்தச் சமர் அவனுக்கும் புதிது. மாந்தர்களைக் காண்பதே அரிதாக வலம் வந்தவனுக்கு, இந்த மாந்தக் கூட்டத்தின் சண்டை பேரச்சத்தைத் தந்திருந்தது. தன்னைக் கட்டுப்படுத்திய இருவாஞ்சிக்காக ஒருமைப்பட்டு நின்றதைத் தவிர அதற்கு வேறு வழி ஏதுமில்லை. அதனால், மிகவும் களைப்படைந்திருந்தான். தும்பனின் மனதறிந்தவள்போலத் தூங்க விட்டுவிட்டு இருவாஞ்சி உடல்களைச் சேகரிக்க ஓடிக்கொண்டிருந்தாள்.

அறுபத்தியெட்டு நாடுகளின் தாய்களில் சிலபேரைக் காண வில்லை. தாய்மாமன்களிலும் சிலரைக் காணவில்லை. தென்னன் குழு பல இடங்களில் வெட்டப்பட்ட கால்களை, கைகளை, உடல் உறுப்புகளை ஒட்டும் முயற்சியிலிருந்தது. வெட்டுக் காயங்களுக்குள் கற்றாழைச் சோற்றை நிரப்பி, வெண்சிறு கடுகு எண்ணெயை அதன் மீது ஊற்றி, பிடவ மலர்களின் பொடியைத் தூவி, தோல்களை இணைத்துத் தைத்து, அந்த

இடங்களில் புகை மூட்டத்தைப் படர விட்டனர். சிறு காயங்களில் இருந்தவர்களுக்குத் தேவைக்கு அதிகமான பச்சிலைகளைக் கலந்து கொடுத்தார்கள். அவர்கள் மீண்டும் களத்தில் நிற்பதற்காக. அதனால் வீரர்கள் தன்னுறக்கம் கவ்வ, கிடைத்த இடங்களில் அவர்கள் தன்னை மறந்து உறங்கவும் செய்தனர்.

ஆரல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே வந்தாள். ஏற்கெனவே தலை துண்டிக்கப்பட்டு வெறித்த கண்களோடு தரையில் கிடந்த முகம்போலவே அவளது முகமும் வெளிறியிருந்தது.

இருவாஞ்சி ஏழ் குணக்கரையிலேயே ஆரலின் நாயகனை அஞ்சாவண்ணியிடம் அறிமுகப்படுத்த எண்ணினாள். ஆனால் எதுவுமே சாத்தியமில்லாமல் போனது. சொல்லப்போனால் குமரிக்கோடே கொண்டாடி இருக்க வேண்டியவர்கள் ஆரலும் இருவாஞ்சியும்தான். இருவரின் ஓட்டமும் ஒன்றுமில்லாமல் போனது மூர்க்கர்களாலும் கோகனாலும்தான். கோகனின் நோக்கமும் வேறாக இருந்ததால் அது மாந்த இனத்தின் மீட்டுருவாக்கம் குறித்து இருந்ததால் இந்தச் சின்ன முயற்சிகள் கடக்கும் ஒன்றானது. ஆனால் மூர்க்கர்கள் எதிர் நிலையில் நின்று விளைவுகளை அள்ளித் தெளித்துவிட்டார்கள். அதனால் இருவாஞ்சியும் ஆரலும்கூடப் பேசிக்கொள்ளும் நிலை இல்லை.

ஆரலோடு இளநாகன் வந்ததைக் கவனித்தாலும் வாஞ்சியால் பெரிதாகப் பேசிக்கொள்ள முடியவில்லை. இளநாகனிடம் இருவாஞ்சியைப் பற்றி அவ்வளவு சொல்லி இருந்தாள் ஆரல். ஆனால், இந்நிலை கொடூரமாக இருந்தது. காடுகளில் அலைந்து திரியும் இருவாஞ்சியின் உடலில் முட்களால், கொடிகளால் ஏற்படும் கீறல்கள் அல்ல அவை. தீரத்தோடு சமரிட்டு உடலில் வாங்கியிருந்த காயங்கள்தான் என இருவாஞ்சியைப் பார்த்ததுமே புரிந்துகொண்டாள். இருவாஞ்சி அத்தகைய கடும் மன உளைவிலும் இளநாகனையும் செம்படவனையும் முகம் மலர்ந்து வணக்கம் தெரிவித்தாள். ஆரலும் இருவாஞ்சியும் கண்களால் பேசிக்கொண்டார்கள். இளநாகனை இருவாஞ்சி தழுவினாள். அவர்களுடன் என்ன பேசுவதெனத் தெரியாமல் தாய் அஞ்சாவண்ணியிடம் அழைத்துப் போனாள். அவர்களைக் கண்டதும் அஞ்சாவண்ணி கடும் கோபமடைந்தாள். அஞ்சா வண்ணியின் உடலில் காயங்களும் குருதிகளும் காய்ந்து தேங்கி யிருந்தன. அவளது உடலில் தளர்விருந்ததைக் கண்டதும் ஆரலுக்கு மனம் நடுங்கியது.

“ஆரல்... என்ன நெனச்சிட்டிருக்க? உனக்குக் கொடுத்த கட்டளையை மீறி இங்க வந்து நிக்கிற. அதுவும் வெளியில் இருந்து வந்திருந்த தலைமைகள அழச்சிட்டு வந்திருக்க. அவங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா என்ன பண்றது?”

“தாயே... மன்னிக்க வேண்டும்! மூடுதிமில் உருவாக்கப் பணிகளில் எந்தத் தடையும் இல்லை. கம்மியர்களும் திமிலர்களும் தச்சர்களும் நேர்த்தியாகப் பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட திமில்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றில் எந்தத் தொய்வும் இல்லை. நான் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் சமரில் நிற்க வேண்டும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்கள் இளநாகனும் செம்படவனும்... வேறு வழி தெரியாமல்தான்!”

அதற்குள் இளநாகனே முன் வந்து தனது விளக்கத்தைக் கொடுத்தான்.

“மன்னிக்க வேண்டும். எங்களது நச்சரிப்பால்தான் ஆரல் அழைத்து வந்தாள். எங்களுக்கும் சேர்த்து நீங்க மூடுதிமில் உருவாக்குறீங்க. எங்களுக்காக உங்கக் குழுவை எங்க நாட்டுக்கு அனுப்பி வச்சிருக்கீங்க. நாங்க எதுவும் பண்ணாம இருக்க முடியுமா..? அது சுயநலமில்லையா..? அதோட போரில் எங்களுக்கு நிறைய அனுபவம் உண்டு. ஆரப்பர் நாடும், நாக நாடும் பல காலமா சண்டை போட்டிருக்கோம். இப்பத்தான மூவாண்டா நாங்க ஒத்துமையா இருக்கோம். உங்கள மாதிரி எங்களாலயும் சண்ட செய்ய முடியும்... நம்புங்க.”

“அது சரிதான், ஆனா உங்களுக்கு ஏதாச்சும் நடந்தா..?”

தயங்கிய அஞ்சாவண்ணியை இடை வெட்டிய தாய் தவிட்டி முடிவாகச் சொன்னாள்.

“போர்க்களத்துல அனுபவம் இருக்கிறவங்க நம்மகூட இருக்கிறதும் நல்லதுதான். நாம இப்ப வரைக்கும் உண்மையா பேசணும்னா தோத்துக்கிட்டுத்தான இருக்கோம். ஆனா, எங்க மாந்தர்கள் நாங்க அழிஞ்சாலும் அலை அலையா திரண்டு வந்துக்கிட்டே இருப்பாங்க. கடைசி உயிர் இருக்கிற வரைக்கும் போராடி இவங்கள கொல்லுவாங்க. அந்த நம்பிக்கை இருக்கு. ஆனா இந்தப் போர் சீக்கிரம் முடியணும். மூர்க்கர்கள் எழுபதாயிரம் பேர இதுவரைக்கும் அழிச்சிருப்போம். மிச்சம் கொஞ்சம்தான். என்ன ஒண்ணு அவனுங்க இதுக்காக மட்டுமே தயாராகி வந்திருக்காங்க. அதான் சிக்கல். உங்க

வியூகத்தையும் எங்களுக்குச் சொல்லுங்க. ஆனா, ஆரல் இவங்களுக்குச் சின்ன காயம்கூடப் படக்கூடாது. இவர்களப் பின் படையில் பயன்படுத்து!”

தாய் தவிட்டி சொன்னதும் அஞ்சாவண்ணி தலையாட்டினாள். இருவாஞ்சியிடமும் தலைமைகளிடமும் கேட்ட களநிலவரத் திலிருந்தும் பேசிய செய்திகளில் இருந்தும் களத்தை உள் வாங்கியதுபோலத் தங்களது வியூகங்களை சொன்னார்கள், இளநாகனும் செம்படவனும்.

31 நளித் திங்கள் பதினைந்தாம் நாள்

திருக்கையன், கொற்றவை வெறியாட்டு விழாவுக்குப் போக முடியாத வருத்தத்தில் இருந்தான். இந்தநேரத்தில் அங்கே எப்படி எல்லாம் கூட்டம் கூடியிருக்கும். இளநாகனுக்கும் ஆரலுக்கும் செம்படவனுக்கும் பட்டம் கட்டி வரவேற்று இருப்பார்கள். வெறியாட்டின் வழக்கப்படி அவர்களுக்கு எருமைக்கொம்புத் தலையை அணிவித்து மகிழ்ந்திருப்பார்கள். உடலெங்கும் சந்தனமும் செம்மண்ணும் பூசி அவர்களை ஆரத் தழுவி இருப்பார்கள்.

கொற்றவைத் திடலெங்கும் விதவிதமான கொம்புத் தலைகளை மாட்டியபடி மாந்தர்கள் வெறியாடி இருப்பார்கள். அருகனின் குழு ஒத்திகை முடிந்து அரங்கில் தயாராக இருந்திருப்பார்கள். கூத்தர்களும் சதிரர்களும் தங்களது ஒப்பனையை முடித்து ஆடத் தயாராக இருப்பார்கள். அவன் கொற்றவை வெறியாட்டு விழாவில் நடக்கப்போவதை மனதிற்குள் நிகழ்த்திப் பார்க்க நினைத்தான். அவன் தனது குடும்பத்தோடு பெரும் திருவிழாவில் கலந்துகொண்டது இல்லை. சிறுவனாக இருந்தபோது ஏழ் தெங்கத்தில் நடந்த விழாவுக்கு அவனது

தாய் அழைத்துப்போன பசுமையான நினைவுகளே அவனிடம் எஞ்சி இருந்தன.

கொற்றவை வெறியாட்டில் திரளும் மாந்தக் கூட்டம் மட்டுமே முழுமையாக அவனுள்ளத்தில் நிறைந்திருந்தது.

போன ஆண்டு ஏழ் பின்பாலையில் நடந்த வெறியாட்டுக்குப் போக நினைத்திருந்தான். ஆனால், அவன் கிளம்பும் தருணத்தில் ஆரல் காமாலையால் பாதிக்கப்பட்டாள். அவள் உடலில் மஞ்சள் நிறத் தன்மை மிகுந்து கை நகங்களும், கால் நகங்களும் இளமஞ்சளாக மாறிக்கொண்டிருந்தன. அவளது பெருத்த கண்களில் வெள்ளையாடி மஞ்சளாகிப்போனது. கிட்டத்தட்ட படுத்தப் படுக்கையாகிவிட்டாள். அதைக் கண்டு கலங்கிவிட்டான்.

இரு திங்களுக்கு முன்பாக ஆழி சூறையாடிக் கொண்டிருந்த போது பொன்பரப்பியிலிருந்து கண்டவேலிக்கு மாந்தர்கள் இடம் பெயர்ந்தார்கள். ஆழியில் ஏற்பட்ட வளி கரையை நோக்கித் தள்ளும்போது கரையில் இருந்த மணல்களே பனை உயரத்துக்கு எழுந்து வீசின. கரை அரிப்பும் மிகுந்திருந்ததால் மாந்தர்கள் தங்களது திமில்களை மேலேற்றி மரங்களில் கட்டி விட்டு நாவாய்களைக் கழி உள் முகத்தில் நிறுத்தினார்கள். மணல் அரித்து ஆழி நீர் உள்ளே புகுவதற்கு முன்பாக அவர்கள் இடம் பெயர்ந்தார்கள்.

தாழையும் நெய்தலும் புன்னையும் ஞாழலும் பனையும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைத்து அடப்பங்கொடிகள் வளர்ந்திருந்த அப்பகுதியை கன்டல்வேலி என்பார்கள். அப்பகுதியில் மாந்தர்கள் தொடர்ச்சியாக வசிக்க முடியாது. ஆனால், தற்காலிகமாகச் சூறை நிற்கும்வரை தங்கிக்கொள்ள எப்போதாவது பயன்படுத்துவார்கள். கன்டல்வேலியின் தாழைகளைத் தாண்டி நீர் உள்ளே வந்துவிட முடியாது. சூறையின் பெரும் சுழலில் பனை உயரத்துக்குக் கடல் அலைகள்போல எழுந்து நிற்கும் மணல் படுகைகளால் கண்டல்வேலியை ஒன்றும் செய்ய முடியாது. அடர்ந்து நிற்கும் அந்த மரக்கூட்டம் மதில்போல ஆழியின் சூறையை எதிர்கொள்ளும் வலிமையை அதன் வேர்களும் தண்டும் கிளையும் கொடுத்திருந்தன.

தாழை மரத்தைப் பொருத்தவரை வளர்ந்து நெளிந்து படரும் தன்மையுள்ளதால் அவ்விடம் பாதுகாப்பானதாகக் கருதினார்கள். ஆழிக் கரையில் இது போன்ற நகர்தல் அடிக்கடி நடக்கக் கூடியதுதான்.

அங்கே, ஆரல் இருந்த காலத்தில்தான் நிலச்சூடு உடம்பில் பாய்ந்து உள்ளுக்குள்ளே வேலையைக் காட்டியிருக்கிறது.

காமாலைக்கு உள்ளூர் மருத்துவச்சிகள் மருந்து கொடுத்தும் குணமாகவில்லை. தென்னனிடம் போகலாமென்றால் நடக்கக்கூடத் தெம்பில்லாமல் கிடக்கிறாள். என்ன செய்வது எனத் தெரியாமல் குழம்பி, பரிதவித்துக் கையைப் பிசைந்துகொண்டிருந்தான்.

ஆரலை வெறியாட்டுக்குக் கூட்டிப் போக வந்திருந்த இருவாஞ்சி அவளது தோற்றத்தைக் கண்டு ஆடிப்போய்விட்டாள். உடனடியாகத் தென்னனுக்கு ஓலை அனுப்பி வர வைத்தாள். தென்னன் ஓடோடி வந்தான். மகள் அழைத்தால் மறுப்பேது. துவண்டு நாராகக் கிடந்த ஆரலின் கண்களைப் பரிசோதித்தான். கைகளைப் பிடித்து நாடியைக் கணித்தான். அவனுக்குப் புரிந்தது. பித்தம் தலைக்கேறியிருந்தது. பித்தப்பையில் குருணை குருணையாகப் பல கட்டிகள் உருவாகி அதனால் பித்தப்பை வீக்கமடைந்திருந்தது.

உடல் சூடாகியிருக்கிறது. மண் சூட்டோடு உணவுகளையும் தேக்கி வைத்துச் சூடுசெய்து, தொடர்ந்து சூடாக சாப்பிட்டு வந்ததில் வயிற்றுக்குள் சிக்கல் உண்டாகி இருக்கிறது. வயிற்றில் சமநிலை இல்லாவிட்டால் செரிமானச் சிக்கல் உண்டாகும். இயற்கைச் சமநிலைதான் உடலுக்கும். உணவை அரைக்கும் தன்மை வயிற்றில் குறைந்திருக்கிறது.

அவளது கட்டைவிரலையும் ஆட்காட்டிவிரலையும் வளைத்து அழுத்தம் கொடுத்தான். பின், அதன் மிருதுவான தோல்களை அழுத்தி நீவினான். வயிற்றுக்குள் ஏதோ உருள்வதுபோல உணர்ந்தாள் ஆரல்.

இருவாஞ்சி அழைக்கும்போதே பிணியின் தன்மையைச் சொல்லியிருந்தாள். அதனால் மரப்பெட்டியுடன் வந்திருந்தான். கீழா நெல்லியும், பழுத்த பூவரச இலைகளையும், கரிசலாங்கண்ணியையும் தண்ணீர் விட்டு அரைத்தான். சுக்கு, பெரு மிளகு, சோம்பு, மஞ்சள் ஆகியவற்றையும் தனியே அரைத்தான். பின், இரண்டையும் ஒரு குடுவையில் கலக்கினான். அதைச் சூட்டில் கொதிக்கவைத்து ஆறும்வரை காத்திருந்து அவளுக்குச் சிறு மண்கலயத்தில் கொடுத்தான். தினமும் இருவேளை உண்ணச் சொன்னான். நீர்க் காய்கள் சார்ந்த உணவுகள் மட்டும் சில நாள்களுக்குக் கொடுக்கச் சொன்னான்.

ஆரல், தென்னனைப் பார்த்ததிலேயே பாதிச் சரியாகிவிட்டாள். பிணியாளிக்கு மருந்து சரியான மருத்துவரின் முகம் பார்ப்பதே.

இருவாஞ்சி தென்னனுடன் கிளம்பினான். திருக்கையன் தங்கைக்காக மற்றவர்களை அனுப்பிவிட்டு அவளைக் கவனித்துக்கொண்டான். அதனால், போன ஆண்டில் நடக்காத தனது கனவை, இந்த ஆண்டு தனது நாட்டில் நடக்கும் வெறியாட்டில் கலந்துகொண்டு தீர்த்துக்கொள்வதில் ஆர்வமாக இருந்தான்.

காலம் தலைகீழாகப் புரட்டிவிட்டது. அவன் எதிர்பார்க்காத இடத்தில் தூக்கிவந்து உட்கார வைத்த இயற்கையைச் சினம் கொண்டு வஞ்சினான்.

நாக நாட்டுக்கும் ஆரப்பர் நாட்டுக்கும் மாறி மாறிப் பயணமாகிக் கொண்டிருந்தான். இரண்டு நாட்டுக்கும் தேவையான கருவிகளை முதலில் நாக நாட்டில் கல் தச்சர்களைக் கொண்டு உருவாக்கினான். அதேநேரத்தில் மரங்களைத் தேர்வு செய்வது எப்படி எனச் சொல்லிக் கொடுத்து, ஒரு குழுவை மரங்களை வெட்ட அனுப்பினான். திருக்கையனோடு வந்திருந்த கம்மியர்கள் குழந்தைக்குச் சொல்வதுபோல நாகர்களுக்கும் ஆரப்பர்களுக்கும் மூடுதிமில் கட்டுமானத்தைச் சொல்லிக் கொடுத்தனர். முதல் மூடுதிமில் ஆரப்பர் நாட்டில்தான் உருவானது . அது கொடுத்த தெம்பில் இரு நாட்டினரும் கடுமையாக உழைக்கத் தொடங்கினர்.

பெண்களையும் முழுதாக இப்பணிக்கு இழுத்தார்கள். முதலில் இரண்டு நாட்டிலுமே பெண்களைத் தயாரிப்புப் பணிக்குக் கொண்டு வருவதை எதிர்த்தார்கள்.

“ஆரல் பெண்தான். அவளால்தான் உங்களையே நாங்கள் சந்திக்க முடிந்தது. ஆரல் தனித்துதான் இங்கு வந்தாள். எல்லா வேலையையும் எல்லாரும் செய்ய முடியும். குறிப்பாக மாந்தரிகள் ஆண்களைவிட வலுவானவர்கள். தொடந்து உங்களால் சிறு எடைக் கல்லைச் சுமந்துகொண்டு நிற்க முடியுமா..?”

ஆண்களின் கைகளில் வீசை எடை கொண்ட உருண்ட கற்களைக் கொடுத்துவிட்டு மற்றவர்களோடு வேலைகளைக் கவனித்தான். நல்ல திடமான உடல் கட்டோடு இருந்த ஆண்கள் வீராப்பாகக் கல்லை வைத்துக்கொண்டு நின்றனர். கால் பொழுதுகள் அவர்களைத் திருக்கையன் கண்டுகொள்ளவே இல்லை. கற்களை கையில் வைத்திருந்தவர்கள் முதலில் அதன் எடை சிறிதாக இருப்பதற்காகத் திருக்கையனிடம் சண்டையிட்டார்கள். ‘எங்களால் இருநூறு வீசைக் கல்லைக்கூடச் சுமக்க முடியும்’ என்று நகையாடினர். நேரம் செல்லச்

செல்ல ஒரு வீசைக் கல்லே ஓர் ஆனையைச் சுமப்பது போல அவர்களுக்குப் பாரமாகிப் போனது. அவர்களின் உறுதி குலைந்தது. திருக்கையனிடம் சென்று எங்களால் தொடர்ந்து சுமக்க முடியவில்லை என்று வருந்தினார்கள். திருக்கையன் அவர்களைக் கூர்ந்து பார்த்தான்.

“உங்களால் ஒரு வீசைக் கற்களையே சுமக்க முடியவில்லை. ஒரு வீசைக் கல்லே கால் பொழுதுகளில் சுமக்க முடியாத பாரமாகிப் போனது. ஆனால் மாந்தரிகள் சிறு அணுவாகச் சுமக்கத் தொடங்கி அது மேலும் மேலும் வளர்ந்து ஐந்து வீசைகளாகத் திரண்டு பின் அதை வெளித் தள்ளுகிறார்கள். அவர்களில் இருந்தே நாம் அப்படி பிறக்கிறோம். அதோடு நம்மைச் சுமந்துகொண்டே அனைத்து வேலைகளையும் நம்முடன் நின்று செய்கிறார்கள். அதோடு விலங்குகளைக் கவனித்துப் பாருங்கள். ஆண் மிருகங்கள் கலவித் தேவையோடு நிறுத்திக்கொள்கின்றன. பெண் மிருகங்கள் தனது குட்டிகளை ஈனுவதோடு மட்டுமில்லாமல் அந்தக் குட்டிகளை வளர்த்து அவர்களாக இரை தேடித் தகவமைத்துக்கொள்ளும் வரை உடனிருந்து காக்கின்றன. மாந்தர்களும் மிருகத்திலிருந்து உருவான புதிய மிருகம்தான். அதனால் குமரிக்கோட்டில் தாய்களின் தலைமையை ஏற்கிறோம். அவர்களின் வழியைப் பின் பற்றுகிறோம். மாந்தரிகளால் எதையும் செய்ய முடியும்!”

திருக்கையன் செயல் வழியே உணர்த்தினான். அதற்கு நல்ல தொடக்கம் கிடைத்தது. மாந்தரிகளும் வேலையைப் பங்கிட்டுக் கொண்டார்கள்.

திருக்கையனின் மன உணர்வைப் புரிந்தவர்கள்போல இரண்டு நாட்டினரும் சேர்ந்து திருக்கையனையும் அவனோடு வந்தவர்களையும் அழைத்து இரண்டு நாடுகளும் பேரெண்ணிக் கையில் திரள, தங்கள் வழக்கப்படி கொற்றவைக்குப் பூசை செய்தார்கள். அவனது மனது நெகிழ்ந்தது. மொத்த மாந்தர்களும் திருவிழாப்போலக் கொண்டாடினார்கள். ஏழ்பனையில் அப்படியில்லை.

32 நளித் திங்கள் எட்டாம் திகதி

போர் என்று வரும்போது அதற்குள் ஓர் அறம் நிலைத்து விடுகிறது. போரில் திடத்தையும் அறிவையும் கொண்டு வெல்பவர்கள் ஒரு சாரர் இருப்பார்கள். அதற்காகத் தங்களது அனைத்து நயவஞ்சகத்தையும் பயன்படுத்துவார்கள். ஆனால், சிறு குழுவாக நின்றாலும் மாந்தர் வாழ்வுக்காக, தமிழர் விடுதலைக் காக நிற்பவர்களின் அறமென்பது யாவரும் திடமாக சுயமாக வாழ்வதற்கான போரிடல்தான். போரில் வெற்றி தோல்வி கடைநிலைதான். வெட்டிக் கொல்லப்படும் உயிர்கள் போரின் அறத்துக்காகத் தங்களைப் பலி கொடுத்துக் கொள்கின்றன. போரில் சமநிலை என்பது ஏதுமில்லை. போரில் சமரசம் என்பதும் ஏதுமில்லை. சமநிலை கிடையாது என்னும்போது சமரசமும் கிடையாது. இறுதியில் வென்றவர்கள் வகுப்பதே இரண்டாம் அறம். ஆகவே, அது அறமற்றும் போகலாம்!

தாய்கள் வெல்லாமல் மூர்க்கர்கள் கையில் மாந்தரிகளின் அடிமை வாழ்வு சிக்கினால் என்னாவது. மாந்த குலத்தின் தொடர்ச் சிக்காக உழைத்த அறிவர்கள் கைக்கொண்ட அறம் என்னாவது என்பதற்காகத்தான் இந்தப் போரைத் தாய்கள் எதிர்கொண்டு, கடை உயிர் வரை நின்று சாகத் தயாராகவே இருந்தார்கள்.

முதல்நாளில் செவ்வானம் கொப்பளித்துத் துப்பிய எச்சிலைப் போல் குருதியும் உடல்களின் துண்டங்களுமாக நிறைந்து கிடந்தது. அந்தி மயங்கும் வேளைக்குள் போர் மூர்க்கர்களின் வசம் சாய்ந்திருந்தது. பயிற்சியும் வெறியும் ஏற்கெனவே தீயிலிட்டுக் கொல்லப்பட்ட சொந்தங்களின் கதறல்களும் அவர்களின் செவிப்பறையில் நுழைந்து மூளை நரம்புகளைக் குடைந்திருந்தன. மாந்தரிகளின் உடல்களைத்

தீயில் வாட்டித் தின்ற நினைவுகளும் அவர்களைக் குடைந்தெடுத்திருந்தன. அதனால் தோல்வியின் வாதைகள் அழுத்த போரின் கடைசி நுனி வரை நுகர ஆசைப்பட்டது அப்பெருங் கூட்டம். அதனால், போரின் ஆன்மா அவர்களுக்குச் செவி மடுத்து அறுபத்தியெட்டு நாட்டு மாந்தர்களையும் காவு கொள்ளத் தன்னைத் தயார் படுத்தத் தொடங்கியது. குடல்கள் சரிந்து தொங்கும், தலை துண்டாகி வேறாகக் கிடக்கும், கால்கள் வெட்டப் பட்டு, கைகள் துண்டாடப் பட்டு, வேட்டையில் சிக்கி உயிர் போகும் தறுவாயில் கடைவாயில் இழுக்கும் மிருகங்களைப்போல மாந்தர்கள் கொத்துக்கொத்தாக மண்ணில் கிடந்தார்கள். பச்சை நிறக் கோரைகள் கருஞ்சிவப்பு வண்ண குருதித் திட்டுக்களால் மடங்கிப் படுத்தேவிட்டன. கதிரவள் மறைந்துகொண்டிருந்த கணத்திலேயே கிழக்கில் சந்திரவள் முழு வெளிச்சத்தைத் தரத் துவங்கிவிட்டாள். மிருகங்கள் தரையில் விழுந்துகிடக்கும் உடல்களைக் கவ்விப் போகக் காத்திருந்தன. குறைந்த காயத்திலிருந்தோர் தீவட்டிகளைக் கொண்டு ஒளி குறைந்திருந்த மரங்களில் புன்னைப் பிசினைத் தடவி எரியூட்டினார்கள். மாந்த உடல்கள் களமெங்கும் மரத் தீயின் வெளிச்சத்தில் செம்மஞ்சள் நிறத்தைப் பூசிக்கிடந்தன.

முதல் நாளிலேயே ஏழ் மதுரையின் மூன்று தாய்களை, ஏழ் தெங்கத்தின் இரு தாய்களை, ஏழ் பின்பாலையின் இரண்டு தாய்களை, ஏழ் குன்றத்தின் மூன்று தாய்களை, ஏழ் காந்தளில் இரு தாய்களைக் காவு கொடுத்திருந்தது. மொத்தமாக முதல்நாளில் தாய்மாமன்கள் பதினெட்டுப் பேரைப் போரின் கோர நாக்குகள் தீண்டியிருந்தன. தும்பனும் போரில் இருவாஞ்சியோடு அயராமல் சண்டையிட்டு விழுப்புண்களை வாங்கியிருந்தான்.

இருவாஞ்சி குருதியில் குளித்து அதன் வாடையை ஆடையாக அணிந்திருந்தாள். செம்பனின் பின்முதுகில் ஒரு வாகான வெட்டு விழுந்திருந்தது. இறந்த உடல்களைத் தென்னனின் மருத்துவக் குழு ஓரிடத்தில் மொத்தமாகத் குவித்துக் கொண்டிருந்தது. வெட்டுப்பட்டு குற்றுயிராகக் கிடந்தவர்களுக்குத் தென்னனின் மாணவர்கள் மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மெந்தாரகையும் நள்ளியும் சுற்றிலும் இருந்து கிராமத்து மாந்தர்கள் கொண்டு வந்த உணவை உயிருடன் இருப்பவர்களுக்குப் பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இறந்தவர்களைக் குறித்துச் சிந்திக்கும் கருணை நினைவுகளில் யாரும் இல்லை. அடுத்த நாளில் தாங்கி நிற்கப் போதுமான வலு

அவர்களிடம் இல்லை. கிள்ளி அந்நேரத்தில் அருகிலிருக்கும் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் பயணப்பட்டிருந்தான். இன்னும் வீரர்களும் கருவிகளும் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. மாந்தர்களைத் தூண்டிய போர், தனது வெஞ்சினத்தை அறவழிப் பட்டவர்களுக்கு எதிராகத் திருப்பியிருந்தது.

இளநாகனும் செம்படவனும் மொத்தக் களத்தின் தன்மையைக் கேட்டறிந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள். செம்பன் பாறையொன்றில் காயம்பட்ட இடம் மோதிவிடாமல் சாய்ந்து அமர்ந்திருந்தான்.

“நீங்க சொல்றத எல்லாம் வச்சிப் பார்க்கும்போது இப்போதைக்கு நாம தோல்வியில இருக்கோம். நம்மோட தாய்கள் சில பேரை இழந்திட்டோம். நடந்ததை நாம திரும்பக் கொண்டு வர முடியாது. இழக்குறதுக்கு இனி ஒன்னும் இல்லன்ற நிலையில இருக்கோம். சரியா திட்டமிட்டா வெற்றி நம்ம பக்கம்தான்!”

அவன் சொல்வதை முழுதாகக் கேட்கும்வரை அமைதி காப்போம் என்கிற மனநிலை எல்லாருக்கும் இருந்தது. செம்படவனும் அவனும் கலந்துகொண்டு பேசியது என்பதால் செம்படவனும் அமைதியாக இருந்தான்.

“எப்போதுமே எதிரிய நாம குறைச்சு மதிப்பிடக் கூடாது. ஆனாலும் நாம அடிபட்டிருக்க மாதிரி எதிர்முனையிலும் பலத்த அடி விழுந்திருக்கும். அங்கயும் மாந்தங்க கொல்லப்பட்டிருப்பாங்க. அதனால நாளைக்கு நம்முதுதான். நானும் செம்படவனும் யூகிச்சது என்னன்னா... தொலை தூரத்துல இருந்து படைகளத் திரட்டி வந்தப்புறம் நமக்கு ஓய்வெடுக்க நேரம் இல்ல. அதனால முதல் நாளிலேயே நாம அதிக தூரத்தைக் கடக்கிறதுக்காக வந்த வேகம், நம்மள மாதிரி அதே நிலையில படை வீரர்களும் இருக்க முடியாது. அதுதான் முக்கியமான காரணம். அதோட, இறந்து கிடந்த பல உடல்ல நீலம் பாய்ஞ்சிருக்கு. அதுக்குக் காரணம் அவங்க நஞ்சைத் தடவி சண்டை போட்டதுதான். அதனால உடல் வெட்டப்பட்டு நரம்புல பட்டா உடனே உயிர் போயிடும்! அதனால, தொடர்ந்து எதித்துச் சண்டபோட முடியாம இத்தன உயிர்கள் கூடுதலா பலியாகி இருக்கு. ஆனா, செம்பனுக்கு விழுந்த வெட்டு கடைசி நேரச் சண்டையில விழுந்திருக்கு. அப்படின்னா அவங்ககிட்ட இருந்த நஞ்சு முடிஞ்சி போச்சுன்னு அர்த்தம். இப்பவும் வெட்டுப்பட்டுப் பிழைச்சிக் கிடக்கிறவங்க பலபேரு உயிரோட இருக்க அவங்களிடம் சுத்தமா நஞ்சு

இல்லங்கறதுதான். நஞ்சைப் பொறுத்தவரைக்கும் சின்னச் சின்ன அளவிலதான் நாம பயன்படுத்தி இருக்கோம். ஆனா பெரிசா இதுக்காக அவங்க மெனக் கெட்டிருக்காங்க.”

இருவாஞ்சிக்கு அது புரிந்தது. வடுவூர் சண்டையிலேயே அவர்களது கருவிகளில் நஞ்சு இருந்தது. அதோடு முதல் நிலையில் கோரைகளில் மறைந்திருந்த மூர்க்கர்களை அலங்குகள் தாக்கும் போது நஞ்சால்தான் அதிகம் இறந்தன . அஞ்சாவண்ணிக்கும் தவிட்டிக்கும் புரிந்தது. வெளியிலிருந்து வந்த ஒரேநாளில் களத்தைப் படித்துவிட்ட அவனைப் பாராட்டத் தோன்றியது. ஆனால் அதற்குரிய மனநிலை அவர்களிடம் இல்லை. அவளுக்கு ஒன்று மட்டும் தோன்றியது. யாரையும் குறைத்து மதிப்பிடக் கூடாது. அதனால் நேரடியாக அஞ்சாவண்ணி கேட்டாள்.

“இப்ப என்ன பண்ணலாம்?”

“அவர்கள் கையாண்ட அதே உத்தியை நாமும் பயன்படுத் தலாம்.”

“நஞ்சா, அவ்வளவு நஞ்சுக்கு நாம் எங்கே போவது.. ஒரு வேளை அது கிடைத்தாலும் விடிய விடிய எத்தனை கருவிகளில் தடவிக்கொண்டிருப்பது..? மாந்தர்கள் ஏற்கெனவே தாய்களையும் மாமன்களையும் இழந்த சோகத்தில் சோர்ந்து போய் இருக்கின்றனர்!”

“தாயே... அவ்வளவு நஞ்சுகளை நம்மால் உடனடியாக உருவாக்க முடியாதுதான். ஆனால் மயக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான திட்டம் என்னிடம் இருக்கிறது!”

“சரி... அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துங்கள். ஆனால் அது மட்டுமே அவர்களை வெல்லப் போதுமானதா?”

“இல்லை தாயே... முதலில் நஞ்சுகளை உருவாக்குவோம். எதிரிகளுக்கு உணவு கிடைப்பதைத் தடைப் படுத்துவோம்!”

“புரியிற மாதிரி சொல்... காலமில்லை.”

“நஞ்சுகளை உருவாக்கி அவர்களின் நீர்த் தேவையில் கை வைப்போம். மாந்தர்களுக்கு உணவில்லை என்றாலும் நீர் இருந்தால் அவர்களால் எந்தச் சூழலையும் தாக்குப் பிடிக்க முடியும். தண்ணீரில் கை வைத்தால் நாக்கு வறண்டு அவதிப்படுவார்கள். பெருஞ்சுவர் ஒட்டி நான்கு நீர் நிலைகள் இருக்கின்றன. அதில்தான் மூர்க்கர்கள் நீர் எடுக்கக் கூடும். இந்த இரவில் அந்த நீர் நிலைகளில் நஞ்சைக் கலப்போம். அந்த நீரைப் பருகும் மூர்க்கர்கள் மயக்க மடைவார்கள். அதனாலேயே நீரைப் பருகத்

தயங்குபவர்கள் போரில் நிலையாகச் செயல்பட மாட்டார்கள். அது அவர்களுக்குப் பேரிடியாக இருக்கும். இரண்டாவது இந்த இரவில் சிறுத் குழுவை தயார் செய்து நாங்கள் அவர்கள் இருக்குமிடம் சென்று அவர்களை உறங்கவிடாமல் செய்கிறோம். உறங்குபவர்களுக்கு காற்றின் வழியே புகை மூட்டி புகையில் எரிச்சல் தருகிற பச்சிலையைக் கலப்போம். அதனை நுகரும் யாவரும் நெஞ்சில் கழலை தோற்றுவிக்கிற இலைகளின் நாற்றத்தால் வெடித்து இருமிக்கொண்டே இருப்பார்கள். அதனாலும் உறக்கம் கெடும். பெரும் போரில் ஈடுபட்டு உறக்கமில்லாமல் போனால் அதுவே அவர்களுக்கு மிகுந்த சோர்வைத் தரும்!”

எல்லாருக்கும் அவர்களின் கணிப்பு சரியாக வருமென்று தோன்றியது. மாந்தர்களால் கட்டுப்படுத்த முடியாத உடனடித் தீர்வற்ற ஒன்று இருமல். இருமல் பற்றிவிட்டால் தானாக ஓயாது. அதோடு, அவன் சொன்னதுதான் அவர்களை மீளா வியப்பில் ஆழ்த்தியது. இளநாகன் போரை நடத்துவதில் தேர்ந்தவன் என்கிற முடிவுக்கும் வரக் காரணமாக இருந்தது.

“மூன்றாவது... விடியலில் இயங்கும் படைகளின் தன்மையை மாற்றியமைக்க வேண்டும். ஆழியின் அலைகளைப்போலத் தனித் தனியாகச் சிறு சிறு குழுக்கள் சிற்றலையாகப் பாய வேண்டும். சிற்றலை மூர்க்கர்களை நெருங்கியதும் அவர்கள் எதிர்த்துத் தாக்கும்போது தாக்குதலுக்குப் பயந்து, தப்பித்தால்போதுமெனத் திரும்பி நம்மவர்கள் ஓடிவர வேண்டும். எப்போதும் புறமுதுகிட்டு ஓடி வருபவர்களை எதிராளிகள் எக்காளத்தோடு அகந்தைச் செருக்கில் விரட்டி வருவர். அவர்களிடம் பயந்து ஓடுபவர்களைக் கொல்லும் வெறிதான் வரும். இது மிருகங்களின் நடவடிக்கை. மூர்க்கர்கள் மிருகம்தானே. அவர்களது மூளை தங்களது வெற்றியை எண்ணி மகிழ்ந்து வேகமாகப் பெருங்கூட்டமாக ஓடி வருவர். அப்போது ஆழியின் பேரலையைப்போல, அந்தக் கூட்டத்தை தனிமைப்படுத்தி இரு புறமிருந்து தாக்கவேண்டும். இதைப்போலப் பல குழுக்கள் ஒரே நேரத்தில் முன்னகர்ந்து பின்வாங்கி ஓடி வரும்போது சிந்திக்கக் காலமிருக்காது. அதனால் அவர்களின் தாக்குதல் முறை சிதறும். ஒவ்வொரு பெருங்கூட்டத்தையும் சிறு சிறு குழுக்கள் கொண்டு வளைத்து அடித்தாலே சமர் நம்மிடம் சரணடைந்துவிடும்!”

ஆரல், இளநாகனைக் கண்களுக்குள் வைத்துக்கொண்டிருந்தாள். இயற்கைப் பேரிடரைப்போலத்தான் மூர்க்கர்களின் பேரிடரும். வந்த சிறிதுநேரத்தில் அவன் கேட்டது, கவனித்ததை வைத்து ஒரு சமரின்

தோல்வியை அவனால் குறைக்கக்கூடிய அறிவாற்றல் பெற்றவன் எனில் அவனால் இயற்கையையும் வெல்ல முடியும் என நம்பினாள். அவன் உரையின் சாராம்சம் எல்லாருக்கும் உரைத்தது. உடனடியாக அஞ்சாவண்ணி தன் கடை மகள் இருவாஞ்சியிடம் இளநாகன் சொன்னதைச் செயலாக்கக் கட்டளையிட்டாள்

32 நளித் திங்கள் ஒன்பதாம் நாள்

மெந்தாரகைக் குழுவின் முரசு கொட்டத் தொடங்கியது. இரா முழுக்கக் குருதியின் வாடையை மோர்ந்துகொண்டுப் படுத்திருந்த விலங்குகள் திடும்மென எழுந்து முரசோசைக்குத் தாங்க முடியாமல் ஓடின. மென் பனிக்கு வாட்டம் கொடுத்துக் கவிழ்ந்து கிடந்த மரங்களின்

இலைகளும் வனத்தின் புல் பூண்டுகளின் தழைகளும் மெல்ல ஒளிரும் கதிரவளின் திசை நோக்கி தனது தலையைத் திருப்பின. முரசு அரவம் கேட்டு மூர்க்கர்கள் மெல்லச் சோம்பல் முறித்தார்கள். அவர்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை.

இரா முழுவதும் இருவாஞ்சி தும்பனை எழுப்பி அவர்கள் அமைத்திருந்த தற்காலிகக் குடில்களை ஒட்டி சத்தமெழுப்பச் செய்தாள். அந்தப் பெரு மிருகம் எங்கிருந்து எப்படி வந்து தாக்குமோ எனத் தெரியாமல் தவித்தார்கள். இளநாகனும் செம்படவனும், அந்தத் தூங்கும் இரவில் அடைந்து கிடக்கும் நாகங்களை, அரணைகளை, மரப்பல்லிகளைத் தேடினார்கள். மாந்த நடமாட்டமில்லாத ஒதுக்குப்புறமாக மரங்களின் கிளைகளில் தூங்கிய செந்நாகங்களையும் கருநாகங்களையும் தேடித்தேடிப் பிடித்தார்கள். அது கக்க காத்திருந்த நஞ்சை சேகரித்துவிட்டு அவற்றை மீண்டும் வனங்களில் விட்டார்கள். நஞ்சோடு பச்சிலை நஞ்சுகளையும் கலந்தார்கள். அவற்றை மூர்க்கங்குடியர்களின் தற்காலிகக் குடிலோரம் இருந்த நீர்த் தடாகங்களில் கலந்தார்கள். காய்ந்த இலைகளைப் பெரிய பந்துகள்போல உருட்டி எண்ணெயூற்றிப் பற்றவைத்து மூர்க்கங்குடியர்களின் தற்காலிகக் குடில்களில் வீசினார்கள். எரிந்தபடி சென்ற ஆயிரக்கணக்கான இலைப் பந்துகள் பறந்த வேகத்தில் நெருப்பணைந்து புகைகளைக் கக்கின. புகை மூட்டமும், பனி மூட்டமும் ஒன்றோடன்று கலந்தன. அவை மூர்க்கர்களின் நாசியில் துளைத்து எரிச்சலை உண்டாக்கின. விடிய விடிய இருமினார்கள். அதிகாலையில் உறங்கினார்கள்.

அது போர்க்களத்தில் தெரிந்தது. இரவில் நடந்த போர் வியூகத்தின்படி இருவாஞ்சியின் குழுவும் அஞ்சாவண்ணியின் குழுவும் அவர்கள் வகுத்த திட்டப்படி சிற்றலை பேரலையாக மாறித் தாக்கினார்கள். கொத்துக் கொத்தாக மூர்க்கர்கள் கொல்லப்பட்டனர். கிள்ளி அதிகாலையில் ஒரு பெரும் படையோடு களத்துக்கு வந்திருந்தான். ஏழ் மகரந்தத்திலிருந்த கிராம மக்கள் படை படையாக அணிவகுத்து வந்தனர். அவர்கள் எந்த அலுப்புமில்லாமல் உற்சாகமாகச் சண்டையிட்டனர். முன்பு வகுத்த படைத் தலைமையின் கீழ் கூட்டம் கூட்டமாக இணைந்து கொண்டனர். போரின் போக்கு தாய்களின் வசம் திரும்பத் தொடங்கியது.

இளநாகனும் ஆரலும் செம்பனும் பேரலைப் பிரிவில் நின்று தாக்குதல் தொடுத்தனர்.

தவிட்டியின் படை முன்புறமிருந்து ஓடி பின்வாங்க, பின் புறமிருந்து இருவாஞ்சியின் படை ஊடறுத்துத் தாக்கியது.

தென்னன் பிணங்களை அள்ளிக்கொண்டிருந்தான். காயமடைந்த வர்களுக்கு அவனது குழு மொத்தமும் மருத்துவம் பார்த்தது.

அஞ்சாவண்ணி பெருந்தேற்றனின் பாதுகாப்பு அரணை உடைத்து உள் புகுந்து பெருஞ்சமர் புரிந்தாள். அவளது கல்வாளும் கல் ஈட்டியும் இடையறாது தாக்கி எதிரிகளை வீழ்த்தியபடி முன்னேறியது. போர் தங்களுக்குத் துணையாக இருக்கிறது என்கிற இருமாப்பில் இருந்த பெருந்தேற்றனின் படை இரண்டாம் நாள் முற்பகலிலேயே வீழத் துவங்கியது. மூர்க்கர்களைக் கிழித்து முன்னேறிக்கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட போரின் வடிவங்கள் மூர்க்கர்களுக்கு எதிராக மாறிவிட்டிருந்தன.

அஞ்சாவண்ணிக்குப் பெருந்தேற்றனின் முகம் முன்பின்னாகக் கிடந்தது. பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த போரில் பெருந்தேற்றனின் கபாலத்தில் கோடிட்டதோடு தப்பித்திருந்தான் அவன். மிக நெருக்கமாக அவனைச் சிம்ம எலும்பின் கூரால் கிழித்தபோது இடை புகுந்து தாக்கித் தள்ளி விட்டு "பெருந்தேற்றா..!" என்று கத்தி, அவனைப் பாதுகாத்து இழுத்துச் சென்ற காமனையும், இழு வாங்கி அவனுடன் சென்ற பெருந்தேற்றனின் முகத்தையும் அவள் எப்படி மறக்க முடியும்? எதிரியாக இருந்தாலும் ஒரு நாட்டின் தலைமகனின் முகம்கூட வேறு யாருக்கும் தெரியாதபோது அம்முகத்தை நன்கு நினைவில் வைத்திருந்தமைக்காகத்தான் இப்போரில் அவளைத் தலைமையேற்கச் சொல்லியிருந்தார்கள்.

அதனால்தான் நகர்தல் படைக்குத் தலைமை வகுத்தும் அவளது கவனமெல்லாம் போரின் இடையில் எங்காவது அம்முகம் தென்படுமா, வீழ்த்திவிட மாட்டோமா என முத்தாய்ப்பாக எதிரிகளை வெட்டி வீழ்த்திக்கொண்டே முன்னகர்ந்தாள். எல்லாத் தாய்களும், தாய்மாமன்களும் களத்தில் உக்கிரமாகப் போர் செய்து கொண்டிருந்தனர்.

ஒருவனை அரண்போலக் காக்கும் கூட்டத்தைப் பார்த்தாள். அக்கூட்டத்துக்குள் அவளது மனதில் ஊடாடிய முகம் தென்பட்டது... அது

பெருந்தேற்றன்! பதினேழு பெற்றவள் போலில்லை அவள். கொற்றவை களத்தில் வெறியாடுவதுபோல உக்கிரமாக மாறினாள்.

பாதுகாப்புப் படையினரைத் தன் வாளால் வெட்டி வீசி உள்ளே புகுந்தாள் அஞ்சாவண்ணி. ஒரு நாழிகை நேரடிச் சண்டை. இருவருமே சம பலத்தில் இருந்தார்கள். அவன் எதிர்பாராத ஒரு தருணம் வாய்த்தது. எங்கிருந்தோ பாய்ந்து வந்த அம்பில் தலை தப்பிக்கக் கீழே குனிந்தான். அந்தக் கணத்தில் பெருயாளி மீது குத்தி நிமிர்ந்து கிடந்த எலும்பீட்டியைச் சட்டென எடுத்து அவன் சுதாரிக்கும் கணத்துக்குள் இறக்கினாள். பெருந்தேற்றனின் கரு மஞ்சள் முகத்தில் ஈட்டி இறங்கி மூளை கொழகொழவென மண்டையின் பின்வழியே வளிந்தோடியது. தன்னிலை மறந்து அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போது, பின்னாலிருந்து ஓடி வந்த சோமன் அஞ்சாவண்ணியின் காலில் மகரயாளி எலும்பில் கட்டியிருந்த தீட்டிய கல் வாளால் வெட்டி இழுத்தான். அவள் உணர்ந்து திரும்பும் தருவாயில் அவளது கழுத்தை துண்டாக்கினான். அது தூர ஓடி வீழ்ந்து கிடந்த பெருந்தேற்றனைப் பார்த்துச் சிரித்து அமுங்கியது.

இருவாஞ்சியின் தீரத்தாலும் மாந்தர்களின் திடத்தாலும் போர் அவர்களின் பக்கம் சாய்ந்து இருவாஞ்சியின் காலில் மண்டியிட்டு வணங்கியது. நடப்பனவறறை, நடந்தவற்றை மாந்தர்களின் நாக்குகள் மாற்றி மாற்றி வார்த்தைகளாகப் பகிர்ந்து, காற்றைவிடத் துரிதமாக அகிலமெங்கும் கலந்தன. போர் கொன்றிருந்த தாய்களையும் தாய்மாமன்களையும் தேடி எடுத்தார்கள்.

கொற்றவை வெறியாட்டை அடுத்த ஆண்டில் நடக்கும் நாட்டில் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தவர்கள் எல்லாம் அறுபத்தியெட்டு நாடுகளில் பதுங்கியிருந்த மூர்க்கர்களை அழிக்கும் போதே அதை ஒட்டிய செய்திகள் கேட்டு எல்லா நாடுகளிலும் இருந்து திரள் திரளாக ஏழ்பனை நாட்டை நோக்கி வந்து, இடையில் பெருஞ்சுவரில் நடக்கும் உச்சப் போரின் நிலையறிந்து தாய்களின் மரணங்களை, தாய்மாமன்களின் மரணங்களை, மூர்க்கர்களை எதிர்த்த சமரில் சொந்தங்கள் கொத்துக் கொத்தாக வீர மரணம் அடைந்ததைக் கேள்விப்பட்டு ஆறாத் துயரத்தோடு கிடைத்த வாகனத்தில் கூடினார்கள். ஏழ்பனையின் நகரைக் காத்தவர்கள், மூப்பின் நிமித்தமாகவோ, குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பொருட்டோ, மிருகங்களிடமிருந்து கிராமத்தை, நகரைக் காக்கும் நிலையாலோ, மட்டுமே வேறு வழியின்றித் தங்கிய மாந்தர்களைத் தவிர்த்து மற்ற எல்லாரும் அறுபத்தியெட்டு நாடுகளில் இருந்தும் வந்துகொண்டே இருந்தார்கள்.

போரைப் பொறுத்தவரை அது முடிவுக்கு வந்துவிடவே கூடாது. களத்தில் நின்றுகொண்டிருக்கும்போது எதிரியைக் குறித்தே சிந்தை இருந்துகொண்டிருக்கும். போரின் வெற்றியும் தோல்வியும் இரு தரப்பிலும் சொல்லவொண்ணாத் துயர்களையே தரும். மூர்க்கங்குடியும் அப்பெருந் துயரில் கட்டுண்டு கிடந்தது. புறமுதுகிட்டு, காயங்களோடு உயிரைத் தாங்கிப் பிடித்து ஓடி வந்த மூர்க்க வீரர்களை, மூர்க்கங்குடியர்கள் கண்ணீரோடு ஏற்றுக்கொண்டனர். தங்களை உதாசீனப்படுத்திய, அடிமைப்படுத்திய தங்களது மூர்க்கர்களை அக்குடிப் பெண்கள் அரவணைத்து அழவே செய்தார்கள்.

வென்றிருந்தாலும் போர் தந்த மரணங்கள், காயங்கள், கால் இழந்து, கையிழந்து, விரல்கள் இழந்து, விதைகள் இழந்து, கண்கள் இழந்து, மூக்கறுபட்டு, வாய் கிழிந்து, முகம் சிதைந்து, மண்டை பிளந்து, சதைகள் பிய்ந்து இனி வரும் ஒவ்வொரு கணத்தையும் சகித்து வாழும் மாந்தக் கூட்டத்தின் நிலை மிகக் குரூரமானது. காலம் தோறும் வடுவாக நீடிக்கும்.

இருவாஞ்சி தன் தாயை மடியில் தாங்கிக் கதறியழும் தகப்பன் தென்னனைப் பார்த்தாள். அவன் கண்களில் வழியும் கண்ணீரை முதல்முதலாகப் பார்த்தாள். போர் தன்னை வெற்றிக் களிப்பில் முடித்து வைத்தது. போர்களில் வென்றவர்கள் பட்ட காயங்களைப் பொருட்டாக எடுப்பதில்லை என்பது மாயை. போரைத் திணிப்பவன் கூடத் தனது உடலில் வழியும் குருதியை ஆற்றாமையோடும் இயலாமையோடும் அதைத் தாண்டித் தோல்களிலும் குடல்களிலும் அனைத்து உறுப்புகளின் வதைகளையும் தாங்கியபடி எஞ்சி நிற்கும் அந்த உயிர் கொடுக்கும் வாதையைக் கணம் தோறும் அனுபவித்து துயரத்தில்தான் ஆன்மாவைக் கதறடிப்பார்கள். வெற்றியை ஈட்டிய குமரிக்கோடே உருக்குலைந்த காடாகக் காட்சியளித்தது. இருவாஞ்சியால் குமரிக்கோட்டு மாந்தர்கள் உருகிக் கிடப்பதைப் பார்க்கத் தாள முடியாமல் தவித்தாள். முதலில் தனக்குள் அடர்ந்த இறுக்கம் தளர வேண்டிக் கொற்றவையை நிமிண்டினாள். உள்ளுக்குள் குமைந்த திரவ மாற்றங்களைச் சகித்து நிமிர்ந்தாள். இழப்புகளைப் பற்றிச் சிந்திக்கும் தருணம் இதுவல்ல. இதைவிட இன்னுமொரு பேரிழப்பைத் தாங்க வேண்டும். அதற்கு மாந்தர்களைத் தயார் படுத்த வேண்டும் என அவளது மனம் பறந்தது .

தங்களது சொந்தங்களின் உடல்களைத் தேடி ஓடிக் கொண்டிருக்கும் மாந்தக் கூட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் செம்பன். கொலைக்களத்தில் கிடக்கும் ஒவ்வொரு பிணத்தையும் தூக்கிப்

பார்த்து அது தன்னுடையவன் அல்ல, தன்னுடையவள் அல்ல என்றாலும் கதறும் அம்மக்களைக் கண்ட செம்பனுக்கு உணர்ச்சிகள் உடலில் ஒரு வித நடுக்கத்தை உருவாக்கியிருந்தன. அதைப் புரிந்துகொண்டு குருதி தடித்துச் சதைகள் கிழிந்திருந்த அவனது தோள்களை அரவணைக்கும் விதமாகத் தனது கையைப் போட்டாள். செம்பன் அதற்காகக் காத்திருந்தவன்போலத் திரும்பி அவளது மார்பில் முகம் சாய்த்து அழத் தொடங்கினான். அவளது தாய் இறந்திருந்தும் முகம் இறுகிக் கிடந்தவள் செம்பனின் கையை வலுவாகப் பிடித்துத் தூக்கித் தன் முன்னால் நிறுத்தினாள். செம்பனின் மொத்த எடையையும் அவளது ஒற்றைக் கை தாங்கி இழுத்துத் தனக்கு முன் நிற்க வைத்தது.

“செம்பா... செம்பா... அழுவறத முதல்ல நிறுத்தறியா?”

அவள் கத்தலில் அவனது அழுகை போன திசையும் தெரியவில்லை. கண்ணீர் காய்ந்த விநாடியும் புரியவில்லை. தன் முன்னே இருவாஞ்சி இல்லை. கொற்றவை இருக்கிறாள் என அரண்டு நின்றான். அவன் நாக்கு எழும்ப முடியாமல் தவித்தது.

“இந்த ஒரு திங்களில் எப்படியும் நூறாயிரம் பேராவது ரெண்டு பக்கத்திலயும் சேர்த்து இழந்திருப்போம். நம் வாழ்நாளில் பார்க்காத துக்கம்தான். ஆனா அதைவிட இயற்கை நமக்குக் கொடுக்கப் போற வலி பெரிசு. எனக்கென்னவோ கொத்தவைதான் இந்தப் போர நமக்குத் திணிச்சிருக்கான்னு தோணுது. நம்மள, வரப் போற பேரூழிக்குத் தயார்படுத்தியிருக்கா. எல்லாரும் அழட்டும். இனி அழுகாம இயற்கைய எப்படி எதிர்கொள்ளணும்னு திடமா இருப்போம். இந்தப் போரையாவது மக்கள் தெரிஞ்சி எதிர் கொண்டாங்க. வரப் போற பிரளயத்தை எப்படித் தாங்கப் போறாங்க..? அதனால நாமதான் நம்ம சரி பண்ணிகிட்டு மாந்தர்கள அதுக்குத் தயார் பண்ணனும்.”

இருவாஞ்சியை நன்கு அறிந்தவன். அவளின் மனச்சுவடுகளைச் செம்பன் புரிந்துகொண்டான். ஆகவேண்டியதைச் செய்யத் துவங்கினான். இறந்தவர்களை ஒரே இடத்தில் புதைக்க வேண்டும் என நினைத்தார்கள். எல்லா மிருகங்களைப்போல மாந்தர்களும் தாங்கள் இறந்த பிறகு மற்ற மிருகங்களுக்குத் தங்களை விட்டுப் போகும் முறையைத்தான் கொண்டிருந்தனர். அதுவே காட்டின் வழி வந்த மாந்தர்கள் இன்னோர் உயிருக்குத் தனது உடலை உணவாகக் கொடுப்பது. அப்படி இருந்த குமுகத்தில் ஒரு மாற்றமாக மாந்தர்களின் இறந்த உடல்களைக் கொத்தித் தின்னும், கடித்துப் பிய்த்தெறியும் மிருகங்களின் முன்னால், தான் நேசித்த

மாந்தர்கள் செதில் செதிலாகக் கடித்துத் தொங்குவதை, நேசித்து முத்தமிட்ட உடலை மிருகங்கள் வெறியோடு குதறுவதைத் தாங்க முடியாமல்தான் புதைப்பதை ஒரு வழக்கமாக்கினார்கள்.

மண்ணும் தின்னும். மண்ணோடு மிருகமும் தின்னும். அதற்குள் நேசித்தவர்களின் இடத்திலிருந்து கடந்துவிடலாம். அவர்களின் நினைவுகளைச் சுவிகரித்த மனதோடு நாள்களைக் கடத்தலாம் என மாந்தர்கள் முடிவுக்கு வந்தார்கள். அதனால் புதைக்க முடிவு செய்தனர். ஆனால், அதற்கான நேரமில்லை. எரிக்கத்தான் முடியும். எல்லாரையும் துரிதப்படுத்தினான்.

காயம்பட்டவர்களுக்கு முதலுதவி அளித்து அவர்கள் யாவரையும் வாகனங்களில் ஏற்றி ஏழ்பனைக்குக் கொண்டு சென்றது மருத்துவக் குழு. ஏனெனில் எல்லா இடங்களையும்விட ஏழ்பனை தற்போது திருவிழாக் காலப் பாதுகாப்பு மருத்துவத்தில் முன்னால் நிற்கிறது, அங்கே போனால்தான் அனைத்தும் சரியாகும். ஆகவே அடிபட்டவர்களை விரைவாக அனுப்பினார்கள். மீதியிருக்கும் யாவரும் குழி வெட்டத் தொடங்கினார்கள். இல்லையில்லை. குளம் வெட்டத் தொடங்கினார்கள்.

ஏழ்பனை செல்லும்போதெல்லாம் தனது சொந்த மகளைப்போல வாரியெடுத்து அணைத்துக்கொள்ளும் பெருந்தாய் அஞ்சாவண்ணியின் மறைவை ஆரலால் ஈடு செய்யவே முடியவில்லை.

ஆரல் பிறந்தபோது அவளது தாய் மீனாச்சி அதிக உதிரப் பெருக்கால் இறந்து போனாள். உள்ளூர் மருத்துவச்சியின் கணிப்பை மீறி அது நடந்துவிட்டது. பல நூறு பேறுகளை யோனியில் இருந்து இழுத்துத் தாங்கியவளாயினும் ஆரலின் தாய் விடயத்தில் தவறு நேர்ந்துவிட்டது. மீனாச்சியும் அஞ்சாவண்ணியும் ஓர் உறைக்குள் இரு கத்திகளாக இருந்தவர்கள். மீனாச்சி இறந்த செய்தியறிந்து துடித்துப் போய்ப் பார்க்க வந்த அஞ்சாவண்ணி, மீனாச்சியை மறந்து ஆரலைக் கையில் தாங்கி உடன் வந்திருந்த ஒருவயது இருவாஞ்சியிடம் விளையாடக் கொடுத்தாள்.

இரு திங்களுக்கு ஒருமுறையேனும் ஆரலை இருவாஞ்சியோடு வந்து பார்த்து அவளையும் தன் மகளாகப் பாவித்தாள். அக்காள்களைவிட அண்ணன் திருக்கையனின் அரவணைப்பிலும் அஞ்சாவண்ணியின் பாசத்தாலும் இருவாஞ்சியின் இணை பிரியா நட்பாலும்தான் ஆரல் சூரியாக வளர்ந்தாள்.

அஞ்சாவண்ணியிடம் இளநாகனை நிறுத்தி ‘என் தேர்வைப் பாரம்மா’ எனக் காட்ட வேண்டுமென்று நினைத்திருந்தாள். பெறாத

தாயின் நினைவை அழிக்க முடியாமல் மனம் ததும்பியது. அவளின் உள்ளக் கிடக்கை புரிந்து இளநாகன் அவளைத் தன் தோளில் சாய்த்துக்கொண்டான்.

இறந்தவர்கள் மூர்க்கர்கள் என்றாலும் அவர்களையும் அதே குளத்தில்தான் போட்டனர். இறப்பின் நினைவில் அனைவரும் ஒருவரே. குளத்தைக் கீழே வெட்டிய அளவுக்கு மேல் நோக்கியும் உயரமாகக் கிடந்தன சடலங்கள். அங்கிருந்த யாவருக்கும் அந்நேர உணர்ச்சிப் பெருக்கைச் சொல்லி மாளாது.

இறந்த மாந்தர்கள் அனைவரும் ஒரே இடத்தில் எரியூட்டப் பட்டதைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவரின் கண்களிலும் உறுதியை மீறிச் செந்நீர் கொட்டிக்கொண்டிருந்தது.

பாடினியர்களைக் கொண்டு அவர்களுக்கு மெந்தாரகையின் வழிகாட்டலில் மேற்செம்பாலைப் பண்ணில் இசையும் பாட்டும் பேராறாக ஓட, மாந்தர்கள் கண்ணீருடன் நின்றிருந்தனர். விசும்பின் அடிமடியில் மறைய கதிரவள் முயன்றுகொண்டிருந்தாள். கதிரவளின் ஒளிக்கீற்றுகளால் விசும்பில் கிடந்த மேகங்கள் சிவந்து கிடந்தன. மாந்தர்களின் உடல்கள் தீயில் வெந்து, நரம்புகள் வெடித்து சதைகள் எரிந்து அதனில் இருந்து வீசும் துர்நாற்றத்தை முகர்ந்தபடி மாந்தர்களின் அருகில் வர முடியாமல் காடுகளில் ஒளிந்து நின்று உறுமிக்கொண்டிருந்த மிருகங்களும் மேற் செம்பாலைப் பண்ணில் மெந்தாரகையின் காந்தக் குரலில் மயங்கி நின்றன.

சமர் வெற்றியின் உச்சமாக மெந்தாரகை தன்னுடன் எப்போதும் வைத்திருக்கும் செங்கோட்டு யாழை மீட்டினாள். முரசும் அதிர்ந்து அம்மாந்தர்களை அமைதிகொள்ளச் செய்தது.

33 நளித் திங்கள் பதினைந்தாம் நாள்

ஏழ்பனைத் தலைநகரில் கொற்றவை வெறியாட்டு விழாத் தொடங்கியது. நளித் திங்களின் பிற்பகுதி தொடக்கத்தால் பனி

அனலைப்போல ஏழ்பனைக்குள் சூழ்ந்துகொண்டிருந்தது. மூச்சு விடும் மாந்தர்களின் மூக்கிலிருந்து புகையாகக் காற்று மலர்ந்துகொண்டிருந்தது. பனி குளிர்வாக இருந்தாலும் அது வாழும் உயிர்களுக்குச் சூட்டைத் தர வல்லது. உடலில் சூட்டையும் வெளியில் குளிரையும் கொண்டிருந்த திங்கள் அது. அதனால் பெருஞ்சூட்டோடு நகர்த்திக்கொண்டிருந்தனர். ஏழ்பனை இதுவரை நடந்த கொற்றவை விழாவைப்போலில்லாமல் மாந்தர்களின் மூச்சுக்காற்றால் தொட்டது. வெந்துகொண்டிருந்த மாந்தர்களின் நெடியால் விசும்பிற்கும் மூச்சு முட்டியது. எங்கும் நெரிசல். எல்லாக் குடில்களிலும் மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கால் வெட்டுப்பட்ட, கை துண்டான, காது அறுந்த, கண்ணில்லாத, விரல்கள் நறுக்கப்பட்ட, தொடையில் எலும்பு ஈட்டியால் கிழிக்கப் பட்ட உயிர் போகாமல் மிஞ்சிய மாந்தர்களைக் கொண்டுவந்து சேர்த்திருந்தார்கள்.

எந்த நகரமும் சந்திக்காத பேரலையைப் பிரம்பூர் சந்தித்திருந்தது. முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மூர்க்கர்கள் வெந்து மடிந்ததில் ஏற்பட்ட திகிலில் இருந்து நகரம் இன்னும் முழுமையாக மீளாமல் கிடந்தது. எரிந்த அந்த மாந்தர்கள் இருந்த தற்காலிகக் குடில்கள் வருபவர்களுக்குத் தெரிய வேண்டாம் எனத் தட்டி வைத்து அந்தப் பகுதியை முழுவதுமாக அடைத்திருந்தனர். அதோடு பெருஞ்சுவரில் ஏற்பட்ட சண்டையின் பேரிழப்பு மாந்தர்களைத் துவட்டியிருந்தது. பெருஞ்சுவரில் இரண்டு திகதிகள் நடந்த போர் அத்தனை கொடூரமாக முடிந்திருந்தது.

இரண்டு நாளும் நடந்த மூர்க்கர்களுக்கு எதிரான போரில் அறுபத்தியெட்டு நாடுகளைச் சார்ந்த நாற்பத்தி மூன்றாயிரம் பேர்

மடிந்தனர். மூர்க்கர்கள் தரப்பில் முப்பத்தி நான்காயிரத்துச் சொச்சம் பேருக்கு மேலாகக் கொல்லப்பட்டிருந்தனர். மிகுந்திருந்தவர்கள் பெருஞ்சுவரின் சுரங்கம் வழியே மூர்க்கங்குடிக்கு ஓடிவிட்டனர். அறுபத்தியெட்டு நாட்டு தலைமைத் தாய்களில் இருபத்தியாறு பேர் வீரச் சமரில் மாண்டனர்.

இரண்டாம் நிலையில் இருந்த தாய்மாமன்களில் நாற்பத்தி மூன்று பேர் நெஞ்சில் கருவி பாய்ந்து, குருதியை நிலத்தில் சிந்தித் தங்களின் தீரத்தை நிரூபித்தனர்.

போரின் தலைமைத் தாய் அஞ்சாவண்ணியைப் பலி கொடுத்ததெல்லாம் யாராலும் மறக்க முடியாத காலத்தின் சுவடுகளாக நின்றுகொண்டிருக்கிறபோது கொற்றவை வெறியாட்டை நடத்த வேண்டுமா என்றெல்லாம் எல்லாருக்கும் கேள்விகள் இருந்தன. ஏழ்பனையின் தலைமைத் தாயே மாண்டபின் எப்படி விழாவை நடத்தப்போகிறார்கள். இருவாஞ்சி கொற்றவையைப் போற்றி நடத்துவதில் உறுதியாக இருந்தாள். தனது தாயின் ஆன்மா கொற்றவையோடு இணைந்திருக்கும். அவளை மகிழ்விக்கும் என உறுதியாக நம்பினாள். அதனால் கொற்றவை வெறியாட்டு தொடங்கவே செய்தது. அதோடு இருவாஞ்சி அந்த நிலத்தின் இளையவளாக இருந்தும் அனைத்துக்கும் தாயாக உயர்ந்தும் நின்றிருந்தாள். அவள் சொல் மந்திரம்போல மாறியது.

மாந்தர்கள் தங்கும் இடமில்லாமல் சாலைகளில்கூடத் தங்கினர். கிடைத்த இடங்களில், கிடைத்த வாய்ப்புகளில் தங்களைப் பொருத்திக்கொண்டனர்.

நடந்த சமரின் துயர்களை, இழந்த மாந்தர்களின் வடுக்களை, உடல் கிழிந்த மாந்தர்களின் காயங்களை மாற்றும் மருந்தாக கொற்றவை நின்றிருந்தாள். அவள் மாந்தர்கள் பார்க்கும் மனநிலைக்கேற்பத் தகவமைத்துக்கொள்ளும் சிறுக்கியாக நின்றாள். அவள் மேனி பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் முதிர்ந்து கல்லாகச் சமைந்திருந்த மரத்தால் மினுங்கியது. அவளுக்கு முன்பாகவும் பின்பாகவும் நூறாயிரத்திற்கும் மேற்பட்ட மாந்தர்கள் குவிந்திருந்தனர். எல்லாரையும் ஒழுங்கு செய்யும் ஏழ்பனையின் பெருங் குழுவே திணறிக்கொண்டிருந்தது.

ஒரே இடத்தில் தமிழிப் பேரினம் கட்டுக் கடங்காமல் கூடி நிற்பது இதுதான் முதல்தடவை. யாரிடமும் எந்தக் கவலையும் இல்லை. பயமும் இல்லை. மனதின் அடியிலிருந்த வெறுமைப் பூட்டுகளைக் கொற்றவையின்

முன்பு திறந்துவிட்டிருந்தார்கள். அவ்வளவு பெருந்திரளும் கிடைத்த கொம்புத் தலைகளைத் தங்களது கையில், கக்கத்தில் வைத்திருந்தனர். பல நூறாயிரம் மாந்தர்கள், சொல்லப் போனால் மொத்தக் குமரியுமே கிளம்பி வந்துகொண்டிருந்தது.

கூட்டம் வெளியேறாமல் அரங்கின் உள்ளே மேலும் மேலும் முண்டியடித்துக்கொண்டிருந்தது. எல்லாருடைய உடலையும் செம்மண்ணாலும் போர்த்தியிருந்தனர். அரங்கின் நுழைவாயிலுக்குள் தாய்களும் தாய்மாமன்களும் அணிவகுத்து வந்தனர். அவர்களுடன் இளநாகனும் செம்படவனும் ஆரலும், கோகனும் வந்தனர்.

எல்லாருடைய பார்வையும் இருவாஞ்சி அணைத்த தும்பனைப்போல விழா மேடையில் அமர்ந்திருந்த யாழின் மீதே நிலைத்திருந்தது. தும்பன் படுத்திருப்பதைப்போல ஆதிப் பேரியாழ் எழுந்து நிற்பதாகத் தோன்றியது.

அரைத் தும்பன்தான் யாழ். அரங்கின் எல்லாப் பக்கமும் சீராகக் கேட்கும்படி எல்லாரையும் தக்க இடத்தில் நிறுத்தியிருந்தார்கள்.

பாதுகாக்கப்பட்ட பல்லியத்தின் மேடையில் நின்ற அருகன் கொம்பூதிகளுக்கு உத்தரவிட்டான். கொம்பூதிகள் நீண்ட குழல் போன்ற ஆனைத் தந்தத்தால் திறந்த குழல் பகுதியும், ஊதும் இடத்தில் மூங்கிலால் வளைத்தும் உருவாக்கப்பட்ட எட்டடிக் கொம்பில் வாய் வைத்து அடி வயிற்றிலிருந்து காற்றை இழுத்து ஊத, அது அரங்கைச் சுற்றி ஆனையின் பிளிறலைப்போல எதிரொலித்தது. உடன் முரசும் பறையும் இசைக்கத் துவங்கினார்கள்.

அனைத்து மாந்தர்களும் தாய்களும் மாமன்களும், நடுவாந்திரம் சிவந்து நிற்கும் கொற்றவைத் தாயை நோக்கி வருவதைக் காண எக்கிப் பார்த்தனர். தாய்களுக்குப் பின்னே வந்தவர்கள் அகண்ட தட்டுகளில் காந்தள் மலர்களை எடுத்து வந்தனர். மஞ்சள், செம்மண் பொடியைத் தட்டுகளில் குவியலாக எடுத்து வந்தனர். நடுவாந்திரம் வீற்றிருந்த கொற்றவை முன்பு வந்து நின்று வணங்கினர். கொண்டு வந்திருந்த பூக்களையும் மஞ்சளையும் செம்மண்ணையும் கொற்றவையின் மீது அள்ளி வீசினர். கொற்றவையின் உடலெங்கும் பூக்களும் சிவப்பும் மஞ்சளும் காற்றில் அலைந்துகொண்டிருந்தன. கொற்றவையின் உடலில் கிளைத்திருந்த பல நூறு கைகளிலும் அவை படர்ந்தன. தாய்கள் நின்ற இடமே செம்மஞ்சளாக மாறிக்கொண்டிருந்தது. எல்லா முகங்களும் எருமைத் தலைகளால் நிறைந்திருந்தன.

கதிரவளின் ஒளி, மங்குவதற்குமுன் கொற்றவையின் மீது படர்ந்து தனக்கு நற்பெயரைத் தேடிக்கொண்டு மறைந்தது. இறந்தவர்கள் போக வந்திருந்த தாய்களுக்கும் மாமன்களுக்கும், இறந்தவர்களின் அடுத்த தற்காலிகத் தலைமையாக வந்திருந்தவர்களுக்கும் இருவாஞ்சியும் கிள்ளியும் தென்னனும் செம்பனும் கொம்புத் தலைகளை அணிவித்தனர். அணிந்த பின்பு சுற்றியிருந்த எல்லா மாந்தர்களின் மீதும் காந்தள் மலர்களும் செம்மண் துகள்களையும் மஞ்சள் துகள்களையும் அள்ளி வீசினர். எல்லாருக்கும் அவ்வண்ணங்கள் நிறையும்படி அரங்கில் ஆங்காங்கே பூக்களையும் வண்ணங்களையும் வைத்திருந்தோர் தூவினர். அந்த இடம் முழுவதும் சிவப்பும் கருப்பும் மஞ்சளும் கலந்த தூவலாக அப்பேரிடம் நிறைந்து குலுங்கியது. மாந்த முகங்கள் எல்லாம் ஒன்றானதுபோல அடையாளமற்று வண்ணங்களின் கூட்டு இணைவால் நிறைந்திருந்தார்கள். கொற்றவை முன்பு நின்று தாய்களும் மாமன்களும் தங்களது கையில் சிறு கல் கத்தியால் கீறினர். குலவையொலி அரங்கை நிறைத்தது. அருகன் பறையோடு கொம்பும், கொம்போடு முரசையும், முரசோடு துடியையும் சேர்ந்திசைக்க உத்தரவிட்டான். கையில் பீறிடும் குருதியைக் கொற்றவையின் மீது தெளித்தனர். கொம்புத் தலையுடன் கொற்றவையைத் தங்களின் உள்ளுக்குள் இருத்தி ஆடிக்கொண்டே வலம்வரத் தொடங்கினர். இசைக்கருவியை இசைப்பதில் உச்சமென்றால் அது தனது உணர்வை மீறி இசை தரும் உணர்வுதான். அவ்வுணர்வின் வெப்பத்தில் பிளிறும் குருதியே அவ்வரங்கை நிறைக்கும் .

இசைஞர்கள் கொடுக்கும் குருதிக்கீடாகத் தாய்களும் தாய் மாமன்களும் குருதியை, தோல்கீறி கொற்றவையின் முகத்தில் வீசி எறிந்தனர். எங்கும் ஏற்கெனவே செம்மஞ்சளில் கிடந்த அந்த அரங்கம் குருதியால் இருளும் பகலைவிடக் கருக்கத் தொடங்கியது.

தலைமைகள் கொற்றவையைச் சுற்றத் தொடங்க, அரங்கத்தில் அதிர்ந்த பேரிசைக்குத் தங்களது தலையில் கொம்புகளை மாட்டியபடி அனைத்து மாந்தர்களும் இடவலமாக உடலையும் கால்களையும் அசைத்து ஆடத் தொடங்கினர். அந்த ஆட்டம் நேரம் ஆக ஆக வெறிகொண்டு அலைவதைப்போலப் பேராட்டமாக இருந்தது. கத்தியும் கூச்சலிட்டும் அரங்கில் வெறியேற்றும் இசையால் நரம்புகள் புடைக்க, கால்கள் அந்தரத்தில் தாவிக்குதிக்க, அனைத்து பாகங்களும் அசைந்தாட ஆடினர். அவர்களின் கருத்த உடம்பில் துளிர்க்கும் வியர்வையெல்லாம் சிவந்து தெளித்தது. தங்கள் வாழ்நாளின் இறுதிப்பகுதியில் இருப்பதுபோலவும் உயிர் பிரிந்துவிடக் கூடிய நேரமிது என்கிற வெறியோடு ஆடினர்.

அருகனும் மெந்தாரகையும் அவர்களது குழுவினரும் விடாது இசைத்தனர். இரு நாழிகை நீடித்த அவ்வாட்டத்திற்குள் இருள் கவிந்துகொண்டது. அவர்கள் அணிந்திருந்த விதவிதமான ஆபரணங்கள் உடலிலிருந்து வெடித்து வெளியேறின. எல்லாரின் உடம்பிலும் கொற்றவை ஏறி நின்றாள். மாந்தரிகள் கட்டியிருந்த தலைமயிருகள் தங்களது இறுக்கத்திலிருந்து விடுபட்டுக் கொம்புத் தலைகளுக்கு இடையே ஆடின. மாந்தனுக்கும் அவ்வாறே. அதோடு மாந்தரிகளின் நெஞ்சுக்கச்சைகளும் வெடித்து விடுபட்டன! மாந்தன்களின் இடுப்பு உடைகளும்கூட சிலருக்கு வெடித்துக் கிழிந்து கீழே விழுந்தன!

சுற்றிலும் இருந்த தீப்பந்த விளக்கொளியும் வானில் பிரமாண்டமாகத் தோன்றிய அரங்கின் மேல் திறந்திருந்த வெட்ட வெளியில் வீசிய முழு நிலவொளியும் அப்பேரரங்கில் கொம்புகளில் பட்டு எதிரொலித்துக்கொண்டிருந்தது. இருவாஞ்சி கையுயர்த்திக் காட்டியதும் அவ்விசை மெல்ல அடங்கியது. மாந்தர்களின் ஆட்டம் மெல்லக் குலைந்து தடுமாறி நூறாயிரத்திற்கு மேற்பட்ட கொம்புத் தலைகள் ஆடி அடங்கின.

இருவாஞ்சியும் கிள்ளியும் தாய்களை மாட அவைக்கு அழைத்துப் போயினர். அரங்கின் உயரத்தில் இருந்த அவைக்குத் தாய்கள் போவதைக் கண்டதுமே, சின்ன நடுக்கம் அருகனின் உடலில் பரவியது. மெந்தாராகை அவனது நடுங்கும் விரல்களுக்குள் விரலொட்டினாள். அவளைவிட உயரம் குறைந்திருந்த அருகனின் காதில் சற்றுக்குனிந்து சொன்னாள்.

“அருகா... அமைதி கொள்! இதுதான் நமது கடைசி நிகழ்வாகவும் இருக்கலாம். பல்லியம் நமது கனவு. இந்த அரங்கு நமக்கானது. நாம்தான் தலைமை. கொற்றவைக்கு வணக்கம் செலுத்தி நாம் எப்படி ஒத்திசைந்து இயற்றினோமோ. அப்படித்தான் பாடப் போகிறோம். விரலியர்களும் சதிராடிகளும் ஏற்கெனவே துல்லியமாகத் தயாராகி இருக்கிறார்கள். அவர்கள் ஆடிக்கொண்டே இருப்பார்கள். நான் சமரில் இருந்தபோதே இங்கு வந்துவிட்டவள். நீ எல்லாம் பார்த்திருப்பாய். நமது கலை மாந்த இனத்தின் அடுத்தப் பாய்ச்சலுக்கான திறவுகோல். தவிரவே நம்மை நிரூபிக்க மட்டுமே அல்ல. இந்த இடத்தில் பாடலின் இடர், பாடுபவரின் இடரைத் தாண்டி மொத்த மாந்தக் கூட்டமும் எதிர் பார்த்திருப்பது நாம் உருவாக்கி அங்கே மேடையில் வீற்றிருக்கும் கொற்றவையின் கொடையான அந்த ஆதிப் பேரியாழ் கருவியின் நரம்புகளில் இருந்து பீறிடப் போகும் இசையைக் கேட்பதற்கே. அதனால் நமது எண்ணங்களில் இடறியவை இந்நேரத்தில் மறப்போம். எல்லாம் சரியாக இருக்கிறது.

தாய்கள் சரியெனச் சொல்லட்டும். பெருஞ்சுவரில் வீழ்ந்த மூர்க்கர்களைப்போல இங்கே நம் மக்களை இசையால் வீழ்த்துவோம்.”

அறுபத்தியெட்டு நாடுகளின் தலைவியாக உயிரோடிருந்த தாய்களாலும், தாய்மாமன்களாலும் ஒரு மனதாகத் தேர்வுசெய்யப்பட்டிருந்தாள் இருவாஞ்சி. அதைக்கூட அவர்களால் கொண்டாட முடியவில்லை.

வெறியாட்டு முடிந்ததும் தாய் மச்சக்கன்னி மீதமிருக்கும் தாய்களும் தாய் மாமன்களும் எடுத்திருந்த புதிய முடிவொன்றை அனைவருக்கும் அறிவித்திருந்தாள்.

“இங்க கூடியிருக்கிற எல்லாரும் நல்லா கேட்டுக்கங்க... நாம இப்ப இந்தச் சண்டையில வென்றாலும், இதுக்கப்புறம்தான் இயற்கையோட ஒரு சமர எதிர்கொள்ளப் போறோம். தாய்களுக்கும் தாய்மாமன்களுக்கும் தெரிஞ்ச அதுபத்தின தகவலைக் கொற்றவை அரங்கில் முதன்முதலா மாந்தர்களுக்காக எடுத்து வைக்கப்போறோம். எல்லாரும் மனசைத் திடப்படுத்திக்கணும். அதுக்கு முன்னாடி இந்த நிலப் பந்தில் திமிறிக் கிடந்த அடங்காச் சாமி சிம்மயாளிய அடக்கினதுமில்லாம இந்தச் சமர வெல்லவும் இருவாஞ்சி பெரிசா நின்னிருக்கா. அவளோட இந்தத் தீரத்தால நாம உயிரோட இருந்தா சிம்மயாளிகளுக்கும் நாம கொட்டடிய உருவாக்குவோம்னு தோணுது. அதனால ஏழ்பனையோட தாயா, அஞ்சாவண்ணியின் இடத்த நிரப்புற அறிவும் விவேகமும் ஆற்றலும் இருவாஞ்சிக்கு இருக்கு. அஞ்சாவண்ணிக்கு அப்புறம் ஏழ்பனையோட இடத்துக்கு அவதான் வரப்போறான்றதில எந்த மாத்தமும் இல்ல. அதனால நான் அதைப் பத்தி நினைக்கல. அறுபத்தியெட்டு நாடுகளின் தாயா அவள இப்பத் தூக்கி நிறுத்தணும். இளங்குருதி, இளங்குமரி, இந்தக் குமரி நிலத்தோட ஒட்டுமொத்த தாயா நிமிந்து நிக்கிறா. நாம ஏந்தி நிக்கிற நம்மோட கொத்தவையோட தாய்மைப் பண்ப இவகிட்ட உணர்றேன்..! என்ன சொல்றீங்க?”

ஒட்டுமொத்த மாந்தக் கூட்டமும் ஒரே நேரத்தில் குலவையொலி எழுப்பியது. பூமிப்பந்தின் மாந்தர்கள் ஒரே இடத்தில் குழுமி குலவையிட்டதுபோலிருந்தது. ஒலி அடங்கட்டும் எனக் காத்திருந்தனர். அனைவரையும் இருவாஞ்சி வணங்கினாள். மச்சக்கன்னியும் அதே உரத்தக் குரலில், தொண்டை நரம்புகள் புடைக்கக் கத்தினாள்.

“நம்ம தொப்புள்கொடி உறவுகளத் தேடிக் கண்டடைஞ்சு இங்க கூட்டி வந்திருக்கா ஆரல் நங்கை. அவளுக்கு வாழ்த்துகளை எல்லாரும்

சொல்வோம்.”

ஆரல் நங்கை எல்லாருக்கும் வணக்கம் சொல்ல, எல்லாரும் தங்களது மகிழ்ச்சியைக் கரஒலியெழுப்பிக் கொண்டாடினர்.

“இதோ நாக நாட்டின் தலைவன் இளநாகனும் ஆரப்பர் நாட்டுத் தலைவன் செம்படவனும் உங்கள் முன்னால் இருக்கிறார்கள். நடந்து முடிந்த பெரும் சமரில் அறுபத்தியெட்டு நாட்டுப் படைகளும் தோல்வியைத் தழுவ இருந்த நேரத்தில் களத்திற்கு வந்து சண்டையிட்டது மட்டுமில்லாமல் சரியான உத்திகளை நம் மாந்தர்களுக்குக் கொடுத்து நம்மை வெல்ல வைத்தார்கள்.”

மேல் மாடத்தில் இருந்து மச்சக்கன்னி அவர்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்க, அவர்கள் தனியே வந்து நின்று மாந்தர்களைப் பார்த்து வணங்கினார்கள். மாந்தர்களும் அவர்களை நோக்கிக் கையசைத்துத் தங்களது அன்பை வெளிப்படுத்தினார்கள். மச்சக்கன்னி மேலும் தொடர்ந்தாள்.

“இப்ப நாம எல்லாம் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த அருகன் மெந்தாரகைக் குழுவினரோட பல்லியப் பேரிகை நடக்கப்போகுது. அதுக்கு முன்னாடி நான் சொல்ல வந்ததை சொல்லிடுறேன். எங்களுக்கு முன்னாடியே எல்லாம் தெரிஞ்சிருந்தும் மாந்தர்களைக் கவலையில ஆழ்த்தக் கூடாது, நம்ம தாயோட விழாவும் எந்தத் தடங்கலும் இல்லாம நடக்கணும்னு எல்லாரும் உறுதியா இருந்தோம். அதனால்தான் உங்களுக்குச் சொல்ல முடியாமப் போச்சு!”

மச்சக்கன்னி ஏன் இவ்வளவு பீடிகை போடுகிறாள் என்று மாந்தர்களுக்குள் குழப்பம் ஏற்பட்டது. அவள் சொல்லி முடிக்கட்டும் என்பதுபோலக் காத்திருந்தனர்.

“நம்ம நாடுகளோட வரலாறு எல்லாருக்கும் தெரியும். எல்லா மிருகத்தில் இருந்தும் நாம் ஏன் வேறுபட்டு நிக்கிறோம்னா, நாம சிந்திக்கிறோம். நமக்குத் தேவையானத உற்பத்தி பண்ணிக்கிறோம். நம்ம கவலைகளை, மகிழ்ச்சியை நாமே பேசிச் சரி பண்ணிக்க முடியுது. நம்ம எண்ணத்தை வெளிப்படுத்த நமக்கெனத் தமிழி எழுத்த உருவாக்கிக் கொடுத்திருக்கா. எழுத்து உருவானதால நாம இன்னும் அதிகமா சிந்திக்க முடியுது. அறிவு அகண்டமாகி இருக்கு. மற்ற உயிர்கள் தாக்காம பாதுகாத்துக்க முடியுது. மழை வெயில்னு எல்லாத்திலயும் இருந்து நாம காப்பாத்திக்க முடியுது. நமக்குப் பிணி ஏற்பட்டா அதுக்கு மருத்துவம் பார்த்துக்க முடியுது. அதோட இந்த நிலம் எப்படி உருவாச்சுன்னு கணிக்க

முடியுது. காலத்தை அளக்கும் வல்லமையை நம்ம அறிவர்கள் கத்து வச்சிருக்காங்க. மனதை அடக்கிக் கொற்றவையைப் பார்க்குற கலையைத் தந்திருக்காங்க. எங்கோ தொலைதூரத்துல மிதக்கிற கோள்களை ஆராய்ஞ்சிருக்கோம். எதிர்காலத்துல என்ன நடக்கும்னு நம்மால உறுதியாச் சொல்லக்கூடிய அறிவியல் அறிவைக் கத்து வச்சிருக்கோம். ஆழியை ஊடுருவிப் போய் அடுத்தடுத்த தீவுகளில் என்ன இருக்குன்னு கண்டடைஞ்சிருக்கோம். அதன் மூலமா இந்தப் பரந்த நிலத்தில் எங்கெல்லாம் இந்தக் குமரியிலிருந்து மாந்தர்கள் பிரிஞ்சி போயிருப்பாங்கன்னு இனி நம்மால கண்டுபிடிக்க முடியும். இந்தக் குமரி நிலத்தில்தான் உலகின் ஆதி மாந்தர்கள் முளைச்சிருக்காங்க. இங்கிருந்தே மாந்தர்கள் இயற்கைப் பேரழிவால துண்டுதுண்டா இடம் பெயர்ந்து ஆங்காங்க புதிய சமூகமா எழுந்து மாந்தர்கள் வாழ்ந்துகிட்டு இருக்காங்க. இளநாகனும் செம்படவனும் அதுக்கு உதாரணமா நம்ம முன்னாடி நிக்கிறாங்க. இதெல்லாம் நம்மாள உணர முடியுதுன்னா. நம்ம வானியல் அறிவுத் தலைமகன் கோகன் சொல்றதையும் நாம உணர்ந்துதான் ஆகணும்!”

மச்சக்கன்னி இடைவிடாது பேசினாள். அரங்கத்தில் இருந்தோர் கனத்த மௌனத்தைச் சுமந்தபடி தங்களது கண்களால் அவளையே நோக்கியிருந்தனர்.

“கோகன் போன ஆண்டு ஆண்டுக் கணக்கையே புதிதாக மாற்றி எழுதியவன். அதோட நிக்காம மதிவந்தித் தாயோட உயிர்க் கொடை மலைக்குப் போயி அவளோட அர்பணிப்ப நேரில் பாத்தவன். மதிவந்தித் தாய நம்மோட வரலாற்றில் இருந்தே ஒதுக்கி வச்சிருந்தோம். அவளைத் தீமையின் உருவா பதிஞ்சி வச்சிருந்தோம். இனிமே இந்த நாளில் இருந்து நாம அதை மாத்தி எழுதணும். அவளும் கொற்றவைத் தாயா மாறிட்டா. அவளோட இன்னொரு கண்டுபிடிப்பின் மூலமா இப்ப நாம சில முடிவுகளுக்குத் தயாராகணும். அதாவது மூர்க்கர்களுக்கு எதிரான போரில் நாமே முன்வந்து நம்ம உயிர ஏந்தி நின்ன மாதிரி, இந்த மாந்த இனம் தழைக்க நாம எல்லாருமே உயிர ஏந்தி நிக்கணும்... தயாரா?”

மொத்த அரங்கத்திலும் ஒற்றைக் குரலாக “தயார்” என்று ஒலித்தது.

“இன்றிலிருந்து சரியாக ஒரு திங்களுக்குள், அதாவது சிலை திங்கள் பதினைந்திற்குள் இந்த நிலம் துண்டாடப்படலாம். விசும்பிலிருந்து விழும் கோள்களால் இந்த நிலம் மூழ்கலாம். நாம்

எல்லாருமே மாண்டு போகலாம். இதற்கு முன்பு ஏற்பட்ட பல சிதைவுகளைக் கணக்கில் கொண்டுதான் இதுவும் நடக்கலாம் என்று கணித்து இருக்கிறோம். அதனால்...”

மொத்தக் கூட்டத்திற்கும் என்ன பேசுவதெனத் தெரியவில்லை. இதைப் பற்றிய தெளிவான உள்வாங்கலைக்கூட அவர்களால் செய்ய முடியாமல் இருந்தது. மாந்தக் கூட்டம் விக்கித்து, செய்வது அறியாது தங்களது மூளைக்குள் மச்சக்கன்னி சொல்லிய செய்தியின் ஆழத்தைத் தேடிக்கொண்டிருந்தது. புவிப்பந்தில் எல்லாரும் ஒன்றையே நினைத்து, ஒரே நேரத்தில் குழம்பி, ஒரே காலத்தில் அதனை உள்வாங்க முடியாமல் தவித்து நின்றது இதற்கு முன்பும் பின்பும்கூட நடக்கப் போவதில்லை. வழியறியாது, சிம்மத்தின் முன்பு மாட்டி மண்டியிட்டு நின்றதுபோல மாந்தக்கூட்டம் விழி பிதுங்கி நின்றது. எல்லாருடைய உடம்பில் இதற்குமுன் வழிந்த வியர்வைகளைக் குளிப்பாட்டும் நீர்கள் உடம்பின் மயிர்களில் இருந்து பீறிட்டுக் கிளம்பின. உடலில் இருந்த கடைசி நீரும் வெளியேறும் வேகத்தோடு அவர்களது உடல்கள் நடுங்கின. வெளியேறும் நீர் அவர்களின் மூளைகளின் கடைசிச் சிந்தனை என்பதுபோல அவ்வரங்கம் எங்கும் பிசுபிசுத்து ஓடியது. யாரிடமும் எதிர்க்கேள்வி என்பதே இல்லாமல் தங்களுக்குள் உருகினார்கள்.

“இந்த நிலையை மாடத்திலிருக்கும் தாய்களும் தாய்மாமன்களும் ஏற்கெனவே அடைந்துவிட்டார்கள். அதை நாங்கள் உணரும் முன்பே மூர்க்கர்கள் தாக்கி எங்களைச் சமநிலைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். உங்கள் சார்பில் நாங்களே சில முன்னேற்பாடுகளைச் செய்திருக்கிறோம். நீங்கள் செய்ய வேண்டியது, உங்களைச் சுற்றி இருக்கும் கிராம, நகர மாந்தர்களுக்குச் செய்தியைச் சேர்ப்பதுதான். அதோடு அறுபத்தியெட்டு நாடுகளிலும் மறைந்த தாய்களுக்கும், தாய்மாமன்களுக்கும் ஈடாகப் புதிய தலைமைகள் பொறுப்பேற்பார்கள். அத்தலைமைகள் தங்களது கிராம, நகரத் தாய்களுக்கும் தாய்மாமன்களுக்கும் முறையே எப்படி இதை எதிர்கொள்வது என்பதையும் அறிவிப்பார்கள். அந்த அறிவிப்பின்படி ஒவ்வொரு மாந்தரும் திட்டமிட வேண்டும். ஓயாது அவர்களின் சொல்வழியே உழைக்க வேண்டும். மொத்த மாந்தக்கூட்டமும் உயிர் மாய்க்கத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படி நடந்தால் ஒரு சிலராவது பிழைத்துக் கிடக்கும் வாய்ப்புண்டு. அதன் மூலம் மாந்தக்குமுகம் மீண்டும் புதியதொரு பேரலையாய் மீண்டும் இந்த நிலத்தில் தழைக்கும். அதனால எல்லாரும் அவங்க சொல்படி கேளுங்க... அவங்க சொல்ற மாதிரி தயவுசெய்து செய்ங்க!”

மச்சக்கன்னி, சொல்லி முடிக்கும்போது அழுதேவிட்டாள். அவளால் கட்டுப்படுத்த முடியாத பேரழுகை கிளம்பியது. அவளின் அழுகை அரங்கையும் நிறைத்தது. ஒரேநேரத்தில் மாந்தக் கூட்டம் ஒன்றாகக் கூடி அழுதது. பனியின் வெப்பத்தைத் திணறடிக்கும் அந்த அழுகை அரங்கைத் தாண்டிக் காடுகளுக்குள் பதுங்கியிருந்த விலங்குகளையும் தீண்டியது. விலங்குகளும் என்னவென்றே புரியாத கவலையில் அந்த இரவில் தங்களது மொழியில் கதறத் துவங்கின. அதையொட்டி சுற்றிலும் கிராம, நகரங்களுக்கு அந்த ஓலம் செவியுள் தைத்து இன்னதெனப் புரியாமாலே அது ஒரு பகிர்வைப்போல எல்லா நாடுகளுக்கும் படர்ந்தது. மாந்தர்களும் மிருகங்களும் பறவைகளும் கதறிக் கத்த, அது எட்டுத் திக்கும் எதிரொலித்தது. ஓர் ஒற்றைக் குரலாக குமரிக்கோடே நடுங்கியது. ஒட்டு மொத்தக் கூக்குரலின் விளைவாக அந்த அரங்கமே நடுங்கியது. ஒலியின் அபரிமிதமான அளவின்மையால் ஏழ்பனை வந்திருந்த மாந்தர்கள் நரம்புகள் வெடிக்கத் திமிறி நிற்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தார்கள்.

அருகனால்கூட அந்த ஒலியைத் தாங்க முடியவில்லை. ஒரே நேரத்தில் ஒரு கூடத்திற்குள் கோடிக்கணக்கான யாழ்களை இசைத்தால் மாந்தச் செவிகள் மூளையின் நரம்புகளைப் பிய்த்து, குருதி நாளங்கள் வெடித்து வெளியேற்றுமோ? என்று உணர்ந்தான். அவையின் மேல் மாடத்திலிருந்த தாய்களைப் பார்த்தான் அருகன். தாய்களின் தலைவியாகப் பொறுப்பேற்றிருந்த இருவாஞ்சியை பார்த்தான். இருவாஞ்சியின் அருகே வீற்றிருந்த செம்பனைப் பார்த்தான். அவர்கள் எல்லாரும் தாங்க முடியாத அவ்வொலியின் கூர்மையைத் திடத்தால் பொறுத்துக் கொள்ள முயன்றனர். எல்லாரின் விழிகளிலும் அவனது கண்ணொளி ஊடுருவிப் பாய்ந்தது. இருவாஞ்சி அருகனைக் கூர்ந்து பார்த்துக் கண்ணசைத்தாள். அவ்வளவுதான்.

ஆஆஆஆ அ ஆஅ ஆஆஆஆஆஆஆஆஆஆ...

அ அ அ அ அ...

ஆஅ.. ஆஅ.. ஆஅ... ஆஆஆஆஆ...

அங்கங்கள் ஏதுமற்ற ஆதியகமேஏஏஏஏஏஏஏஏஏ...

அருங்கருணைத் தீயே...

அருகன் உச்சக் குரலில் வந்துகொண்டிருந்த ஒலிகளை உடைத்து புதிய ஒலியாகப் பாடத் துவங்கினான். அண்டமெங்கும் கதறிய குரல்கள் காற்றலையாகக் குமரிக்கோட்டைச் சமன்படுத்தியது.

அரங்கிலிருந்து கிளம்பிய அனைவரின் ஒலிகள் அடங்க, மிருகங்களின், பறவைகளின் ஒலியடங்க, கிராம நகர மாந்தர்களின் ஒலியடங்க மெல்லமெல்லத் தமிழிநாடே அமைதிகொள்ளத் தொடங்கியது. அருகன் பாட, மெந்தாரகை, யார் யார் எங்கே எப்போது இசைக்க வேண்டுமென அரங்கின் நடுவாந்திரத்தில் நின்று குறிப்புகளைக் கொடுத்துக்கொண்டிருந்தாள். சதிராடிகள் மெய்ம்மறந்து தங்களையே ஒடுக்கிக்கொண்டிருந்த நிலையில் அருகனின் குரலுக்குத் தங்களது செவியை மாற்றித் தன் நிலைக்கு வந்து ஆடுவதற்கான திண்மையை உடலுக்குள் ஏற்றினார்கள். இசைஞர்களும் மெல்ல மீண்டு மெந்தாரகையை நோக்கினர். நூறு முறைக்குமேல் சரிபார்க்கப்பட்ட பண், அதற்கு ஏற்ற தாளம், அதற்கேற்ற தோல் கருவிகளின் அடிகை, தேவையான இடங்களில் பீறிடும் காற்றுக்கருவிகளின் ஓசை, அதை மேலும் மெருகூட்ட நயப்படுத்த நரம்புக்கருவிகளின் மீட்டல் என அரங்கு பேசப் பட்ட ஒன்றிலிருந்து வேறொன்றுக்கு மனதைத் தாவ வைத்தது, அருகனின் பேரிசையும் அவர்களது குழுவின் ஆட்டமும். அருகன் பாட, ஒத்திசைந்து குழுவாக இருந்த மாந்தரிகள் அதையொட்டிப் பாடினார்கள்.

நன்னீரின் மூலவளே

நற்றமிழின் வீரவளே

பாரெங்கும் பரவி...

வழியமர்த்தி

வாழிடம் பெருக்கி

திசையெட்டும் நீக்கமற

திளைக்கும் எங்கள் தாயே..!

நீண்ட கொம்புகள் ஊத, உடன் அனைத்துக் காற்றுக்கருவிகளும் சேர்ந்துகொண்டு ஊத, அதே வேகத்தோடு தோல்கருவிகளும் கொற்றவை வணக்கத்துக்காக ஒரே நேரத்தில் முழங்கின.

உன் விரல் பிடித்து

உன் சிந்தையின் தடம் பார்த்து

விந்தைகள் செய்திருக்கிற

மாந்தருக்கெல்லாம்

மூலவளே...

நீ

ஒன்றா இரண்டா...

கோடித் தாயின் நிழலா

என்றறியா மடமையில்

எங்களோடு

படர்ந்திருக்கிற

உயிர்மூச்சே...

கொற்றவையே...

எங்கள் அறிவே

உன்னை வணங்குகிறோம்!

அருகன் கொற்றவைக்காகக் குரலை உயர்த்திப் பாட, அவனோடு சேர்ந்து அறுபதுக்கும் மேற்பட்ட மாந்தரிகளும் மாந்தர்களும் சேர்ந்து ஒரே குரலாகப் பாட அந்த அரங்கமும் மாந்தர்களும் முன்பிருந்த மூளைப் பிறழ்வுகளில் விடுபட்டுப் பல்லியம் இசைப்போரை நோக்கித் தங்களது மனதை முழுதாகக் கொடுக்கத் தொடங்கினர்.

விசும்பே விடை கொடு...

தேந் தமிழே விடை கொடு...

வளியே விடை கொடு...

கொற்றவைத் தாயே பதில் கொடு...

வலிமை கொடுத்தவளே...

பண்களைப் பாடத் தந்தவளே...

வளியடக்கி

ஒளியடக்கி நின்றவளே...

தாயே...

இம்மாந்த முடிகளை

நீயே காத்து நில்லடி!

பண்ணின் நடுவே இசை பெருகியோடிக்கொண்டிருந்தது. அருகன் காத்து நில்லடி என்றபோது அனைத்துக் கருவிகளும் திடீரென

அமைதியாகின. பனியின் போர்த்தலில் அமர்ந்திருந்த பேரியாழில் ஒரேநேரத்தில் நரம்புகள் கோர்வையாக மீட்டப்பட்டன. ஆயிரம் நரம்புகள் கொண்ட யாழில் அடுக்கடுக்காக அமர்ந்திருந்த மாந்தர்கள் மகரக்கொம்புகளால் ஒரேநேரத்தில் ஒரே விதமான ஒலியை மீட்ட, அந்த ஒலியின் வெம்மை தாங்காமல் அரங்கில் இருந்த பலர் கிறங்கினர்.

ஏழேழு நாடுகளும்
எங்கள்
ஏழ் சுரத்தில் வீழுமடி...
பேரியாழ் கொண்டு
மீட்டுறோமே
காணாத கண்களுக்குச்
கண்ணாகி வந்து நில்லு...
எங்கள்
கண்ணாகி வந்து நில்லு

விலங்காய் இருந்தோம்
விடுதலை தந்தாய்
பிணியால் நைந்தோம்
துணையாய் நின்றாய்
மாந்தருக்கு எதிர் நின்ற
மாக்களெல்லாம்
மண்டியிட நீ வைத்தாய்
அறிவும் தெளிவும்
நீக்கமற நீ தந்தாய்..

தீயஞ்சு நின்னோமே
இடியஞ்சு ஒளிஞ்சோமே
திசைவழியும் தெரியாம
தெகைச்சுத்தான் போனோமே

திமிறி வந்து நின்னாயே

எங்கள் தீதெல்லாம் அழித்தாயே

தாளமும் பண்களும் மாறிமாறிப் போட்டி போட்டன. இந்த நிலத்தில் தங்களின் வாழ்க்கைக் கதையைச் சொல்லாக்கி அதைப் பண்ணில் வடித்து, நயம் மாறாமல் பாடும் அருகனின் கணீர்க்குரலில் கொற்றவையே இறங்கி வந்தாள். மாந்தர்களின் உள்ளங்களில் வெடித்துக்கொண்டிருந்த அனைத்துக் கேள்விக்கும் விடையாக அவளே இருக்க முடியும் என்று அந்தக் கூட்டம் நம்பியது. பல்லிய அரங்கில் இருந்த நூற்றி நாற்பது இசைக் கருவிகளையும் பண்ணுக்கு ஏற்றவாறு தேவையான இடங்களில் இசைக்க, இசைக்குத் தக்க ஆற்றாமையையும் அன்பையும் கோவத்தையும் ஆசையையும் சதிராடிகள் உடல் வளைத்து நளினமாக ஆடிக்கொண்டிருந்தார்கள். அந்த அரங்கிலிருந்தவர்கள் எல்லாரின் மூளையிலும் அமைதி தவழத் தொடங்கியது.

34 சிலைத் திங்கள் பத்தாம் நாள்

நாகத் தீவில் இளநாகனின் குகைவீட்டில் படுத்திருந்தாள் ஆரல். பாறையின் மேற்பகுதியின் ஓரத்திலிருந்து சிறிய சுனையொன்று ஊறி வழிந்து, ஏற்கெனவே வெட்டி வகுடெடுக்கப்பட்டிருந்த தடத்தின் வழியே பூரானைப்போல நெளிந்து வந்து, படுக்கைக்குச் சற்றுத் தள்ளியிருந்த பெருங்குழியில் நிறைந்தபடி இருந்தது. அக்குழி நிறைந்து நீர் மிதந்தபடி வாயிலோரம் செதுக்கப்பட்டிருந்த தடத்தின் வழியே வெளியேறிக்கொண்டிருந்தது. குகைக்குள் வீசும் மெல்லிய காற்றில் அகண்ட விளக்கிலிருந்து ததும்பும் ஒளி, குகையின் அடர்ந்த இருளை அழித்து அழித்து விளையாடிக் கொண்டிருந்தது. படுக்கையில் படுத்திருந்தபடியே ஆரலின் கண்கள் அதைப் பார்த்துக்கொண்டிருந்தன. கிட்டத்தட்ட ஒரு திங்களாகவே சரியான உறக்கமில்லை. அதனால் அவள் கண்களின் வெள்ளைக் கோலங்களில் நரம்புகள் புடைக்கத் துவங்கி இருந்தன. அருகே படுத்துறங்கும் இளநாகனைப் பார்த்தாள். அவன் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

வெறியாட்டு விழா முடிந்த மறுநாளே இளநாகனும் செம்படவனும் தங்களது நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டனர். இருவாஞ்சியிடமும் தனது குடும்பத்தினரிடமும் சொல்லிவிட்டு அவளும் கிளம்பினாள். இருக்கும் குறைந்த நேரங்களில் இளநாகனோடு இருக்கத் தூண்டிய அவளது விருப்பத்தைக் குமரிக் கோடே வரவேற்றது. இந்த நிலத்தில் பிழைத்திருந்தால் மீண்டும் பார்ப்போம் என இருவாஞ்சி அவளைத் தழுவி நிமிர்த்திப் புன்னகையைத் தவழவிட்டாள். எவ்வளவோ முயன்றும் ஆரலால்

அழுகையை நிறுத்த முடியவில்லை. தன்னையே நொந்துகொண்டாள். ஒருவேளை இளநாகனைப் பார்க்காமல் இருந்திருக்காலம். அல்லது காதல் வந்துவிடாமல் இருந்திருக்கலாம். இயற்கையும் காலமும் இதுபோன்ற நேரங்களில் நடந்துகொள்ளும் குரூரத்தை அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. கொற்றவை தனக்குக் கொடுத்த இந்தத் தண்டனையை நினைத்து மருகினாள். அவள் மனமறிந்த இருவாஞ்சிதான் தனது கபடமற்றப் புன்னகையால் 'இது உனக்கு கொடுக்கப்பட்ட கடமை' என்று புரியவைத்தாள்.

ஆரல் மூடுதிமில் உருவாக்கத்தின் தற்போதைய நிலை வரை அனைத்தையும் ஏற்கெனவே அரங்கில் தெரிவித்திருந்தாள். நினைத்ததைவிடக் குமரிக் கடற்படுகை முழுவதும் மூடுதிமில்கள் எண்ணிலடங்காமல் உருவாகிக்கொண்டிருந்தன. கருவூலச் சேகரிப்புகள், மருத்துவக் குறிப்புகள், மொழிக் குறிப்புகள், இசைக் குறிப்புகள், மாந்தர்களின் வரலாறு, கணியங்கள் என அனைத்தும் பல படிகளாகத் தயாரிக்கப்பட்டு வெவ்வேறு மூடுதிமில்களில் நிரப்பப்பட்டுவிட்டன. இனி மாந்தர்களைக் கொண்டுசெல்வதும் அவர்களுக்குத் தேவையான உணவுகளைத் தயார் செய்வதும், நிலத்தில் மாந்தர்கள் இயற்கையை எப்படி எதிர்கொள்வது என்பதுதான் அவர்களுக்குச் சவாலாக இருந்தது. மூடுதிமில் கலத்திற்குள் ஏற்றப்பட வேண்டியவர்கள் யார் என்பதையும் அவர்கள் எப்படித் திமிலில் தங்களை பொருத்திக்கொள்ள வேண்டும், எப்படி மூடுதிமிலுக்குள் இருந்து வெளியே வரவேண்டும். எப்போது காற்றைச் சுவாசிக்கும் தருணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்கான பயிற்சிகளையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

ஆரல், இளநாகனோடு பயணப்பட்டதற்கு இந்தப் பணிகளும் கூடுதல் காரணம். தன் அருகே படுத்திருக்கும் இளநாகனின் முகம் கடுத்துக் கிடந்தது. கனவிலும் தனது மாந்தர்களைப் பற்றிச் சிந்திக்கிறான் எனப் புரிந்துகொண்டாள். கிட்டதட்ட கோகன் கொடுத்த இறுதிக் கெடுவிற்கு இன்னும் ஒரு வாரம்தான் இருக்கிறது. இந்த வாரத்திற்குள் ஏதும் நடக்கவில்லையென்றால் கணிப்பில் பிழை எனக் கடந்துவிடும். கருப்பர் நாட்டிலும் நாகர் நாட்டிலும் எல்லா மாந்தர்களுக்கும் பயிற்சி கொடுத்தாகிவிட்டது. நிலத்தில் இருக்க வேண்டியோர் ஏற்கெனவே தங்களுக்குத் தேவையான உடமைகளுடன் சமதளம் நோக்கிச்சென்றுவிட்டார்கள். தேர்வு செய்த சில ஆயிரம் மரங்களை அந்த இடங்களுக்குக் கொண்டுசென்று விட்டார்கள். மரங்களில் ஒருவேளை நிலம் பிளந்தால் தப்பிக்க வெடிப்பில் விழாமல்

இருக்க மரங்களைப் பயன்படுத்துவது என குமரிக்கோட்டிலேயே திட்டம் வகுத்திருந்தார்கள். அதனால் அந்த மரங்களில் பிளக்கும் நிலத்தில் மரங்களில் கட்டியிருக்கும் கயிறுகள் மூலம் தப்பிப் பிழைக்க வழி கிடைக்கலாம் என்பதால் ஒவ்வொரு மரத்திலும் நீண்ட கயிறுகளைக் கட்டினர். எல்லாம் முடிந்தது. பத்து நாள்களாக ஆழிக்கரைகளிலும், சமமான நிலத்திலும் மாந்தர்கள் தங்கிவிட்டார்கள். எதற்கும் தயாராக இருந்தார்கள்.

இளநாகன் கருப்பர் நாட்டிற்கும் நாக நாட்டிற்கும் இடையறாமல் ஆரலோடு பறந்தான். ஆரலும் இளநாகனும் செம்படவனும் வந்த உடனே திருக்கையன் கிளம்பினான். இந்த இறுதி நாள்களில் நேசித்த தங்கை ஓர் இடத்திலும், தான் ஓரிடத்திலும் இருப்பதை அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. திருக்கையனால் தனது குழந்தைகளைக்கூட மறந்திருக்க முடியும். எப்பொழுதும் ஆரலைக் கண்ணுக்குள் வைத்து இமைபோல ஊடாடியவன். வேறு வழியில்லை.

தன்னைவிட உயரமான தன் தங்கையை நிமிர்ந்து பார்த்தான்.

“உன்னோட மணக்கோலத்தைப் பார்க்கணும்னு இவ்ளோ நாளா கனாக் கண்டுட்டு இருந்தேன். ஆனா, அது கடைசிவரை கண்ணால பார்க்க முடியாம போச்சே. இந்த நாகன் உன்னத் தீண்டி என்ன பிரிச்சுட்டான்!”

அவனது குரல் உடைந்து தேம்பி அழ ஆரம்பித்ததைக் கண்டு உடைந்துபோனாள். திருக்கையன் செல்லும் வரை மனதுக்குள் அண்டிக் கிடக்கும் துக்கத்தை மறைத்துக்கொள்ள வேண்டும் எனத் திருக்கையனின் கண்களைப் பார்த்துப் பேசுவதை இந்த நாள்களில் தவிர்த்து வந்தாள். அவன் பார்க்காத நேரத்தில் மட்டுமே அவனைப் பார்த்து வந்தாள். குழந்தையாகப் பிறந்தபோதே தாயை அறிந்தவள் இல்லை. தகப்பனை ஒரு தகப்பனாக மட்டுமே அறிந்திருக்கிறாள். ஆனால், தாயாகவும் தகப்பனாகவும் நண்பனாகவும் தனக்காகவே வாழும் அவனை நிரந்தரமாகப் பிரிவதை அவளால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. அந்தப் பிரிவு தரப்போகும் வலியை எதைக் கொண்டு ஈடு செய்வது. இந்தக் கணியக் கால விடை தெரியாமல் இருந்து திடீரென மாண்டிருந்தால்கூட நன்றாக இருந்திருக்குமே என நினைத்து மருகினாள். அவனது அழுகையில் அவளும் உடைந்து நொறுங்கினாள். நாகனுக்கும் ஏனோ அவர்கள் அழுவதைக் கண்டு அழுகை வந்தது. நாகனின் அழுகை நாகர்களையும் தொற்றிக் கொண்டது.

பொன்பரப்பியில் இருந்து வந்த கம்மியர்களையும் விட்டு வைக்கவில்லை. அவர்களை வழியனுப்பக் காத்திருந்த செம்படவனையும் விட்டுவைக்கவில்லை. கருப்பர்களையும் அது கவ்விக்கொண்டது. சமர் முடிந்தநேரத்தில் மாந்தக் கூட்டம் அடைந்த துயரின் வலிகளும் கொற்றவை வெறியாட்டில் குழுமியிருந்த மாந்தர் கூட்டத்தின் பேரழுகையையும் சேர்த்து இந்த நாக நாடே அழுதது. யார் யாரைத் தேற்றுவது என்றே புரியவில்லை. அவர்களின் அழுகை காடுகளில் இருந்த மிருகங்களையும் கரைத்தது. நாகங்களுக்கும் இது ஏதோ அதிர்வலைகளைக் கொடுத்திருக்க வேண்டும். ஆங்காங்கே தங்களைத் தாங்களே சுருட்டிக்கொண்டன.

பொறுப்பான வேலைகளில் தலை கொடுத்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் துக்கமில்லை; அழுகையில்லை; கோவமில்லை; ஆத்திரமில்லை; ஆசையில்லை; அன்பில்லை. இது யாரிடமிருந்தாலும் அந்தப் பொறுப்பு எங்கோ தவறாக ஒரு பாதையில் நகர்ந்துவிடும் என திருக்கையன் அடிக்கடிச் சொல்வான். அதனால் தனிமனிதர்களாக இருக்கும் வரைதான் இந்தக் குணங்கள் அந்தந்த மாந்தருக்குச் சொந்தம். இனம் என வந்துவிட்ட பிறகு, அதற்கான முயற்சிகளை இணைத்துக்கொண்ட பிறகு அவர்கள் தனி மாந்தர்கள் அல்லர். மொத்த மாந்த இனத்திற்காகத் தங்களையே இழந்திட வேண்டும். அப்படித்தான் கொற்றவை நிற்கிறாள். தாய் மதிவந்தியோடு உயிர் தற்கொடையான யாவரும் அந்தப் புள்ளியில்தான் கொற்றவையாக வணங்கப்படுகிறார்கள். கொற்றவை என்பது ஒன்றில்லை. தாயிலிருந்து ஆணும் தோன்றியதால் கொற்றவைத் தாயில் ஆணும் பெண்ணும் அடக்கமாகிறோம். ஆகவே, கொற்றவை என்பது ஒன்றல்ல; இரண்டு. இரண்டின் கூடுதான் கொற்றவை.

அண்ணனும் தங்கையும் கொற்றவையாகத் தங்களைக் கருதினார்கள். மொத்த நாக நாடும் அவர்களைப் பின்பற்றி ஒரே நேரத்தில் அழுகையை நிறுத்தியது. அந்த மாந்தர்கள் தனியான ருசிக்கு ஆசைப்பட்டவர்கள் அல்லர். தனியான இச்சையைக் கொண்டாடியவர்கள் அல்லர். பொருந்தாச் சிந்தனைகளை வெறுத்தவர்கள். அதேபோலப் பொருளற்ற எது ஒன்றையும் அவர்கள் வெறுத்தார்கள். அதனால் மனதைத் திடப்படுத்தினார்கள். பிரிந்தார்கள். முதல் முதலாகக் குமரிக்கோட்டிலேயே மாந்தரி ஒருத்தி தனது இணையனோடு அவன் வாழுமிடத்தில் சேர்ந்து வாழத் தலைப்படுவது இதுவே முதல் தடவை.

“ஒனது அண்ணனா... ஒன் குழந்தைக்கு நான்தான் தாய் மாமன். எனக்குக் கடமை இருக்கு. மறந்துடாதே நங்கா. ஒருவேளை பொழைச்சுக் கிடந்தால இல்ல... கொத்தவை இருக்கா. வழி நடத்துவா. ஒன் புள்ளைய நாந்தேன் வளப்பேன். இங்கத்திச் சட்டமெல்லாம் செல்லாது. குமரிச் சட்டம்தான். பாத்துக்க... சொல்லிப்புட்டேன் மச்சான்... அவ கொழந்தைக்கு மட்டுமில்ல... அவளுக்கும் கொமரிச் சட்டம்தேன். இல்லயின்னா மொத்தக் குமரியும் படையோட வருவோம் பாத்துக்க!”

திருக்கையன் கண்களில் இருந்து வழிந்த கடைசித் துளியைத் தனது நாக்கால் எக்கிச் சுவைத்தபடி பேசினான். பகடியாக இருந்தாலும்கூட அதில் தீர்க்கமும் இருந்ததைப் புரிந்துகொண்டான் இளநாகன்.

“மாமா! ஏதேது... விட்டா எங்கள உன் தங்கச்சிக்காக அடிமையா இழுத்துட்டுப் போவ போல! அப்படியெல்லாம் விட்ற மாட்டோம். நாங்களா வந்து நாட்டையே எடுத்துக்கன்னு கொடுத்துட்டுப் போயிட்டே இருப்போம். ஏன் எங்க புள்ள மட்டுக்கும்தான் தாய் மாமனா..? இந்த நாக நாட்டு மாந்தங்களே ஒனக்கு ஒறவுதான். நீயே இந்த மாந்தங்கள வச்சி, நீயே மேச்சிக்க. என்னையும் ஆரலையும் மட்டும் விட்டுடு...போதுமா?”

இளநாகன் பேசியது சரளமாகப் புரிந்தது திருக்கையனுக்கு. சட்டென எல்லாவற்றையும் மறந்து சிரித்தான். அந்தச் சிரிப்பு ஆழிக் கரையில் திருக்கையனும் குழுவும் மறைந்த பின்னும் அலைகளில் மிதந்துகொண்டிருப்பதாக நம்பினாள் ஆரல்.

காத்திருந்தார்கள்... மரணத்தை முத்தமிட! எல்லாருடைய எண்ணமும் ஒரே முகமாக இருந்தது. ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள். ஆணும் பெண்ணுமாக இரு இளவயதினர். ஒரு முதியவர். இதுதான் அளவுகோல். குமரிக்கோட்டில் தீர்மானிக்கப்பட்ட முடிவையே கருப்பர் நாட்டிலும், நாக நாட்டிலும் பின்பற்றினார்கள். மூடுதிமிலில் அவர்கள் மட்டும்தான் செல்ல முடியும். மற்ற யாவரும் சமதளத்தில்தான் நிற்க வேண்டும். அவற்றிலும்கூட எதிர்காலத்திற்காக அங்கு அறிவர் குழுமத்தில் இருந்தவர்கள்தான் பயணப்பட முடியும்.

அந்த முடிவில் யாருக்கும் குழப்பமேதுமில்லை. அப்படியே நடந்தது. ஆழிக்கரை முழுக்கத் தேர்வுசெய்த மாந்தர்கள். அவர்களை ஏற்றிவிட்டு இயற்கை செய்யும் பேரூழிக்கு உயிரை மாய்க்கும் மாந்தர்கள் என அவர்கள் தெளிவாகப் பிரிந்தார்கள். மூடுதிமிலின் சுற்றுவட்டத்தில் தெங்க நார்களால் பலகைகளை அடைத்திருந்தார்கள். அதில்

பிசின்களையும் தடவி, காற்றுக்கூட உள்ளே செல்ல முடியாதவாறு அமைக்கப்பட்டிருந்தது. உள்ளே தங்குபவர்கள் உள்ளே இறங்கியதும் அவர்கள் உள்ளிருந்து அந்தக் கதவை அடைத்துக்கொள்ள வேண்டும். அக்கதவும் அடைத்த உடனே ஒட்டிக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தது. நீண்ட நேரம் மூச்சை தாங்கிக்கொள்ள வேண்டும். முடியாதபோது அடைத்த சிறு ஓட்டையை வான்முகமாக மூடுதிமிலுக்குள் இருக்கும் குழாயைச் சொருகி மூச்சை இழுத்து விட்டுக்கொள்ளலாம்.

நாகநாட்டில் யாருமே இல்லை. இளநாகன் எல்லாரையும் சரியானபடி தலங்களுக்கு அனுப்பியதை மேற்பார்வையிட்டுவிட்டு தனது நகரத்தில் வலம்வந்தான். அவனோடு கூடவே ஆரலும் நகரை வலம்வந்தாள். எங்கும் யாரும் இல்லை. வெறிச்சோடிக் கிடந்தது நாக நாடு. விளக்கின் ஒளிகூட இல்லாததால் நாகங்கள் பாறைகளில் புரண்டு, உருண்டுகொண்டிருந்தன. அப்பொழுதும் நாகங்களைத் தீண்டாமல் ஒன்றிரண்டு தீபந்தங்களை ஏற்றி இருந்த இடங்களைக் கடந்து இளநாகன் தனது இருப்பிடத்திற்கு வந்தான். அவனது நினைவுகளில் இப்படி யாருமற்ற, வெறிச்சோடிய, மாந்தர்களற்ற ஒரு சூழலை அவன் பார்த்ததே இல்லை. எவ்வளவுதான் வெளியில் காட்டிக்கொண்டாலும் அவன் கொண்ட வேதனையை யாரும் அறியப்போவதில்லை. ஆரல் அறிந்திருந்தாள். இளநாகனின் குகைவீட்டு வாசலில் நின்று அவன் பார்த்ததும் அவள் அவனை வழிநடத்தி அழைத்துப் போனாள். இருண்டிருந்த குகைவீட்டில் நெருப்பைப் பற்றவைத்து ஒளியைத் தன்மீது காட்டினாள்.

இருளில் அமர்ந்தவனை ஒளியின் நாக்குகள் தீண்டிவிட்டு மறைந்து சிணுங்கின. அவன் மனதின் துயரைப்போல அவ்வப்போது அவை காற்றில் மினுங்கி ஒளிர்ந்தன. ஆரல், விளக்கின் புற இருட்டிலிருந்து அவனைப் பார்த்தாள். அவன் ஒளியில் தள்ளாடிக் கொண்டிருந்தான். விளக்கைத் தூர வைத்துவிட்டு இருளை உடைத்து ஆடும் ஒளியில் அவனோடு நிறைந்தாள். அவனுக்கும் அது தேவையாக இருந்தது. அதுதான் கடைசித் தேவை போலும். நாகங்களைப்போல உடல்களைப் பிணைத்துக்கொண்டார்கள்.

35 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்

விசும்பில் பகலிலும், இரவிலும் கருமேகங்களைக் குவித்திருந்ததைத் தவிர வேறு எந்த மாற்றமும் புலப்படவில்லை. குமரிக்கோட்டின் நீண்ட ஆழிக்கரையெங்கும் ஆமைகள் ஒரே நேரத்தில் கரையொதுங்கி நிற்பதைப்போல மணல் பரப்பில் மூடுதிமில்கள் நிறைந்து கிடந்தன. மூடுதிமில்கள் புதிதாகச் செய்தவை எல்லாம் அளவாகச் சிப்பிகளை ஒத்திருந்தன. ஏற்கெனவே இருந்த திண் திமில்களையும் கொடுந் திமில்களையும் வல்லத்தையும் கலத்தையும்கூட அவர்கள் மூடுதிமில்களாக்கி இருந்தார்கள். அவை நீண்ட சங்குகளைப்போல அலைகளில் மிதந்துகொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றிலும் இருபதிலிருந்து நூறு பேர் வரை பாதுகாப்பாக உள்ளிருக்கக் கூடியவையாக இருந்தன. பல நூறாயிரம் மாந்தர்கள் கரையோரத்தில் தற்காலிகக் குடில்களை அமைத்துத் தங்கியிருந்தார்கள். ஆழியில் பிடித்த மீன்களும் சிறு விலங்குகளும்தான் அவர்களுக்கு உணவாக இருந்தன. மூடுதிமிலுக்குள் அனுப்பப்பட்டவர்கள் அதற்குள்ளேயேதான் இருக்க வேண்டும். உணவுக்காக மட்டும் வெளியே வரலாம். ஏனெனில் எந்த நேரத்தில் எப்படி நடக்கும் என்றே தெரியாது. சில நாள்களாக எந்த உடல் ஓட்டமும் இல்லாமல் மூடுதிமிலுக்குள் இருந்த குழந்தைகள் சோர்ந்துவிட்டன. பல பேருக்குக் கால்களும் கைகளும் மரத்தே

போய்விட்டன. விளைவிக்க முடிந்த விதைகளை ஒவ்வொரு மூடுதிமிலுக்குள் கட்டிப்போட்டிருந்தார்கள். அதைக்கூட வாயசைப்புக்கு எடுத்து மெல்லக் கூடாது என்றும் சொல்லியிருந்ததால் தாடைகளும் ஓய்ந்து கிடந்தன. எல்லா முகங்களிலும் வெறுமையும் பீதியும் அப்பிக் கிடந்தன. அறுபத்தியெட்டு நாடுகளிலும் ஆங்காங்கே இருக்கும் சமவெளிப் பகுதிகளுக்கு தாய்களின் தலைமையுடன் இடம் பெயர்ந்தது மாந்தக் கூட்டம். பெரும்பாலான கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்ந்த மூத்தவர்கள் நகர மறுத்துவிட்டார்கள். தாங்கள் வாழ்ந்த குடிலிலேயே மகாப் பிரத்தானம் செய்துகொள்வதுபோல இருத்திக்கொண்டார்கள். கல் பதுக்கைகள் இல்லையே ஒழிய, அந்த மனநிலைக்குத் தயாராகிவிட்டார்கள். எல்லா நிலங்களிலும் தாய்களும் தாய்மாமன்களும் மக்களை வழிநடத்துவது என்றும், பலியாகும் வாய்ப்பிருந்தால் முதலில் தாங்களே பலியாவது என்றும் முடிவு செய்திருந்தார்கள். ஆழிக்கரையிலும்கூட வழிநடத்தும் தாய்களும் தாய்மாமன்களும் அந்த முடிவுக்கே வந்திருந்தார்கள். பொன்பரப்பி ஆழிக்கரைக்கான பொறுப்பைத் திருக்கையன் ஏற்றுக் கொண்டான். ஒவ்வொரு ஆழித் துறைமுகங்களிலும் அங்கிருந்த தலைமைகள் மூடுதிமிலில் ஏற்ற வேண்டியவற்றை சரிபார்த்து ஏற்றிவிட்டிருந்தனர். அறிவர்களில் தலைமையேற்றிருந்தவர் அனைவரையும் மூடுதிமிலில் பாதுகாக்க

முடிவானது. கோகனையும், தலைமைக் கல்தச்சர் வெண்மலரையும், மொழி ஆய்வாளன் முருகனையும், மருத்துவத்தில் தென்னனின் தலைமை மாணவன் துருவனையும், அருகனையும் மெந்தாரகையையும் மூடுதிமிலுக்குள் அடைக்கும்படி உத்தரவிட்டிருந்தாள் இருவாஞ்சி.

தாய்களில் தாய்மாமன்களில் சிலரையாவது அடுத்தத் தலைமுறைக்குக் கடத்தவேண்டுமெனத் தாய் தவிட்டி உறுதியாக நின்றதால் இளம் தாயான இருவாஞ்சியையும், தாய்மாமனாக செம்பனையும் தேர்வு செய்தனர். அவர்கள் மறுத்தாலும் அதுதான் சரியான திட்டமெனத் தாய் மச்சக்கன்னி எடுத்துக் கூறியதால் இருவரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால், அவர்கள் கடைசியாகப் பயணிப்பதாக முடிவாகச் சொல்லிவிட்டனர்.

மூர்க்கங்குடியில் இருந்து போரிட வந்து சிறைப்பட்ட எல்லாரையும் அழைத்து இருவாஞ்சி மூர்க்கங்குடிக்கே போகச் சொல்லிவிட்டாள். இத்தனைக்குப் பிறகும் அவர்கள் மன்னித்ததைக் கண்டு கையேந்தி நின்றார்கள் மூர்க்கர்கள். மனம் இளகி இருவாஞ்சி நடக்க இருக்கும் பேரூழியைப் பற்றிச் சொல்லி, முடிந்தால் உங்களை நீங்களே காப்பாற்றிக்கொள்ளுங்கள் என அனுப்பிவைத்தார்கள்

அந்தந்தச் சமவெளிகளில் தங்கியிருப்போர்க்கான உணவுகள் முழுக்க இறைச்சி சார்ந்தே இருந்தது. அருகிலிருக்கும் வனங்களில் உணவைச் சேகரித்துக்கொண்டார்கள். எல்லா இடங்களிலும் நகர்ந்த பிறகு வளர்ப்பு விலங்குகளும் பொதி சுமந்த மிருகங்களும் பயணத்திற்கு உதவிய அனைத்து மிருகங்களுக்கும் நன்றி சொல்லி அருகிலிருந்த காடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். வாழ்ந்த இடத்தைத் துறந்து தங்களது ஆதி வாழ்க்கைக்கே மிருகங்கள் சென்றன. தன்னைச் சுமந்த ஒவ்வொரு மிருகத்தையும் கட்டியணைத்து உணர்வை உமிழ்ந்து மீண்டும் இணைவோம் எனச் சொல்லி அனுப்பினர். பல மிருகங்கள் தங்களை உறவுகளாகப் பாவித்து வளர்த்தவர்களை மறக்கமுடியாமல் தேங்கி நின்றன. அவற்றை அனுப்பி வைப்பதே பெரும்பாடாக இருந்தது.

கோகனின் உடல், வெப்பத்தால் கொதித்தது. உடனிருந்த மலைச்சியால் அவனைக் கவனிக்கக்கூட நெருங்க முடியாத வளையத்தை அவனைச் சுற்றி வளைத்திருந்தான். அவன் விசும்பையே

கவனித்துக்கொண்டிருந்தான். அவனது கண்கள் எப்போதும் ஆழியின் மீது நிலைத்திருந்தன. உணவுக்காக மீன்களைப் பிடிக்க ஆழிக்குள் சென்று மீளும் ஒவ்வொருவரையும் அவனது கண்கள் கூர்ந்து பார்த்தன. ஆழிக்குள் இருந்து வெடிக்குமா... வானிலிருந்து விண்கற்கள் கொட்டி இந்த நிலத்தை உடைக்குமா... அவனே குழம்பிக் கிடந்தான். அவனது உதவி ஆய்வாளர்கள் யாரும் ஏன் தென்னனும்கூட அவனைக் கட்டுப்படுத்த நினைக்கவில்லை. கோகன் எல்லாவற்றையும் உள்வாங்கிக்கொண்டிருந்த போதும் அவனது கருவிழிகள் திகைத்து, வண்ணம் வெறித்துக் கிடந்தபோதும் இந்த மாந்தக் கூட்டத்திற்கு ஏதும் ஆகிவிடக் கூடாது, நாம் உணர்ந்த கணியம் பொய்யாக வேண்டும் எனப் பிதற்றிக் கொண்டே இருந்தான். ஓயாமல் முணுமுணுத்த வாயிலிருந்து கொடுஞ்சொற்களே கொட்டிக்கொண்டிருந்தன.

இருவாஞ்சியும் செம்பனும் ஒவ்வொரு நிலத்திலும் நடப்பதைச் சேகரித்தார்கள். எல்லாச் சமவெளிகளிலும் மரங்களைச் சேகரித்து மாந்தக் கூட்டம் தயாராக இருந்தது. ஆழிக்கரையிலும் வழியனுப்பும் கூட்டமும் மூடுதிமில்களை அலைகளுக்குள் தள்ளிவிடவும் மாந்தர்கள் கொத்துக்கொத்தாகக் காத்திருந்தனர். எல்லாரும் தங்களது உயிர் போவதை அறிந்திருந்தனர். பலர், அந்த நாள் நெருங்க நெருங்க மனப்பித்தாகிக் காடுகளுக்குள் ஓடி ஒளிந்தனர். பலர் தங்களது இணையோடு பிரியாமல் கிடக்க வேண்டுமென விரும்பிக் கூடினர். கிடைத்த மறைவிடங்களுக்குள் கண்ணீரோடு கூடல்கள் நிகழ்ந்தன.

“நாமாவது நடக்கப் போறத தெரிந்து காத்திருக்கோம். நமது முன்னோர்கள் தெரியாமலே சிதைந்துபோயிருப்பார்கள் செம்பா. எந்த ஓசையையும் கேட்டு அதை உள்வாங்க நினைக்கும் முன்பே என்ன நடந்ததுன்னு தெரியாமலே மூழ்கியிருப்பாங்க இல்ல... அதை நினைத்தாலே உடம்பு நரம்பெல்லாம் ஒடுங்கிப் போவுது!”

இருவாஞ்சியின் கூற்றுக்குச் செம்பன் வேறு மாதிரி பதிலைச் சொன்னான்.

“வாஞ்சி அப்படித் தெரியாமலே இந்த நிலம் துண்டானதுதான் எனக்கு நல்லதென்று தோணுது. இத்தனை வலியைக் கண்முன்னால் பார்க்க வேண்டி இருந்திருக்காது. தங்களது குழந்தைகளை, மூத்தவர்களை, சொந்தங்களைத் தங்களது உயிரையும்கூடக் கண்முன்னால் பிரியப் போறோம்னு மொத்த மாந்தக் கூட்டமும் கலங்கி நிக்கிறதப் பார்க்க முடியல. கூடி ஆடிய இடத்துல இருந்து அகதியா

வெறிச்சு நிக்கிற இந்த மாந்தக் கூட்டத்தக் கண்கொண்டு பார்க்க முடியல. ஒவ்வொரு நொடியும் 'திக் திக்'குன்னு இருக்கு. நெஞ்சு படபடப்பிலேயே இங்க பாதி உசிரு போயிடும்போல. என்னதான் நாம அறிவா இருந்தாக்கூட அன்பால கட்டுப்படுற இந்தக் கூட்டத்திற்கு அறிவ மருந்தாக் கொடுக்க முடியுமா..? என்னால உன்னப்போல தெடமா இருக்க முடியல. எல்லாருக்கும் முன்னாடி நான் செத்துப்போகணும்னு மனசு கிடந்து தவிக்குது!"

"செம்பா, நீ சொல்லிட்ட... நா சொல்லல. அவ்ளோதான். எப்படி வெடிச்சு அழப்போறேன்னு தெரியல. நானும் மாந்திதானே? நான் கலங்கினா செரியா பூடுமா..? நாம நடமாடுறதப் பார்த்துத்தானே இன்னும் இந்த மாந்தக் கூட்டம் சிதறாம இருக்கு. நம்மள கண்டுதானே ஆறுதலா நிக்கிது. நாம கொஞ்சம் அசந்து நம்ம மனசக் கரைச்சா, மொத்ததும் துண்டுதுண்டா ஒடைஞ்சி திசைக்கொண்ணா மாறித் தங்களையே தாக்கிக்கும். இல்ல, எல்லாத்தையும் அடிச்சி வீசும். அதான் நான் கல்லா இருக்கேன். நான் இன்னிக்குக் கல்லா மாறல... எப்பவோ, எப்பவோ! என் அம்மா அஞ்சாவண்ணி படுகளத்துல தலை வேறா, முண்டம் வேறா கிடந்தப்பவே இறுகிப் போச்சு!"

மாந்தர்கள் திரளாக அங்கும் இங்கும் ஓடிக்கொண்டும் நின்று கொண்டும் உரையாடிக்கொண்டுமிருந்த ஆழிப்பரப்பில் நிற்க இடமில்லாமல் நகர்ந்துகொண்டிருந்த அந்த நிலத்தில், செம்பன் அவளது கையை யாருக்கும் தெரியாமல் இறுகிப் பற்றினான். தெரிந்து பற்றினாலும் யாரும் அதைப் பற்றிச் சிந்திக்கப் போவதில்லை.

"வாஞ்சி, செத்துப்போனாலும் இந்தக் கைய விட்டுட்டுப் போயிடாத!"

"டேய் மாக்கான்! உன்னையே நெஞ்சில சொமந்துகிட்டுதாண்டா சாவேன். சாவுக்கே நம்ம காதலப் பாத்துப் பயம் வரணும்டா!"

கூட்டத்தில் நடந்தபடியே பேசியதால் அவனால் அவளைத் தழுவ முடியவில்லை. தங்களது சின்னசின்ன உணர்ச்சிகள்கூட தங்களையே உற்று நோக்கும் பல ஆயிரம் கண்களைத் தாக்கும் எனப் புரிந்திருந்தான். கையை மேலும் இறுக்கினான். அப்பிணைப்பின் வழியே அவ்வுறவு ஒன்றானது.

அவர்களின் கைகள் பற்றிக் கணநேரம் எதையும் சிந்திக்காது நடந்துகொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட தொடர் அலைச்சலில் அந்தக் கரம் பற்றுதல் நெகிழ்வைத் தந்திருந்தது.

அந்தி புரண்டு இரவைத் திருப்பத் தொடங்கிய அந்தப் பொழுதில்தான் கோகன் தனது வளையத்தை விட்டு வெளியேறி வெறிகொண்டு ஓடினான். உடனிருந்த மலைச்சி அவனின் ஓட்டத்தைக் கண்டுத் திகைத்தாள். செய்வதறியாது அலறினாள். தென்னன் அவனுக்கு அருகில்தான் இருந்தான். காலத்தின் கணியத்தை அறிந்த கோகன் எதற்காக ஓடுகிறான் என்று யாருக்கும் தெரியவில்லை. அவனது அறிவைப் பின்பற்றி நின்ற யாவருக்கும் புரியவில்லை. தொடர்ந்து ஓடினர். ஆழிக்கரை நெடுக சிலர் வேகமாக ஓடுவதை மாந்தக் கூட்டம் புரியாமல் பார்த்துக்கொண்டிருந்தது. கொற்றவை வெறியாட்டு நிகழ்வில் பீறிட்டெழும் கொதித்தலால் வெறி கொண்டு ஆடுவார்கள். சமயங்களில் கூட்டத்தையே பிரித்துக்கொண்டு ஓடுவார்கள். இசையின் ஆன்மாவால் அது நடக்கிறதா, அல்லது கூட்டத்தின் நெருக்கடியால்தான் அது நடக்கிறதா, கொற்றவையின் நீட்சியால் நடக்கிறதா... என்றே யாருக்கும் புரியாது. அது வழமையான ஒன்று. ஆனால் கோகன் வெறித்து ஓடுவதைப் பற்றி யாருக்கும் எந்தப் புரிதலுமில்லை.

அப்போதுதான் விசும்பிலிருந்து அந்தக் கல் அரைப் பாறையைப்போல வேகமாக வந்து, நிலத்தை கிழித்துக்கொண்டு பாறைகளை உடைத்துக்கொண்டு புவியின் அடியாளத்தை இரண்டாகப் பிளந்துகொண்டு ஓடி, மீண்டும் விசும்பில் துகள்களாகச் சிதறி ஓடி மறைந்தது. அது வந்த கணத்தையும் உடைத்த கணத்தையும் கூறாகப் பிளந்து வெளியேறிய கணத்தையும் மாந்தர்கள் சிந்திப்பதற்குள் அது முடிந்துவிட்டது. கூர் அம்பைப்போல ஆயிரம் மடங்கு வேகத்தில் அது வந்த வேகமும் தெரியவில்லை.... போன வேகமும் தெரியவில்லை. கால் வட்டம்போல மேலே காலைப் பதித்து அடியில் கால் பாகத்தை உடைத்துவிட்டு அது மறைந்து போனது.

அந்தக் கல் மோதிய வேகத்தில் நிலம் அகண்டு அது கொடுத்த தீயைப் புணர்ந்து வயிற்றில் செருகப்பட்ட கத்தியின் இழுவைபோல நெருப்புக் குழம்பு நிலத்திலிருந்து வானில் பத்துப்பாகம் தாவிப் பீறிட்டது. குமரி ஏற்கெனவே உடைந்து, துண்டுகளாக சிதறி, ஆழி பெருகி, கிடைத்த வழிகளில் நிறைந்து, இப்புவியே பலவாக, துண்டுகளாக மாறியதுபோலொரு பெரும் வெடிப்பு. அது வெடித்த கணத்தில் புவிப்பந்தில் உள் முகங்கள் உடைந்து, உராய்ந்து, கீறி, இடித்து, மோதி நகரத் துவங்கியதில் மாந்தர்களுக்கு எந்தப் புரிதலுமில்லை.

விசும்பிலிருந்து வெடித்து வந்த ஒற்றைக் கல், நிலத்தில் பல இடங்களில் ஒன்றாகக் குழாயைப்போல உள் நுழைந்து வெளியேறியதை

யாராலும் நினைவில்கூட கொண்டு வர முடியாத ஒரு வினாடிக்குள் வகுத்த பல நூறு எண்களுக்குள் அது முடிந்து போனது. வெளியேறியதைப் பார்க்க இப்பந்தின் இன்னொரு நுனியில் மாந்தர்கள் இல்லை.

எங்கு வீசியது எனத் தெரியும் நிலையில் யாரும் இல்லை. இதுவரை இருந்த கட்டுக் கோப்பு உடைந்து சிதறியது. நெருப்புக் குமிழ்கள் கொப்பளித்து வானைத் தொட முயன்று தோற்று அப்படியே நிலத்தில் வீழ்ந்தன.

36 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்

வானத்திலிருந்து விழுந்த நெருப்புப் பந்தைக் கண்டபடியே ஆரலும் இளநாகனும் விரைந்துகொண்டிருந்தார்கள். அது விழும் முன்பே இருவரும் தூக்கி வீசப்பட்டார்கள். எங்கே கிடக்கிறோம் என்பது தெரியாமலே அத்தீவின் மரங்கள் தலைகீழாகப் புரண்டன. நிலம், ஓர் உருண்ட சக்கரத்தில் பிதுங்கி வெளியேறுவதுபோல இடைவிடாமல் சுழன்றுகொண்டிருந்தது. கண்முன்னால் வான் எட்டும் உயரம் கொண்டிருந்த மரணத்தீவு ஆழிக்குள் புதைந்து காணாமலே போனது. பல ஆயிர நாகங்களும் எந்தத் திசையில் ஓடுவது எனத் தெரியாமல் முட்டி

மோதித் தவித்தன. நிலத்தில் உள்ளுக்குள் புரண்டு நீர் மேலேறத் தொடங்கியதும்தான் ஆரல் மருண்டாள். அவள் உடம்பில் மண்ணும் கல்லும் கொட்டிக்கொண்டே இருந்தன. அவற்றை வெளித்தள்ளி வர முயன்றுகொண்டே இருந்தவள் தன் மீது கவிழ்ந்த ஆழியின் நீரால் உடைப்பெடுத்துக் கொண்டு வர முயன்றாள். கண்களின் கருவிழிகளுக்கு முன்னால் பெரு மரத்தின் கொப்பொன்று குத்திக் கிழிக்கப் பறந்து வந்தது. அவளின் கண்கள் அதையும் தாண்டி இளநாகனைத் தேடியது. கிழிக்க வந்த மரத்தின் கொப்பைக் கையால் பற்றி அது பறக்கும் திசையில் பயணித்தாள். இல்லை அது இழுத்துக்கொண்டு சென்றது. அவள் போன திசையெங்கும் மாந்தர்கள், விலங்குகள், நாகங்கள் தண்ணீருக்குள் மூழ்கிப் போராடிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். நிலத்தின் வெளிச்சம் ஆழியின் அடியிலும்கூடப் பரவிக்கிடந்தது. உருவன் தன்னை ஆழ்கடலுக்குள் இழுத்துச்சென்று தீவைக்காட்டியது போல மரத்தைப் பற்றிக்கொண்டு நடப்பதைச் சிந்திக்க முயன்றாள். எதுவும் பிடிபடவில்லை. இளநாகன் எங்கே எனத் தெரியவில்லை! அவள் எங்கே இருக்கிறாள் எனத் தெரியவில்லை! உருவன் எங்கே இருக்கிறான் எனவும் தெரியவில்லை!

37 சிலைத் திங்கள் பதிமூன்றாம் நாள்

இருவாஞ்சி தும்பனைத் தன் எண்ணமெட்டும் தூரத்திலேயே வைத்திருந்தாள். அவள் எங்குச் சென்றாலும் தும்பன் சற்று ஒதுங்கி மாந்தர்களைப் பயப்படாமல் கடந்து செல்லவேண்டும் என்று அவனுக்குக் கட்டளை பிறப்பித்திருந்தாள். தும்பன் அதன்படியே அவர்களுக்குப் புரியும் வண்ணம் நடுக்காட்டில் நடந்தபடியே மரங்களைப் பெயர்த்து வீசி, தன் இருப்பைக் காண்பித்தபடியே காட்டிற்குள் நகர்ந்து பின் தொடந்து கொண்டிருந்தான்.

வீசிய வான் கல்லின் நுனியைக்கூட யாரும் தெரிந்துகொள்ள முடியவில்லை. நெருப்புக் குழம்பு புதிதாக உருவாகிறதோ. அடி நிலத்திலிருந்து தானாக வெடித்துக் கிளம்புகிறதோ. இதுதானோ கோகன் சொன்ன மாற்றம் எனக் கொந்தளித்துக்கொண்டிருக்கும் தீயின் வான் உமிழும் நெருப்புகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள் இருவாஞ்சி. அவள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவள் நின்றிருந்த தரை தடதடவென ஆடியது. நிலைத்து நிற்கப் போராடிக்கொண்டிருக்கும்போதே அவள் இருந்த தரை விலகிப் பல அடுக்குகளாக ஓடத் துவங்கியது. செம்பனைப் பிடித்திருந்த கையை விடவில்லை. ஆழிக்கரையில்தான் இருந்தார்கள். ஆனால் முக்கோணத்தில் சறுக்கும் கோணத்தில் இருந்தார்கள். அவர்களுடனிருந்த மாந்தர்கள் அவர்களின் மீது விழுந்து கொண்டிருந்தார்கள். ஆனையாளிகளும் ஆனைகளும் இன்னும் பல மிருகங்களும் ஆழிக்குள் தூக்கி வீசப்பட்டன. ஆழிக்கரைக்கு அந்தப் பக்கமிருந்த நடுக்காட்டில் இருந்து தும்பன் தூக்கி வீசப்பட்டு பலநூறு பேர்களைத் தன் உடம்பின் கனத்தால் கொன்றுகொண்டே சறுக்கி வந்தான். அந்த நிலையாமையிலும் உறுதியாகத் தன்னை நிலைநிறுத்த முயன்றுகொண்டே வந்தான். எங்கும் அலறல்.

தும்பன் அந்த நிலையிலும் உறுதியாக தன் தாய் இருவாஞ்சியிடம் பலத்த தோல் சிதைவோடு வந்தான். யார் எங்கே நிற்கிறார்கள் எனத் தெரியவில்லை. முன்னால் சொல்லியிருந்தபடி எல்லாம்

மாயாமாகிக்கொண்டிருந்தாலும் மூடுதிமில்களில் ஏற்றப்பட வேண்டிய மாந்தர்கள் சிலர் காற்றுக்காக வெளியே இருந்தனர். ஏற்கெனவே மூடுதிமில்கள் கொள்ளளவை எட்டியிருந்தன. ஆழியின் நீர் கரையிலிருந்து கால் காத தூரத்திற்கு ஆழிக்குள் சென்றது. ஆழியே திடீரென நீர் வற்றிய பாலையைப்போல மாறியது. கோகன் சொல்லியிருந்த படி எந்த ஓசை கேட்டாலும் அல்லது நிலம் நடுங்கினாலும் நீர் கொந்தளித்தாலும் மூடுதிமிலை ஆழிக்குள் இறக்கச் சொல்லியிருந்தான். ஏற்கெனவே ஆழியின் கரையோர நீரில் மிதந்துகொண்டிருந்த திமில்கள்கூட ஆழி உள்வாங்கியதில் சில ஆயிரம் அடிகள் இழுத்துச் செல்லப்பட்டு தண்ணீரில்லா ஆழியின் அடித் தரையில் ஒதுங்கின. அவ்வளவும் கண் இமைக்கும் நேரத்திற்குள் முடிந்துவிட்டன. இல்லை... அதைப் பற்றி ஒரு கணம் சிந்திப்பதற்குகூட வாய்ப்பில்லாமல் மீண்டும் ஆழியின் நீர் ஒரு மலை நகர்ந்து வருவதுபோல விசும்பையே மறைத்தபடி பாய்ந்து வந்தது. ஆழியில் வாழ்ந்த அனைத்து உயிரிகளும் அந்த நீரில் மிதந்து வந்தன. தண்ணீர் உள்வாங்கியதால் இழுத்துச் செல்லப்பட்ட பல மூடுதிமில்கள் அந்த மலையைப் போன்ற ஆழி நீரில் உருண்டுகொண்டே மீண்டும் கரையை நோக்கி வந்துகொண்டிருந்தன. மூடுதிமிலுக்குள் இருந்தவர்கள் பலமுறை தலைகீழாக உருண்டதில் உள்ளுக்குள் பிடிமானத்திற்குக் கட்டியிருந்த கயிற்றையெல்லாம் விட்டு விட்டு நிலைகுலைந்து, ஒருவர் மீது ஒருவராக மாறி மாறி விழுந்து குருதி வழிய மூடுதிமிலுக்குள் சிக்கிக் கிடந்தனர்.

இருவாஞ்சியை நோக்கி வந்த தும்பன் வரும்பொழுதே தனது வாலை நீட்டிச் செம்பனைத் தனது உடலில் ஏற்றியது. இறுகப் பற்றியிருந்த கையை விடாத இருவாஞ்சியும் சேர்ந்து அந்தரத்தில் பறந்தாள். அதனால் நிலையாக நடந்து வர முடியவில்லை. தும்பன் நில அடுக்குகள் இரண்டாக, பலவாக வெடித்துப் பிளப்பதால் புரியாமல் திகைத்தான். முடிந்தவரை தன் எண்ணத்தையும் இருவாஞ்சியின் எண்ணத்தையும் சேர்க்க முயன்று ஓடிக்கொண்டிருந்தான். செம்பனும் இருவாஞ்சியும் தும்பனின் வாலால் அந்தரத்தில் ஆடி, தும்பனின் பிடரி முடியை இறுகப் பற்றினர். இருவாஞ்சியைப் பொறுத்தவரை அறிவர்களை எப்படியாவது மூடுதிமிலுக்குள் செலுத்தவேண்டும். சட்டெனக் கோகன் ஓரிடத்தில் நிலைக்குத்தி அதிர்விலிருந்து மீளாப் பித்துக்கொண்டவன்போலக் கிடந்தான். சட்டெனக் குதித்துக் கோகன் ஓடிய வேகத்தைப் புரிந்துகொண்டு காட்டாறுபோல ஓடி அவனை இழுத்து அவனது மனக்கலக்கத்தில் இருந்து தூக்கி எறியும் விதமாக நான்குபேர்

கொண்ட மூடுதிமிலில் அடைத்தாள். தும்பனைச் சமவெளிப் பகுதிக்குப் போகும்படி கத்தினாள். தும்பன் விரைய, வேகமாக ஓடிச்சென்று அதன் வாலைப் பற்றினாள். தும்பன் ஓடிய வேகத்தில் வாலை மேலே இழுத்து தன் மீது இருவாஞ்சியை அமர்த்திக் கொண்டது. திரும்பி ஆழியைப் பார்த்தாள்.

ஆழி, பேரலையாகத் திரண்டு கரையை மோதி, அங்கிருந்த மரங்களை எல்லாம் பெயர்த்து எறிந்தது. மூடுதிமில்கள் அலையின் வேகத்தில் அடித்து அந்தரத்தில்பறந்து சுழன்றபடியே மீண்டும் ஆழிக்குள் பொத்தென விழுந்தன. அதுவும் ஆழிக்குள் முங்கி உள்ளே சென்று மீண்டும் மேலேறி மிதப்பதைப் பார்த்தாள். ஆழிக்கரையில் முடிந்தவர்கள் பிழைக்கட்டும் எனத் தும்பனை விரட்டினாள். மூடுதிமில்கள் மிதக்கத் தொடங்கிவிட்டன. மூடுதிமில்களில் வெளிப்புறத்தில் மாந்தர்கள் தங்கள் கைகளால் பிழைத்திருக்க வாய்ப்புத் தேடிப் பிடித்தபடி இருந்தவர்கள் யாவரும் ஆழியில் தூக்கி வீசப்பட்டனர். எண்ண முடியாத மாந்தர்கள் அந்தரத்தில் பறந்து வீழ்ந்தனர்... மூழ்கினர்!

வீசப்பட்டதில் பலர் மரக் கூட்டங்களிலும் வீசப்பட்டிருந்தனர். மரங்களில் அவர்களின் உடல் கிழிந்து கிளைகளில் தொங்கின.

நிலம் கீழே வெடித்துப் பாலமாகிக்கொண்டிருந்தது. கண் முன்னே பல நூறாயிரம் மாந்தர்கள் கொத்துக்கொத்தாக வெடித்த நிலத்திற்குள் பாய்ந்துகொண்டிருந்தார்கள். மரங்களும் மிருகங்களும் பிளந்த பூமிக்குள் காற்றில் மிதக்கும் காய்ந்த இலையைப்போல விழுந்துகொண்டிருந்தார்கள். பறவைகள் எது நிலம் எனப் புரியாமல் கதறி, தங்களது சிறகை விரித்துப் பறந்தபடி கத்திக்கொண்டிருந்தன. தாய்களும் தாய்மாமன்களும் யார் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. குமரிக்கண்டம் மொத்தமும் வெடித்தும் மூழ்கியும் பிரிந்தும் தனது ஆன்மாவை இழந்துகொண்டிருந்தது. கொற்றவையும் இல்லை, கொற்றவைகளின் வரலாறும் நொறுங்கிக் கொண்டிருந்தது. மூடுதிமிலில் அடையாமல் கிடந்த மாந்தர்கள் அல்லல்பட்டுக்கொண்டிருந்தார்கள். வரலாற்றை ஏந்திய மூடுதிமில்கள் எங்கே சென்றன என யாரும் தெரிந்துகொள்ளும் நிலை இல்லை. பல நூறாயிரம் மாந்தர்களின் வாழிடம் முற்றாக நொறுங்கிக்கொண்டிருந்தது.

தும்பன் செம்பனையும் இருவாஞ்சியையும் சுமந்துகொண்டு கிடைத்த நிலப்பரப்பில் ஓடிக்கொண்டிருந்தான். பிளந்துகொண்டிருக்கும்

நிலத்தின் வெடிப்பில் கால் வைக்காமல் தாவியோட முயன்றுகொண்டிருந்தான்.

இருவாஞ்சி, சமவெளியில் இருக்கும் மாந்தர்களாவது பிழைத்திருக்கக்கூடும் என்ற நம்பிக்கையோடு தும்பனின் முதுகில் பறந்துகொண்டிருந்தாள்.